# பழமொழி அகராதி



அமுத நிலையம்

# பழமொழி அகராதி

இதில்

தமிழ்நாட்டில் வழங்கிவரும்

## 10,760 பழமொழிகள்

அகராதி வரிசையாகத் திரட்டி

அச்சிடப்பட்டுள்ளன

இது


அனவரதநாயகம்பிள்ளை,

அவர்களால் பரிசோதிக்கப்பட்டது.



வெளியீடு

அமுத நிலையம் லிமிடெட்

7, ஸ்ரீபுரம் இரண்டாவது தெரு

சென்னை – 600 014

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : பழமொழி அகராதி |
| பொருண்மை | : 10760 பழமொழிகளின் அகரவரிசைத் தொகுப்பு |
| பதிப்பாசிரியர் | : அனவரதவிநாயகம்பிள்ளை |
| பதிப்பாண்டு | : 1998 |
| அளவு | : டெமி 1/8 |
| பக்கம் | : IV + 420 |
| விலை | : ரூ. 100/- |
| அச்சீடு | : ஒளிக்கோர்வை, மறுதோன்றி அச்சு |
| அச்சகம் | : ஜப்பானிக்கா பிரிண்டிங் மீடியா<br>7, ஸ்ரீபுரம் இரண்டாவது தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை – 600 014. |
| விற்பனை உரிமை | : அமுதநிலையம்<br>7, ஸ்ரீபுரம் இரண்டாவது தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை – 600 014. |

இந்நூல் தமிழ்நாடு அரசின்

"அரிய நூல் வெளியிட நிதியுதவி"

என்ற தமிழ் வளர்ச்சி இயக்ககத் திட்டத்தின்

கீழ் பெற்ற நிதியுதவியுடன் வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு

நன்றிகள் பலப் பல.

# பழமொழி அகராதி.

## அ.

அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.

அஃகம் சுருக்கேல்.

அகங்கையிற் போட்டுப் புறங்கையை நக்கலாமா?

அகட விகடமாய்ப் பேசுகிறான்.

அகதிக்கு ஆகாசமே துணை.

அகதிக்குத் தெய்வமே துணை.

அகதி சொல் அம்பலம் ஏறாது.

அகதி தலையிற் பொழுது விடிந்தது.

அகதி பெறுவது பெண்பிள்ளை, அதுவும் வெள்ளிபூராடம்.

10 அகதியைப் பருதி கேட்கிறதா?

அகத்தி ஆயிரம் காய்த்தாலும் புறத்தி புறத்தியே.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

அகத்துக் கழகு ஆமுடையாள்.

அகப்பட்டவனுக்கு அஷ்டமத்துச்சனி, ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்து ராஜா.

அகப்பட்டுக்கொள்வேன் என்றோ கள்ளன் களவெடுக்கிறது?

அகப்பை குறைந்தால் கொழுப்பெல்லா மடங்கும்.

அகப்பை பிடித்தவன் தன்னவனானால், அடிப்பந்தியில் இருந்தாலென்ன, கடைப்பந்தியில் இருந்தாலென்ன?

அகம் ஏறச் சுகம் ஏறும்.

அகம் மலிந்தால் அஞ்சும் மலியும்.

அகம் குறைந்தால் அஞ்சும் குறையும்.

20 அகம் மலிந்தால் எல்லாம் மலியும்,

அகம் குறைந்தால் எல்லாம் குறையும்.

அகல இருந்தால் நிகள உறவு,
கிட்டவந்தால் முட்டப் பகை.

அகல இருந்தால் பகையும் உறவாம்.

அகல இருந்தால் புகல உறவு.

அகல இருந்து செடியைக் காக்கிறது.
அகல உழுகிறதைவிட ஆழ உழுகிறது சிலாக்கியம்.
அகல்வட்டம் பகல் மழை.
அகவிலை அறியாதவன் துக்கம் அறியான்.
அகழிலே விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம்.
அகா நாக்காய்ப் பேசுகிறான்.
30 அகாரியத்தில் பகீரதப் பிரயத்தனம் பண்ணுகிறது.
அகிருத்தியம் செய்கிறவன் முகத்தில் விழிக்கிறதா?
அகிலுந் திகிலுமாக.
அகோர தபசி விபரீத சோரன்.
அகோர தபசி விபரீத நிபுணன்.
அக்கச்சி உடைமை அரிசி தங்கச்சி உடைமை தவிடா?
அக்கரைப்பாகலுக்கு இக்கரைக் கொழுகொம்பு.
அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
அக்கறை தீர்ந்தால் அக்காள் முகடு குக்கா.
அக்கன்னா அரியன்னா, நோக்குவந்த விதியென்ன?
40 அக்காடு வெட்டிப் பருத்தி விதைக்கிறேன் என்றால், அப்பா எனக்கொரு துப்பட்டி என்கிறான் பிள்ளை; அதற்கு அப்பன் கைகால் பட்டுக் கிழியப்போகிறது மடித்துப் பெட்டியிலேவை யென்கிறான்.
அக்காடு வெட்டிப் பருத்தி விதைத்தால், அப்பா முழச் சிற்றாடை என்கிறதாம் பெண்.
அக்காள் இருக்கிறவரையில் மச்சான் உறவு.
அக்காள் உண்டானால், மச்சான் உண்டு.
அக்காள் உறவும் மச்சான் பகையுமா?
அக்காளைக் கொண்டால், தங்கையை முறைகேட்பானேன்?
அக்காள் தான் கூடப்பிறந்தாள், மச்சானும் கூடப்பிறந்தானா?
அக்காளைப்பழித்துத் தங்கை அபசாரியானாள்.
அக்காளைப்பழித்துத் தங்கை மோசம்போனாள்.
அக்கியானம் தொலைந்தால் அவிழ்தம் பலிக்கும்.
50 அக்கிராரத்தில் பிறந்தாலும், நாய் வேதம் அறியுமா?
அக்கிராரத்துக்கு ஒரு ஆடு செத்தால் ஆளுக்கு ஒரு மயிர்.

அக்கிராரத்து நாய் பிரதிஷ்டைக்கு அழுததுபோல.
அக்கிராரத்து நாய்க்கு அகவிலை தெரியுமா?
அக்கினிதேவனுக்கு அபிஷேகம் செய்ததுபோல் இருக்கிறான்.
அக்கினிப்பந்தலிலே வெண்ணெய்ப்பதுமை ஆடுமா?
அக்கினி மலையிலே கர்ப்பூரபாணம் பிரயோகித்தது போல.
அக்கினியைத்தின்று கக்குகிறபிள்ளை, அல்லித்தண்டைத் தின்கிறது அதிசயமா?
அக்கினியாற் சுட்ட புண் விஷமிக்காது.
அக்குத் தொக்கு இல்லாதவனுக்குத் துக்கம் ஏது?
60 அக்குத்தொக்கில்லாதான் ஆண்மையும், வெட்கஞ் சிக்கில்லாதான் தோஷமும், மிக்கத் துக்கப்படாதான் வாழ்வும் நாய் கக்கி நக்கித் தின்னத்துக் கொக்கும்.
அங்கங்கு குறுணி அளந்துகொட்டி இருக்கிறது.
அங்கத்திலே குறைச்சலில்லை ஆட்டடா பூசாரி.
அங்கத்தை ஆற்றில் அலைசொணாதா?
அங்கத்தைக் கொண்டுபோய் ஆற்றில் அலசினாலும் தோஷம் இல்லை.
அங்கத்தைக் கொன்று ஆற்றில் சேர்க்கவொண்ணாது.
அங்காங்கு வைபோகமாயிருக்கிறான், இங்கேபார்த்தால் அரைக்காசு முதலும் இல்லை.
அங்காடி விலையை அதிர அடிக்காதே.
அங்காடிக்காரியைச் சங்கீதம் பாடச்சொன்னால், வெங்காயம் கரிவேப்பிலை என்பாள்.
அங்காளம்மைத் தெய்வம் அகப்பைக்கூறு வழியாய் வரும்.
70 அங்கிடு தொடுப்பிக்கு அங்கிரண்டு குட்டு, இங்கிரண்டு சொட்டு.
அங்கும் இருப்பான் இங்கும் இருப்பான், ஆக்கின சோற்றுக்குப் பங்கும் இருப்பான்.
அங்கும் தப்பி இங்கும் தம்பி அகப்பட்டுக்கொண்டான் தும்மட்டிப்பட்டன் (திம்மட்டிராயன்).
அங்கே போனேனோ செத்தேனோ.
அங்கேண்டி மகளே கஞ்சிக்கு அழுகிறாய்? இங்குவாடி காற்றாய்ப் பறக்கலாம்.

அஜகஜாந்தரம்.
அசத்துக்கு வாழ்க்கைப்பட்டு ஆயிரம் வருஷம் வாழ்வதைவிட சத்துக்கு வாழ்க்கைப்பட்டுச் சட்டென்று தாலியறுப்பதே மேல்.
அசலார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்கிறது.
அசலார் குற்றம்போல் தன் குற்றம் பார்த்தால் தீதுண்டோ மன்னுயிர்க்கு?
அசலிலே பிறந்த கசுமாலம்.
80 அசலும் பிசலும் அறியாமல் அடுத்தாரைக் கெடுக்கப் பார்க்கிறான்.
அசல் வாழ்ந்தால் ஐந்துநாள் பட்டினி கிடப்பாள்.
அசல் வீடு வாழ்ந்தால் பரதேசம் போகிறதா?
அசல் வீட்டான்பிள்ளை ஆபத்துக்குதவுவானா?
அசல் வீட்டுக்காரனுக்குப் பரிந்துகொண்டு ஆமுடையானை அடித்தாளாம்.
அசல் வீட்டுக்குப்போகிற பாம்மைப் கையாலே பிடிக்கான்
அசல் வீட்டுப் பிராமணா, பாம்மைப் பிடி, அல்லித் தண்டுபோலக் குளிர்ந்திருக்கும்.
அசவாப் பயிரும், கண்டதே உறவும்.
அசுணமாச் செவிப் பறை அடுத்ததுபோலும்.
அசைந்துதின்கிறது மாடு அசையாமல்தின்கிறது வீடு.
90 அசைப்புக்கு ஆயிரம்பொன் வாங்குகிறது.
அசைவிருந்தால் விட்டுப்போகமாட்டான்.
அச்சம் அற்றவன் அம்பலம் ஏறுவான்.
அச்சம் ஆண்மை குலைக்கும்.
அச்சாணி அன்னதோர் சொல்.
அச்சாணி இல்லாத் தேர் முச்சாணும் ஓடாது.
அச்சிக்குப் போனாலும், அகப்பை அரைக்காசு.
அச்சியிலும் பிச்சைக்காரன் உண்டு.
அச்சியென்றால் உச்சி குளிருமா? அழுவணம் (ஐவணம்) என்றால் கை சிவக்குமா?
அச்சில்லாத் தேர் ஓடவும் ஆமுடையான் இல்லாதவள் பிள்ளை பெறவும் கூடுமா?
100 அச்சு ஒன்றா வேறா?
அஞ்சலிவந்தனம் ஆருக்கும் நன்மை.

அஞ்சனக்காரன் முதுகில் வஞ்சனைக்காரன் ஏறினான்.
அஞ்சா நெஞ்சு படைத்தால் ஆருக்கு ஆவான்?
அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கிடையாது.
அஞ்சி ஆண்மை செய்யவேணும்.
அஞ்சி நடக்கிறவளுக்குக் காலமல்ல.
அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
அஞ்சிலே பிஞ்சிலே கொஞ்சாமல்,
அறுபதிற்குமேல் கொஞ்சினானாம்.
அஞ்சில் அறியாதவன் ஐம்பதில் அறிவானா?
110 அஞ்சினவனைக் குஞ்சும் வெருட்டும்.
அஞ்சினவனைப் பேய் அடிக்கும்.
அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம்பேய்.
அஞ்சினாரைக் கெஞ்சுவிக்கும், அடித்தாரை வாழ்விக்கும்.
அஞ்சு காசுக்குக் குதிரையும் வேண்டும், அதுவும் ஆற்றைக் கடக்கப் பாயவும் வேண்டும்.
அஞ்சு குஞ்சும் கறியாமோ, அறியாப் பெண்ணும் பெண்டாமோ?
அஞ்சுகதவும் சாத்தியிருக்க,
ஆமுடையான் வாயிலே பேணவளார்?
அஞ்சுக்கு அறுகு கிள்ளப்போனவன், திரட்டிக்குக் கொண்டுவந்தானாம்.
அஞ்சுக்கு இரண்டு பழுதில்லை.
அஞ்சு பணம் கொடுத்தாலும், அத்தனை ஆத்திரம் ஆகாது.
120 அஞ்சுபணங் கொடுத்துத் கஞ்சித்தண்ணீர் குடிப்பானேன்?
அஞ்சு பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்.
அஞ்சும் இருக்கிறது நெஞ்சுக்குள்ளே,
அதுவுமிருக்கிறது புந்திக்குள்ளே.
அஞ்சுரு ஆணியில்லாத்தேர் அசைவதரிது.
அஞ்சுபொன்னும் வாங்கார் அரைப்பணமே போதுமென்பார்.
அஞ்சும் மூன்றும் உண்டானால், அறியாச் சிறுக்கியும் கறியாக்குவாள். (பெண்ணாவாள்)
அஞ்சுருவுத்தாலி நெஞ்சுருவக்கட்டிக் கொண்டு வந்தாற்போல் வலக்காரமாய்ப் பேசுகிறாய்.

அஞ்சு வயதுப் பிள்ளைக்கு ஐம்பது வயதுப் பெண் கால் முடக்கவேண்டும்.

அஞ்சுவோரைக் கெஞ்சடிக்கப் பார்க்கிறான்.

அஞ்சூர்ச்சண்டை சிம்மாளம், ஐங்கல அரிசி ஒரு கவளம்.

அஞ்செழுத்தும் பாவனையும் அப்பனைப்போல் (அவனைப்போல்) இருக்கிறது.

130 அடக்கத்துப் பெண்ணுக்கு அழகேன்?

அடக்கமே பெண்ணுக்கு அழகு.

அடக்கம் ஆயிரம்பொன் தரும்.

அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதார் கல்லார்.

அடக்குவாரற்ற கழுக்காணி.

அடக்குவாரற்ற கழுக்காணியும் கொட்டுவாரற்ற மேளமுமாய்த் திரிகிறான்.

அடங்காத மனைவியும் ஆங்கார புருஷனும்.

அடங்காப் பாம்பிற்கு ராஜா மூங்கில்தடி.

அடங்காப்பிடாரியைப் பெண்டுவைத்துக் கொண்டது போல்.

அடங்காப் பெண்சாதியால் அத்தைக்கும் நமக்கும் பொல்லாப்பு.

140 அடங்காமாட்டுக்கு அரசன் மூங்கில் தடி.

அடங்கினபிடி பிடிக்கவேண்டுமேயல்லாமல், அடங்காப் பிடி பிடிக்கலாகாது.

அடம்பங்கொடியும் திரண்டால் மிடுக்கு.

அடா என்பான், வெளியே புறப்படான்.

அடாது செய்தவன் படாது படுவான்.

அடி அதிரசம் (ஆலங்காய்), குத்து கொழுக்கட்டை.

அடி உதவுகிறதுபோல அண்ணான் தம்பி உதவார்.

அடி என்கப் பெண்சாதியில்லை, அஷ்ட புத்திரவெகு பாக்கிய நமஸ்து

அடி என்கிற மந்திரியுமில்லை பிடி என்கிற ராஜனுமில்லை.

அடி ஒட்டலே கரணம் போடப்பார்க்கிறான்.

150 அடி ஒட்டையா யிருந்தாலும் கொழுக்கட்டை வேக வேண்டியதுதானே

அடிக்க அடிக்கப் பந்து அதிக விசைகொள்ளும்

அடிக்காயிரம் பொன் கொடுக்கவேண்டும்.
அடிக்கிற காற்றுக்கும் பெய்கிற மழைக்கும் பயப்படு.
அடிக்கிற காற்று வெயிலுக்குப்பயப்படுமா?
அடிக்கும் ஒரு கை, அணைக்கும் ஒரு கை.
அடிக்கும் காற்றிலே எடுத்துத் தூற்றவேண்டும்.
அடிக்கும் பிடிக்கும் சரி.
அடி செய்கிறது அண்ணன் தம்பி செய்யார்.
அடிச்சட்டிக்குள்ளே கரணம் போடலாமா?
160 அடித்த இடம் கண்டுபிடித்தழ ஆறு மாசம் செல்லும்.
அடித்த ஏருக்கும் குடித்த கூழுக்கும் சரி.
அடித்தது ஆட்டம் பிடித்தது பெண்டு.
அடித்தாலும் புருஷன் புடைத்தாலும் புருஷன்.
அடித்துப் பழுத்ததும் பழமா?
அடித்துப் பால் புகட்டுகிறதா?
அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் செவ்வையாகா.
அடித்து விட்டவன் பின்னே போனாலும், பிடித்து விட்டவன் பின்னே போகலாகாது.
அடிநாக்கிலே நஞ்சும் நுனிநாக்கிலே அமிர்தமுமா?
அடி நொச்சி நுனி ஆமணக்கா?
170 அடிப்பானேன் பிடிப்பானேன் அடக்குகிற வழியில் அடக்குவோம்.
அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்,
அடிமை படைத்தால் ஆள்வது கடன்.
அடியற்ற பனைபோல் விழுந்தான்.
அடியற்ற மரம்போல அலறிவிழுகிறது.
அடியற்றால் நுனி விழாமலிருக்குமா?
அடியாத மாடு படியாது.
அடியிலுள்ளது நடுவுக்கும் முடிக்கும் உண்டு.
அடியும் நுனியும் தறித்த கட்டைபோல.
அடியும் பட்டுப் புளித்த மாங்காயா தின்னவேண்டும்?
180 அடியென்று அழைக்கப் பெண்டாட்டி இல்லை, பிள்ளை எத்தனை பெண் எத்தனை என்கிறான்.
அடியைப்பிடிடா பாரதபட்டா.
அடியொட்டி யல்லா மேற்கரணம் போடவேணும்?

அடிவானம் கறுத்தால், ஆண்டை வீடு வறுக்கும்.
அடிவண்டிக் கிடாப்போலே.
அடிவயிற்றிலே இடிவிழுந்தாற்போல.
அடுக்களைக் கிணற்றிலே அமுதம் எழுந்தாற்போல.
அடுக்களைக் குற்றம் திருப்பால் குழைந்தது, ஆமுடையான் குற்றம் பெண்ணாகப் பிறந்தது.
அடுக்களைக்கு ஒரு பெண்ணும் அம்பலத்துக்கு ஒரு ஆணும் இருக்கிறதென்கிறான்.
அடுக்களைப் பூனைபோல் இடுக்கிலே ஒளிக்கிறது.
190 அடுக்களைப் பெண்களுக்கு அழகுவேண்டுமா?
அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியுமா?
அடுக்குகிற வருத்தம் உடைக்கிறதுக்குத் தெரியாது.
அடுத்த கூரை வேவுங்கால் தன் கூரைக்கு மோசம்.
அடுத்ததன் தன்மை ஆன்மாவாகும்.
அடுத்தது காட்டும் பளிங்கதுபோல, (நெஞ்சில்) கடுத்தது காட்டும் முகம்.
அடுத்தவரை அகல விடலாகாது.
அடுத்தவனைக் கெடுக்கலாமா?
அடுத்தவன் வாழ்வைப் பகலே குடி கெடுப்பான்.
அடுத்த வீட்டுக்காரி பிள்ளை பெற்றாளென்று அம்மிக் குழவி யெடுத்துக் குத்திக்கொண்டாளாம்.
200 அடுத்தாரைக் கெடுத்து அன்னம் இட்டாரைக் கன்னம் இடுகிறான்.
அடுத்து அடுத்துச் சொன்னால் தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை.
அடுத்து வந்தவர்க்கு ஆதரவு சொல்வோன் குரு.
அடுப்பனலில் வெண்ணெயை வைத்த கதை.
அடுப்பு எரிந்தால் பொரி பொரியும்.
அடுப்புக் கட்டிக்கு அழகு வேண்டுமா?
அடுப்புநெருப்பும் போய் வாய்த்தவிடும் போச்சு.
அடுத்த வீட்டுக்காரனுக் கதிகாரம் வந்தால் அண்டை வீட்டுக்காரனுக்கு இரைச்சல் லாபம்.
அடுத்த வீட்டுக்காரனுக்கு அதியோகம் வந்தால் அண்டை வீடு குதிரை லாயம்.

210 அடுத்துமுயன்றாலும் ஆகுநாள்தான் ஆகும்.
அடே அத்தான், அத்தான், அம்மான் பண்ணினாற் போலிருக்கவில்லை அடா.
அடைந்தோரை ஆதரி.
அடைபட்டுக் கிடக்கிறான் செட்டி, அவனை அழைத்து வா பணம்பாக்கி என்கிறான் பட்டி.
அடையலரை அடுத்து வெல்லு.
அடைப்பைப் பிடுங்கினால் பாம்பு கடிக்கும்.
அடைமழைக்குள்ளே ஓர் ஆட்டுக்குட்டி செத்தது போல.
அடைமழை விட்டும் செடிமழை விடவில்லை.
அஷ்ட தரித்திரம் தாய் வீடு, அதிலும் தரித்திரம் மாமியார்வீடு.
அஷ்டதரித்திரம் பிடித்தவன் அமராவதியில் வாழ்கிறானென்று நித்திய தரித்திரம் பிடித்தவன் நின்றநிலையிலே பிட்டுக்கொண்டு வந்தான்.
220 அட்டமத்துச் சனி கிட்டவந்ததுபோல.
அட்டமத்துச் சனி நட்டம் வரச்செய்யும்.
அட்டமத்துச் சனி பிடித்தது, பிட்டத்துத் துணியையும் உரிந்துகொண்டது.
அட்டமத்துச் சனியை வட்டிக்கு வாங்கினாற்போல.
அட்டாதுட்டி கொள்ளித்தேள்.
அட்டாலும் பால் சுவையில் குன்றாது.
அட்டைக்கும் திருத்தியில்லை, அக்கினிக்கும் திருத்தியில்லை.
அட்டையை எடுத்து மெத்தையில் வைத்தாலும் செத்தையைச் செத்தையை நாடும்.
அட்டையைப் பிடித்து மெத்தையில் வைத்ததுபோல.
அணி பூண்ட நாய்போல.
230 அணியத்திலே கிழிஞ்சாலும் கிழிஞ்சுது, அமரத்திலே கிழிஞ்சாலும் கிழிஞ்சுது.
அணில் ஊணும், ஆமை நடையும்.
அணில் ஏறவிட்ட நாய் (பார்ப்பது) போல
அணில் கொப்பிலும், ஆமை கிணற்றிலும்.
அணில் நொட்டினதும் தென்னமரம் விழ்ந்ததும்.
அணு மகா மேரு ஆமா?

அணிற்பிள்ளைக்கு நுங்கு அரிதோ, ஆண்டிச்சி பிள்ளைக்கு சோறு அரிதோ?
அணுவும் மலையாச்சு, மலையும் அணுவாச்சு.
அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
அணை கடந்த வெள்ளத்தை மறிப்பவர் ஆர்?
240 அண்டங்காக்காய் குழறுகிறாப்போல.
அண்டத்தில் இல்லாததும் பிண்டத்தில் உண்டா?
அண்டத்திற்கு உள்ளது பிண்டத்திற்கும் உண்டு.
அண்டத்துக்கொத்தது பிண்டத்துக்கு.
அண்டத்தைச் சுமக்கிறவனுக்குச் சுண்டைக்காய் பாரமா?
அண்டத்தைக் கையில் வைத்தாட்டும் பிடாரிக்குச் சுண்டைக்காய் எடுப்பது பாரமா?
அண்ட நிழலில்லாமற்போனாலும் பேர் ஆலாலவிருக்ஷம்,
அண்டை அயல் பார்த்துப் பேசுகிறது.
அண்டமும் பிண்டமும், அந்தரங்கமும் வெளியரங்கமும்.
அண்டர் எப்படியோ தொண்டரும் அப்படியே.
250 அண்டாத பிடாரி ஆருக்கு அடங்குவாள்?
அண்டைமேலே கோபம் கடாவின் மேலே காட்டினது போல.
அண்டையிற் சமர்த்தன் இல்லாத ராஜாவுக்கு அபகீர்த்தி வரும்.
அண்டை வீட்டுக் கடனும் பிட்டத்துச் சிரங்கு மாகாது.
அண்டைவீட்டுக்காரி பிள்ளைபெற்றாளென்று அசல் வீட்டுக்காரி இடித்துக் கொண்டதுபோல.
அண்டை விட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி.
அண்டை விட்டுச் சுப்பிக்கும் எதிர்வீட்டுக் காமாட்சிக்குமா கவலை?
அண்டை வீட்டுப் பார்ப்பான் சண்டை மூட்டித் தீர்ப்பான்
அண்ணனார் சேனையிலே அள்ளி உண்ணப்போகிறாள்.
அண்ணனிடத்தில் ஆறுமாதம் வாழ்ந்தாலும் அண்ணியிடத்தில் அரை நாழிகை வாழலாமா?
அண்ணனானவன் தம்பிக்கு மூத்தவன்;

260 அண்ணனுக்குத் தம்பி அல்லவென்று போகுமா?
அண்ணனுக்குப்பெண் பிறந்தால் அத்தை அசல் நாட்டாள்.
அண்ணற ஆயிரம் பொன்னிலும் நிண்ணற ஒருகாசு பெரிது.
அண்ணனைக் கொன்றபழி, சந்தையிலே தீர்த்துக்கொள்ளுகிறதுபோல,
அண்ணன் உண்ணாதது எல்லாம் மைத்துனிக்கு லாபம்.
அண்ணன் கொம்பு பம்பள பளாச்சு.
அண்ணன் சம்பாதிக்கிறது, தம்பி அரைஞாண் கயிற்றுக்குச் சரி.
அண்ணன் தம்பிதான் சென்மப் பகையாளி.
அண்ணன் தம்பி வேண்டும் இன்னம் தம்பிரானே
அண்ணன்தான் கூடப் பிறந்தான் அண்ணியும் கூடப் பிறந்தாளோ?
270 அண்ணன் பெரியவன், அப்பா, காலைப்பிடி.
அண்ணன் பெரியவன், சிற்றப்பா, சுருட்டுக்கு நெருப்புக் கொண்டுவா.
அண்ணன்பேரிலிருந்த கோபத்தை நாய்பேரிலாற்றினான்.
அண்ணாக்கும் தொண்டையும் அதிர அடைத்தது.
அண்ணாணங்கை அப்ஸரஸ்திரீ.
அண்ணாண்டி, வாரும், சண்டையை ஒப்புக்கொள்ளும்.
அண்ணாமலையாருக்கு அறுபத்துநாலுபூசை, ஆண்டிகளுக்கு எழுபத்துநாலு பூசை.
அண்ணாமலையார் அருளுண்டானால் மன்னார்சாமி மயிரைப் பிடுங்குமா?
அண்ணாவி பிள்ளைக்குப் பணம் பஞ்சமா, அம்பட்டன் பிள்ளைக்கு மயிர் பஞ்சமா?
அண்ணாவுக்கு மனது வரவேணும், மதனி பிள்ளை பெறவேணும்.
280 அதமனுக்கு ஆயிரம் ஆயுசு.
அதிக ஆசை அதிக நஷ்டம்.
அதிக ஆசை மிக தரித்திரம்.
அதிக கரிசனமானாலும் ஆமுடையானை அப்பா என்றழைக்கிறதா?

அதிகார மில்லாவிட்டால் பரியாரம் வேணும்.
அதிகாரியுடனே எதிர்பண்ணலாமா?
அதிகாரியும் தலையாரியும்கூடி விடியுமட்டும் திருடலாம்
அதிகாரி வீட்டில் திருடித் தலையாரி வீட்டில் வைத்ததுபோல.
அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மியை உடைத்ததாம்
அதிக்கிரமமான ஊரிலே கொதிக்கிற மீனும் சிரிக்குமாம்.
290 அதிசயமான ரம்பை அரிசி கொட்டுகிற தொம்பை,
அதியாக் குறியால் கருமாரிப் பாய்ச்சல்.
அதிர அடித்தால் உதிர விளையும்
அதிரந் தடித்தாருக்கு ஐயருமில்லை, பிடாரியாருமில்லை.
அதிருஷ்டமும் ஐசுவரியமும் ஒருவர் பங்கல்ல.
அதிருஷ்டம் ஆறாய்ப் பெருகுகிறது
அதிருஷ்டம் இருந்தால் அரசு பண்ணலாம்.
அதிருஷ்டம் இல்லாதவனுக்கு கலப்பால் வந்தாலும், அதையும் பூனை குடிக்கும்.
அதிருஷ்டம் கெட்ட கழுக்காணி.
அதிருஷ்டம்கெட்டதுக்கு அறுபதுநாழியும்தியாச்சியம்.
300 அதிருஷ்டவான்மண்ணைத்தொட்டாலும் பொன்னாகும்.
அதிலே குறைச்சல் இல்லை ஆட்டடா மணியை பூசாரி.
அதிலேயும் இது புதுமை, அவள் செத்தது மெத்த அருமை
அதின் கையை எடுத்து அதின் கண்ணிலே குத்துகிறது
அது அதற்கு ஒருகவலை, ஐயாவுக்கு எட்டுக்கவலை.
அதுவும் போதாதென்று அழலாமா இனி?
அதுக்கு இட்ட காசு மினக்கெட்டு அரிவாள் மணைக்குச் சுறுக்கிட்டதா?
அதெல்லாம் உண்டிட்டு வாவென்பாள்
அதைக் கைகழுவ வேண்டியதுதான்.
அதை நான் செய்யாதேபோனால் என் மீசையை எடுத்துவிடுகிறேன்
310 அதைரிய முள்ளவனை அஞ்சாத வீரன் என்றாற்போல.
அதை விட்டாலும் கதியில்லை, அப்புறம் போனாலும் விதியில்லை

அஸ்த செவ்வானம் அடைமழைக்கு லக்ஷணம்.
அத்தம் மிகுதி அல்லவோ அம்பட்டன் பெண்கேட்க வந்தது.
அத்தனையும் நேர்ந்தாள் உப்பிட மறந்தாள்.
அத்தான் செத்தால் மயிராச்சு, கம்பளி மெத்தை நமக்காச்சு.
அத்திக் காயைப் பிட்டுப் பார்த்தால் அங்கும் இங்கும் பொள்ளல்.
அஸ்தி சகாந்தரம் என்கிறது போலிருக்கிறது.
அத்தி பூத்தாற் போல் (இருக்கிறது).
அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு.
320 அத்திப் பூவை ஆர் அறிவார்கள்.
அத்திப் பூவைக் கண்டவர்கள் உண்டா, ஆந்தைக் குஞ்சைப் பார்த்தவர்கள் உண்டா?
அத்தி மரத்திலே தொத்திய கனி போல.
அஸ்தியிலே ஜ்வரம்.
அத்து மீறிப் போனான், பித்துக் கொள்ளி ஆனான்.
அத்தைக்கு மீசை முளைத்தால் சிற்றப்ப என்கலாம்.
அத்தைக் கொழியப் பித்தைக் கில்லை ஔவையாரிட்ட சாபத் தீடு.
அத்தைத்தான் சொல்வானேன் வாயைத்தான் வலிப் பானேன் (நோவானேன்)?
அத்தை மகள் அம்மான் மகள் சொந்தம் போல.
அத்தை மகளானாலுஞ் சும்மா வருமா?
330 அத்தோடே நிண்ணுது அலைச்சல், கொட்டோடே நிண்ணுது குலைச்சல்.
அந்த ஊர் மண் மிதிக்கவே தன்னை மறந்து விட்டான்.
அந்தணர்க்குத் துணை வேதம்.
அந்தணர் மனையிற் சந்தனம் மணக்கும்.
அந்தப் பருப்பு இங்கே வேகாது.
அந்தம் சிந்தி அழகு ஒழுகுகிறது.
அந்தரத்தில் கோல் எறிந்த அந்தகனைப் போல.
அந்தலை கெட்டுச் சிந்தலை மாறிக் கிடக்கு.

அந்த வெட்க்க்கேட்டை (வெட்கத்தை) ஆரோடே சொல்லுகிறது?
அந்தி ஈசல் பூத்தால் அடைமழை அதிகரிக்கும்.
340 அந்திப் பீ சந்திப் பீ பேலாதான் வாழ்க்கை சாமப் பீ தட்டி எழுப்பும்.
அந்திமழை அழுதாலும் விடாது.
அந்துக்கண்ணிக்கு அழுதாலும் வாரானாம் ஆமுடையான்.
அந்தூது நெல்லானேன்.
அபத்த பஞ்சாங்கத்துக்கு அறுபது நாழியும் தியாச்சியம்.
அப்பச்சி குதம்பையைச் சூப்பப் பிள்ளை முற்றின தேங்காய்க்கு அழுகிறது போல.
அப்பச்சி கோவணத்தைப் பருந்துகொண்டோடுகிறது, பிள்ளை வீரவாளிப் பட்டுக்கு அழுகிறது.
அப்பத்தை எப்படிச் சுட்டாளோ, தித்திப்பை எப்படி நுழைத்தாளோ?
அப்பம் என்றாற் பிட்டுக் காட்ட வேண்டுமா?
அப்பம் சுட்டது சட்டியில், அவல் இடித்தது திட்டையில்.
350 அப்பம் சுட்டது திட்டையிலே, அவல் இடித்தது சட்டியிலே.
அப்பனோடே போகிறவளுக்கு அண்ணன் ஏது தம்பி ஏது?
அப்பன் அருமை அப்பன் மாண்டால் தெரியும், உப்பின் அருமை உப்பு இல்லாவிட்டால் தெரியும்.
அப்பன் செத்தும் தம்பிக் கழுகிறதா?
அப்பன் சோற்றுக் கழுகிறான், பிள்ளை கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்.
அப்பன் பெரியவன், சிற்றப்பா, சுருட்டுக்கு நெருப்புக் கொண்டுவா.
அப்பன் அப்பா என்றால் ரங்கா ரங்கா என்பான்.
அப்பா என்றால் உச்சி குளிருமா?
அப்பாஜி உப்பில்லை.
அப்பிடாவு மில்லை வெட்டுக் கத்தியு மில்லை.
360 அப்பியாசம் குலவிருது.
அப்பியாசம் கூசாவித்தை.

அப்பியாச வித்தைக்கு அழிவில்லை.
அமரபட்சம் பூர்வபட்சம், கிருஷ்ண பட்சம் சுக்கிலபட்சம்.
அமரிக்கை ஆயிரம் பெறும்.
அமர்த்தனுக்கும் காணிவேண்டாம் சமர்த்தனுக்கும் காணிவேண்டாம்.
அமாவாசைக் கருக்கலிலே பெருச்சாளி போனதெல்லாம் வழி.
அமாவாசைச் சோறு சும்மா அகப்படுமா?
அமாவாசைப் பருக்கை என்றைக்கும் அகப்படுமா?
அமிஞ்சி உண்டோ, குப்புநாயக்கரே.
370 அமிஞ்சிக்கு உழுதால் சரியாய் விளையுமா?
அமுக்கினாற் போலிருந்து அரணை அழிப்பான்.
அமுதம் உண்கிற வாயால் விஷம் உண்பார்களா?
அமுதுபடி பூச்சியம், ஆடம்பரம் அதிகம்.
அமைச்சனில்லாத அரசும், ஆமுடையானில்லாத ஆரிழையும்.
அம்பட்டக் கிருதும், வண்ணார ஒயிலும்.
அம்பட்டனை மந்திரித் தனத்துக்கு வைத்துக் கொண்டதுபோல.
அம்பட்டன் குப்பையைக் கிளறினால் மயிர் மயிராய்ப் புறப்படும்.
அம்பட்டன் கைக் கண்ணாடி போல
அம்பட்டன் பல்லக் கேறினது போல.
380 அம்பட்டன் பிள்ளைக்கு மயிர் அருமையா?
அம்பட்டன் மாப்பிள்ளைக்கு மீசை ஒதுக்கினது போல,
அம்பலக் கழுதை அம்பலத்திற் கிடந்தாலென்ன, அடுத்த திருமாளிகையிற் (திருமாளத்திற்) கிடந்தாலென்ன?
அம்பலத்தில் ஏறும் பேச்சை அடக்கம் பண்ணப் பார்க்கிறான்.
அம்பலத்தில் கட்டுச் சோறு அவிழ்த்தாற் போல.
அம்பலத்தில் பொதி அவிழ்க்கலாகாது.
அம்பலம் வேகுது.
அம்பாத்தூர் வேளாண்மை யானைகட்டத் தாள் வான மட்டும் போர், ஆறுகொண்டது பாதி தூறு கொண்டது பாதி.

அம்பாணி தைத்தது போலப் பேசுகிறான்.
அம்பா பாக்கியம் சும்பா விளைந்தது, பாவிபாக்கியம் பதராய் விளைந்தது.
390 அம்பிகொண்டு ஆறுகடப்போர் நம்பிக்கொண்டு நரிவால் கொள்ளுவார்களா?
அம்மண தேசத்தில் கோவணங் கட்டினவன் பைத்தியக்காரன்.
அம்மணமும் இன்னலும் ஆயுசுபரியந்தமா?
அம்மா குதிர்போல, ஐயா கதிர் போல.
அம்ம கெட்ட கேட்டுக்கு முக்காடு ஒன்றா?
அம்மா தெருளுவதற்கு முன்னே ஐயா உருளுவார்.
அம்மாளுக்குத் தமிழ் தெரியாது, ஐயாவுக்கு வடுகு தெரியாது.
அம்மானும் மருமகனும் ஒரு வீட்டுக்கு ஆள் அடிமை.
அம்மான் மகளுக்கு முறையா?
அம்மான் வீட்டு வெள்ளாட்டியை அடிக்க அதிகாரியைக் கேட்கவேண்டுமா?
400 அம்மி மிடுக்கோ அரைப்பவள் மிடுக்கோ?
அம்மிமிதித்து அருந்ததி பார்த்தது போலப் பேசுகிறாள்.
அம்மி யிருந்து அரணை அழிப்பான்.
அம்மியும் குழவியும் ஆகாயத்தில் பறக்கச்சே, எச்சிற் கல்லை எனக்கு என்னகதி என்றாற் போல
அம்மியும் குழவியும் ஆடிக்காற்றில் பறக்கச்சே, இல வம் பஞ்சு எனக்கென்னகதி என்றதாம்.
அம்முக்கள்ளி ஆடையைத் தின்றால் வெண்ணெய் உண்டா?
அம்மை குத்தினாலும் பொம்மை குத்தினாலும் வேண்டியதரிசி.
அம்மைக் கமர்க்களம் ஆக்கிப்படை, எனக் கமர்க்களம் பொங்கிப்படை.
அம்மைக்கு அமர்க்களம் பொங்கிப் படையுங்கள்.
அம்மை வீட்டுத் தெய்வம் நம்மைவிட்டுப்போமா?
410 அம்மையாரே வாரும், கிழவனைக் கொள்ளும்.
அம்மையார் எப்பொழுது சாவார், கம்பளி எப்பொ ழுது நமக்கு மிச்சமாகும்?

அம்மையார் நூற்கிற நூலுக்கும் பேரன் அரைஞாண் கயிற்றுக்கும் சரி.
அம்மையார் பெறுவது அரைக்காசு, அவருக்குத் தலை சிரைக்க முக்காற்காசு.
அம்மையார்க்கு என்ன துக்கம், கந்தைத் துக்கம்.
அயலார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்கிறான்.
அயலார் உடைமையில் அந்தகண்போல் இரு.
அயலான் வாழப் பகலே சரக்கெடுப்பது.
அயல் வீட்டான் பிள்ளை ஆபத்துக் குதவுவானா?
அயல் வீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே.
420 அயன் இட்ட எழுத்தில் அணுவளவும் தப்பாது.
அயன் இட்ட கணக்கு ஆருக்கும் தப்பாது.
அயன் சமைப்பை ஆராலும் தள்ளக்கூடாது.
அயிரையும் சற்றே அருக்குமாம் பிட்டுக்குள் போட்டுப் பிசறாமல்.
அயோக்கியர் அழகு அபரஞ்சிச் சிமிழில் நஞ்சு.
அய்யன் அளந்தபடி.
அய்யா, அய்யா, அம்மா குறைக் கேழ்வரகும் அரைக்க வரச்சொன்னாள்.
அய்யாசாமிக்கு கலியாணம், அவரவர் வீட்டிலே சாப்பாடு.
அய்யா தாசி கவனம்பண்ண அஞ்சாளின் சுமையாச் சுது.
அய்யாத்துரைக்கு (அப்பாசாமிக்கு)க் கலியாணம், அவ ரவர் வீட்டிலே சாப்பாடு, கொட்டுமுழக்குக் கோயி லிலே, வெற்றிலை பாக்குக் கடையிலே, சுண்ணாம்பு சூளையிலே.
430 அய்யா பாட்டுக்கு அஞ்சடியும் ஆறடியும் தாண்டும்.
அய்யாவையர் கூழுக்கு அப்பையங்கார் தாதாவா?
அரகர என்கிறவருக்குத் தெரியுமா, அமுது படைக் கிறவனுக்குத் தெரியுமா?
அரகர என்பது பெரிதோ, ஆண்டிக்கு இடுவது பெரி தோ?
அரகரன் ஆண்டாலென்ன, மனிதன் ஆண்டாலென்ன?
அரக்குமுத்தி தண்ணீர்க்குப் போனாள், புண் பிடித்தவன் பின்னாலே போனான்.

அரங்கின்றி வட்டாடலும், அறிவின்றிப் பேசலும் ஒன்று.
அரசனில்லாப்படை வெட்டுமா?
அரசனுக்கு ஒருசொல், அடிமைக்குத் தலைச்சுமை.
அரசனுக்குத் துணை வயவாள்.
440 அரசனுக்கு வலியார் அஞ்சுவது எளியார்க்கு அனுகூலமாகிறது.
அரசனும் அரவும் சரி.
அரசனும் அழலும் சரி.
அரசனும் நெருப்பும் பாம்பும் சரி.
அரசனைக்கண்ட கண்ணுக்குப் புருஷனைக்கண்டால் கொசுப்போல இருக்கிறது.
அரசனைநம்பிப் புருஷனைக் கைவிட்டதுபோல.
அரசன் அருள் அற்றால் அனைவரும் அற்றார்.
அரசன் அளவிற்கு (வரை) ஏறிற்று (எட்டியது).
அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்றுகொல்லும்.
அரசன் இல்லாதநாடு, அச்சில்லாத தேர்.
450 அரசன் இல்லாத நாடு, புருஷன் இல்லாத வீடு.
அரசன் உடைமைக்கு ஆகாயவாணி சாக்ஷி.
அரசன் எப்படியோ அப்படியே குடிகள்.
அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்.
அரசன் ஒன்றை இகழ்ந்தால் ஒக்க இகழவேண்டும், ஒன்றைப் புகழ்ந்தால் ஒக்கப் புகழவேண்டும்.
அரசன் கல்லின்மேல் கத்தரி (வழுதுணை) காய்க்கும் என்றால், கொத்து ஆயிரம் குலை ஆயிரம் என்பார்கள்.
அரசன் குடுமியையும் பிடிக்கலாமென்று அம்பட்டன் வேலையை விரும்புவதுபோல.
அரசன் வழிப்பட்டது அவனி.
அரசன் வழிப்படாதவன் இல்லை.
அரசில்லா நாடு அலக்கழிந்தாற்போல.
460 அரசில்லாப்படை வெல்லுவதரிது.
அரசுக்கு இல்லை சிறுமையும் பெருமையும்.
அரசுடையானை ஆகாயம் காக்கும்.
அரணை அலகு திறக்காது.
அரணை கடித்தால் அப்பொழுதே மரணம்.

அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்பேய்.
அரண்மனைகாத்தவனும் அடுப்பங்கரை காத்தவனும் வீண்போகிறதில்லை.
அரண்மனைவாசல் காத்தவனும் பரிமடைகாத்தவனும் பழுதுபோவதில்லை.
அரண்மனைக்கு ஆயிரஞ்செல்லும், குடியானவன்என்ன செய்வான்?
அரத்தை அரம்கொண்டும் வயிரத்தை வயிரம் .கொண்டும் அறுக்க வேண்டும்.
470 அரபிக்குதிரையிலும் ஐயம்பேட்டைத் தட்டுவாணி நல்லது.
அரமும் அரமும் கூடினால் கின்னரம்.
அரவத்தைக் கண்டால் கீரி விடுமா?
அரவுக்கு இல்லை சிறுமையும் பெருமையும்.
அரனருள் அல்லாது அணுவும் அசையாது.
அரிஅரி என்றால் ராமா ராமா என்கிறான்.
அரி என்கிற அக்ஷரம் தெரிந்தால் அதிகாரம் பண்ணலாம்.
அரி என்கிற அக்ஷரம் தெரிந்தால் அதிக்கிரமம் பண்ணலாமா?
அரி என்றால் ஆண்டிக்குக் கோபம், அர என்றால் தாதனுக்குக் கோபம்.
அரிஹர பிரமாதிகளாலும் முடியாது.
480 அரிசி என்று அள்ளிப்பார்ப்பாருமில்லை. உமி என்று ஊதிப்பார்ப்பாருமில்லை.
அரிசி அள்ளின காக்கை போல.
அரிசி ஆழாக்கானாலும் அடுப்புக்கட்டி மூன்றுவேண்டும்.
அரிசி உண்டானால் வரிசையும் உண்டு, அக்காள் உண்டானால் மச்சானும் உண்டு.
அரிசி உழக்கானாலும் அடுப்பு மூன்று.
அரிசி கொண்டு (உண்ண) அக்காள் வீட்டுக்குப்போவானேன்?
அரிசி மறந்த கூழுக்கு உப்பு ஒன்றுகுறையா?
அரிசிக்குத்தக்க உலையும் ஆமுடையானுக்குத் தக்க வீறாப்பும்.

அரிசிக்குத் தக்க கனவுலை
அரிசிப்பகையும் ஆமுடையான் பகையும் உண்டா?
490 அரிசிப் பொதியுடன் திருவாரூர்.
அரிசியும்கறியும் உண்டானால் அக்காள்வீடுவேண்டுமா?
அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீடு.
அரிதாரம் கொண்டுபோகிற நாய்க்கு அங்கு இரண்டடி இங்கு இரண்டடி.
அரிது அரிது அஞ்செழுத்து உணர்தல்.
அரித்து எரிக்கிற சுப்பிக்கு ஆயம் தீர்வை உண்டா?
அரிய சரீரம் அந்தரத்தெறிந்த கல்.
அரியது செய்து எளியதுக்கு ஏமாந்து திரிகிறான்.
அரியுஞ் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயிலே மண்ணு.
அரியுஞ்சிவனும் ஒன்று, அல்ல என்கிறவன்வாயிலே மண்ணு.
500 அரிவாளும் அசையவேண்டும், ஆண்டை குடியும் கெட வேண்டும்.
அரிவாள் சூட்டைப்போலக் காய்ச்சல் மாற்றவோ?
அரிவாள் சுறுக்கே அரிவாள்முனை கருக்கே.
அரிவை மொழிகேட்டால் அபத்தன் ஆவான்.
அருகாகப்பழுத்தாலும், விளாமரத்தில் வௌவால்சேராது.
அருக்காண முத்துக் கரிக்கோலமானாள்.
அருக்காணி நாய்ச்சியார் குரங்குப்பிள்ளை பெற்றாளாம்.
அருக்காமணி முருக்கம்பூ.
அருக்கித்தேடிப் பெருக்கி அழி.
அருங்கோடை துரும்பு அற்றுப்போகுது.
510 அருஞ்சுனை நீருண்டால் அப்பொழுதே ரோகம்.
அருட்செல்வம் ஆருக்கும் உண்டு, பொருட்செல்வம் ஆருக்கும் இல்லை.
அருணாப் பரமே கருணாம்பரம்.
அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
அருத்தியைப் பிடுங்கித் துருத்தியிலே போட்டுத் துருத்தியைப் பிடுங்கி அருத்தியிலே போடுகிறது.
அருமை அறியாதவன் ஆண்டு என்ன, மாண்டு என்ன?
அருமை அறியாதவனிடத்தில் போனால் பெருமை குறைந்துபோம்.

அருமை அற்றவீட்டில் எருமையும் குடியிராது.
அருமை மருமகன் தலைபோனாலும் போகட்டும், ஆதி காலத்து உரல்போகலாகாது.
அரும்புகோணினால் அதின் மணம் குற்றமா?
520 அருவருப்புச் சோறும் அசங்கிதக் கறியும்.
அருள் இல்லார்க்கு அவ்வுலகில்லை, பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை.
அருள்வேணும், பொருள்வேணும், அடக்கம் வேணும்.
அரைக்கவுமாயம், கரைக்கவுமாயம்.
அரைக்காசுக்கு அழிந்த கற்பு ஆயிரம்பொன் கொடுத்தாலும் கிடையாது.
அரைக்காசுக்குக் குதிரை வாங்கவும் வேண்டும், ஆற்றைக் கடக்கப் பாயவும் வேண்டும்.
அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் கொடுத்தாலும் வாராது.
அரைக்காசுக்கு வந்த வெட்கம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் போகாது.
அரைக்காசை ஆயிரம் பொன்னாக்குகிறவளும் பெண் சாதி, ஆயிரம் பொன்னை அரைக்காசாக்குகிறவளும் பெண்சாதி.
அரைக்கிறவன் ஒன்று நினைத்து அரைக்கிறான், குடிக் கிறவன் ஒன்று நினைத்துக் குடிக்கிறான்.
530 அரைக்கினும் சந்தனம் அதன் மணம் அறாது.
அரைக்குடம் ததும்பும், நிறைகுடம் ததும்பாது.
அரைச்சல்லியை வைத்து எருக்கு இலையைக் கடந்தது போல.
அரைச்சிலை கட்டக் கைக்கு உபசாரமா?
அரைச்சொற் கொண்டு அம்பலம் ஏறலாமா?
அரைச்சொற் கொண்டு அம்பலம் ஏறினால், அரைச் சொல் முழுச்சொல்லாமா?
அரைஞாண் கயிறும் தாய்ச்சீலையுமாய் விடுகிறவளும் பெண்சாதி.
அரைத்த பயறு முளைத்தாற்போல.
அரைத்துட்டுக்கு பீ தின்கிறவன்.
அரைத்துட்டிலே கலியாணம், அதிலே கொஞ்சம் பாண வேடிக்கை.

540 அரைத்து மீந்தது அம்மி, சிரைத்து மீந்தது குடுமி.
அரைப்பணங் கொடுக்கப் பால்மாறி, ஐம்பது பொன் கொடுத்துச் சேர்வைசெய்த கதை.
அரைப்பணங் கொடுத்து அழச்சொல்லி ஒருபணங்கொடுத்து ஓயச்சொன்னதுபோல.
அரைப்பணச் சேவகமானாலும் அரண்மனைச் சேவகம் போல் ஆகுமா?
அரைப்பணத்துக்கு மருத்துவம் பார்க்கப்போய் ஐந்து பணத்து நெளி உள்ளே போய்விட்டது.
அரையிலே புண்ணும் அண்டையிலே கடனும் ஆகாது.
அரைவித்தைகொண்டு அம்பலம் ஏறினால் அரைவித்தை முழுவித்தை ஆகுமா?
அரைவேலையைச் சபையிலே கொண்டுவருவதா?
அலுத்துக் கொலுத்து அக்காளண்டைபோனால் அக்காள் இழுத்து மச்சானிடத்தில் விட்டாளாம்.
அலுத்து வியர்த்து அக்காள் வீட்டுக்குப்போனால் அக்காள் இழுத்து மச்சானண்டையிற் போட்டாளாம்.
550 அலை அடங்கியபின் ஸ்நானம் செய்வதுபோல.
அலை எப்பொழுது ஒழியும், தலை எப்பொழுது முழுகுகிறது?
அலை ஓய்ந்து கடலாடலாமா?
அலைபோல நாக்கும், மலைபோல மூக்கும், ஆகாசந்தொட்ட கையும்.
அலைமோதும்போதே தலை முழுகுகிறது.
அலைவாய்த் துரும்புபோல் அலைகிறது.
அல்லக்காட்டு நரி பல்லைக் காட்டுகிறது.
அல்லாத வழியால் பொருள் ஈட்டல், காமம் துய்த்தல் இவை ஆகா.
அல்லாதவன் வாயில் கள்ளை வார்.
560 அல்லல் அருளாள்வார்க்கில்லை.
அல்லல் அற்ற படுக்கை அழகிலும் அழகு.
அல்லல் ஒரு காலம் செல்வம் ஒரு காலம்.
அல்லவை தேய அறம் பெருகும்.
அல்லற்பட்டு அழுதகண்ணீர் செல்வத்தைக்குறைக்கும்.
அல்லார் அஞ்சலிக்கு நல்லார் உதை மேல்.

அல்லும் பகலும் கசடறக் கல்.
அவகடம் உள்ளவன் அருமை அறியான்.
அவகுணக்காரன் ஆவாசமாவான்.
அவசரக்காரனுக்குக் காக்கிலோ பெட்டு, நேக்குச் சேத்திலோ பெட்டு.
570 அவசரக்காரனுக்கு புத்தி மட்டு.
அவசரக் கோலம் அள்ளித் தெளித்ததுபோலச் சொல்லுகிறாய்.
அவசரத்தில் அரிக்கண் சட்டியிலும் கை நுழையாது.
அவசரத்தில் உபசாரமா?
அவசரத்தில் செத்த பிணத்துக்குப் பீச்சூத்தோடே மாரடிக்கிறாள்.
அவசரத்தில் குண்டுச் சட்டியில் கை நுழையாது.
அவசரத்துக்குப் பாவமில்லை.
அவசரப்பட்ட மாமியார் மருமகனைப் புணர அழைத் தாளாம்.
அவசாரி ஆடினாலும் அதிருஷ்டம் வேண்டும், திருடப் போனாலும் திசை வேண்டும்.
அவசாரி ஆமுடையான் ஆபத்துக் குதவுவானா?
580 அவசாரி என்று ஆனைமேல் ஏறலாம், திருடி என்று தெருவில் வரலாமா?
அவதாரி போகவும் ஆசை யிருக்கிறது, அடிப்பான் என்று பயமுமாய் இருக்கிறது.
அவசாரிக்கு ஆணையில்லை, திருடிக்குத் தெய்வமில்லை.
அவசாரிக்கு வாய் பெரிது, அஞ்சு ஆறு அரிசிக்குக் கொதி பெரிது.
அவசாரியிலே வந்து பெருவாரியிலே போகிறது.
அவதந்திரம் தனக்கு அந்தரம்.
அவதிக் குடிக்குத் தெய்வமே துணை.
அவத்தனுக்கும் சமர்த்தனுக்கும் காணி கவை இல்லை.
அவப்பொழுதிலும் தவப்பொழுது நல்லது.
அவமானம் பண்ணி வெகுமானம் பேசுகிறான்.
590 அவரவர் அக்கறைக்கு அவரவர் பாடுபடுவார்.
அவரவர் எண்ணத்தை ஆண்டவர் அறிவார்.
அவரவர் மனசே அவரவர்க்குச் சாட்சி.

அவரை விதைத்தால் துவரை முளைக்குமா?
அவரா சுறுக்கே அரிவாள்மணைக் கருக்கே?
அவருடைய சிறகு முறிந்துபோயிற்று.
அவலட்சணம் உள்ள குதிரைக்கு சுழிசுத்தம் பார்க்க வேணுமா?
அவலமாய் வாழ்பவன் சவலமாய்ச் சாவான்.
அவலைச் சாக்கிட்டு உரலை இடிக்கிறது.
அவலை நினைத்துக்கொண்டு ஊலை இடிக்கிறாள்.
அவலை முக்கித் தின்னு, எள்ளை நக்கித் தின்னு.
600 அவளவள் என்பதைவிட அரிஅரி என்பது நலம்.
அவளுக்கிவள் எழுந்திருந்து உண்பாள்.
அவளுக்கு ரொம்பத் தக்குத்தெரியும்.
அவளுக்கெவள் ஈடு அவளுக்கவளே சோடு.
அவளைக் கண்ட கண்ணாலே இன்னொருத்தியைக் காணு கிறதா?
அவள் அழகுக்குத் தாய் வீடு.
அவள் அழகுக்குப் பத்துபேர் வருவார்கள், கண் சிமிட்டினால் ஆயிரம்பேர் மயங்கிப் போவார்கள்.
அவள் எமனைப் பலகாரம் பண்ணுவாள்.
அவள் சமர்த்துப் பானை சந்தியில் கவிழ்ந்தது.
610 அவள் சம்பத்து அறியாமல் கவிழ்ந்தது.
அவள் சாட்டிலே திரை சாட்டா.
அவள் சொல் உனக்கு குரு வாக்கு.
அவள் பலத்தை மண்கொண் டொளிச்சுது.
அவள் பாடுகிறது குயில் கூவுகிறது போல.
அவள் பேர் தங்கமாம் அவள் காதில் பிச்சோலையாம்.
அவள் பேர் கூந்தலழகி அவள் தலை மொட்டை.
அவளிடத்தில் எல்லாரும் பிச்சை வாங்கவேண்டும்.
அவனருளூற்றால் அனைவரு முற்றார், அவனருளற்றால் அனைவருமற்றார்.
அவனியில்லை ஈடு, அவளுக்கவளே சோடு.
620 அவனுக்கு ஆகாசம் மூன்று விரற்கிடை.
அவனுக்குக் கப்படாவுமில்லை வெட்டுக் கத்தியுமில்லை.
அவனுக்குச் சாண் ஏறினால் முழம் சறுக்குது.

அவனுக்குச் சுக்கிரதிசை அடிக்கிறது.
அவனுக்குச் சுக்கிரதிசை சூத்திலே அடிக்கிறது.
அவனுக்குப் பொய்ச்சத்தியம் பாலும் சோறும்,
அவனுக்கு ஜெயில் தாய் வீடு.
அவனுக்கும் இவனுக்கும் எருமைச் சங்காத்தம்.
அவனுக்குள்ளே அகப்பட்டிருக்கிறதாம் என் பிழைப் பெல்லாம்.
அவனுடைய பேச்சு காற்சொல்லும் அரைச்சொல்லும்.
630 அவனுடைய வாழ்வு நண்டுக்குடுவை உடைந்ததுபோல் இருக்கிறது.
அவனை உரித்து வைத்தாற்போல் இருக்கிறான்.
அவனைப் பேச்சிட்டுப் பேச்சுவாங்கி ஆமை மல்லாத்து கிறாப்போல் மல்லாத்திப்போட்டான்.
அவனே இவனே என்பதைவிடச் சிவனே சிவனே என்கிறது நல்லது.
அவனே வெட்டவும் விடவும் கர்த்தன்.
அவனோடு இவனை ஏணிவைத்துப்பார்த்தாலும் காணாது.
அவன் அசையாது (அசையாமல்) அணு அசையாது.
அவன் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது.
அவன் அண்டை அந்தப்பருப்பு வேகாது.
அவன் அவன் எண்ணத்தை, ஆண்டவன் ஆக்கினாலும் ஆக்குவான், அழித்தாலும் அழிப்பான்.
640 அவன் அவன் செய்த வினை அவன் அவனுக்கு
அவன் அவன் மனசே அவன் அவனுக்குச் சாட்சி.
அவன் அன்றி ஓர் அணுவு மசையாது.
அவன் ஆகாசத்தை வடுப்படாமல் கடிப்பேனென் கிறான்.
அவன் இட்டதே சட்டம்.
அவன் இராச சமுகத்திற்கு எலுமிச்சம்பழம்.
அவன் உள்ளெல்லாம்புண், உடம்பெல்லாம் கொப்பளம்.
அவன் உனக்குக் கிள்ளுக்கீரையா?
அவன் எங்கே இருந்தான், நான் எங்கே இருந்தேன்.
அவன் எரி பொரியென்று விழுகிறான்.
650 அவன் எனக்கு அட்டமத்துச்சனி.
அவன் என் தலைக்கு உலை வைக்கிறான்.

அவன் என்னை ஊதிப்பறக்கடிக்கப் பார்க்கிறான்.
அவன் ஒரு குளிர்ந்த கொள்ளி.
அவன் ஓடிப்பாடி நாடியில் அடங்கினான்.
அவன் கழுத்துக்குக் கத்தி தீட்டுகிறான்.
அவன் காலால் இட்ட வேலையைக் கையால் செய்வான்.
அவன் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்வான்.
அவன் காலால் கீறினதை நான் நாவால் அழிக்கிறேன்.
அவன் காலால் முடிந்ததைக் கையால் அவிழ்க்க முடியாது.
660 அவன்குடித்தனத்தை கமுக்கமாய்கொண்டுபோகிறான்.
அவன் கெட்டான் குடியன் எனக்கு இரண்டு திராம் வாரு (மொந்தைபோடு).
அவன் கை மெத்தக் கூராச்சே!
அவன் கையைக்கொண்டே அவன் கண்ணில் குத்தினான்.
அவன் கொஞ்சப் புள்ளியா?
அவன் சாதிக்கு எந்த புத்தியோ குலத்துக்கு எந்த ஆசாரமோ அது தான் வரும்.
அவன் சாயம் வெளுத்துப் போய்விட்டது.
அவன் சிறகில்லாப்பறவை.
அவன் சிறகொடிந்த பறவை.
அவன் சூத்தைத் தாங்குகிறான்.
670 அவன் சொன்னதே சட்டம் இட்டதே பிச்சை,
அவன் சோற்றுக்குத் தாளம் போடுகிறான்.
அவன் சோற்றை மறந்து விட்டான்.
அவன் தலையில் ஓட்டைக் கவிழ்ப்பான்.
அவன் தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என்ன செய்வார்?
அவன் தொட்டுக் கொடுத்தான், நான் இட்டுக் கொடுத்தேன்.
அவன் தொத்தி உறவாடித் தோலுக்கு மன்றாடுகிறான்.
அவன் நடைக்குப் பத்துபேர் வருவார்கள், கைவீச்சுக்குப் பத்துபேர் வருவார்கள்.
அவன் நா அசைய நாடு அசையும்.
அவன் பசியாமல் கஞ்சி குடிக்கிறான்.

680 அவன் பூராயமாய்ப் பேசுகிறான்.
அவன் பேசுகிறதெல்லாம் தில்லும் பில்லும் திருவாதிரை.
அவன் பேச்சு விளக்கெண்ணெய் சமாசாரம்.
அவன் பேச்சைத் தண்ணீர்மேல் எழுதிவைக்க வேண்டும்.
அவன் மிதித்த இடத்தில் புல்லும் சாகாது.
அவன் மிதித்த இடம் பற்றி எரிகின்றது.
அவன் மூத்திரம் விளக்காய் எரிகிறது.
அவன் மெத்த அத்து மிஞ்சின பேச்சுக்காரன்.
அவன் ரொம்ப வைதீகமாய்ப் பேசுகிறான்.
அவன் வல்லாள கண்டனை வாரிப் போரிட்டவன்.
690 அவிவேகி உறவிலும் விவேகி பகையே நன்று.
அவிழ் என்ன செய்யும் அஞ்சுகுணம் செய்யும், பொருள் என்னசெய்யும் பூவை வசம் செய்யும்.
அவையிலும் ஒருவன் சவையிலும் ஒருவன்.
அவ்வளவு இருந்தால் அடுக்கிவைத்து வாழேனோ?
அழ அழச் சொல்லுவார் தன் மனிதர், சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார் புறத்தியார்.
அழகிருந்தென்ன, அதிருஷ்டம் இருக்கவேணும்.
அழகிலே பிறந்த பவளக்கொடி, ஆற்றிலே பிறந்த சாணிக்கூடை.
அழகிற்கு மூக்கை அழிப்பார் உண்டா?
அழகு இருந்து அழும், அதிருஷ்டம் இருந்து உண்ணும்.
அழகு ஒழுகுது, மடியிலே கட்டடா கலயத்தை.
700 அழகு ஒழுகுகிறது, நாய் வந்து நக்குகிறது, ஓட்டைப் பானைகொண்டுவா பிடித்து வைக்க.
அழகுக்கு இட்டால் ஆபத்துக்குதவும்.
அழகுக்குச் செய்தது ஆபத்துக்குதவும்.
அழகு சொட்டுகிறது.
அழகு சோறுபோடுமா, அதிருஷ்டம் சோறு போடுமா?
அழகு பெண்ணே காற்றாடி (காத்தாயி), (உன்னை) அழைக்கிறாண்டி கூத்தாடி.
அழச்சொல்லுகிறவன் பிழைக்கச் சொல்லுவான், சிரிக்கச்சொல்லுகிறவன் கெடச்சொல்லுவான்.
அழச்சொல்லுவார் தமர், சிரிக்கச் சொல்லுவார் பிறர்.

அழிக்கப்படுவானை கடவுள் அறிவீனன் ஆக்குவார்.
அழித்துக் கழித்துப்போட்டு வழித்து நக்கி யென்று பெயரிட்டானாம்.
710 அழிந்த கொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன, கழுதை மேய்ந்தாலென்ன?
அழிந்தவள் ஆரோடு போனால் என்ன?
அழிந்து பழஞ்சோறாய்ப் போச்சுது.
அழிவழக்குச் சொன்னவன், பழிபொறுக்கும் மன்னவன்.
அழுகள்ளன் தொழுகள்ளன் ஆசாரக்கள்ளன்.
அழுகிற ஆணையும் சிரிக்கிற பெண்ணையும் நம்பப்படாது.
அழுகிறதற்கு அரைப்பணம் கொடுத்து ஒய்கிறதற்கு ஒரு பணம் கொடு.
அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுகிறபோல,
அழுகிற வீட்டில் இருந்தாலும் ஒழு(கு)கிற வீட்டில் இருக்கலாகாது.
அழுகிற வேளைபார்த்து அக்குள் பாய்ச்சுகிறான்.
720 அழுகை ஆங்காரத்தின் மேலும், சிரிப்பு கெலிப்பின் மேலும் தான்.
அழுகையும் ஆங்காரமும் சிரிப்புக் கெலிப்போடே,
அழுக்குக்குள் இருக்கும் மாணிக்கம்.
அழுக்குச் சீலைக்குள்ளே மாணிக்கம்.
அழுக்கை அழுக்குக்கொல்லும், இழுக்கை இழுக்குக் கொல்லும்.
அழுக்கைத் துடைத்து மடியில் வைத்தாலும் புழுக்கைக் குணம் போகாது.
அழுத கண்ணும் சிந்திய மூக்கும்.
அழுத பிள்ளை உரம் பெறும்.
அழுத பிள்ளை பால்குடிக்கும்.
அழுத பிள்ளையும் சிரித்ததாம், கழுதைப்பாலைக் குடித்ததாம்.
730 அழுத பிள்ளையும் வாய்மூடும் அதிகாரம்.
அழுதவனுக்கு அகங்காரமில்லை.
அழுதாலும் பிள்ளை அவளே பெறவேண்டும்.

அழுத்த நெஞ்சன் ஆருக்கு முதவான், இளகின நெஞ்சன் எவர்க்கும் உதவுவான்.
அழுதபிள்ளைத் தாய்ச்சிக்குப் பணயம் கொடுத்தால் அநுபவிக்க ஒட்டுமா குழந்தை?
அழுவார் அழுவார் தம் துக்கம் அசலார்க்கல்ல
அழுவார் அழுவார் தம் தம் துக்கமே, திருவன் பெண்டீருக்கு அழுவாரில்லை.
அழுவார் அற்ற பிணமும் ஆற்றுவார் அற்ற சுடலையும்,
அழையா வீட்டிற்கு நுழையாச் சம்பந்தி.
அளகாபுரி கொள்ளையானாலும் அதிருஷ்ட ஈனனுக்கு ஒன்றுமில்லை.
740 அளகாபுரியிலும் விறகு தலையன் உண்டு.
அளகேசன் ஆனாலும் அளவு அறிந்து செலவுசெய்ய வேண்டும்.
அளக்கிற நாழி அகவிலை அறியுமா?
அளந்த அளந்த நாழி ஒழிந்து ஒழிந்து வரும்.
அளந்த நாழிகொண்டு அளப்பான்.
அளந்த ஒருசாணில்லை, அரிந்தால் ஒருசட்டிகாணாது.
அளவளாலில்லாதவன் வாழ்க்கைகுளவளாக்கோடின்றி நீர் நிறைந்தற்கு.
அளவிட்டவரைக் கள விடலாமா?
அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாகும்.
அளவுக்கு மிஞ்சினால் அமிருதமும் நஞ்சு.
750 அளுங்குப் பிடி பிடித்தாற்போல,
அள்ளாது குறையாது சொல்லாது பிறவாது.
அள்ளிக்குடிக்கத் தண்ணீரில்லை, அவள்பேர் கங்காதேவி.
அள்ளிக்கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன்.
அள்ளிக்கொண்டே போகச்சே கிள்ளிக்கொண்டு வருகிறான்.
அள்ளிப்பால் வார்க்கையிலே சொல்லிப்பால்வார்த்திருக்குது.
அள்ளுகிறவன் இடத்தில் இருக்கல் ஆகாது, கிள்ளுகிற வன் இடத்தில் இருந்தாலும்.

அள்ளுவது எல்லாம் நாய் தனக்கென்று எண்ணுமாம்.
அறக்கப்பறக்கப் பாடுபட்டாலும் படுக்கப்பாயில்லை.
அறக்கல்வி முழுமொட்டை.
760 அறக்காத்தான் பெண்டிழந்தான், அறுகாதவழி சுமந்து அழுதான்.
அறக்குழைத்தாலும் குழைப்பாள், அரிசியாய் இறக்கினாலும் இறக்குவாள்.
அறக்கூர்மை முழுமொட்டை.
அறங்கையும் புறங்கையும் நக்குதே.
அறச்செட்டு முழுநஷ்டம்.
அறத்தால் வருவதே இன்பம்.
அறநனைந்தவருக்குக் கூதல் என்ன?
அறப்பத்தினி ஆமுடையானை அப்பா என்று அழைத்த கதை.
அறப்படித்த பூனை காடிப்பானையில் தலைபோடும்.
அறப்படித்த மூஞ்சுறு கழுநீர்ப்பானையில் விழுந்தது போல.
770 அறப்படித்தவன் அங்காடிபோனால் விற்கவும் மாட்டான் கொள்ளவும் மாட்டான்.
அறப்படித்தவர் கூழ்ப்பானையில் விழுந்தார்.
அறப்பேசி உறவாடவேண்டும்.
அறமுறுக்கினால் அற்றுப்போகும்.
அறமுறுக்கினால் கொடி முறுக்குப்படும்.
அறமுறுக்குக் கொடும்புரிகொண்டு அற்றுவிடும்.
அறம் பொருள் இன்பம் எல்லார்க்கும் இல்லை.
அறவடிக்குமுன் சோறு காடிப்பானையில் விழுந்தாற் போல.
அறவுங்கொடுங்கோல் அரசன் கீழ்க் குடியிருப்பிற் குறவன் கீழ்க் குடியிருப்பு மேல்.
அறிஞர்க்கழகு அகத்துணர்ந்து அறிதல்.
780 அறிந்த ஆண்டையென்று கும்பிடப்போனால், உங்கள் அப்பன் பத்துப்பணம் கொடுக்கவேணும் கொடு என்றான்.
அறிந்தபார்ப்பான் சிநேகிதன், ஆறுகாசுக்கு மூன்று தோசையா?

அறிந்தவனென்று கும்பிட அடிமைவழக்கிட்ட கதை.
அறிந்து அறிந்து செய்கிறபாவத்தை, அழுது அழுது தொலைக்க வேணும்.
அறிந்தும் கெட்டேன் அறியாமலும் கெட்டேன், சொறிந்து புண் ஆயிற்று.
அறிய அறியக் கெடுவார் உண்டா?
அறியாத நாளெல்லாம் பிறவாத நாள்.
அறியாப்பிள்ளை ஆனாலும் ஆடுவான் மூப்பு.
அறியாப்பிள்ளை புத்தியைப் போல.
அறியாமல் தாடியை வளர்த்தது அம்பட்டன் கையிற் கொடுக்கவா?
790 அறிவில்லார் சிநேகம் அதிக உத்தமம்.
அறிவீனர்தமக்கு ஆயிரம் உரைக்கினும் அவம்.
அறிவீனனிடத்தில் புத்தி கேளாதே.
அறிவு ஆர் அறிவார்? ஆய்ந்தவர் அறிவார்.
அறிவு இல்லாச் சயனம் அம்பரத்திலுமில்லை.
அறிவு இல்லாதவன் பெண்களிடத்திலும் தாழ்வுபடுவான்.
அறிவு இல்லார் தமக்கு ஆண்மையுமில்லை.
அறிவு கெட்டவனுக்கு ஆர் சொல்லியும் என்ன?
அறிவுடன் ஞானம் அன்புடன் ஒழுக்கம்.
அறிவுடையாரை அடுத்தாற்போதும்.
800 அறிவுடையாரை அரசனும் விரும்பும்.
அறிவுதரும் வாயும் அன்பு உரைக்கும் நாவும்,
அறிவு புறம்போய் அண்டது போல,
அறிவு பெருத்தோன் அல்லல் (நோய்) பெருத்தோன்.
அறிவு மனதை அரிக்கும்.
அறிவேன் அறிவேன் ஆலிலை புளியிலைபோலிருக்கும்.
அறுகங்கட்டைபோல் அடிவேர் துளிர்க்கிறது.
அறுகங்கட்டையும் ஆபத்துக்குதவும்,
அறுக்க ஊறும் பூம்பாளை, அணுக ஊறும் சிற்றின்பம்.
அறுக்கமாட்டாதவன் இடுப்பிலே ஐம்பத்தெட்டு அரிவாள்.
810 அறுதலி மகனுக்கு அங்கமெல்லாம் சேட்டை.
அறுதலிமகனுக்கு வாழ்க்கைப்பட்டு விருதாவிலே தாலி அறுத்தேன்.

அறுத்த கோழி துடிக்குமாப் போல.
அறுத்தவள் ஆண்பிள்ளை பெற்றகதை,
அறுத்தவிரலுக்குச் சுண்ணாம்பு தடவமாட்டான்,
ஆண்டிவந்தாலும் பிச்சைபோடமாட்டான்.
அறுத்துக் கொண்டதாம் கழுதை எடுத்துக்கொண்டதாம் ஒட்டம்.
அறுந்த விரலுக்குச் சுண்ணாம்பு கிடையாது.
அறுபது நாளைக்கு எழுபது கந்தை.
அறுபத்துநாலடிக் கம்பத்தி லேறி ஆடினாலும், அடியிலிறங்கித்தான் தியாகம் வாங்கவேண்டும்.
அறுபத்தெட்டுக் கோரம்பலம்.
820 அறுப்புக்காலத்தில் எலிக்கு ஐந்துபெண்சாதி.
அறுவாய்க்கு வாய்பெரிது, அரிசிக்குக் கொதிபெரிது,
அறைக்கீரைப் புழுதின்னாதவனும் அவசாரிகையில் சோறுண்ணாதவனும் இல்லை.
அறையில் ஆடி அல்லவோ அம்பலத்தில் ஆடவேண்டும்.
அறையில் இருந்தபேர்களை அம்பலம் ஏற்றுகிற புரட்டன்.
அறைவீட்டுச்செய்தி அம்பலத்தில் வரும்.
அற்ப ஆசை கோடிதவத்தைக் கெடுக்கும்,
அற்பக்கோபத்தினால் அறுந்தமூக்கு ஆயிரம் சந்தோஷம் வந்தாலும் வருமா?
அற்பசகவாசம் பிராணசங்கடம்.
அற்பசுகம் கோடிதுக்கம்.
830 அற்பத்திற்கு அழகு குலைகிறதா?
அற்பத் துடைப்பமானாலும் அகத்தூசியை அடக்கும்,
அற்பர் சிநேகம் பிராண கண்டிதம்.
அற்பர் சிநேகம் பிராண சங்கடம்.
அற்பனுக்கு பவிஷு(ஐசுவரியம்) வந்தால் அர்த்த ராத்திரி குடை பிடிப்பான்.
அற்பன்கை ஆயிரம்பொன்னிலும் சற்புத்திரன் கைத்தவிடு நன்று.
அற்பன் பணம் படைத்தால் அர்த்தராத்திரி குடைபிடிப்பான்.
அற்பன் பணம் படைத்தால் வைக்க வ்கை அறியான்.
அற்றது பற்றெனில் உற்றது வீடு.
அற்றத்துக்கு உற்றதாய்.

840 அனந்தத்துக்கு ஒன்றாய் உரையிட்டாலும் அளவிடப் போகாது.

அனல்குளிர் வெதுவெதுப்பு இம்மூன்றுகாலமும் ஆறு காலத்திற்குள் அடங்கும்.

அனற்றை இல்லா ஊரிலே வண்ணாரிருந்து கெட்டார்கள்.

அனுபோகம் தொலைந்தால் அவிழ்தம் பலிக்கும்.

அன்பற்ற மாமியாருக்குக் கால்பட்டால் குற்றம் கை பட்டால் குற்றம்.

அன்பற்ற மாமியாருக்குக் கும்பிடுகிறதும் குற்றந்தான்.

அன்பற்றார் வாசலிலே பின்பற்றிப் போகாதே.

அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறி.

அன்பில்லார் தமக்கு ஆதிக்கம் இல்லை.

அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்.

850 அன்புடையானைக் கொடுத்துஅலையச்சே அசல்வீட்டுக்காரன் வந்து அழைத்தகதை.

அன்புள்ள குணம் அலையில்லா நதி.

அன்பே பிரதானம் அதுவே வெகுமானம்.

அன்று ஆயிரம் பொன்னிலும், நின்றற ஒருகாசு பெரிது.

அன்றில்லை இன்றில்லை அழுகல் பலாக்காய், கலியாணவாசலிலே கலந்துண்ண வந்தாயே!

அன்று இறுக்கலாம் நின்றிறுக்கலாகாது.

அன்று எழுதினவன் அழித்து எழுதுவானோ?

அன்று கண்டதை அடுப்பில்போட்டு ஆக்கினபானையைத் தோளில் போட்டுக்கொண்டு திரிகிறதுபோல்.

அன்று கண்ட மேனிக்கு அழிவு இல்லை.

அன்று கண்டனர் இன்றுவந்தனர்.

860 அன்று கழி அன்று கழி.

அன்று குடிக்கத் தண்ணீரில்லை ஆனைமேல் அம்பாரி வேணுமாம்.

அன்று கொள் நின்று கொள் என்றும் கொள்ளாதே.

அன்றுசாப்பிட்ட சாப்பாடு இன்னும் ஆறுமாசத்திற்குத் தாங்கும்.

அன்றுதின்ற ஊண் ஆறுமாசத்துப்பசியை அறுக்கும்.

அன்றுதின்ற சோறு ஆறு மாதத்திற்கு ஆமா?

அன்றுமில்லை காற்று, இன்றுமில்லை குளிர்.
அன்றுமில்லை தையல், இன்றுமில்லை பொத்தல்.
அன்றைக்காடை இன்றைக்குக்கொடை என்றைக்கு விடியும் இடையன் தரித்திரம்?
அன்றைக்கு அடித்த அடி ஆறுமாதம் தாங்கும்.
870 அன்றைக்குக் கிடைக்கிற ஆயிரம் பொன்னிலும் இன்றைக்குக் கிடைத்த அரைக்காசு பெரிது.
அன்றைக்கெழுதினதை அழித்தெழுதப் போகிறானா?
அன்றைக்குச் சொன்னசொல் சென்ம சென்மத்துக்கும் உறைக்கும்.
அன்றைக்குத் தின்கிற பலாக்காயைவிட இன்றைக்குத் தின்கிற களாக்காய் பெரிது.
அன்னதானத்திற்குச் சரி என்ன தானமிருக்கிறது?
அன்னநடை நடக்கப்போய்க் காகம் தன் நடையும் இழந்தாற்போல.
அன்னநடை நடக்கப்போய்த் தன் நடையும் கெட்டாற்போல.
அன்னப்பாலுக்குச் சிங்கி யடித்தவன் ஆவின் பாலுக்குச் சர்க்கரை தேடுகிறான்.
அன்னப்பிடி வெல்லப்பிடி ஆச்சுது.
அன்ன மயம் இன்றிப் பின்னை மயம் இல்லை.
880 அன்னமயம் பிராணமயம்.
அன்னம் இட்டாரைக் கன்னம் இடலாமா?
அன்னம் இறங்குவதே அபான வாயுவால்.
அன்னம் ஒடுங்கினால் அஞ்சும் ஒடுங்கும்.
அன்னம் மிகக்கொள்வானும் ஆடை அழுக்கு ஆவானும் பதர்.
அன்னம் முட்டானால் எல்லாம் முட்டு.
அன்னிய சம்பந்தமே யல்லாமல் அத்தை சம்பந்தமில்லை என்கிறான்.
அன்னிய மாதர் அவதிக்கு உதவுவாரா?
அன்னைக்கு உதவாதவன் ஆருக்கு மாகான்.
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

## ஆ.

890 ஆ ஆ என்பவருக்கென்ன, அன்றும் படைப்பவர்க் கல்லவா தெரியும்.
ஆகடிக்காரன் போகடியாய்ப் போவான்.
ஆகட்டும் போகட்டும் அவரைக்காய் காய்க்கட்டும், தம்பி பிறக்கட்டும் தம்பட்டங்காய் காய்க்கட்டும், அவனுக்குக் கலியாணம் ஆகட்டும், உன்னைக்கூப்பிடுகிறேனோ?
ஆகாசத்தில் இருந்து அறுந்து விட்டேன், பூமிதேவி ஏற்றுக் கொண்டாள்.
ஆகாசத்தில் எறிந்தால் அங்கேயே நிற்குமோ?
ஆகாசத்தை வடுப்படாமல் கடிப்பே னென்றான்.
ஆகாச வர்த்தகன்.
ஆகாத நாளையில் பிள்ளை பிறந்தால், அண்டை வீட்டுக் காரனை என்ன செய்யும்?
ஆகாத பஞ்சாங்கத்துக்கு அறுபது நாழிகையும் தியாச்சியம்.
ஆகாத வேளையில் பிள்ளை பிறந்தால் அப்பனையும் ஆத்தாளையும் கொல்லுமே யொழிய, பஞ்சாங்கஞ் சொன்ன பார்ப்பானை என்ன செய்யும்?
900 ஆகாத வற்றை ஏற்றால் ஆராய்ந்து ஏற்றுக் கொள்.
ஆகாதவன் குடியை அடுத்துக் கெடுக்க வேண்டும்.
ஆகாதும் போகாதும் ஆண்டிகளுக்கு, அதிலும் கெட்டது குருக்களுக்கு.
ஆகாத்தியக் காரனுக்கு பிரமகத்திக்காரன் சாட்சியா?
ஆகாயத்தில் கூட அரைக்குழிக்கு ஆவாச மில்லை.
ஆகாயத்தில் பறக்க உபதேசிப்பேன், என்னைத் தூக்கி ஆற்றுக்கு அப்பால் விடு என்கிறான் குரு.
ஆகாயத்துக்கு மையம் காட்டுகிறது போல.
ஆகாயத்தைப் பருந்து எடுத்துக் கொண்டு போகுமா?
ஆகாயத்தை வடுப்படக் கடிக்கிறதா?
ஆகாய மட்டும் அளக்கும் இருப்புத் தூணைச் செல்லரிக்குமா?
910 ஆகாய வல்லிடி அதிர இடிக்கும்.
ஆகாய பார்க்கப் போயும் இடுமுடுக்கா!
ஆகாயம் பெற்றது பூமி தாங்கினது.
ஆகாயம் விழுந்து விட்டது போல.

ஆகிறகாலத்தில் அவிழ்தம் பலிக்கும்.

ஆகிறவன் அரைக்காசிலும் ஆவான், ஆகாதவனுக்கு ஆயிரங் கொடுத்தாலும் விடியாது.

ஆகுங்காய் பிஞ்சிலே தெரியும்.

ஆகுங்காலத்தில் அடியாளும் பெண் பெறுவாள்.

ஆகுங்காலம் ஆகும், போகுங் காலம் போகும்.

ஆகுங்காலம் மெய்வருந்த வேண்டாம், தேங்காய்க்கு இளநீர்போலச் சேருமே,

920 ஆகுங்குடிக்கு அடியாள் பெண் பெறுவாள்.

ஆக்கப்பிள்ளை நம்மாத்தில், அடிக்கப் பிள்ளை அயல் வீட்டிலோ?

ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறானோ?

ஆக்க மாட்டாத அழுகல்நாரிக்குத் தேட்மாட்டாத திருட்டுச் சாவான்.

ஆக்க மாட்டே னென்றால் அரிசியைப் போடு.

ஆக்கவேண்டாம் அரைக்க வேண்டாம் பெண்ணே, என்னருகிலிருந்தாலும் போதுமடி கண்ணே.

ஆக்கி அரைத்துப் போட்டவள் கெட்டவள், வழிகூட்டி அனுப்பினவள் நல்லவள்.

ஆக்கிற் குழைப்பேன், அரிசியாய் இறக்குவேன்.

ஆக்கினையும் செங்கோலும் அற்றது அரைநாழிகை யிலே.

ஆக்குகிறவள் சலித்தால் அடுப்பு பாழ், குத்துகிறவள் சலித்தால் குந்தாணிபாழ்.

930 ஆங்காரத்தாலே அழிந்தவர் அநந்தம் பேர்.

ஆங்காரிகளுக்கு அதிகாரி.

ஆங்காலம் எல்லாம் அவசாரி ஆடிச் சாங்காலம் சங்கரா சங்கரா என்கிறாள்.

ஆங்கால மாகும், போங்காலம் போகும்.

ஆசரித்த தெய்வமெல்லாம் அடியோடே மாண்டது.

ஆசாரப்பார்ப்பான் காசிக்குப் போனானாம், பறையன் தோசம் தலையி லடிபட்டதாம்.

ஆசாரப் பூசைச்சட்டி அதன்மேல் கவிச்சுச் சட்டி.

ஆசாரம் இல்லா அசடருடன் கூடிப் பாசாங்கு பேசிப்பதி இழந்துபோனேனே!

ஆசானுக்கும் அடைவுதப்பும்.
ஆசீர்வாதமும் சாபமும் அறவோர்க்கு இல்லை.
940 ஆசை அண்டாதானால் அழுகையும் அண்டாது.
ஆசை அவள்மேலே, ஆதரவு பாய் மேலே.
ஆசை அறுபதுநாள், மோகம் முப்பது நாள், தொண்ணூறு நாளும் போனால் துடைப்பக் கட்டை அடி.
ஆசை இருக்கிறது தாசீல்பண்ண, அமிசை (அதிருஷ்டம்) இருக்கிறது கழுதை மேய்க்க.
ஆசை உண்டானால் பூசை உண்டு.
ஆசை உள்ளளவும் அலைச்சலும் உண்டு.
ஆசைகாட்டி மோசம் செய்கிறதா?
ஆசை கொண்ட பேருக்கு ரோஷம் இல்லை.
ஆசைக்கு அளவில்லை.
ஆசைக்கு ஒரு பெண்ணும், ஆஸ்திக் கொரு பிள்ளையும்.
950 ஆசைக்கு ரோஷ மில்லை.
ஆசை நோய்க்கு மருந்து முண்டாங் கொலோ?
ஆசை நோவுக்கு அவிழ்தம் ஏது?
ஆசை பெரிதோ, மலை பெரிதோ?
ஆசை பெருக அலைச்சலும் பெருகும்.
ஆசைப்படு, மோசம் போகாதே.
ஆசைப்படுவது அவ்வளவும் துன்பம்.
ஆசைப்பட்ட பண்டம் ஊசிப் போயிற்று.
ஆசை யுள்ள இடத்தில் பூசை நடக்கும்.
ஆசை யெல்லாம் தீர அடித்தாள் முறத்தாலே.
960 ஆசை வெட்கம் அறியாது.
ஆசை வைத்தால் நாசம்.
ஆச்சாபுரக் காட்டிலே ஐம்பது புலி குத்தினவன் பறைச்சேரி நாயோடே பங்கமழிகிறான்.
ஆச்சி ஆச்சி மெத்தப் படித்துப் படித்துப் பேசாதே.
ஆடப்பாடத் தெரியாது இரண்டு பங்குண்டு.
ஆடப்போன கங்கை அண்டையில் வந்தாற் போல.
ஆடமாட்டாததேவடியாள் கூடம் போதாதென்றாளாம்.
ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம்.
ஆடலோகத்து அமுதத்தை ஈக்கள் மொய்த்துக்கொண்டாற் போல.
ஆடவன் செத்தபின்பு அறுதலிக்குப் புத்திவந்தது.

970 ஆடவிட்டு நாடகம் பார்க்கிறதா?
ஆடவிட்டு வேடிக்கை பார்க்கிறது.
ஆடாஜாதி கூடாஜா்தியா?
ஆடாதான் மத்தளத்தைப் பழித்தானாம்.
ஆடாது எல்லாம் ஆடி அவரைக்காயும் அறுத்தாச்சுது.
ஆடாதுமாடி ஐயனார்க்குக் காப்பும் அறுத்தாச்சுது.
ஆடி அமர்ந்தது ஒரு நாழிகையில்.
ஆடி அறவெட்டை, அகவிலை நெல்விலை.
ஆடி ஓடி நாடியி லடங்கிற்று.
ஆடி ஓய்ந்த பம்பரம் போல.
980 ஆடிக்கரு அழிந்தால் மழை குறைந்து போம்.
ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்கவேண்டும், பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக்கறக்கவேண்டும்.
ஆடிக்காற்றில் உதிரும் சருகுபோல.
ஆடிக்காற்றில் எச்சிற் கல்லைக்கு வழியா?
ஆடிக்காற்றிலே அம்மி பறக்கச்சே இலவம்பஞ்சுக்கு எங்கே கதி?
ஆடிக்காற்றிலே இலவம்பஞ்சு பறந்ததுபோல.
ஆடிக்காற்றிலே பூளைப்பூ பறந்தாற்போல.
ஆடிக்கு அழைக்காத மாமியாரைத் தேடிப் பிடித்து செருப்பால் அடி.
ஆடிக்கொரு தடவை (தரம்), ஆவணிக்கொரு தடவை (தரம்).
ஆடிமாசத்தில் குத்தினகுத்து ஆவணி மாசத்தில் உளைப்பு எடுத்ததாம்.
990 ஆடியகாலும் பாடிய நாவும் சும்மாவிராது.
ஆடிய கூத்தும் பாடிய ராகமும்.
ஆடிவிதை தேடிப்போடு.
ஆடு இருக்க இடையனை விழுங்குமா.
ஆடு எடுத்த கள்ளனைப்போலே விழிக்கிறான்.
ஆடு கடிக்குமென்று இடையன் உறியேறிப் பதுங்குவானாம்.
ஆடு காற்பணம் புடுக்கு முக்காற்பணம்.
ஆடு கிடந்த இடத்திலே மயிர்தானும் கிடையாமற் போயிற்று.
ஆடுகிடந்த இடத்தில் பழுப்புத்தானும் கிடையாது.

ஆடு இருந்த இடமும், அகம்படியான் இருந்த இடமும் உருப்படாது.

1000 ஆடுகெட்டவன் ஆடித்திரிவான், கோழிகெட்டவன் கூவித்திரிவான்.

ஆடுகெடாத இடையன் ஆவைக்கொடுப்பானா?

ஆடுகொடுக்காத இடையன் பசுவு கொடுப்பானா?

ஆடுகொழுக்கிறது எல்லாம் இடையனுக்கு லாபம்.

ஆடு கோனானின்றித் தானாய்ப் போகுமா?

ஆடுங்காலத்துத் தலை கீழாக விழுந்தால் ஓடும் கப்பரையும் உடையவன் ஆவான்.

ஆடுங்காலம் தலை கீழாய் விழுந்தாலும் கூடும் புசிப்புத்தான் கூடும்.

ஆடுதவுமா குருக்களே? கொம்பும் குளம்பும் தவிரச் சமூலமும் ஆம்.

ஆடு தழை தின்பதுபோல.

ஆடுதன் ராசாப்போல்.

1010 ஆடுதின்பாளாம், இரண்டு ஆடு தின்பாளம், ஆட்டைக்கண்டால் சீ சீ என்பாளாம்.

ஆடு நனைகிறதென்று கோனாய் (கூவிக் கூவி) அழுகிறதாம்?

ஆடு நனைகிறதென்று தோண்டான் அழுகிறதாம்

ஆடுநினைத்த இடத்தில் பட்டிபோடுகிறதா?

ஆடுபகையும் குட்டி உறவுமா?

ஆடு பிடிக்கக் கரடி அகப்பட்டதுபோல்.

ஆடு பிழைத்தால் மயிர்தானும் கொடான்.

ஆடுவதுமாடி அவரைக்காயும் பறித்தாச்சு.

ஆடுவதே மணியமா யிருக்கிறான்.

ஆடுவரும் பின்னே (தலை) ஆடிவரும் முன்னே.

1020 ஆடு வீட்டிலே ஆட்டுக்குட்டி காட்டிலே

ஆடை இல்லாதவன் அரைமனிதன்.

ஆடை உடையான் சபைக்கஞ்சான்.

ஆடையைத்தின்றால் வெண்ணெய் உண்டா?

ஆட்காட்டி தெரியாமல் திருடப்போகிறவன் கெட்டிக்காரனோ, அவன் அறியாமல் அவன் காலடி பிடித்துப் போகிறவன் கெட்டிக்காரனோ?

ஆட்காட்டி சொந்தக்காரனையும் திருடனையும் காட்டிக்கொடுக்கும்.
ஆட்டமும் கூத்தும் அடங்கிற்று அத்தோடே.
ஆட்டம் நாலுபந்தி, புறத்தாலே குதிரை.
ஆட்டாளுக்கு ஒரு சீட்டாள், அடைப்பக்காரனுக்கு ஒரு துடைப்பக்கட்டை.
ஆட்டாளுக்கு ஒரு மோட்டாள்.
1030 ஆட்டில் ஆயிரம் மாட்டில் ஆயிரம், வீட்டிலே கரண்டி பாலில்லை.
ஆட்டின் கழுத்தறுப்புப் போல.
ஆட்டுக்கடா சண்டையில் நரி செத்ததுபோல.
ஆட்டுக்கடா முறைத்ததுபோல முறைக்கிறான்.
ஆட்டுக்கறியும் நெல்லுச்சோறும் தம்மாகும்மா, அந்தக் கடன் கேட்கப்போனால் கிய்யா மிய்யா.
ஆட்டுக்கிடையிலே கோனாய் (தோண்டான்) புகுந்ததுபோல.
ஆட்டுக்குட்டிக்கு ஆனையைக் காவுகொடுக்கிறதா?
ஆட்டுக்குட்டிமேல் ஆயிரம் பொன்.
ஆட்டுக்குட்டிமேல் ஆயிரம் பொன்னா?
ஆட்டுக்குட்டியைத் தோளிலே வைத்துக் காடெங்கும் தேடின கதைபோல.
1040 ஆட்டுக்குத் தீர்ந்தபடி குட்டிக்கும் ஆகிறது.
ஆட்டுக்குத் தோற்குமா கிழப்புலி?
ஆட்டுக்குத் தோற்ற கிழப்புலியா?
ஆட்டுக்கும் மாட்டுக்கும் முறையா, காட்டுக்கும் பாட்டுக்கும் வரையா?
ஆட்டுக்கும் மாட்டுக்கு மிரண்டுகொம்பு, இந்த ஐயங்காருக்கு மூன்று கொம்பு.
ஆட்டுக்கும் மாட்டுக்கு மிரண்டு கொம்பு, இந்த மதிகெட்ட மாட்டுக்கு மூன்று கொம்பு.
ஆட்டுக்கு வால் அளவறுத்து வைத்திருக்கிறது.
ஆட்டுக்கொத்தது குட்டிக்கு.
ஆட்டுத்தலைக்கு ஒச்சன் பறக்கிறதுபோல.
ஆட்டுவித்துப் பம்பை கொட்டுகிறான்.
1050 ஆட்டுவெண்ணெய் ஆட்டு மூளைக்கும் காணாது.
ஆட்டைக்காட்டி வேங்கை பிடிக்கப் பார்க்கிறான்.

ஆட்டைக்கொரு முறைகாண சோட்டை இல்லையா?
ஆட்டைத் தேடி அயலார் கையிற் கொடுப்பதைப் பார்க்க வீட்டைக்கட்டிநெருப்பு வைப்பதுநல்லது.
ஆணமும் கறியும் அடுக்கோடேவேண்டும்.
ஆணவத்தால் அழியாதே.
ஆணாய்ப்பிறந்தால் அருமை, பெண்ணாய்ப்பிறந்தால் எருமை.
ஆணிக்கு இணங்கின பொன்னும் மாமிக்கு இணங்கினபெண்ணும் அருமை.
ஆணுக்கு அவகேடு செய்தாலும் பெண்ணுக்குப் பிழை சொல்லலாகாது.
ஆணுக்குப் பெண் அத்தமிச்சுப்போச்சுதா?
1060 ஆணை அடித்துவளர், பெண்ணை போற்றிவளர்.
ஆணையும் வேண்டாம், சத்தியமும் வேண்டாம், துணியைப் போட்டுத்தாண்டு.
ஆண் கேடு அரசுகேடு உண்டோ?
ஆண்சிங்கத்தை யானை அடுக்குமா?
ஆண்டபொருளை அறியாதார் செய்தவம் மாண்ட மரத்துக்கு அணைத்த மண்.
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் (திரிந்தாலும்) மாண்டார் வருவரோ மாநிலத்தில்?
ஆண்டாரன்னத்தை அதிரப் பிடிக்கவும் போகாது, செட்டியார் எட்டிக் கன்னத்தில் அடிக்கவும் போகாது.
ஆண்டாருக்குக் கொடுக்கிறையோ, சுரைக்குடுக்கைக்குக் கொடுக்கிறையோ?
ஆண்டாருக்கும் பறப்பு, கோவிலுக்கும் சிறப்பு.
ஆண்டாரைப் பூதமஞ்சும், மாண்டா லொழியப்போகாது.
1070 ஆண்டார் இருக்குமட்டும் ஆட்டமும் கூத்தும்.
ஆண்டி எப்போ சாவான், மடம் எப்போ ஒழியும்?
ஆண்டிகள் மடம் கட்டுகிறதுபோல.
ஆண்டிகுண்டியைத் தட்டினால் பறப்பது சாம்பல்.
ஆண்டிகிடப்பான் மடத்திலே, அவன் சோளி கிடக்கும் தெருவிலே.

ஆண்டிக்கு இடச்சொன்னால் தாதனுக்கு இடச் சொல்லுகிறான்.

ஆண்டிக்குக் கொடுக்கிறாயோ சுரைக்குடுக்கைக்குக் கொடுக்கிறாயோ?

ஆண்டிக்குப் பிச்சையா, அவன் குடுவைக்குப் பிச்சையா?

ஆண்டிக்கு வாய்ப்பேச்சு, பார்ப்பானுக்கு அதுவும் இல்லை.

ஆண்டி சொன்னால் தாதனுக்குப் புத்தி எங்கே போயிற்று?

1080 ஆண்டிச்சி பெற்றது அஞ்சும் குரங்கு (அவலம்).

ஆண்டிமகன் ஆண்டியானால், நேரம் அறிந்து சங்கு ஊதுவான்.

ஆண்டியும் ஆண்டியும் கட்டிக்கொண்டால் சாம்பலும் சாம்பலும் ஒட்டிக்கொள்ளும்.

ஆண்டியும் தாதனும் தோண்டியும் கயிறும்.

ஆண்டியே அன்னத்திற்கு அலையச்சே, லிங்கம் பால் சோற்றுக் கழுகிறதாம்.

ஆண்டியை அடித்தானாம், அவன் குடுவையைப் போட்டுடைத்தானாம்.

ஆண்டியைக்கண்டால் லிங்கன் என்கிறான், தாதனைக் கண்டால் ரங்கன் என்கிறான்.

ஆண்டிவேஷம் போட்டும் அலைச்சல் தீரவில்லை.

ஆண்டி மறுத்தால் தோட்டியும் கும்பிடான்.

ஆண்டு மாறின காரும் அன்று அறுத்த சம்பாவும் ஊன் கண்ணுக்கு அரிது.

1090 ஆண்டை கூலியைக் குறைத்தால், சாம்பான் வேலையைக் குறைப்பான்.

ஆண்டைமேற் கோபம் கடாவின்மேல் ஆற்றினான்.

ஆண்பிள்ளைகள் ஆயிரம் ஒத்திருப்பார்கள், அக்காள் தங்கச்சி ஒத்திரார்கள்.

ஆண்பிள்ளைச் சிங்கத்திற்கு ஆர் நிகர்?

ஆண்முந்தியோ பெண்முந்தியோ?

ஆண்மையற்ற வீரன் ஆயுதத்தின்மேற் குறைசொல் லுவான்.

ஆதரவற்ற வார்த்தையும் ஆணிகிடாவாத மரமும் பலன் செய்யா.

ஆதாயமில்லாத செட்டி ஆற்றைக்கட்டி இறைப்பானா?
ஆதாயமில்லாத செட்டி ஆற்றோடே போகிறானாம்.
ஆதாயமே செலவு அறையிருப்பே நிலுவை.
1100 ஆதித்தன் தெற்குவடக் கானாலும் சாதித்தொழில் (சனித்தொழில்) ஒருவரையும் விடாது.
ஆதி முற்றினால் வியாதி.
ஆதியந்தமில்லா அருமைப் பொருளே கர்த்தன்.
ஆதீனக் காரனுக்குச் சாதனம் வேண்டுமா?
ஆத்தாளு மகளும் காத்தானுக் கடைக்கலம், அவன் காத்தாலும் காத்தான், கைவிட்டாலும் விட்டான்.
ஆத்தாளை அக்காளைப் பேசுகிறதில் கோபமில்லை, ஆமுடையாளைப் பேசுகிறதற்குத்தான் கோபம் பொங்கிப் பொங்கிவருகிறது.
ஆத்தாள் என்றால் சும்மாவிருப்பான், அக்காள் என்றால் சும்மாவிருப்பான், பெண்டாட்டி என்றால் மீசைமேல் கைபோட்டுச் சண்டைக்கு வருவான்.
ஆத்தாளோடு போகிறவனுக்கு அக்காள் ஏது தங்கச்சி ஏது?
ஆத்தாள்கூத்து அம்மணம் அன்றாடகம் கோதானம்.
ஆத்தாள் அம்மணம் கும்பகோணத்தில் கோதானம்.
1110 ஆத்தி நாரு கிழித்தாற்போல் உன்னைக் கிழிக்கிறேன்.
ஆஸ்தியில்லாதவன் மனிதன் அல்லாதவன்.
ஆஸ்தியுள்ளவன் ஆஸ்திக்கு அடிமை.
ஆஸ்தியுள்ளவனுக்கு நாசமில்லை.
ஆத்திரக் காரனுக்குப் புத்திமட்டு.
ஆத்திரக்காரன் கோத்திரம் அறிவானா?
ஆத்திரத்தை அடக்கினாலும் மூத்திரத்தை அடக்கப் படாது.
ஆத்திரமுடையோன் கோத்திரமறியான்.
ஆத்திரம் பெரிதானாலும் புத்திமிகப்பெரிது.
ஆத்திரம் பெரிதானாலும் மூத்திரம் பெரிது.
1120 (ஆத்தும சுத்தியாகிய) நெஞ்சிலக்கணந் தெரியாதவனுக்கு பஞ்சலக்கணந் தெரிந்து பலனென்ன?
ஆத்தைபடுகிற பாட்டுக்குள்ளே மகன் மோருக்கு அழுகிறான்.

ஆந்தை சிறிது கீச்சுப்பெரிது.

ஆந்தை விழிக்கிறதுபோல விழிக்கிறான்.

ஆந்தை பஞ்சையாயிருந்தாலும் சகுனத்திற் பஞ்சை யில்லை.

ஆபத்தி லறியலாம் அருமைச் சினேகிதனை.

ஆபத்திலே சிநேகிதனை அறி.

ஆபத்திற் காத்தவன் ஆட்சி யடைவான்.

ஆபத்துக்கு உதவாத பெண்டாட்டி அழகுக்கா வைத்திருக்கிறது.

ஆபத்துக்கு உதவினவனே பந்து.

1130 ஆபத்துக்கு உதவுவானா அவசாரி ஆமுடையான்?

ஆபத்துக்குப் பாவ மில்லை.

ஆபத்தும் சம்பத்தும் ஆருக்கு முண்டு.

ஆப்பைப் பிடுங்கின குரங்கு நாசம் அடைந்தது போல.

ஆமணக்கு முத்து ஆணிமுத்தாமா?

ஆமணக்கும் பருத்தியும் அடர விதைப்பானா?

ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா?

ஆமுடையானுக் கில்லாத வெட்கம் அடுத்த வீட்டுக் காரனுக் கென்ன?

ஆமுடையானுக்கு ஆழுத குறை அந்தகன் வந்து வாய்த்தான்.

ஆமுடையானுக்குத் தக்க இறுமாப்பு.

1140 ஆமுடையானுக்குப் பொய்சொன்னாலும் அடுப்புக்குப் பொய் சொல்லலாமா?

ஆமுடையானை அடித்ததற்கு கொழுநனைக் கோவித்துக் கொண்டாளாம்.

ஆமுடையானைக் கொன்ற அற நீலி.

ஆமுடையானை நம்பி அவசாரி ஆடலாமா?

ஆமுடையானை வைத்துக்கொண்டல்லவோ அவசாரி ஆடவேண்டும்?

ஆமுடையான் அடித்தது பெரிதல்ல சக்களத்தி சிரிப்பா ளென்றழுகிறேன்.

ஆமுடையான் கோப்பில்லாக் கூத்தும் குருவில்லா ஞானமும் போலிருக்கிறான்.

ஆமுடையான் செத்தவளுக்கு மருத்துவச்சி தயவேன்?
ஆமுடையான் செத்து ஆவிபறக்கச்சே, (அவதிப் படச்சே) அண்டை வீட்டுக்காரன் அக்குளிலே பாய்ச்சுகிறான்.
ஆமுடையான் செத்தபோதே அல்லலுற்ற கஞ்சி.
1150 ஆமுடையான் பலமுண்டானால் குப்பையேறிச் சண்டை போடலாம்.
ஆமுடையான் வட்டமாய் ஓடினாலும் வாசலால் வர வேண்டும்.
ஆமுடையான் வைததைப்பற்றி அசல் வீட்டுத் தச்சனைக் கோணல் நிமிர்த்தச் சொன்னாளாம்.
ஆமென்ற தோஷம் கனத்தது வயிற்றிலே.
ஆமை யெடுக்கிறது (சுடுகிறது) மல்லாத்தி, நாமத்தைச் சொன்னால் பொல்லாப்பு.
ஆமை கிணற்றிலும் அணில் கொம்பிலும்,
ஆமை திடரில் ஏறினாற் போல.
ஆமை பிடிப்பார் மல்லாத்துவார், நாம் அது சொன்னாற் பாவம்.
ஆமை புகுந்த வீடும் அமீனா நுழைந்த வீடும் உருப் படாது.
ஆமை யுடனே முயல் முட்டை இடப்போய்க் கண் பிதுங்கிச் செத்ததாம்.
1160 ஆய உபாயம் அறிந்தவன் அரிதல்ல வெல்வது.
ஆயக்காரனுக்குப் பிரமஹத்திக்காரன் சாட்சி.
ஆயக்காரன் அஞ்சுபணம் கேட்பான், அதாவெட்டுக் காரன் ஐம்பது பணம் கேட்பான்.
ஆயத்திலும் நியாயமாய்ப் போகவேண்டும்.
ஆயத்துக்குக் குதிரை, கீயத்துக்குக் குட்டி.
ஆயத்துக்குப் பயந்து ஆற்றிலே நீந்தினது போல.
ஆயத்துறையில் அநியாயம் செய்யாதே.
ஆய வஞ்சனை பிறர் வஞ்சனை ஒருவருக்கு மாகாது.
ஆயன் அமைப்பை ஆராலும் தள்ளக் கூடாது.
ஆயிரங்கலம் நெல்லுக்கு ஓர் அந்துப்பூச்சி போதும்.
1170 ஆயிரங்காலே அரைக்காற் பணம்.
ஆயிரம் கப்பியில் நழுவின கப்பி.

ஆயிரங் காலத்துப் பயிராச்சுதே.

ஆயிரங் குதிரையை அறவெட்டின சிப்பாய்தானா இப்போ பறைச்சேரி நாயோடே டங்கமழிகிறான்?

ஆயிரங் குணம் ஒரு லோப குணத்தால் தட்டும்.

ஆயிரத்திலே பிறந்து ஐந்நூற்றிலே கால் நீட்டினது போல.

ஆயிரத்தில் ஒருவனே அலங்கார புருஷன்.

ஆயிரம் அரைக்காற் பணம்.

ஆயிரம் உடையார் அமர்ந்திருப்பார், கந்தைபொறுக்கி தொந்தோம் தொந்தோம் என்று கூத்தாடு வான்

ஆயிரம் உடையான் அமர்ந்திருக்கும், அரைப்பண முடையான் ஆடிவிழும்.

1180 ஆயிரம் கட்டு அண்டத்தைத் தாங்கும்.

ஆயிரம் கட்டு ஆனைப் பலம்.

ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்.

ஆயிரம் காக்கைக்குள் ஒரு அன்னம் அகப்பட்டது.

ஆயிரம் கோவிந்தம் போட்டாலும் அமுது படைக் கிறவனுக்கல்லவோ தெரியும் வருத்தம்.

ஆயிரம் சொல்லுக்கு அரை எழுத்து.

ஆயிரம் சொன்னாலும் அவசாரி சமுசாரி யாகாள்.

ஆயிரம் நட்சத்திரம் கூடினாலும் ஒருசந்திரன் ஆகாது.

ஆயிரம் நற்குணம் ஒரு லோப குணத்தால் கெடும்.

ஆயிரம் பசுக்களில் ஒரு பசு உதைத்துக் கொண்டால் நஷ்டமா?

1190 ஆயிரம் பட்டும் அவமாச்சு, கோயிலைக் கட்டியும் குறையாச்சு.

ஆயிரம் பனையுள்ள அப்பனுக்குப் பிறந்தும் பல்லுக் குத்த ஒரு ஈர்க்கு இல்லை.

ஆயிரம் பாம்பிலகப்பட்ட தேரைபோல் தவிக்கிறேன்.

ஆயிரம் பாம்பினுள் ஒரு தேரை அகப்பட்டாற் போல.

ஆயிரம் பேரிடத்தில் சினேகம் பண்ணினாலும் ஆண் பிள்ளைகளுக்கென்ன?

ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைவைத்தியன்.
ஆயிரம் பேர் கூடினாலும் ஒரு அந்துப் பூச்சியைக் கொல்லக் கூடாது.
ஆயிரம் பொய் சொல்லி ஒருகலியாணம் செய்துவை.
ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலி கட்டிவை.
ஆயிரம் பொய் சொல்லிக் கோயிலைக் கட்டு.
1200 ஆயிரம் பொன் பெற்ற குதிரைக்கு அரைப் பணத்துச் சவுக்கு.
ஆயிரம் பொன்பெற்ற குதிரைக்கும் சவுக்கடி வேண்டும்.
ஆயிரம் பொன்பெற்ற யானை பல் விளக்குகிறதா?
ஆயிரம் பொன்போட்டு யானைவாங்கி அரைப்பணத்து அங்குசத்துக்குப் பால்மாறுகிறதா?
ஆயிரம் மாகாணி அறுபத்திரண்டரை.
ஆயிரம் ரூபா முதலில்லாமல் பத்துரூபா வட்டி நஷ்டம்.
ஆயிரம் வந்தாலும் ஆத்திரம் ஆகாது.
ஆயிரம் வந்தாலும் ஆயத்தொழில் ஆகாது.
ஆயிரம் வருஷம் சென்று செத்தாலும் அநீதச்சாவு ஆகாது.
ஆயிரம் வித்தைகள் கற்றாலும் உலகத்தில் ஆடம்பரங்கள் வேண்டும்.
1210 ஆயுதபரீக்ஷை அறிந்தவன் நூற்றில் ஒருவன்.
ஆயுதமில்லாரிடத்தில் ஆடல் செய்யலாமா?
ஆயுதமில்லாரை அடிக்கிறதா?
ஆயோதன முகத்தில் ஆயுதம் தேடுகிறதுபோல.
ஆய்ச்ச லாய்ச்சலாய் மழை பெய்கிறது.
ஆய்ந்து பாராதான் காரியம் தான் சாந்துயரந் தரும்.
ஆய்ந்தோய்ந்து பாராதான் தான் சாகக்கடவன்.
ஆய்பார்த்த கலியாணம் போய்ப்பார்த்தால் தெரியும்.
ஆரடாவிட்டது மாணியம்? நானே விட்டுக்கொண்டேன் மாணியம்.
ஆரக்கழுத்தி அரண்மனைக் காகாது.
1220 ஆரணியமான அழகாபுரிக்கு ஒரு கோரணியான குரங்குவந்து தோன்றிற்று.

ஆரம்ப சூரத்துவம்.
ஆராகிலும் படியளந்து விட்டதா?
ஆரால்கேடு? வாயால்கேடு.
ஆராற்கெட்டேன் நோராற்கெட்டேன்.
ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திற் கண்ணாயிரு.
ஆருக்காகிலும் துரோகம் செய்தால் ஐந்தாறுநாட் பொறுக்கும், ஆத்மதுரோகஞ் செய்தால் அப் போதே கேட்கும்.
ஆருக்கும் அஞ்சான், ஆர்படைக்கும் தோலான்.
ஆருக்கு ஆர் சதம்.
1230 ஆருக்கு ஆர்துணை.
ஆருக்குப் பிறந்து மோருக்கு அழுகிறாய்?
ஆருக்கும் பண்ணிய பயரில் அல்லவா புண்ணியம் தெரியும்?
ஆருக்கு வந்ததோ, எவருக்கு வந்ததோ?
ஆருக்கு வந்த விருந்தோ என்றிருந்தால்.
ஆருமற்றதே தாரம், ஊரில் ஒருவனே தோழன்.
ஆருமில்லாப் பெண்ணுக்கு அண்டை வீட்டுக்காரனாம் மாப்பிள்ளை.
ஆரும் ஆரும் உறவு? தாயும் பிள்ளையும் உறவு.
ஆரும் இல்லாத ஊரிலே ஆசவமேதயாகம் செய்தானாம்.
ஆரேகாரே என்கிறவனுக்குத் தெரியுமா? அக்கினி பார்க்கிறவனுக்குத் தெரியும்.
1240 ஆரை இறுக்கி முகம் பெறுகிறது, பிள்ளையை இறுக்கி முகம் பெறுகிறது.
ஆரை நம்பி, தோழா, காருக்கு ஏற்றம் போட்டாய்?
ஆரோசெத்தான், எவனோ அழுதான்.
ஆர் அற்றுப் போனாலும் நாளாற்றும்.
ஆர் ஆத்தாள் செத்ததும் பொழுது விடிந்தால் தெரியும்
ஆர் ஆருக்கு ஆளானேன் ஆகாத உடம்பையும் புண் ணாக்கிக் கொண்டு!
ஆர் ஆருக்கு நானாவேன் ஆகாத உடம்பையும் புண் ணாக்கிக் கொண்டு?

ஆர் இட்ட சாபனையோ, அடிநாளின் தீவினையோ?
ஆர் கடன் வைத்தாலும் மாரிகடன் வைக்கக்கூடாது.
ஆர்குடி கெட்டாலும் சந்தைக்குக் காற்பணம்.
1250 ஆர் குடியைக்கெடுக்க ஆண்டி வேஷம் போட்டாய்?
ஆர் குத்தினாலும் அரிசி யானால் சரி.
ஆர் குற்றினாலும் அரிசியாவதொன்று,
ஆர் வாழ்வு ஆருக்கு நின்றது?
ஆர் வாழ்வுதான் சதம்?
ஆலகால விஷம் போன்றவன் அந்தரமாவான்.
ஆலசியம் அமிர்த விஷம்.
ஆலமரத்தைச் சுற்றிவந்து அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்ததுபோல.
ஆலமரம் பழுத்த தென்று பறவைக்கு ஆர் சீட்ட னுப்பினது?
ஆலய மிடித்து அன்னதானம் பண்ணப் போகிறான்.
1260 ஆலயம் அறியாது ஓதிய வேதம்.
ஆலயம் தொழுவது சாலவு நன்று.
ஆலின்மேற் புல்லுருவி.
ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
ஆலே பூலே என்று அலப்பிக் கொண்டிருக்கிறது.
ஆலைக் கரும்பும் வேலைத் துரும்பு மானேன்.
ஆலைக்குள் அகப்பட்ட சோலைக் கரும்புபோல.
ஆலையில்லா ஊரில் இலுப்பைப்பூ சர்க்கரை.
ஆலை விழுது தாங்கினதுபோல.
ஆல் பழுத்தால் அங்கே, அரசு பழுத்தால் இங்கே.
1270 ஆல்போல் விழுதுவிட்டு (தழைத்து), அறுகுபோல் வேரோடி, மூங்கில்போற் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பீர்.
ஆவத்தை அடரான் பாவத்தைத் தொடரான்.
ஆவணிமாதம் அழுகைத் தூற்றல்.
ஆவர்க்குமில்லை தேவர்க்குமில்லை.
ஆவல்மாத்திரம் இருந்தாலென்ன, அன்னம் இறங்கினால் அல்லவோ பிழைப்பான்?

ஆவிரை இலையும் ஆபத்துக் குதவும்.

ஆவுடையாரையும் லிங்கத்தையும் ஆறுகொண்டு போகச்சே, சுற்றுக்கோவிற் சுவாமி யெல்லாம் சர்க்கரைப் பொங்கலுக் கழுகிறதாம்.

ஆவும் தென்னையும் (தேவும்) ஐந்து வருஷத்தில் பலனீயும்.

ஆவென்று போனபின் அள்ளி இடுவது ஆர்?

1280 ஆ வேறு நிறமானாலும், பால் வேறு நிறமாமோ?

ஆழமறியாமல் காலிட்டுக் கொண்டேன், அண்ணா மலையப்பா காலைவிடு.

ஆழமறியும் ஓங்கில், மேளம் அறியும் அரவம்.

ஆழம் தெரியாமல் காலையிட்டுக் கொண்டதுபோல.

ஆழவமுக்கி முகப்பினும் ஆழ்கடலில் நாழிமுகவாது நானாழி.

ஆழாக்கு அரிசி மூவாழாக்குப் பானை, முதலியார் வருகிற வீறாப்பைப் பாரு.

ஆழியெல்லாம் வயலானால் என்ன? அவனியெல்லாம் அன்ன மயமானால் என்ன?

ஆழும் பாழும் அரைக்கீரைப்பாத்தியும்.

ஆளக்கண்ட சமுத்திரம்.

ஆளமாட்டாதவனுக்குப் பெண்டேன்?

1290 ஆளனில்லாத துக்கம் அழுதாலும் தீராது.

ஆளனில்லாத பெண்ணுக்கு வாழ்வில்லை.

ஆளனில்லாத மங்கைக்கு அழகுபாழ்.

ஆளனில்லாதவள் ஆற்று மணலுக்குச்சரி.

ஆளான ஆட்களுக்கு அவிழ் அகப்படாக்காலத்திலே காக்காய்ப் பிசாசு கஞ்சிக்கு அழுகிறது.

ஆளான ஆள்புகுந்தால் ஆமணக்கும்விளக்கெண்ணெ யாகும்.

ஆளில்லாத மங்கைக்கு அழகு பாழ்.

ஆளில்லாமல் அடிக்கடி ஓடுமா?

ஆளுக்கு ஒத்த ஆசாரமும் ஊருக்கு ஒத்த உபசாரமும் வேண்டாமா?

ஆளுக்கு ஒரு குட்டுக் குட்டினால் அடியேன் தலை மொட்டை.

1300 ஆளுக்கு ஒரு குட்டுக் குட்டினாலும் அவனுக்குப்புத்தி வராது.
ஆளுக்குத் தகுந்த கொட்டுக் கொட்டுகிறது.
ஆளுக்குத் துக்குணி ஆள்பாரம்.
ஆளுக்குள்ளே ஆளாயிருப்பான்.
ஆளை அடித்தால் அரைப்பணம்.
ஆளை அறிந்துதான் அறுக்கிறான்.
ஆளை ஆள் அறியவேண்டும், மீனைப் புளியங்காய் அறியவேண்டும்.
ஆளை ஆள் குத்தும், ஆள் மிடுக்கு பத்துபேரைக் குத்தும்.
ஆளை ஆள்குத்தும் ஆள் மிடுக்கு, பத்துப்பேரைக் குத்தும் பணமிடுக்கு.
ஆளைக்கண்டு ஏமாற்றுமாம் ஆலங்காட்டுப்பேய்.
1310 ஆளைச்சுற்றிப் பாராமல் அளக்கிறதா?
ஆளைச்சுற்றிப் பார்க்காமல் அழுகிறாள் ஒருக்காலே.
ஆளைச்சேர்த்தாயோ அடிமையைச் சேர்த்தாயோ?
ஆளை நீட்டிப் போடு.
ஆளைப்பார் முகத்தைப்பார்.
ஆளைப்பார்த்தால் அழகுமலை, வேலையைப்பார்த்தால் இழவுமலை.
ஆளைப் பார்த்தான் வாயில் ஏய்த்தான்.
ஆளைப்பார்த்துக் கூலிகேட்கிறது, அவளைப் பார்த்துப் பெண்டு கேட்கிறது.
ஆள் ஆளை இடிக்கும், ஆள்மிடுக்கு பத்துப்பேரை இடிக்கும்.
ஆள் இருக்கக் கொலை (குலை) சாயுமா?
1320 ஆள் இல்லா ஊருக்கு அழகுபாழ்.
ஆள் இல்லாப்படை அம்பலம்.
ஆள் இல்லாமல் ஆயுதம் வெட்டுமா?
ஆள் இளந்தலைக் கண்டால் தோணி மிதக்கப் பாயும்.
ஆள் இளந்தலைக் கண்டு தோணி மிதக்கும்.
ஆள் இளப்பமா யிருந்தால் (ஏமாந்தவனானால்) எமனையும் நமனையும் பலகாரம் பண்ணுவான்.
ஆள் இளப்பமா யிருந்தால் எருது மச்சான் முறை கொண்டாடும் (கொள்ளும்).

ஆள் ஏற நீர் ஏறும்.
ஆள்கண்டு ஏய்க்குமாம் (மிரட்டுமாம்) ஆலங்காட்டு நரி.
ஆள் கொஞ்சமாகிலும் ஆயுதம் மிடுக்கு.
1340 ஆள்மெத்தக் கூடினால் மீன்மெத்தப் பிடிக்கலாம்.
ஆறல்ல நூறல்ல ஆகிறது ஆகட்டும்.
ஆறாம்பேறு பெண்ணாய்ப் பிறந்தால் ஆறான (ஆகிற) குடித்தனம் நீறாய்விடும்.
ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
ஆறினகஞ்சி பழங்கஞ்சி.
ஆறின புண்ணிலும் அசடு நிற்கும்.
ஆறினால் அச்சிலே வார், ஆறாவிட்டால் மிடாவிலே வார்.
ஆறு கடக்கிறவரையில் அண்ணன் தம்பி, ஆறு கடந்தால் நீ யார் நானார்?
ஆறு கடந்தால் நீ யார் நானார்?
ஆறு கலியாணம் மூன்று பெண்கள் மாரோடு மார் தள்ளுண்கிறது.
1350 ஆறு காதம் என்கிறபோதே கோவணத்தை அவிழ்த்துக் குடுமியிலே கட்டிக்கொண்டானாம்.
ஆறு காதமென்கிறபோதே கோவணத்தை அவிழ்ப்பானேன்?
ஆறு கெட நாணல் இடு, ஊரு கெட நூலை இடு, காடு கெட ஆடு விடு, மூன்றுங்கெட முதலியை (முதலையை) விடு.
ஆறுகொண்டது பாதி, தூறு கொண்டது பாதி.
ஆறு நிறைய ஜலம் போனாலும் நாய் நக்கித்தான் குடிக்கவேண்டும்.
ஆறு நிறைய ஜலம் போனாலும், பாய்கிறது கொஞ்சம் சாய்கிறது கொஞ்சம்.
ஆறு நீந்தின எனக்குக் குளம் நீந்துவது அரிதோ?
ஆறு நீந்தினவனுக்கு வாய்க்கால் எம்மாத்திரம்?
ஆறு நேராய்ப்போகாது.
ஆறு நேரான ஊரும், அரசனோடெதிர்த்த குடியும் புருடனோடேறுமாறான பெண்டிரும் நீறு நீறாகி விடும்.

1360 ஆறு நேரான ஊர் நிலை நில்லாது.
ஆறு பார்க்கப்போக ஆய்ச்சிக்குப் பிடித்தது சலுப்பு.
ஆறு பார்ப்பானுக்கு இரண்டு கண்ணு.
ஆறு போவதே கிழக்கு, அரசன் சொல்வதே வழக்கு.
ஆறு போவதே போக்கு, அரசன் சொல்வதே தீர்ப்பு.
ஆறுமாசப்பயணம் அஞ்சி நடந்தால் முடியுமா?
ஆறுமாதத்துக்குச் சனியன் பிடித்தாற்போல.
ஆறு மாதம் வீட்டிலே, ஆறு மாதம் காட்டிலே.
ஆறும் கடன் நூறும் கடன், பெருக்கச்சுடடா பணிகாரத்தை.
ஆறும் நாலும் பத்து, நாலும் ஆறும் பத்து.
1370 ஆறு வடிவிலேயும் கருப்பு தெளிவிலேயும் வருத்தம்.
ஆறெல்லாம் கண்ணீர், அடியெல்லாம் செங்குருதி.
ஆற்றருகிலிருந்த வாழ்வும் அரசறிந்த வாழ்வும் நிலையல்ல.
ஆற்றாக்குலைப் பொல்லாப்பு அடித்துக்கொள்ளுகிறான்.
ஆற்றித்தூற்றி அம்பலத்திலே வைக்கப்பார்க்கிறாள்.
ஆற்றிலே ஆயிரம் காணி (குழி) தானம் பண்ணினாற்போல.
ஆற்றிலே ஊருகிறது மணலில் சுவறுகிறது.
ஆற்றிலே ஒருகாலும் சேற்றிலே ஒருகாலும்.
ஆற்றிலே கணுக்கால் தண்ணீரிலும் அஞ்சி நடக்கவேண்டும்.
ஆற்றிலே போகிற தண்ணீரை, அப்பா குடி, ஆத்தாள் (அம்மா) குடி.
1380 ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
ஆற்றிலே விட்ட தர்ப்பைபோல் தவிக்கிறேன்.
ஆற்றிலே விளைகிறது மணலிலே சிதறுகிறது.
ஆற்றிற் கரைத்த புளிபோல.
ஆற்றிற் கரைத்த புளியும் அங்காடிக்கிட்ட பதருமாயிற்று.
ஆற்றிற் கரைத்த பெருங்காயம் போல.
ஆற்றிற் பெருவெள்ளம் நாய்க்கென்ன? சளப்புத் தண்ணீர்.

ஆற்றுக்கு நெட்டையும் சோற்றுக்குக் குட்டையும் வாசி.
ஆற்றுக்குப் பார்ப்பான் துணையா? சோற்றுக்குப் பயற்றங்காய் கறியா?
ஆற்றுக்குப்போனதும் இல்லை, நெருப்புக்கழற்றினது மில்லை.
1390 ஆற்றுக்கும் பயம் காற்றுக்கும் பயம்.
ஆற்றுதே, என்னைத் தேற்றுதே, அம்பலத்தில் என்னை ஏற்றுதே என்றான்.
ஆற்று நிறையத் தண்ணீர் போனாலும் அள்ளிக்குடிக்கப்போகுதா நாய்?
ஆற்று நீரை நாய் நக்கிக்குடிக்குமோ எடுத்துக்குடிக்குமோ?
ஆற்று நீர் ஊற்றி அலைசக் கழுவினாலும் வேற்று நீர் வேற்று நீர்தான்.
ஆற்றுப் பெருக்கும் அரசும் அரை நாழி.
ஆற்று மணலிலே தினம் புரண்டாலும் ஒட்டுகிறது தான் ஒட்டும்.
ஆற்று மணலை அளவிடக்கூடாது.
ஆற்று மணலையும் ஆகாசத்து நட்சத்திரத்தையும் அளவிடப்படுமோ?
ஆற்றுவாருமில்லை தேற்றுவாருமில்லை.
1400 ஆற்றைக்கடத்திவிடு, ஆகாசத்திற் பறக்கக் குளிகை தருகிறேன் என்கிறான்.
ஆற்றைக்கடந்தால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு.
ஆற்றைத்தாண்டியல்லவோ கரையேறவேண்டும்?
ஆற்றோடே போகிறான் நல்ல வேலைக்காரன்.
ஆற்றோடே போனாலும் போகிறதேயல்லாமல் தெப்பக்காரனுக்கு ஒரு காசு கொடுக்கிறதில்லை.
ஆனகுலத்திற் பிறந்து ஆட்டை மாட்டை மேய்க்காமல் ஓலை வாரியாய்ப் போனாயே?
ஆனதல்லாமல் ஆவதுமறிவரோ?
ஆனதுக்கு ஒரு ஆகாதது, ஆகாததற்கு ஒரு ஆனது.
ஆனதெய்வத்தை ஆறு கொண்டுபோகிறது, அனுமந்தராயனுக்குத் தெப்பத்திருவிழாவா?
ஆனமட்டும் ஆதாளி யடித்துப்போட்டு, ஆந்தை போல் விழிக்கிறான்.

1410 ஆன முதலை அழித்தவன் மானமிழப்பது அரிதல்ல.
ஆனவன் ஆகாதவன் எல்லாத்திலும் (எங்கும்) உண்டு.
ஆனால் அச்சிலே வார் ஆகாவிட்டால் மிடாவிலேவார்.
ஆனால் ஆதித்தவாரம் ஆகாவிட்டால் சோமவாரம்.
ஆனால் பிரம்மருஷி ஆகாவிடில்.
ஆனி அடியிடாதே கூனி குடிபோகாதே.
ஆனி அரை ஆறு, ஆவணி முழு ஆறு.
ஆணி அறணை வால்பட்ட கரும்பு ஆனைவால் ஒத்தது.
ஆனி ஆனை வாலொத்த கரும்பு.
ஆனை அசைந்து தின்னும், வீடு அசையாமல்தின்னும்.
1420 ஆனை ஆசாரவாசலைக்காக்கும், பூனை புழுத்த மீனைக் காக்கும்.
ஆனை ஆயிரம் பெற்றால் அடியும் ஆயிரம் பெறுமா?
ஆனை இருந்து அரசாண்ட இடத்திலே பூனை இருந்து புலம்பி அழுகிறது.
ஆனை இலைக்கறி, பூனை பொரிக்கறி.
ஆனை உண்ட விளாங்கனிபோல.
ஆனை உயரம் பூனை ஆகுமா?
ஆனைஏறித் திட்டிவாசலில் நுழைவதுபோல.
ஆனை ஏறியும் சந்து வழி நுழைவானேன்?
ஆனை ஒரு குட்டிபோட்டும் பலன், பன்றி பலகுட்டி போட்டும் பலனில்லை.
ஆனைகட்டச் சங்கிலி தானெடுத்துக் கொடுத்தாற் போல.
1430 ஆனைகட்டத் தாள் வான முட்டப்போர்.
ஆனை கண்ட பிறவிக்குருடர் அடித்துக்கொண்டது போல.
ஆனை கறுத்தால் ஆயிரம் பொன்.
ஆனை கறுத்தால் ஆயிரம் பொன், ஒட்டை கறுத்தால் உதவி யென்ன?
ஆனை கறுத்திருந்தும் ஆயிரம் பொன் பெறும்.
ஆனை காணாமற்போனால் குண்டுச்சட்டியிற் தேடினால் அகப்படுமா?
ஆனைக் கிட்டுக் கெட்டவன் குடத்தில் கையிட்டாற் போல.

ஆணைகுத்தும் தோட்டிக்குப் பிணக்கா?
ஆனை குட்டிபோடும் என்று நம்பி லத்தி போட்டது போல.
ஆனை குண்டுச் சட்டியிலும் குழிசியிலும் உண்டோ?
1440 ஆணைகேடு அரசுகேடு உண்டோ?
ஆனை கேட்ட வாயால் ஆட்டுக் குட்டி கேட்கிறதா?
ஆனை கொடிற்றில் அடக்குகிறதுபோல எந்தமட்டும் அடக்குகிறது?
ஆனை கொடுத்தும் அங்குசத்திற்குப் பிணக்கா?
ஆனைக் கவடும் பூனைத் திருடும்.
ஆனைக்கில்லை கானலும் மழையும்.
ஆனைக்கு அறுபதுமுழம், அறக்குள்ளனுக்கு எழுபது முழம்.
ஆனைக்கு ஒருகாலம் பூனைக்கு ஒருகாலம்.
ஆனைக்குக் கோவணம் கட்டினாற்போல.
ஆனைக்குச்சிட்டுக்குருவி மத்தியஸ்தம் போனாற் போல.
1450 ஆனைக்குத் தீனியிடும் வீட்டில் ஆட்டுக் குட்டிக்குப் பஞ்சமா?
ஆனைக்குத் துறடும் அன்னத்துக்கு மிளகாயும் வேண்டும்.
ஆனைக்குத் தேரை இட்டதுபோல.
ஆனைக்குத் தேரை ஊனா?
ஆனைக்கு முண்டு அவகேடு.
ஆனைக்கும் அடிசறுக்கும்.
ஆனைக்கும் பானைக்கும் சரி.
ஆனைக்கும் புலிக்கும் நெருப்பைக் கண்டால் பயம்.
ஆனைக்கு வேகிறவீட்டில் பூனைக்குச் சோறில்லையாம்.
ஆனைக் கூட்டத்திற் சிங்கம் புகுந்ததுபோல.
1460 ஆனை செத்தாலும் ஆயிரம்பொன்.
ஆனை தழுவிய கையால் ஆட்டுக் குட்டி தழுவுகிறதா?
ஆனை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்ளும்.
ஆனை தன் பல மறியாமல் மத்தகத்தால் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டது போல.
ஆனை தன்னைக் கட்டச் சங்கிலியைத் தானே கொடுத் தது போல.

ஆனை துரத்தி வந்தாலும் ஆலயத்தில் நுழையலா காது.
ஆனை நிழல் பார்க்கத் தவளை அழித்தாற் போல.
ஆனை படுத்தால் ஆட்டுக் குட்டிக்குத் தாழுமா?
ஆனை படுத்தால் ஆள் மட்டம்.
ஆனை படுத்தால் குதிரை மட்டமாவ திராதா?
1470 ஆனை பார்க்க வெள்ளெழுத்தா?
ஆனை புலி வந்தாலும் தாண்டுவாள்
ஆனைபோகிற வழியிலே எறும்பு தாரை விட்டாற் போல.
ஆனைபோன வீதி கேட்க வேண்டுமோ?
ஆனைபோன வீதியிலே ஆட்டுக்குட்டி போகிறது வருத்தமா?
ஆனை பசிக்குச் சோளப்பொரி தாங்குமா?
ஆனை மதத்தால் (கொழுத்தால்) வாழைத்தண்டு, ஆண் பிள்ளை மதத்தால் கீரைத்தண்டு.
ஆனை மிதிக்கப் பிழைப்பார்களா?
ஆனை முட்டத் தாள் வான முட்டப் போர்.
ஆனை மேயும் காட்டில் ஆடு மேய இடமில்லையா?
1480 ஆனைமே லேறுவேன் வீரமணி கட்டுவேன்.
ஆனைமேல் இடும் பாரத்தைப் பூனைமேல் இடலாமா?
ஆனைமேல் இருக்கிற அரசன் சோற்றைவிட, பிச்சை எடுக்கிற பார்ப்பான் சோறுமேல்.
ஆனைமேல் போகிறவனைச் சுண்ணாம்பு கேட்டால் அகப்படுமா?
ஆனைமேற் போகிறவனையும் பானையோடே தின்றா னென்கிறது.
ஆனையும் அறுகம் புல்லினால் தடைப்படும்.
ஆனையும் ஆனையும் முட்டும்போது இடையில் அகப் பட்ட கொசுபோல.
ஆனையும் நாகமும் புல்லினால் தடைப்பட்டன.
ஆனையை ஆயிரம் பொன்னுக்கு வாங்கி இரும்பு அங்குசத்திற்கு ஏமாந்து நிற்பானேன்?
ஆனையைக் கட்டிச் சுளகாலே மறைப்பாள்.
1490 ஆனையைக் குத்திச் சுளகாலே மூடுவாள்.
ஆனையைக் கொடுத்துத் துறட்டுக்கு மன்றாடினாற் போல்.

ஆனையைக் கொன்றவன் பூனையை வெல்லமாட்டானா?
ஆனையைத் தண்ணீரில் இழுக்கும் முதலை பூனையைத் தரையி லிழுக்குமா?
ஆனையைத்தேடக் குடத்துக்குள் கை வைத்ததுபோல.
ஆனையைப் பிடிப்பதும் கரகத்தில் (பானையில்) அடைப்பதும், அதுவே செல்வப் பிள்ளைக் கடையாளம்.
ஆனை லத்தி ஆனை யாகுமா?
ஆனையை வித்துவானுக்கும் பூனையைக் குறவனுக்கும் கொடு.
ஆனையை விற்றா பூனைக்கு வைத்தியம் (பரிகாரம்) பண்ணுகிறது?
ஆனையைற விற்றுத் துறட்டிக்கு மன்றாடுகிறான்.
1500 ஆனைவரும் பின்னே மணி ஓசை (ஆடி) வரும் முன்னே.
ஆனை வாயிலேபோன கரும்புபோல.
ஆனை வால்பிடித்துக் கரை ஏறலாம், ஆட்டின் வால் பிடித்துக் கரை யேறலாமா?
ஆனைவிழுங்கிய அம்மையாருக்குப் பூனை சுண்டாங்கி.
ஆனை விழுந்தாலும் குதிரைமட்டம்.
ஆனை விழுந்தாற் கொம்பு, புலி விழுந்தால் தோல்.
ஆனைவேகம் அடங்கும் அங்குசத்தில்.

---

## இ.

இகழ்ச்சியுடையோன் புகழ்ச்சியடையான்.
இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
இக்கரையில் பாகலைப்போட்டு அக்கரையில் கொழு கொம்பு வைக்கிறான்.
1510 இங்கிதம் தெரியாதவளுக்குச் சங்கீதம் தெரிந்து பலனென்ன?
இங்கு இருந்த பாண்டம்போல.
இங்கும் புதையலிருக்குமா ரங்கா? அதற்குச் சந்தேகமா வெங்கா?
இங்கே தலைகாட்டுகிறான், அங்கே வால் காட்டுகிறான்.
இங்கேவா நாயே யென்றால் மூஞ்சியெல்லாம் நக்குகிறது.

இசலிக்கொண்டே என்னோடே நிற்கிறான்.
இசைவில்லாப்பாட்டு இழுக்கு.
இசைவு வந்தது வடமலையப்பா.
இச்சிக்கொண்டே என்னோடே நிற்கிறான்.
இச்சித்தகாரியம் இரகசியமல்லவே.
1520 இச்சைச்சொல் யாசகத்தால் இடர்ப்பட்டவனில்லை.
இச்சையாகிய பாக்கியமிருக்க பிச்சைக்குப் போவானேன்?
இச்சையுமில்லை கிருபையுமில்லை.
இஞ்சி தின்கிற குரங்குபோலப் பஞ்சரிக்கிறான்.
இஞ்சி தின்ற குரங்கைப்போல.
இஞ்சி யென்றால் தெரியாதா? எலுமிச்சம்பழம் போலத் தித்திப்பாயிருக்குமே.
இஞ்சிலருபம் மஞ்சளில்.
இடக்கனுக்கு வழி யெங்கே? கிடக்கிறவன் தலை மேலே.
இடது கைக்கு வலதுகை துணை, வலது கைக்கு இடதுகை துணை.
இடது கை பிட்டத்துக் கெளிது.
1530 இடத்தைக்கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவான்.
இடம் அகப்படாத தோஷம், மெத்த பதிவிரதை.
இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.
இடம் வலம் தெரியாதவனோடு இணக்கம் பண்ணக் கூடாது.
இட வசதியில்லாத பதிவிரதை.
இடறின காலிலேயே இடறுகிறது.
இடாள் தொடாள், மனுஷாள் மேலே செத்த பிராணன்.
இடி ஓசை கேட்ட பாம்பு (நாகம்) போல.
இடி கொம்புக்காரன் கோழி குசுச் சத்தத்துக்கு அஞ்சுமா?
இடிக்குக் குடை பிடிக்கலாமா?
1540 இடித்த புளி போலிருக்கிறான்.
இடித்தவள் புடைத்தவள் இங்கேயிருக்க எட்டிப் பார்த்தவள் கொட்டிக்கொண்டு போனாளாம்.

இடித்து ஒரு கூடை இடுவதிலும் பிடிசோறு அன்பாய்ப் போடுவது போதும்.
இடி விழுந்த மரம்போல் ஏங்கி.
இடி விழுவானுக்கு வாழ்க்கைப்பட்டு எந்நேரமும் இடிசாமம்.
இடுகிற தெய்வம் எங்குமிடும்.
இடுகிறவள் தன்னவளானால், அடிப்பந்தியிலிருந்தாலென்ன, கடைப்பந்தியிலிருந்தாலென்ன?
இடுப்பு ஒடிந்த கோழிக்கு உரற் குழியே கைலாசம்.
இடுப்பு சுருங்குகிறது பெண்டுகளுக்கு அழகு.
இடுப்பு வைத்த இடமெல்லாம் அடுப்பு வைத்தான்.
1550 இடும்பு செய்வார்க்கு இராப்பகலில்லை.
இடுவது பிக்ஷை, ஏறுவது (பெறுவது) மோக்ஷம்.
இடுவார் பிச்சையைக் கெடுக்கிறதா?
இடுவார் பிச்சையைக் கெடுவார் கெடுப்பார்.
இடுவாள் இடுவாள் என்று ஏக்குற்றிருந்தாளாம், நாழி நெல் கொடுத்து நாலாசையும் தீர்த்தாளாம்.
இடைக்கணக்கன் செத்தான், இனிப் பிழைப்பான் நாட்டான்.
இடைக்கிழவி எப்போ சாவாளோ, இடம் எப்போ ஒழியுமோ!
இடை சாய்ந்த குடம் கிடை.
இடைச்சன்பிள்ளைக்காரிக்குத் தலைச்சன்பிள்ளைக்காரி மருத்துவம் பார்த்ததுபோல.
இடைச்சி ஆத்தாள் கோனிச்சி.
1560 இடைச்சி சம்பத்தும் சாணாத்தி வாழ்வும் சரி.
இடைச்சி மாப்பிள்ளை என்றைக்கு வருவான்!
இடைத்தெருவில் கோலம் வரும்போது குசத்தெரு எங்கே என்கிறான்.
இடைப்பிறப்பும் கடைப்பிறப்பும் ஆகாது.
இடையனும் பள்ளியும் இறைத்த புலம் சாவி.
இடையன் கரடிமேல் ஆசைப்பட்டது போல.
இடையன் கலியாணம் விடியும் பொழுது.
இடையன் கெடுத்தது பாதி, மடையன் கெடுத்தது பாதி.
இடையன் புத்தி பிடரியிலே.

இடையன் பேரிலே சாத்தான் வந்த கதைபோல.

1570 இடையன் வெட்டின கொம்பு போல.

இடையாண்டியு மில்லை குசத்தாதனு மில்லை.

இடையூறு செய்தோன் மனையில் இருக்காது பேய் முதலாய்.

இட்ட குடியும் கெட்டு, ஏற்ற குடியும் கெட்டது.

இட்ட உறவு எட்டுநாளைக்கு, நக்கின உறவு நாலு நாளைக்கு.

இட்ட எழுத்திற்குமேல் ஏற ஆசைப்பட்டால் கிடைக்குமா?

இட்டகையை நத்துமா, இடாத கையை நத்துமா?

இட்டதன்மேல் ஏற வாசைப்பட்டால் கிடைக்குமா?

இட்டதில் ஒன்றும் குறையாது.

இட்ட தெல்லாம் கொள்ளும் பட்டிமகன் கப்பரை.

1580 இட்டதெல்லாம் பயிராமா, பெற்றதெல்லாம் பிள்ளையாமா?

இஷ்டமற்ற முனியன் அஷ்டமத்துச் சனியன்.

இட்டவர்கள் தொட்டவர்கள் கெட்டவர்கள், இப்போது வந்தவர்கள் நல்லவர்கள்.

இட்டவன் இடாவிட்டால் வெட்டுப் பகை.

இட்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கலாமா?

இட்ட வீட்டுக்குப் பிட்டிட்டுக் கொண்டு, இடிந்த வீட்டுக்கு மண்ணிட்டுக் கொண்டு திரிகிறான்.

இட்டாருக்கு இட்டபலன், ஏரி யடித்தாருக்குக் கோடி பலன்.

இட்டாருக்கு இடலும், செத்தாருக்கு அழுதலும்.

இட்டார்க்கு இடு, செத்தார்க்கு அழு.

இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர்.

1590 இட்டுக் கெட்டார் எங்குமே (உலகினில்) இல்லை.

இட்டு வைத்தால் தின்னவும் எடுத்து வைத்தால் சுமக்கவும் தெரியும்.

இணக்கமறிந்திணங்க வேண்டும்.

இணக்க மில்லாதவ னோடு என்ன வாது?

இணங்காரோடு இணங்குவது இகழ்ச்சி.

இணங்கினால் தித்திப்பு, பிணங்கினால் கசப்பு.

இணைபிரிந்த அன்றில் போல.

இதற்கா பயப்பட்டேன் என் ஆண்டவனே,
ஆனை குதிரை வந்தாலும் தாண்டுவனே.
இது அனுமானாச்சே (எமனாச்சே).
இது எல்லாம் பொம்மலாட்டம்.
1600 இது என் குலாசாரம், இது என் வயிற்றாசாரம்.
இது என்ன வெள்ளரிக்காய் விற்ற பட்டணமா?
இது சொத்தை, அது புழுத்தது.
இது சொத்தை அது புளியங்காய் போல்.
இது பெரிய இடத்துப் பேச்சு.
இத்தனை அத்தனையானால், அத்தனை எத்தனை ஆகும்!
இத்தனை பெரியவன் கையைப் பிடித்தால்
எப்படி மாட்டேன் என்கிறது?
இத்தனைபேர் பெண்டுகளில் என்பிள்ளைக் கொரு தாயில்லை.
இந்த அடிக்கு எந்த நாயும் சாகும்.
இந்த அமாவாசைக்கும் வெட்கமில்லை, வருகிற அமா
வாசைக்கும் வெட்க மில்லை.
1610 இந்த உலகவாழ்க்கை (வாழ்வு) சதமா?
இந்த எலும்பைக் கடிப்பானேன், சொந்தப் பல்லுப் போவானேன்?
இந்தக் கண்ணிற் புகுந்து அந்தக் கண்ணிற் புறப்படுகிறான்.
இந்தக் கருப்பிற் செத்தால், இன்னும் ஒரு கருப்பு மயிரைப் பிடுங்குமா?
இந்தக் கூழுக்கா இருபத்தெட்டு நாமம்?
இந்தக் கூழுக்கா இத்தனை திருநாமம்?
இந்தச் சளுக்கனுக்கு இரண்டு பெண்சாதி, வந்த வாசிமட்டும் வல்லவாட்டு.
இந்தச் சிற்றுண்டி எனக்குத் தெவிட்டிப் போயிற்று.
இந்த நாயை ஏன் இப்படிச் செய்கிறாய்?
இந்தப் பூராயத்தில் குறைச்ச லில்லை.
1620 இந்தப் பூனையும் பால் குடிக்குமா?
இந்தப்பெரிய கொள்ளையிலே அப்பா என்கப் பிள்ளை யில்லை.

இந்தப் பெருமையும் பந்தல் அழகும் பார்த்தையா பண்ணைக்காரா?

இந்தப் பையனுக்கு இந்த வீட்டு ஓதம் உறைத்துப் போய்விட்டது.

இந்த வளைவு சிக்கினால் எப்படித்தான் பிள்ளை பிழைக்கும்?

இந்த வீட்டிலே வைத்தது மாயமா யிருக்கிறது.

இந்திரனைச் சந்திரனை இலையாலே மறைப்பாள், எம தரும ராஜனைக் கையாலே மறைப்பாள்.

இந்திராதி தேவர்க்கும் வந்திடும் தீவினை.

இந்திரைக்கு மூத்தவள் மூதேவி.

இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.

1630 இம்மிய நுண்பொருளீட்டி நிதியாக்கி, கம்மியரு மூவர் களிறு.

இயமன் ஒருவனைக் கொல்வான், ஏற்றம் மூவரைக் கொல்லும்.

இயற்கை வாசனையோ செயற்கை வாசனையோ?

இரக்கப் போனாலும் சிறக்கப் போ.

இரக்கமில்லாதவன் நெஞ்சம் இரும்பிலும் கொடிது.

இரங்காதவர் உண்டா? பெண் என்றால் பேயு மிரங்கும்.

இரசவாதிக்கு ஏது பஞ்சம்?

இரண்டு ஆட்டிலே ஊட்டின குட்டினானான்.

இரண்டு ஓடத்திலே கால் வைக்கிறதா?

இரண்டு ஓடத்தில் கால்வைத்தவனைப் போலிருக்கிறான்.

1640 இரண்டு கையும் போதாதென்று அகப்பையும் கட்டிக்கொண்டான்.

இரண்டு நாய்க்கு ஒரு எலும்பு போட்டாற் போல.

இரண்டு பட்ட ஊரில் குரங்கும் குடி இராது.

இரண்டு பெண்டாட்டிக் காரனுக்கு கொண்டை என்ன கொண்டை?

இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு திண்டாட்டம்.

இரண்டு பெண்டாட்டிக்காரன்வீட்டில் நெருப்பேன்?

இரண்டு வீட்டிலும் கலியாணம், இடையில் செத்த தாம் நாய்க்குட்டி.

இரண்டு வீட்டு விருந்தாளி கெண்டை ஏறிச் செத்தாள்.
இரத்தினத்தைச் சேர்ந்த இழைபோல்.
இரந்தும் பருந்துக்கு இடு.
1650 இரந்தோர்க்கு ஈவது உடையார்கடன்.
இரப்பவனுக்குப் பஞ்சம் என்றைக்கும் இல்லை.
இரப்பவனுக்கு வெண் சோறு பஞ்சமா?
இரப்பான் சோற்றுக்கு என்றும் பஞ்சமா?
இரவல் உடைமை இசைவாயிருக்கிறது, என் பிள்ளை ஆணை நான் கொடுக்கமாட்டேன்.
இரவல் துணியாம், இரவல் துட்டாம், இழுத்துக் கொட்டு மேளத்தை, இறுகக்கட்டு தாலியை.
இரவல் சதமா, திருடன் உறவா?
இரவற் சேலையை நம்பி இடுப்புக் கந்தையை எறிந்தாளாம்.
இரவற் சோறு பஞ்சம் தாங்குமா?
இரவி முன் பனிபோல்.
1660 இரவியைக்கண்ட இருள் போல.
இரவிலுண்ணாமல் பகலுண்ணாதவனுக்குப் பெருத்த லீல்லை.
இரவிற் போனாலும் பறக்கப் போகவேண்டும்.
இராகு திசையில் வாழ்ந்தவனும் இல்லை, இராஜ திசையிற் கெட்டவனு மில்லை.
இராக்கண்ட கனவு (சனி) மிடாப் போல வீங்கின கதை.
இராஜ கீரியைக் காவுகிறது போல.
இராஜ சமுகத்திற்கு எலுமிச்சம்பழம் சிறப்பு.
இராஜப் பயலோடே கூடித் தாதப்பயலும் கெட்டானாம்.
இராஜன் ஆனாலும் தன் தாய்க்கு மகனே.
இராஜன் எவ்வழி குடிகள் அவ்வழி.
1670 இராஜன் ஏறிய குதிரைக்கு மேடு ஏது பள்ள மேது?
இராஜன் ஏறிய குதிரையைப் போல்.
இராஜன் செங்கோல் தன் நாடுவரையில்,
இராஜன் மெச்சினது ரம்பை.

இராஜா இருக்கப் பட்டணம் அழியுமா?
இராஜா கடன்படப் புழுக்கை காடித்தண்ணீர் குடித் ததுபோல.
இராஜா கேட்கக் கேட்க இன்னொன்று புறப்படு தென்றானாம்.
இராஜா மகள் ஆனாலும் கொண்டவனுக்குப் பெண்டு [ தான்.
இராஜாவின் பலமிருந்தால் அஷ்டமத்துச்சனி என்ன செய்யும்?
இராஜாளியைக் கண்ட கொக்குப் போல.
1680 இராஜீகம் தெய்வீகம் எப்படியோ?
இராட்சதனுக்கு ஒரு புரோட்சதன்.
இராட்டினம் வருகிறது வண்டியை விலக்கு.
இராப்பகல் கண்ணிலே.
இராப்பட்டினி கிடந்தவன் அகவிலை கேட்பானோ?
இராப்பட்டினி கிடந்தவன் உரித்த வாழைப்பழம் விற்கிறதா என்று விசாரித்தானாம்.
இராப்பட்டினி பாயோடே.
இராம பாணம் பட்டு உருவினாற் போல.
இராமர் இருந்த இடம் அயோத்தி.
இராம லட்சுமணரைப்போல இசைந்திருக்கிறது.
1690 இராம வாக்குக்கு இரண்டுண்டோ?
இராமனைப்போல ராஜா இருந்தால், அனுமானைப் போல சேவகனும் இருப்பான்.
இராமன் மங்கையோடு இணங்கியது அவம்.
இராமாமிர்தமே ஜீவனமென்று பட்டினியாய் இருக் கலாமா?
இராமுழுதும் ராமாயணம் கேட்டு சீதைக்கு ராமன் என்னவேண்டும் என்ற கதை.
இராமேசுரத்துக்கும் காசிக்கும் போயும் என்னைப் பிடித்த சநீசுவரன் தொலையவில்லை.
இராயர் ஏறின குதிரைக்கு மேடேது பள்ளமேது?
இராவண சந்நியாசி போலிருக்கிறான்.
இராவணன் குடிக்கு மகோதரன் போலும், சுயோத னன் குடிக்குச் சகுனிபோலும்.
இராவுத்தனே சினந்திருக்கும்போது குதிரை கோ துமை ரொட்டிக்கழுததாம்.

1700 இராவுத்தனைத் தள்ளினதும் அல்லாமல் குழியும் பறித்ததாம் குதிரை.
இரிசி உடைமை இராத்தங்காதது போல.
இரிசிக்கு புருஷனாசை உண்டா?
இரு குடம் கொண்டு அரைப்பாம் பாட்டுவதென்ன, ஏந்திழையே?
இருக்க இருக்க எல்லாம் இசைவாகும்.
இருக்கச் சாணிடமில்லாமற் போனாலும் பெருக்கப் பெருக்கப் பேசுவதில் மாத்திரம் குறைவில்லை.
இருக்கவேண்டு மென்றால் இரும்பைத்தின்னு
இருக்கிற அன்றைக்கு எருமை மாடு தின்றாற்போல.
இருக்கிறவனுக்கு ஒரு வீடு, இல்லாதவனுக்கு அநேக வீடு.
இருக்கிறவன் செவ்வையாய் இருந்தால், சிரைக்கிறவன் செவ்வையாய்ச் சிரைப்பான்.
1710 இருக்கிறவன் நல்லவனானால், இடைப்பந்தியில் இருந்தாலென்ன, கடைப்பந்தியிலிருந்தாலென்ன?
இருக்கும் இடம் ஏவுமா?
இருசுழி இருந்து உண்டாலும் உண்ணும், இரந்து உண்டாலும் உண்ணும்.
இருட்டுக்கு எல்லாம் சரி.
இருட்டுக் குடிவாழ்க்கை திருட்டுக்கு அடையாளம்.
இருட்டு வீட்டிலே குருட்டுக் காக்காய் ஓட்டுகிறது.
இருட்டு வீட்டுக்குள் போனாலும் திருட்டுக்கை போகாது.
இருட்டு வேலையோ குருட்டு வேலையோ?
இருஷி கர்ப்பம் இராத்தங்காது.
இருஷி மூலம் நதி மூலம் விசாரிக்கப் போகாது.
1720 இருதயத்தில் நினைந்ததெல்லாம் எழுதிக்கட்டு.
இருதலைக்கொள்ளி எறும்பு போல் ஆனேன்.
இருதலை மணியன் பாம்பைப்போல.
இருநாய்க்கிட்ட எறும்பு போல.
இருந்த கால் மூதேவி, நடந்த கால் சீதேவி.
இருந்த நாள் எல்லாம் இருந்து விட்டு ஊர்ப் பறையனுக்குத் தாரை வார்த்ததுபோல.
இருந்தல்லவோ படுக்கவேண்டும்?

இருந்தவனுக்குப் போனவன் குணம்.
இருந்தவன் இருப்பவனுக்கு வழிகாட்டி.
இருந்தவன் எழுந்திருக்கிறதற்குள்ளே நின்றவன் நெடுந்தூரம்.
1730 இருந்தவன் தலை மேலே இடி விழுந்ததுபோல.
இருந்தால் இருப்பீர், எழுந்தால் நிற்பீர்.
இருந்தால் பூனை, பாய்ந்தால் புலி.
இருந்து பணங்கொடுத்து, நடந்து வாங்க வேண்டியதாய் இருக்கிறது.
இருந்தும் கெடுத்தான், பாவி, செத்தும் கெடுத்தான்.
இருபத்தொரு மழையும் எண்ணி ஊற்றியது.
இருப்பது பொய், போவது மெய்.
இருப்பிடம் தலைப்பிள்ளை, தலைக்கடை தென்னம்பிள்ளை.
இருப்பிடம் வைகுண்டம்.
இருப்புக்கட்டியை காற்றடிக்கிற போது, இலவம் பஞ்சு எனக்கு என்ன புத்தி என்கிறதாம்.
1740 இருப்புக்கதவு இடித்துத் தவிட்டுக்கொழுக்கட்டை எடுக்கிறதா?
இருப்புக்கோட்டையும் கற்கதவும் போல.
இருப்புச்சலாகையை விழுங்கிப்போட்டு இஞ்சிச் சாறு குடித்தால் தீருமா?
இருமனது மங்கையோடு இணங்குவது அவலம்.
இரும்பு அடிக்கிற இடத்தில் ஈய்க்குஎன்ன அலுவல்?
இரும்பு அடிக்கிற இடத்தில் நாய்க்கு என்னவேலை?
இரும்பு கோணினால் யானையை வெல்லலாம், கரும்பு கோணினால் கட்டியும் பாகுமாம், அரும்பு கோணினால் அதன் மணங்குன்றுமோ, நரம்பு கோணினால் நாமதற்கு என் செய் வோம்?
இரும்புத்துறட்டுக்கு அசையாத புளியங்காய் திருப் பாட்டுக்கு அசையுமா?
இரும்புத்தூணை எறும்பு அரித்தாற்போல.
இரும்புத்தூணைச் செல் அரிக்குமா?
1750 இரும்பு செம்பானால் திரும்பிப் பொன் ஆகும்.
இரும்பு செம்பானால் துரும்பு தூணாகும்.

இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இராது.
இரும்பை எலி தின்றது என்கிறான் இடக்கன்.
இரும்பை எலி தின்னுமா?
இரும்பை எறும்பு அரிக்குமா?
இரும்பைக் கரையான் அரித்தால், பிள்ளையைப் பருந்துகொண்டு போகாதா?
இருவராலே ஆகாத காரியம் ஒருவராலே ஆகுமா?
இருவரும் ஒத்தால் ஒருவருக்கும் பயமில்லை.
இருவரும் ஒத்தால் பிணக்கு வருவானேன்?
1760 இருவர் நட்புக்கு ஒருவர் பொறுமை.
இருவிரல்தோலும் அதின்மேல் மயிரும் எனக்கில்லையே!
இருளன் பிள்ளைக்கு எலிக்குஞ்சு பஞ்சமா(கருப்பா)?
இருளன் ராஜவிழி விழிப்பானா?
இருளும் ஒருகாலம் நிலவும் ஒருகாலம்.
இரெட்டியாரே இரெட்டியாரே என்றால், கலப்பையைத் திட்டென்று போட்ட கதை.
இரை விழுங்கின பாம்புபோல.
இலக்கணப் பெண்சாதி மானியங் காக்கிறாள்.
இலக்கணம் கற்றவன் கலக்கம் அற மன்னர் சபை காண்பான்.
இலக்ஷணம் அவலக்ஷணம் முகத்திலே.
1770 இலங்கணம் பரம ஔஷதம்.
இலங்கையில் பிறந்தவன் எல்லாம் இராவணன் ஆவதில்லை.
இலங்கையைச் சுட்ட குரங்கு.
இலந்தைப்பழம் புழுப்போல் துடிக்கிறது.
இலவுகாத்த கிளி ஆனேன் (கிள்ளைபோல).
இலுப்பை சர்க்கரை கொடையாம், துரைகள் மெச்சின நடையாம்.
இலுப்பைப் பூவைத் திருப்பினால் இரண்டுபுறமும் பொத்தல்.
இலை தின்னி காய் அறியான்.
இலைப்பழுப்பு ஆனாலும் குலப்பழுப்பு ஆகாது.
இலைமறைவு தலை (காய்) மறைவு வேண்டாமா?

1780 இலையும் பழுப்பும் எங்கும் உண்டு.
இல்லது வாராது உள்ளது போகாது.
இல்லற மல்லது நல்லற மல்ல.
இல்லறம் பெரிது துறவறம் சிறிது (பழிப்பு).
இல்லாத பிள்ளைக்கு இலுப்பைப் பூ சர்க்கரை.
இல்லாதவன் பெண்சாதி எல்லாருக்கும் தோழியா?
இல்லாதவன் பொல்லாதவன்.
இல்லாத வீட்டுக்கு இலஞ்சியம்.
இல்லாது சொல்லி அல்லற் படுதல்.
இல்லாது பிறவாது அள்ளாது குறையாது.

1790 இல்லாதும் இல்லன் இருப்பதும் இல்லன்.
இல்லாளை விட்டு வல்லாண்மை பேசுகிறதா?
இல்லிடமில்லார்க்கு நல்லிடமில்லை.
இல்லை என்கிற வீட்டில் பல்லியும் சேராது.
இல்லையா இலைமறைவு காய்மறைவு?
இல்லோர் இரப்பது இயல்பு.
இலௌகிகம் வைதிகம் இரண்டும் வேண்டும்.
இவருக்குச் சொல்லும் புத்தி கடலிற் பெருங்காயம் கரைத்தாற்போல் இருக்கிறது.
இவள் விலை மோரில் வெண்ணெய் எடுத்துத் தலை மகனுக்குக் கலியாணம் பண்ணுவாள்.
இவனுக்கும் அவனுக்கும் ஏழுபொருத்தம்.

1800 இவன் ஊராருக்குப் (ஊருக்குப்) பிள்ளை.
இவன் கல்லாது கற்றவன், உள்ளங்கையில் வைகுண்டம் காட்டுவான்.
இவன் புத்தி உலக்கைக் கொழுந்து(குந்தாணி வேர்).
இவன் மகா பெரிய கள்ளன், காலால் முடிந்ததைக் கையால் அவிழ்க்கிறது அரிது.
இவன் வாழ்ந்த வாழ்வு மருகிலேன் மல்லாக்கிலேன்?
இவன் வீட்டிலாவது சாப்பாடாவது, இவன் பரம் பரையாய்ப் பிச்சைக்காரனாச்சே.
இவ்வூர்ப் பூனையும் புலால் தின்றது.
இழவு கொடுப்பானுக்கு வாழ்க்கைப்பட்டு ஓட்டமே யொழிய நடையில்லை.
இழவுக்கு வந்தவள் தாலி அறுப்பாளா?
இழவு சொன்னவன் பேரிலேயே பழி?

1810 இழுக்கான பொன்னைப் புடத்தில் வைத்தெடுப்பார்கள்.
இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று.
இழுவை கண்டால் அடி பார்ப்பானேன்?
இழை ஆயிரம் பொன்பெற்ற இந்திர வர்ணப்பட்டு.
இழையத் தீட்டிக் குழைய வடித்தல்.
இளகின இரும்பைக்கண்டாற் கொல்லன் குண்டியைத் தூக்கி அடிப்பான்.
இளங்கன்று பயம் அறியாது.
இளமையில் முயற்சி முதுமையிற் காக்கும்.
இளமையிற் கல்வி எப்போதும் நிற்கும்.
இளமையிற் சோம்பல் முதுமையில் மிடிமை.
1820 இளமையிற் பழக்கம் எப்போதும் மறவாது.
இளமையும் முதுமையும் சரியான வயதல்ல.
இளவெந்நீர் குளிக்காதவளா உடன்கட்டை ஏறப் போகிறாள்?
இளவெயில் காயாத நீயா தீ பாயப்போகிறாய்?
இளித்துக்கொண்டிருந்தாளாம் மடத்தாயி, ஏறியடித் தானாம் தவசிப்பிள்ளை!
இளைஞன் ஆனாலும் ஆடுவான் மூப்பு.
இளைத்தவர் கிளைப்பார், கிளைத்தவர் இளைப்பார்.
இளைத்தவன் தலையில் ஈரும் பேனும்.
இளைத்தவன் எள்ளை விதை.
இளைத்தவன் சிநேகிதனைச் சேர்.
1830 இளைத்தவன் தலையில் சொட்டு.
இளைத்தவன் பெண்டாட்டி எல்லாருக்கும் மைத்துனி.
இளையாளே வாடி, மலையாளம் போவோம்; மூத் தாளே வாடி, முட்டிக்கொண்டு சாவோம்.
இளையாள் திலை தின்னி மூத்தாள் காய் அறிவாள்.
இறகு முற்றிப் பறவை ஆனால், எல்லாம் தன் வயிற்றைத் தான் பார்க்கும்.
இறக்குங்காலம் வராமல் பிறக்குமா ஈசலுக்குச் சிறகு?
இறங்கச்சே நீச்சானால் கரை யேறுகிறதெப்படி?
இறங்குபொழுதிலே மருந்து குடி.

இறங்கும் துறையிலே நீத்தானால் இந்த ஆற்றை எப்படிக் கடக்கிறது.
இறந்தவனுக்கு எள்ளும் தண்ணீரும்.
1840 இறந்தவன் இருப்பவனுக்கு வழிகாட்டி.
இறந்தவன் பிள்ளை இருந்தவன் அடைக்கலம்.
இறந்திறந்து பிறந்தாலும் இருவக் கரையானாய்ப் பிறக்க வேண்டும்.
இறாக் கறியோ புறாக்கறியோ?
இறுத்த குடிக்கு அனர்த்தம் இல்லை.
இறுகினால் களி, இளகினால் கூழ்.
இறுப்பானுக்குப் பணமும் கிடையாது, உழைப்பானுக்குப் பெண்ணும் கிடையாது.
இறைக்க இறைக்கக் கிணறு சுரக்கிறது.
இறைக்க ஊறும் மணற்கேணி, ஈயப்பெருகும் பெரும்செல்வம்.
இறைச்சி தின்கிறவன் கடுப்புக்கு மருந்து அறிவான்.
1850 இறைச்சி தின்றாலும் எலும்பைக் கோத்துக் கழுத்திலணிகிறதா?
இறைத்த கிணறு ஊறுமா, இறையாத கிணறு ஊறுமா?
இறைத்த கிணறு ஊறும், இறையாத கிணறு நாறும்.
இறைத்த கிணறு சுரக்கும்.
இற்றோம் இளைத்தோமென் றிரக்கப் போனாலும், என் சனி என்னை விடவில்லை.
இனத்தை இனம் தழுவும்.
இனம் இனத்தைக் காக்கும், வேலி பயிரைக்காக்கும்.
இனம் இனத்தோடே வெள்ளாடு தன்னோடே.
இனம் பிரிந்த மான் போல.
இனிமேல் எமலோக பரியந்தம் சாதிக்கலாம்.
1860 இனிமேல் ஒரு தெய்வத்தைக் கையெடுக்கிறதா?
இன்பத்தில் ஆசை எவர்க்கும் உண்டு.
இன்பமும் துன்பமும் எடுத்த உடலுக்கு இயல்பு.
இன்பமும் துன்பமும் பொறுமையிலே.
இன்பம் வருவதும் துன்பம் வருவதும் எடுத்த உடலிற்கு வரம்.

இன்றற்று இன்று போகிறதா?
இன்று இருப்பார் நாளைக்கு இல்லை.
இன்றைக்கு என்பதும் நாளைக்கு என்பதும் இல்லை என்பதற்கு அடையாளம்.
இன்றைக்கு ஆகிறது நாளைக்கு ஆகட்டும்
இன்றைக்கு இருப்பாரை நாளைக்கிருப்பாரென் றெண்ணவோ திடமில்லை.
1870 இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்குக் குலை அறுக்கமாட்டானா?
இன்றைக்குச் சின்னதுக்கு வந்தது நாளைக்குப் பெரியதுக்கு வரும்.
இன்றைக்குச் செத்தால் நாளைக்கு இரண்டு நாள்.
இன்னம் இருக்கிறது தேருக்குள் சிங்காரம்.
இன்னும் இருக்கிறது நேருக்குள் சிங்காரம்.
இன்னும் கிடக்குது [illegible] ரீயோ.

---

## ஈ.

ஈ என்று போயிருக்கிறாள்.
ஈ கலையாமல் தேன் அடிப்பார்கள், எடுக்காமற் பிடிப்பார்கள்.
ஈகை உடையோன் எக்களிப்பு அடைவான்.
ஈக்கும் பாலுக்கும் எச்சில் இல்லை.
1880 ஈக்கு விடம் தலையில், தேளுக்கு விடம் கொடுக்கில்
ஈசெலுக்கு எல்லாம் பகை
ஈசெல் இறகு எல்லாவற்றிலும் மிருது.
ஈசெல் பறந்தால் மழை.
ஈசெல் பெரும்போக்கில் தவளை தத்திவிழுந்தது போல்
ஈசெல் பொறுக்கி யேசவு மறியான்.
ஈசெல் மடிந்தாற்போல் மடிந்ததே சேனை.
ஈசெற் புற்றில் கரடி வாய்வைத்தாற் போல்
ஈசனுக்கு ஒப்பு எங்கணுமில்லை.
ஈசனுக் கொப்பு இங்கொன்று மில்லை.
1890 ஈசனுடைய அடியார் மனம் எரிந்து புகைந்தால் வீண்போகுமா?
ஈசன் எப்படி, அப்படி தாசன்.

ஈச்சங்கள்ளு எதிலும் குளிர்ச்சி.
ஈச்சங் காட்டில் எருமை குடியிருந்த கதை.
ஈச்ச முள்கொண்டு இறுக இறுகத் தைத்தாலும், தேற்றிய வசனம் சொல்லாமல் விடான்.
ஈச்ச முள்ளாலே இருவாயும் தைத்தாலும், தேங்காய்க்கு மஞ்சளில்லை பூவுக்கு மணமில்லை என்கிறாள்.
ஈடன் பாடஞ்சான், கூழை யெருது நுளம்புக் கஞ்சாது.
ஈடாகாதவனை எதிர்க்காதே.
ஈடு ஜோடு எங்கும் கிடையாது.
ஈடுள்ள குடிக்குக் கேடில்லை.
1900 ஈட்டு எட்டினமட்டும் குத்தும், பணம் பதின்காதமட்டும் குத்தும்.
ஈட்டி எட்டுமுழம் பாயும், பணம் பாதாளம் வரைக்கும் பாயும்.
ஈட்டிய பொருளினும் எழுத்தே உடைமை.
ஈட்டுக்கு ஈடும் சோட்டுக்குச் சோடுமாய் இருந்தால் வாசி.
ஈட்டுக்கும் பாட்டுக்கும் இருந்தாள் இடு (எடு) குமரி.
ஈஸ்வரன் கோவில் திருநாள் ஒருநாள் கந்தாயம்.
ஈதல் உடையோரை யாவரும் புகழ்வார்.
ஈந்து பார்த்தால் இம்மி வெளியாகும்.
ஈப்பிசினி இரப்பது கூடக் கக்கிசம்.
ஈயத்தைக் காய்ச்சலாம், இரும்பைக் காய்ச்சலாமா?
1910 ஈயம் பிடித்தவன் ஏது சொல்லினும் கேளான்.
ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன?
ஈயாத புல்லனை எவ்விடத்தும் காணோம்.
ஈயாதார் வாழ்ந்தென்ன, இண்டஞ்செடி தழைத் தென்ன?
ஈயாப்பத்தன் பேராசைகொண்டு பெருக்கத் தவிக்கிறான்.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
ஈயார் பொருளுக்குத் தீயார்.
ஈயும் எறும்பும் எங்கும் உண்டு

ஈயைப் பிடித்தால் கைவேறு கால்வேறு.
ஈயைப்போல சுத்தமும், எறும்பைப்போல பலமும்.
1920 ஈர நாவிற்கு எலும்பில்லை.
ஈரங்காய்ந்தால் பிட்டத்தில் மண் ஒட்டாது.
ஈரச் சீலையைப்போட்டுக் கழுத்து அறுப்பான்.
ஈரத் துணியைப்போட்டுக் கழுத்தை வெட்டுவான்.
ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு என்செய்து மென்ன?
ஈரம் அற்ற இடத்திலே ஈமொய்க்குமா, ஈரம் உள்ள இடத்திலே ஈமொய்க்குமா?
ஈரவெங்காயத்திற்கு இருபத்து நாலுபுரை எடுக்கிறது.
ஈரை நினைப்பான் பேரை மறக்கான்.
ஈரைப் பேனாக்கி பேனைப் பெருமாள் ஆக்குகிறாள்.
ஈர் உருவப் பேன் அகப்படுமா?
1930 ஈர்க்கிலிலே குத்தி இறப்பிலே வைத்தாற்போல.
ஈ வதையைக் கண்டால் யாவரும் அண்டார்.
ஈ விஷ்டித்ததும் நாய் திருடித் தின்றதும்.
ஈ விழுந்த சாதம் எடுத்தா லொழியப் போகுமா?
ஈவோனுக்கு ஒரு போஜனம், இரப்போனுக்கு ஏராளம்.
ஈழத்திற் செக்காட இங்கே பதம் பார்க்க.
ஈனருக்கு இடங்கொடுத்தால் இல்லிடமெல்லாம் பாழ்.
ஈனரை அடுத்தால் மானம் அழியும்.
ஈனவும் தெரியாது நக்கவும் தெரியாது.
ஈனனுக்கு இடம் கொடுத்தால் இல்லிடம் கைக்கொள்வான்.
1940 ஈன்றவள் தாய் பாட்டி, இவள் தாயின் தாய் பூட்டி (பீட்டி)
ஈன்றோர் நஞ்சிற் சான்றோர் இல்லை.

---

## உ.

உகமுடிய மழை பெய்தாலும் ஒட்டாங்கிளிஞ்சில் பயிராகுமா?
உகிர்ச்சுற்றின் மேல் அம்மி விழுந்ததுபோல.

உங்களப்பன் செத்தான் பழி உன்னை விடேன்.
உங்களப்பன் பூச்சிக்குப் பயப்பட்டேனா, உன் பூச்சிக்குப் பயப்பட?
உங்கள் உறவிலே வேகிறது ஒரு கட்டுவிறகிலே வேகும்.
உங்கள் உறவிலே வேகிறதைவிட ஒருகட்டுவிறகிலே வேகிறதுமேல்.
உங்கள் பெண்டுகள் கொண்டல் அடித்தால் கண்கள் கொள்ளாது.
உங்கள் வீட்டுப் பனங்கட்டை ஒற்றைப்பணத்தை முடிந்துகொண்டு கிடக்குமோ?
1950 உங்களைக் கடலிலே கைகழுவினேன்.
உசு பிடி யென்றால் நீ பிடி யென்கிறதாம் நாய்.
உச்சந்தலையிலே செருப்பா லடித்ததுபோல.
உச்சந்தலையிற் செருப்பா லடித்தாலும் உச்சி குளிருமா?
உடம்பிலே பயமிருந்தால் நன்றாய்ச் செய்வான்.
உடம்பு எங்கும் சுடுகிற தழலை மடியிலே கட்டுகிறாய்.
உடம்பு எல்லாம் புழுத்தவன் அம்மன் கோவிலைக் கெடுத்த கதை.
உடம்பு தேற்றிக்கொண்டு அல்லவா யோகத்தில் போகவேண்டும்?
உடம்புளைந்த கழுதை உப்புக்களத்திற்குப் போனது போல்.
1960 உடம்பு முழுதும் நனைந்தவருக்குக் கூதல் என்ன?
உடம்போடே ஒரு நாட்டியம் உண்டா?
உடலுக்குள்ளே நாக்கை வளைக்கிறதா?
உடலுக்கோ பால் வார்த்துஉண்பது, ஊருக்கோ பால் வார்த்து உண்பது.
உடலும் நிழலும் போல.
உடல் ஒருவனுக்குப் பிறந்தது, நாவு பலருக்குப் பிறந்தது.
உடல் இரண்டு உயிர் ஒன்று.
உடல் உள்ளவரைக்கும் கடல் கொள்ளாத கவலை.
உடல் உள்ளவனுக்குக் கடல் கொள்ளாத கவலை.

உடல் மெச்சப் பால் குடிக்கிறாயா,ஊர் மெச்சப் பால் குடிக்கிறாயா?

1970 உடற்பிறப்பு இல்லாத உடம்பு பாழ்.

உடாப் புடவை பூச்சிக்கு இரை.

உடுக்காத புடவையைச் செல்லு அரிக்கும்.

உடுக்கைக் கிடைசிறுத்தால் ஓசையுண்டு, உரலுக் கிடை சிறுத்து உதவி என்ன?

உடுத்த சீலை (புடவை) பாம்பாய்க் கடித்ததுபோல.

உடுத்துக் கெட்டான் வெள்ளைக்காரன், உண்டு கெட்டான் சோனைகன், புதைத்துக்கெட்டான் தமிழன்.

உடுத்துக் கெட்டான் துலுக்கன், தின்று கெட்டான் மாத்துவன்.

உடும்புக்கு இரண்டு நாக்கு உனக்கு இரண்டு நாக்கா?

உடும்புக்கு இரண்டு நாக்கு மனிதனுக்கு ஒரு நாக்கு.

உடும்புடும்பே இண்டிக்குப் போ.

1980 உடும்பு போனால் போகிறது, கைவந்தால் போதும்.

உடும்பு வேண்டாம் கையை விடு.

உடைந்த சங்கில் ஊதை (காற்று) பறியுமா?

உடைந்த சங்கு ஊத்துப் பறியுமா?

உடைமுள்ளுக்கு எதிரே உதைக்கலாமா?

உடமைக்காரனுடன் உண்டா ஓர் நாட்டியம்?

உடைமை யென்பது கல்வி யுடைமை.

உடைமையும் கொடுத்து அருமையும் குலைகிறது.

உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

உடையவனிற் கைப்பற்றினவன் மிடுக்கன்.

1990 உடையவன் இல்லாச் சேலை ஒரு முழம் கட்டை.

உடையவன் கண்ணோடாப் பயிர் உடனே அழியும்.

உடையவன் சொற்படி உரலைச்சுற்றிக் குழிபறி.

உடையவன் சொற்படி கமுகடி களைபறி.

உடையவன் பாராப் பயிர் உருப்படுமா?

உடையவன் பொறுத்தாலும் உடையவன் வீட்டு நாய் பொறுக்காது.

உடையார் வீட்டு மோருக்கு அகப்பைக் கணக்கு என்ன?

உட்கார்ந்தல்லவோ படுக்கவேண்டும்?

உட்கார்ந்திருக்கச்சே அடித்தால் பொன்னாகும், ஓடச்சே அடித்தால் செம்பானாலும்ஆகும் இரும்பானாலும் ஆகும்.
உட்சுவர் இருக்கப் புறச்சுவர் பூசலாமா?
2000 உட்சுவர் தீற்றிப் புறச்சுவர் தீற்று.
உட்புறத்துக்கு வெளிப்புறம் கண்ணாடி.
உணர்வில்லாக் கருவியும் உப்பில்லாச் சோறும் சரி.
உண் உண் என்று உபசரியான் வாசலிலே உண்ணாமலிருப்பது கோடிபெறும்.
உண்கிற சோறு வெல்லம்.
உண்கிற சோற்றிலே கல்லைப் போடுகிறதா?
உண்கிற சோற்றிலே நஞ்சைக் கலக்கிறதா?
உண்கிற வயிற்றை ஒளிக்கிறதா?
உண்ட உடம்பிற்கு உறுதி, உழுத புலத்தில் நெல்லு.
உண்ட உடம்பு உருகும், தின்ற பாக்குச் சிவக்கும்.
2010 உண்ட களை (இளைப்பு)தொண்டருக்கும் உண்டு.
உண்ட சுற்றம் உருகும்.
உண்ட சோற்றுக்கு இரண்டகம் பண்ணுகிறதா?
உண்டது தானே ஏப்பம் வரும்?
உண்டதும் தின்றதும் லாபம், பனியில் கிடந்தது லோபம்.
உண்டபிள்ளை உரஞ்செய்யும்.
உண்டவயிறு கேட்கும், தின்ற பாக்குச் சிவக்கும்.
உண்ட வயிற்றுக்கு உபசாரமா?
உண்ட வயிற்றுக்குச் சோறும், மொட்டைத்தலைக்கு எண்ணெயும் போல.
உண்டவள் உண்டுபோக என் தலை புண்டு போகிறதா?
2020 உண்டவன் உரஞ்செய்வான்.
உண்ட வீட்டிலே உட்காராதே போனால், கண்டவர்கள் எல்லாம் கடுகடு என்பார்கள்.
உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்ணலாமா?
உண்ட வீட்டுக்கு இரண்டு நினைக்கிறவன் உண்டா?
உண்டார் மேனி கண்டால் தெரியும்.
உண்டாலும் உறுதிப்பட உண்ணவேண்டும்.
உண்டால் கொல்லுமோ, கண்டால் கொல்லுமோ?

உண்டால் தின்றால் ஊரிலே காரியமென்ன?
உண்டால் தின்றால் உறவு, கொண்டால் கொடுத்தால் உறவு.
உண்டால் தீருமா பசி, கண்டால் தீருமா பசி?
2030 உண்டாற் கொல்லும் விஷம்.
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.
உண்டு உறியில் இரு என்றால், உருண்டு தரையில் (தெருவில்) விழுகிறாய்.
உண்டு கொழுத்தால் நண்டு வளையில் இருக்குமா?
உண்டு தின்று உயரம் ஆனால் ஊரிலே காரியம் என்ன?
உண்டு தின்று உள்ளே இருவென்றால் உயர எழும்பி ஏன் குதிக்கிறாய்?
உண்டு ருசி கண்டவனும் பெண்டு ருசி கண்டவனும் விடான்.
உண்டை பட்டு உறங்குகிற குருவிபோல.
உண்ணக் கைசலித்து இருக்கிறான்.
உண்ணப் படையுண்டு வெல்லப் படையில்லை.
2040 உண்ணவா என்றால் குத்தவருகிறான்.
உண்ணாக்கை அறுத்துச் சுண்ணாம்புக் குறியிடுவேன்.
உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
உண்ணாமல் ஊரெல்லாம் திரியலாம், உடுக்காமல் ஒரு வீட்டுக்கும் போகலாகாது.
உண்ணாமல் ஒன்பது வீடு போகலாம், உடுக்காமல் ஒரு வீடும் போகல் ஆகாது.
உண்ணாமல் தின்னாமல் உறமுறையாருக்கீயாமல்.
உண்ணாமல் தின்னாமல் ஊளர் அம்பலமானேனே.
உண்ணாமல் தின்னாமல் வயிறு உப்புசங் கொண்டேன்.
உண்ணும் கீரையிலே நண்ணும் புல்லுருவி.
உண்பது இருக்க ஒரு கருமம் செய்யேல்.
2050 உண்பது நாழி, உடுப்பது நான்குமுழம், எண்பது கோடி நினைந்தெண்ணும் மனம்!
உண்பாரைப்பார்த்தாலும் உழுவாரைப் பார்க்கல் ஆகாது.

உண்பான் தின்பான் சிவப்பிராமணன், குத்துக்கு நிற்பான் வீரமுஷ்டி.
உண்பான் தின்பான் சேப்பெருமாள், குத்துக்கு நிற்பான் வைராகி.
உண்பான் தின்பான் நயனப்பசெட்டி, உடன்கட்டை ஏறுவான் பெருமாள் செட்டி.
உண்மை சொல்லிக் கெட்டாரும், பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை.
உண்மை சொன்னால் உண்மை பலிக்கும், நன்மை சொன்னால் நன்மை பலிக்கும்.
உண்மை நன்மொழி திண்மை உறுத்தும்.
உண்மைப்படு உறுதிப்படு.
உதடு பழஞ்சொரிய உள்ளே நெஞ்சு (வயிறு) எரிய.
2060 உதடு மன்றாடப்போய் உள்ளிருந்த பல்லும் போனாற் போல.
உதட்டிலே உறவும், உள்ளே (நெஞ்சிலே) பகையும்.
உதட்டிலே புண் ஆனால் பால் கறக்காதா?
உதட்டிலே வாழைப்பழம், உள்ளே தள்ளவேண்டுமோ?
உதட்டுக்கு மிஞ்சின பல்லும், திருட்டுக்கு மிஞ்சின கையும் ஆகாது.
உதட்டுத்துரும்பு ஊதப் போகாது.
உதர நிமித்தம் வெகு கிர்தவேஷம்.
உதவாத செட்டிக்குச் சீட்டு எழுதினதுபோல.
உதவாப் பழங்கலமே, ஓசையில்லா வெண்கலமே!
உதவி செய்வாருக்கு இடையூறு ஏது?
2070 உதறுகாலி முண்டை உதறிப்போட்டாள்.
உதறுகாலி வந்தாள், உள்ளதும் கெடுத்தாள்.
உதறுகால் முண்டை உதறிப் போட்டாள்.
உதாரிக்குப் பொன் துரும்பு.
உதிக்கின்ற கதிரோன் முன்னே ஒளிக்கும் மின்மினியைப் போல்.
உதிரத்துக்கு அல்லவோ உருக்கம் இருக்கும்?
உதைத்த கால் புழுக்கிறபோது அல்லவோ புழுக்கும்?
உதைத்தகால் புழுக்கிறதற்கு முன்னே அடிவயிறு சீழ்கட்டுகிறது.

உதைப்பானுக்கு வெளுப்பான் சாதி வண்ணான்.
உத்தம சேவகன் பெற்ற தாய்க்கு அதிகம்.
2080 உத்தமனுக்கு எத்தாலும் கேடு இல்லை.
உத்தமனுக்கும் தப்பிலிக்கும் ஓலை என்னத்திற்கு.
உத்தமனுக்கும் தப்பிலிக்கும் (போக்கிரிக்கும்)உடன் படிக்கை வேண்டாம்.
உத்தராயணம் என்று உறியைக் கட்டிக்கொண்டு சாகிறதா?
உத்தியோகத்துக்குத் தக்க சுகம்.
உத்தியோகம் குதிரைக் கொம்பாயிருக்கிறது.
உத்தியோகம் தடபுடல், சேவிக்கிறவர்கள் இன்னாரி னியாரென்றில்லை, சம்பளம் கணக்கு வழக் கில்லை, குண்டையை விற்று நாலு வராகன் அனுப்பச் சொல்லு.
உத்தியோகம் புருஷலக்ஷணம்.
உத்திராடத்தில் ஒரு பிள்ளையும், ஊர்வாரியில் ஒரு நிலமும்.
உபகாரத்திற்கு அபகாரம் வருவது துரதிருஷ்டம்.
2090 உபசரியாத வீட்டிலே உண்ணாதிருப்பதே கோடி தனம்.
உபசாரம் செய்தவர்க்கு அபசாரம் பண்ணுகிறதா?
உபசார வார்த்தை காசாகுமா, உண்டா லொழியப் பசி தீருமா?
உபசார வார்த்தை வாய்க்குக் கேடு, தூற்றுப் பருக்கை வயிற்றுக்குக் கேடு.
உபநயனம் இல்லாமல் கலியாணம் பண்ணினானாம்.
உபாயத்தால் ஆகிறது பராக்கிரமத்தால் ஆகுமா?
உப்பளத்துமண்ணும், உழமண்ணும், செம்மண்ணும், காவேரி மண்ணும் கலந்து வழங்குகிறது.
உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
உப்பு இருந்த பாண்டமும், உபாயம் இருந்த நெஞ்சமும் தப்பாமல் தட்டுண்டு உடையும்(தட்டி உடை யாமல் தானே உடையும்).
உப்பு இருந்தால் பருப்பு இராது, பருப்பு இருந்தால் உப்பு இராது.

2100 உப்பு இல்லாப் பண்டம் குப்பையிலே.
உப்பு இல்லாமல் ஒரு மிடா (கல)க்கஞ்சி குடிப்பான்.
உப்பு இல்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை, அப்பன் இல்லாவிட்டால் தெரியும் அப்பன் அருமை.
உப்பு எடுத்தகையாலே கர்ப்பூரமும் எடுக்கவேண்டும்.
உப்பு கட்டினால் உலகம் கட்டும்.
உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பாத்தி போல விழிக்கிறாய்.
உப்புச் சட்டியும் வறையோடும் தோற்று விட்டான்.
உப்புச் சட்டியும் வறையோடும் விற்றுக் கடனைக் கொடுத்து விட்டான்.
உப்புத் தண்ணீரும் கப்புமஞ்சளும் ஊறிப் போச்சுது.
உப்புத் தண்ணீருக்கு இலாமிச்சம்வேர் போட வேண்டுமா?
2110 உப்புத் தின்றவன் தண்ணீர் குடிப்பான்.
உப்புநீர் மேகம் சேர்ந்தால் உலகிற் பிரவாகம்.
உப்பு மிஞ்சினால் உப்புச்சாறு, புளி மிஞ்சினால் புளி சாறு.
உப்பு மிஞ்சினால் தண்ணீர் போடு, தண்ணீர் மிஞ்சினால் உப்புப் போடு.
உப்புமுதல் கர்ப்பூரம் வரைக்கும் வேண்டும்.
உப்பும் கர்ப்பூரமும் ஒன்றாய் வழங்குமா?
உப்பும் சோறும் உணர்த்தியாய் உண்ணலையோ?
உப்பு வாணிகன் அறிவானா கர்ப்பூர விலை.
உப்பைச் சிந்தினையோ, துப்பைச் சிந்தினையோ?
உப்பைத் தொட்டு உப்பைத் தின்னாதே.
2120 உப்பைத் தொட்டுக்கொண்டு உரலை விழுங்குகிறது போல.
உப்போடே முப்பத்திரண்டும் வேண்டும்.
உப்போடொன்பதும் பருப்போடுபத்தும் வேண்டும்.
உமக்கு என்ன, வயதுக்கு நரைத்ததோ, மயிருக்கு நரைத்ததோ?
உமியும் கரியும் இருக்கிறது, உடைமை செய்யப் பொன்னில்லை.

உமியைக் குத்திக் கை சலித்தது போல.
உம் என்கிறாளாம் காமாக்ஷி, ஒட்டிக் கொண்டாளாம் மீனாக்ஷி.
உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்து (கருடன்) ஆகுமோ?
உயர்ந்த உடுப்பு, அயர்ந்த அடுப்பு.
உயிரிருக்க ஊனை வாங்குகிறது.
2130 உயிரிருந்தால் உப்பு விற்றுப் பிழைக்கலாம்.
உயிரும் உடலும் போல.
உயிருள்ள மட்டும் தைரியம் விடலாமா?
உயிரை வைத்திருக்கிறதிலும் செத்தாற் குணம்.
உயிரோடு இருக்கும்போது ஒரு கரண்டி நெய்க்கு வழியில்லை, ஓமத்துக்கு ஒன்பது கரண்டி நெய் விட்டதுபோல.
உயிரோடு ஒரு முத்தம் தராதவள், செத்தால் உடன் கட்டை ஏறுவாளா?
உயிரோடு திரும்பிப் பாராதவள், செத்தால் முத்தம் கொடுப்பாளா?
உயிரிருந்தால் உப்புமாறி உண்கலாம்.
உயிர் உதவிக்கு மிஞ்சின உதவி வேறில்லை.
உயிர் போகாமல் தண்ணீர் குடித்துக்கொண்டு வருகிறோம்.
2140 உயிர் போம்போதும் தைரியம் விடலாகாது.
உரலிலே தலையை மாட்டிக் கொண்டு உலக்கைக்குப் பயப்பட்டால் தீருமா?
உரலிலே துணி கட்டி யிருந்தாலும் உரிந்து பார்க்க வேண்டு மென்கிறான்.
உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
உரலுக்கு ஒருபக்கம் இடி, மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி.
உரலுக்கு பஞ்சம் உண்டா?
உரலுங் கொடுத்துக் குரலும் போக வேண்டும்.
உரல் பஞ்சம் அறியுமா?
உரல் மத்தளத்தோடு முறையிட்டாற் போல.
உரல்போய் மத்தளத்தோடே முறை யிட்டது போல.

2150 உரியை இரட்டித்தால் உழக்கு.
உரு ஏறத் திரு ஏறும்.
உருக்கம் உருக்கமாய் ஊட்டி உள்ளே போச்சுது.
உருக்கம் உள்ள சிற்றாத்தே, ஒதுக்கில் வாடி கட்டி அழ.
உருக்கின நெய்வார்த்தாலும், கண்ட நியாயம் தான் சொல்லுவேன்.
உருக்கின நெய்வார்த்தாலும், கண்ணாரக் கண்டதைச் சொல்லுவான்.
உருசிகண்ட பூனை உறியை யுறியைத் தாவுமாம்.
உருட்டப் புரட்ட உள்ளதும் உள்ளுக்கு வாங்கும்.
உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
உருட்டும் புரட்டும் மிரட்டும் சொல்லும்.

2160 உருத்திராக்ஷப் பூனை உபதேசம் பண்ணினதுபோல.
உருத்திராஷப் பூனை ஒன்றும் தெரியாதது போல் இருக்கும்.
உருப்படத் திருப்படும்.
உருவத்தினாலல்ல, இன்பப் பேச்சினால் கிளி நன்கு மதிக்கப்படும்.
உருவத்தை அல்ல குணத்தைப் பார், பணத்தை அல்ல சனத்தைப் பார்.
உருவிய வாளை உறையில் இடாத வீரன்.
உலகத்துக்கு ஞானம் பேய், ஞானத்துக்கு உலகம் பேய்.
உலகம் பலவிதம்.
உலகிலே கள்ளனுக்கு ஊரார் யாவரும் பகை.
உலகிலே பெண் என்றால் பேயும் இரங்கும்.

2170 உலக்கை தேய்ந்து உளிப்பிடி ஆச்சுது.
உலக்கைப் பூசைக்கு அசையாதவள் திருப்பாட்டுக்கு அசைவாளா?
உலக்கை பெருத்து உத்திரம் ஆயிற்று.
உலக்கையாலே காதுகுத்தி, உரலாலே தக்கை போட்டது போல.
உலுத்தன் விருந்திற்கு ஒப்பானது ஒன்று மில்லை.
உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடலாமா?
உலைவாய் மெழுகு உருகுவது போல.

உலைவைத்த சந்திலே சாறுகாய்ச்சுகிறது.
உலோபிக்கு இரு செலவு.
உலோபிக்கு இரு படி சேதம்.
2180 உல்லாசநடை மேலுக்குக் கேடு, மினுக்கு எண்ணெய் தலைக்குக் கேடு.
உழக்கிலே கிழக்கு மேற்கா?
உழக்கிலே வழக்கு.
உழக் குளிர் அடித்தால், நாற்றுப் பிடுங்கப் படாதா?
உழக்கு உள்ளூர்க்கு, பதக்கு பரதேசிக்கு.
உழக்கு உற்றார்க்கும் பதக்குப் பரதேசிக்கு மானால், உழுதவனுக் கென்ன?
உழக்குக்கு ஊம்பப்போய்ப் பதக்குப் பன்றிகொண்டு போச்சுதாம்.
உழக்கு நெல்லுக் குழைக்கப் போய் பதக்கு நெல்லைப் பன்றி தின்றது போல.
உழக்கு மிளகு கொடுப்பான் ஏன், ஒளித்திருந்து மிளகு சாறு (நீர்) குடிப்பான் ஏன்?
உழவிற்கு ஏற்ற கொழு.
2190 உழவின் மிகுத்த ஊதியம் இல்லை.
உழவு ஒழிந்த மாடு பட்டிப் புறத்திலே.
உழவுக்கு ஒரு சுற்றும் வராது, ஊணுக்குப் பம்பரம் (முன்னே வரும்).
உழவுந் தரிசும் ஓர் இடத்திலே, ஊமையும் செவிடனும் ஒரு மடத்திலே.
உழவுக்குப் பிணைத்து விடுகிற மாடும், கூட்டுக்குப் பிடித்துவிடுகிற ஆறும் உதவாது.
உழவு மாடு ஆனால் ஊரிலே விலைப்படாதா?
உழுகிற காலத்தில் ஊர்சுற்றிவிட்டு அறுக்கிற காலத்தில் அரிவாள் எடுத்துக்கொண்டு புறப்பட்டால்.
உழுகிற குண்டையானால் உள்ளூரில் விலையாகாதா?
உழுகிறதை விட்டு நழுவுகிறவன் தெய்வம் ஆடினாற் போல.
உழுகிற நாளிற் ஊருக்குப்போய், அறுக்கிற நாளில் அரிவாள் கொண்டுவந்தாற்போல.
2200 உழுகிற நாளில் ஊருக்குப்போனால், அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை.

உழுகிறமாடு பரதேசம் போனால், அங்கு ஒருவன் கட்டி உழுவான் இங்கு ஒருவன் கட்டி உழுவான்.
உழுகிற மாட்டை எருது நக்கினது போல.
உழுகிற மாட்டை நுகத்தால் அடித்தாற்போல.
உழுகிறவன் இளப்பமானால் எருது மச்சின முறை கொண்டாடும்.
உழுகிறவன் கணக்குப் பார்த்தால் உழக்கோலும் மிஞ்சாது.
உழுத எருதானாலும் ஒரு முடி நாற்றைத் தின்ன வொட்டார்.
உழுதவனுக்கு ஊர்க்கணக்குப் பண்ணத் தெரியாது.
உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கேனும் மிஞ் சாது.
உழுவானுக்கு ஏற்ற கொழு, ஊரார்க்கேற்ற தொழு.
2210 உழைக்கிற கழுதை எந்நாளைக்கும் உழைத்தே தீர வேண்டும்.
உளவன் இல்லாமல் ஊர் அழியுமா?
உளவு இல்லாமல் களவு இல்லை (நடக்குமா?)
உளி எத்தனை மலை எத்தனை?
உளுக்காந்திருக்கச்சே அடித்தால் பொன்னாகும், ஓடச்சே அடித்தால் செம்பானாலும் ஆகும் இரும்பானாலும் ஆகும்.
உளைவழியும், அடைமழையும், பொதிஎருதும், ஒருவனுமாய் அலைகிறான்.
உள்நாக்கும் தொண்டையும் அதிர அடைத்தது போல.
உள்வீட்டுக்கடனும் உள்ளங்கைச் சிரங்கும் கெட்டது.
உள்வீட்டிலே கீரை வைத்துக்கொண்டு அசல்வீட்டுக்குப் போவானேன்?
உள்ளக்கருத்து வள்ளலுக்குத் தெரியும்.
2220 உள்ளங்கைப் பாற்சோற்றை விட்டுப் புறங்கையை நக்கியதுபோல.
உள்ளங்கைப் புண்ணுக்குக் கண்ணாடி ஏன்?
உள்ளங்கையில் உரோமம் முளைத்ததாயின், அறிவிலான் அடங்குவான்.

உள்ளங்கையில் அஞ்சுகொண்டை முடிக்கிறேன்.
உள்ளங்கையில் தேனை வைத்துப் புறங்கையை நக்கினாற்போல.
உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல.
உள்ளங்கையில் போட்டுப் புறங்கையை நக்கலாமா?
உள்ளங்கையில் லக்கிரி (இலை,கறி,கீரை) இட்டவர்களை உள்ளளவும் நினை.
உள்ளங்கையில் வைகுண்டம் காட்டுகிறவன்.
உள்ளது சொல்ல ஊருமல்ல, நல்லது சொல்ல நாடுமல்ல.
2230 உள்ளது போகாது, இல்லது வாராது.
உள்ளதும் கெட்டதடா நொள்ளைக்கண்ணா.
உள்ள தெய்வங்களையெல்லாம் ஒருமிக்க வருந்தினாலும் பிள்ளை கொடுக்கிற தெய்வம் புருடன்.
உள்ளதைக்கொண்டு இல்லதைப் பாராட்டலாம்.
உள்ளதைச் சொல்லி மெலிந்தேன், நொள்ளைக் கண்ணாச்சி பிச்சைபோடு.
உள்ளதைச் சொன்னவன் ஊருக்குப்பொல்லாதவன்.
உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்.
உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் புண்ணாம்.
உள்ளதைச் சொன்னால் ஊருக்குப்பகை.
உள்ளதைச் சொன்னால் நொள்ளைக்கண்ணிக்கு நோப்பாளம்.
2240 உள்ளதையும் கெடுத்தாள் உதறுகாலி வந்து.
உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்.
உள்ளதையும் கெடுத்தான் நொள்ளைக்கண்ணன்.
உள்ளத்தில் ஒன்றும் குறையாது கள்ளமில்லா மனத்தார்க்கு.
உள்ளதை விற்று நல்லதை (உள்ளத்தை)க் கொள்ளு.
உள்ள பிள்ளை உரலை நக்கிக்கொண்டிருக்க, மற்றொரு பிள்ளைக்குத் திருப்பதிக்கு நடக்கிறாள்.
உள்ளமாற்றைக் காட்டும் உரைகல்லும் மெழுகுண்டையும்.
உள்ளம் தீயெரிய உதடு பழஞ்சொரிய.
உள்ளவனிடம் கள்ளன் போனாற்போல.
உள்ளாளில்லாமற் கோட்டை அழியாது.

2250 உள்ளாளும் கள்ளாளும் கூட்டமா?
உள்ளிருந்தார்க்குத் தெரியும் உள் வருத்தம்.
உள்ளிப்பூண்டுக்கு எத்தனை வாசனை கட்டினாலும் துர்க்கந்தத்தையே வீசும்.
உள்ளியதெள்ளியரானாலும் ஊழ்வினை பையநுழைந்திடும்.
உள்ளியிட உள்ளியிட உள்ளே போச்சுது.
உள்ளுக்குள்ளே (உள்ளூற) கொட்டின தேளே, ஒரு மந்திரம் சொல்லுகிறேன் கேளே.
உள்ளூரிலே ஓணான் பிடிக்காதவன் உடையார் பாளையம்போய் உடும்பு பிடிப்பானா?
உள்ளூரிலே விலைப்படாத மாடா அசலூரிலே விலைப்படும்?
உள்ளூர் மருமகனும் உழுகிற கடாவும் சரி.
உள்ளே பகையும் உதட்டிலே உறவுமா?
2260 உள்ளே பகையும் உதட்டிலே உறவும் கள்ளமில்லா மனதுக்கு ஏன்?
உள்ளே பார்த்தால் ஓக்காளம், வெளியே பார்த்தால் மேற்பூச்சு (டம்பம், நிம்மினாம் பூச்சி).
உறங்கின நரிக்கு உணவு கிட்டாது.
உறவிலே நஞ்சு கலக்கிறதா?
உறவு உண்ணாமல் கெட்டது, உடம்பு உடுக்காமல் கெட்டது.
உறவு உறவுதான், பறியிலே கை வைக்காதே.
உறவுக்கு ஒன்பதுபடி ஊருக்குப் பத்துப்படி.
உறவுக்கும் பகைக்கும் பொருளே துணை(காரணம்).
உறவுதான், பயிரிலே கையை வையாதே.
உறவுபோகாமல் கெட்டது, கடன் கேட்காமல் கெட்டது.
2270 உறவுபோல இருந்து குளவிபோலக் கொட்டுகிறதா?
உறி அற மூளி நாய்க்கு வேட்டை.
உறிப்பணம் போய்த் தெருச்சண்டையை இழுக்கிறது.
உறியிலே கட்டித் தூக்கினாலும் அழுகற்பூசினிக்காய் அழுகலே.

உறியிலே தயிரிருக்க ஊரெங்கும் வெண்ணெய்க்கு அலைவானேன்?
உறியிலே வெண்ணெயிருக்க நெய்க்கலைவானேன்?
உறுதியான காரியம் ஒருபோதும் கெடாது.
உறு தீங்குக்கு உதவாதவன் உற்றவனா?
உறை மோருக்கு இடமில்லாத வீட்டில் விலைமோருக்குப் போனது போல்.
உற்சாகம் செய்தால் மச்சைத் தாண்டுவான்.
2280 உற்றகணவனும் ஒரு நெல்லும் உண்டானால் சித்திரம்போலே குடிவாழ்க்கை செய்யலாம்.
உற்ற சினேகிதன் உயிர்க்கு அமிர்தம்.
உற்றது சொல்ல அற்றது பொருந்தும்.
உற்றது சொல்ல ஊரும் அல்ல, நல்லது சொல்ல நாடும் அல்ல.
உற்றார் உதவுவாரோ அன்னியர் உதவுவாரோ?
உற்றார்க்கு ஒரு பிள்ளை கொடான், நமனுக்கு நாலுபிள்ளை கொடுப்பான்.
உற்றார் தின்றால் புற்றாய் விளையும், ஊரார் தின்றால் போராய் விளையும்.
உற்றுப்பார்க்கில் சுற்றம் இல்லை.
உற்றுப்பார்த்த பார்வையிலே ஒன்பதுபேர் பட்டுப் போவார்.
உனக்காச்சு எனக்காச்சு ஒருகை பார்க்கவேண்டும்.
2290 உனக்கு உட்பட்டுப் பின்பாட்டுப் பாடுகிற மனிதர்கள்போல.
உனக்கு ஒட்டுத்திண்ணை போலிருக்கிறான்.
உனக்கு ஒரு பேச்சு, எனக்கு ஒரு மூச்சு.
உனக்கு முதுகு வளைகிறதா?
உனக்கும் பேபே, உன் அப்பனுக்கும் பேபே.
உனக்கு யான் அபயம், எனக்கு நீ அபயம்.
உன் அப்பன் மேலே ஆணை என் மேலே ஆசையாயிருக்கவேண்டும்.
உன் இழவு எடுக்க.
உன் உபசாரம் என் பிராணனுக்கு வந்தது.
உன் எண்ணத்தில் எமன் பூர.

2300 உன் காரியம் முப்பத்திரண்டிலே.

உன் காலை நீயே கும்பிட்டுக் கொள்ளாதே.

உன் கொண்டை குலைய.

உன் சமர்த்திலே குண்டு பாயாது.

உன் சொல்லிலே உப்பும் இல்லை, புளியும் இல்லை, பசையும் இல்லை.

உன் தாலி அறுக்கச்சே ஒரு கூடைத்தாலி ஒருமிக்க அறுக்கவைக்கிறேன்.

உன் தாலி அறுந்து தண்ணீர்ப்பானையில் விழ.

உன் தொடையைப் பாம்பு பிடுங்க.

உன் நெஞ்சில் தட்டிப்பார் (தொட்டுப் பார்).

உன் பாடு கொள்ளைதானே.

2310 உன் பிள்ளையைத் தின்று தண்ணீர் குடிக்க.

உன் பெண்சாதி தாலி பிணத்தின் பேரில் விழ.

உன் பொங்கு குங்க.

உன் மதம் மண்ணாய்ப்போக.

உன் முறுக்குத்திருக்கு எல்லாம் என் உடுப்புக்குள்ளே.

உன் வண்டவாளம் எல்லாம் எனக்குத்தெரியும் (வெளிப்பட்டுப்போச்சு)

உன் வாயிலே சீதேவி.

உன் வாயிலே மண்விழ.

உன்னை அடித்துப் போட்டால் பத்துக்காணிக்கு எருவாகும்.

உன்னை அள்ளத்துள்ளக் கொண்டுபோக.

2320 உன்னை ஒண்டிப்பாடை கட்ட.

உன்னைக் கடலிலே கைகழுவினேன்.

உன்னை கேடு அடிக்க.

உன்னைக் கொடுப்பேனோ ஒருகாசு, உன்னோடு போச்சுது புரட்டாசி.

உன்னைக் கொடுப்பேனோ சென்னைக்கூனி, நீ சுமை சுமந்தல்லவோ கூனிப்போனாய்?

உன்னைப் பாடையிலே வைத்துப் பயணம் இட.

உன்னைப்பிடி என்னைப்பிடி உலகாத்தாள் தலையைப்பிடி

உன்னைப்பிடி என்னைப்பிடி என்றாய் விட்டது.

உன்னைப் பிழிந்தெடுத்துப் போடுவேன்.

உன்னை வஞ்சித்தவனை ஒருபோதும் நம்பாதே.

2330 உன்னை வெட்டிப் பலிபோட.

உன்னோடே பிறந்ததில் மண்ணோடே பிறக்கலாம்.

---

## ஊ.

ஊக்கமது கைவிடேல்.

ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.

ஊசல் ஆடித் தன்னிலையில் நிற்கும்.

ஊசி ஒருமுழத் துணியையாவது கொடுக்கும், உற்றார் அதுதானும் கொடார்கள் (என்னகொடுப்பார்)?

ஊசி கொள்ளப்போய்த் துலாக்கணக்குப் பார்த்தது போல்.

ஊசி கோக்கிறதற்கு ஊரில் துழாவாரம் ஏன்?

ஊசிக் கண்ணிலே ஆகாயம் பார்த்தது போல.

ஊசிக்கு ஊசி எதிரேறிப்பாயுமா?

2340 ஊசிக்குக் கள்ளன் உடனே இருப்பான் (புறப்படுவான், வருவான்).

ஊசி பொன்னானால் என்னபெறும்?

ஊசி போகிறது கணக்குப்பார்ப்பான், பூசனிக்காய் போகிறது தெரியாது.

ஊசிபோலத் தொண்டையும் சாலு (உஷ்ட்டேரி) போல வயிறும்.

ஊசிபோல மிடறும் தாழிபோல வயிறும்.

ஊசி மலிவென்று சீமைக்குப் போகலாமா?

ஊசி முனையிலே நிற்கிறான்.

ஊசிமுனையில் தவம்செய்தாலும் உள்ளதுதான் கிடைக்கும்.

ஊசியின் காதில் ஒட்டகம் நுழையுமா?

ஊசியை ஊசிக்காந்தம் இழுக்கும், உத்தமனை சிநேகம் இழுக்கும்.

2350 ஊணன் கருமம் இழந்தான், உலுத்தன் பெயர் இழந்தான்.

ஊணினால் உறவு, பூணினால் அழகு.

ஊணினால் புத்தி, பூணினால் சாதி.

ஊணுக்கு முந்தவேண்டும், கோளுக்குப் பிந்த வேண்டும்.

ஊணுக்கு முந்து வேலைக்குப் பிந்து.
ஊணும் இல்லை உறக்கமும் இல்லை.
ஊணும் உறக்கமும் ஒத்தார்க்கு ஒத்தபடி.
ஊண் அற்றபோதே உடலற்றது.
ஊண் அற்றபோதே உறவு அற்றது.
ஊண் ஒடுங்க வீண் ஒடுங்கும்.
2360 ஊண்பாக்கு ஒழிய வீண்பாக்கு ஆகாது.
ஊத அறிந்தவன் வாதி, உப்பு அறிந்தவன் யோகி.
ஊதாரிக்குப் பொன்னும் துரும்பு.
ஊதினாற் போம் உறிஞ்சினால் வரும்.
ஊதுகிறசங்கு ஊதினால் விடிகிறபொழுது விடிகிறது.
ஊத்தைதிரண்டு அச்சாணி ஆகுமா?
ஊத்தைதிரண்டு கழுக்காணி ஆச்சுது.
ஊத்தைபோகக் குளித்தவனும் இல்லை, பசிபோகத் தின்றவனுமில்லை.
ஊத்தைபோனாலும் உள்வினை போகாது(தீராது).
ஊத்தைப்பல்லுக்கு விளாங்காய் சேர்ந்தது போல.
2370 ஊத்தைப்பெண் பெற்றபிள்ளை கழுவக் கழுவத் தேயும்.
ஊத்தைவாயன் தேடக் கர்ப்பூரவாயன் தின்ன.
ஊத்தைவாயன் தேட நாற்றவாயன் தின்ன.
ஊமை ஊரைக்கெடுக்கும், ஆமை கிணற்றைக்கெடுக்கும்.
ஊமை ஊரைக்கெடுக்கும், பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்.
ஊமை கண்டகனாப்போல சீமை பட்டணம் ஆகுமா?
ஊமை கண்ட கனாப்போல்.
ஊமைக்கு உளறுவாயன் உற்பாதபிண்டம்.
ஊமைக்குத் தெத்துவாயன் உயர்ந்த வாய்ச்சாலகன்.
ஊமை பிரசங்கம்பண்ண செவிடன் கேட்டதுபோல்.
2380 ஊமையன் கனவுகண்டதுபோலச் சிரிக்கிறான்.
ஊமையன் பாட, சப்பாணி ஆட, செவிடன் கேட்க, குருடன் பார்க்க.
ஊமையன் பேச்சுப் பழகினபேருக்குத் தெரியும்.
ஊமையாயிருந்தால் செவிடும் உண்டு.

ஊமையும் அல்ல, செவிடும் அல்ல.
ஊமையும் ஊமையும் மூக்கைச் சொறிந்தாற்போல.
ஊராரைப் பகைத்து உயிரோடு இருந்தவரில்லை.
ஊராரே வாருங்கள் முதுகு நீர் குத்துங்கள்.
ஊரார் உடைமைக்கு உலை வைக்கிறான்.
ஊரார் உடைமைக்கு ஓயாண்டிபோல் திரிவான்.
2390 ஊரார் உடைமைக்குப் பேயாய்ப் பறக்கிறான்.
ஊரார் எருமை பால் கறக்கிறது, நீயும் ஊட்டுகிறாய் நானும் உண்ணுகிறேன்.
ஊரார் கணக்கு உடையவன் பிடரியிலே.
ஊரார்பண்டம் உமிபோல், தன்பண்டம் தங்கம் போல்.
ஊரார் பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.
ஊரார் வீட்டுச் சோற்றைப்பார், ஒசுபாடி வயிற்றைப் பார்.
ஊரார்வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே.
ஊராளுகிறவனுக்குப் பேலப் புழைக்கடையில்லை.
ஊரிலே கலியாணம் மாரிலே சந்தனம்.
2400 ஊரிலே தாயோழி யென்றால் பேரிலே காலும்பாதியும்.
ஊரிலேயும் போவாள், சொன்னால் அழுவாள்.
ஊரில் ஒருவனே தோழன், ஆருமற்றதே தாரம்.
ஊரில் எளியாரை வண்ணான் அறிவான், சாதிப் பொன் பூண்டாரைத் தட்டான் அறிவான்.
ஊரின் இளக்காரம் வண்ணானுக்குத் தெரியும்.
ஊருகிற அட்டைக்குக் காலெத்தனை யென்றறிவான்.
ஊருக்காகாத பிள்ளை தாய்க்கும் ஆகான்.
ஊருக்காகாதவன் வீட்டுக்கும் ஆகான்.
ஊருக்காகாதது வீட்டுக்கும் ஆகாது.
ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவிலாண்டி.
2410 ஊருக்கு உழைக்கிற கிராமணி.
ஊருக்கு ஓமல், வீட்டுக்கு வயிற்றெரிச்சல்.

ஊருக்குப் பால் வார்த்து உண்கிறாயா, உடம்புக்குப் பால் வார்த்து உண்கிறாயா?
ஊருக்குப் பேரும் உறவின் முறைக்குப் பொல்லாப்பும்.
ஊருக்குப் போனவர் சேதி ஸ்வாமிக்குத் தெரியும்.
ஊருக்கு வேலைசெய்வதே மணியமா யிருக்கிறான்.
ஊருக்கெல்லாம் ஒருவழி உனக்கு ஒருவழியா?
ஊருக்கெல்லாம் சாஸ்திரம் சொல்லுகிற பல்லி கழுநீர் (காடி, கூழ்)ப் பானையில் விழுந்தாற் போல்.
ஊருக் கொரு தேவடியாள் ஆருக்கென்று ஆடுவாள்?
ஊருடன் கூடிவாழ்.
2420 ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
ஊரெங்கும் சம்பை என் பேரோ வம்பை.
ஊரெங்கும் பேர் வீடு பட்டினி.
ஊரெல்லாம் உற்றார், அந்தி பட்டால் பொதுச்சந்தியிலே.
ஊரெல்லாம் சுத்தி, எனக்கென்ன புத்தி, என் பேர் முத்தி.
ஊரெல்லாம் சுற்றி என்பேர் முக்தி.
ஊரெல்லாம் வாழ்கிற தென்று வீடெல்லாம் அழுது புரண்டால் வருமா?
ஊரென்று இருந்தால் சேரியும் (பறைச்சேரியும்) இருக்கும்.
ஊரை உழக்கால் அளக்கிறாள், நாட்டை நாழியால் அளக்கிறாள்.
ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே.
2430 ஊரைப் பகைத்தேனோ ஒருநொடியில் கெட்டேனோ?
ஊரைப்பார்க்கச் சொன்னால் சேரியைப் பார்க்கிறான்.
ஊரை வளைத்தாலும் உற்றதுணை இல்லை, நாட்டை வளைத்தாலும் நல்லதுணை யில்லை.
ஊர் அறிந்த பார்ப்பான்.
ஊர் ஆளுகிற துரைக்குப் பேலப் புழைக்கடையில்லை யாம்.
ஊர் ஆளுகிறவன் பெண்டு பிடித்தால் ஆருடன் சொல்லி முறை யிடுகிறது?
ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.

ஊர் இருக்கிறது ஓடு இருக்கிறது.
ஊர் இருக்கிறது பிச்சை போட, ஓடிருக்கிறது வாங்கிக்கொள்ள.
ஊர் இருக்கிறது வாய் இருக்கிறது.
2440 ஊர் உண்டாகியல்லவோ கிழக்கு மேற்கு உண்டாக வேண்டும்.
ஊர் உண்டு பிச்சைக்கு, குளம் உண்டு தண்ணீருக்கு.
ஊர் ஒக்க ஓடவேண்டும்.
ஊர் ஓட ஒக்க ஓடு, நாடோட நடுவே ஓடு.
ஊர் ஓடச்சே ஒக்க ஓட வேண்டும்.
ஊர் ஓமலானதல்லால் ஒன்றுமறியேன்.
ஊர் ஓரத்திற் கொல்லை, உழுதவனுக்குப் பயிர் இல்லை.
ஊர் கூடிச் செக்குத்தள்ள, வாணியன் எண்ணெய் கொண்டுபோக.
ஊர் கூடிச் செக்குத் தள்ளினாற் போல.
ஊர்க் கடனும் உள்ளங்கைச் சிரங்கும் போல.
2450 ஊர்க்குருவிமேல் இராமபாணம் தொடுக்கிறதா?
ஊர்க்கோழியும் நாட்டுக் கோழியும் கூடில் உரலிலுள்ள புழுங்கலரிசிக்குச் சேதம்.
ஊர் நஷ்டம் ஊரிலே தேர் நஷ்டம் தெருவிலே.
ஊர் நல்லதோ வாய் நல்லதோ?
ஊர்ப்பிள்ளையை முத்தமிட்டால், உதட்டுக்குக் கேடு.
ஊர் வாயைப் படலிட்டு மூடலாமா?
ஊர் வாயை மூட உலை மூடி இல்லை.
ஊர் வாழ்ந்தால் ஒட்டுப் பிச்சைக்கும் வழி இருக்கும்.
ஊழிக்காய்ச்சல் அதிகம் ஆனால் சூனியக்காரன்பாடு கொள்ளை.
ஊழி பெயரினும் கலங்கார் உரவோர்.
2460 ஊழி பேரினும் ஊக்கமது கைவிடேல்.
ஊழிற் பெருவலி ஒன்று உண்டோ?
ஊழும் உற்சாகமும் ஒத்துக்கொள்ள வேண்டும்.
ஊறச்சே துடைக்க வேண்டும்.
ஊறாக்கிணறு உறங்காப்புலி, தீராவழக்கு திருக்கண்ண மங்கை.
ஊறுகாயைக் கடித்துக் கொண்டு ஒரு பானைச் சோற்றை என்னதல்ல என்பான்.

ஊனமில்லான் மான மில்லான்.
ஊன் அற்றபோதே உளமற்றது.
ஊன்றக் கொடுத்த தடி என் உச்சியை உடைக்கிறது
ஊன்றக்கொடுத்த தடி மண்டையைப் பிளந்தது.

---

## எ.

2470 எக்குப் புடவை சோர்ந்தால் கைக்குண்டோ உபசாரம்?
எங்களால் ஒன்றுமில்லை எல்லாம் உங்கள் கர்மம்.
எங்கள் ஆத்துக்காரரும் கச்சேரிக்குப் போய்வந்தார்.
எங்கள் வீட்டுக்குவந்தால் என்னகொண்டு வருகிறாய், உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன தருகிறாய்?
எங்கும் சிதம்பரம் பொங்கி வழிகிறது.
எங்கும் மடமாய் இருக்கிறது, இருக்கத்தான் இடமில்லை.
எங்கே அடித்தாலும் நாய் காலைத் தூக்கும்.
எங்கே அடித்தாலும் நாய்க்குக் காலிலே முடம்.
எங்கே திருடினாலும் கன்னக்கோல் வைக்க ஒரு இடம் வேண்டும்.
எங்கே புகையுண்டோ அங்கே நெருப்புமுண்டு.
2480 எங்கேயோ இடித்தது வானமென்று இருந்தேன், தப்பாது என் தலையிலேயே இடித்தது.
எசமான் வெளியிலே போனால் பசங்களெல்லாம் கும்மாளம் போடுவார்கள்.
எச்சிலைக்கழுவி உன் சுத்தத்திலேவார்.
எச்சிலைக்குடித்தால் தாகம் தீருமா?
எச்சிலைத் தின்று ஏப்பம் இட்டாற்போல.
எச்சிலைத் தின்று பசி தீருமா?
எச்சில் இரக்க அடிக்கும், பற்று பறக்க அடிக்கும்.
எச்சில் இரக்கும், தூமை (தீட்டு) துடைக்கும்.
எச்சில் எடுக்கச் சொன்னார்களா, எத்தனைபேர்கள் சாப்பிட்டதென்று எண்ணச் சொன்னார்களா?
2490 எச்சில் எடுக்கச் சொன்னாங்களா, எத்தனைபேர்கள் சாப்பிட்டதென்று கணக்குக் கேட்கச் சொன்னார்களா?

எச்சில் தின்றாலும் வயிறு நிறையத் தின்னவேண்டும், ஏச்சுக்கேட்டாலும் பொழுது விடியுமட்டும் கேட்கவேண்டும்.
எச்சிற் கலைக்கு இச்சகம் பேசுகிறது.
எச்சிற் கலைக்கு இதம் பாடுகிறது.
எச்சிற் கலைக்கு மண்ணாங்கட்டி ஆதரவு, மண்ணாங்கட்டிக்கு எச்சிற் கலை ஆதரவு.
எச்சிற் கையால் காக்கை ஓட்டமாட்டான்.
எச்சிற் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா?
எடுக்கப்போன சீமாட்டி இடுப்பு ஒடிந்து வீழ்ந்தாளாம்.
எடுக்கிறது எருதுமாட்டுச்சுமை, (தம்பி) படுக்கிறது பஞ்சணைமெத்தை.
எடுக்கிறது சந்தை கோபாலம், ஏறுகிறது தந்தப்பல்லக்கா?
2500 எடுக்கிறது பிச்சை, ஏறுகிறது பல்லக்கு.
எடுக்கிறது வரட்டிச்சுமை, நடக்கிறது தங்குக்குமிழ் பாதரட்சை.
எடுக்குமுன்னே கழுதை இடுப்பு ஒடிந்து விழுந்ததாம்.
எடுத்த அடி மடங்குமா?
எடுத்த சுமை சுமந்தல்லவோ இறக்கவேண்டும்?
எடுத்தாலும் பங்காருப்பெட்டியை எடுக்கவேண்டும், இருந்தாலும் சிங்காரக்கழுவில் இருக்கவேண்டும்.
எடுத்தாளாதபொருள் உதவாது.
எடுத்தாற்போல் தப்பட்டைக்காரன் பட்டான் (செத்தான்).
எடுத்துக் கவிழ்த்துப் பேசுகிறான்.
எடுத்து மூடிவிட்டு எதிரேவந்து நிற்பாள்.
2510 எடுத்துவிட்ட எருது எத்தனைநாள் உழைக்கும்?
எடுத்துவிட்ட நாய் எத்தனை நாளைக்குக் குலைக்கும்?
எடுத்துவிட்ட மாடு எத்தனை தூரம் ஓடும்?
எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு.
எடுப்பாரும் பிடிப்பாரும் உண்டானால் இளைப்பும் தவிப்பும் உண்டாகும்.
எடுப்பாரும் பிடிப்பாரும் உண்டானால் தம்பி களைத்தாற்போல் இருப்பான்.

எடுப்பாரைக் கண்டால் குடம் கூத்தாடும்.
எடுப்பார் கைக்குழந்தை.
எடுப்பார் கைப்பிள்ளை.
எடுப்பார் மழுவை, தடுப்பார் புலியை, கொடுப்பார் அருமை.
2520 எடுப்புண்ட கலப்பை இருந்து உழுமா?
எட்டாக் கனியைப் பார்த்து இச்சித் தென்னபலன்?
எட்டாத பழம் புளிக்கும்.
எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி விட்டது போல.
எட்டாப் பூ தேவர்க்கு எட்டும் பூ தங்களுக்கு.
எட்டாம் பேறு பெண் பிறந்தால் எட்டிப்பார்த்த வீடு குட்டிச்சுவர்.
எட்டிஎட்டிப் பார்த்து குட்டிச்சுவரிலே முட்டிக் கொள்ளலாமா?
எட்டிஎட்டிப் பார்ப்பாரும், ஏணிவைத்துப் பார்ப்பாரும், குட்டிச்சுவராலே குனிந்து நின்று பார்ப்பாரும் உண்டு.
எட்டிக் குட்டி இறக்கிக் காலைபிடித்துக் கொள்ளுகிறது.
எட்டிப் பார்த்தாற்போல கொட்டிக்கொண்டு போகிறான்.
2530 எட்டிக்குப் பால் வார்த்து வளர்த்தாலும் தித்திப்பு உண்டாகுமா?
எட்டி பழுத்தென்ன, ஈயாதார் வாழ்ந்தென்ன?
எட்டிப்பழத்தை இச்சிக்கிறதுபோல.
எட்டிப்பழத்தை இச்சிக்கிறதா?
எட்டி மரமானாலும் பச்சென்று இருக்கவேண்டும்.
எட்டி மரமானாலும் வைத்தவர்க்கு பக்ஷம்.
எட்டியிலே கட்டுமாம்பழம் உண்ணலாமோ?
எட்டியுடனே சேர்ந்த இலவும் தீப்பட்டது.
எட்டினமட்டும் வெட்டும் கத்தி, எட்டாதமட்டும் வெட்டும் பணம்.
எட்டினால் குடுமியைப்(சிகையைப்)பிடி, எட்டா விட்டால் காலைப்பிடி.
2540 எட்டுக் கிழவரும் ஒரு மொட்டைக் கிழவியைக் கட்டிக்கொண்டார்கள்.

எட்டுக் குஞ்சு அடித்தாலும் சட்டிக்கறி ஆகாது.
எட்டுச் சிந்தாத்திரை ஒரு தட்டுதலுக்கு ஒக்கும்.
எட்டுச் செவ்வாய் எண்ணித் தலைமுழுகில் தப்பாமல் தலைபோம்.
எட்டுப்படி அரிசி ஒரு கவாளம் ஏழூர் சண்டை ஓர் சிம்மாளம்.
எட்டு மிரண்டும் தெரியாத பேதை (நாத்தை).
எட்டு வருஷத்து எருமைக்கடா ஏரிக்குப்போக வழி தேடும்.
எட்டேகால் லக்ஷணமே எமனேறும் வாகனமே குட்டிச்சுவரே கூரையில்லா வீடே.
எண் இல்லாதவர் கண் இல்லாதவர், எழுத்து இல்லா தவர் கழுத்து இல்லாதவர்.
எண்சாண் உடம்பிலே எள்ளத்தனை இரத்தம் இல்லை.
2550 எண்சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம்.
எண்சாண் உடம்பும் ஒரு சாணானேன்.
எண்ணத் தொலையாது ஏட்டிலடங்காது.
எண்ணப்பட்ட குதிரை யெல்லாம் மண்ணைப் போட்டுக்கொள்ள, தட்டுவாணிக் குதிரை வந்து கொள்ளுக்கு அழுகிறதாம்.
எண்ணம் அற்ற இராசன் பன்றி வேட்டை ஆடினா ற்போல்.
எண்ணம் எல்லாம் பொய், எமன் ஓலை மெய்.
எண்ணம் எல்லாம் பொய், எழுதிய எழுத்து மெய்.
எண்ணம் எல்லாம் பொய், ஏளிதம் மெய்.
எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண் புத்தி பின் புத்தியே.
எண்ணிச் செய்கிறவன் செட்டி, எண்ணாமற் செய்கிறவன் மட்டி.
2560 எண்ணிச்செய்வது செட்டு, எண்ணாமற் செய்வது வேளாண்மை.
எண்ணித்துணிவது கருமம், துணிந்தபின் எண்ணுவது இழுக்கு.
எண்ணிமுடியாது ஏட்டில் அடங்காது.
எண்ணிய எண்ணம் என்னடி,அண்ணா என்று அழைத்த முறை என்னடி?

எண்ணிய குடிக்கு ஒரு மின்னிய குடி.
எண்ணினேன் கோடி இழப்பதறியாமல்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.
எண்ணெயைத் தேய்க்கலாம் எழுத்தை மறைக்கலாம்.
எண்ணெய் கண்ட இடத்தில் தடவிக்கொண்டு சீப்புக்கண்ட இடத்தில் தலைவாரி (சீவி)க் கொள்ளுகிறது.
எண்ணெய்க் குடத்திலே பிடுங்கி எடுத்தாற்போல.
2570 எண்ணெய்க் குடத்தைச் சுற்றும் எறும்புபோல.
எண்ணெய்க்குடமும் வெறுங்குடமும் முட்டினால் எதற்குச்சேதம்?
எண்ணெய்க்குடம் உடைந்தாலும் ஐயோ, தண்ணீர்க் குடம் உடைந்தாலும் ஐயோ!
எண்ணெய்ச் செலவொழிய பிள்ளை பிழைத்த பாடு இல்லை.
எண்ணெய்ச் சேதமேயல்லாமல் பிள்ளை பிழைக்காது.
எண்ணெய்ப் பிள்ளையோ வண்ணப்பிள்ளையா?
எண்ணெய் முந்துதோ திரி முந்துதோ?
எண்ணெழுத்திகழேல்.
எண்பது வயதுக்குமேல் மண்பவளம் கட்டிக்கொண்டாளாம்.
எண்பது வேண்டாம் ஐம்பதும் முப்பதும் கொடு,
2580 எண் மிகுத்தவனே திண் மிகுத்தவன்.
எதாகுதலம் பேசினால் அகப்பைச் சூனியம் வைப்பேன்.
எதா ராஜா ததா பிரஜா.
எதார்த்தவாதி வெகுஜன விரோதி (மஹா ஜனத்வேஷி)
எதிரி இளப்பமானால் கோபம் சண்டப் பிரசண்டம்.
எதிரிக்கு இளக்காரமாய்ச் சொல்லுகிறதா?
எதிரிக்குச் சகுனத்தடை யென்று மூக்கை அறுத்துக் கொள்ளுகிறதா?
எதிர் தும்மல் எடுத்துக்கொடுக்கும்.
எதிர்த்தவர் மார்புக்கு ஆணியாயிரு.
எதிர்த்தவன் ஏழை என்றால் கோபம் சண்டாளம்.

2590 எதிர்த்த வீடு ஏகாலி வீடு, அடுத்த வீடு அம்பட்டன் வீடு.

எதிர் வீடு ஏகாலிவீடு, பக்கத்து வீடு பணி செய்வோன் வீடு, அடுத்த வீடு அம்பட்டன் வீடு.

எது எப்படிப்போனாலும் தன் காரியம் தனக்கு.

எதுக்கும் உருகாதவன் இச்சைக்குருகுவான்.

எதை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்க வேண்டும்.

எதை வாரிக் கட்டிக்கொண்டு போகிறது?

எத்தனை ஏழை ஆனாலும் எலுமிச்சங்காய் அத்தனை பொன் இல்லாமற் போமா?

எத்தனைதரம் சொன்னாலும் பறங்கி வெற்றிலை தின்னான்.

எத்தனைதான் துலக்கினாலும் பித்தளை நாற்றம் போகுமா?

எத்தனைபுடம் இட்டாலும் இரும்பு பசும் பொன் ஆகுமா?

2600 எத்தனைவித்தை கற்றாலும் செத்தவனைப் பிழைப்பிக்க அறியான்.

எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்.

எத்தாற் பிழைக்கலாம் ஒத்தாற் பிழைக்கலாம்.

எத்திலே பிள்ளை பெற்று இரவலிலே தாலாட்டுகிறது.

எத்தேச காலமும் வற்றாப் பெருஞ்சமுத்திரம்.

எந்த ஆயுதமும் தீட்டத்தீட்டக் கூர்.

எந்த இலை உதிர்ந்தாலும் ஈச்சம் இலை உதிராது.

எந்த நன்றியை மறந்த பாவத்துக்கும் பிராயச்சித்தம் உண்டு, ஒருவர்செய்த நன்றியை மறந்த பாவத்துக்கு மாத்திரம் பிராயச்சித்தம் இல்லை, நரகமே.

எந்த மடத்துக்கு எந்த ஆண்டி சதம்?

எந்தவாக்குப் பொய்த்தாலும் சந்தைவர்க்குப் பொய்யாது.

2610 எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காய் தெங்காளா.

எந்நேரமும் அவள் பேரில் கண்ணாய் இருக்கிறான்.

எமனுக்கு வழி காட்டுவான்.

எமனையும் நமனையும் பலகாரம் பண்ணுவான்.

எமன் ஏறுகிற கடாவாயிருந்தாலும் உழுதுவிடுவான்.

எமன் கையில் அகப்பட்ட உயிர்போல.
எமன் நினைக்கவும் பிள்ளை பிழைக்குமா?
எமன் பிள்ளையைப் பேய் பிடிக்குமா?
எமன் வாயிலிருந்து வந்ததுபோல (மீண்டதுபோல).
எய்கிறவன் எய்தால் அம்பு என்னசெய்யும்?
2620 எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்லது?
எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளினது போல.
எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்.
எரிகிற நெருப்பிலே நெய்விடலாமா?
எரிகிற நெருப்பிலே தண்ணீரை கொட்டலாமா?
எரிகிற நெருப்பை எண்ணெய் விட்டு அடக்கலாமா?
எரிகிற விளக்கானாலும் தூண்டுகோல் ஒன்று வேண்டும்.
எரிகிற வீட்டிற் பிடுங்கினது லாபம்.
எரிகிற வீட்டை அவிக்கக் கிணறு வெட்ட நாள் பார்தது போல.
2630 எரிச்சல் வந்தல்லவோ கடிக்கும், எழுப்பிவிட்டா கடிக்கும்?
எரிந்த பசியில் இழந்த மணியைத் தேடப்போனாற் போல.
எருதின் புண்ணிற்குச் சாம்பல் மருந்து.
எருது ஈன்றது எனு முனம் என்ன கன்று என்றதுபோல.
எருது ஈன்றது என்றால் தோழத்திலே கட்டு என்றதுபோல.
எருதும் எருதும் போராட நடுப்புல்லுத் தேய்ந்தாற் போல.
எருது ஏழையானால் பசு பத்தினித்வம் கொண்டாடும்.
எருது கூடா (ஏறா) விட்டால் பசு பத்தினி தான் (கொண்டாடும்).
எருது கெட்டார்க்கும் எட்டே கடுக்காய், இளம்பிள்ளைத் தாய்ச்சிக்கும் எட்டே கடுக்காய்.
எருது கொழுத்தால் தொழுவத்தில் இராது, பறையன் கொழுத்தால் பாயில் இரான்.

2640 எருது கோபம் கொண்டு பரதேசம் போனதுபோல.
எருதுக்கு நோய்வந்தால் கொட்டாயைச் சுடுகிறதா?
எருதுக்கும் தன் புண் அழற்சி காக்கைக்கும் தன் பசி அழற்சி.
எருது நினைத்த இடத்திலே தோழம் கட்டுகிறதா?
எருது நினைத்த இடத்திலே புன் செய்க்குழுகிறதா?
எருது நோயை நினைக்கும், காக்கை பசியை நினைக்கும்.
எருது நோய் காக்கை அறியுமா?
எருது நோய் காக்கைக்குத் தெரியுமா?
எருது மறைவிற் புல்லுத் தின்கிறாயா?
எருதும் வண்டியும் ஒத்தால் மேடுபள்ளம் ஏது?
2650 எருது வாங்குமுன்னே புன்செய்க்கு உழுஎன்கிறாய்.
எருமை இருந்தல்லவோ பால் கறக்கவேண்டும்?
எருமைக்கடா என்றாலும் குழந்தைக்குப் பால் ஒரு பீர் இல்லையா என்கிறான்.
எருமைக்கொம்பு நனைகிறதற்குள்ளே எழுபதுதரம் மழை வருகிறது.
எருமைக் கோமயம் எக்கியத்திற்கு ஆகுமா?
எருமைச்சாணி ஓமத்திற்கு ஆகுமா?
எருமை மாட்டின்மேல் எத்தனை சூடு இருந்தாலும் தெரியாது, பசுமாட்டின்மேல் ஒரு சூடு இருந்தாலும் தெரியும்.
எருமை மாட்டின்மேல் மழை பெய்ததுபோல.
எருமைமாட்டைத் தண்ணீரில் போட்டுக்கொண்டு விலை பார்க்கிறது.
எருமை முட்டைப்புராணம் வாசிக்கிறான்.
2660 எருமை மூத்திரம் எக்கியத்திற்கு ஆகுமா?
எருமையிலும் வெள்ளாடு ஏறக் கறக்குமா?
எருமை வாங்குமுன் ஏன் விலை கூறுகிறாய்?
எருவுக்குப் போனவன் இளையாளைக் கைப்பிடித்தாற் போல.
எலி அம்மணத்தோடோ போகிற தென்கிறான்.
எலி அழுதால் பூனை விடுமா?

எலி அழுதுபுலம்பினாலும் பூனை பிடித்தது விடாது.
எலி அறுக்கும் தூக்கமாட்டாது.
எலி இருக்கிற இடத்தில் பாம்பு இருக்கும்.
2670 எலி கட்டப் பாம்பு குடிகொள்ள.
எலிக்கு அனுகூலம் பாம்பு பிடாரனுக்கு அஞ்சுதல், எளியார்க்கு அனுகூலம் வலியார் ராசனுக்கு அஞ்சுதல்.
எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம்.
எலிக்குப் பயந்து வீட்டைச் சுட்டதுபோல.
எலிக்குப் பயப்பட்டு வீட்டில் தீயைவைத்ததுபோல.
எலிக்குப் பிராணவஸ்தை பூனைக்குக் கொண்டாட்டம்.
எலிக்கு மணியம் சுவரை அறுக்கிறதுதான்.
எலி தலையிலே கோடாலி விழுந்ததுபோல.
எலி தலையிற் கோபுரம் இடிந்து விழுந்தாற்போல.
எலி பூனைக்கு சலாம் பண்ணுவதுபோல.
2680 எலி பூனையை வெல்லுமா?
எலிப்பிழுகை இறப்பில் இருந்தென்ன, வரப்பில் இருந்தென்ன?
எலியும் பூனையும் இணைந்து விளையாடினதுபோல.
எலியும் பூனையும் போல் இருக்கிறது (வாழ்கிறது).
எலியைக்கண்டு பூனை ஏக்கம் அடையுமா?
எலியைக்கண்டு பூனை ஏங்கி ஏங்கிக் கிடக்குமோ?
எலியோபூனையோ சரசரென்கிறது, என்னடி சிறுக்கி பயமுறுத்துகிறாய்?
எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.
எலி வீடுகட்டப் பாம்பு குடிகொள்ளும்.
எலி வேட்டைக்குத் தவிலடிப்பா?
2690 எலி வேட்டையாடிடத் தவில் வேணுமா?
எலுமிச்சங் காய்க்குப் புளிப்பு ஏற்றுகிறது போல.
எலுமிச்சஞ் செடிக்கு எருப் போட்டாற் போல.
எலும்பு இல்லா நா (நாக்கு) எல்லாம் பேசும்.
எலும்பு கடிக்கிற நாய் இரும்பைக் கடிக்குமா?
எலும்பு கடிக்கிற நாய்க்குப் பருப்புஞ்சோறும் ஏன்?
எலும்பைக் கடிப்பானேன், சொந்தப் பல்லுப்போவானேன்?

எலும்பைத் தின்று சதையைக் கொடுத்து வளர்த்தாள்.
எல்லப்ப செட்டி லக்க ஏக லக்க.
எல்லா ஓட்டும் குல்லாவிலே.
2700 எல்லாத் தலையிலும் எட்டு எழுத்து, பாவி என் தலையிலே பத்து எழுத்து.
எல்லாத் தாட்டோட்டும் என் குல்லாவுக்குள்ளே இருக்கிறது.
எல்லாத்துக்கும் ஒரு அழுகை அழுங்கள்.
எல்லாத்துக்கும் உண்டு இலையும் பழுப்பும்.
எல்லாத்துக்கும் ஒரு சொட்டு உண்டு.
எல்லாத் தேசத்துக்கும் இந்தியா பார்த்திட்டதே பிச்சை.
எல்லா மசகமும் சாயந்தரத்திற்றான் வருகிறது.
எல்லாம் அறிந்தவனும் இல்லை, ஒன்றும் அறியாதவனும் இல்லை.
எல்லாம் அறிந்தும் கழுநீர்ப்பானையில் கையிடுகிறதா?
எல்லாம் இருக்கிறது பெட்டியிலே, இலைக்கறி கடையச் சட்டி இல்லை.
2710 எல்லாம் ஏறி இளைத்த குதிரையின்மேல் தம்பி பொறப்பட்டம் கட்டிப் புறப்பட்டான்.
எல்லாம் தெரிந்த நாரி, நிமிட்டி ஏற்றுஅடி விளக்கை.
எல்லாம் சரியென்று எண்ணலாமா?
எல்லாம் சொல்லுமாம் பல்லி, கழுநீர்ப் பானையில் விழுமாம் பல்லி.
எல்லாம் மாயை என்கிறதைக் கண்டேன்.
எல்லாருக்கும் உண்டு இலையும் பழுப்பும்.
எல்லாருக்கும் உண்டு ஒவ்வொன் றெளிது,
எல்லாருக்கும் சனி துரும்பு போல, எனக்குச் சனிமலை போல.
எல்லாருக்கும் சொல்லுமாம் பல்லி, தான்போய்க் காடிப்பானையில் விழுமாம் பல்லி.
எல்லாரும் ஆளின் கீழே நுழைந்தால். இவன் ஆளின் நிழலின் கீழே நுழைவான்.
2720 எல்லாரும் என்மண்டையில் பொங்கித் தின்கிறார்கள்.

எல்லோரும் நெல்லை உலர்த்தினார்கள், எலி தன் வாலை உலர்த்திற்று.
எல்லாரும் ஏறி இளைத்த குதிரைமேல் சாஸ்திரியார் ஏறிச் சறுக்கிவிழுந்தார்.
எல்லாரும் கப்பல் ஏறியாயிற்று, இனி அம்மானார் பொற் பட்டம் கட்டப் போகிறார்.
எல்லாரும் கூடி எனக்குக் குல்லா (நாமம்) போட்டார்கள்.
எல்லாரும் கூடி குல்லாவைத் தந்தார்கள்.
எல்லாரும் பல்லக் கேறினால் பல்லக்கை யார் தூக்குகிறது.
எல்லாரும் பாக்கு இவன் ஒரு தோப்பு.
எல்லாரும் மனிதரா, கல்லெல்லாம் மாணிக்கமா?
எல்லார் வீட்டுத் தோசையிலும் ஓட்டை.
எல்லாவேலையும் செய்வான், செத்தால் பிழைக்கமாட்டான்.
2730 எல்லை பாழ்பட்டாலும் கொல்லைக் கடமை விடார்.
எவற்றைக் காவாதே போனாலும் நாவைக் காக்க வேண்டும்.
எவன் ஆகிலும் தான் சாக மருந்து உண்பானா?
எழுத வழங்காத வாழ்க்கை கழுதை புரண்ட களம்.
எழுத வாசிக்கத் தெரியாமற் போனாலும் எடுத்துக் கவிழ்க்கத் தெரியும்.
எழுதாக் கடனுக்கு அழுதால் தீருமா?
எழுதாப் பொறிக்கு அழுதால் தீருமா?
எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்.
எழுதியவிதி அழுதால் தீருமா?
எழுதி வழங்கான் வாழ்க்கை கழுதை புரண்டகளம்.
2740 எழுதுகிறது பெரிதல்ல, இனம் (இன்னம்) அறிந்து சேர்க்கிறது பெரிது.
எழுதுவது அருமை, எழுதினதைப் பழுதற வாசிப்பது அதிலும் அருமை.
எழுத்தறச் சொன்னாலும் பெண் புத்தி பின் புத்தி.
எழுத்து அறிந்தமன்னன் கிழித்து எறிந்தான் ஓலை.
எழுத்து அறிந்த வண்ணான் குறித்து எறிந்தான் ஓலை.

எழுத்துக்குப் பால்மாறின கணக்கனும் உடுக்கைக்குப் (உதட்டுக்குப்) பால்மாறின (பல்காட்டின) தாசியும் வருத்தம் அடைவார்கள்.
எழுந்தருளும் கோவிலுக்கு விளக்குப் பிடிக்க.
எழுந்திருப்பாள் கால் இல்லை.
எழுபது சென்றாலும் பறை ஏவினால்தான் செய்யும்
எழுபது பேரைக் கொன்ற படுநீலி.
2750 எளியவள் பிள்ளை ஆனாலும் செய்யவேண்டிய சடங்கு செய்யவேண்டும்.
எளியவனுக்குப் பெண்டாய் இருக்கிறதிலும் வலியவனுக்கு அடிமை ஆகிறது நல்லது.
எளியவனைக்கண்டு புளியங்காய் பறித்தாற்போல்.
எளியவனைக்கண்டு வாயால் ஏய்க்கிறான்.
எளியவன் பெண்டாட்டி எல்லார்க்கும் மைத்துனி.
எளியாரை எதிர் இட்டுக்கொண்டால் பிராணஹானி.
எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்.
எளியாரை வலியா ரடித்தால் வலியாரை வாசற்படி அடிக்கும்.
என் அத்தனையை மலை அத்தனை ஆக்குகிறது.
எள்ளிலும் சிறிய இலை என்ன இலை, விடத்தாரி இலை.
2760 எள்ளு என்கிறதற்கு முன்னே எண்ணெய் கொண்டு வருகிறான்.
எள்ளு என்பதற்கு முன்னே எண்ணெய் எங்கே என்கிறான்.
எள்ளு குறுணி எலி மூக்கு குறுணி.
எள்ளுக்காய் பிளந்த விவகாரம்.
எள்ளுக்காய் பிளந்தாற்போல பேசவேண்டும்.
எள்ளுக்காய் முள்ளுத் தெறிப்பதுபோல.
எள்ளுக்கு ஏழு உழவு, கொள்ளுக்கு ஓர் உழவு.
எள்ளுக்கு ஏழு உழவு உழுகிறவேளை வேளாளா கொள்ளுக்கு ஓர் உழவு உழுது பயிர் செய்.
எள்ளுக்கு ஏழு உழவு கொள்ளுக்கு ஓர் உழவு.
எள்ளுக்குத் தக்க எண்ணெய்,எள்ளுக்குத் தக்க பிண்ணாக்கு.

2770 எள்ளுக்குப் புள்ளுவரும் எச்சிற்கு எலும்பு வரும்.
எள்ளுக்குள் எண்ணெய் போல.
எள்ளுக்குள் எண்ணெய் போல் எங்கும் நிறைந் திருக்கும்.
எள்ளுதான் எண்ணெய்க்கு உலருகிறது, எலிப் பிழுக்கை என்னத்துக்கு உலருகிறது?
எள்ளுடன் ஏதோ காயு தென்பார்கள்.
எள்ளுப் போட்டால் எள்ளெடுக்கப் போகாது.
எள்ளும் கரும்பும் இறுக்கினால் பயன் தரும்.
எள்ளும் தண்ணீரும் கரத்திலேந்திச் சொல்லுகிறாய்.
எள்ளும் தண்ணீரும் விட்டுத் தத்தம் பண்ணிவிட்டேன் (கை கழுவினேன்).
எள்ளும் பச்சை அரிசியும்போல் இருக்க வேண்டும்.
2780 எள்ளுவிழுந்தால் எடுக்க மகாசேனை, இடறி விழுந்தால் எடுக்க மனிதர் (ஆள்) இல்லையே.
எள்ளை நீக்கிக்கொண்டுவரப்போன பேய் எண்ணெய் கொண்டுவர இசைந்தது போல.
எறிகிறது முயலுக்குப் படுகிறது பற்றைக்கு.
எறிவார்கையிலே கல்லைக் கொடுக்கிறதா?
எறிவானேன் சொறிவானேன்?
எறும்பின் கண்ணுக்கு எருமை மூத்திரம் ஏகப்பெரு வெள்ளம்.
எறும்பின் கண் அதன் அளவுக்குப் பெரிது, ஆனையின் கண் அதன் அளவுக்குச் சிறிது.
எறும்பு ஊர இடங்கொடுத்தால் எருதும் பொதியும் உள்ளே செலுத்துவான்.
எறும்பு ஊரக் கல்குழியும் (தேயும்).
எறும்பு எடுத்துப் போவதற்குத் தடியெடுத்து நிற்கிறது, பெரிய பூசணிக்காய்போகிறது தெரியாது.
2790 எறும்பு எண்ணாயிரம் கோடிக்குத் தெரியும்.
எறும்பு கடிக்கப் பொறுக்காதா?
எறும்புக்குக் கொட்டாங்கச்சித் தண்ணீர் சமுத்திரம்.
எறும்புக்கும் கையால் எண்சாண் உடம்பு.
எறும்புப் புற்றில் பாம்பு குடி கொள்வதுபோல.

எறும்புமுதல் எண்ணாயிரம் கோடிக்கும் தெரியும்; காப்பாற்றுகிற நாராயணன் என்னைக் காப்பாற்ற மாட்டானா?
எறும்புமுதல் எண்ணாயிரம் கோடியும் அழுதது.
எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்யும்.
எறும்பும் தன் கையால் எண் ஜாண்.
எனக்கு அட்டமத்துச் சனி.
2800 எனக்கு ஊணும் இல்லை உறக்கமும் இல்லை.
எனக்குக் கட்டின லிங்கத்தைக் குழிப்பாக்கு விளையாடுவேன்.
எனக்குக் கொடுக்கிறதைக் கொடுத்தால் போகிறேன்.
எனக்குப் பாக்குப் பிடிக்கப் பார்க்கிறான்.
எனது நாட்கள் எல்லாம் ஊமை கண்ட கனாப்போல் ஆயின.
என் அப்பன் கூத்தாடி எனக்கொன்றுந் தெரியாது பிச்சைபோடு.
என் இளக்காரம் விளக்காய் எரிகிறது.
என் ஈரலைக் கருக்கு அரிவாள்கொண்டு அறுக்கிறது.
என் எச்சிலைக்கழுவி உன் சுத்தத்திலே வார்க்க.
என் காரியம் எல்லாம் நந்தன் படைவீடாய்ப் போயிற்று.
2810 என் குடிகெட்டதும் உன் குடிகெட்டதும் பொழுது விடிந்தால் தெரியும்.
என் குடுமி அவன் கையில் அகப்பட்டுக் கொண்டது.
என் கையிலே எலும்பு இல்லையா?
என் கைவெல்லம் தின்கிறதா?
என் சீட்டுக் கிழிந்து போனாலல்லவோ சாவு வரும்?
என் தோலைச் செருப்பாய்த் தைத்து போடுவேன்.
என் பிழைப்பு (பேச்சு, பவிஷு) சிரிப்பாய்ச் சிரிக்கிறது (காரியுமிழ்கிறது) தெருவிலே.
என் பேரில் தப்பிருந்தால் என்னை மொட்டை அடித்துக் கழுதைமேல் ஏற்றிக்கொள்.

என் மகள் வாரத்தோடே வாரம் முழுகுவாள், என் மருமகள் தீபாவளிக்குத் தீபாவளி முழுகுவாள்.

2820 என் மருமகளுக்கு வேப்பெண்ணெயாம் தூக்கெண்ணெய், விளக்கெண்ணெயாம் தலைக்கெண்ணெய்.

என் முகத்திலே கரி தடவாதே (சாணிபூசாதே).

என் முகத்திலேபவிஷு இல்லை, கையிலே பணமில்லை.

என் முகத்திற் கரி பூசினாயே.

என் முதுகுத்தோல் உனக்குச் செருப்பாய் இருக்கிறது.

என் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டுவருகிறாய், உன் வீட்டுக்கு வந்தால் என்ன கொடுக்கிறாய்?

என்று நின்றும் பொன்றுவர் ஓர் நாள்.

என்றும் இடிகுலைச்சல் எப்பொழுதும் நீங்குவதில்லை.

என்றும் பயப்படுதலிலும் எதிரேபோதல் உத்தமம்.

என்றைக்கும் போடாத லட்சுமி இன்றும் போடவில்லை, தினம் போடுகிற தேவடியாளுக்கு இன்றைக்கு என்னகேடு வந்தது?

2830 என்ன சொன்னாலும் என் புத்தி போகாது.

என்னடா ஒன்றொன்றாய்க் குருவிபோலக் கொறிக்கிறாய்?

என்னடா குச்சுக் கட்டிப் பேசுகிறாய்?

என்னடா கெட்டுப் போகிறாய் என்றால், இன்னமும் கெட்டுப் போகிறேன் பந்தயம் போடு என்கிறான்.

என்னடா சவுக்கங் கட்டிப் பேசுகிறாய்?

என்னடா தாதா, புரட்டாசி மாதம் முப்பதும் ஒரு கந்தாயமா?

என்னடி அம்மா தெற்கத்தியாள், எந்நேரம் பார்த்தாலும் தொள்ளைகக்காது?

என்ன தின்றாலும் அதற்குமேலே நாலு பேரீச்சம் பழம் தின்ன எல்லாம் அடிபடும் (செரிக்கும்).

என்ன மாயம் இடைச்சிமாயம், மோரோடு தண்ணீர் கலந்த மாயம்.

என்னவாய்ச் சொல்லி இதமாய் உரைத்தாலும் கழுதைக்கு உபதேசம் காதில் ஏறாது.

2840 என்னாலான உப்புத் திருமஞ்சனம்.
என்னிலும் மதிகெட்டவன் என்னை வந்து மாலையிட்டான்.
என்னுடைய வீட்டுக்குப் பூவாய் வரப் பொன்னுந்துரும்பாச்சுது.
என்னைக் கண்டால் சணலுக்குள்ளே ஒளிக்கிறாய், என் பெண்சாதியைக் கண்டால் சட்டிக் குள்ளே ஒளிக்கிறாய்.
என்னைக் கலந்தவர்க ளென்றாலும் கை நிறையப் பெண்ணைக் கொடுத்தால் புணர்ந்து விடுவேன்.
என்னைக் கெடுத்தது நரை, என் மகளைக் கெடுத்தது
என்னை நம்பாதே தாலி வாங்காதே.
என்னைப் பவிஷு ஆற்றுகிறான்.
என்னைப் போல குரலும் என் அக்காளைப் போல ஒயிலும் இல்லை என்கிறதாம் கழுதை.
என்னை விடைந்தால் உன்னை விடைவேன் அம்மலாமா?

---

## ஏ.

2850 ஏகமும் கெட்டவனே (செத்தவனே), ஏறடா பாடையிலே.
ஏகாதசிக்கு மா இடித்தாற் போல.
ஏகாதசித் திருடியை ஏற்றடா ரதத்தின் மேல்.
ஏகாதசி மரணம் துவாதசி தகனம்.
ஏகாதசி மரணம் முத்தி யென்று நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகிறதா?
ஏகாதசி விரதம் என்று நாக்கைப் பிடுங்கிக் கொள் வார்களா?
ஏகாலி வாகனம் பொதி சுமந்தாற் போல.
ஏகோதிஷ்டக்காரனுக்குச் சபிண்டிக்காரன் சாக்ஷி.
ஏச்சிலும் பேச்சிலும் வல்லவனே.
ஏடாகூடக்காரனுக்கு வழி எங்கே என்றால், போகிறவன் தலைமேலேதான்.
2860 ஏடாகூடம் பேசினால் அகப்பை சூனியம் வைப்பேன்.

ஏடாகூடத்திற்கு வழி யெப்படி என்றால், போகிறவன் தலையில் பொத்தென்று அடித்தான்.
ஏடு அறியாதான் பீடு பெறாதான்.
ஏட்டில் அடங்காது எண்ணத் தொலையாது.
ஏட்டில் சர்க்கரை யென்றெழுதி நக்கினால் தித்திக்குமா?
ஏட்டுச் சுரைக்காயோ வீட்டுச் சுரைக்காயோ?
ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா?
ஏணிக் கொம்புக்குக் கோணற் கொம்பு போடலாமா?
ஏணி தோணி அண்ணாவி நாரத்தங்காய்.
ஏணியைத் தள்ளிப் பரண்மேல் ஏறலாமா?
2870 ஏணுக்குக் கோணும், ஏட்டிக்குப் போட்டியும்.
ஏணைக் கழிக்குக் கோணற்கழி வெட்டுகிறதா?
ஏண்டா (ஏன் அடா) கருடா சுகமா? இருக்கிற இடத்தில் இருந்தால் சுகம்.
ஏண்டா தம்பி ரகுநாதா, இதற்குள்வந்து புகுந்து கொண்டாய்.
ஏண்டா தென்ன மரத்தில் ஏறினாய் என்றால், கன்றுக் குட்டிக்குப் புல் பிடுங்க என்கிறான் தென்ன மரத்திலே புல் ஏதடா என்றால், அது தானே கீழே இறங்குகிறேன் என்கிறான்.
ஏண்டா பட்டப்பகலில் திருடுகிறாய்? என் அவசரம் உனக்குத் தெரியுமா?
ஏண்டா புளியமரத்தில் ஏறினாய் என்றால், பூனைக் குட்டிக்குப் புல் பறிக்க என்கிறான்.
ஏண்டா முடிச்சு அவிழ்க்கிறாய்? என் பசி உனக்குத் தெரியுமா?
ஏண்டி (ஏன் அடி) சிறுக்கி புல்லு ஆச்சா? ஒரு நொடிக்கு முன் கட்டாச்சே.
ஏண்டி பாட்டி மஞ்சள் குளித்தாய்? பழைய நினைப்பு அடா பேராண்டி.
2880 ஏண்டி பெண்ணே இளைத்தாய் குதிர்போல?
ஏண்டி பெண்ணே குந்தியிருக்கிறாய்? சோறு பற்றாமல்.
ஏண்டி பெண்ணே சோர்ந்திருக்கிறாய்? சோறு பத்தியம்.

ஏது பிரியம்? இல்லாதது பிரியம்.
ஏதும் அற்றவனுக்கு இரண்டு பெண்டாட்டி ஏன்?
ஏதென்று கேட்பாரு மில்லை, எடுத்துப் பிடிப்பாரு மில்லை.
ஏமாந்தால் நாமம் போடுவான், இளைப்பு ஒட்ட வில்லை.
ஏய்ச்சால் மதினியை ஏய்ப்பேன், இல்லாவிட்டால் பரதேசம் போவேன்.
ஏரி உடைகிறதற்கு முன்னே அணைபோட வேண்டும்.
ஏரி நிறைந்தால் கரை கசியும்.
2890 ஏரி பெருகில் எங்கும் பெருக்கு.
ஏரி மிதந்தால் இடையணை மதியாது.
ஏரியின் நீரைக் கட்டுதல் அரிது, உடைத்தல் எளிது.
ஏரியின்மேல் கோபித்துக் கால் கழுவாமல்போனது போலும்.
ஏரியோ தண்ணீர், சூரியதேவா?
ஏரியோடு பகைகொண்டு சௌசம் செய்யாதிருக்கிறதா?
ஏருழுகிறவன் இளப்பமானால் எருது மச்சான் முறை (மைத்துனம்) கொண்டாடும்.
ஏரை அடித்தேனோ கூழை அடித்தேனோ?
ஏர் உழுகிறபிள்ளை இளைத்துப் போகிறது, பரியம் போட்ட பெண்ணைப் பார்த்துவளர்.
ஏர்பிடித்தவன் என்னசெய்வான், பானைபிடித்தவள் பாக்கியம்.
2900 ஏர் பிடித்தவன் ஏழை, பானைபிடித்தவள் பாக்கியம்.
ஏலவே தொலைந்தது எங்களைத் தொட்டகர்மம்.
ஏலேலே சிங்கன் பொருள் ஏழுகடலிற் போனாலும் திரும்பும.
ஏலேலம்! ஏலேலம்! எருமைச்சாணி காய்கிறது.
ஏவற்பேய் கூரையைப் பிடுங்கும்.
ஏவாமக்கள் மூவாமருந்து.
ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல், செய்கிறவனுக்குத் தலைச்சுமை.

ஏழாம்பொருத்தம்.
ஏழாயிரம் பொன் பெற்ற குதிரை இறப்பைப் பிடுங்கு கையில் குருட்டுக்குதிரை கோதுமை ரொட்டிக்கு வீங்கினதாம்.
ஏழு அறைகட்டி அதில் வைத்தாலும், ஒருதாழறையில் சோரம்போவாள்.
2910 ஏழை அடித்தேனோ கூழை அடித்தேனோ.
ஏழை அழுத கண்ணீர் கூரியவாள் ஒக்கும்.
ஏழை என்றால் எவர்க்கும் எளிது.
ஏழைக்கும் பேழைக்கும் காடுகாள் அம்மை.
ஏழைசொல் (பேச்சு) அம்பலம் ஏறாது.
ஏழை பாக்குத் தின்ன, எட்டுவீடு அறியவேண்டுமா?
ஏழைப் பிள்ளைக்கு எவர்களும் துணை.
ஏழைப் பிள்ளைக்குத் தெய்வமே துணை.
ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.
ஏளிதம்பேசி இவ் வேடம் ஆனேன்.
2920 ஏற ஆசைப்பட்டால் சாணாரப்பிறவி வேண்டும்.
ஏற ஆசைப்பட்டால் சாணானாய்ப் பிறக்கவேண்டும்.
ஏற ஒன்று இறங்க ஒன்று, எனக்கொன்று உனக்கொன்று, இன்னொன்றிருக்குது தந்தால் தா தராவிட்டால் போ.
ஏறச்சொன்னால் எருதுக்குக்கோபம், இறங்கச்சொன்னால் நொண்டிக்குப்கோபம்.
ஏறப்படாத மரத்திலே எண்ணப்படாத மாங்காய் (எண்ணாயிரங்காய்).
ஏறவிட்டு ஏணியை வாங்கினாற்போல.
ஏறாதவார்த்தை வசையோடொக்கும்.
ஏறாமடைக்கு நீர்பாய்ச்சுகிறது போல.
ஏறிய கொக்கென்று இருந்தையோ கொங்கணவா?
ஏறின கொம்பால் இறங்கவேண்டும்.
2930 ஏறினால் எருதுக்குக் கோபம், ஏறாவிட்டால் மொண்டிக்குக் கோபம்.
ஏறுகிற குதிரையிலும் உழவுமாடு அதிக உத்தமம்.
ஏறுகிறவன் சூத்தை எத்தனைதூரம் தாங்கலாம்?
ஏறு நெற்றி சூறுதலை எதிர்க்க வந்தால் ஆகாது.
ஏறுமாறாய்ப் பேசுகிறதா?

ஏறும் தேமல் இறங்கும் படர்தாமரை கூடும்புருவம் குடியைக்கெடுக்கும்.
ஏற்கவே மாமி பேய்க்கோலம், அதிலும் கொஞ்சம் மாக்கோலம்.
ஏற்கனவே வருகிற விக்கினங்களைத் தடுக்கவேண்டும்.
ஏற்கை வாசனை சேர்க்கை வாசனை.
ஏற்பது இகழ்ச்சியாகும்.
2940 ஏற்றக்கோலுக்குப் பிடித்தால் அரிவாட்பிடிக்குவரும்.
ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டில்லை.
ஏனவாயனைக் கண்டாளாம், ஏணிப்பந்தம் பிடித்தாளாம்.
ஏன் என்பாரும் இல்லை, எடுத்துப்பார்ப்பாரும் (விழிப்பாரும்) இல்லை.
ஏன் காணும் தாதரே ஆண்டிபுகுந்தீர்? இதுவுமொரு மண்டலம் பார்த்துவிடுவோம்.
ஏன் கொழுக்கட்டை சவுக்கிட்டாய்? ஒருகாசு வெல்லம் இல்லாமல் சவுக்கிட்டேன்.
ஏன் பறையா என்கிறதை விட வள்ளுவப்பறையா என்கிறது மேல்.

---

## ஐ.

ஐங்கலக் கப்பியில் நழுவின கப்பி.
ஐங்காதம் போனாலும் அகப்பை அரைக்காசு.
ஐங்காதம் போனாலும் அறிமுகம் வேண்டும்.
2950 ஐங்காதம் போனாலும் தன் பாவம் தன்னோடே.
ஐங்காயம் இட்டு அரைத்துக்கரைத்தாலும் தன்நாற்றம் போகாதாம் பேய்ச்சுரைக்காய்க்கு.
ஐந்துநெல் அடர்ந்தது சுற்றம்.
ஐந்து சிட்டுக்கு இரண்டு காசு விலை.
ஐந்துதரம் ஈரடிகளையும் ஒருங்க எடுத்துவைத்தல்.
ஐந்து வயதில் ஆதியை ஓது.
ஐந்து விரலும் ஐந்து கன்னக்கோல்.
ஐப்பசிக்கும் கார்த்திகைக்கும் மழை இல்லாவிட்டால், அண்ணனுக்கும் சரி தம்பிக்கும் சரி.
ஐப்பசிமாதத்து எருமைக்கடாவும் மார்கழி மாதத்து நம்பியானும் சரி.
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

ஐப்பசி மாதத்து வெயிலில், அன்று உரித்த தோல் அன்று காயும்.

2960 ஐப்பசிமாதம் அழுகைத்தூற்றல், கார்த்திகைமாதம் கனத்தமழை.

ஐம்பதிலே அறிவு, அறுபதிலே அடக்கம், அறுப துக்குமேல் ஒன்று மில்லை.

ஐம்பது வயதானவனுக்கு ஐந்துவயதுப்பெண்ணா?

ஐயங்காரும் தொத்துக் கொடுப்பார்.

ஐயப்பட்டால் பைய நட.

ஐயப்பன் குதிரையை வையாளி விட்டகதை.

ஐயப்பா கையை விடு.

ஐயமானகாரியத்தைச் செய்யல் ஆகாது.

ஐயம் ஏற்றும் அறிவே ஓது.

ஐயம் தீர்ந்தும் நெஞ்சாரவில்லை.

2970 ஐயும் புகினும் செய்வன செய்.

ஐயர் இடங்கொடுத்தாலும், அடியார்கள் இடங்கொடார்கள்.

ஐயர் என்பவர் துய்யர் ஆவர்.

ஐயர் கொண்டுவருகிற பிச்சைக்கு அறுபத்தாறு பை.

ஐயர் வருகிறவரையில் அமாவாசை நிற்குமா?

ஐயனாரே வாரும், கடாவைக் கொள்ளும்.

ஐயனார் கோவிலிலே ஆனை பிடிக்கவேண்டும்.

ஐயனார் கோவில் செங்கல் அத்தனையும் தெய்வம்.

ஐயனார் கோவில் மண்ணை மிதித்தவர் அத்தனைபேரும் பத்திரகாளி.

ஐயனார் படையில் குயவனார் பட்டதுபோல்.

2980 ஐயன் அமைப்பை ஆராலும் தள்ளக் கூடாது.

ஐயா கதிர்போல அம்மா குதிர்போல.

ஐயாவுக்குவித்தையில்லை அம்மாளுக்குக் கர்வமில்லை.

ஐயோ என்றால் ஆறுமாசத்துப் பாவம் சுற்றும்.

ஐவர்க்கும் தேவி அழியாத பத்தினி.

---

## ஒ.

ஒக்கப்பிறந்த தங்கை ஓலமிட்டழச்சே, ஒப்பாரித் தங்கைக்கு சிற்றாடையாம்.

ஒச்சியம் இல்லாத ஊரிலே பெண்வாங்கின கதை.
ஒடிந்த கோல் ஆனாலும் ஊன்றுகோல் ஆகும்.
ஒடுக்கம் சிதம்பரம்.
ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டை தாழ்ப்பாள் போடு.
2990 ஒட்டி உணர்ந்து உருவினகோல் போல்.
ஒட்டி உணர்ந்து ஊமத்தங்காயாய்ப் போய்விட்டான்.
ஒட்டிக்கொண்டு வந்தாலும் தட்டிக் கழிக்கிறான்.
ஒட்டிய சீதேவி நெட்டியோடே போம்.
ஒட்டினாலும் உழக்குப் பீர்ச்சென்கிறதா?
ஒட்டினால் தொட்டிலும் கொள்ளும், ஒட்டாவிட்டால் கட்டிலும் கொள்ளாது.
ஒட்டுத்திண்ணை நித்திரைக்கேடு.
ஒட்டைக்குச் சுளுவுபட்டாற்போல (சுளவு மீட்டாற் போலே).
ஒட்டைக்குப் பளுவு ஏற்றுகிறதுபோல.
ஒண்டவந்த எலி உரம்பெற்றது, அண்டியிருந்த பூனை ஆலாய்ப் பறக்கிறது.
3000 ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்தினது போல.
ஒண்டிக்காரன் பிழைப்பும் வண்டிக்காரன் பிழைப்பும் ஒன்று.
ஒதிபெருத்தால் உரலாமா?
ஒதிபெருத்து என்ன, உபகாரம் இல்லாதவன் வாழ்ந்தென்ன?
ஒதிபெருத்துத் தூணாமா?
ஒதியமரமும் சமயத்துக் குதவும்.
ஒதியமரம் தூணாமோ, ஒட்டாங்கிளிஞ்சல் காசாமோ (துட்டாமோ)?
ஒத்தவிடத்தில் நித்திரைகொள்.
ஒத்திவெள்ளம் வருமுன்னே அணைகோலிக் கொள்ள வேண்டும்.
ஒயிலாய்ப் பேசுகிறான், ஆனால் கனமறிந்த கப்பறையு மல்ல கண்டறிந்த நாயுமல்ல.
3010 ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம், உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்.

ஒரு அச்சிலே உருக்கிவார்த்தாற்போல.
ஒரு அடி அடித்தாலும் பட்டுக்கொள்ளலாம், ஒரு சொல் கேட்க முடியாது.
ஒரு இழவு என்றால் உள்ளபடி ஆகும்.
ஒரு உறையிலே இரண்டு கத்தியா?
ஒரு ஊரிலே இரண்டு பைத்தியக்காரனா?
ஒரு ஊருக்கு ஒரு வழியா?
ஒரு ஊர் நடப்பு ஒரு ஊருக்கு பழிப்பு.
ஒரு கட்டு வைக்கோலைத் தண்ணீரிற் போட்டு ஒன்பது ஆள்கூடி இழுத்தாற் போல.
ஒரு கண்மூடி ஒரு கண் விழிக்கிறவன்.
3020 ஒரு கண்மூடி ஒரு கண் விழித்தல்.
ஒரு கண்ணிலே புகுந்து ஒரு கண்ணிலே வருகிறவன் (புறப்படுகிறான்).
ஒரு கண்ணிலே வெண்ணெய் தடவிக்கொண்டு ஒரு கண்ணிலே சுண்ணாம்பு தடவிக்கொண்டு பார்க்கிறது போல.
ஒரு கம்பத்தில் இரண்டு ஆனை கட்டுகிறதா?
ஒரு கரண்டி எண்ணெய் கொண்டு பலகாரஞ் சுட்டுப் பந்தி விசாரித்து வந்த பெண்டுகள் வாரி முடித்து, பெண்டுகளால் பிடிமான மில்லாமல் புறக்கடை வழியாய்ப் போய்விட்டது.
ஒரு கழிச்சலில் உட்கார்ந்து மறு கழிச்சலில் மல்லாந்து போக.
ஒரு காசு அகப்படுகிறது குதிரைக் கொம்பு.
ஒரு காசு என்ற இடத்தில் அழுகிறாள்.
ஒரு காசு கொடாதவன் ஒரு வராகன் கொடுப்பானா?
ஒரு காசு பேணின் இரு காசு தேறும்.
3030 ஒரு காற் செய்தவன் இருகாற் செய்வான்.
ஒரு குருவி இரையெடுக்க ஒன்பது குருவி வாய் திறக்க.
ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை.
ஒரு குண்டிலே கோட்டைப் பிடிக்க லாமா?
ஒரு குளப்படி நீரைக் கண்டு திரைகடல் ஏங்குமா?
ஒரு கூடு முடைந்தவன் ஒன்பது கூடு முடைவான்.

ஒரு கூடை கல்லும் தெய்வமானால், கும்பிடுகிறது எந்தக் கல்லை?
ஒரு கூடை செங்கல்லும் பிடாரியா யிருக்கிறது.
ஒரு கூண்டு முடைந்தவன் ஒன்பது கூண்டு முடைவான்.
ஒரு கை தட்டினால் ஓசை யெழும்புமா?
3040 ஒருகை தட்டினால் ஓசை கேட்குமா, இருகை தட்டினால் ஓசை யெழும்புமா?
ஒரு கை முழம் போடுமா?
ஒரு கோபம் வந்து கிணற்றில் விழுந்தால், ஆயிரம் சந்தோஷம் வந்தாலும் எழும்பலாமா?
ஒரு கோமுட்டியைக் கழுவில் போட்டதற்கு ஒன்பது கல எள்ளாச்சுதே, ஊர்க்கோமுட்டிகளை யெல்லாம் கழுவில் போடென்றானாம்.
ஒருசந்திப் பானையை நாய் அறியுமா?
ஒரு சட்டியிலே இரண்டு தைலம்.
ஒரு சாண் காட்டிலே ஒரு முழத்தடி வெட்டலாமா?
ஒரு சுருட்டுப் பத்து நாள் பிடிப்பேன்.
ஒரு சுற்றுச் சுற்றி வயிற்றைத் தடவிப் பார்த்துக் கொண்டது போல.
ஒரு செடியிலே விளைந்தாற் போல.
3050 ஒரு செவியில் வார்த்தாற்போல.
ஒரு தரம் விழுந்தால் தெரியாதா?
ஒரு தலைக்கு இரண்டு ஆக்கினையா?
ஒருதலை வழக்கு நூலிலும் செவ்வை.
ஒரு தாய் அறறவர்க்கு ஊரெல்லாம் தாய்.
ஒரு துட்டு ஒரு ரூபாயா யிருக்கிறது.
ஒரு துரும்பும் பழுதை யாகுமா?
ஒருத்தர் போனவழி ஒருத்தர் போகிற தில்லை.
ஒருத்தன் ஜோலிக்குப் போகவுமாட்டேன், என்காலை மிதித்தால் விடவு மாட்டேன்.
ஒரு நன்றி செய்தவரை உள்ள அளவும் நினை.
3060 ஒருநாட் கூத்துக்குத் தலையைச் சிரைத்ததுபோல்.
ஒரு நாளாகிலும் திருநாள்.
ஒரு நாளைக்கு இறக்கிறது கோடி, பிறக்கிறது கோடி.
ஒருநாளு மில்லாத திருநாள்.

ஒரு நாளும் சிரிக்காதவள் திருநாளிலே சிரித்தாள், திரு நாளும் வெறுநாளாயிற்று.
ஒரு நாள் ஒரு யுகமா யிருக்கிறது.
ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைக்கவா?
ஒரு பனை இரண்டு பாளை, ஒன்று நுங்கு, ஒன்று கள்ளு.
ஒரு பணம் கொடுத்து அழச்சொல்லி ஒன்பது பணம் கொடுத்து ஓயச் சொன்னது போல.
ஒரு பணம் கொடுப்பானாம் ஓயாமல் அழைப்பானாம்.
3070 ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம்.
ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உறியிலே சோறு, நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுத் தெருவிலே சோறு (ஓடு)
ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல, ஒரு மரமும் தோப்பல்ல.
ஒரு பிள்ளை யென்று ஊட்டி வளர்த்தாளாம், அது செரியாமாந்த குணம் பிடித்துச் செத்ததாம்.
ஒரு புத்திரன் ஆனாலும் குரு புத்திரன் சிலாக்கியம்.
ஒரு பெண் என்று ஊட்டி வளர்த்தாள், அது ஊர் மேலே போச்சுது.
ஒரு பொய்க்கு ஒன்பது பொய்.
ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டும்.
ஒரு பொருள் ஆகிலும் எழுதி அறி.
ஒரு பொழுதுச் சட்டி, அதின்மேல் கவிச்சுச் சட்டி.
3080 ஒரு மரத்துக்கொம்பு ஒரு மரத்தில் ஒட்டாது.
ஒரு மரத்துப் பட்டை ஒரு மரத்தில் ஒட்டுமா?
ஒரு மரத்துப் பழமா ஒருமிக்க.
ஒரு மரம் இரண்டு பாளை, ஒன்று நுங்கு ஒன்று கள்ளு; அறிவுடன் பார்க்கும் போது அதுவுங் கள்ளே இதுவும் கள்ளே.
ஒரு மனப்படு, ஓதுவார்க்கு உதவு.
ஒரு மிளகுக்கு ஆற்றைக்கட்டி இறைத்த செட்டி.
ஒரு மிளகும் நாலு உப்பும் போதும்.
ஒரு முருங்கையும் ஒரு எருமையும் உண்டானால் வருகிற விருந்துக்கு மனங்களிக்கச் செய்வேன்.

ஒரு முழுக்காய் முழுகி விடவேண்டும்.
ஒரு முழுக்கிலே மண் எடுக்க முடியுமா?
3090 ஒரு முழுக்கிலே மண் எடுக்கிறதா?
ஒருமைப்பாடு இல்லாத குடி ஒருமிக்கக் கெடும்.
ஒருவரும் அறியாத உச்சித நாமன்.
ஒருவருக்கு நிறைவும் குறைவும் ஊழ்வினைப் பயன்.
ஒருவர் அறிந்தால் இரகசியம், இருவர் அறிந்தால் அம்பலம்.
ஒருவர்க் கிடுக்கண்வந்தால் அடுக்கடுக்காய் வரும்.
ஒருவனாய்ப் பிறந்தால் தனிமை, இருவராய்ப் பிறந்தால் பகைமை.
ஒருவனுக்கு இருவர் துணை, ஒருவனை அறிய இருவர் வேண்டும்.
ஒருவனுக்குத் தாரம் மற்றவனுக்குத் தாய்.
ஒருவனும் பிறப்பா? ஒன்றிமரம் தோப்பா?
3100 ஒருவனைக் கொன்றவன் உடனே சாவான், பலரைக் கொன்றவன் பட்டமாளுவான்.
ஒருவனைப்பற்றி ஒரகத்திரு.
ஒருவன் அறிந்த இரகசியம் உலகத்தில் பரவும்.
ஒருவன் குழியிலே விழுந்தால் எல்லாரும்கூடி அவன் தலையிலே கல்லைப் போடுகிறதா?
ஒருவன் தலையில் மாணிக்கம் இருக்கிறதென்று வெட்டலாமா?
ஒரு விரல் நொடி இடாது.
ஒரு வீட்டங்கலும் பிடாரி (பஜாரி).
ஒரே காலிலே இருக்கிறான்.
ஒலியிருந்த கட்டி இன்ன கட்டி என்று தெரியாது.
ஒவ்வாக் கூட்டிலும் தனிமை அழகு, ஒவ்வாப் பேச்சு வசையோடு ஒக்கும்
3110 ஒழுகாத வீடு உள்ளங்கை அத்தனை போதும்.
ஒழுக்கம் உயர்குலத்தில் நன்று.
ஒழுக்குக்கு வைத்த சட்டி போல.
ஒழுக்கு வீட்டிலே வெள்ளம் வந்தது போல.
ஒழுங்கு ஒருபணம், சளுக்கு(டம்பம்)முக்காற்பணம்.
ஒளிக்கப் போயும் இடம் இடைஞ்சலா?

ஒளிக்கப் போயும் தலையாரி வீட்டிலா?
ஒளிக்கும் சேவகனுக்கு முகத்தில் மீசை ஏன்?
ஒளி யில்லாவிட்டால் இருளையும், இருள் இல்லா விட்டால் ஒளியையும் காணலாம்.
ஒள்ளியர் தெள்ளியர் ஆயினும் ஊழ்வினை பைய நுழைந்துவிடும்.
3120 ஒற்றியும் சீதனமும் பற்றி ஆளவேண்டும்.
ஒற்றைக்காலும் ஒரியுமாய்ச் சமுசாரஞ் செய்கிறான்.
ஒன்றவந்த பிடாரி ஊர்ப்பிடாரி ஆனதுபோல்.
ஒன்றவந்தபிடாரி ஊர்ப்பிடாரியை ஒட்டினதுபோல்.
ஒன்றால் ஒன்று குறையில்லை, முன்னாலே கட்டத் துணியில்லை.
ஒன்றான தெய்வம் உறங்கிக் கிடக்கும்போது, பிச்சைக்குவந்தவன் ததியோதனத்திற்கு அழுகிறானாம்.
ஒன்றான தெய்வம் ஒதுங்கிக் கிடக்கச்சே, மூலைவீட்டுத் தெய்வம் குங்கிலியம் கேட்குமாம்.
ஒன்று ஒன்றாய் நூறா ஒருமிக்க நூறா?
ஒன்றுகொண்டு எட்டுவிற்றால் லாபமே லாபம்.
ஒன்றுக்கு வாங்கி எட்டுக்கு விற்றால் லாபமேலாபம்.
3130 ஒன்று தெரிந்தவனுக்கு எல்லாம் தெரியாது.
ஒன்று நினைக்க ஒன்றாயிற்று.
ஒன்றும் அறியாளாம் கன்னி, ஓடிப் பிடித்ததாம் ஆறுமாத ஜன்னி.
ஒன்றும் அற்ற தங்காளுக்கு ஒன்பது நாள் சடங்கா?
ஒன்றும் அற்ற நாரிக்கு ஒன்பது நாள் சடங்கு, அதுவும் அற்ற நாரிக்கு ஐம்பது நாள் சடங்கு.
ஒன்றும் இல்லையென்று ஊதினான், அதுதானும் இல்லையென்று கொட்டினான்.
ஒன்றே குதிரை ஒன்றே ராவுத்தன்.
ஒன்றே ராஜா ஒன்றே குதிரை.
ஒன்றைத் தொடினும் நன்றைத் தொடு.
ஒன்றைப் பத்தாகவும், பத்தை ஒன்றாகவும் சாதிக்கிறான்.
3140 ஒன்றைப் பிடித்தாற் சாதிக்கவேண்டும்.
ஒன்றைப் பெற்றாலும் கடுகப் பெறு.
ஒன்றைப் பெற்றாலும் கன்றைப் பெறு.
ஒன்றைப் பெற்றால் நன்றே பெறவேண்டும்.

## ஒ.

ஒகுடுப்பானுக்கு வாழ்க்கைப்பட்டு ஓட்டமே ஒழிய நடை இல்லை.
ஓங்கி அறைந்தால் ஏங்கி அழச் சீவனில்லை.
ஓங்கில் அறியும் உயர் கடலின் ஆழம், பாங்கி அறிவாள் தன் பர்த்தாவின் வலிமை.
ஓசை காட்டிப் பூசை செய்.
ஓசை பெறும் வெண்கலம், ஓசைபெறா மட்கலம்.
ஓட மருந்துண்டு உறங்கி விழுந்தாயோ?
3150 ஓடம் கடந்தால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு.
ஓடம் கட்டின தூலம்.
ஓடம் வண்டியிலும் வண்டி ஓடத்திலும் காணவும்படும்.
ஓடம்விட்ட ஆறும் அடி சுடும்.
ஓடம்விட்ட இடம் அடி சுடும், அடி சுட்ட இடம் ஓடம் விடப்படும்.
ஓடம்விட்டு இறங்கினால் ஓடக்காரனுக்கு ஒருசொட்டு.
ஓடவும் மாட்டான் பிடிக்கவும் மாட்டான், ஓயாமல் பேசுவான்.
ஓடவும் மாட்டேன், பிடிக்கவும் மாட்டேன்.
ஓடி ஒரு கோடி தேடுவதிலும் இருந்து (உட்கார்ந்து) ஒரு காசு தேடுவது நலம்.
ஓடி ஓடி உள்ளங்காலும் வெளுத்தது.
3160 ஓடி ஓடிப் பறந்தாலும் ஓடக்காரன் தாமதம்.
ஓடி ஒன்பது பணம் சம்பாதிப்பதிலும் உட்கார்ந்து ஒருபணம் சம்பாதிப்பது நன்று.
ஓடிப் போகிறவன் பாடிப் போகிறான்.
ஓடிப்போன ஊரில் ஆதரித்தவன் கவுண்டன்.
ஓடிப்போன புருஷன்வந்து கூடிக்கொண்டான், உடமை மேல் உடைமைபோட்டு மினுக்கிக் கொண்டாள்.
ஓடிப்போனமுயல் பெரியமுயல் அல்லவோ?
ஓடிப்போனவனுக்கு ஒன்பதா மிடத்திலே ராஜா, அகப்பட்டவனுக்கு அஷ்டமத்திலே சனி.
ஓடிருக்கிறது நாடிருக்கிறது.
ஓடிருக்கிறது நானிருக்கிறேன்.
ஓடியம் ஆகிலும் ஊடுருவக்கேள்.

3170 ஓடியும் கிழவிக்குப் பிறகேயா?
ஓடுகிற கழுதையை வாலைப்பிடித்தால் உடனே கொடுக்கும் பலன் (உதை).
ஓடுகிற பாம்பைக் கையினால்பிடித்து,உண்கிறவாயில் மண்ணைப் போட்டுக் கொள்ளுகிற காலம்.
ஓடுகிறபாம்பைக் கையினாற்பிடிக்கிற பருவம்(வயது).
ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்கு இலேசு, (இளக்காரம், கொண்டாட்டம்).
ஓடுகிறவனை விரட்டுகிறது லகு.
ஓடுகிற வெள்ளம் அணையில் நிற்குமா?
ஓடுமீனோடி ஒருமீன் வருமளவும் வாடி யிருக்குமாம் கொக்கு.
ஓட்டத்துக்குப் பாக்குப் பிடிக்கிறான்.
ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி.
3180 ஓட்டைக் குடத்திலேதான் சர்க்கரையிருக்கும்.
ஓட்டைச் சங்கால் ஊதமுடியாது.
ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி.
ஓட்டைத் தோண்டிக்கு அறுந்துபோன கயிறு சரி.
ஓட்டைநாழிக்குப் பூண் கட்டினதுபோல.
ஓட்டைப்பானைச் சர்க்கரை கசக்குமா?
ஓட்டைப்பானையில் சர்க்கரை இருக்கும்.
ஓட்டைப்பானையில் விட்ட தண்ணீர்போல.
ஓட்டை மணியானாலும் ஓசை நீங்குமா?
ஓட்டை மதகிலே தண்ணீர் போனால் தோட்டிக்கு என்ன வாட்டம்?
3190 ஓட்டை வீட்டிலே மூத்திரம் பெய்தால் ஒழுக்கோ டொழுக்கு.
ஓணான் விழுங்கிய கதைபோல.
ஓணான் வேலிக்கு இழுக்கின்றது, தவளை தண்ணீருக்கு இழுக்கின்றது.
ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்.
ஓதுவார் எல்லாம் உழுவான் தலைக்கடையில்.
ஓதுவார்க்கு உதவு.
ஓதுவானுக்கு ஊரும் உழுவானுக்கு நிலமும் இல்லையா?
ஓந்தி வேலிக்கு இழுக்கின்றது, தவளை தண்ணீருக்கு இழுக்கின்றது.

ஓமபிண்டத்தை நாய் இச்சித்தாற் போலே.
ஓயாமழையும் ஓழியாக் காற்றும்.
3200 ஓய்ச்சலுமில்லை ஓழிவுமில்லை.
ஓய்விலா நேசமே யோலமே சரணம்.
ஓரக்கண்ணனைப் பழிக்கிறான் ஒற்றைக்கண்ணன்.
ஓரம் சொன்னவன் ஆருக்கு ஆவான்?
ஓரம் சொன்னவன் குடித்தனம்போல.
ஓரம் வெளுத்து ஒருபக்கம் செல்லரிக்க.
ஓர் ஆண்டி பசித்திருக்க உலகமெல்லாம் கிறுகிறென்று சுற்றுகிறது!
ஓர் ஆறு தாண்டமாட்டாதவன் ஒன்பது ஆறு தாண்டுவானா?
ஓர் ஊருக்கு ஒரு பேர் இட்டுக் கொள்ளலாமா?
ஓர் ஊர்ப்பேச்சு ஓரூர்க்கு ஏச்சு.
3210 ஓர்ப்படியாள் (ஓரகத்தி, ஒப்புடையாள்) பிள்ளைபெற்றாள் என்று ஒக்கப்பிள்ளை பெறலாமா?
ஓழிமகன் கலியாணத்திலே உண்டது லாபம்.

## ஔ.

ஔவியம் பேசுதல் எவ்விதமும் கேடு.
ஔவைசொல்லுக்கு அச்சம் இல்லை.
ஔவையார் மேலும் குற்றம் உண்டு, அண்ணாவியார் மேலும் பழுதுண்டு.

## க.

கக்கத்திற் சிமிண்டுகிற கை நமனல்லவோ?
கக்கின பிள்ளை தக்கும்.
கங்கா ஸ்நானம் துங்கா பானம்.
கங்கைக்குப்போன கடாவின் கதைபோல்.
கங்கையிலே படிந்தாலும் பேய்ச்சுரைக்காய் நல்ல சுரைக்காய் ஆகாது.
3220 கங்கையிலே பிறந்த நத்தை சாலக்கிராமம் ஆகாது.
கங்கையிலே முளைத்தாலும் பேய்ச்சுரை நல்லசுரை ஆமா?

கங்கையில் ஆடினாலும், கணமும் விடாமற்செய்த பாவம் தீராது.
கங்கையில் ஆடினாலும் பாவம் தீருமா?
கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னல் ஆகுமா?
கசக்கி மோரலாமா?
கசடருக்கு இல்லை கற்றோர் உறவு.
கசடருக்கு யோகம் வந்தால் கண்ணுந் தெரியாது, காதுங்கேளாது.
கசடறக்கல்லார்க்கு இசை உறல் இல்லை.
கசடான கல்வியினும் கல்வியீனம் நலம்.
3230 கசிந்து வந்தவன் கண்ணைத் துடை.
கச்சற்கருவாடு மோட்சத்திற்குப் போனாலும், பிச்சைக்காரன் மோட்சத்திற்குப் போகமாட்டான்.
கஞ்சிகண்ட இடம் கைலாசம், சோறுகண்ட இடம் சுவர்க்கம்.
கஞ்சிக்குப் பயறு கலந்தாற்போல.
கஞ்சித் தண்ணீருக்குக் காற்றாய்ப் பறக்கிறது.
கஞ்சிவரதப்பாஎன்றால், எங்கேவரதப்பா என்கிறான்.
கஞ்சிவார்க்க ஆளில்லாமற் போனாலும், கச்சைகட்ட ஆளிருக்கிறது.
கடலிலே ஏற்றம் போட்ட கதை.
உடலிலே துரும்பு கிடந்தாலும், மனதிலே ஒரு சொல் கிடவாது.
கடலிலே பிறக்கும் உப்புக்கும் மலையிலே விளையும் நாரத்தங்காய்க்கும் தொந்தம்.
3240 கடலிலே போட்டுச் சாக்கடையிலே தேடுகிறதா?
கடலில் இட்ட (கரைத்த) பெருங்காயம் போல.
கடலில் கரைத்த புளிபோல.
கடலில் பெருங்காயம் கரைத்தாற் போல.
கடலிற் கையைக் கழுவி விடுகிறதா?
கடலுக்குக் கரை போடுவார் உண்டா?
கடலைத் தாண்ட ஆசையுண்டு, கால்வாயைத் தாண்டக் காலில்லை.
கடலைத் தாண்டினவனுக்கு வாய்க்கால் தாண்டுகிறது அரிதா?
கடலைத் தூர்த்தாலும் காரியம் முடியாது.
கடலைத் தூர்த்தும் காரியம் முடிக்கவேண்டும்.

3250 கடலை யடைக்கக் கரை போடலாமா?
கடல் உப்பையும் மலை நெல்லையும் கலந்தாற் போல.
கடல் கொதித்தால் விளாவ நீர் ஏது (எங்கே)?
கடல் தண்ணீர் வற்றினாலும் பள்ளிச்சி தாலி வற்றாது.
கடல் தாண்ட மனமுண்டு, கால்வாய் தாண்டக் காலில்லை.
கடல் திடலாகும் திடல் கடலாகும்.
கடல் நீர் நிறைந்து என்ன, காஞ்சிரை பழுத்து என்ன?
கடல் பெருகினால் கரையும் பெருகுமா?
கடல் பெருகினால் கரையேது?
கடல் மீனுக்கு நீச்சுப் பழக்கவேண்டுமா?
3260 கடல் மீனுக்கு நுளையன் இட்டது சட்டம்.
கடல் வற்றில் கருவாடு தின்னலாமென்று உடல்வற்றிச் செத்ததாம் கொக்கு.
கடவுள் இருக்கிறார்.
கடற்கரைத் தாழங்காய் கீழே தொங்கி என்ன மேலே தொங்கி என்ன?
கடனோடுகடன், கதம்பம் (கந்தப்பொடி) காற்பணம்.
கடனோடு கடனாகிறது, அண்டை வீட்டின் மேலே சீட்டு ஆகிறது, பிள்ளைக்குக் கலியாணம் பண்ணு.
கடனோடே கடன், உடனோடே உடன்.
கடன் இல்லாத கஞ்சி கால் வயிறு.
கடன்காரனுக்குக் கடனும், உடன் பிறந்தானுக்குப் பங்கும் கொடுக்கவேண்டும்.
கடன்காரனுக்குக் கடனும், பழிகாரனுக்குப் பழியும் கொடுத்துத் தீரவேண்டும்.
3270 கடன்காரனை வைத்த கழு உண்டா?
கடன் காலச் சனியன்.
கடன் கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்.
கடன்பட்டார் நெஞ்சம்போற் கலங்குகிறது.
கடன்பட்டு உடன்பட்டு அம்மை கும்பிட, நீ யார் கூத்தி விழுந்து கும்பிட?
கடன்பட்டும் பட்டினியா?
கடன்வாங்கி உடன்வாங்கி அம்மை கும்பிட, நீ யார் கூத்தி விழுந்து கும்பிட?

கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான், மரம் ஏறிக் கை விட்டவனும் கெட்டான்.
கடன் வாங்கிச் செலவு செய்தவனும், மரம் ஏறிக்கை விட்டவனும் சரி.
கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் சந்நியாசி.
3280 கடன் வாங்கியும் பட்டினியா?
கடா கடா என்றாலும் மருந்துக்கு ஒரு பீர் என்கிறான்.
கடா பின்வாங்குகிறது பாய்ச்சலுக்கு இடம்.
கடா பின் வாங்குவதெல்லாம் பாய்ச்சலுக்கு அடையாளம்.
கடா மேய்க்கிறவன் அறிவானோ கொழு போனவிடம்?
கடாவானாலும் உழக்குப்பால் கறக்காதா என்கிறான்.
கடாவின் சந்திற் புல்லைத் தின்கிறதுபோல.
கடாவும் கடாவும் சண்டைபோடுகிறபோது உண்ணி நசுங்கினாற்போல்.
கடி கோலிலே கட்டின நாய்.
கடிக்க ஒரு எலும்பும் இல்லை, காதில் மினுக்க ஓலையும் இல்லை.
3290 கடிக்கமாட்டாத பாக்கு உத்தம தானம்.
கடிக்கவருகிற நாய்க்குத் தேங்காய்க்கீத்து போட்டாற்போல.
கடிக்கிற நாய்க்குக் கழுத்தில் குறுங்கயிறு.
கடிதான சொல் அடியிலும் வலிது.
கடிதான பிள்ளை பெற்றாருக்கு உதவுமா?
கடித்த நாகம் கலந்து உறவாடுமா?
கடித்த நாயைப் பயித்தியம் கொண்டது என்று சொல்லுவார்கள்.
கடித்த நாய்க்குக் காடியைக் கொடு.
கடித்த பாக்கும் கொடாத சிற்றப்பன் கடைத்தெரு வரையில் வழிவிட்டானாம்(காதவழி வந்தானாம்).
கடித்த பாம்புக்குப் பால்வார்த்தால் விஷத்தைத்தான் தரும்.

3300 கடித்த மூட்டை கடியாத மூட்டை எல்லாமூட்டையும் சரிதான்.

கடித்த மூட்டையும் சரி, கடியாத மூட்டையும் சரி.

கடித்தவாய் துடைத்தாற்போல.

கடித்தாலும் கடிக்கட்டும் நீ கொல்லாதிரு.

கடிந்த சொல்லினும் கனிந்த சொல்லே நன்மை.

கடியாத மூட்டையென்று விட்டுவிடுவார்களா?

கடியும் சுறுக்குத்தான், அடியும் சுறுக்குத்தான்.

கடிவாளம் இல்லாத குதிரை.

கடுகத்தனை நெருப்பானாலும் போரைக்கொளுத்தி விடும்.

கடுகுச்சு முடுகுச்சு வடுகச்சி காரியம்.

3310 கடுகிலும் கால்திட்டம் கரண்டி, அதிலும் கால் முட்டையெண்ணெய் கடன்வாங்கி என்தலை சீவிக் கட்டி, மகள்தலை வாரிக்கட்டி, மருமகள் தலை கோதிக்கட்டி, குறையெண்ணெய் வைத்த இடத்தில் அசல்வீட்டுக்காரி வந்திடறிவிட்டாள், அதுபெரிய ஏரி பெருகினாற்போலப் பெருகிப் போயிற்று!

கடுகு களவும் களவுதான், கர்ப்பூரக்களவும் தான்.

கடுகு சிறுத்தாலும் காரம்போமா?

கடுகு போகிற இடத்தில் தடி எடுத்துக்கொண்டு திரிவான், பூசினிக்காய் போகிற இடத்தில் தெரியாது.

கடுகுபோன இடம் ஆராய்வார், பூசனிக்காய் போன ஆராயார்.

கடுகு மலையாச்சு மலை கடுகாச்சு.

கடுகைத்துளைத்து ஏழ்கடலைப் புகட்டினதுபோல.

கடுக்காய்க்கு அகணி நஞ்சு சுக்கிற்குப் பரணி நஞ்சு.

கடுங்காற்று மழைகூட்டும், கடுஞ்சிநேகம் பகை காட்டும்.

3320 கடுஞ்சிநேகம் கண்ணல் கொடுக்கும்.

கடுஞ்சிநேகம் கண்ணுக்குப் பகை (பொல்லாப்பு).

கடுஞ்செட்டுக் கண்ணைக்கெடுக்கும்.

கடுஞ்செட்டுக் காரியக்கேடாம்.

கடுஞ்செட்டுத் தயவைக் கெடுக்கும்.

கடுஞ்சொற் கேட்டால் காதுக்குக் கொப்பளம்.
கடுநட்பு பகை விளைப்பு.
கடு முடுக்கடா சேவகா, கம்பரிசி அடா சம்பளம்.
கடும்பசி கல்மதில் உடைத்தும் களவுசெய்யச் சொல்லும்.
கடும்போரில் கைவிடலாமா?
3330 கடுவெளியைக் கானல் ஜலமாய்க் கண்டதுபோல.
கடை கெட்ட மூளிக்குக் கோபம் கொண்டாட்டம்.
கடைகெட்ட மூளி சூலானாலும் காற்பணத்துக்காசு செல்லும்.
கடை கெட்ட வாழ்வு தலைகட்ட நேரமில்லை.
கடைக்குக்கடை ஆளதாளியென.
கடைக்குக் கடை ஆள் இருப்பார்கள்.
கடைக்குப்போக கன்னிக்குப்போக.
கடைசிச் சோற்றுக்கு மோரும், கால்மாட்டிற்குப் பாயும் வேண்டும்.
கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தாற்போல.
3340 கடைந்த மோரிலே குடைந்து வெண்ணெய் எடுக்கிறது.
கடையச்சே வராதவெண்ணெய் குடையச்சே வரப் போகிறதா?
கடையிலே கட்டித் தூக்கினாலும் அழுகற் பூசினிக்காய் அழுகலே.
கடையிலே கொண்டு மனையிலே வைக்கிறான்.
கடையில் அரிசி கஞ்சிக்குதவுமா? அபிசாரி (அண்டை வீட்டுக்காரி) புருஷன் ஆபத்துக்கு உதவுவானா?
கடையில் வந்ததும் அரிசியோ, நடையில் வெந்ததும் சாதமோ?
கட்டக் கரியமணியில்லாமற் போனாலும் பேர் பொன்னம்மாள் (முத்துமாலை).
கட்டறிந்த நாயுமல்ல, கனமறிந்த கப்பரையுமல்ல.
கட்டாணித் தனமாய்க் கலியாணஞ் செய்தான்.
கட்டாந்தரை அட்டைபோல.

3350 கட்டாந்தரை அட்டைபோலக் கட்டிக்கொண்டு புரளுகிறதா?

கட்டாந்தரையிலே முக்குளிக்கிறது.

கட்டாந்தரையில் தேள்கொட்டக் குட்டிச்சுவரில் நெறிகட்டினதாம்.

கட்டி அடித்தால் என்ன, விட்டு அடித்தால் என்ன?

கட்டி அழுகிறபோது கையும் துழாவுகிறது.

கட்டி அழுகையிலே, என்மகளே, உனக்குப் பெட்டியிலே கை என்ன?

கட்டி இடமானால் வெட்டி அரசாளலாம்.

கட்டிக் கொடுத்த சோறும் கற்றுக் கொடுத்த சொல்லும் (வார்த்தையும்) எதுவரைக்கும் (காலமுள்ளளவு மிருக்குமா)?

கட்டிக்கொண்டுவரச் சொன்னால் வெட்டிக்கொண்டு வருவான்.

கட்டித் தங்கமானால் கலீரென்று ஒலிக்குமா?

3360 கட்டிப்பீ எல்லாம் கூழ்ப் பீயாய் கரைந்தது.

கட்டிப்பீ எல்லாம் தண்ணீர்ப்பீ ஆச்சுது.

கட்டிலின்மே லேறியும் முறையா?

கட்டிலைத் திருப்பிப்போட்டால் தலைவலிபோகுமா?

கட்டில் உள்ள இடத்தில் பிள்ளைபெற்றுச் சுக்குத் கண்ட இடத்தில் காயம் தின்பாள்.

கட்டி வழிவிட்டால் வெட்டி அரசு ஆளலாம்.

கட்டி விதை வெட்டி விதை.

கட்டிவைத்த பணத்தைத் தட்டிப்பறித்தாற் போல.

கட்டிவைத்த பூனையை அவிழ்த்துவிட்டு வா புஸ் வா புஸ் என்றால் வருமா?

கட்டினவனுக்கு ஒரு வீடானால் கட்டாதவனுக்குப் பல வீடு.

3370 கட்டினவனுக்கு ஒரு வீடு, கட்டாதவனுக்கு ஊரெங்கும் வீடு.

கட்டினவீட்டுக்கு எட்டுக்கணை.

கட்டின வீட்டுக்கு பழுது (நோட்டம், சொத்தை, கருத்து, பணிக்கை) சால்லுவார் பலர் (அநேகர்)

கட்டினான் தாலி, காட்டினான் கோலம்.

கட்டுங்கடங்காக் காளைபோல.

கட்டுக் கடங்காப் பிடாரி.
கட்டுக்காடை இடமானால் குட்டிச்சுவரும் பொன்னாகும்.
கட்டுக்குக்கட்டு மாறிக் கட்டவேண்டும்.
கட்டுச் சாதத்தில் எலிக்குஞ்சை வைத்துக்கட்டினது போல.
கட்டுச்சோற்று மூட்டையும் கைப்பிள்ளையும் எடுக்கலாகாது.
3380 கட்டுப்படாத பெண் சொட்டு போட்டுக்கொண்டு போயிற்று.
கட்டுப்பட்டாலும் கவரிமான் மயிரால் கட்டுப்பட வேண்டும், குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும்.
கட்டுமரத்தை சொன்னாக்குனி அரிக்கிறதுபோல.
கட்டுருட்டிக் காளைபோல.
கட்டை (உடம்பு) இருக்கிறமட்டும் கஷ்டமுண்டு.
கட்டைக்குப் போம்போது காலாழி பீலியா?
கட்டைக் கோணல் அடுப்பில் நிமிர்ந்தது.
கட்டை போனால் அடுப்போடு.
கட்டைப்பாறை பறக்கச்சே எச்சிற்கல்லை எனக்கென்ன கதி என்கிறது.
கட்டைப்பாறையை விழுங்கிச் சுக்குக்கஷாயம் குடித்தது போல.
3390 கட்டைப் பாறையை விழுங்கி விட்டுச் சுக்குக்கஷாயம் குடித்தால் தீருமா?
கட்டையிலே வைக்க (போவான்).
கட்டை விளக்குமாற்றுக்கு (துடைப்பத்துக்கு)ப் பட்டுகுச்சு கட்டினாற் போல.
கட்டோடே போனால் கனத்தோட வரலாம்.
கணக்கதிகாரத்தைப் பிளக்கும் கோடாலி.
கணக்கப்பிள்ளை பெண்சாதி கடுக்கன் போட்டுக் கொண்டாளென்று காரியக்காரன் பெண்சாதி காதை அறுத்துக்கொண்டாளாம்.
கணக்கப்பிள்ளை யெல்லாம் எழுத்துப்பிள்ளையா?
கணக்கனுக்குப் பட்டினி உடன்பிறப்பு.
கணக்கன் கணக்கு அறிவான், தன் கணக்கைத் தான் அறியான்.

கணக்கன் கணக்கைத் தின்னாவிடில், கணக்கனைக் கணக்குத் தின்றுவிடும்.

3400 கணக்கன் வீட்டுக்கலியாணம் விளக்கெண்ணெய்க்குக் கேடு.

கணக்கு அறிந்தபிள்ளை வீட்டில் இருந்தால் வழக்கு அறாது.

கணக்குக் குஞ்சையும் காக்கைச் குஞ்சையும் கண்ட இடத்திலே கண்ணைக்குத்து.

கணக்கிலே கயிறா கோத்து இருக்கிறது?

கணக்கைப் பார்த்தால் பிணக்குவரும்.

கணபதி பூசை கை மேலே.

கணவனைப் பிரிந்தும் அயல் வீட்டி லிருக்கிறதா?

கணவனை வைத்துக் கொண்டல்லவோ கள்ள மாப் பிள்ளையைக் கொள்ளவேண்டும்?

கணுக்கால் பெருத்தால் கணவனைத் தின்பாள்.

கண்கட்டி மந்திரமா காட்டவந்தாய்?

3410 கண்கட்டி வித்தை காட்டவந்தாயா?

கண்கட்டின புறாப் போல.

கண் கணிசமாய்ச் சொல்லுவான்.

கண்கண்டது கைசெய்யும்.

கண்குத்திப் பாம்புபோல கண்மூடிப்பார்த்திருந்தேன்.

கண்குத்திப் பாம்புபோல் கண்ணிலே மண்ணைப் போடுகிறான்.

கண்குருடு ஆனாலும் நித்திரையில் குறையா? (தாழ்ச்சியில்லை).

கண்குருட்டுக்கு மருந்து இட்டால் தெரியுமா?

கண்குற்றம் கண்ணுக்குத் தெரியுமா?

கண்கெட்டபிறகா சூரிய நமஸ்காரம் செய்கிறது?

3420 கண் கொண்டல்லவோ வழிநடக்கவேண்டும்?

கண்ட இடத்திலே திருடன் கண் போகிறது.

கண்ட இடம் கைலாசம்.

கண்ட கண்ட கோயில் எல்லாம் கை எடுத்துக்கும் பிட்டேன்.

கண்டது கற்கப் பண்டிதனாவான்.

கண்டதே காட்சி கொண்டதே கோலம்.

கண்டது காட்சி பெற்றது பேறு.

கண்டது சொன்னால் கொண்டிடும் பகை.
கண்டது பாம்பு, கடித்தது மாங்கொட்டை.
கண்டதைக் கேளாவிட்டால் கொண்டவன் அடிப்பான்.
3430 கண்டத்தைக் கொண்டு கரை யேறவேண்டும்.
கண்டத்தைக் கொண்டு காலை வாரி யடிக்கிறது.
கண்ட மாப்பிள்ளையை நம்பிக் கொண்ட மாப்பிள்ளையைக் கை விட்டாற் போல.
கண்டறிந்த நாயுமல்ல கனமறிந்த பேயும் அல்ல.
கண்டறியவேண்டும் கரும்புசுகம், உண்டறியவேண்டும் உடல்.
கண்டறியாதவன் பெண்டு படைத்தால் காடுமேடெல்லாம் இழுத்துத்திரிவானாம்.
கண்டார் கண்டபடி பேசுகிறது.
கண்டா லல்லவோ பேசுவார் தொண்டமான்.
கண்டால் ஒரு பேச்சு, காணாவிட்டால் ஒருபேச்சு.
கண்டால் காமாட்சி நாயகர், காணாவிட்டால் காமாட்டி நாயகர்.
3440 கண்டால் துளை, காணாவிட்டால் மலை.
கண்டால் தெரியாதா கம்பளி ஆட்டுமயிரை?
கண்டால் நாயக்கர், காணாவிட்டால் வடுகப்பயல்.
கண்டால் முறைசொல்லுகிறது, காணாவிட்டால் பெயர் சொல்லுகிறதா?
கடில் ஆயம், காணாவிடில் மாயம்.
கண்டிடில் ஒன்று காணாவிடில் ஒன்று.
கண்டிடில் முறைசொல்லுகிறது, காணாவிடில் பெயர் சொல்லுகிறது.
கண்டிருந்தும் மலத்தைக் கவிழ்ந்திருந்து தின்னுவார்களா?
கண்டு எடுத்தவன் கொடுப்பானா?
கண்டு செத்த பிணமானால் சுடுகாடறியும்.
3450 கண்டு பேசக் காரியமும் (கவையும்) இருக்கிறது, முகத்தில் விழிக்க வெட்கமாயுமிருக்கிறது.
கண்டும் காணவில்லை, கேட்டும் கேட்கவில்லையென்று இருக்கவேண்டும்.
கண்டும் காணாததுபோல் விட்டுவிடவேண்டும்.

கண்ணாடி நிழலிற் கண்ட பணம் கடனுக்கு உதவுமா?
கண்ணாடி, பித்தன், கருங்குரங்கு, காட்டானை, மண்ணாளும் வேந்தனோ டைந்து.
கண்ணாடியிற் கண்ட பணம் கடன் தீர்க்க உதவுமா?
கண்ணாரக் கண்டதற்கு ஏன் அகப்பைக்குறி?
கண்ணாலே கண்டாலும் மண்ணாலே மறைக்கவேண்டும்.
கண்ணாரக் காணாதது மூன்றில் ஒருபங்கு (மூன்று பங்கு)
கண்ணாலே சீவன் கடகட வென்று போனாலும், வண்ணானுக்கு மழை நஞ்சு.
3460 கண்ணாலே சீவன் கடகடவென்று போனாலும் வண்ணான் கழுதை சுமந்தே தீரவேண்டும்.
கண்ணால் கண்டதற்கு சாட்சியா?
கண்ணான பேரையெல்லாம் புண்ணாக்கிக்கொண்டு, கரும்பான பேரையெல்லாம் வேம்பாக்கிக் கொண்டான்.
கண்ணான பேர்களை மண்ணாக்குகிறான்.
கண்ணான மனதைப் புண்ணாக்குகிறான்.
கண்ணிமை கைந்நொடி அளவே மாத்திரை.
கண்ணிமைபோலே கரிசனமாய்க் காக்கிறது.
கண்ணிமையா முன்னே பறந்துபோனான்.
கண்ணியில் அகப்பட்ட கரிக்குருவிபோல் கலங்குகிறான்.
கண்ணியில் அகப்பட்ட மானுக்குக் கணத்தில் மனங் கலங்கும்.
3470 கண்ணியில் அகப்பட்ட மான்போல் கலங்குகிறான்.
கண்ணிலே எண்ணெய் கரிக்குமோ, பிடரியிலே எண்ணெய் கரிக்குமோ?
கண்ணிலே குத்தின விரலைக் கண்டிப்பார் உண்டோ?
கண்ணிலே படுகிறது புருவத்திலே.
கண்ணிலே பட்டால் விரலைத் தறிக்கிறதா?
கண்ணில் உண்டாகும் புண்ணில் கோவிட்டது போல.
கண்ணில் கண்டது கோடி, காணாதது அனந்தம் கோடி.
கண்ணிற்பட்ட கையைத் தறிப்பார் இல்லை.

கண்ணிற் பட்டாற் கரிக்குமா, புருவத்திற் பட்டாற் கரிக்குமா?
கண்ணிற் புண்வந்தால் கண்ணாடி பார்க்கல் ஆகாது.
3480 கண்ணினால் எண்ணுவான்.
கண்ணினாற் கண்டது பொய், அகப்பைக் கூரு பார்த்தது மெய்.
கண்ணிற் கண்டது பொய், கருதி விசாரித்தது மெய்.
கண்ணினாற் கண்டது பொய், காதினாற் கேட்டது மெய்.
கண்ணினிற் கண்டதை எள்ளுக்காய் பிளந்ததுபோற் சொல்லவேண்டும்.
கண்ணினாற் கண்டதைக் கையினாற் செய்யவேண்டும்.
கண்ணின் முன்னே ஒன்றுசொல்லிக் காணாத இடத்திலே இரண்டு சொல்லுகிறது.
கண்ணுள்ள போதே காட்சி.
கண்ணுக்கு இமை காதமா?
கண்ணுக்குக் கண்ணருகே காணலாம்.
3490 கண்ணுக்குக் கண்ணாயிருந்து கடைப்பெண்ணுக்கு வழி பார்க்கிறது.
கண்ணுக்குக் கலத் தண்ணீர் விடுகிறது.
கண்ணுக்குட் சம்மணம் கொட்டுவாள் கம்பத்தில் ஐந்தானை கட்டுவாள்.
கண்ணுக்குப் புண்ணுமல்ல, காண்பார்க்கு நோயும் (நோவும்) அல்ல.
கண்றணுக்குப் புருவம் காதமா?
கண்ணுக்கும் மூக்குக்கும் காலம் இப்படி வந்ததே.
கண்ணுக்கும் மூக்குக்கும் நேராகப்பார்.
கண்ணும் கருத்தும் உள்ளபோது இல்லாமல், கண் பஞ்சடைந்த பின்பு என்ன கிடைக்கும்?
கண்ணும் கருத்தும் உள்ளபோதே காணோம், அவை போன பின்பு என்ன கிடைக்கும்?
கண்ணும் புண்ணும் உண்ணத் தீரும்.
3500 கண்ணுள்ளபோது காட்சி.
கண்ணூனன் கைப்பொருள் இழப்பான்.
கண்ணை இமை காத்தது போல.

கண்ணைக்காட்டிக் காட்டிலே விட்டதுபோல.
கண்ணைக்காட்டி அழைத்தால் வராதவள் கையைப் பிடித்து இழுத்தால் (அழைத்தால்) வருவாளா?
கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுத்தது.
கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்தது.
கண்ணைக்கொண்டு நடந்ததுபோல உன்னைக் கொண்டு நடந்தேன்.
கண்ணைப் பிடுங்கி முன்னே எறிந்தும் கண்கட்டி வித்தை என்கிறான் (என்பார்போல).
கண்ணை மூடிக் குட்டுகிறதா?
3510 கண்ணொளி பெரிதோ, கதிரொளி பெரிதோ?
கண்ணோடே பிறந்த காவேரியானாலும் உதட்டைச் சுட்டு உறவாடுவேன்.
கண்ணோடே பிறந்த காவேரியானாலும் நம் எண்ணஞ் சரியாகுமோ?
கண்ணோ புண்ணோ?
கண்ணோ புண்ணோ என்று கலங்கி மனந் திடுக்கிடு [கிறது.
கண்தெரிந்து நடப்பவர்கள் பள்ளத்தில் விழமாட்டார்கள்.
கண்தெரிந்து வழிநடக்கும்படி நினை.
கண் பறிகொடுத்துக் கலங்கினாற்போல.
கண் பார்த்தால் கை செய்யும்.
கண் பார்த்துக் கையால் எழுதாதான் கசடனாகும்.
3520 கண் புண்ணிலே கோல் இட்டதுபோல்.
கண்மூடி துரைத்தனம் ஆச்சே.
கதவைத் சாத்தினால் நிலை புறம்பு.
கதிகெட்ட மாப்பிள்ளைக்கு எருமுட்டைப் பணிகாரம்.
கதிரவன் சிலரைக் காயேன் என்குமோ?
கதிரைக் களைந்தும் களையைப் பிடுங்கு.
கதிர் நூல் குறைந்தாலும் கள்ளச்சி கழுத்து நூல் குறையாது.
கதிர் போ விளைத்துக் குதிர்போல் பெருப்பது.
கதைக்குக் கரலும் இல்லை தலையும் இல்லை.
கதைக்குக் கால் இல்லை, கண்ட புருஷனுக்கு முறை யில்லை.

3530 கதைக்கு கால் இல்லை, கொழுக்கட்டைக்குத் தலை யில்லை.

கதைக்குக் கால் இல்லை, பேய்க்குப் புட்டம் (பாதம்) இல்லை.

கதையோ பிராமணா, கந்தையோ பொத்துகிறாய், அல்லடீ பேய்முண்டாய், சீலைப் பேன் குத்து கிறேன்.

கத்தரிக்காயிலே காலும் கையும் முளைத்தாற்போல்.

கத்தரிக்காய் சொத்தையென்றால் அரிவாள் மணைக் குற்றம் என்கிறாள்.

கத்தரிக்காய் வாங்கப் பூசுணிக்காய் கொசுரா?

கத்தரிக்காய் விரை சுரையாய் முளைக்காது.

கத்தரிக் கொல்லையிலே கூத்துப் பார்த்தாற்போல.

கத்தரிக் கொல்லையில் கூத்துவேடிக்கை பார்த்தது போல.

கத்தரித் தோட்டத்துக்குக் களைபிடுங்கினாற் போலு மிருக்கவேண்டும், கன்றுக்குட்டிக்குப் புல் பிடுங்கினாற் போலுமிருக்கவேண்டும்.

3540 கத்தி இருக்கும் இடத்துக்கு மறை காவுகிறதா?

கத்தி எட்டின மட்டும் வெட்டும், பணம் எட்டாத (பாதாள) மட்டும் வெட்டும்.

கத்திகட்டி பெண்சாதி எப்போதும் கைம்பெண்சாதி.

கத்திப்பிடிக்குப் பிடித்தால் அரிவாள் பிடிக்கு ஆகட்டும் (வராதா)?

கத்தியும் கடாவும்போல.

கத்தியும் வெண்ணெயும் காய்ச்சித் துவைத்துக்கடை.

கத்தியைப் பார்க்கிலும் கனகோபம் கொலைசெய்யும்.

கத்து கத்து என்றால் கழுதையும் கத்தாது, சொல்லு சொல்லு என்றால் புலவனும் சொல்லான்.

கத்துகிற மட்டும் கத்திப்போட்டு, போகச்சே கதவைச் சாத்திவிட்டுப் போ.

கந்தப்பொடிக் கடைக்காரனுக்கு வாசனை தெரியுமா?

3550 கந்தை ஆனாலும் கசக்கி உடு (கட்டு), கூழ் ஆனாலும் குளித்துக் குடி.

கந்தைக்கு ஏற்ற பொந்தை கழுவுக்கு ஏற்ற கோமுட்டி.

கந்தைக்குச் சரடு ஒட்டுகிறது எல்லாம் பலம்.

கந்தைத் துணியும் கரி வேஷமும் (கரிக்கோலமும்) ஆனான்.
கந்தையை அவிழ்த்தால் குட்டி வெளிச்சம் தெரியும்.
கந்தையை அவிழ்த்தால் சிந்தை கலங்கும்.
கந்தையைக் கட்டி வெளியே வந்தால் கண்ணாட்டி, வெள்ளையைக் கட்டி வெளியே வந்தால் வெள்ளாட்டி.
கபடன் சொல்லினும் கடிய சொல்லே நலம்.
கபடுசூது கடுகாகிலும் தெரியாது.
கபாலக் குத்து கண்ணைச் சுழித்தது.
3560 கப்பரையிலே கல்லு விழுகிறது.
கப்பலிலே பாதிப் பாக்குப் போட்டது போல.
கப்பல் அடிப்பாரத்துக்கு கடற்கரை மண்ணுக்குத் தரவு கெட்டாற்போல.
கப்பல் உடைந்தாலும் கன்னத்திலே கையை விடுகிறதா?
கப்பல் ஏறிப் பட்ட கடன் கொட்டை நூற்றா விடியும்?
கப்பல் ஏறிய காகம்போல கலங்குகிறது.
கப்பல் ஏற்றிக் கடலில் கவிழ்த்ததுபோல.
கப்பல் ஓடிப் பட்ட கடன் கொட்டை நூற்றுத் தீருமோ?
கப்பல் போம் துறை கிடக்கும்.
கப்பற்காரன் பெண்டாட்டி தொப்பைக்காரி, கப்பல் உடைந்தால் பிச்சைக்காரி.
3570 கப்பற்காரன் வாழ்வு காற்று அடித்தால் போச்சு.
கப்பி என்றால் வாயைத் திறக்கிறது, கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்ளுகிறது.
கப்பிடாவுமில்லை வெட்டுக்கத்தியுமில்லை.
கமரி லூற்றின பால்.
கமரிற் கவிழ்ந்த பால், அமரர்க்கு இட்ட அன்னம்.
கம்பப் பிச்சையோ கடைப் பிச்சையோ?
கம்பளிமூட்டை யென்று கரடிமூட்டையை அவிழ்த்தானாம்.
கம்பளிமேல் பிசின்.
கம்பளியிலே சோற்றைப்போட்டு மயிர் மயிர் என்கிறதா?
கம்பளியில் ஒட்டின கூழைப்போல.

3580 கம்பளி விற்ற பணத்துக்கு மயிர் முளைத்திருக்கிறதா?
கம்பன் வீட்டு அடுப்புக் கட்டியும் கவிபாடும்.
கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
கம்பன் வீட்டு வெள்ளாட்டியும் கவிபாடும்.
கம்புக்குக் களைவெட்டினாற் போலுமிருக்கவேண்டும், தம்பிக்குப் பெண்பேசினாற் (கொண்டாற்) போலுமிருக்கவேண்டும்.
கம்புமாவு கும்பினால் களிக்கு ஆகுமா?
கம்மாளன் இருந்த இடமும் கழுதை இருந்த இடமும் சரி.
கம்மாளன் குடித்தனம் பண்ணாதே, கடை கெட்ட வெள்ளாட்டி.
கம்மாளன் துணிவாங்கினால் கால் மயிர் தெரியவாங்குவான், அதைச் சலவைக்குப் போடும்போது அடுப்பிலே போட்டாலும் வேகாது.
கம்மாளன் நாய் சம்மட்டித் தொனிக்கு அஞ்சுமா?
3590 கம்மாளன் பசுவைக் காதறுத்துக்காண்டாலும் உள்ளே செவ்வரக்குப் பாய்ச்சியிருப்பான்.
கம்மாளன் பசுவைக் காதறுத்துக் கொள்ளவேண்டும்.
கம்மாளன் பணம் கரியும் பொரியுமாய் போய்விட்டது.
கம்மாளன் பல்லக் கேறினால் கண்டவர்க் கெல்லாம் இறங்கவேண்டும்.
கம்மாளன் வீட்டில் பிள்ளை பிறந்தால், தேவடியாள் தெருவில் சர்க்கரை வழங்கவேண்டும்.
கயிறு இல்லாப் பம்பரம் போல.
கயிற்றைப் பாம்பென்று எண்ணிக் கலங்குகிறது போல.
கரகத்துக்கு நீர் காகங் காக்கும்.
கரடி கையில் உதைப்பட்டவனுக்குக் கம்பளிக்கானைக் கண்டால் பயம்.
கரடிக்குப் பிடித்த இடமெல்லாம் மயிர்.
3600 கரடி துரத்தினாலும் கைக்கோளத் தெருவில் போக வழி இராது.
கரடி பிறை கண்டது போல்.
கரடி புற்றிலே வாய் வைத்தாற்போல்.

கரடியால் துரத்தப்பட்டவனுக்குக் கம்பளிக்காரனைக் கண்டாற் பயம்.
கரணம் தப்பினால் மரணம்.
கரதலாமலகம் போல் காண்கிறது.
கரம் மாறிக் கட்டினால் கனம் குறையாது.
கரிசனப்பட்ட மாமியார் மருமகனைப் பார்த்து ஏக்க முற்றாளாம்.
கரிசனமுற்ற சிற்றத்தே, நீ கம்பங் கொல்லையில் வாடி கட்டி அழ.
கரியாய் உமியாய்க் கட்டை விளக்குமாறாய்.
3610 கரி விற்ற பணம் கறுப்பாய் இருக்குமா?
கரு இல்லாத முட்டையும் குரு இல்லாத வித்தையும்.
கரு இல்லாத வித்தையும் குரு இல்லாத சீடனும் போல்.
கருக்கி உருக்கி நெய் வார்த்தாலும் கண்ட நியாயம் தான் சொல்லுவான்.
கருங்கண்ணிபட்டால் கரையான் கண்ணாலும் திரும்பிப் பாரான்.
கருங் கல்லிலே நார் உரிப்பான்.
கருங்காலி உலக்கைக்கு வெள்ளிப் பூண் கட்டினது போல.
கருங்காலிக் கட்டைக்கு வாய் கோணாக் கோடாலி கதலித்தண்டுக்கு வாய் கோணிற்றாம்.
கருடனைக் கண்ட பாம்பு போல.
கருடன் இடமானால் எவன் கையில் பொருளும் தன் கையிற் சேரும்.
3620 கருடன் காலில் சதங்கை (கெச்சை) கட்டியது போல்.
கருடன் பறக்க ஒரு கொக்கும் பறந்தாற் போல.
கருப்பங் கட்டியிலும் கல்லு இருக்கும்.
கருப்பங் கொல்லையிலே நெருப்புப் பொறி விழுந்தாற் போல.
கருப்பிலே பிள்ளை விற்றாற் போலே.
கருப்புக்கட்டி ஆதாயத்தை எறும்பு இழுத்துக் கொண்டு போச்சுதாம்.
கருப்புக்கு இருந்து பிழை, கலகத்துக்கு ஓடிப்பிழை.
கருப்புட்டி என்றவன் வாயைச் சளுப்புட்டி என்று நக்குகிறதா?

கரும ஒழுங்கு பெருமைக்கு அளவு.
கருமத்தை முடிக்கிறவன் அருமை ஒன்றும் பாரான்.
3630 கருமத்தை முடிக்கிறவன் கடலை ஆராய்வான்.
கருமான் உலைக்களத்தில் நாய்க்கு என்ன வேலை?
கரும்பாலையிற் பட்ட எறும்புபோல.
கரும்பிலும் தேள் இருக்கும், கள்ளியிலும் பால் இருக்கும்.
கரும்பு கசக்கிறது வாய்க் குற்றம்.
கரும்பு கட்டோடே இருந்தால் எறும்பு தானே வரும்.
கரும்பு கோணலானால் கட்டியும் பாவுமாம், மனது கோணலானால் என்ன செய்யலாம்?
கரும்பு கோணியிருந்தாலும் தித்திக்கும்.
கரும்புக் கட்டாலே கழுதையை அடித்தால் கரும்பு ருசி கழுதைக்குத் தெரியுமா?
கரும்புக் கட்டுக்கு எறும்பு தானே வரும்.
3640 கரும்புக்கு உழுத புழுதி காய்ச்சின பாலுக்குச் சர்க்கரை ஆகுமா?
கரும்புக்கு கணு இருந்தாலும் கசக்குமா?
கரும்பு தின்னக் கூலியா?
கரும்பு தின்னாமல் வேம்பு தின்பதுபோல.
கரும்பு முறித்துக் கழுதையை அடித்த கதை.
கரும்பும் எள்ளும் கசக்கினால்தான் பலன்.
கரும்பும் வேம்பு ஆயிற்றே.
கரும்பு ருசியென்று வேரோடு பிடுங்கலாமா? (கல்லலாமா?)
கரும்புள்ளபோதே ஆலை ஆடிக்கொள்.
கரும்பைக் கழுதை முன்போட்டால் கழுதைக்குத் தெரியுமா கரும்பு ருசி?
3650 கரும்பை விரும்பி, அது வேம்பு ஆயிற்று.
கரும்பை விரும்ப விரும்ப வேம்பு.
கருவாட்டுக்காரி சந்து விட்டால் நான் வந்து விட்டேன்.
கருவிழி மணிபோலக் கரிசனமாய் காக்கிறது.
கருவேல மரத்திற்கு நிழலில்லை, கன்னானுக்கு முறை இல்லை.

கருவை உரு அறியான், கண்டாரைப் பேரறியான்.
கரை காணாத தோணியை (கப்பலை)ப்போலத் தவிக்கிறது.
கரை தட்டின கப்பல்போல.
கரைப்பக்கம் பாதை இருக்கக் கப்பல் ஏறினவனும், சொல்ல லாகாததை மனையாளுக்குச் சொன்னவனும் பட்ட பாடுபோல.
கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.
3660 கர்த்தாவைக் குருடன் வேண்டுவது கண்பெறத் தானே.
கர்மத்தினாலே வந்தது தர்மத்தினாலே போகவேண்டும்.
கல உமிதின்றால் ஒரு அரிசி (அவிழ்) தட்டாதா?
கலகத்திலே புகாதவன் (புளுகாதவன்) நரகத்திலே போவானாம்.
கலகத்திலே போயும் கால்மாடு தலைமாடா?
கலகத்திலே போன பிற்பாடு கால்மாடு தலைமாடா?
கலகமே மெய்யானாற் புளுகாதவன் பாவம்.
கலகம் கலந்தால் உலகம் கலங்கும்.
கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.
கலக்கந்தை கட்டிக்கொண்டு காணப் போனாளாம், இரு கலக் கந்தை கட்டிக்கொண்டு எதிரே வந்தாளாம்.
3670 கலக்கமில்லா நெஞ்சுக்கு இளக்கரிப்பென்ன?
கலக் கம்பு தின்றாலும் காடை காட்டிலே.
கலக்கினும் கடல் சேறாகாது.
கலத்துக்குத் தெரியுமா கர்ப்பூர வாசனை?
கலத்திலே சோற்றை இட்டுக் கையைப் பிடித்தாற் போல.
கல நெல்லுக்கு கல உமி யிருக்குமா?
கலப் பணத்தைப் பார்க்கிலும் (விட) ஒரு கிழப் பிணம் நல்லது.
கலப்பாலில் ஒரு துளி விஷம் கலந்தாற்போல.
கலப்பாலுக்குத் துளி பிரை.
கலப்பாலை ஒருமிக்கக் குடித்த பூனையை உழக்காகிலும் கறக்கச்சொன்னால் கறக்குமா?

3680 கலப்பாலையும் சோற்றையும் காலால் உதைத்துப் போட்டு விலை மோருக்கும் கூழுக்கும் வெளியே தவிக்கிறதா?

கலப்பால் கறக்கலாம் துளிப்பால் முலைக்கு ஏற்றலாமா?

கலப்பால் குடித்த பூனை ஆழாக்குப்பால் குடியாது?

கலப்பானாலும் பூசப் பூசப் பொன்னிறம்.

கலப்புழுவை நீக்கின கர்ணன்.

கலமா இடித்தவள் பாவி, கப்பி இடித்தவள் புண்ணியவதியா?

கலம் கலந்தால் குலம் கலக்கும்.

கலம் குத்தினாலும் பதர் அரிசி ஆகாது.

கலம் பதரைக் குத்தினாலும் அரிசி ஆகாது.

கலம் போனது மல்லாமல் கண்ணுக்கும் மூக்குக்கும் வந்தது கேடு.

3690 கலவுமி தின்றால் ஒரு அவிழ் தட்டாதா?

கலவைக் கீரை பறிப்பதுபோலப் பேசுகிறான்.

கலிக்குப் புதுமையான காரிய மிருக்கிறது.

கலியன் பாற் சோறு கண்டதுபோல.

கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்தாற்போல.

கலியாணத்திலும் பஞ்சம் இல்லை, களத்திலும் பஞ்சம் இல்லை.

கலியாணத்திற்கு வந்த பெண்டுகளிடத்திற் போனால் போவேன், இல்லாவிட்டால் கல்லிலே வைத்து நறுக்குவேன்.

கலியாணப் பந்தலிலே கட்டின ஆடுபோல.

கலியாணம் எங்கே? காசுப்பையிலே.

கலியாணம் கழிந்தால் கைச் சிமிழ் கிட்டாது.

3700 கலியாணம் செய்கிறதும் கதவைச் சாத்துகிறதும்.

கலியாணம் செய்தும் சந்நியாசியா?

கலியாணம் பண்ணின வீட்டில் ஆறுமாசம் கருப்பு.

கலியாணவீட்டிலே பந்தற்காலைக் கட்டி அழுகிறவள் செத்தவீட்டில் சும்மா இருப்பாளா?

கலியாண வீட்டிலே பிள்ளை வளர்த்தாற்போல.

கலியாண வீட்டிற்குப்போய் அறியான், மேளச்சத்தமும் கேட்டறியான்.

கலியாண வீட்டுக் கறி அகப்பை, சாவு வீட்டுச் சோற்று அகப்பை.
கலையும் மப்பைக் கண்டு கட்டியிருந்த விதையை வட்டிக்கு விட்டானாம்.
கலையும் மப்பை நம்பிக் கரைத்த மாவை வட்டிக்கு விட்டதுபோல்.
கல் ஆனாலும் கணவன், புல் ஆனாலும் புருஷன்.
3710 கல் எறிக்குத் தப்பினாலும் கண் எறிக்குத் தப்பக் கூடாது.
கல்மேல் எழுத்துக் கலையுமா?
கல்லடிச்சித்தன் போன வழி, காடுமேடு எல்லாம் தவிடுபொடி.
கல்லா ஒருவன் குல நலம் பேசுதல் நெல்லுடன் பிறந்த பதராகும்மே.
கல்லாடம் படித்தவனோடு மல் ஆடாதே.
கல்லாதவரே கண்ணில்லாதவர்.
கல்லாதார் செல்வத்திலும் கற்றார் வறுமை நலம்.
கல்லார் உறவகல் காமக்கடல் கட.
கல்லார் உறவினும் கற்றார் பகை நலம்.
கல்லாலே கட்டிச் சாந்தாலே பூசி இருக்கிறதா?
3720 கல்லிலும் வன்மை கனமூடர் நெஞ்சம்.
கல்லிலே நார் உரிக்கிறது போல.
கல்லிலே வெட்டி நாட்டினாற்போல.
கல்லின் மேலிட்ட அம்புகளைப் போல.
கல்லுக்குள் தேரையைக் காப்பாற்ற வில்லையா?
கல்லுக்குள்ளிருக்கிற தேரையையும், முட்டைக்குள்ளிருக்கும் பறவைக் குஞ்சையும் ஊட்டி வளர்க்கிறது யார்?
கல்லுங்கரைய மண்ணும் உருக அழுதாள்.
கல்லுங் கரையுமே கற்றூண் இற்றுப் போமே.
கல்லுப் பிள்ளையாரை ஊம்பினால் பல்லுத்தான் போகும்.
கல்லும் காவேரியும் உள்ளமட்டும் வாழ்க.
3730 கல்லும் தேங்காயும் சந்தித்ததுபோலப் பேசுகிறான்.
கல்லுவருகிற விசையைக்கண்டால் பல்லைச் சிக்கென மூடவேண்டும்.

கல்லுளிச்சித்தன் போனவழி கல்லுகளெல்லாந் (கரடு முரடெல்லாந், காடுமேடெல்லாந்) தவிடு பொடி.
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமா?
கல்லை ஆகிலும் கரைக்கலாம், மனத்தைக் கரைக்கலாகாது.
கல்லைக்கட்டி முத்தம் கொடுத்தாற் போலாகும்.
கல்லைக்கண்டால் நாயைக் காணோம், நாயைக்கண்டால் கல்லைக் காணோம்.
கல்லைக் கிள்ளிக் கை இழந்ததுபோ லாகும்.
கல்லைக் குத்துவானேன் கைநோகிறது என்று அழுவானேன்?
கல்லைப்போலக் கணவனிருக்கக் கஞ்சிக்கு (நெற்சோற்றுக்கு) அழுவானேன்?
3740 கல்வி அழகே அழகு.
கல்வியில்லாச் செல்வமும் கற்பில்லா அழகும் கடுகளவேனும் பிரகாசிக்காது.
கல்வி இல்லாச் செல்வம், கற்பில்லா அழகு.
கல்வி உள்ள வாலிபன் கன கிழவன்.
கல்வி என்ற பயிருக்குக் கண்ணீர் என்ற மழைவேண்டும்.
கல்வி கரையில கற்பவர் நாள்சில.
கல்வி கற்கிறதைவிடத் தன் கருத்து ஆராய்கிறது நன்மை.
கல்விகற்றும் கழுநீர் பானையிற் கையிடுகிறது.
கல்விக் கிருவர், களவுக் கொருவர்.
கல்வியும் குலவும் வெல்வது வினவில்.
3750 கல்வீட்டுக்காரி திருநாள் கழுக்கம், குச்சுவீட்டுக்காரி திருநாள் கூக்குரல்.
கவணெறி நெறியில் நில்லாதே, கண்டவன் தலையை உடைக்கும்.
கவரைச் செட்டிமேலே கழுதை புரண்டேறினாற் பேலே.
கவலை உடையார்க்குக் கண்ணுறக்கம் வராது.
கவி கொண்டார்க்குக் கீர்த்தி, அதைச் செவிகொள்ளார்க்கு அவகீர்த்தி.
கவி கொண்டார்க்கும் கீர்த்தி, கலைப்பார்க்கும் கீர்த்தியா?

கவீந்திராணாம் கஜேந்திராணாம்.
கவைக்குத் தகாத காரியம் சபைக்குத் தகுமா?
கவையைப் பற்றி கழுதையின் காலைப் பிடி.
கவ்வை சொல்லின் எவ்வர்க்கும் பகை.
3760 கழனியில் விழுந்த கழுதைக்கு அதுவே கைலாசம்.
கழி இருந்தால் கழுதை மேய்த்துக் கொள்ளலாம்.
கழுகுக்கு மூக்கில் வேர்ப்பது போல.
கழுக்கு மொழுக்கென் றிருக்கிறான்.
கழுக்கு மொழுக்கு என்று கட்டுருக்காளை போல.
கழுதை அறியுமா கந்தப்பொடி வாசனை?
கழுதை உழுது குறவன் குடி ஆனானா?
கழுதை உழுது வண்ணான் குடி ஆனானா?
கழுதை கடித்தது மல்லாமல் காலையும் மிதித்ததாம்.
கழுதை காணவேண்டினால் குட்டிச் சுவரிலே காணலாம்.
3770 கழுதை கெட்டால் குட்டிச் (கட்டைச்) சுவர்.
கழுதைக்கு உபதேசம் காதிலே சொன்னாலும் உரைத்தாலும்) அபயக்குரல் அன்றி அங்கு ஒன்றும் இல்லை அப்பா.
கழுதைக்கு ஏன் கடிவாளம்?
கழுதைக்கு ஏன் கலினம்?
கழுதைக்கு ஜீனி கட்டினாலும் குதிரை ஆமா?
கழுதைக்கு சேணம் கட்டினாலும் குதிரை ஆமா?
கழுதைக்குத் தெரியுமா கஸ்தூரி வாசனை?
கழுதைக்குத் தெரியுமா கரும்பு ருசி?
கழுதைக்குத் தெரியுமா கர்ப்பூர வாசனை?
கழுதைக்குப் பரதேசம் குட்டிச் சுவர்.
3780 கழுதைக்கு வாழ்க்கைப்பட்டு உதைக்கு அஞ்சினால் தீருமா?
கழுதை தப்பினால் குட்டிச்சுவர்.
கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று.
கழுதை புரண்ட களம் போல.
கழுதை புரண்டால் காடு கொள்ளாது.
கழுதைப் பால் குடித்தவன்போ லிருக்கிறான்.
கழுதைப் புட்டையானாலும் கை நிறைய வேண்டும்.

கழுதைப் புண்ணுக்குத் தெருப் புழுதி மருந்து.
கழுதைப் பொதியிலே உறை மோசமா?
கழுதைப் பொதியில் ஐங்கல மாறாட்டமா?

3790 கழுதை மயிர் பிடுங்கித் தேசம் கட்டி ஆள்கிறதா?
கழுதை மயிர் பிடுங்கினால் லாபம் என்ன, நஷ்டம் என்ன?
கழுதை மூத்திரத்தை நம்பிக் கட்டுச்சோற்றை அவிழ்க்கிறதா?
கழுதைமேல் ஏறி என்ன இறங்கி என்ன?
கழுதைமேல் ஏறியும் சுகம் இல்லை, இறங்கியும் துக்கம் இல்லை.
கழுதைமேல் ஏறியும் பெருமையில்லை, இறங்கியும் சிறுமை யில்லை.
கழுதையின் சூத்திலே கட்டெறும்பை விட்டாற் போல.
கழுதையும் குதிரையும் சரி ஆமா?
கழுதையும் குதிரையும் பிணைத்தாற்போல.
கழுதையைக் கட்டி ஓமம் வளர்த்தது போல.

3800 கழுதை வளையற்காரன் கிட்டப் போயும் கெட்டது, வண்ணான் கிட்டப்போயும் கெட்டது.
கழுதை விட்டை ஆனாலும் கை நிரம்ப வேண்டும் என்கிறாய்.
கழுதை விட்டை கை நிரம்பினால் போதும்.
கழுத்தறுக்கக் கத்தி கையிற் கொடுத்தாற் போல.
கழுத்தி லிருக்கிறது ருத்திராட்சம், கையி லிருப்பது கொடிய நகம்.
கழுத்திலிருப்பது ருத்திராட்சம், மடியிலிருப்பது கன்னக்கோல்.
கழுத்திலே கரிமணி இல்லை, பெயர் முத்துமாலை.
கழுத்துக்குமேல் கத்தி வந்திருக்கச்சே செய்யவேண்டிய தென்ன?
கழுத்து மாப்பிள்ளைக்குப் பயப்படா விட்டாலும் வயிற்று மாப்பிள்ளைக்குப் பயப்பட வேண்டும்.
கழுத்து வெளுத்தாலும் காகம் (காக்காய்) கருடனாமா?

3810 கழுநீர்ப்பானையில் விழும் பல்லியைப்போல.
கழுவிக் கழுவி ஊற்றினாலும் கவிச்சு நாற்றம் போகாது.
கழுவிக் கழுவிப் பின்னும் சேற்றை மிதிக்கிறதா?
கழுவிலே நெய் உருக்குகிற கள்ளிமுண்டை.
கழுவுக் கேற்ற கோமுட்டி.
கழுவுக்கு வேர்க்கிறதுபோல் வேர்க்கிறது.
கழுவேறத் துணிந்தநீலி கண்ணில் மை யிட்டதற்குக் கரிக்கிற தென்கிறாளாம்.
கழைமேல் ஏறி ஆடினாலும் கீழே வந்து தான் பிச்சைகேட்கவேண்டும்.
களம் சாறுகிறவளை மிரட்டுவானாம் போர் பிடுங்குகிறவன்.
களவாண்டு பிழைப்பதிலும் கச்சட்டங் கழுவிப் பிழைக்கலாம்.
3820 களவும் கற்றுமற (களவும் கத்துமற).
களிறுவாயில் அகப்பட்ட கரும்பு மீளுமா?
களைபிடுங்காப் பயிர் காற்பயிர்.
களையக்கூடாததைக் கண்டால் அடிபெயர்ந்து அப்புறம் போ.
களையக் கூடாததைக் கண்டியாமல் சகித்துக்கொள்.
கள் குடித்தவனுக்குக் கள் ஏப்பம், பால் குடித்தவனுக்குப் பால் ஏப்பம்.
கள் விற்ற காற் காசிலும் அமிர்தம் விற்ற அரைக்காற் காசு நேர்த்தி.
கள் விற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதைவிடக் கர்ப்பூரம் விற்றுக் காற்பணம் சம்பாதிப்பது மேல்.
கள்ளப்பிள்ளையிலும் செல்லப்பிள்ளை உண்டா?
கள்ளப்புருஷனை நம்பிக் கணவனைக் கைவிடலாமா?
3830 கள்ள மனம் துள்ளும்.
கள்ள மாடு சந்தை ஏறாது.
கள்ள மாடு துள்ளும்.
கள்ள வாசலைக் காப்பானைப்போல்.
கள்ள விசுவாசம் கழுத்தெல்லாம் செபமாலை.
கள்ளனுக்கு ஊரெல்லாம் பகை.
கள்ளனுக்குக் காண்பித்தவன் பகை.

கள்ளனுக்குக் கூவென்றவன் பேரிலே பழி.
கள்ளனுக்குத் தோன்றும் (தெரியும்) திருட்டுப்புத்தி.
கள்ளனுக்குப் பாதி கறிக்குப் பாதி.
3840 கள்ளனுக்கும் பாதி வெள்ளனுக்கும் பாதி.
கள்ளனுமாகி விளக்கும் பிடிக்கிறான்.
கள்ளனும் தோட்டக்காரனும் ஒன்று.
கள்ளனும் தோட்டக்காரனும் ஒன்று கூடினால் விடியு மட்டும் திருடலாம்.
கள்ளனும் வெள்ளனும் ஒன்று.
கள்ளனை ஆரும் நள்ளார் என்றும். [போல.
கள்ளனை உள்ளே வைத்துக் கதவைச் சாத்தினாற்
கள்ளனைக் கிள்ளன் பிடித்தான்.
கள்ளனைத் தேடிய கள்ளப்பசுப்போல.
கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பலாகாது.
3850 கள்ளனையும் புகையிலையையும் கட்டித் தீரு.
கள்ளனையும் வெள்ளனையும் கட்டி விடு.
கள்ளன் அச்சம் காடு கொள்ளாது.
கள்ளன் உறவு உறவுமல்ல, காசாவிறகு விறகும் அல்ல.
கள்ளன் கொண்ட மாடு எத்துறைபோ யென்ன?
கள்ளன் செய்த சகாயம் காதை அறுக்காமல் கடுக் கனைக் கழற்றிக் கொண்டான்.
கள்ளன் பிள்ளைக்கும் கள்ளப் புத்தி.
கள்ளன் பின் போனாலும் குள்ளன் பின் போகப் படாது.
கள்ளன் புத்தி திருட்டு மேலே.
கள்ளன் பெண்சாதி கைம்பெண்சாதி.
3860 கள்ளன் பெரிதோ காப்பான் பெரிதோ?
கள்ளன் மறவன், கனத்தால் அகம்படியான், மெள்ள மெள்ள வந்து வெள்ளாளன் ஆவான்.
கள்ளன் மனையாளைக் களவுப் பொருளைக் காணும் குறிகேட்கலாமா?
கள்ளன் மனைவி கைம்பெண் என்றும்.
கள்ளி என்னடி கல் இழைப்பது? காதில் இருப்பது பித்தளை.

கள்ளிக்குக் கண்ணீர் முந்தும், (கள்ளமாப்பிள்ளைக்) கொள்ளிக்கு வாய் முந்தும்.
கள்ளிக்குக் கலநீர் கண்ணிலே.
கள்ளிக்குத் தண்ணீர் கண்ணிலே, நீலிக்குத் தண்ணீர் நிமையிலே.
கள்ளிக்கு நாடு எல்லாம் காடு.
கள்ளிக்கு முள்வேலி இடுவானேன்?
3870 கள்ளிக்கும் வெட்டிக் கற்றாழைக்கும் வெட்டுகிறது.
கள்ளிக்கு வேலி ஏன், சுள்ளிக்குக் கோடாலி ஏன்?
கள்ளிக்கொம்புக்கு வெள்ளிப்பூண் கட்டினதுபோல.
கள்ளி பெருத்தென்ன? காய் உண்டோ நிழலுண்டோ?
கள்ளு குடித்தவன் கொள்ளு பொறுக்கான்.
கள்ளுக் குடியனுக்கு வாய் என்றும் சூத்தென்றும் தெரியாது.
கள்ளுண்ட குரங்கு.
கள்ளும் சூதும் இருக்கிற இடத்தில் கூத்திக்கள்ளனும் இருப்பான்.
கள்ளைக் குடித்தால் உள்ளதைச் சொல்லுவான்.
கள்ளைக்கொடுத்துக் காரியத்தை அறி.
3880 கள்ளைவிட்டுக் காட்டுத்தேனைக் குடித்ததுபோல.
கறக்க ஊறும் ஆவின்பால், கற்க ஊறும் மெய்ஞ் ஞானம்.
கறக்கக் கறக்க ஊறும் பசுவின்பால், படிக்கப்படிக்க ஊறும் மெய்ஞ்ஞானம்.
கறக்கிறது உழக்கு, உதைக்கிறது பல்லுப்போக.
கறக்கிற பசுவை விற்று ஊம்பக்கிடா வாங்கினானாம்.
கறந்தபாலும் எச்சில், பிறந்த பிள்ளையும் எச்சில்.
கறந்தபாலைக் காகமும் (காக்காயும்) தொடாது.
கறந்த பாலைக் காய்ச்சாமற் குடித்தால், காச வியாதி தானே எடுபடும்.
கறந்தபால் கறந்தபடியே பேசு.
கறந்தபால் முலைக்கு ஏறுமா?
3890 கறந்தபால் முலை புகா.
கறந்த மேனியாய்ப் பேசுகிறது.

கறவை யுள்ளான் விருந்துக் கஞ்சான்.
கறிக்கு இல்லாத வாழைக்காய் பந்தலிலே கட்டித் தொங்கவோ?
கறிக்குக் கலநெய் வார்த்தாலும் கணக்கோடே.
கறிக்குழக்கு நெய் வார்த்தாலும் கண்ணாரக்கண்டதைச் சொல்லு. [ என்கிறான்.
கறுத்ததெல்லாம் தண்ணீர் வெளுத்ததெல்லாம் பால்
கறுப்பு நாய் வெள்ளை நாய் ஆகுமா?
கறுப்பு மாடு கால் மாடு.
கறுப்பு வெளுப்பு ஆகாது, கசப்பு இனிப்பு ஆகாது.
3900 கறுமுறு காந்தப்படலம் வாசிக்கிறார் கவிராயர்.
கறையான் புற்றில் அரவம் குடிகொண்டதுபோல.
கறையான் புற்றுப் பாம்புக்கு உதவுகிறது.
கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிபுகுந்ததுபோல.
கற்க கற்க கடசறக் கற்க.
கற்கண்டாற் செய்த எட்டிக்கனியும் கசக்குமா?
கற்கையில் கல்வி கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு.
கற்பக விருக்ஷத்தண்டைபோயும் காஞ்சிரங்காய் (எட்டிக்காய்) வாங்கினாற்போல.
கற்பக விருக்ஷத்தைச் சேர்ந்த காகமும் அமிர்தம் உண்ணும்.
கற்பித்தவனுக்குக் காக்கக் கடன்.
3910 கற்பித்தவனுக்குக் காக்க வல்லமை இல்லையா?
கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன்.
கற்பித்தவன் காப்பாற்றுவான்.
கற்பில்லாத அழகு, வாசனை இல்லாத பூ.
கற்பெனப்படுவது சொல்தவறாமை.
கற்ற இடத்திலா வித்தையைக் காட்டுகிறது?
கற்றது கையளவு (கைம்மண்ணளவு) கல்லாதது உலகளவு.
கற்றது கையளவு, கல்லாதது கடலளவு.
கற்றது சொல்லான் மற்று என்ன செய்வான்?
கற்றதைக் காய்ச்சியா குடிக்கப்போகிறாய்?
3920 கற்றவரது கோபம் நீரின் பிளவுபோல் மாறும்.
கற்றவனுக்கு மயிரத்தனை, கல்லாதவனுக்கு மலையத்தனை

கற்றவனுக்கு வித்தை கால் நாழி.
கற்ற வித்தையைக் காய்ச்சிக் குடிக்கிறவன் போல.
கற்றவனும் உண்பான், பெற்றவளும் உண்பாள்.
கற்றறி மோழையாய் இராதே.
கற்றாழை சிறுத்தாலும் ஆளை அடிவைக்காது.
கற்றாழை நாற்றமும் பித்தளை வீச்சமும் போகாது.
கற்றுக் கற்றுப் பேசாதே.
கற்றுக்கொடுத்த சொல்லும் (பேச்சும்) கட்டிக்கொடுத்த சாதமும் எத்தனை நாள் நிற்கும் (நாளைக்கு)?
3930 கற்றும் கற்றறிமோழை, அதுபோலக் கண்ணிருந்தும் குருடு.
கற்றும் கற்றறிமோழையா?
கற்றோர் அருமை கற்றோர் அறிவர்.
கன ஆசை கன நஷ்டம்.
கன எலி வளை எடாது.
கனக மாரி பொழிந்தது போல.
கனஞ் செய்தால் இஷ்டம், கன வீனத்தால் நஷ்டம்.
கன தாராளம் மனது இறுகல்.
கனத்த உடைமைக்கு அனர்த்தம் இல்லை.
கனத்தால் இனமாகும், பணத்தால் சனமாகும்.
3940 கனத்திற்கு நற்குணம் சுமை தாங்கி.
கனத்தைக் கனங் காக்கும் (பார்க்கும்), கருவாட்டுப் பானையைப் பூனை காக்கும் (பார்க்கும்).
கன நேசம் கண்ணல் கொடுக்கும்.
கன மழை பெய்தாலும் கருங்கல் கரையுமா?
கன மூடன் கைப்பொருள் இழப்பான்.
கனவிலும் காக்கைக்கு மலம் தின்பதே நினைவு.
கனவிலே கண்டவனுக்குப் பெண் கொடுத்த கதை.
கனவில் உண்ட சோறு பசி தீர்க்குமா?
கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா?
கனவில் கண்ட பொருள், கானில் கண்ட புனல்.
3950 கனவில் கண்ட பொருள் கைக்கு எட்டுமா?
கனிந்த பழம் தானே விழும்.
கனிந்த பழம் நீர் தின்றீர், காயை உலுக்கி விட்டீர்.
கனியை விட்டுக் காயைத் தின்கிறதா?

கன்மத்தினாற் சாதியன்றிச் சென்மத்தினால் இல்லை.
கன்மத்தினால் வந்தது தன்மத்தினால் போகவேண்டும்.
கன்று இருக்கக் காசத்தனை பால் கறவாப் பசு, கன்று செத்த பிறகு கலப்பால் கறக்குமா?
கன்றுகளாய்க் கூடிக் களைபறிக்கப் போனால் வைக் கோல் ஆகுமா செத்தை ஆகுமா?
கன்றுகூடிக் களம் அடித்தால் வைக்கோலும் ஆகாது செத்தையும் ஆகாது.
கன்று கெட்டால் காணலாம் தாயருகே.
3960 கன்று கொண்டு கடா அடி அடித்தால் வைக்கோலு மாகாது, செத்தையும் ஆகாது.
கன்றுக் குட்டி கிட்டவும் கடன்காரன் கிட்டவும் இருக்கப்படாது.
கன்றுக் குட்டியை அவிழ்க்கச் சொன்னார்களா, கட்டுத்தறியைப் பிடுங்கச் சொன்னார்களா?
கன்றும் பசுவும் காடேறி மேய்ந்தால், கன்று கன்று வழியே, பசு பசு வழியே.
கன்றுள்ளபோதே காணோம், செத்த பிறகா கொட்டப்போகிறது?
கன்றை இழந்த பசுப் போல.
கன்றைக்கண்டு ஓடிவரும் பசுவைப்போல.
கன்றைக் காணாத பசுப்போல.
கன்றைத்தேடிப் பசு தவிக்கிறது போல.
கன்றை விட்டுக் கட்டுத்தறியைப் பிடிப்பது போல.
3970 கன்றை விட்டு மாட்டை முட்டவிடுகிறது.
கன்னக்கோலை மறைத்துக்கொண்டு கைச் செபமணியைச் செபிக்கிறது.
கன்னத்தில் அடித்தாலும் கதறி அழச் சீவனில்லை.
கன்னவாசல் கரிப்பானை போல.
கன்னானுக்கு முன்னே கழுதை பரதேசம் போனாற் போல.
கன்னான் நடமாடக் குயவன் குடிபோவான்.
கன்னி இருக்கக் காளை மணம் போகலாமா?
கன்னி இருக்கக் காளை மணை ஏறலாமா?
கன்னிப்பூ மலரவில்லை.

## கா.

காகத்திலே வெள்ளை உண்டா?
3980 காகம் இருக்கப் பழம் விழுந்ததுபோல.
காகம் இல்லாத ஊர் சோனகன் இல்லாத ஊர்.
காகம் இல்லாத ஊர் பாவி (பாவம்) இல்லாத ஊர்.
காகம் ஏறிப் பனங்காய் உதிருமா?
காகம் (காக்காய்) கர் என்றால் கணவனை (அகமுடையானைப்போய்) அப்பா (அப்பாடி) என்று கட்டிக் கொள்ளுவாளாம்.
காகம் கழுத்து கறுத்தென்ன வெளுத்தென்ன?
காகம் காலமே கர் கா என்று கத்தும்.
காகம் கொக்கு கனகிளி யனுமான் குடியர் குணம்.
காகம் வலமானால் ஆயுசு விருத்தியாகும்.
காக்கனுக்கும் பூக்கனுக்கும் பூத்தாயோ புன்னை, கண்ணாளன் வருந்தனையும் பொறுக்கலையோ புன்னை?
3990 காக்காயினும் கனசிவப்பு.
காக்காயின் கண்ணிற்குப் பீர்க்கம்பூ பொன்னிறம்.
காக்காய் கதறப் பயந்து கணவனைக் கட்டிக் கொண்டாளாம்.
காக்காய்க்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
காக்காய்க் கூட்டம்போல கட்டுக்கொப்பு.
காக்காய் பிடிக்கிறவனுக்குக் காலம்.
காக்கை இருந்த கொம்பு அசையாது.
காக்கை ஏறினதும், பனம்பழம் விழுந்ததும்.
காக்கை குருவி மூக்காலே கொறிக்கிறதுபோல.
காக்கைக்கு அஞ்சுகுணம்.
4000 காக்கையிற் கரிது களாம்பழம்.
காக்கையின் கழுத்தில் பனங்காயைக் கட்டினது [போல.
காக்கையும் கத்திப் போகிறது, கருவாடும் உலர்ந்து போகிறது.
காக்கையும் காற்றும் போக்கு உண்டானால் வரும்.
காக்கையும் குயிற்குஞ்சைத் தன் குஞ்சுபோல வளர்க்கும்.
காக்கையைக் கண்டு அஞ்சுவாள் கரடியைப் பிடித்துக் கட்டுவாள்.

காசி இரண்டு எழுத்துத்தானே, காண எத்தனை நாட் செல்லும்?
காசிக்குப்போயும் கருமம் தொலையவில்லை.
காசிக்குப்போயும் மூடத்தவசி காலில் விழுகிறதா?
காசிக்குப்போனாலும் அகப்பை அரைக்காசு.
4010 காசிக்குப்போனேன் காவடி கொண்டு வந்தேன்.
காசிமுதல் ராமேசுவர பரியந்தம்.
காசிமுதல் ராமேசுவரம் வரையில் தெரிந்தவன்.
காசியில் இருந்தவன் கண்ணைக்குத்தக் காஞ்சீபுரத்தி லிருந்து கையை நீட்டிக்கொண்டு போனானாம்.
காசில்லாதவன் முழுதும் போட்டதுபோல.
காசு இல்லாதவனுக்கு வராகன் பேச்சு என்ன?
காசு இல்லாதவனை வேசியும் துப்பமாட்டார்கள்.
காசு கொடுத்தால் வேசி வருவாள், கலநெல்லைக் கொடுத்தால் அவள் அக்காளும் ஆத்தாளும் கூட வருவார்கள்.
காசுக்கு ஒரு குஞ்சு விற்றாலும் கணக்கன் குஞ்சு ஆகாது.
4020 காசுக்கு ஒரு குஞ்சு விற்றாலும் கம்மாளன் குஞ்சு ஆகாது.
காசுக்கு ஒரு குதிரையும் வேண்டும், காற்றைப்போல் பறக்கவும் வேண்டும்.
காசுக்கு ஒரு புடவை (சேலை) விற்றாலும், நாயின் சூத்து அம்மணம்.
காசுக்கு இரண்டு பீசுக்கு நான்கு.
காசுக்கு இரண்டும் பீசுக்கு (பிசுக்குக்கு) ஒன்றும்.
காசுக் கூடு (கூண்டு) கரிக்கூடாய்ப் (கூண்டாய்ப்) போயிற்று (போச்சுது).
காசுக்குப் பத்துப் பெண்டாட்டி, கொசுருக்கு ஒரு குத்து.
காசுக்குப் போன மானம் கோடி கொடுத்தாலும் வராது.
காசுக்கு லோபி கழுதையினிடத்திற் போனாற்போல.
காசுப் பையோடே களவு போனால் கடையிலே செட்டிக்குக் காரியமென்ன!

4030 காசைக் கொடுத்துக் குத்துமாடு தேடுகிறதா?
காஞ்சிபுரத்திற்குப் போனால் கால் ஆட்டி இருந்து உண்ணலாம்.
காஞ்சீபுரத்து உபசாரம்.
காடிக்குப்போய் தயிர் கொண்டுவந்ததுபோல.
காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலன் அடைவான்.
காடும் செடியுமில்லாத ஊருக்குக் கழுதைமுள்ளி கற்பகவிருக்ஷம்.
காடும் செடியும் அவளாகத் தோணு தென் கண்களுக்கே.
காடும் செடியும் அவளாகவே தோன்றுகிறது.
காடு வா என்கிறது வீடு போ என்கிறது.
காடு விளைந்தாலும் ஒரு மேடு விளைந்தாலும் கடன் கழிந்து போம்.

4040 காடு விளையாவிட்டாலும் கடமை போகுமா?
காடு வெந்தாற் சந்தன மரமும் வேகாதோ?
காடை இடமானால் நாட்டை ஆளலாம்.
காட்டக்கொடுத்த பணத்தை எடுத்துக்கொண்டு குமரகண்ட வலிப்பு வலிக்கிறது.
காட்டாளுக்கு ஒரு மூட்டாள், அடுப்பங் கட்டைக்கு ஒரு துடைப்பக் கட்டை.
காட்டாளை உண்ட கனிபோலிருக்கும் தேட்டாளன் திரவியம்.
காட்டிக் கொடுத்துக் கடக்கப் போய் நிற்கலாமா?
காட்டிலே செத்தாலும் வீட்டிலே தான் தீட்டு.
காட்டில் ஆனையைக் காட்டி வீட்டில் பெண்ணைக் கொடுக்கிறது போல.
காட்டில் புதைத்த கனதனமும், பாட்டிற் புதைத்த பழம்பொருளும், வீட்டில் மனையாள் மனமும் நாட்டில் அறிவதரிது.

4050 காட்டுக் கிளாக்காயும் கண்கெட்ட தயவில்லாத ஒணுரனும் கோத்துக் குலாவுவதுபோல.
காட்டுக்கு எறித்த நிலாவும் கசட்டுக்குச் செய்த நன்றியும் வீண்.
காட்டுக்கு எறித்த நிலாவும் கானலுக்குப் பெய்த மழையும்.

காட்டுக்குப் புலி ஆதரவு, புலிக்குக் காடு ஆதரவு.
காட்டுக்குப் போகிறவழியில் கண்டெடுத்தமாணிக்கம்.
காட்டுக்கோழிக்கு உரற்குழியே கைலாசம்.
காட்டுத்தேனை விட்டுக் கள்ளைக் குடித்ததுபோல.
காட்டுப்பாலுக்கு ஏற்ற கல்லுப்பு.
காட்டுப் புறாவுக்காக சதை அரிந்த மன்னன் கதை போல.
காட்டுப் பூச்சிகள் எதிர்த்த கதை ஆச்சு.
4060 காட்டுப் பூனைக்குச் சிவன் ராத்திரியா (சிவராத்திரி விரதமா)?
காட்டுப் பேய்ச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா?
காட்டு வாழை வந்தால் வீட்டு வாழ்வு போகும்.
காட்டேரி உடைமை ராத் தங்காது.
காட்டை வெட்டிச் சாய்த்தவனுக்குக் கம்பு பிடுங்கப் பயமா?
காட்டை வைத்துக்கொண்டல்லவோ வேட்டை ஆட வேண்டும்?
காண ஒருதரம் கும்பிட ஒருதரமா?
காணக் கிடைக்குமோ காணவென்றாற் கிட்டுமோ?
காணக் கிடைத்தது கார்த்திகைப் பிறைபோல.
காணப்பட்டன எல்லாம் அழியப்பட்டன.
4070 காணம் என்றால் வாயைத் திறக்கிறது, கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்ளுகிறது.
காணாது கண்ட கம்பங் கூழைச் சிந்தாது குடி அடி சில்லி மூக்கி!
காணாது கண்டாற்போல்.
காணாமல் கண்டேனோ கம்பங்கதிரை, சிந்தாமல் குத்தடி சில்லி மூக்கி!
காணி ஆசை கோடிகேடு.
காணி ஏறக் கோடி அழியும்.
காணி கவிழ்ந்து போகிறதா?
காணி காணியாய்ச் சம்பாதித்துக் கோடி கோடியாய்ச் செலவழிக்கிறது?
காணிக்கு ஒத்தது கோடிக்கு.
காணிக்குச் சோம்பல் கோடிக்கு வருத்தம்.

4080 காணிச்சோம்பல் கோடிக்கேடு.
காணி தேடிக் கோடி அழிக்கிறது.
காணி மந்தம் கோடி துக்கம்.
காணியாளன் வீடு வேகச்சே காலைப் பிடித்து இழுத்த கதை.
காணியில் இல்லாததா கோடியில் வரப்போகிறது?
காண்பாரைக் கண்டு கழுதையும் பரதேசம் போயிற்றாம்.
காதம் கொடுத்து இரு காதம் வாங்குகிறதுபோல.
காதம் விட்டு இரு காதம் சுற்றுகிறதுபோல.
காதவழி பெயர்ந்திலான் கழுதையோடு ஒக்கும்.
காதவழி போய் அறியாதவன் மாதம் எல்லாம் நடந்தானாம்.
4090 காதவழி போய் அறியான் கழுதைப் பிறப்பு.
காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே.
காதிலே நாராசம் காய்ச்சி விட்டதுபோல.
காதில் சிலந்தி ஓதடி ஆனந்தி.
காது அறுத்த கூலி கைமேலே.
காது அறுத்தாலும் அறுக்கும் பேன் எடுத்தாலும் எடுக்கும் குரங்கு.
காது காது என்றால் செவிடு செவிடு என்கிறான்.
காது காது என்றால் நாதி நாதி என்றான்.
காதும் காதும் வைத்தாற்போல் இருக்கவேண்டும்.
காதுகுத்தப் பொறுக்காதா?
4100 காதுக்கு இட்டால் முகத்துக்கு அழகு.
காதுக்குக் கடுக்கன் இட்டு ஆட்டிக்கொண்டு திரிகிறான்.
காதை அறுத்தவன் கண்ணைக் குத்தினாலும் குத்துவான்.
காதை அறுத்தவன் கண்ணையும் குத்துவானா?
காதோடு காது வைத்தாற்போ லிருக்கவேண்டும்.
காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் (அடித்துக்) கொண்டுபோனான்(போய்விட்டான்).
காந்தத்தின் முன் ஊசி கம்பித்தாற்போல.
காந்தமும் ஊசியும் போல்.
காந்தம் இழுத்த ஊசியைப்போல்.
காப்பு சொல்லும் கை மெலிவை.

4110 காப்பானுக்குக் கள்ளன் இல்லை.
காப் பொன்னிலும் மாப்பொன் திருடுவான்.
காமத்துக்குக் கண் இல்லை.
காமனுக்குக் கண்ட விடத்தில் கண்.
காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறமன்றோ?
காயாகக் காய்த்துப் பூவாகப் பூத்ததாம்.
காயும் கனியும் உண்டானால் கார்த்திகைமாசம் கலியாணம்.
காயும் புழுவுற்குச் சாயும் நிழல்போல.
காய்ச்சலும் கழிச்சலும் சேர்ந்து விட்டால் நம்பப் படாது.
காய்ச்சிக் குடிக்கிறதையும் கெடுத்தான் கன்னாரப்பட்டு விழுவான்.
4120 காய்ச்சி வார்த்த பெண்ணுக்குப் பேச்சு மூச்சு அற்றது.
காய்ச்சின கஞ்சி வார்க்க ஆளில்லாமற் போனாலும் கச்சை கட்ட ஆளிருக்கிறது.
காய்த்த கொம்பு பணியும்.
காய்த்தமரத்திலே கல் எறியும் சில் எறியும்.
காய்த்தமரத்தில் கல் எறிபடும், காயாதமரத்தில் எறிபடுமா?
காய்த்தமரம் கல் அடிபடும்.
காய்த்தமரம் வளைந்துநிற்கும், நற்குணம் உடையவர் தணிந்து நிற்பார்.
காய் பாரத்தைக் கொடி தாங்காதா?
காய்ந்த இரும்பு குடித்த நீரை வாராது.
காய்ந்த சுண்ணாம்பையும், வதங்கின வெற்றிலையையும், இளைத்த ராஜாவையும் விடக்கூடாது.
4130 காய்ந்த புலி ஆட்டுமந்தையிலே விழுகிறதுபோல.
காய்ந்த புலி ஆவிலே விழுகிறது.
காய்ந்த மரம் தளிர்க்குமா?
காய்ந்த மாடு கம்பங்கதிரில் (கம்பிலே) விழுந்தாற் போல.
காய்ந்த வானம் பேய்ந்தால் (பெய்தால்) விடாது?
காய்ந்தாலும் வெந்நீர் அவம்போமோ?

காய்ந்தும் கெடுத்தது பேய்ந்தும் (பெய்தும்) கெடுத்தது.
காய்மகாரன் நெஞ்சிலே கொள்ளிக்கட்டையாலே சுட வேண்டும்.
காரண குரு காரிய குரு.
காராம் பசுவுக்குப் புல்லுமாம், நந்தவனத்துக்குக் களையுமாம்.
4140 காரிகை கற்றுக் கவி பாடுவதினும் (பாடாதான்) பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று.
காரியக்காரன் கொல்லையிலே கழுதை மேய்கிறது.
காரியத்திலே கண் அல்லாமல் வீரியத்திலே இல்லை.
காரியத்தைப் பற்றிக் கழுதையின் காலைப் பிடி.
காரியமாகுமட்டும் காலைப்பிடி, காரியமான பிறகு குடுமியைப்பிடி.
காரியமாகும் வரையில் கழுதையையும் காலைப்பிடி.
காரியம் பெரிதோ (பிரதானமோ) வீரியம் பெரிதோ (பிரதானமோ)?
காரையை வெட்டிக் கரணைபோட்டால் இடையும் பணமும் காணும்.
கார் அறுக்கட்டும் கத்திரி பூக்கட்டும்.
கார்த்திகை கால் கோடை.
4150 கார்த்திகைக்கு மிஞ்சின (பின்) மழையும் இல்லை, கர்ணனுக்கு மிஞ்சின (பின்) கொடையும் இல்லை.
கார்த்திகைப் பிறை கண்டவன்போல.
கார்த்திகை மாசத்து மழை கலங்கழுவுகிறதற்குமுன்னே வந்து போகும்.
கார்த்திகை மாசத்துப் பூமாதேவி போல.
கார்த்திகை மாதத்திற் கடுமழைபெய்தால், கல்லின் கீழ் இருக்கிற புல்லும் கதிர்விடும்.
காலகதியை யாருங் கடக்கமாட்டார்கள்.
காலங்கண்ட கூளி (பெருச்சாளி).
காலஞ்செய்கிறது கோலஞ்செய்யாதே.
காலஞ்செய்கிறது ஞாலம் செய்யாது.
காலஞ்செய்த கோலத்திற்கு ஆரை வெறுக்கிறது?
4160 கால க்ஷேபத்துக்குக் கூலிக்குக் குத்தினாலும் கமுக்கட்டு (அக்குள்) மயிர் வெளியே தெரியப்போகாதாம்.

காலடிவைக்கச்சே நீச்சானால் கரைஏறுகிறதெப்படி?
காலத்திற் பெய்த மழைபோல.
காலத்தினால் செய்த நன்றி.
காலத்துக்கு ஏற்ற கோலம்.
காலத்துக்கு ஏற்றபடி பெருச்சாளி காவடி எடுத்து ஆடிற்றாம்.
காலமில்லாத காலத்தில் கப்பலோட்டி.
காலமே எழுந்திருந்து காக்கை பார்க்கிறது (முகத்தில் விழித்தல்) ஆகாது.
காலம் அல்லாத காலத்திலே கடலேறி கதிர்காமா கதிர்காமா என்றால் கை கொடுக்குமா?
காலம் அறிந்து ஞாலம் ஒழுகு.
4170 காலம் அறிந்து பிழையாதவன் வால் அறுந்த குரங்கு ஆவான்.
காலம் கலிகாலம் அல்லவா?
காலம் கெட்டுக் கறுப்புக்கோழி வெள்ளை முட்டை யிடுகிறது.
காலம் கெட்டுக்கிடக்கிறது, ஜாக்கிரையாயிரு.
காலம் கெட்டுக் கைப்பிச்சை எடுத்தாற்போல.
காலம்போம் வார்த்தைநிற்கும், கப்பல்போம் துறை நிற்கும்.
காலம்போன காலத்தில் மூலம்வந்து குறுக்கிட்டது போல.
காலாகாலத்தில் செபதபம் பண்ணினால் மேலொரு பாவமுமில்லை.
காலாலே நடந்தால் காதவழி, தலையாலே நடந்தால் எவ்வளவு தூரம்?
காலால் இட்டவேலையைக் கையால் (தலையால்) செய்வான்.
4180 காலால் காட்டினதைக் கையால் செய்கிறது.
காலால் நடக்காமல் காற்றாய்ப் பறக்கிறது.
காலால் முடிந்ததைக் கையால் அவிழ்க்கக்கூடாது.
காலிலே பட்டபிறகா கிரகசாரம் (சநி) போதாது?
காலில்கட்டினால் விருது, குப்பையில் கிடந்தால்துணி.
காலில் சுற்றிய பாம்பு கடித்தாலொழிய விடாது.

காலில் பட்டது (தைத்தது) கண்ணில் பட்டது (தைத்தால்) போல.
காலில் பட்டது (பட்ட பீ) கையிலும் படும் மூக்கிலும் படும்.
காலில் விழுகிறது நல்லது, மேலில் விழுகிறது கெட்டது.
காலுக்கு ஆகிய செருப்பு தலைக்கு ஆகுமா?
4190 காலுக்குக்கடுப்பேதவிரக் கண்டபலன் ஒன்றுமில்லை.
காலுக்குக் கை உதவி, கைக்குக் கால் உதவி.
காலுக்குத் தக்க செருப்பும் கூலிக்குத் தக்க உழைப்பும்.
காலுக்குப்போட்டால் தலைக்குப்போடுகிறான்.
காலை இஞ்சி கடும்பகல் சுக்கு, மாலை கடுக்காய் மண்டலந் தின்னில், கோலை ஊன்றிக் குறுகி நடந்தவர் கோலை விட்டுக் குலாவி நடப்பரே.
காலைக்கல்லு மாலைப்புல்லு.
காலைக் கேட்டுக்கொண்டா நடக்கிறது?
காலைச்சுற்றின் பாம்பு கடியாமல் (கடித்தாலொழிய) விடாது.
காலைச்செல் பூத்தால் அடுத்தமழை அடங்கும்.
காலை துயில்வானும் மாலை இருப்பானும் பதர்.
4200 காலைப்பனிக்கும் கண்விழிக்கும் ஒத்தது செல்வம்.
காலைப்பிடித்த சனியன் ஊரைச்சுற்றி அடிக்கும்.
காலைமோக்ஷமும் வாலை (பாலை) ஞானமும் நிலைக்காது.
கால் அணாக் கொடுக்கிறேன் என்றால் காதவழி நடப்பான்.
கால் அளவே ஆகுமாம் கப்பலின் ஓட்டம், நூல் அளவே ஆகுமாம் நுண்சீலை.
கால்ஆடக் கோல் ஆடும், கோல்ஆடக் குரங்கு ஆடும்.
கால் சிறிதாகில் கனல் ஊரும், கன்னியர்மேல் மால் சிறிதாகில் மனம் ஊரும்.
கால்நடைக்கு இரண்டு காசு, கைவீச்சுக்கு ஐந்துகாசு.
கால்படி அரிசிக்காரன் உள்ள மட்டுந்தான்.
கால்போகா விடத்தில் தலையிட்டுக் கொள்ளாதே.
4210 கால்மாடு தலைமாடு தெரியாமல்
கால்மாடு தலைமாடு வைத்தியன் வந்தான்.

கால்மாறிக் கட்டினால் கனம் குறையுமா?
கால்வாயைத் தாண்டாதவன் கடலைத் தாண்டுவானா?
காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்.
காவல்தானே பாவையர்க்கு அழகு.
காவேரி ஆற்றை மறிப்பாய், கார்த்திகை மாதத்துக் கற்கடக சந்திரனையும் மறிப்பாயா?
காவேரி கஞ்சியாய்ப் போனாலும் நாய் நக்கித்தான் குடிக்க வேண்டும்.
காவேரிக்கரைப் பசுபோல் அலைகிறான்.
காவோலை விழுந்ததென்று குருத்தோலை சிரித்ததாம்.
4220 காளிதோட்டத்து கற்பக விருக்ஷம் ஆருக்கும் உதவாது.
காளிப்பட்டம் போனாலும் மூளிப்பட்டம் போகாது.
காளைபோன வழியே கயிறு போகும்.
காளை மாடானாலும் கண்ணுககு உழக்குப் பால் தா.
காளவாய்க்கு மழையும், கைம்பெண்டாட்டிக்கு பிள்ளையும்.
காறி உமிழ்ந்தவர்களைக் கண்டீர்களா? அங்கே ஒரு தட்டு வைத்தீர்களா?
காறிப்போன கருணைக்கிழங்கு பழம்புளியால் பதம் பெற்றது.
காற்காசு பெறாது.
காற்காசுப் பூனை முக்காற்காசுத் தயிரைக் குடித்தது.
காற்றிலே அகப்பட்ட கப்பல்போல் அலைகின்றது மனம்.
4230 காற்றிலே கருப்பிலே கண்டதில்லை (நினைக்கவில்லை)
காற்றில்லாமல் தூசி பறக்குமா?
காற்று உள்ளபோதே தூற்றிக்கொள், கதவுள்ள போதே சாத்திக்கொள்.
காற்று உள்ளபோதே தூற்றிக்கொள், கரும்பு உள்ள போதே ஆட்டிக்கொள்.
காற்றுக்கா மழைக்கா, போர்த்துக்க (போர்த்துக்கொள்ள)த் துணிக்கா?
காற்றுக் காற்றோடே போயிற்று.
காற்றுக்கு எதிரிலே துப்பினால் முகத்தில் விழும்.

காற்றுக்குத் தோணி எதிர்த்து ஓடாது.
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
காற்றும் மழையும் கலந்தடித்தாற் போல.
4240 காற்றைப் பார்த்துக் கப்பல் நாட்டு.
காற்றைப் பிடித்து கரகத்தில் அடைக்கலாமா?
காற்றோடே வந்து மழையோடே போச்சுது.
கானலைச் சலமாய்க் கண்டது போல.
கானலே நீரென்று எண்ணி மான் ஓடி இளைத்தது போல.

---

## கி.

கிடக்கிறது ஒட்டுத் திண்ணை, கினவு (கனவு) காண்கிறது மச்சு வீடு.
கிடக்கிற காரியம் கிடக்கட்டும் கிழவனை எடுத்து மடியிலே வைத்துக்கொள்.
கிடக்கிறது கிடக்கட்டும் கிழவனை எடுத்து மணையிலேவை.
கிடக்கிறது கிடக்கட்டும் கிழவனையும் கிழவியையும் உள்ளே விடுங்கள்.
கிடக்கிறது குட்டிச்சுவர், கினாக் காண்பது மச்சு மாளிகை.
4250 கிடக்கிறது குப்பைக் குழி, கினாக் காண்கிறது மச்சு வீடு.
கிடாவும் காளையும் பிணைத்தாற் போல்.
கிடை கிடந்த விடத்தில் மயிர்கூடக் கிடையாது.
கிடையாச் சரக்கு கிடைத்தாற் போல்.
கிட்டக் கிட்ட வந்தாலும் எட்ட எட்டப் போகிறான்.
கிட்ட நெருங்க முட்டப் பகை.
கிட்டவா நாயே என்றால் மூஞ்சியை நக்குகிறது.
கிட்டாத ஒன்றை வெட்டென மற.
கிட்டினால் ராமா கோவிந்தா, கிட்டாவிட்டால் ஒன்றும் இல்லை.
கிணறு இருக்க மலை தோண்டாதே.

4260 கிணறு இறைக்க இறைக்கச் சுரக்கும்.
கிணறு கிடக்க மலை கல்லாதே.
கிணறு தப்பித் துரவில் விழலாமா?
கிணறு மெத்தினாற் கீழ்வரை பொசியும்.
கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல்.
கிணறு வெட்டித் தாகம் தீர்க்கலாமா?
கிணறும் வெட்டித் தவளையும் பிடித்து விடுகிறதா?
கிணற்றிலே கல் போட்டது போல.
கிணற்றிலே கல் போட்டாற்போ லிருக்கிறது.
கிணற்றிலே தண்ணீர் உதித்தது.
4270 கிணற்றில் இருக்கும் ஆமைபோ லிருப்பவனுக்குத் தெரியுமோ?
கிணற்றில் தள்ளிக் கல்லையும் போட்டான்.
கிணற்றில் விழுந்தவன் மறுபடியும் விழுவானா?
கிணற்று ஆழமும் கயிற்று நீளமும் பார்க்கவேண்டும்.
கிணற்றுக்குத் தப்பித் தீயிலே பாய்ந்தான்.
கிணற்றுக்குளிருந்து பேசுகிறவனைப் போல் பேசுகிறான்.
கிணற்றுக்குள்ளே கங்கை குதித்தாற்போல.
கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகுமா?
கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பம் ஏன்?
கிணற்றுத்தவளை தண்ணீர் குடித்ததைக்கண்டது யார், குடியாததைக் கண்டது யார்?
4280 கிணற்றைக் கண்டு கடல் ஒதுங்கிப் போகுமா?
கிணற்றைத் தூர்த்தால் வயிற்றைத் தூர்க்கும்.
கிண்டக் கிண்ட அம்பட்டன் குப்பை மயிரே புறப்படும்?
கிண்டக் கிண்ட கீரையும் மயிரும்.
கிண்டி விட்டுக் கிளறி வைக்கிறது.
கிண்டிவிட்டு வேடிக்கை (கேளிக்கை) பார்க்கிறது.
கிண்ணி பட்டாலும் பட்டது, கிடாரம் பட்டாலும் பட்டது.
கிண்ணி வைத்துக் கிண்ணி மாற்றுகிறது.
கிரக சாந்திக்குச் சவரம் பண்ணிக்கொள்ளுகிறதா?

கிரமத்தைப் பார்க்கச் சொன்னால் சேரியைப் பார்க்கிறான்.

4290 கிரிசை கெட்டு வரிசை மாறுகிறது.

கிரியை அற்றோன் மறை சாற்றுவது ஏன்?

கிருபா நிதியே சருவா நிதி.

கிலி பிடித்ததோ புலி பிடித்ததோ?

கிழக் கடாவைப் புகழுகிறது இகழ்ச்சி அல்லவா?

கிழக்கிலும் மேற்கிலும் கினாவிலும் கடன் கொடாதே.

கிழக் குடலுக்குச்சோறும், இடி சுவருக்கு மண்ணும் இடு.

கிழக் குரங்குபோல விழிக்கிறதைப் பார்.

கிழப்பேச்சு சபைக்கு ஏறுமா?

கிழமானாலும் கெட்டானாலும் கட்டிக் கொண்டவள் பிழைப்பாள்.

4300 கிழவனுக்கு வாழ்க்கைப் படுகிறதிலும் (படுகிறதை விட) கிணற்றில் விழலாம் (விழுகிறது நலம்).

கிழவன் ஆனாலும் கட்டை ஆனாலும் கட்டிக்கொண்டாள் பிழைப்பாள்.

கிழவன் கொடுத்த பணத்துக்கு நடை உண்டா?

கிழவி இருந்த வீடும் கிளி இருந்த காடும் ஈடேற மாட்டாது.

கிழவி பேச்சைக் கின்னரக்காரன் கேட்பானோ?

கிழவி போனபோது சுவர் இடிந்து விழுந்ததாம்.

கிழவி பாட்டை கிண்ணாரக்காரன் கேட்பானா?

கிழவியும் காதம் குதிரையும் காதம்.

கிழவியை அடித்தால் வழியிலே பேலுவாள்.

கிழவியைப் பாட்டி யென்பதற்குக் கேட்க வேண்டுமா?

4310 கிழிஞ்சாப் பிள்ளை மணியத்திலே நீட்டின விரல்அற்றும் போம்.

கிழிந்த சீலை காசுக்கு இரண்டு.

கிழிந்த பம்பரம் காசுக்கு இரண்டு.

கிளர்த்தும் கல்வி தளர்ச்சிப் படாது.

கிளி அருமையைப் பூனை அறியுமா?

கிளி அழுதால் பூனை விடுமா?

கிளியைப் போலப் பேச்சும் மயிலைப் போல நடையும்.
கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுக்கலாமா?
கிள்ளாக்குச் செல்லும் கெடி மன்னர் போல.
கிள்ளி எடுக்கச் சதையில்லாமற் போனபோதிலும் பேர் தொந்தியா பிள்ளை.

4320 கிள்ளுகிறவனிடத்தி லிருந்தாலும் அள்ளுகிறவனிடத்தி லிருக்கலாகாது.
கிள்ளுக் கீரைபோல் உள்ளத்தில் எண்ணாதே.
கிள்ளுவார் கீழ் இருப்பதிலும் அள்ளுவார் கீழ் இருக்கலாம்.
கிள்ளை பழுக்குமாம் கிளிவந்து கொஞ்சுமாம்.

---

## கீ.

கீத்திலே கினவிலே (கனவிலே) தெரியுமா?
கீத்திலே *(கீற்றிலே)* வேண்டாம், *சாத்திலே* வாரு.
கீரிகடித்த பாம்புபோல.
கீரிக்கும் பாம்புக்கும் தீராப் பகை.
கீரியும் பாம்பும் போல.
கீரிவாய்ப் பாம்பு போல.

4330 கீரைக்கடைக்கும் எதிர்க்கடைவேண்டும்.
கீரைக்கட்டை வெட்டச்சொன்னால் தோரணங்கட்டுகிறதா?
கீரைக்கும் *கழுவின தண்ணீர்* கிண்டி அவிக்கப்போதும்.
கீரைக்குப் புல்லுருவி கீழே முளைத்தாற்போல.
கீரைத்தண்டு பிடுங்க ஏலேலப்பாட்டு ஏன் (பாட்டா)?
கீரை நல்லதானால் கழுவின தண்ணீரே போதாதா வேக?
கீரையும் இரண்டு *கறி பண்ணாதே.*
கீரையும் மாவும் கெட்ட புளிச்சாறும்.
கீர்த்தி பெற்றும் கிலேசம் என்ன?
கீர்த்தியால் பசி தீருமா?

4340 கீழே பாம்பு என்றால் மேலே பார்க்கிறான்.
கீழேழு லோகமும் மேலேழு லோகமும் கண்ட காட்சியா?
கீழைத் தெருக் கிழவி அவிசாரி போனாளென்று, மேலைத் தெருக் கிழவன் கோவணத்தில் கிட்டியைக் கட்டி அடித்தானாம்.
கீழைத் தெருவிலே பல்லக்குக் கொடுத்து மேலைத் தெருவில் பிடுங்கிக்கொள்ளுகிறது.
கீழோராயினும் தாழ உரை.
கீழ் எலிபோலத் தோண்டிக் கிளறுகிறது.
கீழ் ஏழுலகமும் மேல் ஏழுலகமும் பார்த்தவன் போலப் பேசுகிறான்.
கீழ்க் காது மேற் காது மூளி, சண்டைக்கு ரணபத்ர காளி.
கீழ்க் குலத்தான் ஆனாலும் கற்றவன் மேற்குலத்தான்.
கீறி ஆற்றினால் புண் ஆறும்.

---

## கு.

4350 குங்கிலியத் தூபம் காட்டிச் சன்னதமும் குலைந்தால் கும்பிடு எங்கே?
குங்குமக் கோதைக்கும் அஞ்சு பணம், குருட்டுக் கண்ணிக்கும் அஞ்சு பணமா?
குங்குமம் சுமந்த கழுதை பரிமளம் அறியுமா?
குசத்தாதனும் இடை ஆண்டியுமில்லை.
குசத்தி நாக்கைக் கூழையாய் அறுத்தாலும் குடம் இரண்டு காசென்பாள்.
குசவனுக்கு ஆறுமாதம் தடிகாரனுக்கு அரைநாழி.
குசவனுக்குப் பல நாள் வேலை, தடிகாரனுக்கு ஒரு நிமிஷ (அரை நாழிகை) வேலை.
குச்சத்திரம் குசுவாகப் போக.
குச்சத்திரம் குடியைக் கெடுக்கும்.
குச்சுவீடு கட்டியல்லவா மச்சுவீடு கட்டவேண்டும்?
4360 குஞ்சிரிப்புக்கு மருந்து சாப்பிட உள்ள கிரிப்பும் போனாற்போல.

குஞ்சுடன் மேய்ந்த கோழியைப் போல.
குடத்தில் ஏற்றிய விளக்கு.
குடத்திற் பொன் கூத்து ஆடுமா?
குடத்தினில் விளக்கையிட்டுக் கோபுரத்தின்மேல் வைத்தாற்போல.
குடந்தண்ணீரிற் கொள்ளிவைத்தாற்போல.
குடப்பால் கறந்தாலும் குதிரைஒட்டம் ஓடமாட்டாது.
குடப்பால் கறந்தாலும் கூரை பிடுங்குகிற மாடு [ஆகாது.
குடலும் கூந்தலும் கொண்டது கொள்கை.
குடலைப் பிடுங்கிக் காட்டினாலும் கசகரண வித்தை என்கிறான்.
4370 குடலைப் பிடுங்கி ஜஞ்சம் (பூணூல்) போட்டுக் கொள்ளுவேன்.
குடலைப் பிடுங்குகிறது ஒக்காளம் (நாற்றம்).
குடல் அறுந்த கோழி எங்கே போகும்?
குடல் அறுந்த நரி எந்த மட்டும் ஓடும்?
குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்.
குடல் கூழுக்கு அழுகிறதாம், கொண்டை பூவுக்கு அழுகிறதாம்!
குடி இருந்து அறி, வழி நடந்து அறி.
குடி இருந்து பார், கூட்டுப்பயிர் இட்டுப்பார்.
குடி இருப்பது குச்சு வீடு, கனாக் காண்பது மச்சு மாளிகை.
குடி இல்லா ஊரிலே அடி இடல் ஆகாது.
4380 குடி இல்லா ஊருக்கு நரி அரசன்.
குடி இல்லா வீட்டிற் குண்டுப் பெருச்சாளி உலாவும்.
குடி உடையான் முடி உடையான்.
குடிக்கிறது எருமை மூத்திரம், கடித்துக்கொள்ளுகிறது இஞ்சிப்பச்சடி.
குடிக்கிறது காடிநீர், அதற்குத் தங்க வட்டிலா?
குடிக்கிறது கூழாம், இருக்கிறது சிங்காசனமாம்.
குடிக்கிறது கூழ், கொப்பளிக்கிறது பன்னீர்.
குடிக்கிற பாலை வெடிப்பிலே (கமர் வெடிப்பிலே) வார்க்கிறதா?
குடிக்கிற முலையும் சரி, பிடிக்கிற முலையும் சரி.

குடிக்கிறவன் கையைச்சுற்றி சூடு போட்டாலும் குடியை விடான்.

4390 குடிக்கிற வீடு விடியுமா?

குடி சூது விபசாரம் குடியைக் கெடுக்கும்.

குடித்த மருந்து குடித்தாற்போல எடுத்தால் பரிகாரி வாயிலே மண்ணுதான்.

குடித்தனமொன்று பண்ணினால் நன்மையும் வரும் தீமையும் வரும்.

குடித்தனமோ துரைத்தனமோ?

குடித்தனம் மேலிடவேண்டிப் பிடாரியைப் பெண்டு வைத்துக்கொண்டான்.

குடிபோன வீட்டிலே வறட்டு நாய் காத்தது போல.

குடிமக்கள் துரைத்தனம் செய்ததுபோல.

குடிமதம் அடிபடத் தீரும்.

குடியனும் வெறியனும் சரி.

4400 குடியாத வீடு விடியாது.

குடியிருக்க வந்தாயோ, கொள்ளிவைக்க வந்தாயோ?

குடியிருந்த வீட்டிலே கொள்ளி வைக்கிறவன்.

குடியிலே குரங்கானாலும் கொள்ளு.

குடியில்லா ஊரிலே ஒற்றைப் பணக்காரன்.

குடியில்லா ஊரில் குருவியும் பறக்காது.

குடியில்லாத வீட்டில் குண்டுப்பெருச்சாளி உலாவும்.

குடியிற் பிறந்து குரங்கு ஆட்டம் ஆடுகிறான்.

குடியிற்பிறந்து செடியில் விழுந்தான்.

குடியிற் பெண்ணின் வயிறு எரிய, கொடியிற் சேலை நின்று எரியும்.

4410 குடி வைத்த வீட்டிற் கொள்ளி வைக்கலாமா?

குடிவைத்துக் கொண்டாயோ, கொள்ளி வைத்துக் கொண்டாயோ?

குடிமிக்குத் தக்கின (தக்க) கொண்டை.

குடிமித்தலையின் வீறாப்பைக் கொண்டத்தலையா பாரடா!

குடுமித் தலையும் மொட்டைத் தலையுமாய்க் கூட்டுகிறது.

குடும்பத்தில் இளையவனும் கூத்தாடியில் மூத்தவனும் உதவாது.

குட்டக் குட்டக் குனிகின்றவன் மடையன், குனியக் குனியக் குட்டுகிறவன் மடையன்.
குட்டி ஆடு கொழுத்தாலும் வழுவழுப்புப் போகாது (தீராது).
குட்டி குலைத்து நாய்பேரில் (தலைமேல்) வைக்கிறது போல.
குட்டிக் கரணம் போட்டாலும் லோபன் கொடான்.
4420 குட்டிக் கலகம் பண்ணுகிறவன் குட்டுப் பட்டுச் சாவான்.
குட்டிக் கிடையிலே ஓனாய் புகுந்தது போல்.
குட்டிச் சுவரிலே தேள் கொட்டத் தண்ணீர் மிடாவிலே (கட்டுத்தறியிலே) நெறிகட்டுமா?
குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா?
குட்டிச்சுவரும் குரங்கிருந்த மாளிகையும்.
குட்டி நாய் குலைக்கிறதுபோல.
குட்டி நாய்கொண்டு வேட்டை ஆடினதுபோல (ஆடுகிறதா?)
குட்டிபோட்ட நாய்போலக் குலைக்கிறது(அலைகிறது).
குட்டி போட்ட பூனை போல.
குட்டிப் பாம்பை அடித்தாலும் குற்றுயிராக விடப் படாது.
4430 குட்டியின் கையைப் பிடித்துக் குரங்கு கொள்ளிக் கட்டைச் சூடு பார்த்தாற்போல.
குட்டின குட்டும் குண்டிற்பாய்ந்த தண்ணீரும் வருமா (திரும்புமா)?
குட்டுப்பட்டாலும் மோதிரக் கையாலே குட்டுப்பட வேண்டும்.
குட்டுமானம் தப்பிக் குசவனோடே பேசினால், சட்டையும் பண்ணான் சட்டியும் கொடான்.
குட்டைத்தாதன் மகன் (பிள்ளை) மொட்டைத்தா தன், குளத்திலே விழுந்து செத்தான்.
குட்டையைக் கலக்கிப் பருந்துக்கு இரை இடுகிறது.
குணக் கெடுக்க நாய் வாலைக்கூடுமா?
குணத்திற்கு அழுகிறதா பிணத்திற்கு அழுகிறதா?
குணத்தை மாற்றக் குரு இல்லை.
குணம் இல்லா வித்தையெல்லாம் அவித்தை.

4440 குணம் உற்றவன் மணம் உற்றவன், குணம் அற்றவன் மணம் அற்றவன்.

குணம் பெரிதேயன்றிக் குலம் பெரிதல்ல.

குண்டாக் கரணம் போட்டாலும் பிண்டாச் (பிண்டச்) சோற்றுக்கு வழி இல்லை.

குண்டி அறுந்த பருந்துபோல.

குண்டி எத்தனை கோணற் கோணினாலும், சுமை வீட்டிற்போய்ச் சேர்ந்தாலே சரி.

குண்டி காய்ந்தால் (சுண்டினால்) குதிரையும் வைக்கோல் தின்னும்.

குண்டி மறைக்கத் துணியில்லை, கொண்டை பூவுக்கு அழுகிறதாம்.

குண்டுச்சட்டியிலே கரணம் போடுகிறான் (போடலாமா?).

குண்டுச் சட்டியிலே குதிரை ஓட்டுகிறான்.

குண்டு பட்டுச் சாகாதவன் வண்டு கடித்துச் செத்தானாம்.

4450 குண்டு போன விடத்தில் குருவி நேர்ந்தது.

குண்டுப் பெருச்சாளியும் வண்டும்போல.

குண்டுமில்லாமல் மருந்துமில்லாமல் குருவி சுடலாமா?

குண்டுணி சொல்லுகிறவர்களுக்கும் இரு நாக்கு, கட்டு விரியனுக்கும் இரு நாக்கு.

குண்டை பலத்தாற் குடி பலக்கும்.

குதி குதி என்பார்கள் எல்லாரும், கூடக் குதிப்பார்களா?

குதித்துக் குதித்து மாவிடித்தாலும் குந்தாணிக்கு ஒரு கொழுக்கட்டை கிடையாது.

குதித்துக் குதித்து மாவிடித்தாலும் புழுக்கைக்கு ஒரு கொழுக்கட்டையே.

குதிரை இராவுத்தனை தள்ளினது மல்லாமல் குழியும் தோண்டுகின்றதாம்.

குதிரை இருப்பு அறியும், கொண்ட பெண்டாட்டி குணம் அறிவாள்.

4460 குதிரை இல்லா ஊருக்குக் கழுதை தம்பிரான்.

குதிரை உதைத்தாலும் உதைக்கலாம், கழுதையா உதைக்கிறது?

குதிரை எட்டுஅடி பாய்ந்தால், குட்டி பதினாறுஅடி பாயும்.

குதிரை ஏற அதிருஷ்டம் இருந்தால் குண்டியின்கீழ் வந்து நுழையாதா? [மா?

குதிரை ஏற யோகமிருந்தால், கொண்டேற வேண்டு

குதிரை ஏறாமல் கெட்டது, கடன் கேளாமல் கெட்டது.

குதிரை ஏறி என்ன, கோணக் கொம்பு ஊதி என்ன, வீணர்க்கும் கீர்த்திக்கும் வெகு தூரம்.

குதிரை கீழேயும் தள்ளிப் பள்ளமும் பறித்ததாம்.

குதிரை குணம் அறிந்தல்லவோ தம்பிரான் கொம்பு கொடுக்கவில்லை.

குதிரை குருடானாலும் கொள்ளு தின்கிறதில் குயைா?

4470 குதிரை கொண்டால் கலினத்துக்கு (லகானுக்கு) வழக்கா?

குதிரைக்கு குர்ரம் என்றால் ஆனைக்கு அர்ரம்.

குதிரைக்கும் நாய்க்கும் குடிபோகச் சந்தோஷம்.

குதிரைக் கொம்பாகி விட்டது.

குதிரை செத்ததல்லாமற் குழிதோண்ட மூன்று பணம் செலவாச்சுது.

குதிரை செத்ததல்லாமற் சேணம் சுமக்க வேலை ஆயிற்று.

குதிரை செத்ததும் அல்லாமற் குழிதோண்டப் பத்துப் பணம் (மூன்று பணமா?)

குதிரை நடைவாராமல் கொக்காய்ப் பறப்பானாம் இராவுத்தன்.

குதிரை நல்லதுதான் சுழி கெட்டது.

குதிரை பாகனைத் தள்ளினதும் அல்லாமல் குழியும் தோண்டுகிறதாம்.

4480 குதிரை பிடிக்க, சம்மட்டி அடிக்க, கூப்பிட்ட குரலுக்கு ஏனென்ன.

குதிரை முட்டை.

குதிரையின் கொழுப்பறிந்து சுவாமி கொம்பு கொடாமற் போனார்.

குதிரையும் ஏறிக் குதிரைக் குட்டியும் ஏறுகிறதா?

குதிரையும் கழுதையும் ஒன்றா?
குதிரையும் காதம் கிழவியும் காதம்.
குதிரை வால் வீச்சு குதிரை மட்டும்.
குதிரை விற்ற குச்சலியன் போல.
குத்தக் கூலியும் கொடுத்து, எதிர் மூச்சும் போடுகிறதா.
குத்தாத காதுக்கு ஊனம் இல்லை.
4490 குத்திக்கொண்டு வாவென்றால், வெட்டிக்கொண்டு வருகிறான்.
குத்தி (குத்து) விட்டு வேடிக்கை பார்க்கிறது.
குத்துக்கு முன்னே குடுமியைப் பிடி.
குத்திரம் குடியைக் கெடுக்கும்.
குத்தி வடித்தாலும் சம்பா, குப்பையில் போட்டாலும் தங்கம்.
குத்துப்பட்டு பொறுத்தாலும், குறை வயிறு பொறுக்குமா?
குந்தி இருந்து தின்றால் குன்றும் மாளும் (கூரையும்).
குந்தி நாக்கைக் கூழையாய் அறுத்தாலும் இடம் இரண்டு காசென்பாள்.
குந்தினையா குரங்கே, உன் சந்தடி அடங்கே.
குபேரன் பட்டணத்திலும் விறகுதலையன் உண்டு.
4500 குபேரன் பட்டணம் கொள்ளை போனாலும், அதிஷ்ட வீனனுக்கு அகப்பைக் காம்பு அகப்படுமா!
குபேரன் பட்டணம் கொள்ளை போனாலும், கொடுத்து வையாத பாவிக் கொன்று மில்லை.
குப்புற விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்கிறான்.
குப்புற விழுந்து தவம் செய்தாலும் குருக்களுக்கு மோட்சமில்லை.
குப்பை உயரும் கோபுரம் தாழும்.
குப்பை உயர்ந்தென்ன கோபுரம் தாழ்ந்தென்ன?
குப்பைக் கீரைத்தண்டு கப்பலுக்குப்பாய்மரமாகுமா (காலாமா)?
குப்பைமேடு உயர்ந்தது கோபுரம் தாழ்ந்தது.
குப்பையில் முளைத்த கொடி கூரையில் ஏறினது போல.
குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி நிறம்போ குமா?

4510 குப்பையிற் புதைத்தாலும் குன்றிமணி நிறம் போகாது.
குப்பையிற் போட்டாலும் குன்றிமணி குன்றிமணிதான்.
குப்பையின்றிப் பயிர் விளையாது.
குப்பையும் கோழியும் போலக் குருவும் சீடனும்.
குமரிக்கு ஒருபிள்ளை, கோடிக்கு ஒரு வெள்ளை.
குமரி தனிவழியே போனாலும் கொட்டாவி தனி வழியே போகாது.
குமரியா யிருக்கையில் கொண்டாட்டம், கிழவியா யிருக்கையிற் திண்டாட்டம்.
கும்பி கூழுக்கு அழுகிறது, கொண்டை பூவுக்கு அழுகிறது.
கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல.
கும்பிடு கொடுத்துக் கும்பிடு வாங்குகிறது.

4520 கும்பிடும் கள்ளர் குழைந்திடும் (குழைத்திடும்) கள்ளர்.
கும்பிட்ட கோயில் தலைமேல் இடிந்து விழுந்தது போல.
கும்பிட்ட தெய்வம் குல தெய்வம்.
கும்பிட்டுக் கடன் கொடாதே, கும்பிட்டுக் கடன்வாங்காதே.
கும்பியிலே கல்லைவிட்டு எறிந்தால் கூடத் தெறிக்கும்.
குயவா கலசம் கொண்டுவா, இடையா பால்கொடு என்றாற் போல.
குயில் குரலும் மயில் அழகும் போல.
குயில் கூவினாற் போல.
குயில் முட்டையிடக் காகம் கண்டு களிக்க.
குரங்கானாலும் குலத்திலே கொள்ள வேண்டும்.

4530 குரங்கின் கைப் பூ மாலை.
குரங்கின் கையில் கொள்ளி அகப்பட்ட கதை.
குரங்கின் கையில் சிக்கிய பாம்பு போல.
குரங்கின் தலையில் கரகம் வைத்துக் காளி கும்பிட்டது போல்.
குரங்கின் பீயை மருந்துக்குக் கேட்டால் கொடுக்குமா? அடித்து வாங்க வேண்டுமா?

குரங்கின் பீயை மருந்துக்குக் கேட்டால் கொப்பு கிளை எல்லாம் தத்திப் பாயும்.
குரங்கின் வயிற்றிலே குஞ்சரம் பிறந்தது.
குரங்கு எல்லாம் கூட்டம் கூட்டமாக விருக்கும்.
குரங்கு ஏறாத கொம்பு உண்டா?
குரங்கு கள்ளும் குடித்து, பேயும் பிடித்து, தேளும் கொட்டினால் என்ன கதி ஆகும்?
4540 குரங்கு கையில் பூமாலை அகப்பட்டது போல.
குரங்கு கையில் குட்டிக்குக் கள்வார்த்தாற்போல.
குரங்குக்குப் புத்தி சொல்லி தூக்கணாங்குருவி கூண்டு இழந்தது.
குரங்குக்கும் தன்குட்டி பொன்குட்டி.
குரங்கு தன்குட்டி கையைக்கொண்டு பதம் பார்க்கிறது போலப் பார்க்கிறான்.
குரங்குப் பிடி போல் பிடிக்கவேண்டும்.
குரங்குப் பிடியே பிடி.
குரங்குப் பிணமும் குறவன் சுடுகாடும் கண்டதில்லை.
குரங்குப் புண் ஆறாது (பிரமாண்டம்).
குரங்கு முகமெல்லாம் (மூஞ்சி) ஒரு முகம் (மூஞ்சி).
4550 குரங்கெல்லாம் ஒரு முகம்.
குரப்பமிட்டுத் தேய்த்தும் குதிரை ஆமா கழுதை?
குரு இல்லாத சீஷன் உண்டா?
குரு இல்லார்க்கு வித்தையு மில்லை, முதல் இல்லார்க்கு லாபமுமில்லை.
குரு என வந்தான், திரு உரை தந்தான்.
குருக்கள் நின்று பேய்ந்தால், சீடன் ஓடிப் பேய்வான்.
குருக்கள் பிழைத்தது மறுபிறப்பு.
குருக்கள்பேரில் ஆணை இந்தக் கழியை விழுங்கு.
குருடனுக்குக் கண் வேண்டுமென்றுதான் சொல்லுவான், வேண்டாமென்று சொல்லுவானா?
குருடனுக்குக் குருடன் கோல் பிடிக்கலாமா (பிடிக்க முடியுமா)?
4560 குருடனுக்குப் பால் கொக்குப் போன்றது.
குருடனுக்குப் பால் சோறு இட்டது போல.

குருடனுக்கு வேண்டியது கோல் (கண்).
குருடனும் செவிடனும் கூத்துப் பார்க்கப்போய், குருடன் கூத்தைப் பழித்தான், செவிடன் பாட்டைப் பழித்தான்.
குருடனை நோட்டம் பார்க்கச் சொன்னாற்போல.
குருடனைப் பார்த்து ராஜவிழி விழிக்கச் சொன்னால் விழிப்பானா?
குருடன் ஆடு மேய்க்க எட்டாளுக்கு வேலையா?
குருடன் கூத்துப் பார்க்கப் போனால் பயனென்ன?
குருடன்கைக் கோலைப் பிடுங்கினது போல.
குருடன் கையில் விலாங்கு அகப்பட்டது போல.
4570 குருடன் தண்ணீர்க்குப் போக எட்டாள் மினக்கிடு.
குருடன் பெண்டாட்டி கூனனோடு உறவாடினாள்.
குருடன் பெண்டிரை அடித்தாற்போல.
குருடன் ராஜ விழி விழித்தாற் போல.
குருடன் வேண்டுகிறது கண் பெறத்தானே.
குருடானாலும் குதிரை சிமிட்டுகிறதில் தாழ்ச்சி யில்லை.
குருடி தண்ணீர்க்குப் போனால் எட்டாள் மினக்கெடு.
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக் குழியில் விழுமாறே.
குருடும் செவிடும் கூத்துப் பார்த்தாற்போல. [ன்ன?
குருட்டுக் கண்ணுக்குக் குறுணி மையிட்டு ஆவதெ
4580 குருட்டுக் கண் தூங்கி என்ன தூங்காதென்ன?
குருட்டுக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.
குருட்டுக் கொக்கிற்கு ஊக் குளமே சாட்சி.
குருட்டுக் கோழி தவிட்டுக்கு வீங்கினது போல.
குருட்டுப் பூனை விட்டத்திற் பாய்ந்தது போல.
குருட்டு மாட்டைத் தெய்வம் காக்கிறது.
குரு நின்ற நிலையில் நின்றால், சீஷன் ஓடுகிற ஓட்டத்தில் இருக்கிறான்.
குருமொழி கேளாதவனும் தாய்வார்த்தைக்கு அடங் காதவனும் சண்டி (ஜண்டி).
குருமொழிக்கு இரண்டு குறுக்கே பேசலாமா?
குருமொழி மறந்தோன் திருவழிந்து அழிவான்.
4590 குருவி கழுத்தில் தேங்காயைக் கட்டினதுபோல,

குருவிக்கு தக்க (தகுந்த) இராமசரம்.
குருவிக்குத் தக்க பாரம்.
குருவிக் கூட்டைக் குலையக் கலைக்காதே.
குருவிக் கூட்டைக் கோலாலே கலைக்கிறது.
குருவிச் சொல்லும் மருவிக் கேளு.
குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டித் தூக்கலாமா?
குருவியின் தலையிலே பனங்காயை வைத்தது போல.
குருவுக்கு ஏற்ற சீஷன்.
குருவுக்குத் துரோகம் செய்தாலும் குடலுக்குத் துரோகம் செய்யக்கூடாது.
4600 குருவுக்கு நாமம் குழைத்துப் போடுவான்.
குருவுக்கு மிஞ்சின சீஷன்.
குருவுக்கு நாமம் தடவி (போட்டு), கோபாலப் பெட்டியில் கை போட்டது போல.
குருவேஷங் கொண்டவனெல்லாம் குரு ஆவானா?
குலத்தளவே ஆகுங் குணம்.
குலஸ்திரீ தன் பர்த்தாவையும், பரஸ்திரீ தன் மேனியையும் பேணுவர்.
குலத்துக்கீனம் கோடாலிக்காம்பு.
குலத்துக்கு ஏற்ற பேச்சு.
குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக்காம்பு.
குலத்தைக் கெடுக்குமாம் குரங்கு.
4610 குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்.
குலமகன் குலத்துக்கு அழுவான், மூக்கறையன் மூக்குக்கு அழுவான்.
குலமும் ஒன்று குறியும் ஒன்று.
குலம் எப்படியோ குணம் அப்படியே.
குலம் குப்பையிலே, பணம் பந்தியிலே.
குலம் குலத்தோடே, வெள்ளம் ஆற்றோடே.
குலம் புகுந்தும் குறை தீரவில்லை.
குலவித்தை கற்றுப் பாதி கல்லாமற் பாதி.
குலைக்கிற நாயின் வாயிலே கோலைக் கொடுத்தால், ஊரெங்கும் கொண்டோடிக் குலைக்கும்.
குலைக்கிற நாய் கடிக்கிறது அரிது (கடிக்காது).
4620 குலைக்கிற நாய்க்கு எலும்பைப் போட்டாற்போல.

குலைக்கிற நாய்க்குக் கொழுக்கட்டை போட்டாற் போல.
குலைக்கிற நாய் வேட்டை பிடிக்குமா?
குலையாத நாய் குதிங்காலைக் கடிக்கும்.
குழந்தாய் குழியில் அமிழ்ந்தாதே.
குழந்தை காய்ச்சலும் குண்டன் (குள்ளன்) காய்ச்சலும் பொல்லாது.
குழந்தைக்கும் நாய்க்கும் குடிபோகச் சந்தோஷம்.
குழந்தை தூங்குகிறது எல்லாம் அம்மையாருக்கு லாபம்.
குழந்தை பசியோ கோவில் பசியோ?
குழந்தைப் பட்டினியும் கோவில் பட்டினியும் இல்லை.
4630 குழந்தையின் தேகம் போல்.
குழந்தையின் முகமும் வாடக் கூடாது, குலுக்கையின் நெல்லும் குறையக் கூடாது.
குழந்தையும் தெய்வமும் கொண்டாடின இடத்திலே.
குழம்புப் பால் குடிக்க குமரகண்ட வலிப்பா?
குழவணப் பிள்ளை போல் பெருத்திருக்கிறான்.
குழிப் பிள்ளை மடிப் பிள்ளை.
குழிப் பிள்ளையை எடுத்து இழவு காணுகிறது.
குழியிற் பயிரைக் கூரைமேல் ஏற விடுகிறது.
குழியிற் பிள்ளையை நரி சுற்றுகிறாப் போலே.
குளத்திற் போட்டுக் கிணற்றில் தேடலாமா?
4640 குளத்துக்கு மழை குந்தாணியா?
குளத்துடன் கோபித்துக் கால் (குண்டி) கழுவாதது போல.
குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரை இட்டது போல.
குளத்தோடு கோபித்துக்குண்டி கழுவாதவன்போல.
குளப்படி தண்ணீரைச் சமுத்திரத்தி லிறைப்பானேன்?
குளப்படி தண்ணீர் சமுத்திர மானால், குடந்தண்ணீர் எவ்வளவு ஆகவேண்டும்?
குளப்படி நீரை இறைத்தால் கடற்பள்ளம் நிரம்புமா?
குளப்படி நீர் கண்டு திரை கடல் ஏங்குமா?
குளம் இருக்கிறது நான் இருக்கிறேன்.

குளம் உடைந்து போகும்போது முறை வீதமா?

4650 குளம் (ஆறு, ஏரி, கடல்) எத்தனை குண்டியைக் (சூத்தை) கண்டதோ! குண்டி (சூத்து) எத்தனை குளத்தைக் கண்டதோ?

குளம் காக்கிறவன் தண்ணீரைக் குடியானோ?

குளம் தோண்டித் தவளை கூப்பிடவேண்டுமா?

குளம் வற்றியும் முறைவீதம் உண்டா?

குளம் வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல.

குளம் வெட்டு முன்னே முதலை குடி இருக்குமா?

குளவி ஊதி ஊதித் தன்னிறமாக்கிவிட்டது.

குளவிக்குப் பச்சைப் புழு பிள்ளை.

குளவிக் கூட்டிலே கல்லுவிட்டு எறிகிறதா?

குளவிக் கூட்டைக் கோலால் குலைத்தாற்போல.

4660 குளவி புழுவைத் தன் நிறம் ஆக்குவதுபோல.

குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல.

குளிசங் கட்டக் குட்டி இரட்டித்தது.

குளிராத உள்ளும் கூத்தியாரும் உண்டானால் மயிரான சம்பளம் வந்தென்ன, போயென்ன?

குளிராத வீடும் கூத்தியாரும் உண்டானால் மயிரான வேளாண்மை விளைந்தால் தான் என்ன, விளையாமற் போனால் தான் என்ன?

குளிர்ந்த கொள்ளியா யிருந்து குடியைக் கெடுக்கலாமா?

குளிர் விட்டுப் போச்சுது.

குள்ளப் பார்ப்பான் பள்ளத்தில் விழுந்தான், தண்டு எடு தடி எடு.

குள்ளனைக்கொண்டு கடல் ஆழம் பார்க்கிறான்.

குள்ளன் குடி கெடுப்பான், குள்ளன் பெண்சாதி ஊரைக் கெடுப்பாள்.

4670 குறத் தண்டனையில் சுற்றத் தண்டனை நல்லது.

குறத்தி பிள்ளை பெற குறவன் காயம் தின்ன.

குறத்தி பிள்ளை பெற குறவன் மருத்துவம் பண்ண.

குற வழக்கும் இடை வழக்கும் கொஞ்சத்தில் தீராது.

குற வழக்குக்குச் சங்கிலி வழக்கு இலேசு.

குறவன் குச்சு கட்டினாற்போல.

குறுக்கே வந்து குட்டை குழப்பாதே.
குறுங்கொல்லும் நெடுந்தச்சும்.
குறுணிக்காரனுக்கு வாழ்க்கைப்பட்டுப் பதக்குப் பதக்கு என்று அடித்துக்கொண்டால் வருமா?
குறுணிப்பால் கறந்தபோதிலும் கூரை பிடுங்கப் பார்த்திருக்கலாமா?
4680 குறுணி மைதான் இட்டாலும் குருடு குருடே.
குறுமைப்பூத்தாலும் குணம்போமா நெருப்புக்கு?
குறும்பியுள்ள காது தினவு தின்னும்.
குறும்பைத் தவிர்க்கும் குடிதாங்கி.
குறை அறக் கற்றவன் கோடியில் ஒருவன்.
குறைகுடம் கூத்தாடும்.
குறைகுடம் தளும்பும், நிறைகுடம் தளும்பாது.
குறையச் சொல்லி நிறைய அள.
குறையுள்ளார்க்கு உண்டு குறாவுதல், கறையுள்ளார்க்கு உண்டு கரவு.
குறை வேலையை அம்பலத்திற் கொண்டுவரலாமா?
4690 குறை வேலையைக் குருக்களுக்கும் காட்டாதே.
குற்றத் தண்டனையினும் சுற்றத் தண்டனை நல்லது.
குற்ற மனச் சாட்சி கூடி வாழச் (வாழும்) சத்துரு.
குற்றமிகச் செய்தாரைக் கொல்லாமற் கொல்ல மனச் சித்தம் அரிவாளுண்டோ தினகரா!
குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்னும், குறும்பியுள்ள காது தினவு கொள்ளும்.
குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
குற்றம் அடைந்த கீர்த்தி குணங் கொள்ளல் அரிது.
குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை.
குற்றம்போலச் செய்து குணம் செய்கிறது.
குற்றம் மறைப்பதில் மற்றொரு குற்றம் (நேரும்).
4700 குனிந்தொரு துரும்பு கிள்ளச் சீவனில்லாமற்போனாலும் பேர் பனை பிடுங்கி.
குன்றிமணி இல்லாவிட்டால் குசுக்கூடத் தட்டான் பிழைக்கமாட்டான்.
குன்றிமணி குப்பையிற் கிடந்தாலும் குன்றுமா நிறம்?
குன்றிமணிக்கும் குண்டியிற் கறுப்பு.
குன்றுமே லிட்ட விளக்கைப்போல.

கூ.

கூகைக்குப் பகலில் கண்தெரியாது.
கூகை விழித்தாற்போல் விழிக்கிறான்.
கூட இருந்துபார் கூட்டுப்பயிர் இட்டுப்பார்.
கூடக் குடியிருந்துகொண்டு கொள்ளி சொருகலாமா?
கூடத்தைக் கொடுத்தாலும் மாடத்தைக் கொடுக்கல் ஆகாது.
4710 கூடம் ஒன்று போடுமுன்னே சுத்தி இரண்டுபோடும்
கூடம் இடித்தால் மாடம்.
கூடி இருந்து குலாவுவார் வீட்டில் ஓடி உண்ணும் கூழும் இனிதே.
கூடி எல்லாரும் தூக்கிவிடுங்கள், பிணக்காடாய் வெட்டிக் குவித்துப் போடுகிறேன் என்றான்.
கூடிருக்கக் குருவி (குயில்) போன மாயம் என்ன?
கூடை கூடையாகக் கொடுத்தாலும் குறைநீங்காது (அடங்காது).
கூடையைச் சுட்டுக் கரியாகுமோ, மயிரைச் சுட்டுக் கரியாகுமோ?
கூட்டத்திற் கட்டுச்சோறு அவிழ்த்தாற்போல.
கூட்டம் பெருத்தாற் குசு பெருக்கும்.
கூட்டோடு கைலாயம்.
4720 கூட்டோடே கைலாசம் சேர்வாய்.
கூட்டோடே போச்சுது குளிரும் காய்ச்சலும்.
கூண்டிலே குறுணி நெல் இருந்தால் மூலையிலே முக்குறுணித் தெய்வம் கூத்தாடும்.
கூத்தரிசி குத்துகிற வீட்டில் வாய்க்கு அரிசிக்கு வழி இல்லை.
கூத்தாடி கிழக்கே பார்த்தான், கூலிக்காரன் மேற்கே பார்த்தான்.
கூத்தாடிக்குக் கீழே கண், கூலிக்காரனுக்கு மேலே
கூத்தாடிச் சிலம்பம் படை வெட்டுக்குத் தகுமா?
கூத்திக்கு இட்டுக் குரங்கு ஆனான், வேசிக்கு இட்டு விறகு ஆனான்.
கூத்தி (கூத்தியார்) பிள்ளைக்குத் தகப்பன் யார்?
கூத்தியார் ஆத்தாள் செத்தால் கொட்டும் முழக்கும், கூத்தியார் செத்தால் ஒன்றுமில்லை.

4730 கூத்தியார் செத்தால் பிணம், அவள் தாய் செத்தால் மணம்.
கூத்தியார் வீட்டுக்கு நாய்போல் அலைகிறான்.
கூத்திலே கோணங்கி வந்தாற்போல.
கூத்திற்குப் பந்தம் பிடித்தாற்போல.
கூத்திற்கேற்ற கொட்டு கொட்டுகிறது.
கூத்துக்கு ஏற்ற பந்தம்பிடிக்கிறது.
கூத்துக்கு மீசை சிரைக்கவா?
கூத்துப் பார்க்கப் போன இடத்தில் பேய்பிடித்தது போல.
கூப்பாட்டால் சாப்பாடாகுமா?
கூப்பிடப் போன தாதி மாப்பிள்ளையைக் கைக்கொண்டாள்.

4740 கூரிய சொல்லான் ஆரிலும் வல்லான்.
கூரியனாகிலும் வீரியம் பேசேன்.
கூருக்கு எதிர் உதைத்தால் சூரெழ வருத்தல்.
கூரை ஏறிக் கோழி பிடிக்கமாட்டாத குருக்களா வானங் கீறி வைகுண்டம் காட்டுவார்?
கூரைக்காய் வைத்தியம் குணத்திற் கேற்குமா?
கூரைமேலே சோறு போட்டால் ஆயிரம் காகம் (காக்காய்).
கூர்மையாளனே நேர்மையாளன்.
கூலி குறைத்தாயோ குறைமரக்கால் இட்டாயோ?
கூலி குறைத்தால் வேலை கெடும்.
கூலிக்காரன் பெண்சாதி குளிகுளிக்கப் போகிறாளா (பிள்ளை பெறப் போகிறாளா), குப்பையிலே ஆமணக்கு முளைக்கப் போகிறதா?

4750 கூலிக்கு அறுத்தாலும் குறுணிக்கு அறுக்கலாம், வீணுக்கு அறுத்து வெளியிலே நிற்கிறேன்.
கூலிக்குக் கழு ஏறுவார்களா (இருப்பார்களா)?
கூலிக்குக் குத்துகிறவளைக் கேளிக்கை ஆடச்சொன்னாற் போல.
கூலிக்கு நாற்று நட வந்து எல்லைக்கு வழக்கோ?
கூலிக்குப் பாவி குறுக்கே வந்தான்.
கூலிப் படை வெட்டுமா?
கூவென்றவன் பேரில் கொல்லச் சினம்.

கூழிலே விழுந்த ஈக் குழம்புகிறது போல.
கூழு குடிக்கிறையா அப்பா, குறுணி குடிப்பேன் குப்பா.
கூழுக்குக் குட்டிச்சுவரோடு போனவளே!
4760 கூழுக்குக் குறடு (கொறடா) மிளகாய்.
கூழுக்கு மாங்காய் கொண்டாட்டம், குரங்குக்குத் தேங்காய் கொண்டாட்டம்.
கூழுக்கு மாங்காய் தோற்குமா?
கூழுக்கும் ஆசை மாவுக்கும் ஆசை.
கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசையா?
கூழைக் குடித்தாலும் குப்பை சுமந்தாலும் குப்பைக் காட்டுப் பெண்கள் ருக்குமணி; பாலைக் குடித்தாலும் பட்டைக் கட்டினாலும் பட்டணத்துப் பெண்கள் பறக்கை (தட்டுவாணி).
கூழ் ஆனாலும் குப்பை ஆனாலும் குடித்துக்கொண்டவன் பிழைப்பான்.
கூழ் ஆனாலும் குளித்துக் குடி, கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு (உடு).
கூழ் என்றாலும் குடிக்கிறவன் பிழைப்பான்.
கூழ் என்றாலும் வாழ்வுக்குத் தக்கதாகதான் குடிக்கத் வேண்டும்.
4770 கூழ் குடிக்கிலும் கூட்டு ஆகாது.
கூழ் குடித்தாலும் கூட்டாய்க் குடிக்க வேண்டும்.
கூழ் புளித்ததென்றும் மாங்காய் புளித்ததென்றும் உணராமற் சொல்லலாமா?
கூனனைக்கொண்டு குழப்படி மாமி காணிக்குப் பிள்ளை பெற.
கூனன் குறைதீர்ந்தான், கொடியோன் வினை பெயர்ந்தான்.
கூனி ஆனாலும் கூடை சுமந்துதான் கூலிபெறவேண்டும்.
கூனி வாயாற் கெட்டாற் போல.

கெஞ்சுமணியம் பண்ணுகிறது.
கெடுகாலத்துக்கு கெட்டோர் புத்தியைக் கேட்பார்.
கெடுகுடி சொற்கேளாது.
4780 கெடுக்க நினைக்கில் அடுக்கக் கேடுறும்.
கெடுக்கினும் கல்வி கேடு படாது.
கெடுத்தவருக்கும் நீ கேடு நினையாதே.
கெடுபவருக்குக் கெடுமதி பிடரியில்.
கெடுப்பதும் வாயால் படிப்பதும் வாயால்.
கெடுப்பாரைத் தெய்வம் கெடுக்கும்.
கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது.
கெடுமதிக்குப் படுகுழியை வெட்டு.
கெடுவது செய்தால் படுவது கருமம்.
கெடுவாய் கேடு நினையாதே.
4790 கெடுவான் கேடு நினைப்பான்.
கெட்ட ஊருக்கு எட்டு வார்த்தை.
கெட்ட கழுதைக்குத் தஷ்ட புத்தி.
கெட்ட காலத்துக்கு நாரை கெளிற்றை எடுத்து விழுங்கினது போல.
கெட்ட காலத்துக்கு விபரீத புத்தி.
கெட்ட காலம் வினோத புத்தி.
கெட்ட குடி கெட்டது, பூராவாய்க் குடியப்பா.
கெட்ட குடி கெட்டது, வட்டி நஷ்டம் இல்லாமல் வாங்கி விடு.
கெட்ட குடிக்கு ஒரு கேட்டை பிறந்தது.
கெட்ட குடிக்கு ஒரு துஷ்டப் பிள்ளை.
4800 கெட்ட குடியே கெடும், பட்ட காலிலே படும்.
கெட்ட கேட்டுக்குக் கொட்டென்று முழக்கு ஒன்று.
கெட்ட கேட்டுக்கு கெண்டைபோட்ட முண்டாசி குறைச்சல்.
கெட்ட கேட்டுக்கு வட்டம் காற்பணமா?
கெட்டது கெட்டாய் மகளே, கிட்டவந்து படுத்துக்கொள்.
கெட்டது பட்டது கிருஷ்ணாங்குளம், அதிலும் கெட்டது அத்திப்பட்டாங் குளம்.

கெட்டதும் கிழிந்ததும் பெற்றான் கோனான் நாட்டிலே.
கெட்டதும் பட்டதும் கீரைக்கு இறைத்ததும்.
கெட்ட நாய்க்குப் பட்டது பிரீதி.
கெட்ட பயலுக் கேற்ற துட்டச் சிறுக்கி.

4810 கெட்ட பால் நல்ல பால் ஆகுமா?
கெட்ட மாடு தேடு முன்னம் எட்டுமாடு தேடலாம்.
கெட்ட மாடு தேடுவாரில்லை, மேய்ச்சல் கூலி கொடுப்பாரில்லை.
கெட்ட மார்க்கத்திலே இருக்கிற ஒருவன் மற்றவர்களையும் அதில் இழுக்கப் பிரயாசப் படுவான்.
கெட்டவனுக்கு எத்தனை படிப்பித்தாலும் தஷ்டத்தனம் விடான்.
கெட்டவனுக்குக் கெட்டது தான் கிடைக்கும், நல்லவனுக்கு நன்மையே கிடைக்கும்.
கெட்டவன் கங்கை ஆடினாற் பாவம் தீருமா?
கெட்டவன் பட்டணம் சேர.
கெட்டார்க்கு உற்றார் கிளையிலும் இல்லை.
கெட்டாலும் செட்டி செட்டியே, கிழிந்தாலும் பட்டு பட்டே.

4820 கெட்டால் பெரிய வெட்டரிவாள்.
கெட்டான் பயல் பொட்டலிலே, விழுந்தான் பயல் சறுக்கலிலே.
கெட்டான் வாழ்ந்தால் கிளைகிளையாய்த் தளிர்ப்பான் (துளிர்ப்பான்), வாழ்ந்தான் கெட்டால் வறையோட்டுக்கும் ஆகான்.
கெட்டிக்கார முட்டாள்.
கெட்டிக்காரனுக்குப் பயமில்லை, மட்டித்தனனுக்கு நயமில்லை.
கெட்டிக்காரன் கொல்லையிலே கழுதை மேய்கிறது.
கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளையில் தெரியும் (நாளைக்கு)
கெட்டிக்காரன் பொட்டு எட்டுநாள் அளவும்.
கெட்டித் தங்கமானால் கலீரென்று ஒலிக்குமா?
கெட்டுக் கெட்டுக் குடி ஆகிறதா?

4830 கெட்டுப்போகிற காலம் வந்தால், சொட்டுப் புத்தி தோன்றாதா?

கெட்டுப் போன பார்ப்பானுக்குச் செத்துப் போன பசு தானம்.

கெட்டும் பட்டணம் சேர்.

கெண்டை பட்டாலும் பட்டது, கிடாரம் பட்டாலும் பட்டது.

கெண்டையைப் போட்டு வராலை இழுக்கிறது.

கெதம்போனது கிருஷ்ணப் பிரீதி.

கெரடி கற்றவன் இரடி (இடறி) விழுந்தால், அதுவும் ஒரு வித்தை (வரிசை, பல்ட்டி) என்பான்.

கெருடனுக்கெதிரே கொசுக் கிளம்பிப் பறந்தாற் போல.

கெலிப்பும் தோற்பும் ஒருவர் பங்கல்ல.

கெலியன் பாற்சோறு கண்டது போல.

---

## கே.

4840 கேடகத்தையும் பெருமாளையும் கீழாறு கொண்டு போகச்சே, கூட வந்த அநுமாருக்குத் தெப்பத் திருநாளாம்.

கேடது இல்லான் பாடது இல்லான்.

கேடு காலத்தில் ஓடு கப்பரை.

கேடு கெட்ட நாயே வீடு விட்டுப் போயே.

கேடு வரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே, ஆனைவரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே

கேடுவரும் முன்னே மதிகெட்டுவரும், வாழ்வுவரும் முன்னே மதி கூடிவரும்.

கேட்காமல் கொடுக்கிறது உத்தமம், கேட்டுக் கொடுக்கிறது மத்திமம், கேட்டும் கொடாதிருப்பது அதமம்.

கேட்டவை எல்லாம் நம்பாதே, நம்பினதெல்லாம் சொல்லாதே.

கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.

4850 கேட்டை மூட்டை செவ்வாய்க் கிழமை.

கேட்பாருமில்லை மேய்ப்பாருமில்லை.

கேட்பார் சொலக் கேட்டுக் கெடாதே.
கேண்மைத் தானவா, வாய்மைக் கானவா.
கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை.
கேள்வி உடைமை கீர்த்தியே கல்வி.
கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்.
கேள்விப் பேச்சில் பாதிதான் நிசம்.
கேள்வி முயல்.

## கை.

கை அழுத்தமானவன் கரையேற மாட்டான்.
4860 கை இல்லாதவன் கரணம் போடலாமா, கால் இல்லாதவன் ஓடலாமா?
கை ஈரம் காயாமல் காட்ட வருகிறது.
கை உண்டாவது கற்றவர்க்கு ஆமே.
கை ஊன்றிக் கரணம் போடவேண்டும்.
கை கண்ட பலன்.
கை கண்ட வேசிக்குக் கண்ணீர் குறைச்சலா?
கை கருணைக் கிழங்கு.
கை காய்த்தாற் கமுகு (பாக்கு) காய்க்கும்.
கை கொடுத்துக் கொண்டே கடையாணி பிடுங்குகிறான்.
கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.
4870 கைக்குக் கை நெய்வார்த்தாலும் கணக்கு தப்பாது.
கைக் குருவியைக்கொண்டு காட்டுக் குருவியைப் பிடிக்க வேண்டும்.
கைக்கு வாய் உபசாரமா?
கைக்கொள்ளாத சத்தியத்தைக் கற்காதிருந்தால் நலம்.
கைக்கோளனுக்குக் காற்புண்ணும் நாய்க்குத் தலைப் புண்ணும் ஆறாது.
கை தப்பிக் கண்ணிலேபட்டாற் கையைக் கண்டிப்பதுண்டா?
கைத் தாலி கழுத்தின்மேல் ஏறட்டும்.
கை நிறைந்த பொன்னைப் பார்க்கிலும் கண்நிறைந்த கணவன் இருக்கவேண்டும் (மேல்).
கை பட்டால் கண்ணாடி.
கைப் பண்டம் கருணைக் கிழங்கு.

4880 கைப் பழத்தைக் கொடுத்துத் துறட்டிப் பழத்துக்கு அண்ணாந்து நிற்பானேன்?

கைப் பழத்தைப் போட்டுவிட்டுத் துறட்டுப் பழத்துக்கு ஆசைப்பட்டதுபோல.

கைப் புண்ணுக்குக் கண்ணாடியா?

கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?

கைப்பொருள் அற்றவனைக் கட்டினபெண்டாட்டி கூட எட்டிப்பாராள்.

கைப்பொருள் அற்றால் கட்டுக் கழுத்தியும் (கட்டினவளும்) பாராள்.

கைப்பொருள் இல்லா வழிப்போக்கனுக்கு கள்வர் முன்படலாம்.

கைப்பொருள் தன்னிலும் மெய்ப்பொருள் கல்வி.

கைப் பொருள் போனாலும் கல்விப் பொருள் போகாது.

கைம்பெண்சாதி, எருமையிலே கறவை பழகினாற் போல.

4890 கைம் பெண்சாமி (கைம் பெண்டாட்டி) தாலியைக் கூழைக்கையன் அறுத்தானாம்!

கைம் பெண்டாட்டி பெற்ற கழிகடை (பெற்றது கழிசிறை).

கைம் பெண்டாட்டி பெற்ற பிள்ளையானாலும் (பெண்ணாலும்) செய்யுஞ் சடங்கு சீராய்ச் செய்யவேண்டும்.

கைம்பெண்டாட்டி வளர்த்த கழுக்காணி.

கைம்மேல் கண்ட பலன்.

கையாடாத ஆயுதம் துருப்பிடிப்பதுபோல.

கையாலே தொட்டது கரி.

கையால் ஆகாத சிறுக்கி வர்ணப் புடவைக்கு ஆசைப்பட்டாளாம்.

கையால் கிழிக்கும் பனங்கிழங்கிற்கு ஆப்பும் வல்லீட்டுக் குற்றியும் ஏன்?

கையால் கிள்ளி எறியும் வேலைக்குக் கனத்த கோடாலி வேண்டுமோ?

4900 கை யாளாத ஆயுதம் துருப்பிடிக்கும்.

கை யாளுகிற இரும்பு பளபளக்கும்.

கையிலும் இல்லை செட்டியார் பையிலும் இல்லை காசு.
கையிலும் மடியிலும் இல்லாதவனைக் கள்வன் என்ன செய்யலாம்?
கையிலே காசுமில்லை, முகத்திலே பவிஷுமில்லை (களையுமில்லை.)
கையிலே காசு வாயிலே தோசை.
கையிலே மஞ்சள் ஆனால் காரியம் மஞ்சூர்தான்.
கையில் அகப்பட்ட துட்டு கணக்குப் பேசுகிறது.
கையில் அகப்பட்ட பொருளுக்கும் கணக்கு.
கையில் அரிசியும் கமண்டலத்தில் தண்ணீரும்.
4910 கையில் இருக்க நெய்யிலே கை இடுவானேன்?
கையில் இருக்கிற சோற்றைப் போட்டுவிட்டு, எச்சிற் சோற்றுக்குப் கை ஏந்தினதுபோல.
கையில் இருக்கும் கனியை எறிந்து மரத்தி லிருக்கும் கனியைத் தாவுவது போல.
கையில் இருந்தால் கர்ணன்.
கையில் இல்லாதவன் கள்ளன்.
கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம்பேர்.
கையில் எடுக்குமுன்னம் கோழி மோசமென்று அறியாது.
கையில் ஒருகாசுமில்லை கடன்கொடுப்பார் ஆருமில்லை.
கையில் காசிருக்கக் கறிக்கு அலைவானேன்?
கையில் பிடிப்பது ஜபமாலை, கக்கத்தில் இடுக்குவது கன்னக்கோல்.
4920 கையில் வெண்ணெயிருக்க நெய்க்கு அலைவானேன்?
கையிற் காசு வாயில் தோசை ஆமா?
கையிற் கிடைத்த அமுதைக் கமரில் ஊற்றலாமா?
கையிற் குடையும் காலிற் சோடும் வேண்டும்.
கையிற் செப மணி கொண்டு மிரட்ட வருகிறாயோ?
கையிற் பறவையை விட்டுக் காட்டுப் பறவைக்குக் கண்ணி வைக்கலாமா?
கையிற் பிள்ளையோடு கடலில் விழுந்தேன்.
கையும் கணக்கும் சரி.
கையும் களவுமாய்க் கண்டு பிடிக்கிறது.
கையை அறுத்து விட்டாலும் அகப்பை கட்டிக் கொண்டு திருடுவான்.

4930 கையை உடைத்து விட்டவன் தலையை உடைத்தாலும் உடைப்பான்.

கையைச் செட்டியார் குறைத்தால், காலைக் கைக்கோளன் குறைப்பான்.

கையைப் பார் முகத்தைப் பார் என்று இருந்தாற் காரியம் ஆகுமா?

கையைப் பிடித்திழுத்தும் வராதவள் கண்ணைக் காட்டி அழைத்தால் வருவாளா?

கையைப் பிடித்துக் கள்ளைவார்த்து, மயிரைப் பிடித்துக் காசுவாங்குகிறது. (பயம் வாங்குகிறதா?)

கையைப் பிடித்துத் தூக்கிவிடு, பிணக்காடாய்க் குவிக்கிறே னென்கிறானாம்.

கையை மூடிக்கொண்டிருந்தால் கமுக்கம், விரலைத் திறந்தால் வெட்ட வெளி (திறந்துவிட்டால் ஒன்றும் இல்லை).

கைவிரல் கண்ணிலே பட்டால் கையை என்ன பண்ணலாம்?

கை வைத்தால் கை இற்றுப்போம்.

---

## கொ.

கொக்கரித்த பேரெல்லாம் கூடத் தீப் பாய்வார்களா?

4940 கொக்கரிப்பார்க்குச் சுவர்க்கமோ, நெருப்பிற் குதிப் பார்க்குச் சுவர்க்கமோ?

கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்து அது உருகிக் கண்ணில் விழும்பொழுது பிடித்துக் கொள்ளலாம்.

கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது போல.

கொக்கு இளங்குஞ்சும் கோணாத தெங்கும் கண்டது இல்லை.

கொக்குக் குண்டா வீரசைவம்?

கொக்குக்குத் தெரியுமா கோழிக் குஞ்சைக் கொண்டு போக?

கொக்குக் குருவிபோல கொத்திக் கொத்திச் சேர்க்கிறது.

கொக்குக் கூட்டத்தில் ராஜாளி விழுந்தாற் போல.

கொக்குத் தின்னப் பெருச்சாளி பாய்ந்தாற் போல்.
கொக்குப் பிக்கலாட்டம்.
4950 கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?
கொங்கிலே குறுணி விற்கிறது, இங்கு என்னத்திற்கு?
கொசுவிலே குறுணிப்பால் கறக்கலாமா?
கொசுவிலே பிளவை அதிலே நீரழிவு, அறுக்கிறது எங்கே அட்டை விடுகிறது எங்கே?
கொசுவின் முதுகிலே பிளவை வந்தது போல.
கொசுகு கருடனுடன் கூடப் பறந்தாற்போல.
கொசுவுக்கு அஞ்சிக் குடிபோகிறதா?
கொசுவே கொசுவே தலை முழுகு, நான் மாட்டேன். சனிக்கிழமை.
கொசுவைப் பொருட்டாய் எண்ணிக் கருடன் எதிர்த்தாற் போல.
கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறதா?
4960 கொசுவை வடிப்பார் ஆசிகைப்படுவார்.
கொசு மூத்திரம் குறுணி.
கொசு வனத்தில் கொள்ளி வைத்துக் கொண்டது போல.
கொசுவுக்கு அஞ்சிக் குடி பெயர்ந்து போகிறதா?
கொச்சிக்குப் போனவன் செய்தியைப் பார், தன் குருவை விற்றவன் செய்தியைப் பார்.
கொச்சியிலே குறுணி மிளகென்றால் இங்கென்ன?
கொஞ்சங் கொஞ்சந்தின்றால் பனையும் தின்றுவிடலாம்.
கொஞ்சத்திலிருக்கிறதா, குரங்கு மிளகுநீர் குடிக் கிறது?
கொஞ்சத்தில் உண்மை இல்லாதவன் கோடியிலும் இருக்கமாட்டான்.
கொஞ்சநஞ்ச மிருந்தது குருக்களை அடைந்தது, கோயிலிலே வௌவாலடைந்தது.
4970 கொஞ்சப் பொருளை மந்திரம் பண்ணுகிறது போலக் கை காட்டுகிறான்.
கொஞ்சிக் கூத்தாடி நடந்தாலும் குதிரை ஆகுமா கழுதை?

கொடாக்கண்டன் விடாக்கண்டன்.
கொடாத இடையன் சினை ஆட்டைக் காட்டினது போல.
கொடாத கண்டனும் விடாத கண்டனும் கூடினாற் போல.
கொடிகள் அருகான மரத்திலே படரும்.
கொடிக்குக் காய் பாரமா (கனமா)?
கொடிக்குக் கொம்மட்டிக்காய் கனத்திருக்குமா?
கொடி சுற்றிப் பிறந்த பிள்ளை குலத்திற்கு ஆகாது.
கொடுக்கமாட்டாத இடையன் சினை ஆட்டைக் காட்டினது போல.
4980 கொடுக்க மாட்டாதவன் கூத்தைப் பழித்தான், இட மாட்டாதவன் எச்சிலென்று சொன்னான்.
கொடுக்கிறது உழக்குப் பால், உதைக்கிறது பல்லுப் போக.
கொடுக்கிற தெய்வம் முகம் மேல் (மூஞ்சியிலே, சூத்திலே) அடித்துக் கொடுக்கும்.
கொடுக்கிறதையும் கொடுத்துக் குஷ்டரோகி காலில் விழுவானேன்?
கொடுக்கிறவனைக் கண்டால் வாங்குகிறவனுக்கு இளக்காரம்.
கொடுக்கிறவன் (கொடுக்கிற தெய்வம்) கன்னத்தில் அடித்துக் கொடுப்பான் (கொடுக்கிறது).
கொடுக்கிறவன் குடுமியைப் பிடித்துக் கன்னத்திலடித்துக் கொடுப்பான்.
கொடுக்கிறான் பழனியாண்டி, தின்கிறான் சுப்பனாண்டி.
கொடுக்கிறேன் என்றால் ஆசை, அடிக்கிறேன் என்றால் பயம்.
கொடுங்கோல் அரசன்கீழ் குடியிருக்கல் ஆகாது.
4990 கொடுங்கோல் அரசு நெடுங்காலம் நில்லாது.
கொடுங்கோல் மன்னன் ஆளும் நாட்டிற் கடும்புலி வாழும் காடு நன்று.
கொடுத்த கடன் கேட்டால் குமரகண்ட வலிப்பு வலிக்கிறதாம்.
கொடுத்து கெட்டால் அடுத்ததாம் பகை.
கொடுத்ததைக் கொடுக்கும் குட்டிச்சாத்தன்.

கொடுத்ததைக் கொடுக்கும் குறளிப்பிசாசு.
கொடுத்தபணம் செல்லாவிட்டால் கூத்தரிசிக்காரி என்னசெய்வாள்?
கொடுத்தவருக்கு எல்லாம் உண்டு, கொடாதவருக்கு ஒன்றும் இல்லை.
கொடுத்தவனைப் புகழ்வார் கொடாதவனை இகழ்வார்.
கொடுத்தவன் அப்பன் கொடாதவன் சப்பன்.
5000 கொடுத்தாலொன்று கொடாவிட்டால் ஒன்று.
கொடுத்தால் ஒரு பேச்சு கொடாதேபோனால் ஒரு பேச்சு. [றது.
கொடுத்தாற்போற் கொடுத்து வாங்கிக்கொள்ளுகி
கொடுத்து உறவுகொள், கோளன் என்று இரேல்.
கொடுத்துக் கொடுத்து இருகையும் கூழையாய்ப் போச்சுது.
கொடுத்துக் கொடுத்துக்கையும் காய்ப்பு ஏறிப் போய் விட்டது.
கொடுத்து நிஷ்டூரப்படுவதை விடக் கொடாமல் நிஷ்டூரப்படுவதே மேல்.
கொடுத்தும் அறியான் கொடுத்தவர்களைக் கண்டும் அறியான்.
கொடுத்தும் கொல்லைவழியாய்ப் போகிறதா?
கொடுத்துப் பொல்லாப்பாகிறதை விடக் கொடாம லிருக்கிறது நலம்.
5010 கொடுப்பாரைத் தடுக்காதே.
கொடுப்பார் பிச்சையைக் கெடுப்பார் கெடுக்கிறது.
கொடுமை அற்றவன் கடுமை அற்றவன்.
கொடுமை கடப்பட்ட செல்வம் பசுங்கலத்தில் பால் கவிழ்ந்தது.
கொடுமையான அரசன் கீழ் இருப்பதைப் பார்க்கிலும் கடுமையான புலியின்கீழ் இருப்பது நன்று.
கொடும்பாவியானாலும் கொண்டமாமியார்வேண்டும்.
கொடும்பாவி சாகாளா, கோடைமழை பெய்யாதா?
கொடையிலும் ஒருத்தன், படையிலும் ஒருத்தன்.
கொட்டிக்கிழங்கு பறிக்கப்போனால் கோபித்துக் கொள்வார் பண்டாரம், அவித்துரித்து முன்னே வைத்தால் அமுதுகொள்வார் பண்டாரம்.

கொட்டிக் கொட்டிக் குளவியாக்குதல்.
கொட்டிக்கிழங்கு வெட்டுகிறவளுக்குக் கோயிலில் வந்து ஆடத் தெரியுமா?
5020 கொட்டிக்கொட்டி அளந்தாலும் குறுணி பதக்கு ஆகாது.
கொட்டிய பாலின் முன் கூவி யழுதாவதுண்டா?
கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சியா?
கொட்டை நூற்கிற அம்மாளுக்குப் பட்டணம் விசாரிப்பு ஏன்?
கொண்ட கடையிலேயா விற்கிறது?
கொண்டபடி விற்றால் கோடி லாபம்.
கொண்ட பெண்சாதியே கூர் அரிவாளா யிருந்தாள்.
கொண்டவனுக் கில்லாதவெட்கம் கண்டவனுக்குண்டா?
கொண்டவனே தொண்டையைப் பிடித்தால், பெண்டென்ன செய்வாள்?
கொண்டவன் அடிக்கக் கொழுந்தன்மேல் விழுந்தாளாம்.
5030 கொண்டவன் இருக்கக் கண்டவனோடு போவானென்?
கொண்டவன் உறவு உண்டானால் மண்டலமெல்லாம் ஆளலாம்.
கொண்டவன் சீறினால் கண்டவனுக்கெல்லாம் இளக்காரம்.
கொண்டவன் பலமிருந்தால் குப்பைமேடு ஏறிச் சண்டை செய்யலாம்.
கொண்டா குட்டிச்சாத்தா என்கிறதுபோல.
கொண்டாட்டம் போய்த் திண்டாட்டம் ஆச்சுது.
கொண்டார் முனியிற் கண்டார் முனிவர்.
கொண்டானும் கொடுத்தானும் ஒன்று, இந்தக் கலியாணத்தைக் கூட்டிவைத்தவன் வாயில் பிடிமண்.
கொண்டானும் கொண்டானும் சம்பந்தி, கொட்ட வந்தவன் அம்பலம்.
கொண்டு குலம்பேசுகிறதா?
5040 கொண்டைக்குத் தக்க பூ.
கொண்டைக்குப் பூச்சூடிச் சண்டைக்கு நிற்கிறது.

கொண்டைக்குப் பூச்சூடுகிறதா, தாடிக்குப் பூச்சூடுகிறதா?
கொண்டோர் எல்லாம் பெண்டிர் அல்லர்.
கொத்தடிமை குடி யடிமையா?
கொத்து வாழ்வுக்கு ஒரு பலகை பிடிக்கிறது.
கொலைக்கஞ்சாதவன் பழிக்கஞ்சுவானா?
கொல்லத்தெருவில் ஊசிவிற்றாற்போல கொண்ட கடையிலேயா விற்கிறது?
கொல்லவரும் யானைமுன்னே கல்லைவிட்டு எறியாதே.
கொல்லனைக் கண்டால் குரங்கு மல்லுக்கட்டச் சொல்லும்.
5050 கொல்லன் உலையில் கொசுவுக்கு என்ன அலுவல்?
கொல்லன் எளிமை (பேதைமை) கண்டு குரங்கு காலுக்குப் பூண்கட்டச் சொன்னதாம்.
கொல்லன் கைக் குறடு போல.
கொல்லன் தெருவில் ஊசி விலை போமா (விற்கிறதா)?
கொல்லன் பிணம் விறைத்தாற்போல.
கொல்லுகிறதும் சோறு பிழைப்பிக்கிறதும் சோறு.
கொல்லு கொலைக் கஞ்சாத கொடும் பாவி.
கொல்லைக்காட்டில் நரியைக் குடிவைத்துக்கொண்டது போல.
கொல்லைக்காட்டு நரி சலசலப்புக் கஞ்சுமா?
கொல்லைக்காட்டு நரி பல்லைக் காட்டினது போல.
5060 கொல்லைக்குப் பல்லி, குடிக்குச் சகுனி.
கொல்லைத் தலைமாட் டிருப்பது போல்.
கொல்லை பாழானாலும் குருவிக்கு இரை பஞ்சமா?
கொல்லைப்பச்சிலே மருந்துக்கு உதவுமா?
கொல்லையில் குற்றியை அடைந்த புல்லு உழவன் உழுபடைக்குக் கெடுமா?
கொழு குத்தக்கூட இடங்கொடுக்கான்.
கொழுகொம்பில்லாத கொடிபோல் ஆனேன்.
கொழுக்கட்டைக்குத் தலை பார்த்துக் கடிக்கிறார்களா?
கொழுக்கட்டைக்குத் தலையும் இல்லை, குறவனுக்கு முறையும் இல்லை.
கொழுக்கட்டைக்கு தலையும் இல்லை, கோயிலாண்டிக்கு (கூத்தாடிச்சிக்கு, கோயிலாண்டிச்சிக்கு, குடியனுக்கு) முறையும் இல்லை.

5070 கொழுக்கட்டை தின்ற நாய்க்குக் குறுணி மோர் குருதட்சிணை.

கொழுக்கட்டை சுட்டு உறவாடுகிறதா?

கொழுத்த ஆடு குட்டி போட்டாலும் வழுக்கட்டை வழுக்கட்டைதான்.

கொழுத்த மீன் தின்கிறவன் குருவிக் கறிக்கு அசங்கியப்படுவானா?

கொழுத்தவனுக்குக் கொள்ளும், இளைத்தவனுக்கு எள்ளும்.

கொழுத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு.

கொழுமீதிற் குடிகொண்ட குடிச் செல்வம் செல்வம்.

கொள் என்றால் வாயைத் திறக்கிறதா, கடிவாளம் என்றால் வாயை மூடுகிறதா?

கொள்வாரும் இல்லை, கொடுப்பாரும் இல்லை.

கொள்ளி கொண்டு தலை சொறிகிறதா?

5080 கொள்ளிக் கட்டையால் சுட்டால் கொப்பளிக்குமென்று வாழைப்பழம் கொண்டு வடுவடுவாய்ச் சுடுகிறான்.

கொள்ளிக்கு எதிர் போனாலும், வெள்ளிக்கு எதிர் போகலாகாது?

கொள்ளியை இழுத்துப் போட்டால் கொதிக்கிறது அடங்கி விடும்.

கொள்ளுக் குத்தின உலக்கை போல.

கொள்ளுக்கு வாயைத்திறந்து கடிவாளத்திற்கு வாயை மூடுதல்.

கொள்ளும் வரையில் கொண்டாட்டம், கொண்ட பிறகு திண்டாட்டம்.

கொள்ளை அடித்துத் தின்கிறவனுக்குக் கொண்டு தின்னத் தாங்குமா?

கொள்ளைக்குப் போனாலும் கூட்டு ஆகாது.

கொள்ளைக்கு முந்து கோபத்திற்குப் பிந்து.

கொள்ளைக்கும் ஊழிக்கும் தப்பு.

5090 கொள்ளையிடப் போகிறவனுக்குக் குருடன் துணை ஆகுமா?

கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி.

கொற்றவன் தன்னிலும் கற்றவன் மிக்கோன்.
கொன்றாற் பாவம் தின்றால் தீரும்.

---

## கோ.

கோடானு கோடி வினை வரினும் மனம் கோணாம லிருப்பதே கோடி பெறும்.
கோடாலிக் காம்பு குலத்துக்கு ஈனம்.
கோடி கப்பல் ஓடிய வீடு கொட்டை நூற்றா விடியும்?
கோடி சீமானும் கோவணாண்டியும் சரியா?
கோடி சீமான் துணியவேண்டும், அல்லது கோவண ஆண்டி துணியவேண்டும்.
கோடி தனம் இருந்தாலும் குணம் இல்லா மங்கையருடன் கூடாதே.
5100 கோடி தனம் இருந்தாலும் குணம் இல்லா மங்கையை மணம் முடிக்கல் ஆகாது.
கோடி நேசம் கேடு படுத்தும்.
கோடிப் புடவையைக் கட்டிக்கொண்ட தைரியம் குச்சைக் கொளுத்திக் கொண்டாளாம்.
கோடிமுண்டர் ஏறிமிதித்தாலும் கூழாங்கல்லு சாந்துக்கு வருமா?
கோடி வித்தையும் கூழுக்குத்தான்.
கோடீசுவரன் ஆகவேண்டுமோ, லக்ஷாதிபதி ஆக வேண்டுமோ?
கோடை இடி குமுறினாற்போல இடித்தாற்போல.
கோடையால் காய்கிற பயிர் வாடையால் தளிர்க்கும்.
கோடையிலே தண்ணீரை ஓடை கண்ட மான்போல.
கோட் சொல்பவனைக் கொடும் தேள் என நினை.
5110 கோட் சொல்லும் வாய் காற்றுடன் நெருப்பு.
கோட்டானை மடியிற் கட்டிக்கொண்டது போல.
கோட்டுச் சம்பா ஆக்கிவைத்தால் போட்டுச் சாப்பிட வருவார்கள்.
கோட்டைக்குள்ளே குத்தும் வெட்டுமா?
கோட்டைக்குள்ளே படை வெட்டிக்கொள்ளுகிறதா?
கோட்டையில் பெண் பிறந்தாலும் போட்ட புள்ளி போகுமா?

கோணல் கோணல் கோவிந்தா!
கோணற்கொம்பு ஏறி என்ன? குதிரை ஏறி என்ன? வீணர்க்கும் கீர்த்திக்கும் வெகுதூரம்.
கோணி கொண்டது எருது சுமந்தது.
கோணிக் கோடி கொடுப்பதிலும் கோணாமற் காணி கொடுப்பது நல்லது.
5120 கோத்திரத்திலே குரங்கானாலும் கொள்ளு.
கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு, பாத்திரம் அறிந்து பிச்சை இடு (போடு).
கோத்திர வீனன் சாத்திரம் பார்ப்பான்.
கோபத்தில் அறுத்த மூக்கு, சந்தோஷத்தில் வருமா?
கோபம் அற்றாற் குரோதம் அறும்.
கோபம் இல்லாத துரையும் சம்பளம் இல்லாத சேவகனும்.
கோபம் உள்ள இடத்தில் குணம் உண்டு.
கோபம் உள்ள இடத்தில்தான் சந்தோஷம் இருக்கும்.
கோபம் சண்டாளம்.
கோபம் பாபம் நித்திரை சத்துரு.
5130 கோபம் வந்து கிணற்றில் விழுந்தால், சந்தோஷம் வந்தால் எழுந்திருக்கலாமா?
கோபி குதிரைமேல் கடிவாளம் இல்லான்.
கோபுரத்திலே விளக்கை வைத்துக் கொட்டுக் கூடையால் மூடுவானேன்?
கோபுரத்தின் மேலேறிக் குடத்தைக் கழற்றுகிறவன் அரைக்கீரைக் கொல்லையைப் பார்த்துக் கொள்ளை கொள்ளை என்றானாம்.
கோபுரம் தாங்கிபோல் நடக்கிறான்.
கோபுரம் தாங்கிய பூதம்போல் சுமக்கிறான்.
கோபுரம் தாங்கிய பொம்மை போல.
கோமணத்தை அவிழ்த்து மேற்கட்டு கட்டுகிறது.
கோமுட்டிச் சாட்சி.
கோமுட்டிப் புத்திக்கு மோசம் இல்லை.
5140 கோமுட்டிப் புத்திக்கு மோசம் லேது, மோசம் வந்தால் செப்ப லேது.

கோமுட்டியைச் சாட்சிக்குக் கூப்பிட்டாற் போல.
கோயிலையும் குளத்தையும் அடுத்து இருக்க வேண்டும்.
கோயில் இல்லா ஊரிலே குடி இருக்கலாமா?
கோயில் மணியம் என்று கூப்பிட்டால் போதும்.
கோயிற் பூனைக்குப் பயம் ஏன்?
கோயிற் பூனை தேவர்க்கஞ்சுமா?
கோரக்கர் வைத்தியம் குணத்திற்கு ஏற்குமா?
கோரை குடியைக் கெடுக்கும்.
கோரைக் கிழங்கும் ஒரு வேளைக்கு உதவும்.

5150 கோல் ஆடக் குரங்கு ஆடும், அது போல மனம் ஆடும்.
கோல் இழந்த குருடனைப் போல.
கோல் எடுத்த பிள்ளை குருட்டுப் பிள்ளை.
கோவணத்தில் ஒரு காசு இருந்தால் கோழி கூப்பிட (கூவ) ஒரு பாட்டு வரும்.
கோவிந்தா என்றால் கோடி ஸ்நானம் என்று குளிக்காமல் முழுகாமல் இருக்கலாமா?
கோவி லிடிக்கத் துணிந்தவனா குளம் வெட்டப் போகிறான்?
கோவிலில் கொட்டுமுழக்கு, கடையில் பாக்கு வெற்றிலை.
கோவிலுண்டைச் சோறு குமட்டின தேவடியாள் குத்துமித் தவிட்டுக்குக் கூத்தாடுகிறாள்.
கோவிலை அடைத்துக் கொள்ளை யிடுகிறவனா குருக்களுக்குத் தட்சிணை கொடுப்பான்?
கோவிலைப் பார்த்துக் கும்பிடுகிறதா, கொள்ளைப் பார்த்துக் கும்பிடுகிறதா?

5160 கோவில் சோற்றுக்குக் குமட்டின தேவடியாள் காடிச் சோற்றுக்குக் கரணம் போடுகிறாள்.
கோவில் பூனை தேவருக் கஞ்சுமா?
கோவில் மணியம் என்கிற பேர் இருந்தால் போதும்.
கோவில் மணியம் என்று கூப்பிட்டாற் போதாதா?
கோவில் மணியம் போனால் நம்பியான் கழலும் போச்சுதா?
கோவில் விளங்கக் குடி விளங்கும்.
கோவுக்கு அழகு செங்கோன் முறைமை.

கோவூரான் அவசாரிபோக, குண்ணத்தூரான் தண்டங் கொடுக்க.
கோழி அடிக்கிறதற்குக் குறுந்தடியா (குறுந்தடி வேண்டுமா)?
கோழி களவுபோக ஆடு வெட்டிப் பொங்கல் இடுகிறதா?
5170 கோழி கறுப்பானால் அதன் முட்டையுங் கருப்பா?
கோழி கூப்பிட்டு விடுகிறதா, நாய்குலைத்துவிடிகிறதா
கோழி கூவிப் பொழுது புலர்ந்தது.
கோழி கூவி விடிகிறதா?
கோழி கொடுத்துக்குரலும் அழுகிறதா (அழிகிறது)?
கோழிக்கறி என்றதும் கொண்டாடிக் கொண்டதும் கீரைத் தண்டாணம் அடா சுப்பா கீரைத் தண்டாணம் அடா!
கோழிக்கறி கொடுத்துக் குயிற்கறி வாங்கினாற்போல்.
கோழிக் காய்ச்சலும் குண்டன் காய்ச்சலும் விடாது.
கோழிக் குஞ்சுக்குப் பால் கொடுத்தது போல.
கோழி சிறகால் குஞ்சுகளைக் காப்பது போல.
5180 கோழி தட்டிக் கூவுமா?
கோழி திருடியும் கூடிக் குலாவுகிறான்.
கோழி தின்ற கள்ளனும் கூட நின்று உலாவுகிறான்.
கோழி போனதும் அல்லாமல் குரலும் போச்சுது.
கோழி மிதித்துக் குஞ்சு முடம் ஆகுமா?
கோழி முடத்துக்குக் கடா வெட்டிக் காவுகொடுக்கிறதா?
கோழி முடத்துக்குக் கடாவெட்டிப் பலி இட்டது போல.
கோழி முட்டைக்குத் தலையுமில்லை, கோயிலாண்டிக்கு முறையு மில்லை.
கோழி முட்டைக்கு மயிர் பிடுங்குகிறது.
கோழியின் காலில் கச்சையைக் கட்டினாலும் குப்பையைச் சீக்கும்.
5610 கோழியைக் கேட்டோ ஆணம் காய்ச்சுகிறது?
கோழையில் மொய்த்துக் குழம்பும் ஈ போல.
கோளுக்கு முந்தேன், கூழுக்குப் பிந்தேன்.
கோளுஞ் சொல்லிக் கும்பிடு வானேன்?

கோள் சொல்லிக் குடியைக் கெடுக்கிறதா?
கோனான் கோலெடுக்க நூறாடும் ஆறாடாச்சுது.

## கௌ.

கௌசிகத்து ஒளியில் எவர்க்கும் ஒளிரும்.
கௌவை உடையார் காலைத் தொடு.
கௌவை கருதேன்.
கௌவை சொல்லில் எவ்வர்க்கும் பகை.
5200 கௌவைப் பட்டால் காயத்தில் ஒரு முழம் நீளுமா?
கௌவைய தில்லான் திவ்விய சொல்லான்.

## ஙு.

ஙப்பன் பிறந்தது வெள்ளிமலை, ஙாயி பிறந்தது பொன்மலை.
ஙப்போல் வளை.

## ச.

சகதியில் கல்லைவிட் டெறிந்தால் தன்துணி என்றும் அசலார் துணி என்றும் பாராது.
சடத்தைக் கொடுத்தும் சுகத்தை வாங்கு.
சகத்தைக் கொடுத்தும் சுகத்தை வாங்கிக் கொள்.
சகல தீர்த்தங்களுக்கும் சமுத்திரமே ஆதரடி (காரணம்).
சகல நக்ஷத்திரமும் கூடினாலும் சந்திரனுக்கு கிணையாமா?
சகலமும் கற்றவன் றன்னைச் சார்ந்திரு.
5210 சகலன் உறவிற் சாண்கொடி (கயிறு) பஞ்சமா?
சகுனம் நன்றா யிருக்கிறதென்று பொழுது விடிகிற வரைக்கும் கன்னம் வைக்க லாமா?
சகோதரம் உள்ளவன் படைக்கு அஞ்சான்.
சக்கிலிப் பெண்ணும் சாமைக் கதிரும் பக்குவத்திலே பார்த்தால் (சமைந்தால்) அழகு.

சக்குச்சக்கு என்று பாக்குத்தின்பான் சபை மெச்ச, வீட்டிலே வந்து கடைவாயை நக்குவான் பெண்டுகள் மெச்ச.

சங்கனும் புங்கனும் சந்நியாசிக்கு உதவியா?

சங்கிலே வார்த்தால் (விட்டால்)தீர்த்தம், சட்டியிலே (மொந்தையிலே) வார்த்தால் (விட்டால்) தண்ணீர்.

சங்கு ஆயிரம் கொண்டு காசிக்குப் போனாலும் தன் பாவம் தன்னோடே.

சங்கு ஆயிரங்கொண்டு வங்காளம் போனால் பொன் பாளம் வந்தாலும் வந்தது, மண்பாளம் வந்தாலும் வந்தது.

5220 சங்கு உடைந்தது, மண் கரைந்தது.

சங்கு ஊதாமல் தாலி கட்டுவது உண்டா?

சங்கு (சங்கைச்) சுட்டாலும் தன்வெண்மை குன்றாது.

சங்கு சூத்தாகிறது ஆண்டி வாயாகிறது.

சங்கு சூத்தும் ஆண்டி வாயும்.

சங்கோசம் (ஸங்கோஜம்) விட்டால் சங்கையுமில்லை.

சடைகொண்ட இலுப்பையைத் தடிகொண்டு அடித்தாற் போல.

சடைத் தம்பிரானுக்குச் சாதம் இல்லாதபோது மொட்டைத் தம்பிரானுக்கு மோர் எங்கேகிடைக்கும்?

சடைத்தம்பிரான் சாற்றுக்கு அழுகிறானாம், லிங்கம் பஞ்சாமிர்தத்துக்கு அழுகிறதாம்!

சடைத்தம்பிரான் தவிட்டுக்கு அழுகிறான், லிங்கம் பரமான்னத்திற்கு அழுகிறதாம்!

சடைத்தம்பிரான் தவிட்டுக்கு அழுகிறான், லிங்கம் பரமான்னத்திற்கு அழுகிறதாம்

5230 சடையைப் பிடித்து இழுத்தால் சந்நியாசி கிட்ட வருவார்.

சடையைப் பிடித்து இழுத்தால் தம்பிரான் கூடவரு

சட்டி சுட்டதும் கைவிட்டதும். [ வார்.

சட்டிப் பாலுக்கு ஒரு சொட்டு மோர் பிரை.

சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?

சணப்பன் வீட்டுக்கோழி தானே விலங்கு பூட்டிக் கொண்டது போல.

சணப்பன் வீட்டு நாய் சணல் கட்டிலின்மேல் ஏறி னாற்போல.
சணப்பித்தம் சணச் சித்தம்.
சணம் பித்தம் சணம் வாதம்.
சண்ட மாருதத்திற்குமுன் சருகோட்டம் போல்.
5240 சண்ட மாருதத்தின் முன் எதிர்ப்பட்ட சருகுபோல்.
சண்டிக்கு ஏற்ற மிண்டன்.
சண்டி (ஜண்டி)க் குதிரைக்கு மொண்டிச் (நொண்டிச்) சாரதி.
சண்டி புரண்டால் காடு கொள்ளது.
சண்டியிலும் சண்டி சக (சவ) சண்டி.
சண்டைசெய்யும் இரண்டு கடாக்கள் நடுவில் நரி நின்று நசுங்கினதுபோல்.
சண்டை நடந்ததற்குச் சாட்சி மகள் இருக்கிறாள்.
சண்டை முகத்திலே உறவா?
சண்ணி, அண்ணாமலை என்று பெயர் இடுவாள்.
சதகோடி சங்கத்திலே மொட்டைத் தாதனைக் கண்டாயா என்கிறதுபோல.
5250 சதுரக்கள்ளியில் அகில் உண்டாகும்.
சதை இல்லாமற் கத்தி நாடுமா?
சதை உள்ள இடத்திலே கத்தி நாடும்.
சதை கண்டு கத்தி நாடவேண்டும்.
சத்த மேகங்களும் கூடி நெருப்புமழை பெய்தாற் போல.
சத்தம் பிறந்தவிடத்தே சகல கலையும் பிறக்கும்.
சத்தியத்திலே சாமிசாட்சி என்கிற சத்தியம்பெரிது.
சத்தியத்திற்கு அரிச்சந்திரன்.
சத்தியத்திற்கு இல்லாத பிள்ளை துக்கப்பட் டழப் போகிறானா?
சத்தியமே கொல்லும் சத்தியமே வெல்லும்
5260 சத்தியமே சத்தி, தத்துவமே சித்தி.
சத்தியமே தருமம் நித்தியம்.
சத்தியமே வெல்லும், அசத்தியமே கொல்லும்.
சத்தியம் நன்னிலை, சாவைத் தினம் நினை.
சத்திய வாசகன் சமஸ்த சற்குணன் (நற்குணன்).
சத்திரத்திலே சாப்பாடு மண்டபத்திலே படுக்கை.

சத்திரத்திலே போசனம் மடத்திலே நித்திரை.
சத்திரத்துக் கூழுக்கு தாத ஐயன்கார் உத்தரவா?
சத்திரத்துக் கூழுக்கு நாயக்கர் அப்பணையோ?
சத்திரத்துச் சாப்பாட்டுக்குத் தலத்து ஐயங்கார் அப்பணையோ?
5270 சத்திரத்துப் பாட்டுக்குத் தெருப்பாட்டு (திருப்பாட்டு) மேலா?
சத்துக்களோடு சத்துக்கள் சேர்வர், சந்தனத்தோடு கர்ப்பூரம் சேரும்.
சத்துருக்களையும் சித்தமாய் நேசி.
சத்துரு பொறாமை தனக்கே தண்டனை.
சத்துருவைச் சார்ந்து கொல்லவேண்டும்.
சந்தடிச் சாக்கிலே கந்தப்பொடி காற்பணம்.
சந்தனக் கட்டை தேய்ந்து கந்தம் குறைபடுமா?
சந்தனம் அரைக்கின்றவன் புடுக்கு அலைகிறாப்போல.
சந்தனம் தெளித்த கையாலே சாணி தெளிக்கல் ஆச்சுது.
சந்தனம் மிகுந்தால் சூத்திலே பூசிக்கொள்ளுகிறதா?
5280 சந்தன வாள் போல.
சந்தன விருக்ஷமிருக்கிற காட்டிலே சர்ப்பம் இருக்கிறது போல.
சந்தியிலே அடித்ததற்குச் சாட்சியா?
சந்திரனைப் பார்த்த கண்ணுக்குச் சனியனைப் பார்த்தாற் போல.
சந்திரனைப் பார்த்து நாய் குலைத்தாவது என்ன?
சந்திரன் குளிர்ச்சியாய்க் காய்ந்தாலும் சூரியனையே உலகத்தார் நாடுவார்கள்.
சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கிறான்.
சந்திரன் சூரியன் தெற்கு வடக்கானாலும் பிசகான்.
சந்தை இரைச்சலிலே குடியிருந்து கெட்டேனே.
சந்தைக் கூட்டம் மொம்மல் ஆட்டம்.
5290 சந்தையில் அடிப்பட்டவனுக்குச் சாட்சி ஆர்?
சந்தைக்கு வந்தவர்கள் துணையா?
சந்நியாசம் சகல நாசம்.
சந்திரனைக் கண்ட கடல் போல.

சந்நியாசி கோவணத்துக்கு இச்சித்துச் சமுசாரம் மேலிட்டதுபோல.
சந்நியாசி கோவணம் கட்டினது போல.
சந்நியாசிக்குப் பழைய குணம் போகாது.
சந்நியாசிக்கும் ஜாதி மானம் போகாது.
சந்நியாசி பயணம் திண்ணை விட்டுக் குதிப்பதுதான்.
சந்நியாசி பூனை வளர்த்தது போல.
சந்நியாசியார் சந்தையிலே கண்டவளே என்றாட்டினார், தவசிப்பிள்ளை சந்நியாசியார் கண்டவளே என்றாட்டினான்.
5300 சந்நியாசியைக் கடித்த நாய்க்குப் பின்னாலே நரகமாம், சந்நியாசிக்கு முன்னாலே மரணமாம்.
சந்நியாசியை நிந்தித்தவனுக்குப் பின்னாலே நரகமாம்.
சந்நியாசி வீடு (பயணம்) திண்ணையிலே.
சபம் சாயாது.
சபைக் கோழை ஆகாது.
சபையிலே நக்கீரன் அரசிலே விற்சேரன்.
சப்த பிரம்மத்தில் அசப்த பிரம்மம் பிரகாசிக்கிறது.
சப்த பிரம்மம் பரப் பிரம்மம் இரண்டையும் அறிய வேண்டியது.
சப்பரத்துக்கு முன்னே வந்தையா பின்னே வந்தையா?
சப்பாணிக்கு நொண்டி சண்டப் பிரசண்டன்.
5310 சப்பாணிக்கு விட்ட இடத்திலே கோபம்.
சப்பாணி மாப்பிள்ளைக்குச் சந்தொடிந்த பெண்சாதி.
சமண சந்நியாசிக்கும் வண்ணானுக்கும் சம்பந்தமென்ன?
சமயம் வாய்த்தால் களவு செய்வான்.
சமயம் வாய்த்தால் நமனையும் பலகாரம் செய்வான்.
சமயம் வாய்த்தால் நமனையும் வெல்லலாமே.
சமர்த்தனுக்கு ஏதும் பெரிதல்ல.
சமர்த்தன் பெண்சாதியும் சோரம் போவாள்.
சமர்த்திலே என்ன பெற்றாள்? சட்டிச்சோற்றைத் தின்னப் பெற்றாள்.
சமர்த்திலே குண்டு பாயுமா?

5320 சமர்த்துக்குச் சனியன்.
சமர்த்துள்ள சேவகனுக்குப் புல்லும் ஆயுதமாம்.
சமர்த்துள்ள சேவகனுக்கு வாள் பழுதானாலும் கேடில்லை.
சமாசாரம் தெரியாமல் அமாவாசைக்குப் போகிறான்.
சமிக்கை அறியாதவன் சதுரன் அல்ல.
சமிக்கை காட்டிச் சண்டைக்கு அழைக்கிறான்.
சமுசாரக் குட்டு வியாதி ரெட்டு (ரெட்டிப்பு).
சமுசாரக்குட்டு வெளியிட்டால் நஷ்டம்.
சமுசாரமோ சாகரமோ!
சமுசாரம் துக்க சாகரம்.

5330 சமுத்திர அலை ஓயப்போகிறது மில்லை, தம்பி தலை முழுகித் தர்ப்பணம் பண்ணப்போகிறதுமில்லை.
சமுத்திரத்திலே ஏற்றம் போட்டுத் தண்ணீர் இறைத்தாற் போல்.
சமுத்திரத்தில் ஏற்றம் போட்டது போலிருக்கிறது.
சமுத்திரத்திற்கும் சாண் குண்டுக்கும் எம்மாத்ரம்?
சமுத்திரமும் சாக்கடையும் சரியா?
சமுத்திர வண்கணன் சண்டாளன்.
சமைக்கப் படைக்கத் தெரியாமற் போனாலும் உடைக்கக் கவிழ்க்கத் தெரியும்.
சமையல் வீட்டிலே நாய்நுழைந்தாற் போல.
சமையல் வீட்டிலே முயல் தானே வந்தது போல.
சம்ஸாரம் சாகரம் துக்கம்.

5340 சம்பத்தும் விபத்தும் கூடவே இருக்கிறது.
சம்பந்தி கிருகஸ்தன் வந்தான், தவலையை எடுத்து உள்ளே வை.
சம்பந்தி கிருகஸ்தன் வருகிறான், செம்புதவலையை உள்ளே (வெளியே) வை.
சம்பம் சாயாது.
சம்பளம் அரைப்பணமானாலும் சலுகை இருக்க வேண்டும்.
சம்பளம் அரைப்பணமானாலும், சளுக்கு முக்காற் பணம்.

சம்பளம் இல்லாத சேவகனும் கோபமில்லாத எஜமானும்.
சம்பள வீதத்திலேயா குண்டு படுகிறது?
சம்பா விளைந்து சாய்ந்துகிடக்குது, உண்பாரில்லாமல் ஊர்க்குருவி மேயுது.
சயமுள்ள மட்டும் பயமில்லை.
5340 சயினன் கைச் சீலைப்பேன் போல.
சரக்குக் கண்ட இடத்திலே பிள்ளைக்கு அவிழ்தம் கொடுக்க நினைக்கிறது போல.
சரக்குக்கண்ட இடத்திலே பிள்ளை பெறுகிறது.
சரீரப்பிரயாசை என்னத்திற்கு? சாண் வயிற்றுக்குத்தான்.
சருகரிக்க நேரமின்றிக் குளிர்காய நேரம் இல்லை.
சருகுபொறுக்க நேரமன்றிக் குளிர்காய நேரம் இல்லை.
சருகைக் கண்டு தணல் அஞ்சுமா?
சருக்கரை என்றால் தித்திக்குமா?
சருக்கரை என்று எழுதி நக்கினால் ருசிக்குமா?
சருக்கரை தின்று பித்தம் போகுமானால், கசப்பு (கைப்பு) மருந்து ஏன் தின்னவேண்டும்?
5350 சருக்கரைப் பந்தலிலே தேன் மாரி பொழிந்தது போல.
சருக்கரைப் பாவுத் தோண்டியிலே தாழ மொண்டாலும் தித்திப்பு, மேலே மொண்டாலும் தித்திப்பு.
சருக்கரையும் தேனும் சிற்றப்பா, ஏட்டில் எழுதி நக்கப்பா.
சருகக்ரையும் மணலும் (மாவும்) சரியா?
சர்ப்பத்தின் வாய்த் தவளை (தேரை) போல.
சர்வ வில்லங்க சித்தி.
சலம் நுழையாத இடத்தில் எண்ணெயும், எண்ணெய் நுழையாத இடத்தில் புகையும் நுழையும்.
சலிப்போடு சம்பந்தி இழுத்தால் இலைப் பருக்கை (ஏழு இலை).
சல்லடைக் கண்போல் சில்லுச் சில்லாய்த் துளைகிறது.
சல்லிய சாரத்தியம் செய்யாதே.

5360 சல்லிவேரறக் (வேறுக்) கல்லிப் பறிக்கிறது.
சவண்டிக்குச் சாப்பிட்டான் இருக்கச் செத்தது பொய்யா?
சவதியில் கல்விட்டெறிந்தால் மேலே தெறிக்கும்.
சவ்வாதிலே மயிர் வாங்கினது போல.
சனி பிடித்ததோ சனி (சனியன்) பிடித்ததோ?
சளுக்கன் தனக்குச் சத்துரு சவளிக்காரனுக்கு மித்துரு.
சற்சனர் உறவு சருக்கரைப் பாகுபோல.
சற்புத்திரன் இருக்கிற இடத்திலே தறுதலையும் இருக்கிறது.
சனத்தோடு சனம் சேரும், சந்தனத்தோடு கர்ப்பூரம் சேரும்.
சனப்பலம் இருந்தால் மனப்பலம் வரும்.
5370 சனிநீராடு.
சனி பிடித்ததோ சனியன் பிடித்ததோ?
சனிப்பிணம் தனிப்போகாது.
சனிப்பிணம் துணைதேடும்.
சனியனை விலைக்கு வாங்கினதுபோல.
சனியன் பிடித்தவளுக்குச் சந்தையிலும் கந்தை அகப்படாது.
சனியன் பிடித்தவள் சந்தைக்குப் போனாலும் புருஷன் அகப்படமாட்டான்.
ஜன்மக் குருடனுக்குக் கண் கிடைத்ததுபோல.
ஜன்மத்தால் ஜாதியோ, கன்மத்தால் ஜாதியோ?
ஜன்மத்தில் பிறந்தது செருப்பா லடித்தாலும் போகாது.
5380 சன்னதம் குலைந்தால் கும்பிடு எங்கே கிடைக்கும் (வரும்)?
சன்னதம் குலைந்தால் வீறாப்பு எங்கே?
சன்னம் சன்னம் பர்வதம்.

---

## சா.

சாகத் திரிகிறான் சண்டாளன், சாப்பிட்டுத் திரிகிறான் பெண்டாளன்.

சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் நீச்சு (முழங்கால் ஆழம்)
சாகப் பொழுதன்றி வேகப் பொழுதில்லை.
சாகமாட்டாத மாடு கொம்பைக் கொம்பை அலைத்தாற் போல.
சாக மாட்டாமற் சங்கடப்படுகிறது.
சாக வேண்டுமென்கிற சதுரையை விட்டுவிட்டுவா, வாழவேண்டு மென்கிற வலதியை அழைத்துவா.
சாகாமற் கற்பதே கல்வி, பிறரிடத்தில் ஏமாமல் உண்பதே ஊண்.
5390 சாகிற காலத்தில் சங்கரா சங்கரா என்றாற் போல.
சாகிறது போலிருந்து வியாதி தீருகிறதும் உண்டு.
சாகிற நாய் வீட்டின் மேல் ஏறினாற்போல.
சாகிற நாய் வீரத்தைக் காட்டினாற் போல.
சாகிற பேருக்குச் சமுத்திரம் கால்வாய்.
சாகிற வரைக்கும் சங்கடமானால் வாழுகிறது எக்காலம்?
சாகிற வரைக்கும் சஞ்சலமானால் போகிறது எந்தக் காலமோ?
சாகிற வரையில் மருந்து கொடுக்கவேண்டும்.
சாகிற வரையில் வைத்தியன் விடான், செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்.
சாகிற வரையும் கஷ்டமானால் சுகம் எப்போ?
5400 சாகிறவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டும்.
சாகிறவனைப்போலிருப்பான் பிழைப்பான், பிழைப் பானைப் போலிருப்பான் சாவான்.
சாகிறவன் சனியனுக்குப் பயப்படுவானா?
சாகையிலே வந்தால் பாடையிலே பார்க்கலாம்.
சாகோ நோகோ அம்மையார் வாக்கோ?
சாக்கடைச் சேறு என்றாலும் சக்களத்தி யென்றாலும் சரி.
சாக்கடைப் புழு என்றாலும் சக்களத்தி என்றாற் போதும்.
சாக்கடைப் புழு என்றாலும் சக்களத்தியை வெல்லப் போகாது.
சாக்கடை புழுவிற்குப் போக்கிடம் எங்கே?

சாக்கும் போக்கும் ஏற்காது ஐயன் முன்.

5410 சாடிக்கு மூடி வாய்த்தது போல.

சாடி சட்டிச் சூளை மேலே கோடையிடி விழுந்தாற் போல.

சாடை யறியாதவன் சங்காத்தியோ?

சாட்சிக்காரன் காலில் விழுவதிலும் சண்டைக்காரன் காலில் விழலாம்.

சாட்டு இல்லாமல் சாவு இல்லை.

சாட்டை அடியும் சவுக்கு அடியும் பொறுக்கலாம், மூட்டுப்பூச்சி கடியும் முணுமுணுப்பும் ஆகாது.

சாட்டை இல்லாப் பம்பரம் ஆடுமா?

சாட்டை இல்லாப் பம்பரம் ஆட்டி வைக்கவல்லவன்.

சாணான் எச்சில் கருப்புக்கட்டி, சர்க்கரை வெல்லம் உழவன் எச்சில்.

சாணி ஒரு கூடை சவ்வாது ஒருபண இடை.

5420 சாணிக்குழியும் சமுத்திரமும் சரியாய் நினைக்கலாமா?

சாணிச்சட்டியும் சருவச்சட்டியும் சரியாமா?

சாணிச்சட்டி வைக்கிற இடத்தில் சாணிச்சட்டிவைக்க வேண்டும், சரிகைச்சட்டி வைக்கிற இடத்தில் சரி கைச்சட்டி வைக்கவேண்டும்.

சாணிப்புழு.

சாணியும் சவ்வாதும் சரியாகுமா?

சாணியைக் கொடுத்து மெழுகு என்றானாம்.

சாணுக்குச்சாண் வித்தியாசம்.

சாணோ (ஜாணோ) வயிறு சரீரம் எல்லாம் வயிறு.

சாண் ஏற முழம் சருக்குகிறது.

சாண் கற்கழுவினால் முழச் சேறு.

5430 சாண் காட்டிலே முழத்தடி வெட்டலாமா?

சாண் குருவிக்கு முழ வாலாம்.

சாண் சடைக்கு முழக்கயிறா (முழத்துணியா)?

சாண் செடியிலே முழத்தடி வெட்டலாமா?

சாண் தண்ணீரிலே முழப்பேய்.

சாண் பண்டாரத்துக்கு முழம் விபூதி (லிங்கம்,தாடி).

சாண் பறைக்கு முழத்தடி.

சாண் (ஜாண்) பாம்பானாலும் முழத்தடி வேண்டும்.

சாண் (ஜாண்) பிள்ளையானாலும் ஆண்பிள்ளை இருக்க வேண்டும்.

சாதி அந்த புத்தி குலம் அந்த ஆசாரம்.

5440 சாதிக்கடுத்த புத்தி தீனிக்கடுத்த லத்தி.

சாதிக்குத் தக்க புத்தி குலத்துக்குத் தக்க ஆசாரம்.

சாதிமானமும் சமயமானமும் சந்நியாசிக்கும் உண்டு.

சாதிவாக்கு சங்கிடவாக்கு இலுப்பைப்பூ தொளைவாக்கு.

சாது மிரண்டால் காடு இடங்கொள்ளாது.

சாதுரியப்பூனை தயிரிருக்கச் சட்டியை நக்கிற்று.

சாதுரியப்பூனை மீனைவிட்டுப் புளியங்காயைத் தின்றதாம்.

சாத் கானி குடுமிக்கும் சந்நியாசி பூணூலுக்கும் முடி போடு.

சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக் கிச் சூத்திரத்தைக்கண்டு சுகம்பெறுவதெக்காலம்?

சாஸ்திரம் கற்றவன் தானே காசு.

5450 சாத்திரம் பாராத வீடு சமுத்திரம், பார்த்த வீடு தரித்திரம்.

சாத்திரம் பார்த்துப் பெண்ணைக்கொள், கோத்திரம் பார்த்துப் பெண்ணைக் கொடு.

சாத்திரம் பொய்யென்றால் கிரகணத்தைப் பார்.

சாந்துப்பெட்டி பாம்புப் பெட்டி ஆயிற்று.

சாபமிட்டாருண்டோ? தலையில் திரு எழுத்தோ? வேகவிட்டாருண்டோ? எழுத்தின்படி தானோ?

சாப்பிணி மருந்தேற்காது.

சாப்பிள்ளை பெறுவதிலும் தான் சாவது நலம்.

சாப்பிள்ளை பெற்றவளுக்குச் சந்தோஷம் வருமா?

சாப்பிள்ளை பெற்றாலும் மருத்துவிச்சி கூலிதப்பாது.

சாப்பிள்ளை பெற்றுத் தாலாட்டவா?

5460 சாமளவும் இருந்தால் கலியாணம் செய்துவைக்கிறேன்.

சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி இடங் கொடுக்கமாட்டான்.

சாமைப் பயிரும் சக்கிலியப் பெண்ணும் சமைந்தால் தெரியும்.
சாம்பலைக் கிண்டிக் கோழி தானே விலங்கு இட்டுக் கொண்டதுபோல.
சாம்பலைத் தின்று வெண்ணெயைப் பூசினதுபோல.
சாயந்தரத்தில் கல்யாணம் பிடி தாம்பூலம்.
சாய்ந்தமரத்தில் ஓடி ஏறலாம்.
சாரத்தை உட்கொண்டு சக்கையை உமிழ்ந்துவிடுவது போல.
சாராயத்தைத்தான் தினம் குடித்தால் காராளனும் கடை மகனாவான்.
சாராயத்தை வார்த்துப் பூராயத்தைக் கேளு.
5470 சாரைதின்னும் ஊருக்குப்போனால் நடுக்கண்டம் எனக்கு.
சார்வில்லாதவனுக்கு நிலையில்லை.
சாலாய் வனைந்தால் என்ன, சட்டியாய் வனைந்தால் என்ன?
சாலாய் வைத்தாலும் சரி, சட்டியாய் வைத்தாலும் சரி.
சாலோடு அகப்பை தட்டாமற் போகுதா?
சாலோடே தண்ணீர் சாய்த்துக் குடித்தாலும் தாய் வார்க்கும் தண்ணீர் தாகம் தெளியும்.
சாவாமற் கற்பதே கல்வி, பிறர் இடத்தில் ஏகாமல் உண்பதே உணவு.
சாவுக்குப் பிடித்தால் லங்கணத்துக்கு வரும்.
சாறு மிஞ்சினால் பாறை, சாந்து மிஞ்சினால் குப்பை.
சாற்றிலே பீ, இறுத்தாற் போல (தெளிவாக) வாரு.
5480 சாற்றிலே வேண்டாம், தெளிவிலே வாரு.
சான்றோர் இல்லாச் சபை குறவர் சேரி.

---

## சி.

சிங்கத்தின் காட்டைச் சிறுநரிவளைத்தாற் போல.
சிங்கததின் செவியில் ஒட்டின ஈ.
சிங்கத்துக்கு நாயா சிங்காரமுடி சூட்டுகிறது?
சிங்கத்துக்குப் பங்கம் இல்லை.
சிங்கமிருக்கக் குட்டி வசமாமா?

சிங்கம் பசிக்கு ஆனையையே தேடிக் கொல்லும்.
சிங்கம் பசித்தால் தேரையைப் பிடிக்குமா?
சிங்காரவல்லி அங்கயற் கண்ணிக்குத் தீட்டு மாறின பின் தெருட்டுச் சடங்கு.
5490 சிட்டுக்குருவிக்குப் பட்டங் கட்டினால், சட்டிப்பானை எல்லாம் லொட லொட வென்று தத்தும்.
சிட்டுக்குருவி மத்தியஸ்தம் போனாற்போல.
சிட்டுக் குருவிமேல் பிரமாஸ்திரம் தொடுக்கலாமா?
சிட்டுக்குருவியா திருவணை அடைக்கப்போகிறது?
சிட்டுக்குருவியின் தலைமேல் பனங்காயை வைத்தது போல.
சிட்டுக் குருவியின்மேல் ராமபாணம் தொடுக்கிறதா?
சிணுக்கு எல்லாம் பிணக்குக்கு இடம்.
சிணுங்குகிறது எல்லாம் பூசைக்கு அடையாளம்.
சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்ப்பது போல.
சிதம்பரத்திலே பிறந்த பிள்ளைக்குத் திருவெம்பாவை கற்றுக்கொடுக்க வேண்டுமா?
5500 சித்தன்போக்கு சிவன்போக்கு, ஆண்டிபோக்கு அதே போக்கு.
சித்திபெறாத மருந்தும் மருந்தோ, பெற்றுப்படையாத பிள்ளையும் பிள்ளையோ?
சித்திரச் செழுந்தாமரையை ஒத்திட முகம் மலர்ந்தது.
சித்திரத்திலும் சோழியன் ஆகாது.
சித்திரத்திலும் வைத்தெழுத ஒட்டான்.
சித்திரத்தில் எழுதிய செந்தாமரைப் பூப்போல.
சித்திரத்துக் கொக்கே ரத்தினத்தைக் கக்கு.
சித்திரத்தைக் குத்தி (நோண்டி) அப்புறத்தே வைப்பான்.
சித்திர புத்திரனுக்குத் தெரியாமல் சீட்டுக் கிழியுமா?
சித்திரப் பதுமை போல் பிரமிக்க.
5510 சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப் பழக்கம்.
சித்திரை என்று சிறுக்கிறதுமில்லை, பங்குனி என்று பருக்கிறதுமில்லை.

சித்திரை மாதத்திற் செல்வன் பிறந்தால் சீரும் சிறப்பும் கெடும் (ஆன குடிக்கு அனர்த்தம்).
சித்திரை மாதத்திற் பிறந்த சீர் கேடனும் இல்லை, ஐப்பசி மாதத்திற் பிறந்த அதிஷ்டவானும் இல்லை,
சித்தூரிலே செல்லக் கூத்து.
சித்திராங்கி பொம்மா சின்ன வெங்கிட்டம்மா!
சிநேகஞ் செய்தபின் சோதி, தெளிந்த பின் நம்பு.
சிநேகஞ் செய்யுமுன் ஆராய்தல் செய், செய்த பின் ஐயப்படாதே.
சிந்தி அறுந்துபோகிற மூக்கு எந்தமட்டும் இருக்கும்?
சிந்திர வீட்டிலே சேராது, மங்கின வீட்டிலே வாராது.
5520 சிந்துக்குக் குந்தி பேசுகிறது.
சிப்பியிலே விழுந்த மழைத்துளி முத்தாகும்.
சிம்பிலே வளையாதது பம்பிலே வளையப்போகிறதா?
சிரசுக்குமேலே செய்கிற ஆக்கினையுமுண்டா?
சிரஞ்சீவி பெற்றவருக்குச் சிவபயம் ஏது?
சிரட்டைத்தண்ணீர் எறும்புக்குச் சமுத்திரம்.
சிரித்தாயோ, சேலை அவிழ்த்தாயோ?
சிரித்துக் கழுத்தறுக்கிறது.
சிரித்துச் சிரித்துத்தின்ற தோசைக்குக் காசில்லையா?
சிரித்தையோ சீரைக் குலைத்தையோ?
5530 சிரிப்பாணிக்கூத்து சிரிப்பாய்ச் சிரித்துச் சீலைப்பேன் குத்துகிறது.
சிரிப்பாள் சிரித்துத் தெருவிலே நிற்கிறது.
சிரைத்தால் மொட்டை, வைத்தால் குடுமி.
சிரைத்தாற்கூலி, சேவித்தாற் சம்பளம்.
சிலவானக்கள்ளி செலவு அறிவாளா?
சிலுக்கச் சிலுக்கக் குத்துகிறதெல்லாம் சித்திரத்துக் கழகு.
சிலுவுண்டானால் சேவகமுண்டு.
சில்லரைக் கடன் சீரழிக்கும்.
சில்லரை வைத்தியம்.
சிவசொத்து குலநாசம்.
5540 சிவபூசை வேளையிலே கரடிபுகுந்தது போல.
சிவலிங்கத்தின்மேல் எலிபோல.

சிவனே என்றிருந்தாலும் தீவினை விடவில்லை.
சிவியானுக்கு அடிமைப்பட்டால் காவவும்வேண்டும் சுமக்கவும்வேண்டும்.
சிவியான் ராஜவட்டம் போனதுபோல்.
சிறகிலும் மெல்லிசாய்ப் பொன் அடிப்பான்.
சிறகு இல்லாத பறவைபோல் ஆனேன்.
சிறகு பறிகொடுத்த பறவைப்போல்.
சிறகு முளைத்தார் பறத்தலும் கற்றார்.
சிறப்பொடு பூனை இறப்பிலிருந்தால் புறப்பட மாட்டாதெலி.
5550 சிறியாரோடு இணங்காதே, சேம்புக்குப் புளிவிட்டுக் கடையாதே.
சிறியார்கைச் செம்பொன்போல.
சிறியார்க் கினியதைக் காட்டாதே, சேம்புக்குப் புளி விட்டாக்காதே.
சிறியோர் எல்லாம் சிறியர் அல்லர்.
சிறியோர்செய்த சிறுபிழை பெரியோர் பொறுப்பது கடனே.
சிறுகக் கட்டிப் பெருக வாழு.
சிறுகச் சிறுகத்தின்றால் மலையையும் தின்னலாம்.
சிறுக விதைத்தலவன் சிறுக அறுப்பான்.
சிறுகுழந்தை இல்லாத வீடும் வீடு அல்ல, சீரகம் இட்டு ஆக்காத கறியும் கறி அல்ல.
சிறுகுழிகள் கொஞ்சந் தண்ணீரால் நிரம்பும்.
5570 சிறுக்கி சின்னப்பணம் சிறுக்கி கொண்டை மூன்று பணம்.
சிறுக்கிசேதி யறியாமல் செடியைச் செடியைச் சுற்று கிறது.
சிறு தீ பெரு நெருப்பு.
சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்.
சிறுத்திருக்கையில் வளையாதது பருத்திருக்கையில் வளையுமா?
சிறுபிள்ளை இட்ட வேளாண்மை வீடு வந்துசேராது.
சிறுபிள்ளை கட்டின சிற்றாடைபோல.
சிறுபிள்ளை யானாலும் ஆடுவார் மூப்பு.

சிறுபிள்ளை விளையாட்டு அழிந்தது மாங்காடு (சுண்டெலிக்கு நாசம்).

5570 சிறுபெண் கட்டின சிற்றாடையா?

சிறுபோது படியாத கல்வி அழுக்குச் சேலையில் சாயம் ஏற்றினதுபோல.

சிறுமீன் எல்லாம் பெரு மீனுக்கு இரை.

சிறுமுள்ளு குத்திப் பெருமலை நோகுமா?

சிறுமைப் படுகிறதைவிடச் செத்தால் உத்தமம்.

சிறுமையிற் கல்வி சிலைமேல் எழுத்து.

சிறுமையும் பெருமையும் தான் தர வரும். [வார்.

சிறுரூபத்தை உடையவரும் அரும்பொருளைச் செய்

சிறுவிதையாகிய ஆலமரம் பெருநிழலைக்கொடுக்கும்.

சிறைக்குக் கீழ் சிறை, அதன்கீழ் அம்பட்டன்.

5580 சிறைச்சாலைக்கு அழகில்லை, தேவடியாளுக்கு முறையில்லை.

சிறைப்பட்டாயோ குறைப்பட்டாயோ?

சிற்றப்பன் வீட்டுக்குப் போய்ச் சிற்றாடை வாங்கி வரலாம் என்று போனாளாம், சிற்றப்பன் பெண் சாதி ஈச்சம்பாயை இடுப்பில் கட்டிக்கொண்டு எதிரே வந்தாளாம்.

சிற்றாத்தை பிள்ளையும் பிள்ளையோ செத்தையிற் பல்

சிற்றாள் எட்டு ஆளுக்குச் சரி. [லியும் பல்லியோ?

சிற்றின்பம் எண்ணார் மற்றின்பம் கண்டார்.

சிற்றுணர்வோர் என்றுஞ் சிலுசிலுப்பர்.

சிற்றூண் இனிது.

சிற்றூரிலே பாரிக்கூத்தா?

சிற்றெறும்பைச் சிற்றெறும்பும் கட்டெறும்பைக் கட்டெறும்பும் தேடும்.

5590 சினத்தால் அறுத்த மூக்குச் சிரித்தால் வருமா?

சினத்திருந்தார் வாசல்வழி சேரவேண்டாம்.

சினத்தைப் பேணில் தவத்தற்கழிவு.

சினந்தாலும் சீர் அழியப் பேசாதே.

சின்னச் சின்னப் பேச்சு, சிங்காரப் பேச்சு, வன்ன வன்னப்பேச்சு, மெத்த வழக்கமானபேச்சு.

சின்னச் சின்னப்பேச்சும் சிரித்தாற்போல வார்த்தையும்.

சின்னப்பாம்பானாலும் பெரிய தடி கொண்டடி.
சின்னவீடாம் சிறுகதவாம், அரக்கு முத்திரையாம், வையா புரியான் கலகமிட வைத்தது வைத்தாற் போல.
சின்னவீட்டிலே செய்தது சீமந்தத்திலே தெரிய வரும்.
சின்னவீட்டுச் சேதி அம்பலத்திலே வரும்.
5600 சின்னாரண்ணன் கோவிலிலே சிலை பண்ணிவைத்தாற் போல.

---

## சீ.

சீ என்கிற வீட்டிலே பேயும் நுழையாது.
சீ என்ற காட்டிலே செந்நாய் சேருமோ?
சீக்கிரம் புத்தி பல ஈனம்.
சீக்கிரான் கறப்பிலை (கறிவேப்பிலை) இழுத்துக்கொண்டு திரிப்பிள்ளை.
சீச்சீ என்கிறதும் இந்த வாய்தான், சிவசிவா என்கிறதும் இந்த வாய்தான்.
சீட்டாளுக்கு ஒரு மூட்டாள், செருப்புத் தூக்கிக்கு ஒரு அடைப்பகக்ாரனா?
சீதேவி தன்னுடனே செய்யதிருப் பாற்கடலில், மூதேவி ஏன் பிறந்தாள் முன்?
சீதேவியுடன் கூட மூதேவி பிறந்தாற்போல.
சீதை பிறக்க இலங்கை அழிய.
5610 சீபுரத்துப் பள்ளி செத்தும் கெட்டான் இருந்தும் கெட்டான்.
சீப்பு எடுத்து ஒளித்தால் கலியாணம் நிற்குமா (முடுங்குமா)?
சீயபுரத்துப் பள்ளி செத்து:ம கெடுத்தான் இருந்தும் கெடுத்தான்.
சீரங்கத்திலே பிறந்த பிள்ளைக்குத் திருவாய்மொழி கற்பிக்கவேண்டுமா?
சீரங்கத்தில் உலக்கை கொடுத்ததுபோல.
சீரங்கத்துக் காகமானாலும் (காக்காயானாலும்) கோவிந்தம் பாடுமா?

சீரங்கத்துக்குப் போகிறவன் ஓரியை மாராப்புப் போட்டது போல.
சீரங்கத்துக்குப் போகிறவன் வழியிலே பாரியைப் பறிகொடுத்ததுபோல.
சீரங்கத்துக்குப் போயும் சொறிதாசன் காலிலே விழு [ கிறதா?
சீரணி கெட்டால் கோரணி.
5620 சீராளனைப் பெற்ற பிறகு திருச்சீலைத்துணிக்கு வருத்தமாச்சுது.
சீராளன் கலியாணத்தில் மூன்றுபேர் பெண்டுகள் மாரோடே மார் தள்ளுது.
சீரியர்க்கு அன்பு செய்.
சீரியர் கெட்டாலும் சீரியரே.
சீர் அற்றார் கையிற் செம்பொன் விலைபெறா.
சீர் ஒழுக சான்றோர் சினம்.
சீர் கேடனுக்கு வாழ்க்கைப்பட்டுத் திரிச்சீலைத் துணிக்கு வாதைப் (வருத்தப்) படாமலிருந்தேன், சீராளனைப் பெற்ற பிறகு திரிச்சீலைத் துணிக்கு வருத்தமாச்சுது.
சீலை இல்லையென்று சின்னாயி வீட்டுக்குப்போனாளாம், அவள் ஈச்சம் பாயைக் கட்டிக்கொண்டு எதிரே வந்தாளாம்.
சீலைப்பாய் ஈழம்போய்ச் சீனிசர்க்கரை கட்டுமா?
சீவரத்துக் கிராமணி இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்.
5630 சீவனம் செய்ய நாவினை விற்கேல்.
சீவனும் விட்டது, வியாதியும் பொட்டென்று நின்றது.
சீவன்போனால் கீர்த்தியும் போமா?
சீறிவரும் வடவாக்கினியைச் சிறு குட்டைத்தண்ணீர் அவிக்குமா?
சீறும் படையைக் கண்டு செடிக்குள் நுழைகிறது.
சீனி என்று எழுதி நக்கினால் இனிக்குமா?

---

## சு.

சுக சரீரம் கழுதைப்பிறப்பு.
சுகு துக்கம் சுழல் சக்கரம்.

சுகத்துக்குப் பின் துக்கம், துக்கத்துக்குப் பின் சுகம்.
சுகத்தைத் தள்ளினாலும் துக்கத்தைத் தள்ளப் போகாது.
5640 சுகத்தைப் பெற்றதும் அல்ல தவத்தைப்பெற்றதும் அல்ல.
சுகத்தையாவது பெறவேண்டும் தவத்தையாவது பெறவேண்டும்.
சுகம்கெட்டால் விரதம் தக்கவேண்டும், விரதம் கெட்டால் சுகம் தக்கவேண்டும்.
சுகம் கெட்டால் விரதம் லாபம், விரதம் கெட்டால் சுகம் லாபம், இரண்டும் கெட்டால் என்ன லாபம்?
சுகம் தக்குகிறதுமில்லை விரதம் தக்குகிறதுமில்லை.
சுகம் வந்தால் சந்தோஷப்பட்டுத் துன்பம் வந்தால் பின் வாங்குவானேன்?
சுகவாசி உடம்பு கழுதைப் பிறப்பு.
சுகுணசுந்தரி இல்லாத வீடு சுடுகாடு.
சுக்கிர உதயத்தில் தாலி கட்டிச் சூரிய உதயத்திற்குள் அறுத்தாள்.
சுக்கிரதிசை அவன் சூத்திலே அடிக்கிறது.
5650 சுக்கிரபகவான் புறப்பட்ட கண்ணிலே இண்ட முள்ளு குத்தினதுபோல.
சுக்கிரீவ ஆக்கினையாய் இருக்கிறது.
சுக்கிரீ வாக்கினை எங்கும் இல்லை.
சுக்கு அறியாத கஷாயம் உண்டா?
சுக்குக் கண்ட இடத்திலே முக்கிப் பிள்ளை பெறுவாளா?
சுக்குக் கண்ட இடத்தில் பிள்ளை பெற்றுச் சூரிய நாராயணன் என்று பெயர் இடுவாள்.
சுக்குத்தின்று முக்கிப் பெற்ற பிள்ளையைப் போல் காப்பாற்றுகிறாள்.
சுக்குத்தின்று முக்கிப் பெற்றால் தெரியும் பிள்ளை அருமை.
சுக்கும் பாக்கும் வெட்டித் தாறேன் சுள் சுள் என்று வெயில் ஏறி.
சுங்கமும் கூழும் இறுகத் (இருக்கத்) தடிக்கும்.

5660 சுங்கம் மாறினால் சுண்ணாம்பும் கிடையாது.
சுங்கா (சுருங்காத) மூஞ்சி (முகம்) காட்டாதே, வந்த விருந்தாளியை ஓட்டாதே.
சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்றுவேணும்.
சுடலைரல ஞானம் திரும்பிவரும் மட்டும்.
சுடுகாடு போன பிணம் திரும்பாது.
சுடுகாடு போன பிணம் நடுவீடு வந்துசேருமா?
சுடுகாட்டுப் புகையைப் பார்க்கும் கொம்பேறி மூக்கன்.
சுடுகாட்டுவழி போனாலும் இடுகாட்டுவழி போகலாகாது.
சுடுகெண்டைக்காக ஏரியை உடைக்கலாமா?
சுடு நெருப்பை மடியிலே முடியலாமா?
5670 சுட்ட களியை நாய் புரட்டுகிறதுபோல.
சுட்ட சட்டி அறியுமா அப்பத்தின் சுவையை?
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமா?
சுட்ட சட்டி தொடாதவளா உடன்கட்டை ஏறப் போகிறாள்?
சுட்ட நண்டுக்கு வேலி கட்டின சுடுகாட்டுப் பள்ளி.
சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா?
சுட்டவன் இருக்கக் குண்டை நோகிறதா?
சுண்டினாலும் பாற்சுவை குறையுமா?
சுண்டைக்காயிலே கடிக்கிறது பாதி வைக்கிறது பாதியா?
சுண்டைக்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்.
5680 சுண்டைக்காய் சுண்டைக்காயே, எனக்கு முந்திவந் திருக்கிறாயே!
சுண்ணாம்பிலே இருக்கிறது சூக்ஷம்.
சுத்த சைவம் மரக்கறி எல்லாம் தள்ளுபடி.
சுத்தம் சோறிடும்.
சுத்தம் சோறுபோடும், எச்சில் இரக்கவைக்கும்.
சுத்த விலங்கோடு சுத்த விலங்குதான் சேரும்.
சுத்த வீரனுக்கு உயிர் துரும்பு.
சுத்திக்காரனுக்கு மூன்று இடத்திலே பீ.
சுந்தரியும் வாழ்க்கைப்பட்டாள், பந்தலிலே தீப்பட்டது.
சுபஸ்ய சீக்கிரம்.

5690 சுப்பனுக்கு வீரப்பன் திடம்.
சுப்பா சுப்பா சூத்தைக்கடி, அப்பா அப்பா நான் மாட்டேன்.
சுமந்த தலையும் சும்மாடுமாய்த் திரிகிறது.
சுமந்தவன் தலையிலே சும்மாடு (பத்து).
சுமப்பவனல்லவோ அறிவான் காவடிப்பாரம் (காவடிச் சுமை)?
சுமை இழந்தார்க்குச் சுங்கம் இல்லை.
சுமை எடுப்பவனுக்குச் சுமை பளுவு தெரியும்.
சுமைதாங்கி ஆயந்தீர்க்காது.
சுமைதாங்கி சுங்கம் இறுப்பது இல்லை.
சுமைபோட்டால் பந்தலிலே காரியம் என்ன?
5700 சும்மா அறுக்கிறாயென்ன சொத்தைக் களாக்காயை?
சும்மா இருக்கிற தம்பிரானுக்கு இரண்டு பட்டை.
சும்மா இருக்கிறவன் சூத்திலே சுப்பல் எடுத்துக் குத்துகிறது.
சும்மா இருந்த (கிடந்த) அம்மையாருக்கு அரைப் பணத்துத் தாலி போதாதா?
சும்மா இருந்த உடம்பிலே சுண்ணாம்பைத் தடவிப் புண்ணாக்குவானேன்?
சும்மா இருந்தால் சோறு ஆமா, வாடா சித்தாகால் ஆட்ட.
சும்மா கலஅரிசி சுமக்கமாட்டான், நனைந்து முக்கலம் சுமப்பானா?
சும்மா கிடக்கிற சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி.
சும்மா கிடக்கிற தாரையை ஊதிக் கெடுத்தான் அம்மான்.
சும்மா கிடந்தால் ஆர் அறிவார், வாடா திம்மா தாலாட்ட.
5710 சும்மா கிடைக்குமா சோணாசலன் பாதம்?
சும்மா கிடைத்தால் எனக்கொருத்தி எங்கப்பனுக் கொருத்தி.
சும்மாட்டுக்கும் சும்மா இருப்பவனுக்கும் என்ன தெரியும்?
சும்மா போகிறவனைப் பிடிப்பானேன், இராத்திரி எல்லாம் கிடந்து பிதற்றுவானேன்?

சும்மாவந்த மாட்டைப் பல்லைப்பிடித்துப் பார்க்கிறது.
சுயகாரிய துரந்தரன், சுவாமி காரியம் வழ வழ.
சுயகாரிய துரந்தரன், பரகாரிய பராமுகன்.
சுயகாரியப் புலி.
சுயபுத்தி போனாலும் சொற்புத்தி வேண்டாமா?
சுயபுத்தியுமில்லை சொற்புத்தியுமில்லை.

5720 சுரணை (சுணை) கெட்டவன் சொந்தக்காரன்.
சுரிகுழல் மனது சரி நடப்பது ஆர்?
சுருட்டுப்பாய், முரட்டுப்பெண்.
சுருட்டை சோறு இடும், பம்பை பால் வார்க்கும், கோரை குடி கெடுக்கும்.
சுருதிகுரு சுவானுபவம் மூன்றும் ஒத்தது மெய்ப் பொருளாம்.
சுருதி சுவானுபவம் இரண்டும் ஒத்தால் முத்தி.
சுரை யாழ அம்மி மிதப்ப.
சுரைக்காய் மிதக்கிறது, கல் அமிழ்ந்துபோகிறது.
சுரைப்பூவுக்கும் பறைப்பாட்டுக்கும் மணம் (வாசனை) இல்லை.
சுவரின் மறைவில் ஆரடா, சுரக்காரன் பத்தியம் சாப் பிடுகிறான்.

5730 சுவருக்கும் காதுகள் உண்டு.
சுவரைக் வைத்துக்கொண்டல்லவோ சித்திரம் எழுத வேண்டும்?
சுவர்க்கத்திலே தோட்டியும் சரி தொண்டைமானும் சரி.
சுவர்க்கத்திற்குப் போகிறபொழுது கக்கத்திலே ராட்டினமா?
சுவர்க்கத்திற்குப் போகிறபோது கக்கத்திலே கூத்தி யாரா?
சுவர்க்கத்துக்குப் போகிறபோது கக்கத்திலே மூட்டை ஆமா?
சுவர்க்கத்துக்குப்போனாலும் கக்கத்திலே ஒரு பிள்ளை ஏன்?
சுவர்க்கத்துக்குப் போனாலும் கக்கத்தில் அக்ஷய பாத்திரமா?

சுவர்க்கீரையை வழித்துப்போடடி சுரணை (சுணை) கெட்ட வெள்ளாட்டி.
சுவாமி இல்லை என்றால் சாணியைப் பார், மருந்தில்லையென்றால் பாணத்தைப் பார், பேதியில்லையென்றால் நேர்வாளத்தைப் பார்.
5740 சுவாமியார்க்குச் சுவாமி வேண்டும்.
சுவாமி வரங்கொடுத்தாலும் பூசாரி இடங்கொடுக்க மாட்டான்.
சுவாமி வரங்கொடுத்தாலும் முன்னடியான் வரங் கொடான்.
சுள்ளாப்பு எல்லாம் பொல்லாப்பு.
சுள்ளைச் சுட்டுக்கொண்டு கள்ளைக் குடிக்கிறது.
சுற்றத்தவரை (சுற்றத்தமரை)ப் பற்றி இரு.
சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்.
சுற்றத் துணியும் இல்லை நக்கத் தவிடும் இல்லை.
சுற்றம் பார்க்கிற் குற்றம் இல்லை.

---

## சூ.

சூக்ஷ்மத்தில் இருக்கிறது மோக்ஷம்.
5750 சூடியும் உணர்ச்சி வராது சுரணைகெட்ட மாட்டுக்கு.
சூடுகண்ட பூனை அடுப்பங்கரையிற் சேராது.
சூடு சுரணை அற்றவனுக்கு நாடுநகர் பெரிதா?
சூடு மிதிக்கிற மாட்டின் வாயைக் கட்டலாமா?
சூட்சத்திலே இருக்கிறது மோட்சம்.
சூட்சாதி சூட்சத் துல்லிபன்.
சூதபலத்தைச் சுகமுகத்தினா லறி.
சூதனுக்கு நீதி இல்லை.
சூதன் கொல்லையிலே மாடு மேயும்.
சூதாடிக் தோற்றவனுக்குச் சுகங்கிட்டாது
5760 சூதானத்துக்கு அழிவு இல்லை.
சூதினால் வெவ்து எளிது.
சூதுக்காரன் கையும் கோள்காரன் வாயும் சும்மா இராது.
சூதுக்காரன் கையை வெட்டிப்போட்டாலும் துடுப்பைக் கட்டிக்கொண்டு ஆடுவான்.

சூதுக்காரன் பணம் சுற்றியிருக்கிற பேரைச்சேரும்.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
சூது விரும்பேல்.
சூத்தடிச் சிரங்கும் எதிர் வீட்டுக் கடனும் ஆகாது.
சூத்திரப்பாவைபோல் நடிக்கிறான்.
சூத்திர வேதன் சாஸ்திரம் பார்ப்பான்.
5770 சூத்திலடித்தான் பல்லுப்போச்சுது.
சூத்திலே கட்டத் துணியில்லை கூத்தியார் இரண்டு.
சூத்தில்லாத குடுவை.
சூத்து எப்படி அலைந்தாலும் சரி, காவடி மாத்திரம் ராமேசுவரம் போய்ச்சேர்ந்தால் சரி.
சூத்து ஒட்டினாலும் குசுநாற்றம் போகிறதில்லை.
சூத்துக்குத் தடுக்குப்போட்டுச் சுற்றிக்கொண்டு திரிகிறது.
சூத்துத் துணியை நம்புகிறதில்லை.
சூத்துப் புடவையை விட்டால் மாத்து (மாற்று)ப் புடவை இல்லை.
சூத்தைப் பார்த்தால் தெரியாதா சோழமண்டலத்து அகவிலை (நெல்விலை)?
சூத்தையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகிறது
5780 சூத்தை வழித்து முக்காடு போட்டாற்போல.
சூரனுக்குத் துரைமக்கள் துரும்பு.
சூரியனுக்கு முன் மின்னாம் பூச்சி (மின்மினி)போல.
சூரியனுடைய பிரகாசத்துக்கு முன்னே மின் மினி விளங்க மாட்டாது.
சூரியனைக் கண்ட இருள்போல.
சூரியனைக் கண்ட தாமரைபோல.
சூரியனைக் கண்ட பனிபோல நீங்கும்.
சூரியனைக் கண்டு உலகம் விளங்கும்.
சூரியனைக் கல்லால் அடித்ததுபோல.
சூரியனைக் கிரகணம் பிடித்ததுபோல் என்னைச் சனி பிடித்தது.
5790 சூரியனைக் கையால் மறைத்தது போல.
சூரியனைப் பார்த்து நாய் குலைத்தாற் போல.
சூரியன் எழுமுன் காரியம் ஆடு.
சூரியன் கீழே தோன்றினது எல்லாம் மாயை.

சூரியன் தந்த அக்கினியைக் கொண்டு சூரியனைப் பணிவது போல.
சூரியன் முன்னே சூழ்ந்த இருள் போல.
சூரியன் முன்னே தோன்றிய சந்திரன் போல.
சூரியன் வெளிச்சத்தில் சுடர் விளக் கென்னத்திற்கு?
சூலாகுமீன்கள் ஒன்றை ஒன்று மோந்து கொள்ளும்.
சூலி சூலி என்று சோற்றைத் தின்று, மலடி வாயில் மண்ணைப் போடுகிறதா?
5800 சூலிக்குச் சுக்குமேல் ஆசை.
சூல் (காக்காய்) வித்தை காட்டுகிறேன் பராக்கில்லாமல் பார்.
சூழ ஒடியும் வாசலாலே.

## செ.

செக்கடி முத்தி எனக்கென்ன புத்தி?
செக்களவு பொன்னிருந்தாலும் செருக்கி யுண்டால் எத்தனை நாளுக்குக் காணும்?
செக்கிலரைபட்ட எள் திரும்ப முழுசாமா?
செக்கு நக்குகிற தம்பிரானே! உன் திருவடிக்குத் தண்டம், அந்தண்டை நக்கடா பிள்ளாய், ஐசுவரியம் பெருகி யிருப்பாய்.
செக்குலக்கையை விழுங்கினவனுக்குச் சுக்குக் கஷாயம் மருந்தாமா?
செக்குலக்கையை விழுங்கினவன் சுக்குக் கஷாயம் குடித்தது போல.
5810 செக்கை நக்குகிற தம்பிரானே தண்டன், நீ தென் புறம் நக்கு நான் வடபுறம் நக்குகிறேன்.
செக்கை வளைய வரும் எருதுகளைப்போல.
செக்கென்றும் சிவலிங்கமென்றும் தெரியாமல்.
செங்கதிர் முன்னே வெண்கதிர் அடங்கினது போல.
செங்கோலுக்கு முன்னே சங்கீதமா?
செங்கோல் ஓங்குவன் திரித்துவ தேவன்.
செங்கோல் கோணினால் எங்கும் கோணும்.
செடியிலிருக்கிற ஓணானை மடியில் விட்டுக்கொண்டு குடைகிறது குடைகிறது என்கிறாள்.

செடியிலே வணங்காததா மரத்திலே வணங்கும்?
செடியில்லாத கொடிபோல.
5820 செடி வைத்துக்கொண்டு விலை கூறலாம்.
செட்டிகள் மாடு மலை ஏறி மேயுமா?
செட்டி கூடிக் கெட்டான், சேணியன் பிரிந்து கெட்டான்.
செட்டிக்கு என்னத்திற்குச் செம்புச் சனியன்?
செட்டிக்கு இறுத்துப் பைக்கும் இறுத்தேன்.
செட்டிக்கு ஒரு தட்டு, சேவகனுக்கு ஒரு வெட்டு.
செட்டிக்கும் பயிருக்கும் சென்மப் பகை.
செட்டிக்கு வேளாண்மை சென்மப்பகை.
செட்டி சிங்காரிக்கிறதற்குள்ளே பட்டணம் பறி (கொள்ளை) போகிறது.
5830 செட்டி படை வெல்லுமா, சேற்றுத் தவளை கடிக்குமா?
செட்டி பணத்தைக் குறைத்தான், சேணியன் நூலைக் (காலைக்) குறைத்தான்.
செட்டி போன இடம் எல்லாம் வட்டம் காற்பணம்.
செட்டிப் பிள்ளையோ கெட்டிப் பிள்ளையோ?
செட்டி முடுக்கோ (மிடுக்கோ) சரக்கு முடுக்கோ?
செட்டியாருக்கு ஒரு காலம் சேவகனுக்கு ஒருகாலம்.
செட்டியாரே செட்டியாரே என்றால், சீரகம் பண எடை முக்காற் பணம் என்கிறார்.
செட்டியாரே வாரும் சந்தையை ஒப்புக்கொள்ளும்.
செட்டியார் பணம் சீத்தென்று போச்சுது.
செட்டியார் வாழ்வு செத்தால் தெரியும்.
5840 செட்டியார் வீட்டுப்பிள்ளை செல்லப் பிள்ளையானால் படைக்குப் போகிற நாயகரைப் பயமுறுத்தலாமா?
செட்டியை நீலி தொடர்ந்தது போல.
செட்டி வீட்டிற் பணம் இருக்கிறது, ஆலமரத்தில் பேய் இருக்கிறது.
செணச் (க்ஷண) சித்தம் செணப் பித்தம்.
செத்த அன்றைக்குச் சொன்னால் பத்தாம் நாளைக்கு வருவான்.

செத்த ஆடு காற்பணம் செமை (சுமை) கூலி முக்காற் பணம்.
செத்த நாய் திரும்பக் கடியாது.
செத்த பாம்பு சுற்ற வருகிறதே, அத்தை, நான் மாட்டேன் என்றாற்போல.
செத்த பாம்பை ஆட்டுகிறான்.
செத்த பாம்பை ஆட்டுவாளாம் வித்தைக்காரப் பெண் பிள்ளை.
5850 செத்த பிணத்தில் கடை உற்றார்க்கு உதவாதவன்.
செத்த பிணத்திற்கு அருகே இனிச் சாகும் பிணம் அழுகிறது.
செத்த பிணத்திற்குக் கண், ஏன், சிவ சிவா, ஆண்டடிக் குப் பெண் ஏன்?
செத்த பிணத்தைச் சுற்றித் திரிந்தாற் போல.
செத்த பிறகா செய்தவனுக்குச் செய்கிறது?
செத்த பிறகா செல்வம் அனுபவிக்கிறது?
செத்த பின் எப்படிப் போனால் என்ன?
செத்த மாடு புல்லுந்த தின்னுமா?
செத்த மாட்டை அறுக்காத கத்தி சொத்தைக் கத் தரிக்காயை அறுக்கும்.
செத்தவன் உடைமை இருந்தவனுக்கு அடைக்கலம்.
5860 செத்தவன் கண் செந்தாமரைக் கண் (கடாக்கண்), இருந்தவன் கண் நொள்ளைக் கண் (இல்லிக்கண்).
செத்தவன் கையிலே வெற்றிலை பாக்குக் கொடுத்த சம்பந்தம்.
செத்தவன் சூத்து தெற்கே (கிழக்கே) யிருந்தாலென்ன வடக்கே (மேற்கே) யிருந்தா லென்ன?
செத்தவன் தலை கிழக்கே யிருந்தாலென்ன மேற்கே யிருந்தாலென்ன?
செத்தவன் பிள்ளை இருக்கிறவனுக்கு அடைக்கலம்.
செத்தவன் பெண்சாதியை இருந்தவன் கைக்கொண்டாற் போல.
செத்தவன் வாயிலே மண், இருந்தவன் வாயிலே சோறு.
செத்தவன் வீட்டிற் கெட்டவன் யார்?
செத்தவன் வீட்டிற் பாடுபட்டவர் ஆரோ?
செத்த விடம் புல்லு முளைத்துப் போம்.

5870 செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு.
செத்தால் பிழைக்கறியான் (பிழைக்க மாட்டான்).
செத்துச் சுண்ணாம்பாகிற வரை.
செத்துச் தெய்வமாய் நிற்கிறான்.
செத்துஞ் சாகாதவன் தியாகம் கொடுப்போன்.
செத்துப்போன தாதன் மொட்டுப் (முட்டுப்) போல முளைத்தான்.
செத்துப்போன பாட்டன் இருந்தால் தாடியைப் பிடித்துக் கொண்டு தொங்கலாம் (தெரிவிக்கலாம்).
செத்தைக்கூலி காற்பணம் செமை (சுமை) கூலிமுக்காற் பணம்.
செந்தணலை முந்தானை (முன்றானை)யில் முடியலாமா?
செப்படி வித்தை எப்படிச் செய்கிறான்.

5880 செப்படி வித்தை எப்படி போவேன்?
செப்பிலுமில்லை பந்திலுமில்லை.
செப்பில்லாக் குடிக்கு அப்பாப் பட்டமா?
செப்பும் பந்தும்போல.
செம்பரம்பாக்கத்தான் பெயர் பெற்றான், மாங்காட்டான் நீர் பெற்றான்.
செம்பாலைக்குக் கரும்பாலை வலிது.
செம்பு நடமாடக் குயவன் குடி போகிறான்.
செம்போத்து வலமானால் சம்பத்து உண்டாகும்.
செம்மறி ஆடு வெளியே ஓடத் திருட்டுஓனாய் உள்ளே.
செயமுள்ள மட்டும் பயம் இல்லை.

5890 செய்கிறது சிரைக்கிற வேலை, நினைக்கிறது சிரஸ்ததார் வேலை.
செய்த தீவினை செய்தவர்க்கே.
செய்த வினை செய்தவர்க்கு எய்திடும்.
செய்தார்க்குச் செய்வது செத்த பிறகோ?
செய்தும் செய்தவத்தம்.
செய்யாத வித்தை எல்லாம் செய்தாலும் தேங்காய்க் குடுக்கையிலே மூத்திரம் பெய்வாளா?
செய்யாப்பிள்ளை வரப்பிலே செய்வா செய்வா என்னேனே (என்றேனே), நீ செய்யேன் செய்யேன் என்னாயே (என்றாயே), நீ பார்த்துக்கோ, நீ கேட்டுக்கோ.

செய்யும் தொழிலெல்லாம் சீர் தூக்கிப்பார்க்கில் நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை.
செருப்பால் அடித்தாலும் திருட்டுக்கை நிற்காது.
செருப்பால் அடித்துக் குதிரையோடு தீவட்டி கொடுத்தாற் போல.
5900 செருப்பால் அடித்துப் பட்டுப்புடவை (குதிரைக் கொடை) கொடுத்தாற்போல.
செருப்பின் அருமை வெயிலில் தெரியும், நெருப்பின் அருமை குளிரில் தெரியும்.
செருப்புக்காகக் காலைத் தறிக்கிறதா?
செருப்புக்கு அச்சாரம் துரும்பு.
செருப்புக்கொள்ளுகிறது காலுக்கோ தலைக்கோ?
செலவில்லாச் செலவுவந்தால் களவில்லாக் களவுவரும்.
செலவிற்குறைந்த வரவானால் சேமப்படுகிறது எப்படி?
செலவு அதிகம் வரவு போதாது.
செலவு இல்லாத சிங்காரம்போல.
செலவு உண்டானால் சேவகமுண்டு.
5910 செலவோடு செலவு கந்தப்பொடிக்குக் காற்பணம்.
செல்லச் சக்கிலிப்பிள்ளை செருப்புச் செருப்பாய்த் தின்று கழிகிறது.
செல்லச் சிறுக்கி ஆமுடையான் செவ்வாய்க்கிழமை செத்தானாம் வீடு வெறிசாய்ப் போகுமென்று வெள்ளிக்கிழமை எடுத்தாளாம்.
செல்லத்தில் ஒரு பெண்பிறந்து செட்டித் தெருவெல்லாம் நொட்டிவிட்டு (திரிந்துவிட்டு) வந்தது.
செல்லப்பிள்ளை சீலை உடாதாம் பிள்ளை பெறுமட்டும்.
செல்லம் சறுக்குதா வாசற்படி வழுக்குதா?
செல்லம் சீரழிக்கும்.
செல்லம் சீரழியும்.
செல்லம் சொல்லுக்கு அஞ்சுமா?
செல்லம் பரமண்டலத்தில் செல்லாது எல்லாமண்டலமும் செல்லும்.
5920 செல்லாத காசு என்றைக்கும் செல்லாது.
செல்லாத பணமென்றெண்ணாதே செட்டியார் இருக்கிறார் காட்டிக்கொள்.

செல்லாப்பணம் எங்கும் செல்லாது.
செல்லிக்குச் சிரங்கு, சிறுக்கிக்கு அரையாப்பு, பார்க்க வந்த பரிகாரிக்கு பக்கப்பிளவு.
செல்லுகளால் தினந்தோறும் வளர்க்கப்படாத புற்றுப் போல.
செல்லும் காசுக்கு வட்டமுண்டா?
செல்லும் செல்லாததுக்குச் செட்டியார் இருக்கிறார்.
செல்லும்பொழுது செலுத்துவாய் சிந்தையை.
செல்வச்சிறுக்கி ஆமுடையான் செவ்வாய்க்கிழமை செத்தானாம், வீடு வெறுமையாய்ப் போமென்று வெள்ளிக்கிழமை எடுத்தாளாம்.
செல்வப்பெண் சீரங்கநாயகிக்குச் சீதனம் வந்ததாம் வறையோடு.
5930 செல்வப்பொருள் கொடுத்தால் குறையும், கல்விப் பொருள் குறையுமோ?
செல்வமும் சீரும் சேரவே இருக்கும்.
செல்வம் உண்டாகும் காலம் செய்கை உண்டு வல்லமை உண்டு.
செல்வம் செருக்கித் திரட்டுப்பால் குமட்டுகிறது.
செல்வம் செருக்குகின்றது காசுக்கு வழியில்லை.
செல்வம் நிலையில் சேட்டன் கீழ் இரு.
செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்.
செல்வன் சொல்லுக்கு அஞ்சான், வீரன் போருக்கு அஞ்சான்.
செவக்க முற்றின வாழைக்காய் புளியில்லாமல் இனிக்கிறது.
செவிடனும் குருடனும் கூத்துப் பார்த்தாற்போல.
5940 செவிடன் காதில் சங்கு ஊதினதுபோல.
செவிடன் பாட்டுக்கேட்ட சம்பந்தம்.
செவிடு இருந்தால் ஊமை யில்லையா?
செவிட்டிலே அறைந்தாலும் தேம்பி அழத் தெரியாது.
செவிட்டில் அடித்தால் இராகம்போட்டு அழத்தெரியாது.
சென்மக்குருடனுக்குக் கண் கிடைத்ததுபோல.
சென்மத்தில் பிறந்தது செருப்பாலடித்தாலும் போகாது.
சென்ற இடம் எல்லாம் சிறப்பே கல்வி.

சென்ற இடம் சிறப்பும் கொண்ட இடம் காணியும்.
சென்ற காசுக்கு வட்டம் உண்டா?
5950 சென்ற காரியத்தைப்பார்த்து வருங்காரியத்தை அறி.
சென்றும் செலவழிந்தும் சீரழிந்த குடித்தனம்.

## சே.

சேடனுக்கு என் குரங்கு?
சேடனுக்கு ஏன் குரங்குப்புத்தி, சேற்றில் கிடப்பவனுக்கு ஏன் சோமக்கட்டு?
சேணியனுக்கு ஏன் குரங்கு?
சேணியனைக் கெடுக்க சாண்குரங்கு பற்றாதா?
சேத நினைவிற்குப் பூதஞ்சிரிக்கும்.
சேம்பு கொய்யச் சிற்றரிவாள் ஏன்?
சேயின் முகம்பார்க்கும் தாயின் முகம்போல.
சேர இருந்தால் சேடியும் பகை, தூர இருந்தால் தோட்டியும் உறவு.
5960 சேரச்சேரச் சேடியும்பகை.
சேரப்போனால் செடியும்பகை.
சேராத இடத்திலே சேர்ந்தால் வாராத துன்பம் வரும்.
சேரிடம் அறிந்துசேர்.
சேரியும் ஊரும் செல்வமும் கல்வியும்.
சேர்க்கைக்குக் தக்க பழக்கம்.
சேர்க்கை வாசனையா இயற்கை வாசனையா?
சேர்த்து வைத்துப் பசு கறக்கலாமா?
சேர்ந்தவர் என்பது கூர்ந்து அறிந்தபின்.
சேலைமேற் சேலைகட்டும் தேவ ரம்பை ஆனாலும், ஓலைமேல் எழுத்தாணி ஊன்றும் பெண் ஆகாது.
5970 சேறுகண்ட இடத்திலே மிதித்துச் செலம் (ஜலம்) கண்ட இடத்திலே கழுவுவார்கள் (புருஷர்).
சேற்றால் எடுத்த சுவர்.
சேற்றிலே கல்விட்டெறிந்தால் மேலே தெறிக்கும்.
சேற்றிலே கிடக்கிற எருமையைத் தூக்குவானேன்?
சேற்றிலே செங்கழுநீர் பூத்தாற்போல.
சேற்றிலே நட்ட (நாட்டிய) கம்பம்போல.

சேற்றிலே புதைந்த ஆனையைக் காகமும் குட்டும்.
சேற்றிலே முளைத்த செந்தாமரைபோல.
சேற்றிலே மேயும் பிள்ளைப் பூச்சிபோல.
சேனைக்குப்பட்டமோ சேனாபதிக்குப்பட்டமோ?

## சை.

5980 சைகை அறியாதவர் சற்றும் அறியார்.
சையெனத் திரியேல்.
சைவத்திற்கு ஆசைப்பட்டு மரக்கறி தள்ளிவிட்டேன்.
சைவப்பழம் வில்வக்கிளை.
சைவமுத்தையா முதலியாருக்குச் சமைத்துப்போட வள்ளுவப்பண்டாராம்.
சைவம் முற்றி எலும்பெலும்பாய்க் கழிகிறது.

## சொ.

சொக்கட்டானும் செட்டியும் தோற்றினாற்போல.
சொக்கட்டான் சோழி சதுரங்கம் இம்மூன்றும், துக்க மற்றார் ஆடுந்தொழில்.
சொக்கட்டான் விளையாட்டுப் பொல்லாத சூது.
சொக்கநாதர் கோயிலுக்குப் புல்லுக்கட்டு கட்டினாற் போல.
5990 சொக்கனுக்குச் சட்டி அளவு.
சொக்கனும் செட்டியும் தோன்றினதுபோல.
சொட்டைவாளைக் குட்டிபோல் துள்ளிவிழுகிறது.
சொப்பனங்கண்ட அரிசி சோற்றுக்காகுமா?
சொரியாந்தவளையும் வேட்டை யாடுகிறதாம்.
சொருகிக் கிடந்த அகப்பையும் சோறு அள்ளப் புறப்பட்டது.
சொல் அம்போ வில் அம்போ?
சொல்லச் சொல்லப் பட்டி பெண்ணைப் பெற்றாள்.
சொல்லச் சொல்ல மட்டி மண்ணைத் தின்கிறான்.
சொல்லாததை மனையாளுக்குச் சொன்னவன் பட்ட பாடுபோல்.
6000 சொல்லாது பிறவாது அள்ளாது குறையாது.
சொல்லாமலிருக்கிறவனே பண்டிதன்.

சொல்லாமற் செய்வார் நல்லோர், சொல்லியுஞ்செய்யார் கசடர்.

சொல்லிக் கொடுத்த சொல்லும் கட்டிக்கொடுத்த சோறும் எதுவரையில் நிற்கும்?

சொல்லிச் செய்வார் சிறியோர், சொல்லாமற் செய்வார் பெரியோர், சொல்லியும் செய்யார் கசடர்.

சொல்லிப்போகவேணும் சுகத்துக்கு, சொல்லாமற் போகவேணும் துக்கத்துக்கு.

சொல்லின் உறுதி நல்ல நெறியே.

சொல்லுகிறது ஒன்று, செய்கிறது ஒன்று.

சொல்லுகிறவனுக்கு வாய்ச்சொல், செய்கிறவனுக்குத் தலைச்சுமை.

சொல்லுக்கு அரிச்சந்திரன்போல.

6010 சொல்லுக்கும் பொருளுக்கும் எட்டாதான் சோதிக்கும் சாதிக்கும் நடுவானான்.

சொல்லும்சொல் ஆக்கமும் கேடும் தரும்.

சொல்லும் பொருளும் தோன்றும் கல்வி.

சொல்லுவார் எல்லாம் துணிவாரா தீப்பாய?

சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு மதி (புத்தி) யில்லையா (எங்கே போச்சு)?

சொல்வது யார்க்கும் எளிது, அரிதாம் சொல்லிய வண்ணம் செயல்.

சொல்வது லேசு செய்வது அல்லவா பிரயாசம்?

சொல்வல்லனை வெல்லல் அரிது.

சொல்லளம் இல்லா நற்கதை சொல்லில் அதுவே துர்க்கதை.

சொறிந்து தேய்க்காத எண்ணெயும் எண்ணெ யல்ல பரிந்து இடாத சாதமும் சாதமல்ல.

6020 சொறிந்து தேய்க்காத எண்ணெயும் பரிந்து இடாத சோறும் பாழ்.

சொறியக்கொடுத்த பசுப்போல.

சொற்கேளாப் பிள்ளையினால் குலத்துக்கீனம்.

சொற்பேச்சையும் கேளான் சுயபுத்தியும் இல்லை.

சொற்றிறங் கூறல் கற்றவர்க்கு அழகு.

சொன்ன சொல்லிற்கு இரண்டில்லாமல் வருவான்.

சொன்னது இருக்கச் சுரை பிடுங்குகிறாய்.

சொன்னதைச் சொல்லடி சுணைகெட்ட மூளி.
சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.
சொன்னபடி கேட்காவிட்டால் மண்ணைவெட்டி மாப் படைப்பேன்.
6030 சொன்னபடி கேட்டால் மாப்படைப்பேன், கேளா விட்டால் மண்ணைவெட்டிப் படைப்பேன்.
சொன்னால் ஆய் செத்துப்போவாள், சொல்லாவிட்டால் அப்பன் செத்துப்போவான்.
சொன்னால் வெட்கக்கேடு, அழுதால் துக்கக்கேடு.
சொன்னால் வெட்கம் அழுதால் துக்கம்.
சொன்னாற் பெரும்பிழை சோறென்றாற் பட்டினி.

## சோ.

ஜோசியம் சொல்லப் பாலியம் போதும்.
சோடு பிரிந்த அன்றிற்போல.
சோட்டா லடித்து வெகுமானம் கொடுப்பது.
சோம்பர் என்பவர் தேம்பித்திரிவர்.
சோம்பலுக்குத் தொடர்ச்சி இளைப்பு, சும்மா இருத்தலுக்குத் தொடர்ச்சி மூடத்தனம்.
6040 சோம்பலே சோறு இன்மைக்குப் பிதா.
சோம்பலே துன்மார்க்கத்திற்குப் பிதா.
சோம்பல் இல்லாத்தொழில் சோதனைஇல்லாத்துணை.
சோம்பேறிக்கு வாழைப்பழம் தோலோடே.
சோழபுரத்தானோ சூதுபெருத்தானோ!
சோழமண்டலமோ சூதுமண்டலமோ!
சோழியன் குடுமியைச் சுற்றிப்பிடித்தாற்போல.
சோளியை (ஜோளியை)ப் பிடுங்கிக்கொண்டாபிச்சை போடுகிறது?
சோறு அகப்பட்ட இடம் சுகம்.
சோறு எங்கே விக்கும், தொண்டையிலே விக்கும்.
6050 சோறு என்னசெய்யும், சொன்னவண்ணம் செய்யும்.
சோறு கண்ட இடம் சுவர்க்கம்.
சோறு சிந்தினால் பொறுக்கலாம், நீர் சிந்தினால் பொறுக்கலாமா?

சோறு சிந்தினால் பொறுக்கலாம், மானம் (சுணை) சிந்தினாற் பொறுக்கலாமா?
சோறுஞ் சீலையும் கேளாமலிருந்தால் சொந்தப் பிள்ளையைப்போல வளர்த்துக்கொள்கிறேன்.
சோறும் சீலையும் கேளாமலிருந்தால் பெற்ற பிள்ளையைப் போல் பார்த்துக்கொள்ளுகிறேன்.
சோறும் துணியும் தவிர மற்றதுக்கெல்லாம் குறைவில்லை.
சோறும் போட்டுப் பீயும் வாரவேண்டியதாயிற்று.
சோற்றால் எடுத்த (அடித்த) சுவர்.
சோற்றிலே கிடக்கிற கல் எடுக்க மாட்டாதவன் சிவன் கோயில் வரிக்கல்லை எடுப்பானா?
6060 சோற்றிலே கிடக்கிற கல் எடுக்க மாட்டாதவன் ஞானத்தை எப்படி அறிவான்?
சோற்றிலே கிடக்கிற கல்லெடுக்காதவனா மோகனக் கல்லெடுக்கப் போகிறான்.
சோற்றில் இருந்த கல் எடாதவன் சேற்றிற் கிடக்கிற எருமையைத் தூக்குவானா?
சோற்றின் மறைவில் பத்தியம் பிடிக்கிறது.
சோற்றுக்கு இல்லாத பூசணிக்காய் பந்தலிலே கட்ம ஆட்டவோ?
சோற்றுக்கு ஏற்ற பலம்.
சோற்றுக்குக் காற்றாய்ப் பறக்கிறது.
சோற்றுக்குக் கேடு பூமிக்குப் பாரம்.
சோற்றுக்குத் தாளம் போடுகிறான்.
சோற்றுக்கும் கறுப்புண்டு, சொல்லுக்கும் பழுதுண்டு.
6070 சோற்றுக்கு வீங்கின நாயே மாட்டுப் பொங்கலிலே வாயேன்!
சோற்றுச் சுவையோடு தொத்தி வந்த நொள்ளை.
சோற்றுப் பானை உடைந்தால் மாற்றுப்பானை இல்லை.
சோற்றைக் கொடுத்துக் கழுத்தை அறுக்கிறதா?
சோற்றைப் போட்டுத் தொண்டையை நெரிப்பது போல.
சோற்றைப்போட்டு மென்னி (மென்னை) யைப் பிடித்தாற்போல.

## *சௌ.*

சௌரியம் பேசேல்.

## *ஞா.*

ஞாபகம் இல்லையென்று எவனும்சொல்வான், ஞானம் இல்லையென்று எவனும் சொல்லான்.

ஞாயப்பிரமாணம் இல்லாத குருக்கள் வீண்.

ஞாயிற்றுக்கிழமை ஒருபொழுது நண்டு வேண்டாம் சாறுவிடு.

6080 ஞானமும் கல்வியும் நாழி அரிசியிலே.

ஞானம் இல்லாச் சேயர்க்ள ஆவின் கன்றிலும் அதிக

ஞானம் எல்லாம் ஒரு மூட்டை, உலகம் எல்லாம் ஒரு கோட்டை.

ஞானம் தனத்தையும் கனத்தையும் கொடுக்கும்.

ஞானம் முற்றி எலும்பெலும்பாய்க் கழியுது.

ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்.

ஞானிக்கு நரர் துரும்பு.

ஞானிக்கும் மூடனுக்கும் சங்காத்தம் இல்லை.

## *ட.*

டக்குடம்மாரம்.

டம்பாசாரியாய்த் திரியாதே.

6090 டம்மாரக் காளைபோல் அலையாதே.

## *டா.*

டாம்பிகனை நம்பாதே.

டால் டம்மாரம் போட்டுக்கொண்டு போகாதே.

## *டி.*

டில்லிக்கு பாச்சா (ராஜா) வென்றாலும் தல்லிக்கு பிட்டை (பிள்ளை) தானே.

## *த.*

தகப்பனுக்கு இட்டது தலைச்சனுக்கு.

தகப்பனுக்கு ஒட்டுக் கோவணமாம், மகன் எழுத்துப் போட்டது வேண்டு மென்கிறான்.
தகப்பனுக்குக் கட்டக் கோவணம் இல்லை, மகன் தஞ் சாவூர் மட்டும் நடைப்பாவாடை போடச் சொன் னானாம். [க்கிற பிள்ளை.
தகப்பனுக்குக் காய்ச்சுகிற பாலிலே தடியைத் துவை
தகப்பனைக் கொன்ற பாவம் மாமியார் வீட்டில் ஆறு மாசம் இருந்தால் போகும். [தன்.
தகப்பன் தேடக் கர்த்தன், பிள்ளை அழிக்கக் கர்த்
6100 தகப்பன் பட்டத்தைப் பிள்ளைக்குக் கட்டினால் தகப்பன் சாஷ்டாங்க தண்டம் செய்யவேண்டும் அல் லவோ?
தகப்பன் பட்டம் பிள்ளைக்கு அல்லவா? [லாமா.
தகப்பன் வெட்டின கிணறென்று தலைகீழாய் விழ
தக்கோன் எனத்திரி.
தங்கச் சூரிக்கத்தியென்று அறுத்துக் கொள்ளலாமா?
தங்கச் செருப்பானாலும் தலைக்கேறாது. [படாது.
தங்கத்தூள் அகப்பட்டாலும் செங்கற்றூள் அகப்
தங்கத்தை உருக்கி விட்டது போல.
தங்கத்தைக் குவிக்கிறேன் என்றாலும் தன்புத்தி விடுகிறதில்லை யென்கிறான்.
தங்கப்பெண்ணே தாராவே, தட்டான் கண்டால் பொன் என்பான், தராசிலே வைத்து நிறு என்பான், எங்கும் போகாமல் இங்கேயே இரு.
6110 தங்கமுடி சூட்டினாலும் தங்கள் குணம் விடார் கயவர்.
தங்கமுடி சூட்டினாலும் தங்குணம் விடார்.
தங்கமும் பொன்னும் தலையிலே, ஒருகாசு நாரத்தங்காய் உறியிலே.
தங்கமெல்லாம் தவிட்டுக்கு மாறுகிறது.
தங்கம் தரையிலே தவிடு பானையிலே.
தங்கம் புடத்தில் வைத்தாலும் தன்னிறம் போகாது.
தங்கின வியாழன் தன்னோடு மூன்று (மூன்றுபேர்).
தங்கைச்சி பிள்ளை தன் பிள்ளை ஆனால், தவத்துக்குப் போவான் ஏன்?
தசைகண்டு கத்தி நாட்டவேண்டும். [படுகிறது.
தச்சவாசல் இருக்கத் தாணித்த வாசலாலே புறப்

6120 தச்சனடித்த வாசலெல்லாம் தாழக் குனிகிறது.
தச்சன் அடிக்கக் கடா இழுத்தது.
தச்சன் அடித்த தலை வாசல் எல்லாம் உச்சியிடிக்க உலாவித் திரிந்தேன். [படி.
தச்சன் கருமான் தள்ளுபடி, மற்றதெல்லாம் ஏறுப்
தச்சன் கோணல் நிமிர்த்தான் தப்பிதச் சொல்லாகப் பேசாதே.
தச்சன் பெண்சாதி அறுத்தால் என்ன, கொல்லன் பெண்சாதி கூலிக்கு அறுத்தால் என்ன?
தச்சன் பெண்சாதி தரையிலே, கொல்லன் பெண் சாதி கொம்பிலே.
தச்சன் வீட்டிலே தயிரும் எச்சன் வீட்டிலே சோறும் எப்படிச் சேரும்? [ளாளா !
தச்சன் வீட்டிலே பால்சோற்றை நத்தாதே வெள்
தஞ்சம் என்று வந்தவனை வஞ்சித்தல் ஆகாது.

6130 தஞ்சாவூருக்குப் போனக்கால் சண்டை கிண்டை வந்தாக்கால், ஈட்டி கீட்டி யுடைந்தாக்கால், ஊசிக்கித் தனை யிரும்பு தருகிறேன்.
தஞ்சாவூர் எத்தனும் திருவாரூர் எத்தனும் கூடினாற் போல. [பெருமாள்.
தடவிப்பிடிக்கக் கையில்லை அவன்பெயர் சௌரியப்
தடவிப்பிடிக்க மயிரில்லை அவள் பெயர் கூந்தலழகி.
தடி எடுத்தவனெல்லாம் தண்டற்காரனா?
தடி எடுத்தவனெல்லாம் வேட்டைக்காரனா?
தடிக்கு அஞ்சாத பாம்பு.
தடிக்கு அஞ்சிக் குரங்கு ஆடினதுபோல.
தடிக்கு மிகுந்த மிடாவானல் என்ன செய்யலாம்?
தடிக்கு மிஞ்சின மிடா.

6140 தடுக்கின் கீழே நுழைந்தால் கோலத்தின்கீழே நுழை
தடுக்குத் தள்ளிப் பேச்சுப்பேசுகிறது. [கிறது.
தட்டாரச் சித்து தரையிலே, வண்ணாரச் சித்துக்கு வகையில்லை.
தட்டாரச் சித்து தறிச்சித்து, வண்ணாரச் சித்துக்கு வராது.
தட்டானிடத்தில் இருக்கிறது அல்லது கும்பிடு சட்டியில் இருக்கிறது.

தட்டானுக்குப் பயந்தல்லவோ அணிந்தான் சிவன் சர்ப்பத்தையே.
தட்டானும் செட்டியும் ஒன்றானால் தங்கம் கொடுத்தவன் வாயிலே மண்.
தட்டானும் செட்டியும் கண், சட்டியும் பானையும் மண்.
தட்டானுக்கும்செட்டியும் தலைபட்டாற்போல.
தட்டானைச் சேர்ந்த தறிதலை.
6150 தட்டானைத் தலையில் அடித்து வண்ணானை வழிபறித்தது.
தட்டான் கொசு தடுமாறுகிறது போல.
தட்டான் தாய்ப்பொன்னிலும் மாப்பொன் திருடுவான்.
தட்டான் தாழப்பறந்தால் தப்பாமல் மழைவரும்.
தட்டிப்பேச ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்.
தட்டிப்போட்ட வறட்டியை (விராட்டியை)ப் புரட்டிப் போடக் காரணவ ரில்லை.
தட்டுக்கெட்டு முறுக்குப் பாய்ஞ்சு (பாய்ந்து) கிடக்கிறது.
தணிந்த வில்லுத்தான் தைக்கும்.
தண்டச்சோற்றுக்காரா (ராமா), குண்டுபோட்டுவா.
தண்டாந் தமுக்கு தலைக்கு இரண்டு அமுக்கு.
6160 தண்டிலே போனால் இரண்டிலே ஒன்று.
தண்டிற்போனால் இரட்டிப்புச் சம்பளம்.
தண்டு ஒன்று இலை மூன்று? ஆரை அடா சொன்னாய் அது (ஆரை அடா மந்திரி).
தண்ணீரிலே அடி பிடிக்கிறது.
தண்ணீரிலே தடம் பிடிப்பான்.
தண்ணீரிலேயா தன்பலம் காட்டுகிறது?
தண்ணீரிலே விளைந்த உப்புத் தண்ணீரிலே கரைய வேண்டும்.
தண்ணீரின் கீழ்ே குசுவிட்டால் தலைக்குமேலே.
தண்ணீரில் அமுங்கின முட்டை உப்புப்போடக் கிளம்பும்.
தண்ணீரில் இருக்கிற தவளை நீர் குடித்ததைக் கண்ட தார், குடியாததைக் கண்டதார்?
6170 தண்ணீரில் இருக்கிற தவளையைத் தரையில் எடுத்து விட்டதுபோல.
தண்ணீரில் இறங்கினால் தவளைகடிக்கும் என்கிறான்.

தண்ணீரில் இறந்தவரிலும் சாராயத்தில் இறந்தவர் அதிகம்.
தண்ணீரும் கோபமும் தாழ்ந்த இடத்திலே.
தண்ணீரும் பாசியும் கலந்தாற்போல.
தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும்.
தண்ணீரையும் தாயையும் பழிக்கலாமா? [சரி.
தண்ணீர் குடித்த வயிறும் தென்னோலையிட்டகாதும்
தண்ணீர்க்குடம் உடைந்தாலும் ஐயோ, தயிர்க்குடம் உடைந்தாலும் ஐயோ!
தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும்.
6180 தத்திக் குதித்துத் தலைகீழே விழுகிறது.
தத்தி விழுந்தால் தரையும் பொறுக்காது.
தத்துவம் அறிந்தவன் தவசி. [க்கிறான்.
தந்தவன் இல்லையென்றால் வந்தவன் வழியைப் பார்
தந்தனா என்கிறது பாட்டுக்கு அடையாளம்.
தந்தாலொன்று தராவிட்டாலொன்று.
தந்தை எவ்வழி அவ்வழி புதல்வன்.
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை.
தப்பில் ஆனவனை உப்பிலே போடு.
தப்பு அடித்தவன் தாதன், சங்கு ஊதினவன் ஆண்டி.
6190 தப்பும் திப்பும் தாறுமாறும்.
தமக்கு மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை வேண்டும்.
தமிழுக்கு இருவர் தத்துவத்துக்கு ஒருவர் ஆகும்.
தம் இனம் தம்மைக்காக்கும், வேலி பயிரைக்காக்கும்.
தம்பி உடையவன் படைக்கு அஞ்சான்.
தம்பி உழுவான் மேழி எட்டாது.
தம்பி காலநடை, பேச்சு பல்லக்கிலே.
தம்பி சமர்த்தன் உப்பில்லாக்கஞ்சி கலம் குடிப்பான்.
தம்பி சோற்றுக்குச் சூறாவளி, வேலைக்கு வாராவழி.
தம்பி பிடித்த முயலுக்கு மூன்றே கால்
6200 தம்பி பிள்ளையாண்டான் அலுவல், தலைசொறிய நேர மில்லை.
தம்பி பிறக்கத் தரைமட்டம் ஆயிற்று.
தம்பி பேச்சைத் தண்ணீரில் எழுதவேண்டும்.

தம்பி மொண்டது சமுத்திரம்போல.
தயிருக்குச்சட்டி ஆதரவு, சட்டிக்குத்தயிர் ஆதரவு.
தயிர் உலர்த்திச் சண்டைக்கு இழுத்ததுபோல.
தயிர்பானையை உடைத்துக் காகத்துக்கு அமுது இட்டாற்போல.
தயை தாக்ஷிண்யம் சற்றாகிலு மில்லை.
தரத்தர வாங்கிக்கொள்ளுகிறாயா, தலையை முழுகிப் போட்டுப் போகட்டுமா?
தரித்திரப்பட்டாலும் தைரியம் விடாதே.
6210 தரித்திரம் பிடித்தவள் தலை முழுகப் போனாளாம் அப்போதே பிடித்ததாம் மழையும் தூறலும்.
தரித்திரனுக்குத்தன் புதை கிடைத்தாற்போல.
தரித்திரனுக்கு விஷம் கோஷ்டி.
தருமத்துக்கு அழிவு சற்றும் வராது.
தருமத்துக்குத் தாழ்ச்சி வராது.
தருமத்துக்குத் தானம் பண்ணுகிற மாட்டைப் பல்லைப் பிடித்துப் பதம் பார்க்கிறதா?
தருமத்தைப் பாபம் வெல்லாது.
தரும புத்திரர்களுக்குச் சகுனி தோன்றினாற்போல.
தருமமே செயம்.
தருமமே (தருமம்) தலைகாக்கும்.
6220 தலை அளவும் வேண்டாம், அடி அளவும் வேண்டாம் குறுக்கே அள அடா படியை.
தலை இடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.
தலை இடியும் சங்கடமும் தனக்கு வந்தபின் தெரியும்.
தலை இருக்கிற இடத்தில் கழுத்துவரட்டும் பார்த்துக் கொள்வோம்.
தலை இருக்க வால் ஆடுமா?
தலை எழுத்திற்கு தலையைச் சிரைத்தாற் போகுமா?
தலை எழுத்தை அரியென்று சொல்லுவார் அதல்ல.
தலை கீழாகத் தவஞ்செய்தாலும் கூடுகிற காலம்வந்துதான் கூடும்.
தலைக்குத் தலை நாட்டாண்மையா யிருக்குறது.
தலைக்குத் தலை நாயகம்.
6230 தலைக்கு தலை பெரியதனம், உலைக்கு அரிசி இல்லை.
தலைக்குமிஞ்சின மிடா.

தலைக்கு முடியோ காலுக்கு முடியோ?
தலைக்குமேலே கை காட்டுகிறது.
தலைக்கு ஏறினால் தனக்குத் தெரியும்.
தலை சுழன்றவனுக்கு உலகமெல்லாம் சுற்றும்.
தலை சொறியக் கொள்ளி தானே வைத்துக்கொண்டாற் போல.
தலைச்சான் பிள்ளைக்காரி இடைச்சன் பிள்ளைக்காரிக்கு மருத்துவம் பார்த்தாற் போல.
தலைச்சமன பிள்ளைக்காரி இடைச்சன் பிள்ளைக் காரிக்குப் புத்திசொன்னாளாம்.
தலைச்சன் பிள்ளைக்கு இல்லாத தண்டையும் தங்கையும் இடைச்சன் பிள்ளைக்கு வந்ததா?
6240 தலைச்சன் பிள்ளை பெற்றவளுக்குத் தாலாட்டும், ஆம் படையான் செத்தவளுக்கு அழுகையும் தானே வரும்.
தலைச்சுமை தந்தானென்று தாழ்வா யெண்ணாதே.
தலை தெரியாமல் தத்தித்தடவி விழுகிறது.
தலைநோவுக்குத் தலையணையைத் திருப்பிப்போட்டால் தீருமா?
தலைநோவும் காய்ச்சலும் தனக்குவந்தால் தெரியும்.
தலைப்பிள்ளை ஆண், தப்பினால் பெண்.
தலைப்புறத்தைத் தந்தால், தருவேன் மருந்துப்பையை.
தலை மயக்கம் சர்வமயக்கம்.
தலைமாட்டிற்கு கொள்ளி தானே தேடிக்கொண்டாய்.
தலைமுறை தலைமுறையாய் மொட்டை அவள்பெயர் கூந்தலழகி.
6250 தலைமுறையில்லாத தாழ்வு.
தலைமேலே அம்பு பறந்தாலும் நிலையிற் பிரியல்
தலைமேலே இடித்தாலும் தான் குனியான்.
தலைமேலே தலையிருக்கிறதா?
தலைமேலோடின வள்ளம் சாண் ஓடிஎன்ன, முழம் ஓடி என்ன?
தலைமொட்டை, கூந்தலழகி என்று பெயர்.
தலையாரியும் அதிகாரியும் ஒன்றானால் சம்மதித்தபடி திருடலாம்.

தலையாலே மலை பிளப்பான்.
தலையிலே யிடித்த பிறகா தாழக் குனிகிறது?
தலையில் எழுத்து இருக்கத் தந்திரத்தால் வெல்லலாமா?
6260 தலையில் வரும் மயக்கம் சருவமயக்கம்.
தலையில் இடித்தபின் தாழக் குனிவான்.
தலையும் தலையும் பொருந்தினால் மலையும்வந்து பொறுக்கும்.
தலையைத் தடவி மூளையை உரியவேண்டும் (உறிஞ்சுகிறவன் போல).
தலையைத் திருகி உரலிலே போட்டிடிக்கச்சே, சங்கு சக்கரக் கடுக்கன் உடைந்து போகப் போகிறதென்றானாம்.
தலையை நனைத்தாச்சுது, கத்தியையும் வைத்தாச்சுது.
தலையோடே வந்தது தலைப்பாகையோடே போயிற்று.
தலைவலியும் பசியும் தனக்குவந்தால் தெரியும்.
தலைவலிக்குத் தலை அணையைத் தானே மாற்றிப் போட்டாற்போல.
தலைவன் சொற் கேள், நன்னெறி தவறேல்.
6270 தலைவன் நிற்கத் தண்டு நிற்கும், தலைவன் மயங்கச் சர்வமும் மயங்கும்.
தலைவெட்டிச் சமுத்திரமேற் போடலாமா?
தவசிப்பிள்ளை நமசிவாயம் கையாசாரம்.
தவசிக்குத் தயிருஞ்சாதமும் விசுவாசிக்கு வெந்நீரும் பருக்கையும்.
தவசுக்குத் தனிமையும் தமிழுக்குத் துணையும்.
தவசே அணிகலன், தாழ்மையே மேன்மை.
தவத்தளவே யாகும் தான்பெற்ற செல்வம்.
தவத்தி லிருந்தால் தலைவனைக் காணலாம்.
தவத்துக்கொருவர் கல்விக் கிருவர்.
தவளை தன் வாயாற் கெடும்.
6280 தவளை தாமரைக்குச் சமீபமாக இருந்தும் அதில் தேனை உண்ணாது.

தவிடு தின்பவனை அமுது தின்னச் சொன்னாற்போல.
தவிடு தின்பவனை எக்காளம் ஊதச்சொன்னாற்போல.
தவிட்டுக்கு வந்த கைதான் தனத்துக்கும் வரும்.
தவிட்டை நம்பிப் போகச் சம்பா அரிசியைக் காகம் கொண்டு போயிற்று.
தழைத்த மரத்துக்கு நிழல் உண்டு, பிள்ளை பெற்றவளுக்குப் பால் உண்டு.
தள்ளத் தள்ளத் தாழ்ப்பாளைப் பிடிப்பானேன்?
தள்ளத் தள்ளத் தாழ்ப்பாளை மெள்ள மெள்ளத் திறப்பான் ஏன்?
தள்ளிரிய தாறுவந்து தாய் வாழையைக் கெடுத்தாற் போல.
தள்ளிப்பேசினாலும் தழுவிக்குழைகிறது.
6290 தறுதலைக்கு ராஜா சவுக்கடி.
தனக்கு அழகு மொட்டை, பிறர்க்கு அழகு கொண்டை.
தனக்கு ஆகாத பானை உடைந்தால் என்ன இருந்தால் என்ன?
தனக்கு உகந்த ஊணும் பிறர்க்கு உகந்த கோலமும்.
தனக்கு என்றால் பிள்ளையும் களைவெட்டும்.
தனக்கு என்றால் புழுக்கை கலம் கழுவியுன்னாள்.
தனக்கு என்று அடுப்பு மூட்டித் தான் வாழும் காலத்தில் வயிறும் சிறுக்கும் மதியும் பெருக்கும்.
தனக்கு என்று இருந்தால் சமயத்துக்கு உதவும்.
தனக்கு என்று ஒருத்தி இருந்தால் தலைமாட்டில் இருந்தழுவாள்.
தனக்குக் கண்டு தானம் வழங்கு.
6300 தனக்குச் சந்தேகம் அடைப்பைக்காரனுக்கு இரட்டைப் படியா?
தனக்குத்தகாத காரியத்திற் பிரவேசிப்பவன் குரங்கு பட்ட பாடு படுவான்.
தனக்குத்தகாத காரியம் செய்தால் ஆருக்கும் பிராண சேதத்துக்கு வரும்.
தனக்குத்தவிடு இடிக்கத் தள்ளாது ஊருக்கு இரும்பு அடிக்கத் தள்ளும்.
தனக்குத் தனக்கென்றால் புடுக்கும் களைவெட்டும்.

தனக்குத்தானே கனியாத பழத்தைத் தடிகொண்டடித்தாற் கனியுமா?

தனக்குப்பிறந்த பிள்ளை தவிட்டுக்கு அழுகிறதாம், ஊரார் பிள்ளைக்குக் கூட்டுக்கலியாணம் செய்கிறானாம்.

தனக்குப்பின் தானம்.

தனக்குப்பின் அகம் நிமிர்ந்து என்ன, கவிழ்ந்து என்ன?

தனக்குப் பின்னால் வாழ்ந்தாலென்ன கெட்டாலென்ன?

6310 தனக்குப் பெரியாரைத் தடிகொண்டடிக்கிறது.

தனக்கு மிஞ்சினதல்லவா தர்மம்?

தனக்கு மிஞ்சினது தர்மம்.

தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்குச்சகுனப்பிழை வேண்டும்.

தனக்கென்று சொல்ல நாய் வெடுக்கென்று பாயும்.

தனக்கென்ன என்றிருக்கல் ஆகாது நாய்க்குச்சோறு இல்லையாயின்.

தனிவழியே போனவனைத் தாரமென்று எண்ணாதே.

தன் இச்சையை அடக்காவிட்டால் அது தன்னையே ஆளும்.

தன் இனம் தன்னைக்காக்கும் வேலி பயிரைக்காக்கும்.

தன் உயிரைத் தான் தின்கிறான்.

6320 தன் உயிரைப்போல மன்னுயிரையும் காக்கவேண்டும்.

தன் ஊருக்கு அன்னம் பிற ஊருக்குக் காகம்.

தன் ஊருக்கு ஆனை அயல் (அசல்) ஊருக்குப் பூனை.

தன் ஊருக்குக் காளை அயல் ஊருக்குப் பூனை.

தன் ஊர்ச் சுடுகாட்டுக்கும் அயல் ஊர் ஆற்றுக்கும் அஞ்சவேண்டும்.

தன் கண்ணைக்கொடுத்து வெங்கண்ணை வாங்கவேண்டும்.

தன் காரிய துரந்தரன் பிறர்காரியம் வழவழவென்று விடுகிறவன்.

தன்காரியப் புலி.

தன் காரியமென்றால் தன் சீலையும் பதைக்கும்.

தன் காரியம் பாராதவன் சதையால் சதையால் ஒரு புழு புழுப்பான்.

6330 தன் காற் பெருவிரலைப் பார்த்து நடக்கவேண்டும்.
தன் கீர்த்தியை விரும்பாதவளைத் தள்ளிவிடு.
தன் குஞ்சென்று வளர்க்குமாம் குயிற் குஞ்சைக் காகம்.
தன் குற்றம் இருக்கப் பிறர் குற்றம் பார்க்கிறதா?
தன் குற்றம் கண்ணுக்குத் தோன்றாது.
தன் குற்றம் தனக்குத் தெரியாது.
தன் குற்றம் பார்ப்பவர் இங்கு இல்லை.
தன் சொல்லையில் கீரை வைத்துக்கொண்டு அசல் வீட்டுக்குப் போவானேன்?
தன் சோறு தின்று தன் புடைவை கட்டி வீண் சொல கேட்க விதியா?
தன் தப்பு பிறருக்குச் சந்து.
6340 தன் தாரதார பரதார புத்திரன்.
தன் நிலத்தில் குறுமுயல் தந்தியினும் வலிது.
தன் நிழல் தன்னைக்காக்கும்.
தன் நிழல் தன்னோடே வரும்.
தன் நெஞ்சறியாத பொய்யில்லை.
தன் நோய்க்குத் தானே மருந்து.
தன் பணம் செல்லாவிட்டால் தாதனைக்கட்டி அடிக்கிறது.
தன் பலம் கொண்டு அம்பலம் ஏற வேண்டும்.
தன் பல்லைக் குத்திப் பிறர் மூக்கில் வாசம் காட்டுகிறது போல.
தன் பல்லைப் பிடுங்கிப் பிறர் வாயில் வைக்கலாமா?
6350 தன் பாவம் தன்னோடே.
தன் பானை சாயப் பிடிக்கிற தில்லை.
தன் பிள்ளைக்குப் பதைக்காதவள் சக்களத்தி பிள்ளைக்குப் பதைப்பாளா?
தன் பிள்ளை யென்று தலைமேல் வைத்துக் கொள்ள [லாமா?
தன் பிள்ளையைத் தான் அடிக்கத் தலையாரியைச் சீட்டுக் கேட்கிறது போல.
தன் பெண்டாட்டியை அடிக்கத் தலையாரியைச் சீட்டுக் கேட்கிறதா?
தன் மனம் பொன் மனம்.
தன் முதுகு தனக்குத் தெரியவில்லை (தெரியாது).

தன் வயிற்றைத் தான் உலவிக்கலாமா?
தன் வாயாலே தான் கெட்டான்.
6360 தன் வாயால் தான் கெட்டதாம் ஆமை.
தன் வாய்க்கஞ்சியைக் கவிழ்த்துப் போட்டான்.
தன் வாய்ச் சீதேவி முன்வாயிலே. [சுடும்.
தன் வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச்
தன் வீடு தவிர அசல் வீட்டுக்கு மேட்டுவரி என்கிறான்.
தன் வீட்டு ஆமுடையான் தலைமாட்டிலும் அசல் வீட்டு ஆமுடையான் கால்மாடு நலம்.
தன் வீட்டுக் கதவைப் பிடுங்கி அயல் வீட்டுக்கு வைத்து விட்டு விடிகிற மட்டும் நாய்ஓட்டினதுபோல.
தன் வீட்டுக் கதவைப்பிடுங்கி அயல் வீட்டுக்கு வைத்தாற் போல.
தன் வீட்டுக்கு வந்த விருந்தாளியை அசல் வீட்டுக்குப் போகச் சொன்னால் போவானா?
தன் வீட்டு விளக்கென்று முத்தம் இடலாமா?
6370 தன் வீட்டு விளக்கென்று முத்தம் இட்டாற் சுடாதா?
தன்னவன் தனக்கானவனானால் தலைப் பந்தியிலிருந்தாலென்ன கடைப்பந்தியிலிருந்தாலென்ன?
தன்னாலே தான் கெட்டால் அண்ணாவியார் என்ன செய்வார்?
தன்னுயிர் கருப்புக் கட்டி.
தன்னுயிர்போல மன்னுயிரையும் பார்க்கவேண்டும்.
தன்னை அழுத்தினது சமுத்திரம்.
தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்.
தன்னை அறிந்தவன் தானே தலைவன்.
தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்.
தன்னை அறிந்தது பின்னைப் பேசு.
6380 தன்னை அறியாச் சன்னத முண்டா?
தன்னை அறியாத சன்னதம் இல்லை.
தன்னை ஒளித்தொரு வஞ்சனையில்லை.
தன்னைக் கட்டக் கயிறு தானே கொடுத்தாற் போல.
தன்னைக் காக்கிற் கோபத்தைக் காக்கவேண்டும்.
தன்னைக் கொல்லவந்த பசுவைக் கொல்லு:

தன்னைச் சிரிப்பது அறியாதாம் பல்லா வரத்துக் குரங்கு தன் ஊரைச் சிரிக்குமாம்.

தன்னைச் சிரிப்பாரைத் தான் அறியான்.

தன்னைத் தானே தான் பழிக்குமாம் தென்னமரத்திலே குரங்கு இருந்து.

தன்னைப் பணிவாரைத் தான் பணியக் காலம் வந்தது.

6390 தன்னைப் புகழாத கம்மாளனும் இல்லை.

தன்னைப் புகழ்தல் தகும் புலவோர்க்கே.

தன்னைப் புகழ்வானும் சாணேறி நிற்பானும், பொன்னைப் புதைத்து வைத்துப் போவானும் பேய்.

தன்னைப் பெற்ற தாய் கிண்ணிப் பிச்சை வாங்கச்சே தங்கத்தாலே சரப்பளி தொங்க ஆடுதாம்.

தன்னைப் பெற்றவள் கொடும்பாவி, தன் பெண்ணைப் பெற்றவள் மகராசி.

---

## தா.

தாகமிருக்கிறது இறக்கமில்லை.

தாக்ஷிண்யம் தனநாசனம்.

தாங்கித் தாங்கிப் பார்த்தால் தலைமேல் ஏறுகிறான்.

தாங்குகிற ஆள் உண்டு, தளர்ச்சி உண்டு.

தாசரி தப்பு தண்டவாளத்துக்குச் சரி.

6400 தாசிக்குப் பணையங் கொடுத்தால் தகப்பனும் போகலாம் பிள்ளையும் போகலாம்.

தாடிக்குப் பூச்சூடலாமா?

தாடி பற்றிக்கொண்டு எரியச்சே சுருட்டுக்கு நெருப்புக் கேட்டானாம்.

தாட்டோட்டக்காரரைக் கூடுவதிலும் தனியே இருப்பது நலம்.

தாட்டோட்டக்காரனுக்குத் தயிரும் சோறும், கூட்டாட்டக்காரனுக்குக் கூழும் தண்ணீரும்.

தாட்டோட்டக்காரனுக்குத் தயிரும் சோறும், விசுவாசக்காரனுக்கு வெந்நீரும் பருக்கையும்.

தாதனும் பறையனும் போல.

தாதன் ஆட்டம் திருப்பதியிலே தெரியும்.

தாதன் கரத்தில் அகப்பட்ட குரங்கைப்போல் அலைகிறான்.

தாது அறியாத பேதை வைத்தியன்.

6420 தாதும் இல்லை பிராதும் இல்லை.
தாபரம் இல்லா இளங்கொடி போல.
தாமதம் தாழ்வுக்கு ஏது?
தாமரை இலைத் தண்ணீர்போல் தளம்புகிறது.
தாமரை இலையில் தண்ணீர் போல் தவிக்கிறான் (ததும்புகிறான்).
தாமரை ஜலம் போல தவிக்கிறான்.
தாமரையில் விழுந்த மழைத்துளிபோல.
தாம்பும் அறுதல் தோண்டியும் பொத்தல்.
தாயில்லாத பிள்ளை ஊருக்காகுமா?
தாயில்லாத பிள்ளை தறிதலை.
6420 தாயில்லாத போது தகப்பன் தாயாதி.
தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை.
தாயின் முகம்பார்க்கும் சேயின் முகம்போல.
தாயும் தகப்பனும் தள்ளிவிட்டகாலத்தில் வா என்று அழைத்த வங்கார வாசி.
தாயும் தகப்பனும் தவிரச் சகலமும் வாங்கலாம்.
தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேறே.
தாயைக் கொன்றவனுக்கு ஊரிலே பாதிப்பேர்.
தாயைச் சேர்ந்த உறவானாலும் அறுத்துத் தான் உறவாடவேண்டும்.
தாயைத் தண்ணீர்த்துறையில் பார்த்தால் பிள்ளையை வீட்டில் பார்க்கவேண்டியதில்லை.
தாயைப் பழித்து மகள் அபசாரி ஆடுகிறாள் (போனாளாம்).
6430 தாயைப் பார்க்கிலும் சிறந்த கோயிலுமில்லை.
தாயைப் பார்த்து பெண்ணைக்கொள்ளு, பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்ளு.
தாயைப் பார்த்து மகளைக் கொள்.
தாயை மறக்கடிக்கும் தயிரும் பழஞ்சோறும்.
தாய் அறியாத சூல் உண்டா?
தாய் இல்லாதவனுக்கு ஊரெல்லாம் தாய்.
தாய் இல்லாப்பிள்ளையைத் தலையிலே தட்டலாமா?
தாய் உறவோ நாய் உறவோ?
தாய் ஏழடி பாய்ந்தால் மகள் எட்டு அடி பாய்வாள்.
தாய் ஒருபாக்கு தான் கமுகந் தோப்பு என்கிறாள்.

6450 தாய் கூடப்பிறந்த மாமனிடத்தில் குலமும் கோத்திரமுஞ் சொன்னதுபோல.

தாய் கேட்டுப்பட்டி தகப்பன் காவடிப்பட்டி தங்கை மோருப்பட்டி தமக்கை சாதப்பட்டி.

தாய்கைப் பசும்பொன்னிலும் தன்கைத் தவிடே மேல்.

தாய்க்கிழவி எப்போ சாவாளோ, தாழ்வாரம் எப்போ ஒழியுமோ?

தாய்க்கு அடங்காதவன் ஊருக்கு அடங்கான், ஊருக்கு அடங்காதவன் ஒருவருக்கும் அடங்கான்.

தாய்க்கு உள்ளது மகளுக்கு.

தாய்க்கு ஒளித்த சூலா?

தாய்க்குச் சோறு இடுகிறது ஊருக்குப் புகழ்ச்சியா?

தாய்க்குத் தவிடிடியான் தம்பிரானுக்கு இரும்பிடிப்பான்.

தாய்க்குப்பின் தாரம்.

6450 தாய்க்கு மூத்துத்தகப்பனுக்கு விளக்குப் பிடிக்கிறான்.

தாய்க்கு விளைந்தாலும் தனக்கு விளையவேண்டும்.

தாய்ச் சீலைக்குச் சாண் துணியில்லை, தலைக்கு மேலே சரிகை மேற்கட்டி.

தாய் செத்தால் மணம், மகள் செத்தால் பிணம்.

தாய் செத்தாள், மகள் திக்கற்றாள்.

தாய் தவிட்டுக்கு அழுகையில் பிள்ளை இஞ்சிப்பச்சடி கேட்கின்றது.

தாய் தனக்கு ஆகாத மகள் ஆர்தனக்கு நல்லவள [ஆவாள்?

தாய் தூற்றினால் ஊர் தூற்றும், கொண்டவன் தூற்றினால் கண்டவன் தூற்றுவான்.

தாய் பொறுக்காததை ஊர் பொறுக்குமா?

தாய் பொன்னிலும் மாப்பொன் திருடும் தட்டான்.

6460 தாய்போல் பெண்ணும் தகப்பன் போல் பிள்ளையும்.

தாய்மனம் பித்து தகப்பன் மனம் கல்லு.

தாய் மனைக்குவந்தது பிள்ளைக்கும்.

தாய் முகம் காணாத பிள்ளையும் மழைமுகம் காணாத பயிரும் போல.

தாய்முகம் பார்க்கும் சேய்முகம் போல.

தாய்முலை குடித்துத் தாகந் தணியவேணும்.

தாய்முலைப்பாலுக்குப் பால்மாறினதுபோல.
தாய்வசவு பிள்ளைக்குப் பலிக்குமா?
தாய் வயிற்றில் இரண்டாவது பிறந்ததுபோல.
தாய் வார்த்தை கேளாத பிள்ளை நாய் வாயிற் சீலை.
6470 தாய் வீடோடிய பெண்ணும் பேயோடாடிய கூத்தும்.
தாரத்தை ரக்ஷியாதான் வீரம் என்னத்துக்குதவும்?
தாரமும் குருவும் தலைவிதிப்படி.
தாராப்பெட்டை போல.
தாராளந் தண்ணீர்ப்பந்தல், நீர்ச்சோற்றுத் தண்ணீர் நெய்பட்டபாடு.
தாலியறுத்தவளுக்கு மருத்துவச்சி தயவு ஏன்?
தாலி அறுத்தவள் ஏன் இருக்கிறாள்? தாரம் தப்பினவனுக்குப் பொங்கியிட.
தாலி அறுத்தவள் வீட்டிலே தலைக்குத்தலை பெரிய தனம்.
தாலிப்பறி சீலைப்பறியா?
தாவத் தஞ்சம் இல்லா இளங்கொடி போல் தவிக்கிறான்.
6480 தாழிபோல் வயிறும் ஊசிபோல் மிடறும்.
தாழ் குலத்திற் பிறந்தாலும் புத்தியினால் அலரிப்பூவைப் போல் பிரயோசனப்படுவார்.
தாழ்ந்த இடத்திலே தண்ணீர் தங்கும்.
தாழ்ந்தது தங்கம் உயர்ந்தது பித்தளை.
தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்.
தாழ்ந்து பணிதலே தலைமையாகும்.
தாழ்மை இல்லாத வாலிபன் வீண்.
தாழ்வதும் வாழ்வதும் சகடக்கால் போல.
தாழ்விலே பெருமையும் வாழ்விலே தாழ்மையும் வேண்டும்.
தாள் இட்டவன் தாள் திறக்கவேண்டும்.
6490 தாள் உண்ட நீரைத்தலையாலே தரும் தென்னை.
தாறு புறப்பட்டுத் தாய் வாழையைக் கெடுத்தாய் போல.
தாறுமாறு தக்கடவித்தையும்.
தானதர்மமில்லாத உடைமைக்குத் தம்பி தாண்டவராயன் புறப்பட்டான்.

தானத் தனத்தான் சகல சம்பத்தன்.
தானமது விரும்பு.
தானாகக் கனியாதது தடிகொண்டடித்தாற் கனியுமா?
தானாகக் கெடுத்தது பாதி தம்பிரான்கெடுத்தது பாதி.
தானாகத்தின்று தலையாய்ப்போக வேண்டும்.
தானாக வந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளலாமா?
6500 தானும் இடாள் இட்டவர்களைப் பார்த்தறியாள்.
தானும் உண்ணான் பிறர்க்குக் கொடான்.
தானும் தின்னான் தரையிலும் போடான்.
தானும் வாழ்கிற காலத்தில் வயிறும் சிறுக்கும் மதியும் பெருக்கும்.
தானே கவர்னர் தன் புத்தி பட்லர்.
தானே கனியாத பழத்தைத் தடிகொண்டடித்தால் கனியுமா?
தானே தான் குருக்கள் என்பார் தனங்கள் வாங்கச் சதாசிவன்பேர் பூசைசெய்வார்.
தானே வளர்ந்து தவத்தால் கொடி யெடுத்தான்.
தானே வாழவேண்டும் தலைமகளே அறுக்கவேண்டும் என்கிறாள்.
தான் அடங்கத் தன்குலம் அடங்கும்.
6510 தான் அறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்.
தான் அறியாத ஆவேசம் உண்டா?
தான் அறியாதது நஞ்சோடொக்கும்.
தான் ஆடாதே போனாலும் தன் சதை ஆடும்.
தான் ஆண்ட உலக்கையும் தங்கப் பூஞ்சரடும் தலை மருமகளுக்கு.
தான் உள்ளபோது உலகம்.
தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது.
தான் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும்.
தான் கள்வன் பிறரை நம்பான்.
தான் கற்ற ஒன்றைத் தரிக்க உரை.
6520 தான் குடிக்கக் கூழ் இல்லை, வாரத்துக்கு இரண்டு பன்றிக்குட்டி வளர்க்கிறான்.
தான் குடிக்காத பாலைக் கவிழ்த்து விடுகிறதா?

தான் கும்பிடுந்தெய்வமானாலும் பொய்ச் சத்தியம் செய்தாற் பொறுக்குமா?
தான் சம்பாதித்தால் தனக்கு உதவும், ஊர் சம்பாதித்தால் உதவமாட்டாது.
தான் சாக மருந்து தின்பார்களா?
தான் செத்தபின் உலகம் கவிழ்ந்து என்ன நிமிர்ந்து என்ன?
தான் தளம்பல் பிறருக்கு ஊன்றுகோல்.
தான் திருடி அயல்வீடு நம்பான், கூத்திக்கள்ளன் பெண்சாதியை நம்பான்.
தான் திருட்டுக் கொடுத்தது மல்லாமல் பைத்தியக் காரப்பட்டமும் கட்டிக்கொண்டான் (கேட்டான்.)
தான் தின்ற நஞ்சு தன்னை எரிக்கும் (கொல்லும்).
6530 தான் தின்னத் தவிடு இல்லை சம்பா நெல்லுக்குத் தெம்பை வைத்துக் கொட்டுகிறே னென்றானாம்.
தான் தின்னத் தவிடு இல்லை, தங்கத்தாலே தாலி தொங்கப்போடச் சொன்னாளாம்.
தான் தின்னத் தவிடு இல்லை, வாரத்துக்குப் பன்றிக் குட்டியா?
தான் தின்னித் தம்பிரானாய் இருக்கிறான்.
தான் தின்னி பிள்ளைவளர்க்காள், தவிடுதின்னிகோழி வளர்க்காள்.
தான் தேடாப் பொன்னுக்கு மாற்றும் இல்லை உரையும் இல்லை.
தான் தொழும் தெய்வமானாலும் பொய்ச் சத்தியம் செய்தால் சகிக்குமா?
தான் தோன்றித் தம்பிரானா யிருக்கிறான்.
தான் தோன்றிப் பெருமாள்.
தான் பத்தினியானால் தேவடியாள் தெருவிலும் குடி யிருக்கலாம்.
6540 தான் பிடித்த முயலுக்கு (முசலுக்கு) மூன்றே கால்.
தான் போக வழியைக் காணாத மூஞ்சுறு விளக்குமாற்றையுங் கவ்விக்கொண்டு போனதாம்.
தான் போகாத காரியத்துக்கு ஆள்போனால் ஒரு சொட்டு.
தான்போகிற காரியத்துக்கு அடைப்பைக்காரன் ஒரு [சொட்டு.

தான் போய் மோரில்லாமல் வந்தவன் தயிருக்குச் சீட்டு எழுதினானாம்.
தான் போனால் தாகத்துக்குக் கிடையாது, எழுதடா ஓலை நூறு குடம் தயிருக்கு என்றான்.
தான்றிக்காயில் சனியன் புகுந்ததுபோல.

---

## தி.

திகம்பர சந்நியாசிக்கு வண்ணான் உறவு ஏன்?
திகைப்பூடு மிதித்தவன் போல் அலைகிறான்.
திகைப்பூண்டு மிதித்துத் திக்குக் கெட்டாற்போல.
6550 திக்கற்ற ஊருக்குத் திருடன் பூள் கருடகம்பம்.
திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.
திக்குக்கெட்டுத் திசைமாறிப் போகிறது.
திக்கு விஜயம் கொள்பவனுக்கு ஜபாபஜய காலம் தெரியாது.
திங்களும் சனியும் தெற்கே நோக்கவேண்டும்.
திசைப்புரட்டனுக்குப் புளுகுக்குத் தாழ்ச்சியில்லை.
திமனப்படு தீம்பர்க்கருகில்.
திடுக்கென்று போம் உடலை ஸ்திரமாய் நம்பலாமா?
திடுக்கென்று வாழ்க்கைப்பட்டு வெடுக்கென்று அறுத்தாளாம். [ கிப்போட்டால்.
திட்டவத்து கொட்டவத்து வட்டக்காயைப் பிதுக்
6560 திட்டிக்கெட்டாரும் (செத்தாரும்) இல்லை, வாழ்த்தி வாழ்ந்தாரும் இல்லை.
திண்டிக்கு அவசரம் வேலைக்கு ஒளிப்பு.
திண்ணைக்குத் தேள்கொட்ட, தண்ணீர் மிடாவுக்கு நெறிகட்ட.
திண்ணைக்கு விடிந்தால் வீட்டுக்கு விடியும்.
திண்ணையிற் பெண்ணைத் திருப்பி வைக்கிறது, மணையிற் பெண்ணை மாற்றிவைக்கிறது.
திண்ணை வீணன் திருவாசல் (தெருவாசல்) வீணன்.
திரட்சிக்கு நிகட்சி, புளிப்புக்கு அவளப்பன்.
திரட்டுப்பால் குமட்டுகிறதா? [ டான்.
திரவியத்தில் அழுத்தமானவன் செத்தாலுங் கொ
திரள் எலி வளை எடாது.
திண்ணையானது தெருவுக்கு மூத்து அண்ணனானவன் தம்பிக்கு மூத்தவன்.

6570 திரிசங்கு சுவர்க்கம்.
திரிசங்குவின் மோக்ஷம்.
திரித்த வரையிற் கயிறு, திரியாத வரையிற் பழுதை,
திரிமூர்த்திகளும் தேவரும் காணார்.
திரு உண்டானால் திறமை உண்டாகும்.
திருகாணிக்கு வலுவும் பழஞ்சாணிக்கு புழுவும் உண்டு.
திருக்கண்ட கண்ணுக்குத் தீங்கு இல்லை.
திருக்கண்ட கண்ணுக்குத் தீங்கும் காணலாயிற்றே.
திருக்காவணப் பந்தலுக்கு நிழலுதவி வேண்டுமா?
திருடத்தெரிந்தால் தெற்றுமாற்றுந் தெரியவேண்டும்.
6580 திருடனுக்குத் திருட்டுப்புத்தி போகாது.
திருடனுக்குத் தெய்வமே சாக்ஷி.
திருடனுக்குத் தோன்றும் கள்ளப்புத்தி.
திருடனைத் தேள் கொட்டினது போல.
திருடன் புகுந்த ஆறாம்மாதம் நாய்குலைத்ததுபோல.
திருடன் பெண்சாதி என்றைக்கும் கைம்பெண்சாதி.
திருடன் வீட்டு விளக்குப்போல் எரிகிறது.
திருடிக்குத் தெய்வமில்லை, சம்சாரிக்கு ஆணையில்லை.
திருடிக்கொடுத்தது மல்லாமல் பைத்தியக்கார பட்டமும் கிடைத்தது.
திருடியும் குங்கிலியம் தேவருக்கே.
6590 திருட்டுக்கு நவமணி.
திருட்டுக்கை நிற்காது.
திருட்டு நாய்க்குச் சலங்கை கட்டினாற் போல.
திருட்டு நெல்லுக்கு மத்தளம் மரக்கால்.
திருட்டுப் பயலுக்குத் திரட்டுப்பாலும் சோறும், விசுவாசக்காரனுக்கு வெந்நீரும் பருக்கையும்.
திருட்டுப்பயலுக்கு புரட்டுக் குருக்கள்.
திருட்டுப்பயல் கலியாணத்தில் முடிச்சு அவிழ்க்கிற பெரியதனம்.
திருட்டுப்புத்தி தலைக்கட்டுமா?
திருட்டுப்பூனைக்குச் சலங்கை கட்டினாற்போல.
திருட்டுப் பூனைக்குப் போடு திரட்டுப்பாலுஞ் சோறும்.

6600 திருட்டுப்பையன் வருகிறான் தவலை செம்பை வெளியில் வையும்.
திருட்டு வாய்த்தால் திருடப்படாதா?
திருத்தியில்லாத யஜமான் வீண்.
திருநாளுக்குப் போகிறாயா என்றால் ஆம் ஆம், திரும்பி வருகிறாயா என்றால் உம் உம்.
திருநாளுக்குப் போகிறையா திண்டிக்குப் போகிறையா?
திருநாளும் முடிந்தது எடுபிடியும் கழிந்தது.
திருநாளைக் கண்கொண்டு பார்க்கக்கூடவில்லை.
திருநீற்றிலே ஒட்டாதது கழற்சிக்காய்.
திருநீற்றுக் கழற் கொடிக்காய் போல.
திருந்த ஓதத் திருவுண்டாமே.
6610 திருப்பங்கூர் வெல்லம் திரட்டிக் கொடுத்தாற்போல.
திருப்பணி செய்யக் கருத்திருந்தால், கருப்படியின் பேரிலே விருப்பிருக்கும்.
திருப்பதிக்குப்போனாலும் துடுப்பு ஒருகாசு.
திருப்பதிச் சொட்டு படிப்படியாக எரித்தது.
திருப்பதியில் அம்பட்டன் க்ஷவரம் செய்வதுபோல.
திருப்பதியில் மொட்டை அடித்ததுபோதாமல் ஸ்ரீரங்கத்தில் சிரிப்பாய்ச் சிரிக்கவந்தான்.
திருப்பதியில் மொட்டைத் அடித்ததும் பற்றாதா, ஸ்ரீரங்கத்தில் சிரிப்பாய்ச் சிரித்ததும் பற்றாதா?
திருப்பதியில் மொட்டைத் தாதனைக் காண்டாயா?
திருவண்ணாமலைக் குடாவுக்கு (குடைக்கு) நிழல் உண்டு பண்ணுகிறதா?
திருவம்பூரே குமரன்கழலே, செங்கீரை ஆடியருளே.
6620 திருவன் கண்ட பச்சையாய்ப் போயிற்று.
திருவாக்குக்கு எதிர்வாக்கு உண்டோ?
திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்.
திருவாசல் ஆண்டியும் ஒருவேளைக்கு உதவுவான்.
திருவாதரப்பட்ட குருக்களே தெண்டம், கரியாய்ப் போகிற சீஷனே கொண்டேன்.
திருவாய்க் கெதிர்வாய் உண்டோ?
திருவாய்த்தான் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்.

திருவாய்த்தான் குதிரை வளர்த்தாற்போல.
திருவாய்த்தான் திருவரங்கப்பொடி விற்றாற்போல.
திருவிளக்கு இட்டாரைத் தெய்வம் அறியும், நெய் வார்த்து உண்டாரை நெஞ்சு அறியும்.
6630 திருவிளக்கு இல்லா வீடுபோல.
திருவிளக்கு இல்லா வீட்டில் பேய் குடியிருக்கும்.
திரைகடலோடியும் திரவியந்தேடு.
தில்லும் பில்லும் திருவாதிரமும்.
திறந்தவீடு கதவுக்குத் திறவுகோல் தேடுவான் ஏன்?
திறந்தவீடு செல்லாத்தாள் கோவில்போலிருக்கிறது.
திறந்த வீட்டிலே நாய் நுழைந்தாற் போல்.
தினம் தவ நிலையில் மனதை நிறுத்து.
தினவு எடுத்தவன் சொறிந்து கொள்ளவேண்டும்.
தினவுக்குச் சொறிதல் இதம்.
6640 தினைப்பயறும் பாலும் தின்னாதிருந்தும், வினைப் பயனை வெல்லுவது அரிது.
தினைவிதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான்.
தின்கிறதைத்தின்றும் தேவாங்குபோல் (தேவாங் காட்டமாய்) இருக்கிறான்.
தின்பது கொஞ்சும் சீவனும் நிலையில்லை.
தின்றசோறு உடம்பிலே ஒட்டவில்லை.
தின்ற நஞ்சு கொல்லும், தின்னாத நஞ்சு கொல்லுமா?
தின்ற மண்ணுக்குத் தக்க சோகை.
தின்றால் அல்லவோ நஞ்சு கொல்லும்?
தின்றால் கொல்லுமோ கண்டாற் கொல்லுமோ விஷம்?
தின்று உமிழ்ந்த தம்பலத்தைத் தின்ன நினைப்பார்களா?
6650 தின்று கொழுத்தால் சும்மா இருக்க வொட்டாது.
தின்று துப்பின தாம்பூலத்தைத் தின்ன நினைப்பார்களா?
தின்றுமிகுந்த பாக்கைத் திரும்பவும் போடுவார்களா?
தின்னத் தவிடில்லை, தங்கச் சரப்பணி தொங்கத் தொங்க ஆடுதாம்.

தின்னத் தின்னக் கேட்குமாம் பிள்ளை பெற்றவயிறு.
தின்னத் தெரியாமல் தின்று, பேலத்தெரியாமல் பேலுகிறது.
தின்னத் தெரியாமல் தின்பானேன்?
தின்னவேண்டாம் உண்ணவேண்டாம் மகளே, மூஞ்சியாவது கழுவிப்போட்டு வைத்துக்கொண்டுபோ.
தின்னா வீட்டில் தின்னி.

## தீ.

தீ இல்லாமல் புகை எழும்பாது.
6660 தீக்காய்ந்தாற்போல் இருக்கவேண்டும்.
தீக்குக் காற்று உதவியானது போல.
தீங்கரும்பனுக்கு மாங்குயிற் கிளவி.
தீட்டின மரத்திலே கூர் பார்க்கிறது.
தீட்டுங்கல்லில் கூர்மை பார்க்கிறது.
தீட்டுத் துடைக்கப்பண்ணும்.
தீண்டா விளக்கைத் தீண்ட வரும் பூச்சி மாண்டாற் போல் மாளுகிறது.
தீதுறும் பாவச்செய்கை அற்றவன் தேவன்.
தீபத்தில் ஏற்றிய தீவட்டி.
தீப்பட்ட வீட்டிலே கரிக்கட்டை பஞ்சமா?
6670 தீப்பட்ட வீட்டிற்குப் பீக்குட்டைத் தண்ணீர்.
தீப்புண் ஆறும் வாய்ப்புண் ஆறாது.
தீமிஞ்ச வைத்தாலும் பகைமிஞ்ச வைக்கலாகாது.
தீமையை மெச்சுகிறவன் தீமையாளிதான்.
தீயாரைச்சேர்ந்து ஒழுகல் தீது, தீயார்பண்செய்வனவும் தீது.
தீயிலிட்ட நெய் திரும்ப வருமா?
தீயும் பயிருக்குப் பேயும் (பெய்யும்) மழை போல.
தீயோரை விடுதலையாக்குகிறவன் நல்லோருக்கு நஷ்டம் செய்வான்.
தீரக் கற்றவன் தேசிகனாவான்.
தீராக் கோபம் பாடாய் (போராய்) முடியும்.
6680 தீராச் செய்கை சீராகாது.
தீராநெஞ்சுக்குத் தெய்வமே சாட்சி.

தீராவழக்குக்குத் தெய்வமே சாட்சி.
தீராவழக்கு நேராகாது.
தீர்க்கதரிசி பீங்கான் திருடி.
தீவட்டிக்காரனுக்குக் கண்தெரியாது.
தீவாள் திடுக்கிடுவாள் திண்ணைக்கு மண்ணிடுவாள், வருகிற கிழமைக்கு வாசலுக்கு மண்ணிடுவாள்.
தீவினை செய்யில் பேய்வினை செய்யும்.
தீவினை முற்றிப் பானை யாச்சுது.

---

## து.

துக்கம் அற்றவனுக்குச் சொக்கட்டான்.
6690 துக்கம் உள்ள மனதில் துன்பம் ஏன் வேறே?
துக்கத்தைச்சொல்லி ஆற்றவேண்டும் கட்டியைக் கீறி ஆற்றவேண்டும்.
துக்கத்தையெல்லாம் விட்டுவிட்டுத் தோட்டிச்சியைக் குத்தகையாக வைத்துக் கொண்டானாம்.
துக்கலூரிலும் கலியாணம் துடியலூரிலும் கலியாணம், நாய் அங்கே யோடியும் கெட்டது இங்கேயோடியும் கெட்டது.
துக்குணிச்சிறுக்கிக்கு முக்கலக் கந்தை.
துக்குணிச் சொக்கன்.
துஞ்சி நின்றால் மிஞ்சி உண்ணான்.
துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு.
துடுப்பு இருக்கக் கை வேவானேன்?
துடைகாலி முண்டை துடைத்துப் போட்டாள்.
6700 துடைகாலி வந்ததும் எல்லாம் தொலைந்து போச்சுது.
துடைப்பக் கட்டைக்குப் பட்டுக்குச்சு கட்டினாற் போல.
துடையிற் புண்ணை நடையிற் காட்டுகிறதா?
துடையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகிறதா?
துட்டுக்கு இரண்டு துக்காணிக்கு மூன்று.
துட்டுக்கு எட்டுச்சட்டி வாங்கி, சட்டி எட்டுத்துட்டுக்கு விற்றாலும் வட்டிக்கு ஈடல்ல.
துட்டுக்கு ஒருகுட்டி, விற்றாலும் துலுக்கக்குட்டி மாத்திரம் ஆகாது.

துட்டுக்கு ஒரு சேலை விற்றாலும் நாய் சூத்து அம்மணம்.
துட்டு வந்து பெட்டியில் விழுந்ததோ, திட்டு வந்து பெட்டியில் விழுந்ததோ?
துஷ்ட நிக்கிரகம் சிஷ்ட பரிபாலனம்.
6710 துஷ்டப் பிள்ளைக்கு ஊரார் புத்தி சொல்லுவார்கள்.
துஷ்டர் நேசம் பிராண நஷ்டம்.
துஷ்டனைக் கண்டால் தூரத்தூர.
துணிந்தவளுக்கு வெட்கமில்லை, அழுதவளுக்கு துக்கமில்லை.
துணிந்தவனுக்குத் துக்கமில்லை, அழுதவனுன்கு ஆங்காரமில்லை.
துணிந்தாருக்குத் துக்கமுண்டா, பணிந்தாருக்குப்பாடு உண்டா?
துணிந்தாருக்குச் சமுத்திரம் முழங்கால் ஆழம்.
துணை போயிரு பொங்கினதைத் தேடு.
துணை போனாலும் பிணை போகாதே.
துணையோ டல்லது வழி போகாதே.
6720 துண்டு பாளையக்காரன் இடை நடுவில் அடிக்கிறது போல.
துப்பட்டியிற் கிழித்த கோவணந் தானே.
துப்பற்ற நாரிக்குக் கொப்பு அழகைப் பார்!
துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்தது போல.
துப்புக்கெட்டவளுக்கு இரட்டைப் பரியம்.
தும்மலிலே போனாலும் தூற்றலிலே போகக்கூடாது.
தும்மினவன் செத்தால் நிம்மளம் அற்றது.
தும்பைவிட்டு (விட்டுவிட்டு) வாலைப் பிடிக்கிறது.
துரியோதனன் குடிக்குச் சகுனிபோல.
துருசு கல்வி, அரிது பழக்கம்.
6730 துரும்பு கிள்ளுவது துர்க்குறித்தனம்.
துருப்பு தூண் ஆனால் தூண் என்ன ஆகாது?
துரும்பு நுழைய இடம் இருந்தால் ஆனையைக் கட்டுவான்.
துரும்பு முற்றின கோபம் விசும்பு முட்டத் தீரும்.
துரும்பும் கலத்தண்ணீர் தேக்கும்.

துரும்பைத் தூணாக்குகிறதா?
துரும்பை வைத்து மூத்திரம் பெய்கிறதா?
துரைகளோடே சொக்கட்டான் போடலாகுமோ?
துரைகளோடே சொக்கட்டான் போட்டால் தோற்றாலும் குட்டு வென்றாலும் குட்டு.
துரை கையில் எலும்பில்லை.
6740 துரை சித்தம் கன சித்தம்.
துரை நல்லவர் பிரம்பு பொல்லாதது.
துரை நாச்சியார் கும்பிடப்போய் புறப்பட்ட ஸ்தன்னியம் உள்ளே போச்சுது.
துரை வீட்டு நாய் நாற்காலிமேல் ஏறினது போல்.
துரோகத்தால் கொண்டை துரைத்தனம், குடிகளை வருத்தும் கொடுங்கோல்.
துரோபதையைத் துகில் (துணி) உரிந்தது போல.
துர்ச்சனனைக் கண்டால் தூரத்தூர நில்
துர்ப்பலத்திலே கர்ப்பிணியானால் எப்படி முக்கிப் பெறுவது?
துர்ப்புத்தி மந்திரியால் அரசுக்கீனம், சொற்கேளாப் பிள்ளைகளால் குலத்துக்கீனம்.
துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்.
6750 துலாத்தில் வெள்ளி உலாத்தில் பெய்யும் மழை.
துலுக்கக்குடியில் ஏது பேயாட்டம்?
துலுக்கத் தெருவிலே திருவெண்பா (தேவாரம்) ஓதினது போல.
துலுக்கனுக்கேன் துறட்டுக் கடுக்கன்?
துவி நாக்கு இடறும்.
துவைத்துத் தோள்மேற் போட்டுக் கொண்டான்.
துழாவிக் காய்ச்சாதது கஞ்சியுமல்ல, வினாவிக் கட்டாதது கலியாணமும் அல்ல.
துளசிக்கு வாசமும் முள்ளுக்குக் கூர்மையும் முளைக்கிற போதே தெரியும் (உண்டு).
துள்ளாதே துள்ளாதே ஆட்டுக்குட்டி, என் கையில் இருக்கிறது சூரிக்கத்தி.
துள்ளாதே துள்ளாதே குள்ளா, பக்கத்தில் பள்ளம் அடா.

6760 துள்ளித்துள்ளிக் குதித்தாலும் வெள்ளிப்பணமும் கிடையாக்காலத்தில் கிடையாது.

துள்ளித்துள்ளித் தொப்பென்று விழுகிறாய்.

துள்ளுகிற மாடு பொதிசுமக்குமா? (சுமக்கும்.)

துள்ளுமான் துள்ளித் துரவில் விழுந்தது.

துறக்கத்துறக்க ஆனந்தம் துறந்த பின்பு பேரின்பம்.

துறட்டுக்கு எட்டாதது வாய்க்கு எட்டுமா?

துறவறம் இல்லறம் மனதிலே.

துறவிக்கு வேந்தன் துரும்பு.

துற்றி சமுத்திரம் பொங்கினால் கொள்ளுமாங்கிணறு அநேகம்.

துன்பத்திற்கு இடங்கொடேல்

6770 துன்பம் தருகிற காக்கையினது சத்தத்தினால் அதை விரட்டுவார்கள், இன்பம் தருகிற குயிலை விரட்டார்கள்.

துன்பம் முந்தி இன்பம் பிந்தி.

---

## தூ.

தூக்கணாங் குருவி குரங்கிற்குப் புத்தி சொன்னது போல.

தூக்கி ஏறவிட்டு ஏணியை வாங்கும் தூர்த்தர் சொல்லைக் கேளாதே.

தூக்கி நினைத்து நோக்கிப் பேசு.

தூக்கி நிறுத்தடா பிணக்காடாய் வெட்டுகிறேன்.

தூக்கிப போட்டதுமல்லாமல் குதிரை தோண்டிக் குழிபறித்ததாம்.

தூக்கி வளர்த்த பிள்ளையும் துடையில் வைத்துத் தைத்த இலையும் உருப்படாது.

தூக்கிவமனசெய்.

தூக்கினால் சென்னி துடிக்கத் துணித்துவிடு, மாக்கினால் சக்கரம்போலணை.

6780 தூக்கு உண்டானால் நோக்கு உண்டு.

தூங்காதவனுக்குச் சுகம் இல்லை.

தூங்காதவனே நீங்காதவன்.

தூங்கினவனது கடாக்குட்டி, விழித்திருந்தவனது ஊட்டுக்குட்டி.

தூங்கினவன் கண் கடாக்கண்.
தூங்கினவன் கன்று சேங்கன்று.
தூங்கினவன் சாகிறதில்லை, வீங்கினவன் பிழைக்கிறதில்லை.
தூங்குகிற நரிக்கு இரை கிடையாது.
தூங்குகிற புலியைத் தட்டி எழுப்பினதுபோல.
தூங்குகிற புலியைத் தட்டி எழுப்புவானேன்?
6790 தூங்குகிற வரிக்காரனை எழுப்பிவிட்டால் போனவருஷத்தீர்வையும் கொடுத்துவிட்டுப் போவென்பான்.
தூங்குகிறவனைத்தட்டி எழுப்பி அத்தாளம் இல்லையென்று சொன்னதுபோல.
தூங்குகிறவன் சூத்திலே கப்பலெடுத்துக் குத்தினாற்போல.
தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்.
தூண்டா விளக்குப்போல.
தூண்டிலில் அகப்பட்ட மீன் துள்ளி நத்தினால் விடுவார்களா?
தூண்டிலைப்போட்டு வராலை இழுக்கிறது.
தூண்டில் நுனிமச்சத்துக்கு ஆசைப்பட்டு மீன் உயிரை இழப்பதுபோல.
தூண்டில் போட்டவனுக்குத் தக்கைமேற் கண்.
தூண்டிற்காரனுக்கு மிதப்பு மேலே கண்.
6800 தூண்டின விரல் சுவர்க்கம் பெறும்.
தூத்துக்குடிச் சந்தையிலே துட்டுக்கொரு பெண்டாட்டி.
தூமத்தீயைப் பார்க்கிலும் காமத்தீ கொடிது.
தூமை துடைக்கப்பண்ணும்.
தூ இருந்தால் சேர உறவு.
தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்கு உதவாது.
தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி.
தூரத்துப் பச்சை பார்வைக்கு இச்சை.
தூரத்துப் பார்வைக்கு மலை மழமழப்பு, கிட்டப்போனால் கல்லும் கரடும்.
தூரப்போக வேண்டுமா, கீரைப் பாத்தியிற் கை வைக்க?

6810 தூரப்போய்க் கீரைப்பாத்தியிற் பேண்டானாம்.
தூர்த்தர் என்போர் சொல் எழுத்துணரார். [கேடு.
தூர்த்தர் (தூற்றர்) சொல்லைக்கேட்டால் வாய்த்திடும்
தூர்ந்த கிணற்றைத் தூர்வாராதே.
தூறான குடி நீறாகும்.
தூற்றல் நின்றாலும் தூவானம் நில்லாது.
தூற்றித்திரியேல்.
தூற்றும் பெண்டீர் கூற்றெனத்தகும்.

---

## தெ.

தெட்டிப் பறிப்பாரை எட்டிடத்தில் (எத்திப்) பறிக்கிறது.
தெண்டச் சோற்றுக்காரா குண்டுபோட்டுவாடா.
6820 தெண்டத்துக்கு அகப்படும் பிண்டத்துக்கு அகப்படாது.
தெண்டத்துக்குப் பணமும் திவசத்துக்குக் கறியும் அகப்படும்.
தெய்வச்செயல் இருந்தால் செத்தவனும் எழும்புவான்.
தெய்வப்புலவனுக்கு நா உணரும், சித்திர ஓடாவிக்குக் கை உணரும்.
தெய்வமில்லாதேயா பொழுதுபோகிறதும் பொழுது விடிகிறதும்?
தெய்வமில்லாமையினாலேயா பொழுது விடிகிறது?
தெய்வமே துணை.
தெய்வ வணக்கமே நரக வாசலை அடைக்கும் தாழ்.
தெய்வம் காட்டுமேதவிர ஊட்டாது.
தெய்வம் காட்டும், ஊட்டுமா?
6830 தெய்வம் துணைக்கொள் தேகம் அநித்தியம்.
தெய்வம் பண்ணின திருக்கூத்து.
தெரியாத்தினையே பிரியாத்துணை நீ.
தெருச்சண்டை கண்ணுக்கு இன்பம் (குளுத்தி).
தெருளா மனதுக்கு இருளே இல்லை.
தெவிட்டாக்கனி பிள்ளை, தெவிட்டாப்பானம் தண்ணீர்.

தெளிந்த தண்ணீர் நீர் குடித்தீர் சேற்றைக் கலக்கிவிட்டீர்.
தெளிவுறும் பரதேவ தேசிகன்.
தெள்ளிய திருமணி திருட்டுக்கு நவமணி.
தெறிக்க அடித்த தட்டானைப்போல.
6640 தெற்கத்தைக் குருவியை வடக்கத்தைக்குருவி தெற்றி அழைத்ததாம் சீகம்பழம் தின்னப்போக.
தெற்கே அடித்த காற்றுத் திரும்பி அடியாதா?
தென்காசி ஆசாரம் திருநெல்வேலி உபசாரம்.
தென்றலடிக்கிற காற்றே என் இறுக்கத்தை ஆற்றே.
தென்றல்முற்றிப் பெருங்காற்றாகும்.
தென்னங் குரும்பை திருக்குரும்பை பன்னாடையெல்லாம் ஒரு மரத்துக்காய்.
தென்னமரத்திலே தேள்கொட்டப் பனைமரத்திலே நெறி கட்டினது போல.
தென்னமரத்தில் ஏண்டா ஏறினாய், கன்றுக்குடடிக்குப் புல்பிடுங்க, தென்னமரத்தில் புல் ஏதடா, அதுதான் கீழே இறங்குகிறேன்.
தென்னமரத்தில் ஏண்டா ஏறினாய், கன்றுக்குப் புல் பிடுங்க ஏறினேன்.
தென்னமரத்திற் பாதி என்னை வளர்த்தாள் பாவி.
6850 தென்னமரத்திற்குத் தண்ணீர்வார்த்தால் தலையாலே தரும்.
தென்னாலிராமன் பூனை (குதிரை) வளர்த்ததுபோல.

## தே.

தேங்காய் உடைத்தாற்போலப் பேசுகிறான்.
தேங்காய்க்கு மூன்றுகண், எனக்கு ஒருகண்.
தேங்காய் தின்றவன் தின்னக்கோம்பை சூப்பினவன் தெண்டம் இறுக்கிறதா?
தேசங்கள் தோறும் பாஷைகள்வேறு.
தேசத்து நன்மை தீமை அரசர்க்கில்லையா?
தேடக்கிடையாது தேடவென்றால் கிட்டாது, திருப்பிக்கொடப்பா திருப்பிக்கொடு.
தேடப்போன மருந்து காலில் அகப்பட்டது (தட்டினது) போல.
தேடாதழிக்கிற் பாடாய் முடியும்.

6860 தேடித் திருவிளக்கு வை.
தேடித்தின்றவர் தெய்வத்தோ டொத்தவர்.
தேடிப்புதைத்துத் தெருவில் இருக்கிறதா?
தேடிய பூண்டு காலிலே சிக்கினாற்போல.
தேடிய பொருள் காலிலே தட்டினதுபோல.
தேடுவார் அற்ற பிணம் தெருவோடே.
தேம்படுபனையின் திரள் பழத் தொருவிதை.
தேய்ந்த அம்மாள் தெய்வயானை தெய்வத்துக் கிட்டாலும் ஏறாது.
தேய்ந்தாய், மாய்ந்தாய், கொம்புங் கறுத்தாய், தும்பிக்கையையும் உள்ளே இழுத்துக் (சுருக்கிக்) கொண்டாயா?
தேய்ந்தாலும் சந்தனக்கட்டை மணம்போகாது
6870 தேய்ந்து மாய்ந்துபோகிறானே.
தேய்ந்து மூஞ்சுறாய்ப் போகிறது.
தேராச் செய்கை தீராச் சஞ்சலம்.
தேருக்குள்ள சிங்காரமெல்லாம் கிடக்கிறது.
தேரைகள் பாம்பைத் திரண்டு வளைத்தாற்போல.
தேரை மோந்த தேங்காய்போல.
தேரைவால்போல சுத்தசூனிய மாச்சுது.
தேரோடே நின்று தெருவோடே அலைகிறான்.
தேரோடே போச்சுது திருநாள், தாயோடே போச்சுது பிறந்தகம்.
தேர் இருக்கிற மட்டும் சிங்காரம் தேர் போனபிறகு என்ன?
6880 தேர் ஓண்டித் தெருவிலே அலைய விட்டாயே.
தேர் ஓடித் தன் நிலையில் நிற்கும்.
தேர்ந்தவன் என்பது கூர்ந்து அறிவதனால்.
தேவடியாள் இருந்து ஆத்தாள் செத்தால் கொட்டு முழக்கும், தேவடியாள் செத்தால் ஒன்றுமில்லை.
தேவடியாள் சிங்காரிக்கு முன்னே தேர் ஓடி த்தெருவில் நின்றது.
தேவடியாள் சிங்காரிக்கு முன்னே தேர் ஓடி நிலயத்திற்கு வந்துவிடும்.
தேவடியாள் செத்தால் பிணம், தேவடியாள் தாய் செத்தால் மணம்.

தேவடியாள் தெரு கொள்ளை போகிறதா?
தேவடியாள் மகன் திவசம் செய்ததுபோல.
தேவடியாள் பீ எடுத்தாள் (தின்றாற்) போல.
6890 தேவடியாள் வீடு கொள்ளை போவது போல.
தேவடியாள் வீட்டிற் பிள்ளை பிறந்தது போல.
தேவரீர் சித்தம் என் பாக்கியம்.
தேவரைக் காட்டிப் பூதம் பணிகொள்ளும்.
தேவர் உடைமை (சொம்மு) தேவருக்கே.
தேவர்கள் பணிவிடை செய்யு மேலவன் கர்த்தா.
தேளுக்குக் கொடுக்கிலே விஷம், தேவடியாளுக்கு உடம்பெங்கும் விஷம்.
தேளுக்கு மணியம் கொடுத்தால் ஜாமஜாமத்துக்கு (பொழுது விடிகிறமட்டும், நிமிஷத்துக்கு நிமிஷம்) கொட்டும்.
தேள் கொட்டப் பாம்புக்கு மந்திரிக்கிறதா?
6900 தேள் நெருப்பில் விழுந்தால் எடுத்து விட்டவனைக் கொட்டும்.
தேற்றிக் கழுத்தறுக்கிறது.
தேனில் விழுந்த ஈப்போல் அலைகிறான் (தவிக்கிறான்).
தேனுக்கு ஈயைத் தேடி விடுவார் ஆர்?
தேனுக்கு ஈயைப் பிடித்து விடவேண்டுமா?
தேனும் தினைமாவும் தேவருக்கு அர்ப்பிதம்.
தேனும் பாலும் போல் இருந்து கழுத்தை அறுத்தான்.
தேனே போலும் செந்தமிழ்க் கல்வி.
தேனைத் தொட்டையோ நீரைத் தொட்டையோ?
தேனை வழிக்கிறவன் புறங்கையை நக்கமாட்டானா?
6910 தேனைவழித்தவன் புறங்கையை நக்கானா?
தேன் உண்டானால் ஈ தேடிவரும்.
தேன் உள்ள இடத்தில் ஈ மொய்க்கும்.
தேன் எடுத்தவரைத் தெண்டிக்குமா தேனீ?
தேன் எடுத்தவனுக்கு ஒரு சொட்டு, மாமன்மனையில் இருந்தவனுக்கு ஒரு சொட்டு.

தேன் ஒழுகப் பேசித் தெருகடக்க வழி விடுவான்.
தேன் ஒழுகப் பேசித் தெருவழியே விடுகிறது.
தேன் ஒழுகப் பேசுவான்.
தேன்கூட்டிலே கல்லைவிட் டெறியலாமா?
தேன் தொட்டார் கை நக்காரோ?
6920 தேன் வார்த்து வளர்த்தாலும் காஞ்சிரம் தெங்காகுமோ?

## தை.

தை ஈனாப் புல்லும் இல்லை, மாசி ஈனா மரமும் இல்லை.
தைத்த வாயிலும் இருக்க தாணித்த வாயிலும் இருக்க எங்காலே போனீர் உப்பனாரே.
தை பிறந்தால் வழிபிறக்கும்.
தைப்புக்குத் தைப்பு மரம் பிடித்தாற் போல்
தை மழை நெய் மழை.
தையலும் இல்லான் மையலும் இல்லான்.
தையல் சொற் கேட்டால் எய்திடும் கேடு.
தையல் சொற்கேளேல்.
தையும் மாசியும் வையகத்துறங்கு.
6930 தைரிய லக்ஷ்மி தன லக்ஷ்மி.

## தொ.

தொங்குகிறது குட்டிச் சுவர், கனாக்காண்கிறது மச்சு மாளிகை.
தொட்டவன் பேரில் பழி, அப்பனைப்போட்டு வலி
தொட்டால் தோழன் விட்டால் மாற்றான்.
தொட்டால் பிடித்துக் கொள்ள வேண்டியது தான்.
தொட்டியப்பேய் சுடுகாடுமட்டும்.
தொட்டிலிற் பிள்ளைக்கு நடக்கிற பிள்ளை நமன்.
தொட்டிலும் ஆட்டிப் பிள்ளையும் கிள்ளுவான்.
தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் (சொட்டுப் போட்டாலும்) வராது.
6940 தொட்டுக்கோ (தொட்டுக் கொள்) துடைத்துக்கோ என்றிருக்கிறது.

தொட்டுப் பார்த்தால் தோட்டியும் உறவு.
தொட்டெடுத்த பணத்தைத் தட்டிப்பறித்தாற்போல.
தொண்டர்கள் அன்பன் துணைக்கு நிற்பவன்.
தொண்டெனப்படேல்.
தொண்டையிலே கண்டமாலை புறப்பட.
தொண்டையிலே தூறு முளைக்க.
தொண்டையைக் கிழித்துக்கொண்டு பேசுகிறான்.
தொண்ணூ கடனோடே துவரம்பருப்பு காற்பணம்.
தொண்ணூறு பொன்னோடே துவரம்பருப்பு காற்பணம்
6950 தொத்துக்குத் தொத்து சாட்சி துவரம்பருப்புக்கு மத்தே சாட்சி.
தொப்புள் அறுக்கப் போய் மாணியை அறுத்துக் கொண்டானாம்.
தொப்புள் அறுத்த கத்தி என்னிடத்தில் இருக்கிறது.
தொம்பைக் கூண்டிலே எலியைக் காவல் வைத்துக் கட்டினதுபோல.
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
தொழுவம் புகுந்த ஆடு புழுக்கை இடாமற்போமா?
தொன்மை நாடி நன்மைவிடாதே.
தொன்மை மறவேல்.
தொன்னிலம் முழுதும் தோன்றிய கல்வி.

---

## *தோ.*

தோகை அழகைத் தொட்டுப் பொட்டிட்டுக் கொள்ளலாம்.
6960 தோசிப்பெண்ணுக்கேற்ற சொறியாங் கொள்ளி மாப் பிள்ளை.
தோட்டக்காரன் வாழ்வு காற்றடித்தால் போச்சுது.
தோட்டத்தில் அந்தம்.
தோட்டத்தில் பழமிருக்கத் தூரப்போவானேன்?
தோட்டத்து நரி கூட்டத்தில் வருமா?
தோட்டப்பாய் முடைகிறவனுக்குத் துங்கப்பாயில்லை.
தோட்டம் நிலைத்தல்லவோ தென்னம்பிள்ளை வைக்க வேண்டும்?

தோட்டம் முச்சாண் சுரைக்காய் அறுசாண்.
தோட்டிபோல் உழைத்து துரைபோலச் சாப்பிட வேண்டும்.
தோணிபோகும் துறைகிடக்கும்.
6970 தோண்டக் குறுணி தூர்க்க முக்குறுணி.
தோண்டிக்கள்ளைத் தொடர்ந்து குடித்தால் பாண்டியன் மகனும் பறையனாவான்.
தோரணிகெட்டால் கோரணி.
தோல் இருக்கச் சுளை விழுங்கி.
தோழனாவது துலங்கிய கல்வி.
தோழமையோடும் ஏழைமை பேசேல்.
தோளில் இருந்து செவியைக் கடிக்கிறதா?
தோளின்பேரில் தொண்ணூறு அடி அடித்தாலும் துடைத்துப் போடுவான்.
தோற்பதுகொண்டு சபை ஏறுகிறதா?
தோற்றினயாவும் தோற்ற மற்றொழியும்.
6980 தோன்றி யாவும் அழியும்.

## தௌ.

தௌவித்திரியேல்.
தௌவையின் மனதுக்கு ஒவ்வுதல் இல்லை.

## ந.

நகத்தாலே கிள்ளுகிறதைக் கோடரிகொண்டு வெட்டுகிறான். [ நேரிடும்.
நகத்தாற் கிள்ளாததைக் கோடரிகொண்டு வெட்ட
நகமும் சதையும்போல வாழ்கிறான்.
நகரத்துக்கு இரண்டாவனாக இருப்பதிலும் நாட்டுப் புறத்துக்குத் தலைவனாயிருப்பதே நன்று.
நகரைக்குப் பெத்தை வழிகாட்டுகிறதோ?
நகைக்கு மகிழ்ச்சி நட்புக்கு நஞ்சு.
நகைச்சொல் தருதல் பகைக்கு ஏதுவாம்.
6990 நகைத்து இகழ்வோனை நாயென நினை.
நகைபோட்டதுமில்லை, போட்டவர்களைப் பார்த்தது மில்லை.

நக்கத் தவிடுமில்லை குடிக்கத் தண்ணீருமில்லை.
நக்கவார கச்சவடம்போல.
நக்குகிற நாய்க்குச் செக்கு என்றும் சிவலிங்கம் என்றும் தெரியுமா?
நக்குகிற பொழுது நாவு எழும்புமா?
நக்கு உண்டார் நாவெழார்.
நச்சுமரமானாலும் நட்டவர்கள் வெட்டுவார்களா?
நச்சுமரமானாலும் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான் (வார்ப்பான்).
நச்சுவாயன் வீட்டிலே நாறுவாயன் குடியிருந்தாற் போல.
7000 நச்சுவாயன் வீட்டிலே நாறுவாயன் பெண் கொண்டது போல.
நஞ்சுக்குள் இருந்தாலும் நாகமணி, குப்பைக்குள் இருந்தாலும் குன்றிமணி.
நஞ்சு நாற்கலம் வேண்டுமா?
நடக்க அறியாதவனுக்கு நடுவீதி காதவழி.
நடக்கமாட்டாத லவாடிக்கு நாலு பக்கமும் சவாரி.
நடக்கிறது நடக்கட்டும் தெய்வம் இருக்கிறது.
நடக்கும் கால் தவறுவதிலும் நா (நாக்கு) தவறுதல் கெட்டது.
நடக்கிறபிள்ளை தவறுகிறது (தவழுகிறது) தாயார் செய்த தர்மம் (புண்ணியம்).
நடந்த காலிலே சீதேவி, இருந்த காலிலே மூதேவி.
நடந்தபிள்ளை நகருகிறது.
7010 நடந்தால் நாடெல்லாம் உறவு, படுத்தால் பாயும்பகை.
நடபடி உண்டானால் மிதியடி பொன்னாலே.
நடவாத காரியத்தில் பிடிவாதம் பிடிக்கிறது.
நடவுக்குத் தெளி நாலத்தொன்று (நாலிலொன்று).
நடு உழவிலே நத்தை தெறித்தாற் போல.
நடு ஊரில் நச்சுமரம் பழுத்து என்ன?
நடுக்கடற் போனாலும் மறுப்படாமல் வரக்கடவீர்.
நடுச்செவியில் நாராசம் காய்ச்சி விட்டாற்போல.
நடுத்தரமானவருடைய தாங்கல் பொன்னின் பிளவு போலப் பற்றவைத்தால் மாறும்.
நடுத்தெரு நாராயணன்.

7020 நடுத்தெருப் பிச்சைக்கு நாணயம் பார்க்கலாமா?
நடுப்படையிலே போனாலும் வடுப்படாமல் வருகிறது.
நடை சிறிதாகில் நாள் ஏறும், படை சிறிதாகில் பயம் ஏறும்.
நஷ்டத்துக்கு ஒருவன் நயத்துக்கு ஒருவன்.
நஷ்டத்துக்குப் பலர் நயத்துக்கு ஒருவனோ?
நட்டாற்றிலே கைவிட்டாற்போல.
நட்டாற்றுக் கோரையைப்போல.
நட்டுவன் பிள்ளைக்குக் கொட்டிக் காட்ட வேண்டுமா?
நட்டுவன் பிள்ளைக்கு நாட்டியம் கற்றுக் கொடுக்க வேண்டுமா?
நட்டுவன் பிள்ளைக்கு முட்டடிக்கத் தெரியாதா?
7030 நண்டு கால் விரித்தாற்போல.
நண்டு கொழுத்தால் வளையில் இராது, தண்டு கொழுத்தால் தரையில் இராது.
நண்டு கொழுத்தால் வளையில் இராது, பள்ளி கொழுத்தால் பாயில் இரான்.
நண்டுக்குடுவையை நடுத்தெருவில் உடைத்தாற்போல.
நண்டுக்குப் புளியங்காய் இட்டு நறுக்கினாற்போல.
நண்டும் குடுவையும் நடுத்தெருவில் உடைந்ததுபோல.
நண்டைக் கொடுக்கு ஒடித்தாற்போல.
நண்டைச்சுட்டு நரியைக் காவல் வைத்தாற்போல.
நண்டை நாழிகொண்டு அளக்கலாமா?
7040 நண்பொருள் கொடுத்து நன்றாய் ஓது.
நதிமூலத்தையும் ரிஷிமூலத்தையும் விசாரிக்கப்படாது.
நத்த வாழையிலே நித்தம் காற்பணம்.
நத்தைவயிற்றிலே முத்து பிறக்கிறது.
நத்தைவயிற்றில் முத்து பிறந்தாற்போல்.
நந்தன் தோல்காசு வழங்கினாற்போல்.
நந்தன் படவெடும் நாயடுத்த அம்பலமுமாய்.
நந்தோ ராஜா பவிஷ்யதி.
நபாபத்தனை ஏழை புலியத்தனை சாது.
நபுஞ்சகன் கையில் அரம்பை அகப்பட்டதுபோல்.

7050 நமக்காகாதது நஞ்சோடொக்கும்.
நமது தலைமயிர் அவன்கையில் அகப்பட்டுக்கொண்டது.
நமனுக்கு நாலு பிள்ளை கொடுத்தாலும் உற்றாருக்கு ஒருபிள்ளை கொடுக்கமாட்டான்.
நமன் அறியாத உயிரும் நாரை அறியாத குளமும் உண்டோ?
நமன் அறியாமல் உயிர் போய்விடுமா?
நமன் எடுத்துக்கொண்டு போகும்பொழுது நழுவி விழுந்தவன்.
நமன் வாயிலே மண்போட்டாயா?
நம்பமாட்டாதவன் பெண்சாதிக்கு நாற்பதுபேர் மாப்பிள்ளைமார்.
நம்பவைத்துக் கழுத்தறுக்கலாமா?
நம்பியான்விட்டதே தீர்த்தம்.
7060 நம்பினபேரை உண்மையிற் காத்தான்.
நம்பினபேரை நட்டாற்றில் கைவிடலாமா?
நம்பினபேரை நாட்டில் விடலாமா?
நம்பினோர் கெடார், நாடினோர் வாடார்.
நம்மைச் செருப்பாலடித்தாலும் நமதண்ணன் வீட்டுப் பயலை வாடாபோடா என்னலாமா?
நம்மை நம்பவேண்டாம் அம்மாளைத் தாலிவாங்கச் சொல்லு.
நம்வீட்டுவிளக்கென்று முத்தமிட்டுக்கொள்ளுகிறதா?
நயமொழியால் ஐயமுண்டு.
நயமொழியினால் ஜயமுண்டு.
நராபோகம் சராபோகம்.
7070 நரி ஊரைவிட்டுப் புலி ஊருக்குப் போனேன், புலி ஊரும் நரி ஊர் ஆயிற்று.
நரி எதிர்த்தால் சிங்கம்.
நரி ஒரு சாலுக்கு உழப்போனது.
நரி கலியாணத்தில் வெயிலோடு மழை.
நரி கலியாணத்துக்கு நண்டு பிராமணார்த்தம்.
நரிக்குக் கலியாணம் நண்டுக்குப் பிராமணார்த்தம்.
நரி கிணற்றிலே விழுந்தால் தண்டெடு தடி எடு.
நரி குசுவிட்டதாம் கடல் கலங்கிற்றாம்.

நரி கூப்பிடு கடல் ஒதுங்கிப்போகும்.
நரி கூப்பிட்டுக் கடல் முட்டுமா?
7080 நரி கொழுத்தால் வளையில் இராது.
நரி கொழுத்தென்ன, காஞ்சிரம் பழுத்தென்ன?
நரிக்கு இடங்கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு பிடிக்கும்.
நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்.
நரிக்குட்டிக்கு ஊளை பழக்கவேண்டுமா?
நரிக்குப் பெரியதனம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்.
நரி நாலுகால் திருடன், இடையன் இரண்டுகால் திருடன்.
நரிமுன்னே நண்டு கரணம் போட்டதுபோல.
நரியிடத்திலே போகிறதெப்படி, வலத்திலே போகிற தெப்படி, மேலேவிழுந்து கடிக்காமல் போகிறது உத்தமம்.
நரியின் கையிலே குடல் கழுவக் கொடுத்தாற்போல.
7090 நரியை ஏய்க்கப்பார்க்குதாம் தில்லை நண்டு.
நரியை வெள்ளரிக்காய் மிரட்டினாற்போல.
நரிவாயிலே மண் போட்டாயா?
நரிவாலைக் கொண்டு கடல் ஆழம் பார்க்கிறது போல.
நரைதிரை இல்லை, நமனும் அங்கில்லை.
நரைத்த மயிர் கறுத்து நங்கை நாச்சியார் கொண்டை முடிப்பாளாம்.
நரைத்தவனெல்லாம் கிழவனா?
நல் இணக்கமல்லது அல்லற் படுத்தும்.
நல் இனத்தில் நட்பு வலிது.
நல் உடலுக்கு இளைப்பாற்றிக் கொடாவிடிலும் நாவிற்குக் கொடு.
7100 நல்ல அமைச்சு இல்லாத அரசு விழியின்றி வழிச் செல்வோன் போலாம்.
நல்ல இளங் கன்றே துள்ளாதே.
நல்ல உயிர் நாற்பது நாள் இருக்கும்.
நல்ல எழுத்து நடுவே இருக்கக் கோணல் எழுத்துக் குறுக்கே போட்டது என்ன? (குறுக்கே வந்தது)
நல்ல கதை நீள மில்லை.

நல்ல குடிக்கு நாலத்தொரு பங்காளி.
நல்லது கெட்டால் நாய்க்கும் வழங்காது.
நல்லதுக்கா நாய்மேல் சன்னதம் வந்தது?
நல்லதுக்கு ஒரு பொல்லாதது, பொல்லாததுக்கு ஒரு நல்லது.
நல்லது செய்து நடு வழியே போனால், பொல்லாதது போகிற வழியே போகிறது.
7110 நல்லது தெரியுமா நாய்க்கு?
நல்லது நாற் கலம், ஊத்தை ஒன்பது (பதின்) கலம்.
நல்லதும் பொல்லாதும் நாக்கிலே.
நல்ல நாய்ச்சியார் கடைந்த மோர் நாழி முத்துக்கு நாழிமோர்.
நல்ல நாளிலே நாழிப்பால் கறவாத மாடா ஆகாத நாளிலே அரைப்படி கறக்கும்?
நல்ல நாளிலே நாழிப்பால் கறவாததா கோடை நாளிலே குறுணிப்பால் கறக்கும்.
நல்ல நாளையில் நாழிப்பால் கறவாதது கன்று செத்துக் கலப்பால் கறக்குமா?
நல்ல நினைவை அனுசரித்தலே கெட்ட நினைவை நீக்கல்.
நல்ல பாம்பு ஆடியது கண்டு நாகப்பூச்சி ஆடியது போல.
நல்ல பாம்பை ஆட்டுகிற பிடாரன் நாகப்பாம்பைக் கண்டு பயப்படுவானா?
7120 நல்ல பெண்டுக்கு ஒரு சொல் நல்ல மாட்டுக்கு ஒரு அடி.
நல்லமரத்தில் புல்லுருவி பாய்ந்தாற்போல.
நல்லமரம் நச்சுக்கனியைத் தராது, நச்சுமரத்திலே நல்ல கனியும் வராது.
நல்லமனைவி நல்லதைக் கண்டால் நமது புருஷனுக்கு என்பாள்.
நல்ல மாடானால் உள்ளூரில் விலையாகாதா?
நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நற் பெண்டாட்டிக்கு ஒரு சொல்.
நல்லவர் கண்ணில் நாகம் அகப்பட்டாலும்கொல்லார்.
நல்லவர்கள் ஒரு நாள் செய்த உபகாரத்தை மறவார்.

நல்லவர்கள் சங்காத்தம் நல்ல மணலில் விழுந்த நீர் போல உதவும்.
நல்லவனுக்கு அடையாளம் சொல்லாமற் (சொல்லாமற் பறையாமல்) போகிறது.
7130 நல்லவன் உறவை நாலு பணங்கொடுத்துச் சம்பாதிக்க வேண்டும்; கெட்டவன் உறவைப் பத்துப் பணங் கொடுத்து நீக்கவேண்டும்.
நல்லவன் என்று பெயர் எடுக்க நாட் செல்லும்.
நல்லவன் ஒருத்தன் நடுவே நிற்க அறாத வழக்கும் அற்றுப்போகும்.
நல்லவன் ஒருநாள் நடுவே நின்றால் அறாத வழக்கும் அறும்.
நல்ல வார்த்தை சொல்லி நாடியைத் தாங்கினான்.
நல்ல வீடென்று பிச்சைக்குவந்தேன் கரியை வழித்துக் கன்னத்தில் தடவினார்கள்.
நல்ல வேலைக்காரன் ஆற்றோடே போகிறான்.
நல்லறம் உள்ளது இல்லறம்.
நல்லாயிருந்தது தாதரே பல்லையிளித்துக் கொண்டாடினது.
நல்லாரும் நல்ல பாம்பைப்போலத் தங்கள் வலிமையை அடக்கி மறைந்திருப்பார் சிலவேளை.
7140 நல்லாரைக்கண்டால் நாய்போல, பொல்லாரைக்கண்டால் பூனைபோல.
நல்லாரை நாவிலுரை பொன்னைக்கல்லி லுரை.
நல்லார் ஒருவர்க்குப்பெய்யும் மழை எல்லாருக்கும் ஆம்.
நல்லோர்க்குப் பொறுமையே துணை.
நல்லோர் நடக்கை தீயோர்க்குத் திகில்.
நல்லோன் எனவளர், நாட்கள பாரேல்.
நவாபத்தனை ஏழை, புலியத்தனை சாது.
நறுவிலிப்பழம் திருத்தினாற்போல.
நற்குணமே நல்ல ஆஸ்தி.
நற்சிங்கத்துக்கு நாயா முடி சூட்டுகிறது?
7150 நற்பெண்டாட்டிக்கு ஒருசொல்.
நற்பெண்டீர் நல்லதைக்கண்டால் நமது நாயகனுக்கு என்பார்.

நனைத்துச் சுமக்கலாமா (சுமக்கிறதா)?
நனைந்த கிழவன் வந்தால் உலர்ந்த விறகுக்குச்சேதம்.
நன்மை கடைப்பிடி.
நன்மைசெய்தார் நன்மை பெறுவார், தீமைசெய்தார் தீமை பெறுவார்.
நன்மை செய்திடில் நாலிடையூறும் வரும்.
நன்மை செய்யக் கர்மம் விளையாது.
நன்மையானதைக் கொடுத்தால் நஷ்டத்திலும் நஷ்டம்.
நன்மையும் தீமையும் இம்மையிலே.
7160 நன்மையைப் பெருக்கித் தீமையைக்குறைத்தல் நற்சினேகம்.
நன்றாயிருந்ததாம் நல்லிசுட்ட பணிகாரம்.
நன்றாயிருந்தாலும் பார்க்கமாட்டார்கள், கெட்டாலும் தாங்கமாட்டார்கள்.
நன்றாயிருந்தாலும் பார்க்கமாட்டார்கள், நலம் தப்பினாலும் பார்க்கமாட்டார்கள்.
நன்றாய் முடிவதெல்லாம் நன்றே.
நன்றிசெய்த கீரிப்பிள்ளையைக் கொன்ற கதைபோல.
நன்றி மறந்தாரை நடுங்கக்கேட்குமே தெய்வம்.
நன்றிமறவேல்.

---

## நா.

நா அசைய நாடு அசையும்.
நா (ந) என்னும் அக்ஷரம் நாதன் இருப்பிடம்.
7170 நாகசுரம் என்ன தெரியாதா மத்தளம்போல கலகல என்னும்.
நாகசுரம்பொய் நாசனம்பொய் நாயினமாகினேனே.
நாகூர் உபசாரமாயிருக்கிறது.
நாக்காலே போட்டமுடி பல்லால்கடித்து இழுத்தாலும் வருமா?
நாக்கிலே இருக்கிறது நன்மையும் தீமையும்.
நாக்குக்கு எலும்பில்லை, எப்படிப்புரட்டினாலும் அப்படிப்புரளும்.
நாக்குப்புரட்டர் போக்குப் புகல்வர்.

நாக்கை விற்று ஆக்கித்தின்கிறது.
நாங்களும் கங்கணம் கட்டினதுண்டு, கழுத்துக்குக் கங்கணம் கட்டினதில்லை.
நாச்சியாரும் ஒன்றைப்பற்றி வார்க்கிறாள், நானும் ஒன்றைப்பற்றிக் குடிக்கிறேன்.
7180 நாச்சியாரைக் காணாத இடத்திலே முறுமுறுப்பது போல.
நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் ஏன், பிற்குடுமி என்னத்துக்கு?
நாடறிந்த பார்ப்பானுக்குத் பூணூல் வேண்டுமா?
நாடிக்கொடுப்பாரைக் கூடிக்கெடுக்கிறது.
நாடிய பொருள் கை கூடும்.
நாடிய வரமெல்லாம் நல்கும் நாயகன்.
நாடு ஏற்பன செய்.
நாடு கடந்தாலும் நாய்க்குணம் போகுமா?
நாடு காடாயிற்று காடு கழனியாயிற்று.
நாடெங்கும் வாழ்ந்தால் கேடொன்றும் இல்லை.
7190 நாடெல்லாம் பாதி நாட்டை வாய்க்கால் பாதி ஜலம்.
நாட்சென்ற கொடை நடை கூலி யாகும்.
நாட்டாண்மை யாரடா கொடுத்தார், நானும் என் பெண்சாதியுமாக வைத்துக் கொண்டோம்.
நாட்டாளுக்கு ஒரு சீட்டாள் வெற்றிலை மடிக்க ஒரு வெற்றாள்.
நாட்டாளுக்கு ஒரு நீட்டாளோ?
நாட்டாள் பெற்ற குட்டி நாகரிகம் பேசவல்ல குட்டி.
நாட்டான் பெண்சாதி என்றால் ஏன் என்பாள், நாலு பேருக்குச் சோறு என்றால் உம் என்பாள்.
நாட்டுக்கு நல்ல துடைப்பம், வீட்டுக்குப் பீத்தத் (பீற்றல்) துடைப்பம்.
நாட்டுக்கு நல்ல துரைவந்தாலும் தோட்டிக்குப் புல் சுமை போகாது.
நாட்டுக்கு ஒரு மழை நமக்கு இரண்டு மழை.
7200 நாட்டை ஆளப் பெண் பிறந்தாலும் போட்ட புள்ளி (எழுத்து) தப்பாது.
நாணமும் இல்லை மானமும் இல்லை.

நாணம் இல்லாத சிறுக்கிக்கு நாலுதிக்கும் வாசல் (வாசற்படி).
நாணம் இல்லாத பெண் நகைப்புக்கு இடம் வைப் [பாள்.
நாணம் இல்லாத வாத்தி நாலு திக்கும் கூத்தி. [மா.
நாணிக்(நான்று) கொண்டு சாகச் சாண் கயிறு பஞ்ச
நாணும் கால் கோணும், நடக்கும் கால் இடறும்.
நாதமும் கீதமும் ஒத்திருப்பதுபோல வேதமும் ஒத்திருக்க வேண்டும்.
நாதிக்காரன் பாதிக்காரன் போல.
நாமம் போட்டவனெல்லாம் தாதனா, விபூதி பூசினவனெல்லாம் ஆண்டியா?
7210 நாம் ஒருவருக்குக் கொடுத்தால் நமக்கு ஒருவர் கொடுப்பார்.
நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்.
நாயடித்த துட்டு குலைத்தா காண்பிக்கிறது?
நாயா சிங்கத்திற்கு நற்பட்டம் கட்டுகிறது?
நாயாயலாகுமா கொக்கைப்பிடிக்க?
நாயின் பீயை மிதிப்பானேன், நல்ல தண்ணீர் வார்த்துக் கழுவுவானேன்?
நாயும் களிச்சட்டியும் போல.
நாயும் சரி நாவியும் சரி உனக்கு?
நாயும் தன் நிலத்துக்கு ராஜா.
நாயும் பூனையும் போல.
7220 நாயும் வளர்த்து நரகலும் வாருவானேன்?
நாயேன் சொல் அம்பலத்துக்கு ஏறுமா?
நாயை அடிப்பானேன் பல் இளிவு பார்ப்பானேன்?
நாயை அடிப்பானேன் பீயைச் சுமப்பானேன்?
நாயை உசுக்கச்செய்து நரி உள்ளே நுழைந்து கொண்டது.
நாயை ஏவ, நாய் வாலை ஏவுகிறது.
நாயைக்கண்டால் கல்லைக் காணோம் கல்லைக் கண்டால் நாயைக் காணோம்.
நாயைக் கண்டு காயம் கரைக்கிறதா?
நாயைக் கண்டு தானா காயம் கூட்டுகிறது?

7230 நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் வாலைக் குழைத்துக் (கிளப்பிக்) கொண்டு பீ தின்னப் போகும்.
நாயைக் கொஞ்சினால் வாயை (மூஞ்சியை) நக்கும்.
நாயைக் கொழுக்கட்டையால் எறிந்தது போல.
நாய் அடிக்கக் குறுந்தடி வேண்டுமா?
நாய் அறியுமா ஒருசந்திப் பானை?
நாய் இருக்கிற இடத்தில் சண்டை உண்டு.
நாய் ஒரு சிறு எலும்புக்கும் சந்தோஷிக்கும்.
நாய் கடித்ததற்கும் செருப்பால் அடித்ததற்கும் சரி.
நாய் குலைத்து நத்தம் பாழாகுமா?
நாய் குலைத்து விடியுமா, கோழி கூப்பிட்டு விடியுமா?
7240 நாய் கெட்ட கேட்டுக்குத் தேங்காய்ப் பாலும் சோறுமா?
நாய் கெட்ட கேட்டுக்கு மாமரத்து நிழல், அது கெட்ட கேட்டுக்குப் புளியிட்ட கறி.
நாய் கொண்டுபோன பானையை ஆர்கொண்டு போனா லென்ன?
நாய் கோவிலுக்குப் போவானேன், கோவில் காத்தவன் தெண்டம் இறுப்பானேன்?
நாய்க்கருக்கு அவசரம் நாலு மூன்றுமாகப் பாடு.
நாய்க்கு இரும்புக் கடையில் அலுவல் என்ன?
நாய்க்கு ஏன் தேங்காய் நடுவீட்டுக்குள் போட்டு உருட்டவோ?
நாய்க்கு ஒரு அலுவலுமில்லை, ஊசென்று உட்கார நேரமுமில்லை.
நாய்க்கு ஒரு சூல் அதற்கொரு மருத்துவச்சியா?
நாய்க்குக் கடிவாளம் பூட்டினாற் போல.
7250 நாய்க்குத் தவிசிட்டாற் போல.
நாய்க்குத் தெரியுமா கொக்குப்பிடிக்க?
நாய்க்குத் தெரியுமா தேங்காய் ருசி?
நாய்க்குத் தெரியுமோ தோல் தேங்காய்?
நாய்க்கு நரிக்குணம்.
நாய்க்கு நறுநெய் இணங்காது.
நாய்க்குப் பெயர் முத்துமாலை, அதற்கு ஆக்கிப் படைக்கிறது வரகந் தவிடு.

நாய்க்கு முழுத் தேங்காய் தகுமா?
நாய்க்கு மூத்தால் தாய்க்கும் ஈயாள்.
நாய்க்கு வெண்டயங் கட்டினால் நாயகனுக்கு அழகு.
7260 நாய்க்கு வேலையும் இல்லை நிற்க நேரமும் இல்லை.
நாய் சந்தைக்குப் போனது போல.
நாய் சமுத்திரத்திலே போனாலும் நக்குத் தண்ணீர்.
நாய் சிங்கத்துக்குப் பட்டம் கட்டுமா?
நாய் நக்கிச் சமுத்திரம் குறையுமா?
நாய் பட்டபாடு கொம்புக்குத் தெரியும்.
நாய் வாசலைக் காத்தென்ன, கை இல்லாதவன் பணக்காரனைக் காத்தென்ன?
நாய் வாயிலே கோலை இட்டதுபோல.
நாய் வாய்ப்பட்ட தேன் நல்லதாமா?
நாய் வாய் வைத்ததுபோல வேலை செய்கிறது (படிக்கிறது).
7270 நாய் வாலிலே தேன் வைத்தால் ஆருக்குக் கூடும்?
நாய் வாலைக் குணக் கெடுக்கலாமா?
நாய் வாலைப்பற்றி ஆற்றில் இறங்கலாமா (இறங்குகிறதா)?
நாய் வால் சீலை போல.
நாய் வாழ்ந் தென்ன பூனை தாலி அறுத் தென்ன?
நாய் விற்ற காசு குலைக்குமா (குலைத்துக் காட்டுமா)?
நாய் வேஷம் போட்டால் குலைக்கவேண்டும்.
நாரதா கலகப்பிரியா!
நாராசம் காய்ச்சி நடுச் செவியில் விட்டாற் (வார்த்தாற்) போல.
நாராயணன் ஒருவன்தான், இரண்டாவான் ஒருவனுமில்லை.
7280 நார் அறுந்தால் முடியலாம், நரம்பு அறுந்தால் முடியலாம், மனம் அறுந்தால் (முறிந்தால்) முடியலாகாது.
நார் அற்றாற் கூடும், நரம்பு அற்றாற் கூடுமா?
நாலடி அடித்துப் போர் மேல் போட்டாச்சுது.
நாலாம் தலைமுறையைப் பார்த்தால் நாவிதனும் சிறப்ப னாவான்.

நாலாம் பேற்றுப் பெண் நாதாங்கியை விற்றுண்ணும்.
நாலாவது பெண் நாதாங்கி முளைக்கும் திக்கில்லை.
நாலு ஆறு கூடினால் பாலாறு.
நாலுகாரை கூடினால் ஒரு பழுதை.
நாலுகாலிலே நரி கள்ளன், இரண்டுகாலிலே இடையன்கள்ளன்.
நாலுகால் கோமாரியும் ஒருகாலிலே இறங்கினாற்போல.
7290 நாலு செத்தை கூடினது ஒரு கத்தை.
நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுத் தெருவிலே சோறு.
நாலு பேருக்குச் சொல்லி மனதிலே போட்டு வைக்கிறவன்.
நாலு பேர் கூடினது சபை.
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி, ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.
நால்வரோ தேவரோ?
நால்வர் கூனிால் தேவர் சபை (வாக்கு).
நாவில் பிறக்கும் நன்மையும் தீமையும்.
நாயு அசைய நாடு அசையும்.
நாவுக்கு இசைந்தால் பாவுக்கு இசையும்.
7300 நாவுக்கு எலும்பில்லை, எப்படிப் புரண்டாலும் புரளும்.
நாவுள்ளவன் கழுவெற மாட்டான்.
நாவைச் சுற்றிப் பிடிக்கிற தாகத்துக்கு நாள் கேட்டானாம் (பார்த்தானாம்) கிணறு வெட்ட.
நாழி அரிசிச் சோறு உண்டவன் நமனுக்கு உயிர் கொடான்.
நாழி உப்பும் நாழி அப்பும் நாழியான ஆறு போல.
நாழி நெல்லுக்கு ஒரு புடைவை விற்றாலும் நாய்க்கு நிருவாணம் போகுமா?
நாழிப்பணம் கொடுத்தாலும் மூளிப்பட்டம் போகாது.
நாழி மாவுக்கு நானாழி வெல்லம்.
நாழி முகவாது நானாழி.
நாழி வரச் சீதேவி, மரக்கால் வரச் சீதேவி.
7310 நாளுக்கு நாள் நகருகிறது காரணமானே.
நாளுக்கு நாள் நரியாய்ப்போகிறது.

நாளைக்குக் கலியாணம் பிடியடா பாக்கு வெற்றிலை.
நாளைக்குத் தின்கிற பலாப் பழத்திலும் இன்றைக்குத் தின்கிற களாப்பழம் நல்லது.
நாளைக்கும் சீர் நடக்கத்தான் போகிறது, இன்றைக்கும் சீர் இருக்கத்தான் போகிறது.
நாளைத் தெரியும் நாச்சியாத்தாள் மாரடி.
நாளை வருகிற (தின்கிற) பலாக்காயிலும் இன்றைக்கு வருகிற (தின்கிற) களாக்காய் மேல்.
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கிறான்.
நாள் ஆற்றுகிறது நல்லார் ஆற்றார்.
நாள் செய்வது நல்லார் செய்யார்.
7320 நாள் வருமட்டும் நாராய்த் தோலாய் இழுத்துக் கொண்டிருக்கும்.
நாறல் சாணியை (பீயை) மிதிப்பான் (மெரிப்பான்) ஏன், நல்லதண்ணீர் வார்த்துக் கழுவுவானேன்?
நாறல் தூற்றல் நரிக்குக் கொண்டாட்டம்.
நாறல் மீனைப் பூனை பார்ப்பது போல.
நாறற் சடலம் நலமில்லா மட்பாண்டம்.
நாறற் சோற்றுக்குப் பதம் பார்ப்பான் (பார்க்கிறது) ஏன்?
நாறு வாயன் (ஊத்தை வாயன்) தேட, நல்லவாயன் தின்ன.
நாற்கலக் கூழுக்கு நானே அதிகாரி.
நாற்பதுக்கு மேல் சென்றால் நாய்க் குணம்.
நாற்பது சென்றால் நாய்க்குச் சரி.
7330 நாற்பது வயதுக்கு மேல் நாய்க் குணம்.
நானிலம் தன்னில் நாயகம் கல்வி.
நானும் அறியேன் அவளும் பொய் சொல்லாள்.
நானும் ஒட்டை, என் நடு வீடு பொத்தல்.
நானும் நரைத்து நரை மண்டை ஆனேன் காடு நடக்கக் கண்டது புதினம்.
நானும் பூசாரி, எனக்கும் சுவாமி ஆட்ட முண்டு.
நானும் வந்தேன் நாற்றமும் போச்சுது.
நானும் வந்தேன் மாமியார்வீட்டு நாற்றமும் போச்சுது.
நான் ஆம் ஆம் என்றால் ஹரி ஹரி என்கிறான்.

நான் இட்ட மருந்துன்னைப் போக வொட்டுமோ, நன்னாரி வேருன்னைச் சாக வொட்டுமோ?

7340 நான் உங்கள் கடனைத்தீர்க்கிற வரையில், நான் சாப்பிடுகிற சாப்பாடு சாப்பாடல்ல, பீ.

நான் என்றால் இளக்காரம், என் பீ (சொத்து) என்றால் பலகாரம்.

நான் என்றால் உனக்குக் கடை வாயில் பீ.

நான் ஒன்றை எண்ண விதி ஒன்றை எண்ணிற்று.

நான் கண்டதே காட்சி நான் கொண்டதே கொள்கை.

நான் கண்ணாரக் கண்டேன் நாராயணக் குழம்பு வேண்டாம்.

நான் கெட்டாலும் எதிரி வாழ வேண்டும்.

நான் கொக்கோ கொங்கு நாட்டானே?

நான் சாப்பிட்டது சாப்பாடல்ல, பீ.

நான் செத்து ஏழு பிறப்பு பிறந்தாலும் அவன் செய்த நன்மையை மறக்க மாட்டேன்.

7350 நான் செருப்பு விடுகிற இடத்திலே கூட அவன் நிற்க யோக்கிய னல்ல.

நான் தேடிப் பச்சைபோட, நாரிகள் எல்லாம் வந்தார்கள் தெய்வம் ஆட.

நான் நட்டேன் நாதன் பயிராக்கினான்.

நான் நீட்டின விரலை மடக்கமாட்டான் நீட்டி நீட்டிப் பேசுவான்.

நான் படும்பாடு பஞ்சு தான் படுமோ?

நான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் (மூன்றேகால்).

நான் பெண்பிறந்து தெருவிலே நிற்கிறேன்.

நான் போனால் சண்டைவரும், எங்கக்காள் போனால் மயிரைப்பிடித்து இழுத்து வருவாள்.

நான் வாழ்ந்த வாழ்வைச் சொல்லுகிறேன், அண்டை வீட்டுக்காரன் இருக்கிறானோ பார்.

---

## நி.

நிசங்கனுக்குக் கோட்டை முற்றுகை கண்டதுண்டா?

7360 நிசம் ஒன்று பலதீங்கு நீக்கும்.

நிசாமல்லுத் (நிசாமலி) தண்டில் நிஜார்க்காரனைக் கண்ட துண்டா?

நிஷ்டூரன் கண்ணைத் தெய்வம் கெடுக்கும், நீதிமான் கண்ணைப் பரிதானம் கெடுக்கும்.
நிதம்கண்ட கோழி நிறங்கெடும்.
நித்தம் சாவார்க்கு அழுவாருண்டோ?
நித்தம் போனால் முத்தம் (முற்றம்) சலிக்கும்.
நித்திய கண்டம் பூரணாயுசு.
நித்தியங் கிடைக்குமா அமாவாசைச் சோறு (பருக்கை)?
நித்திய தரித்திரனுக்கு ஆசை அதிகம்.
நித்திரை சத்துரு.
7370 நித்திரை சத்துரு நேரிழை சத்துரு.
நித்திரை சுகம் அறியாது.
நித்திரையிலும் தண்ணீர்ப்பால் குடிக்கிறதில்லை.
நிந்தனை சொல்லேல், நீதி கைப்பிடி.
நிமிஷ நேரம் நிற்கும் இன்பம் சிற்றின்பம்.
நிமிஷ நேரம் நீடிய இன்பம்.
நிமித்தம் பார்க்கிறவன் இரண்டகக்காரிமகன், பொருத்தம் பார்க்கிறவன் பொல்லாங்கன் புத்திரன்.
நிமிர்ந்துபோட்ட தென்ன, குனிந்து எடுத்ததென்ன?
நிமைப்பொழுதேனும் இல்லை நீச உடல்.
நியாயத்தைக் கண்டால் நெடுந்தூரம் ஓடிநிற்கும்.
7380 நிருபனானபோதே கர்வம் மெத்த வுண்டு.
நிருவாணதேசத்தில் நீர்ச்சீலை கட்டினவன் பைத்தியகாரன்.
நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடியவேண்டும்.
நிலத்திற்குத் தகுந்த கனியும், குலத்திற்குத் தகுந்த குணமும்.
நிலத்தினால் நீரின் தன்மை குன்றினாற் போல.
நிலம் கடக்கப் பாயலாமா?
நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் போனதுபோல.
நிலையில்லான் வார்த்தை நீர்மேல் எழுத்து.
நிலையிற் பிரியேல்.
நிலையைவிட்டால் நீச்சு.
7390 நில்லாத காலடி நெடுந்தூரம்போகும்.
நில்லாது ஏதும் நிலையே கல்வி.

நிழலின் அருமை வெயிலில் போனால் தெரியும்.
நிழலுக்கும் கனவுக்கும் ஒத்தது ஆக்கை.
நிழல் கடக்கப் பாயலாமா?
நிழல் நல்லது தான் முசிறு கெட்டது.
நிழல் நல்லது (அரிது) முசிறு பொல்லாதது.
நிறைகுடம் தளும்பாது.
நிறைகுடம் நீர் தளும்பலில்.
நிறைந்த ஆற்றிலே பெருங்காயம் கரைத்தாற்போல.
7400 நிறை பொதியிலே கழுதை வாய் வைத்தாற்போல.
நிறையக் குறுணி வேண்டாம் தலைதடவிக் குறுணி கொடு.
நிற்க ஜீவனில்லாமற் போனாலும் பேர் நிரப்புக்கட்சி.
நினைக்குமுன் வருவான் நினைப்பதும் தருவான்.
நினைத்தது இருக்க நினையாதது எய்தும், நினைத்தது வந்தாலும் வந்துசேரும்.
நினைத்த நேரம் நெடுமழை பெய்யுமா?
நினைத்தபோது பிள்ளை பிறக்குமா?
நின்ற மரத்தில் நெடுநேரம் போனால் நின்ற மரமே நெடுமரம்.
நின்ற வரையில் நெடுஞ்சுவர், விழுந்த வன்று குட்டிச் சுவர்.
நின்ற வெள்ளத்தையும் வந்த வெள்ளம் கொண்டு போயிற்று.
7410 நின்றால் நெடுமரம் விழுந்தால் பனைமரம்.
நின்றாற்போல் விழுந்தால் தலை உடையும்.
நின்றான் இருந்தான் கிடந்தான் தன் கேள் அலறச் சென்றான்.
நின்றுகொண்டே இருந்தவன் எப்படியோ கண்ணில் மண்ணைப்போட்டு அதை எடுத்துக்கொண்டு போனான்.
நின்று தின்றால் குன்றும் குறையும் (மாளும்).
நின்று போட்டதுமில்லை குனிந்து எடுத்தது மில்லை.

## நீ.

நீ உளறாதே நான் குளறுகிறேன்.
நீக்குப் போக்குத் தெரியாமல் நேர்ந்தபடி.

நீக்கும் பேபே நீ தாத்தாவுக்கும் பேபே.
நீக்கொரு மாட்டா நாக்கொரு மூட்டா.
7420 நீ சரானவர் நிலைபெறக் கல்லார்.
நீ செத்தால் உலகமெல்லாம் எலும்பாய்ப்போகுமா?
நீசொம்மு நாசொம்மே! நாசொம்மு நீசொம்மே!
நீச்சு தண்ணீருக்குக் கெஞ்சினவள் பசும்பாலுக்குச் சர்க்கரை தேடுகிறாள்.
நீச்சுநிலை யில்லாத ஆற்றிலே நின்றெப்படி முழுகுகிறது?
நீட்டவும் மாட்டார் முடக்கவும் மாட்டார்.
நீட்டி நீட்டிப் பேசுகிற வெள்ளாளப்பையா, உங்கள் துரைசானி எங்கள் சிறைச்சாலையி லிருக்கிறாள்.
நீட்டு வித்தை ஏறாது (ஏறுமா?).
நீண்ட கை நெருப்பு அள்ளும்.
நீண்ட தச்சும் குறுகிய கொல்லும்.
7430 நீண்ட புல் நிற்க நிழலாமா?
நீதிகேளாமல் தலைவெட்டுவார்களா?
நீதிமான் தீவினை செய்யிற் பிழைப்பானா, நீதி இல்லாதவன் நீதிபுரிந்தால் மரிப்பானா?
நீதியற்ற பட்டணத்தில் நிறைமழை பெய்யுமா?
நீந்தமாட்டாதவனை ஆறுகொண்டு போகிறது.
நீ படித்த பள்ளியிலேதான் நானும் படித்தேன்.
நீ பிறர்க்கு உதவி செய்தால் தெய்வம் உனக்கு உதவி செய்யும்.
நீ போய் அலப்பிப்போட்டு வராதே, நான் போய் உளறிப்போட்டு வருகிறேன்.
நீயும் நானும் அடா, சாறும் சோறும் அடா!
நீரகம் பொருந்திய ஊரகத்திரு.
7440 நீரளவே யாகுமாம் நீராம்பல்.
நீராலே விலகினாய் நான் நெருப்பாலே விலகினேன்.
நீரில் அமிழ்ந்தின சுரைக்காயைப் போல.
நீரில் எழுத்தாகும் யாக்கை.
நீரில்லா நாடு நிலவில்லா முற்றம்.
நீரிற் குமிழி இளமை.
நீரும் கொல்லும் நெருப்பும் கொல்லும்.

நீரும் பாசியும் கலந்தாற் போல.
நீரை அடித்தால் நீர் விலகுமா?
நீரை அடித்தால் வேறாகுமா?
7450 நீரைக் கழுவி நிழலைப் புதைப்பதுபோல.
நீரைச் சிந்தினையோ சீரைச் சிந்தினையோ?
நீரைத் தொட்டாயோ பாலைத் தொட்டாயோ?
நீரோட்டத்தில் தெப்பஞ் செல்லும் தன்மை போல்.
நீர் ஆழம் கண்டாலும் நெஞ்சு ஆழம்காணப்படாது.
நீர் உயர் நெல் உயரும்.
நீர் உள்ள மட்டும் மீன் குஞ்சு துள்ளும்.
நீர் உள்ள மட்டும் மீன் துள்ளும், நீர் போனால் மீனென்ன துள்ளுமா?
நீர் என்று சொல்லி நெருப்பாய் முடிந்தது.
நீர் என்று சொன்னதினால் நெருப்பு அவிவதும், சர்க்கரை என்று சொன்னதினால் வாய் இனிப்பதும் உண்டா?
7460 நீர் என்று சொன்னால் நெருப்பு அவியுமா?
நீர்க்கடன் நிழற்கடன் கொடுத்து வைத்தமட்டும் இருக்கும்.
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாது.
நீர்ச்சோறு தின்று நிழலில் இருந்தால் மலடிக்கும் மசக்கை வரும்.
நீர் போனால் மீன் துள்ளுமா?
நீர்ப்பாண்டு மெய்யானால் கௌபீனந் தாங்குமோ?
நீர்ப்பாம்பு கடித்தாலும் இரஸபட்டியாகும்.
நீர்மேல் எழுத்து நிற்குமா?
நீர் மேற் குமிழிபோல் நிலையில்லாக் காயம்.
நீர் மோருக்குக் கதியற்ற வீட்டிலே ஓமத்திற்குப் பசு நெற் கேட்டாற் போல.
7470 நீர் விளையாடேல்.
நீலத்துக்குக் கறுப்பு ஊட்டவேண்டுமா?
நீலம் கட்டுப்படப் பேசுகிறான்.
நீலிக்குக் கண்ணீர் நிமையிலே.
நீளநீளத் தெரியும் மெய்யும் பொய்யும்.

நீறில்லா நெற்றிபாழ், நெய்யில்லா உண்டிபாழ்.
நீறு பூத்த நெருப்புப் போல.

## நு.

நுட்பபுத்திமான் திட்பசித்தவான்.
நுண்ணிய கருமமும் எண்ணித்துணி.
நுண்ணிய ஞானம் உரைப்பார்கள் சொன்னதில் ஒன்றும் நடவார்கள்.
7480 நுண்பொருள் கொடுத்து நுண்ணியராவர்.
நுண்மை நுகரேல்.
நுரை ஒத்ததுவே தரையில் பவிஷு.
நுரையைத் தின்றால் பசிபோகாது.
நுழைவிட்டு செய் நூல் கற்று அடங்கு.
நுளையன் அறிவானா ரத்தினத்தின் பெருமையை?
நுளையன் பேச்சு அம்பலத்தில் ஏறுமா?
நுளையிலே ஆசாரமா?
நுனிக்கொம்பில் ஏறி அடிக்கொம்பு வெட்டுவார்களா?
நுனிப் புல் மேய்ந்தாற் போல.
7490 நுனி மரத்தில் ஏறி அடிமரத்தை வெட்டினது போல.
நுனியில் மேய்கிறது.

## நூ.

நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு.
நூலுக்கு ஏற்ற சரடு.
நூலைப்போல் சேலை.
நூல் இல்லாமல் மாலை கோத்தது போல.
நூல் கற்றவனே மேலவன் ஆவான்.
நூறு ஆண்டு ஆயினும் (ஆகிலும்) கல்வியை நோக்கு.
நூறு குற்றம் ஆறு பிழை கொண்டு பொறுக்கவேண்டும்.
நூறு நாள் ஓதி ஆறு நாள் விடத்தீரும்.
நூறோடு நூறாகிறது நெய்யிலே சுடு அடி பணிகாரம்.
7500 நூற்கவேண்டுமானால் வெண்ணெய்க் கட்டிபோல் நூற்கலாம்.

நூற்றுக்கு இருந்தாலும் கூற்றுக்கு இரை (அரைக் கீரை தான்).
நூற்றுக்கு இருப்பார் ஐம்பதில் சாகார்.
நூற்றுக்கு ஒரு பேச்சு, ஆயிரத்துக்கு ஒருதலை யசைப்பு.
நூற்றுக்குந் துணிந்த தூற்றுக்கூடை.
நூற்றுக்கு மேல் ஊற்று.
நூற்றுக்கு மேல் ஊற்று, ஆயிரத்துக்கு மேல் ஆற்றுப் பெருக்கு.
நூற்றைக் கெடுத்தது குறுணி.
நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு.

## நெ.

நெசவாண்டிக்கேன் கோந்திப் பில்லா?
7510 நெஞ்சறியப் பொய் சொல்லலாமோ?
நெஞ்சிலக்கணந் தெரியாதவனுக்குப் பஞ்ச லக்ககணந் தெரிந்து பலனென்ன?
நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை.
நெடியார் குறியாரை ஆற்றிலே தெரியலாம்.
நெடுங்கடல் ஓடியும் நிலையே கல்வி.
நெடுங்காலம் நின்றாலும் நெல் முத்திப்பணம் ரெட்டி.
நெடுமரம் விழுந்தால் நிற்கிற மரம் நெடுமரம்.
நெடும் பகலுக்கும் அஸ்தமனம் உண்டு.
நெட்டி ஒரு பிள்ளைச்சர்க்கரை, குட்டி ஒருபிள்ளையா?
நெய் உருக்கி மோர் பெருக்கி நீர் அருக்கிச் சாப்பிட வேண்டும்.
7520 நெய்கிறதைவிட்டு நினைத்துக் கொண்டானாம் கைக் கோளன்.
நெய்கிறவனுக்கு ஏன் குரங்குக்குட்டி?
நெய்க்குடத்தில் எறும்பு மொய்த்தது போல.
நெய்க்குடம் உடைந்தால் நாய்க்கு விருந்து.
நெய்க்குடம் உடைந்தது நாய்க்கு வேட்டை.
நெய் முந்தியோ திரி முந்தியோ?
நெய்யுந் திரியும் போனால் நிற்குமா விளக்கு?
நெய் வார்த்த கடன் நின்று வாங்கினாற் போல.

நெய் வார்த்த பணம் முழுகிப் போகிறதா?
நெய் வார்த்துண்டது நெஞ்சறியாதா?
7530 நெருஞ்சில்முள் தைத்தாலும் குனிந்து பிடுங்கவேண்டும்.
நெருப்பிருக்கிற காட்டை நம்பினாலும் நீரிருக்கிற காட்டை நம்பக்கூடாது.
நெருப்பிலே (நெருப்பை) ஈ மொய்க்குமா?
நெருப்பிலும் பொல்லாச் செருப்பு.
நெருப்பிலே நெய் விட்டதுபோல.
நெருப்பிலே புழு பற்றுமா?
நெருப்பிலே போட்டாலும் நெஞ்சு வேகாது.
நெருப்பிலே புழுப்போலத் துடிக்கிறது.
நெருப்பினும் பொல்லாது கருப்பின் வாதை.
நெருப்பு ஆறும் மயிர்ப் பாலமும்.
7540 நெருப்பு இல்லாமல் நீள் புகை எழும்புமா?
நெருப்பு இல்லாமற் புகை புகையுமா?
நெருப்பு என்றால் வாய் வெந்து போமா?
நெருப்பு சிறிது என்று முன் றானையில் முடியலாமா?
நெருப்பு நின்ற காட்டிலே ஏதாவது நிற்கும், நீர் நின்ற காட்டில் ஒன்றும் நிற்காது.
நெருப்புப் பந்தம் கட்டிக்கொண்டு நிற்கிறான்.
நெருப்புப் பந்தலிலே மெழுகுப்பதுமை ஆடுமா?
நெருப்பைக் கண்டு மிதித்தாலும் சுடும் காணாமல் மிதித்தாலும் சுடும்.
நெருப்பைச்சார்ந்த யாவும் அதன் நிறமாகும்.
நெருப்பைத் தலை கீழாகப் பிடித்தாலும் இதில் சுவாலை கீழாகுமா?
7550 நெருப்பை மடியிலே கட்டிக்கொண்டிருக்கிறாள்.
நெருப்பை மடியிலே முடிகிறதா?
நெல் இருக்கப் பொன், எள் இருக்க மண்.
நெல் எடுக்கவும் புல் எடுக்கவும் ஆச்சே?
நெல்லால் அடித்தால் கல்லால் அடிப்பான்.
நெல்லுக்கடை மாடு கன்று போடட்டும்.
நெல்லுக் காய்க்கிற மரம் கேட்டவன் போல.
நெல்லுக் குத்துகிறவளுக்குக் கல்லுப் பரீக்ஷை தெரியுமா?

நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாயும்.
நெல்லுக்குள்ளே அரிசி.

7560 நெல்லும் உப்பும் பிசைந்து உண்ணக் கூடுமா?
நெல்லு வகை எண்ணினாலும் பள்ளவகை எண்ணக் கூடாது.
நெல் விளைகிற நிலமும் தெரியாது நிலாக் காய்கிற இடமுந் தெரியாது.
நெல் விளைந்த பூமியும் அறியாய், நிலா எறித்த முற்றமும் அறியாய்.
நெறி தப்புவார்க்கு அறிவிப்பது வீண்.
நெற்பயிர் விளை.
நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றந்தான்.
நெற்றியிலே மூன்று கண் படைத்தவன் வர வேண்டும்.

---

## நே.

நேத்திர மணியே சூத்திர அணியே.
நேயமே நிற்கும்.

7570 நேரா நோன்பு சீராகாது.
நேருத்திரம் சென்மப்பழி.
நேரும் சீருமாய்ப் போகவேண்டும். [ கார்.
நேர்ந்து நேர்ந்து சொன்னாலும் நீசாக்கசடர் வசமா
நேர்பட ஒழுகு.
நேற்று உள்ளார் இன்று மாண்டனர்.
நேற்றுவந்த மொட்டைச்சி நெய்வார்த்துண்ணச் சிணுங்குகிறாள்.
நேற்று வந்தாளாம் குடி, அவள் தலையில் விழுந்ததாம் இடி.
நேற்று வெட்டின கிணற்றிலே முந்தாநாள் வந்த முதலை.

---

## நை.

நைஷதம் புலவர்க்கு ஔஷதம்.

7580 நைபவர் எனினும் நொய்ய உரையேல்.
நையக் கற்றினும் நொய்ய நன்குரை.
நைவினை நணுகேல்.

## நொ.

நொடிப்போதும் வீணிடேல்.
நொண்டி ஆயக்காரன் கண்டு மிரட்டுகிறது போல.
நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.
நொண்டி நொண்டி நடப்பானேன், கண்டதற்கு எல்லாம் படைப்பானேன்?
நொந்த கண் இருக்க நோகாத கண்ணுக்கு மருந்து.
நொந்து அறியாதவர் செந்தமிழ் கற்றோர்.
7590 நொந்து நூல் அழிந்து போகிறது.
நொய்யரிசி கொதி பொறுக்குமா?
நொய்யவரென்பவர் வெய்யவராவர்.
நொறுங்கத் (நொறுவை) தின்றால் நூறு வயது.
நொறுங்குண்டவனைப் புறங்கொண்டுரையாய்.

## நோ.

நோகாது உணர்வோர் கல்வியை நோற்பார்.
நோகாமால் அடித்தேன் ஓயாமல் அழுதாள்.
நோக்கத்து ஒதுங்கு.
நோக்க நோக்குவ நோக்கா முன் நோக்குவன்.
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
7600 நோயற்ற வாழ்வே வாழ்வு, குறைவற்ற செல்வமே செல்வம்.
நோயாளிக்கு ஆசைவார்த்தை சொன்னாற் போல.
நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்.
நோயாளி தலைமாட்டில் பரிகாரி இருந்து அழுதாற் போல.
நோயாளி விதியாளி ஆனால் பரிகாரி பேராளி ஆவான்.
நோய் கொண்டார் பேய் கொண்டார்.
நோய்க்கிடங் கொடேல்.
நோய்ஞ்சற் பூனை மத்தை நக்குகிறது போல.
நோய்த்த புலியாகிலும் மாட்டுக்கு வலிது.

நோவற்ற வாழ்வே வாழ்வு, குறைவற்ற செல்வமே செல்வம்.
7610 நோவாமையினால் மேலானது போம்.
நோவு ஒரு பக்கம் இருக்கச் சூடு ஒரு பக்கம் போட்டாற் போல்.
நோவு ஒன்று இருக்க மருந்து ஒன்று கொடுத்தது போல.
நோன்பு என்பது கொன்று தின்னாமை.

## நௌ.

நௌவித் தொழில் நலம்.
நௌவியிற் றானே தெய்வறிவைக் கல்.
நௌவியும் முதுமையும் நடுவு மற்றவன்.
நௌவியும் வாழ்க்கையும் அழகல்ல, நற்குணம் ஒன்றே அழகு.

## ப.

பகலிற் பக்கம் பார்த்துக் பேசு, இரவில் அதுதானும் பேசாதே.
பகலிற் பசுவுந் தெரிய வில்லை, இரவில் எருமை தெரியுமா?
7620 பகிடி (பகடி)க்குப் பத்துக் காசு திருப் பாட்டுக்கு [ ஒரு காசு.
பகிடிக்குப் பத்துப் பணங் கொடுப்பார் திருப்பாட்டுக்கு ஒரு காசுங் கொடார்.
பகிடியைப் பாம்பு கடித்தது போல.
பகுத்தறியாமல் துணியாதே, பட படப்பாகச் செய்யாதே.
பகுத்தறிவில்லாத துணிவு, பார மில்லாத கப்பல்.
பகையாளி குடியை உறவாடிக் கெடுக்கவேண்டும்.
பகையாளி குடியைக் கெடுக்க வெங்காயக் குழி போடச் சொன்னது போல.
பகையாளிக்குப் பருப்பிலே நெய் விட்டது போல.
பகைவர் உறவு புகை எழு நெருப்பு.
பக்கச் சொல் பதினாயிரம்.

7630 பக்தியோடே பாகற் காய் சட்டியோடேதீயுது.
பங்கறை (பதங்குறைந்த) சாவானுக்குப் பல் அழகைப் பார்.
பங்காளத்து நாய் சிங்காசனம் ஏறினதென்று வண்ணான் கழுதை வெள்ளாவிப் பானையில் ஏறினதாம்.
பங்காளியையும் பனங்காயையும் பதம் பார்த்து வெட்டவேண்டும். [ விடு.
பங்காளி வீடு வேகிறது சுங்கான் கொண்டு தண்ணீர்
பங்கில்லாப் பங்கை விழுந்து அள்ளலாமா?
பங்குனி மாதம் பகல்வழி நடந்தவன் பெரும்பாவி.
பங்குனி யென்று பருப்பதும் (பருக்கிறதும்) இல்லை, சித்திரை யென்று சிறுப்பதும் (சிறுக்கிறதும்) இல்லை.
பசிக்குக் கறி வேண்டாம், தூக்கத்துக்குப் பாய் வேண்டாம்.
பசிக்குப் பனம்பழம் தின்றால் பித்தம் பட்டதைப் படட்டும் (பித்தம் பட்ட பாடுபடட்டும்).
7640 பசிதீர்ந்ததானால் பாட்டு இன்பமாம்.
பசித்த கணக்கன் பழங் கணக்குப் பார்த்தது போல.
பசித்த செட்டி பாக்குத் தின்றானாம்.
பசித்த பறையனும் குளித்த சைவனும் சாப்பிடாதிரான்.
பசித்தவனுக்குப் பால் அமிர்தம் இட்டாற் (கொடுத்தாற்) போல.
பசித்தவன் தின்னாதது மில்லை, பகைத்தவன் சொல்லாதது மில்லை.
பசித்தவன் பயற்றை விதை (விதைக்கட்டும்).
பசித்தவன் பழங் கணக்கைப் பார்த்தாற்போல.
பசித்தவன் மேல் நம்பிக்கை வைக்கலாமா? (வையாதே).
பசித்தார் பொழுதும் போம், பாலுடன் அன்னம் புசித்தார் பொழுதும் போம்.
7650 பசித்து வாடுவோர் கையிலே பரிந்து அமிர்தம் ஈந்தாற் போல.
பசியாமல் மருந்து கொடுக்கிறேன் பழையது இருந்தால் போடு என்பது போல.

பசியாமல் வரந்தருகிறேன் பழங்கஞ்சி யிருந்தால் வாரு.

பசியா வரம் படைத்த தேவர் போல.

பசியிலும் ஏழை இல்லை, பார்ப்பாரிலும் ஏழையில்லை.

பசியில்லாதவனுக்குக் கருப்பு மயிர்மாத்திரம் (மயிருக்குச் சமானம்).

பசியுற்ற நேரத்தில் இல்லாத பால் பழம் பசியற்ற நேரத்தில் ஏன்?

பசியுள்ளவன் ருசியறியான்.

பசியேப்பக் காரனும் புளியேப்பக் காரனும் கூட்டுப் பயிர் இட்டது போல.

பசி ருசி அறியாது, நித்திரை சுகம் அறியாது.

7660 பசி வந்தால் பக்தி பறக்கும்.

பசி வந்தால் பத்தும் பறக்கும்.

பசி வந்திடில் பத்தும் பறந்து போம்.

பசு உழுதாலும் பயிரைத்தின்ன வொட்டான்.

பசு ஏறு வாலும் எருது கூழை வாலும்.

பசு கறுப்பென்று பாலும் கறுப்பா?

பசு கிழமானாலும் பாலின் சுவை போகுமா?

பசு குசுவினாற் போல.

பசு சாதும் பார்ப்பான் ஏழையும் நம்பப்படாது.

பசு சாதும் பார்ப்பான் சாதும் உண்டா?

7670 பசு தின்னாவிடில் பார்ப்பானுக்கு.

பசுத் தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்கிறது.

பசுப் போல இருந்து புலி போலே பாய்கிறாய்.

பசு மரத்தில் தைத்த ஆணி போல.

பசு மாடு நொண்டியானால் பாலும் நொண்டியா?

பசும் புல் தேய நடவாத பாக்கியவான்.

பசும் புல் நுனிப் பனிச் சலம் போல.

பசு விழுந்தது புலிக்கு ஆதாயம்.

பசுவுக்கு இரை கொடுத்தால் மதுரமான பால் கொடுக்கும்.

பசுவுக்குப் பிரசவவேதனை காளைக்குக் காமவேதனை.

7680 பசுவும் பசுவும் பாய்ச்சலுக்கு நிற்க, நடுப்புல் தேய்ந்தாற் போல.

பசுவும் புலியும் பரிந்து ஒரு துறை நீர் உண்கிறது.
பசுவை அடித்துப் புலிக்குத் தானம் கொடுக்கிறதா?
பசுவைக் கொன்றால் கன்று பிழைக்குமா?
பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்தது போல.
பசுவை விற்றால் கன்றுக்கு வழக்கா?
பச்சிலையும் கிள்ளப்படுமோ பராபரமே!
பச்சை கண்டால் ஒட்டடி மகளே.
பச்சை கொடுத்தால் பாவந் தீரும், வெள்ளை கொடுத்தால் வினை தீரும்.
பச்சைக் கூட்டோடே கைலாயஞ் சேர்வாய்.
7690 பச்சைச் சிரிப்பு பல்லுக்குக் கேடு, தூவு பருக்கை வயிற்றுக்குக் கேடு.
பச்சை நெல்லுக்குப் பறையனிடத்தில் சேவிக்கலாம்.
பச்சைப் பாண்டத்தில் பாலை வைத்தால் பாலும் உதவாது பாண்டமும் உதவாது.
பச்சைப் புண்ணில் சூசி யெடுத்துக்குத்தினதுபோல.
பச்சை மட்டைக்குப் போனவன் பதினெட்டாந் துக்கத்துக்கு வந்தாற் போல.
பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டுமா?
பச்சை மரத்திற்கு இத்தனை யென்றால் பட்ட மரத்திற்கு எத்தனை?
பச்சை மரம் படப்பார்ப்பான்.
பச்சோலைக்கில்லை ஒலி.
பஞ்சத்திலே பிள்ளை விற்றாற் போல.
7700 பஞ்சத்தில் பிள்ளை விற்கிறது போல.
பஞ்சம் இல்லாக் காலத்தில் பசிபறக்கும்.
பஞ்சம் போம் பஞ்சத்திற் பட்டவசை போகாது.
பஞ்சாக்ம் கெட்டுப்போனாலும் நவக்கிரகம் கெட்டுப்போமா?
பஞ்சாங்கம் பலசாத்திரம், கஞ்சி குடித்தால் கலமூத்திரம்.
பஞ்சாங்கம் போனாலும் நக்ஷத்திரம் போகாது (போகுமா?)
பஞ்சானும் குஞ்சும் பறக்கத் தவிக்கிறது.
பஞ்சு படிந்த பழஞ்சித்திரம் போல.

பஞ்சு பறந்தாலும் படியும் ஒருதேசம், நெஞ்சு பறப்பதற்கு நிலைகாணோம் லவலேசம்.
பஞ்சுப்பொதியில் நெருப்புப் பட்டாற்போல.
7710 பஞ்சுப்பொதியிற் பட்ட அம்புபோல.
பஞ்சும் நெருப்பும் ஒன்றாய்க் கிடக்குமோ?
பஞ்சும் நெருப்பும் போலே. [ ரப்பட்டாள்.
பஞ்சை நாரி பணிகாரம் சுட்டாள், வீங்கி நாரி விசா
பஞ்சை பணிகாரம் சுட்டதும், வீங்கன் விசாரப்பட்டதும்.
[ யத்தில்.
படி ஆள்வார் நீதிதப்பின், குடி ஆர் இருப்பார் குவல
படிக்க முடைந்து திருவுருக்கொண்டால், பணிந்து பணிந்து தான் கும்பிடவேண்டும்.
படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன் (ஈசுவரன்) கோயில் (ஆலயம்).
படிக்கிறது திருவாய்மொழி, இடிக்கிறது பெருமாள் கோவில். [ போம்.
படிக்கிற பிள்ளை பாக்குப்போட்டால் நாக்குத்தடிப் பாய்ப்போம்.
7720 படிக்கு அரசன் இருந்தால் குடிக்குச் சேதம் இல்லை.
படிக்குப் பாதி தேறாதா?
படித்தவனுக்கும் படியாதவனுக்கும் கொக்குக்கும் அன்னத்துக்கும் வித்தியாசம் போல.
படித்து முட்டாளாயிருக்கிறான்.
படுகளத்தில் ஒப்பாரியா?
படுகளப்பட்ட பன்னாடை.
படுகுழி வெட்டினவன் அதிலே விழுவான்.
படுக்கப் படுக்கப் பாயும் பகை.
படுக்கப் பாயும் கொடான், துங்க இடமும் கொடான்.
படுக்கைக் சுகம் மெத்தை அறியாது.
7730 படுதீப்பட்டு வேகிற வீட்டிலே படுத்துக் கொள்ள இடங் கேட்டான்.
படுத்தால் பசி பாயோடே போய்விடும்.
படுவது பட்டும் பட்டத்துக்கு இருக்கவேண்டும்.
படைகெட்டு ஓடுகையில் நரைமயிர் பிடுங்குகிறதோ?
படைக்கும் ஒருவன் கொடைக்கும் ஒருவன்.

படைச் சாலுக்கு ஒரு பண மிருந்தாலும் பயிரில்லாதவன் பாவி.
படை மிகுந்தால் அரண் இல்லை.
படை முகத்திலும் அறிமுகம் வேண்டும்.
படை முகத்தில் ஒப்பாரியா?
படையாத படைத்த மாமியாரே உன்னைப் பறையன் அறுக்கக் கனவு கண்டேன்.
7740 படையாதுபடைத்த மருமகளே உன்னைப் பறையன் அறுக்கக் கனாக் கண்டேன்.
பட்சி சிறகு பறி கொடுத்தாற் போல.
பட்சித்தாலும் அவர் சித்தம், ரட்சித்தாலும் அவர் சித்தம்.
பட்சித்தாலும் பட்சி, ரட்சித்தாலும் ரட்சி.
பட்சி பசித்தாலும் எட்டிக் கனியைத் தின்னாது.
பட்ட இடம் பொழுது, விட்ட இடம் விடுதி.
பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.
பட்டடை வாய்த்தால் பணி வாய்க்கும்.
பட்டணத்தான் பெற்ற குட்டி பணம் பறிக்க வல்ல குட்டி.
பட்டணத்து வாசலைப் படலாலே மூடுகிறதோ?
7750 பட்டணத்து வாசலைப் பட்டாலே மூடியிருக்கிறதா?
பட்டணத்தைப் படல்கட்டிச் சாதத்தலாமா?
பட்டதும் கெட்டதும் பாய் முடைந்து விற்றதும் ஓலை கிடையாமல் உட்காந்திருந்ததும்.
பட்டப்பகலிலே நக்ஷத்திரம் கண்டாற் போல.
பட்டப்பகலிலே போகிறவளுக்குத் தட்டுக் கூடை மறைப்பா?
பட்டப்பகல் போல நிலவெரிக்கக் குட்டிச்சுவரிலே முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா?
பட்டப்பகல் விளக்குப் பாழடைந்தாற்போல.
பட்டப்பகற் போல.
பட்டவர்க்குப் பதவி உண்டு.
பட்டவனுக்குத் தெரியும் படையிற் கலக்கம்.
7760 பட்டவளுக்குப் பதவி படாதவளுக்கு நரகம்.
பட்டா உன்பேரில், சாகுபடி என்மேலே (ஊரிலே).
பட்டா ஒருவர் பேரில், அநுபவம் ஒருவருக்கு.

பட்டால் அறிவான் சண்டாளன், மழை பெய்தால் அறிவான் வெள்ளாளன்.
பட்டால் தெரியும் பறையனுக்கு.
பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு, கெட்டால் தெரியும் கோமுட்டிக்கு.
பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு, சுட்டால் தெரியும் நண்டுக்கு.
பட்டால் பகல் கறி படா விட்டால் இராக்கறி.
பட்டால் பலனுண்டு.
பட்டால் பாழ்போமா?
7770 பட்டிக்காட்டுக்குச் சிவப்புத் துப்பட்டி பீதாம்பரம்.
பட்டிமாட்டுக்குக் கட்டை கட்டினதுபோல.
பட்டிமாட்டு:ககுச் சூடு போட்டாற்போல.
பட்டினத்து நரியைப் பனங்காட்டு நரி ஏய்த்ததாம்.
பட்டு அறி கெட்டு அறி பத்து எட்டுஇறுத்து அறி.
பட்டு குலைந்தால் பொட்டு.
பட்டுக் கத்தரித்தது போலப் பேசவேண்டும்.
பட்டுக் கத்திரித்தாற் போல.
பட்டுக்கு அழுவார் பணிக்கு அழுவார் வையகத்தில், பாக்குக்கு அழுத பாரதத்தைக் கண்டதில்லை.
பட்டுக் கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப் பாக்குக்கு விலை சொல்லுகின்றாய்.
7780 பட்டு நூலுக்குள்ள சிக்கெல்லாம் இருக்கிறது.
பட்டு நூல் தலை கெட்டாற் போல.
பட்டுப்புடைவை இரவல் கொடுத்ததுமல்லாமல் பாயும் தூக்கிக்கொண்டு அலைய வேண்டியாச்சுது.
பட்டுப்புடைவை இரவல் கொடுத்து மணை எடுத்துக் கொண்டு திரிவது போல (அலையலாச்சுது).
பட்டுப் புடைவையில் ஊசித் தட்டுருவிப் பாய்ந்தாய் போல.
பட்டு மக்கினாலும் பெட்டியிலே.
பட்டும் பட்டாடையும் பெட்டியிலிருக்கும், காற் காசுக் கந்தை ஓடி உலாவும்.
பட்டும் பாழ், நட்டும் சாவி.
பட்டைக்குத் தக்க பழங்கயிறு.
பணக்கள்ளி பாயில் படாள்.

7790 பணக்காரனுடன் பந்தயம் போடலாமா?

பணக்காரன் பின்னும் பத்துப்பேர் பைத்தியக்காரன் பின்னும் பத்துப்பேர்.

பணத்துக்கு ஒரு அம்புகொண்டு பாழில் எய்கிறது போல.

பணத்துக்குப் பெயர் ஆட்கொல்லி.

பணத்தைக்கொடுக்கச் சொல்லி உயிரைவாங்குகிறது.

பணத்தைக் கொடுத்துப் பணிகாரத்தை வாங்கிப் பற்றைக்குள்ளே இருந்து தின்ன வேண்டுமா?

பணத்தைப் [illegible]க்கிற பழமையைப் பார்க்கிறதா?

பணமிருக்க வேணும் இல்லா விட்டால் பத்து சன மிருக்க வேணும்.

பணமும் பத்தாயிருக்கவேணும் பெண்ணும் முத்தா யிருக்கவேணும்.

பணமும் பத்தாயிருக்க வேண்டும், பெண்ணும் முத்தாயிருக்க வேண்டும், முறையிலேயும் அத்தை மகளாயிருக்கவேண்டும்.

7800 பணம் இருந்தால் பாக்ஷா, பணம் இல்லாவிட்டால் பக்கிரி.

பணம் இல்லாதவன் பிணம்.

பணம் உண்டானால் படையையும் வெல்லுவான்.

பணம் உண்டானால் மன முண்டு.

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.

பணம் என்றால் பேயாய்ப் பறக்கிறது.

பணம் என்ன செய்யும் பத்துவிதம் செய்யும்.

பணம் என்ன பாஷாணம் குணம் ஒன்றே போதும்.

பணம் குலமாகும், பசி கறியாகும்.

பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே.

7810 பணம் பார்த்துப் பண்டங்கொள், குணம் பார்த்துப் பெண்கொள்.

பணம் பெரிதோ பழமை பெரிதோ?

பணிகாரமோ சிலு சிலுப்போ?

பணிசவன் (பணிசெய்வோன்) வாயும் சங்குச்சூத்துமாய்ப் பேசுகிறான்.

பணியும் என்றும் பெருமை.

பண்டமோரிடத்திலே பழியோரிடத்திலே.

பண்டமோரிடத்திலே பாவமோரிடத்திலே.
பண்டாரமே, குருக்களே, பறைச்சி மூத்திரம் குடித் தவரே.
பண்டாரம் பிண்டத்துக்கு அழுகிறான், லிங்கம் பால் சோற்றுக்கு அழுகிறது.
பண்டைபட்ட பாட்டைப் பழங்கிடுகில் போட்டுவிட்டுச் சம்பாநெல் குத்திப் பொங்கல் இடுகிறாள்.
7820 பண்ணப் பண்ணப் பலவிதம் ஆகும்.
பண்ணிப் பதித்தாற்போல.
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
பண்ணின பயிரில் அல்லவா புண்ணியந்தெரியும்?
பண்ணிய பாவத்தைப் பட்டுத் தொலைக்கவேண்டும்.
பண்ணைக்காரன் பெண்டாட்டி பணியக்கிடந்து செத்தாளாம்.
பண்ணைப்பூப் (பாவட்டம்) போல நரைத்தும் புத்தியில்லை.
பதமாய்ச் சிநேகம் பண்ணவேண்டும்.
பதறாத காரியம் சிதறாது.
பதறிச்செய்கிற காரியம் சிதறிக் கெட்டுப் போகும்.
830 பதறின காரியம் பாழ்.
பதனம் பத்துக்கெளிது.
பதிவிரதா பத்தினி கதை கேட்டு வந்தேன், பட்டுக் கிடப்பாய், காலை மடக்கு.
பதிவிரதைக்குப் பர்த்தாவே தெய்வம்.
பதினாயிரம் கொடுத்தாலும் பதைப்பு ஆகாது.
பதினாறு பல்லிலே ஒரு பல் பற்கறைபட்டதுபோல.
பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கிறது.
பதின் காதம் போனாலும் பழக்கம் வேண்டும்.
பதுங்குகிறதெல்லாம் (புலி) பாய்ச்சலுக்கு அடையாளம்.
பதுமை போல் நடிக்கிறான்.
40 பத்தாம் பேறு பாடையில் வைக்கும்.
பத்தி இல்லாத புத்தி அசேதனம்.
பத்தி இல்லாப் பூனை பரமண்டலத்துக்குப் போச்சுதாம், நெத்திலிமீனை வாயிலே கவ்விக்கொண்டு.

பத்தி உள்ளவனுக்குப் புட்டுக்கூடை அண்டம் புறப் பட்டுப் போச்சுதா?
பத்தி கொள்பவன் முத்தி உள்ளவன்.
பத்தி படபட, பானைசட்டி லொடலொட.
பத்தியத்துக்கு முருங்கைக்காய் கொண்டுவரச் சொன்னால் (வாங்கி வா என்றால்), பால் தெளிக்கு அகத்திக்கீரை கொண்டு வருவான்.
பத்தியோடே பாகற்காய் சட்டியோடே தீயுது.
பத்திரம், என் வாசலில் அடிவைக்காதே.
பத்திலே பசலை, இருபதிலே இடும்பு.
7850 பத்திலே விழுந்த பாம்பும் சாவாது.
பத்தினியைத் தொட்டதும், துரியோதனன் பட்டதும் (கெட்டதும்).
பத்து அரிசியும் வேகவில்லை, பாவி என் பிராணனும் போகவில்லை.
பத்து இறுத்தாலும் (இறுத்த பின்பு) பாரச் சந்தேகம் தீர்ந்தது.
பத்து ஏர் வைத்துப் படை மரமுந் தோற்றேன், எத்தனை ஏர் வைத்துக் கோவணமுந் தோற்றாய்?
பத்துக் கப்பல் வந்தாலும் பறந்த கப்பல், எட்டுக் கப்பல் வந்தாலும் இறந்த கப்பல்.
பத்துக் காதம் போனாலும் பழக்கம் வேண்டும்.
பத்துக்கு மேலே ஒரு பறையனுக்காவது தள்ள வேண்டும்.
பத்துப் பணம் கொடுத்தாலும் இத்தனை பதைப்பு ஆகாது.
பத்துப் பேரோடு பதினோராம் பேராயிருக்க வேண்டும்.
7860 பத்துப் பேருக்குப் பல்குச்சி, ஒருவனுக்குத் தலைச் சுமை.
பத்துப் பேர் மெச்சப் படிக்கிறதிலேயும், ஆயிரம் பேரை அடிக்கிறதிலேயும், நாலுபேர் மெச்ச நடிக்கிறதிலேயும், மிடா மிடாவாகக் குடிக்கிறதே கெட்டிக்காரத்தனம்.
பத்துமாட்டிலே கட்டுக்கடங்காதவன்.
பத்தி வயதிலே பாலனைப் பெறு.
பத்து வராகன் இறுத்தோம் என்றாலும் சந்தேகம் நிவிர்த்தியாயிற்றே.

பத்து விதத்திலும் பறையனை நம்பலாம், பார்ப்பானை நம்பக்கூடாது.
பத்தோடே பதினொன்று, அத்தோடே இதொன்று.
பத்மாசுரன் பரிட்சை பார்த்தது போல.
பந்தடி போல் துள்ளிப் பரிதபிக்கிறது.
பந்தமும் கூத்தும் விடிந்தால் தெரியும்.
7870 பந்தம் கெட்டு மோக்ஷம் காணியாட்சியாகும்.
பந்தம் சொன்னார் படைக்காகார்.
பந்திக் கில்லாத வாழைக்காய் பந்தலிலே கட்டித் தொங்குதாம்.
பந்திக்கு முந்தவேண்டும், படைக்குப் பிந்தவேண்டும்.
பந்திக்கு முந்திக்கொள், படைக்குப் பிந்திக்கொள்.
பந்தியிலே வேண்டாம் என்றால் இலை பொத்தல் என்றால்.
பந்தியிலே வேண்டாம் வேண்டாம் என்றால் இலை பொத்தல் இலை பொத்தல் என்கிறான்.
பயணக்காரன் பைத்தியக்காரன்.
பயறு பயறு என்ற பிள்ளை பசறு பசறு என்கிறது.
பயற்றங்கூழுக்குப் பங்கிழந்தவன் கதை போல.
7880 பயித்தியமோ பண்டாரமே என்றால் இப்போதுதான் தொடருகிறது என்றான்.
பயித்தியம் தெளிகிறது உலக்கை எடுத்துவா காதுகுத்த.
பயித்தியம் பரிகாசம் வேணும் ஒன்று அதிகாரம் வேணும்.
பயித்தியம் பிடித்துப் பாயைப் பறண்டுகிறது.
பரணி அடுப்புப் பாழ்போகாது.
பரணியிலே பிறந்தால் தரணி ஆளலாம்.
பரதம் எப்படி பக்தர்கள் அப்படி.
பரபோகந் தேடி இகபோகம் நாடி வாழ்க்கை பெற வேண்டும்.
பரப்பான் பயிரிழந்தான், இரப்பான் சுகமிழந்தான்.
பரப்பிரமத்தைத் தியானஞ் செய்வதினால், பிரகாசிக் காமலிருந்த விஞ்ஞானமானது பிரகாசமாகிறது.
7890 பரம்பரை ஆண்டியோ, பஞ்சத்துக்கு ஆண்டியோ?
பரிகாசப்பட்டனைப் பாம்பு கடித்தாற்போல.

பரிகாரி உறவு தெருவாசல்மட்டும்.
பரிகாரி தலைமாட்டிலிருந்து அழுந்தன்மைபோல்.
பரிக்கு இடும் கடிவாளத்தை நரிக்கு இடுகிறது.
பரிசத்துக்கு லோபி இழிகண்ணியைக்கொண்டானாம்.
பரிசத்துக்கு அஞ்சிக் குருட்டுக் கண்ணி (கன்னி)யைக் கொண்டது போல.
பரிவுஇல்லாப் போசனத்திற் பட்டினி நன்று, பிரியம் இல்லாப் பெண்டிரிற் பேய் நன்று.
பருத்திக் கடையிலே நாய்க்குப் பணி என்ன?
பருத்திக் காடு உழுகிறதற்கு முன்னே பொம்மனுக்கு ஏழு முழம் திம்மனுக்கு ஏழு முழம்.
7900 பருத்திக்கு உழும் முன்னே தம்பிக்கு எட்டு முழம் (தம்பிக்கு எட்டு முழம் என்கிறான்).
பருத்தி பட்ட பாடெல்லாம் படுகிறது.
பருத்தி புடைவையாய்க் காய்த்ததுபோல.
பருத்திப்பொதிக்கு ஒரு நெருப்புப் பொறிபோல.
பருப்பிலே நெய் விட்டதுபோல.
பருப்பில்லாத கலியாணமா (கல்யாணம் உண்டா)?
பருப்புச் சோற்றுக்குப் பதின் காதம் போவான்.
பருப்பும் பசச்சரிசியும்.
பருமரத்தை அண்டிய பல்லியும் சாகாது.
பருவத்தே பயிர் செய்.
7910 பரோபகாரமே பெரிது.
பலஉமி தின்றால் ஒரு அவிழ் தட்டும்.
பலசரக்குக்காரனைப் பைத்தியம் பிடித்தது போல.
பல தீட்டுக்கு ஒரு முழுக்கு.
பல துளி பெரு வெள்ளம்.
பல தொல்லைக் காரன்.
பலத்தவனுக்கு மருந்து சொன்னாற் பிடுங்கிக் கொடுத்துத் தீரவேண்டும்.
பலத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு.
பல நாளைத்திருடன் ஒருநாளைக்கு அகப்படுவான்.
பல நாளை வெயில் ஒறுத்தாலும் ஒருநாளை வெயில் ஒறுக்காது.
7930 பலந் தேடப்போய்ப் பழிவந்துநேர்ந்ததுபோல.
பலபாவந்தீர ஒருபுண்ணியமாகிலும் பண்ணவேண்டும்.

பல பிச்சை ஆறாய்ப் பெருகும்.
பல மரம் கண்ட தச்சன் ஒரு மரம் (ஒரு மரமும்) வெட்ட மாட்டான்.
பல முயற்சி செய்யினும் பகவன்மேற் சிந்தை வை.
பல வாய்க்கால் ஆறாய்ப் பெருகும்.
பலன் இல்லாப் பல நாளிலும், அறம் செய் ஒரு நாள் பெரிது.
பலா உத்தமம், மா மத்திமம், பாதிரி அதமம்.
பலாப் பழத்தில் மொய்த்த ஈ போல.
பல் ஆடப் பசி ஆறும்.
7930 பல்லக்கு ஏற யோகம் உண்டு, உன்னி ஏறச் சீவன் (பலம்) இல்லை.
பல்லக்குக்கு மேல் மூடி இல்லாதவனுக்கும் காலுக்குச் செருப்பு இல்லாதவனுக்கும் விசாரம் ஒன்றே.
பல்லிலே பச்சரிசி வைக்க.
பல்லுப் பிடுங்கின பாம்பு போல.
பல்லுப் போனால் சொல்லுப் போச்சுது.
பல்லு விழுந்த புடையனுக்குக் கிருதா?
பல்லு விழுந்த புடையன்.
பல்லைக் காட்டிப் பரிதபிக்கிறது.
பல்லைக் குத்தி முகந்து பார்த்தால் தெரியும் நாற்றம்.
பவுசு கெட்ட பாக்கட்டிக்கு இரண்டு பக்கமும் தீவட்டியாம்.
7940 பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
பழக்கம் கொடியது.
பழக்கம் வழக்கம்.
பழங்கால் தூர்க்க வேண்டாம் புதுக்கால் வெட்ட வேண்டாம்.
பழத்திலே பழம் மிளகாய்ப் பழம்.
பழந் தேங்காயிலே தான் எண்ணெய்.
பழமை பாராட்ட வேண்டும்.
பழம் நழுவிப் பாலில் விழுந்தது, அதுவும் நழுவி வாயில் விழுந்தது.
பழம் நழுவிப்பாலில் விழுந்தது போல.
பழம் பழுத்தால் கொம்பில் தங்காது.

7950 பழம் புண்ணாளி பாதி வைத்தியன் (பரிகாரி).
பழனியாண்டவன் சந்நிதானம்.
பழி ஒரு இடத்திலே பாரம் ஒரு இடத்திலே.
பழி ஓரண்டை பாவம் ஓரண்டை.
பழிக்கு அஞ்சாதவன் கொலைக்கு அஞ்சுவானா?
பழிக்கு அஞ்சு, பாவத்துக்கு அஞ்சு (பாவத்துக் கெஞ்சு.)
பழிக்கு ஆனோர் சிலர், பழிபடுவோர் சிலர்.
பழித்தார் தலையில் பாடு வரும்.
பழி போட்டுத் தலை வாங்குகிற ஜாதி.
பழிப்பன பகரேல்.
7960 பழிப்பான கல்வி பாவத்தின் ஊற்று.
பழுது செய்ததை அறிக்கை இடில் பாதி நிவிர்த்தி.
பழுதை என்று கிடக்கப் படவு மில்லை, பாம்பென்று நினைக்கப்படவு மில்லை.
பழுதை பாம்பாய்த் தோன்றினது.
பழுத்த ஓலையைப் பார்த்துக் குருத்து ஓலை சிரிக்கிற தாம் (சிரித்தது போல).
பழுத்த பழம் கொம்பிலே நிற்குமா?
பழைய கறுப்பன் கறுப்பனே பழைய மண்கிண்ணி மண்கிண்ணியே.
பழைய குருடி கதவைத்திறடி (திறவடி).
பழையது மிகுந்த (மீந்த) இடமே காணியாட்சி.
பழைய பகையை எண்ணிப் பழ முள்ளுக் கிளையாதே.
7970 பழைய பொன்னனே பொன்னன் பழைய கப்பரையே கப்பரை.
பழையனூர் நீலி பரிதபித்து அழுதது போல.
பள்ளத்திலே இருக்கிறவன் பள்ளத்தில இருப்பானா?
பள்ளத்திலே இருந்தால் பெண்சாதி, மேட்டிலே இருந்தால் அக்காள்.
பள்ளத்தில் இறங்கினால் பெண்டாட்டி, மேட்டில் ஏறினால் தாயா?
பள்ளம் இறைத்தவன் பங்கு கொண்டு போகிறான்.
பள்ளம் உள்ள இடத்திலே தண்ணீர் நிற்கும்.
பள்ளம் உள்ள இடத்திலே தண்ணீர் நிற்கும், பயமுள்ள இடத்திலே பழிபோம்.

பள்ளம் மேடில்லாமல் பருத்தி விதைக்கிறது.
பள்ளி ஒளித்திரான் பார்ப்பான் குளித்திரான்.
7980 பள்ளி கையில் பணம் இருந்தால் பாதிராத்திரியில் பாடுவான்.
பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது.
பள்ளிக் குப்பத்துக்கு அம்பட்ட வாத்தியார் (அம் பட்டன் உவாத்தியார்).
பள்ளிக்குப் பத்து மணை.
பள்ளிக்குப் பல்லு, பார்ப்பானுக்கு முழுக்கு.
பள்ளிக்கும் இரும்புக்கும் பதம் பார்த்து அடி.
பள்ளிக்கு வைக்காமல் கொள்ளிக்குக் குறைத்து வைத்தார்.
பள்ளி பாக்குத்தின்றால் பத்து விரலும் சுண்ணாம்பு.
பள்ளிப்பிள்ளை என்றால் செல்வம் (செல்லம்) குறையுமா?
பள்ளிப் பிள்ளைக்குப் பகுத்தறிவு ஏது?
7990 பள்ளி மச்சான் கதை போல.
பள்ளியை நினைத்துப் பாயில் படுத்தால் பரமசிவன் போல் பிள்ளை வரும்!
பள்ளியையும் பனங்காயையும் பதம் பார்த் தடிக்க வேண்டும்.
பறக்கச்சே தெரியாதா காக்காயின் முடுக்கு?
பறக்கிற பட்சிக்கு இருக்கிற கொம்பு நிலைவரமா?
பறக்கிற பட்சிக்குச் சிறகு ஒடிந்தாற் போல.
பறக்கிற பறவைக்கு எது தூரம்?
பறக்கும் காகம் இருக்கும் கொம்பு அறியாதா?
பறக்கும் குருவிக்கு இருக்கும் கொம்பு தெரியாது, பரதேசிக்குத் தங்கும் இடம் தெரியாது.
பறங்கிக் காய் அழுகலைப் பசுவுக்குப் போடு, பசுவுந் தின்னா விடில் பார்ப்பானுக்குக் கொடு.
8000 பறங்கி நல்லவன், பிரம்பு பொல்லாதது.
பறந்து பறந்து பாடு பட்டாலும் பகலுக்குச் சோறில்லை.
பறந்து போகிற எச்சிற் கல்லைமேல் கல்லைத் தூக்கி வைத்தாற் போல.

பறப்பான் பயிர் இழந்தான்.
பறப்பான் பயிர் இழந்தான் அறக் காஞ்சி பெண்டிழிந்தான்.
பறி கொடுத்த காட்டில் பயமில்லை.
பறி நிறைந்தால் கரை ஏறுவேன்.
பறைச்சி பிள்ளையைப் பள்ளிக்கு வைத்தாலும் பேச்சிலே ஐயே என்னுமாம்.
பறைச்சி வெற்றிலை போட்டால் பத்து விரலும் சுண்ணாம்பு.
பறைச் சேரி மேளம் கலியாணத்துக்கும் கொட்டும் கல்லெடுப்புக்கும் கொட்டும்.
8010 பறை தட்டினாற் போல.
பறைத் தெருவிலே வில்வம் முளைத்தது போல.
பறைப்பாட்டுக்கும் பறைப்பேச்சுக்கும் சுரைப்பூவிற்கும் மணம் இல்லை.
பறைப்புத்தி அரைப்புத்தி.
பறையனும் பார்ப்பானும் போல.
பறையன் பாக்குத் தின்பதும் பறைச்சி மஞ்சள் குளிப்பதும் அறுப்பும் பறிப்பு மட்டும்.
பறையன் பொங்கலிட்டால் பகவானுக்கு ஏறாதோ?
பறையைப் பள்ளிக்கு வைத்தாலும் துறைப்பேச்சுப் போமா?
பறை வேலை அரை வேலை.
பனங் காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா?
8020 பனிக் கண் திறந்தால் மழைக்கண் திறக்கும்.
பனிக்காலம் பின்னிட்டது அனி காலனுக்கும் பயமில்லை.
பனி பெய்தால் மழை இல்லை, பழம் இருந்தால் பூ [இல்லை.
பனி பெய்து கடல் நிறையுமா?
பனி பெய்து குளம் நிரம்புமா?
பனி பெய்து குளம் ரொம்புமா, மழை பெய்து குளம் ரொம்புமா?
பனிப் பெருக்கிலே கப்பல் ஓடுமா?
பனியை நம்பி ஏர்பூட்டினது போல.
பனை ஏறியும் பாளை தொடாது இறங்கினாற் போல.
பனை ஏறி விழுந்தவனைக் கடா ஏறி மிதித்ததுபோல.

8030 பனை நிழலும் நிழலோ, பகைவர் உறவும் உறவோ?
பனை மட்டையில் மழை பெய்தது போல.
பனை மரத்திற்கு நிழலில்லை பறையனுக்கு முறையில்லை.
பனை மரத்தின் கீழிருந்து பாலைக் குடித்தாலும் கள் குடித்தான் என்பார்கள்.
பனை மரத்தின் கீழே பாலைக்குடித்தாலும் கள் என்று நினைப்பார்.
பனை மரம் ஏறுகிறவனை எதுவரையில் (எத்தனை தூரம்) தாங்கலாம்?
பனையிலிருந்து விழுந்தவனைப் பாம்புகடித்ததுபோல.
பனை வெட்டின இடத்திலே கழுதை வட்டம் போட்டது போல.
பன்றிக் குட்டி ஆனையாமா?
பன்றிக் குட்டிக்கு ஒரு சாந்தி ஏது?
8040 பன்றிக் குட்டிக்குச் சங்கிராந்தி ஏது?
பன்றிக் குட்டிக்குச் சங்கிராந்தி.
பன்றிக்குத் தவிடுவைக்கப்போனாலும் உர் என்கிறது, கழுத்து அறுக்கப் போனாலும் உர் என்கிறது.
பன்றிக்குப் பின் போகிற கன்றும் பீ தின்னும்.
பன்றி பட்டால் அவனோடே, காட்டானை பட்டால் பங்கு.
பன்றி பல குட்டி, சிங்கம் ஒரு குட்டி.
பன்றி பல குட்டி போட்டு என்ன?
பன்றி புல் தின்றதனால் பலனுண்டா?
பன்றியோடு கூடிய கன்றும் பீ தின்றதாம்.
பன்னி உரைத்திடிலோ பாரதமாகும்.
8050 பன்னிச் சொன்னால் பாரதமாகும்.
பன்னிப் பன்னிப் பழங் கதை படியாதே.

---

## பா.

பாகற் கொட்டை புதைக்கச் சுரைக் கொட்டை முளைக்குமா?
பாகை சொந்தம் மற்ற தெல்லாம் இரவல்.
பாக்குக் கொடுத்தால் பந்தலிலே என்ன அலுவல்?

பாக்கு வெட்டிக்குள் அகப்பட்ட பாக்குப் போல.
பாக்கை மடியிலே கட்டலாம், தோப்பை மடியிலே கட்டலாமா?
பாசமற வற்றிப் பசையறத் தேய்க்கிறது.
பாசம் அற்றவன் பரதேசி.
பாடகக்காரியிடம் பாரதஞ் சொன்னால் பாடகத்தைப் பார்ப்பாளா, பாரதத்தைக் கேட்பாளா?
8060 பாடகக்காரி வாழ்ந்தால் பத்தெட்டுச் சனம் பிழைக்கும்.
பாடம் ஏறினும் ஏடு கைவிடேல்.
பாடிப் பாடிக் குத்தினாலும் பதரில் அரிசி இல்லை.
பாடில்லாமற் பயனில்லை.
பாடு என்றால் பாணனும் பாடான்.
பாடு படாமற் போனால் பலன் இல்லாமற் போகும்.
பாடு இல்லை பலனும் இல்லை.
பாடும் புலவர் கையில் பட்டோலை ஆனேனே.
பாடை ஏறியும் ஏடு கைவிடேல்.
பாடையிலே பார்க்க வேணுமென்றால் சாகையிலே வா.
8070 பாட்டி கெட்டிக்காரி (பைத்தியக்காரி) பதக்கைப் போட்டு முக்குறுணி என்பாள்.
பாட்டி நூற்கிற நூலுக்கும் பேரன் கட்டுகிற அண்ணாக்கயிற்று (அரை ஞாண், அரை நாண்)க்கும் சரி.
பாட்டி பைத்தியக்காரி பதக்குப்போட்டு முக்குறுணி.
பாட்டுக்கழுவார் பணிக்கழுவார் வையகத்தில், பாக்குக்கழுத பாரதத்தைக் கண்டதில்லை.
பாட்டுப்போன வெட்ட வெளியிலே வீட்டைக் கட்டுவானேன்?
பாட்டு வாய்த்தால் கிழவியும் பாடுவாள்.
பாணம் தொடுத்தாற் போலப் பேசுகிறான்.
பாண்டவாள் தெரியாதா கட்டில் காலுபோல மூன்று பேர் என்று சொல்லி, இரண்டு விரலைக்காட்டி, நிலத்தில் ஒரு கோடு எழுதினானாம் (கோடு எழுதி அதையும் அழித்தானாம்).

பாதகர் பழக்கம் பாம்பொடு பழகல் போல்.
பாதிச் சுரைக்காய் கறிக்கும் பாதிச் சுரைக்காய் விதைக்குமா?
8080 பாதிப் பாக்கைக் கப்பலிலே போட்டுப் பங்குக்கு நின்றானாம்.
பாத்திரம் அறிந்து பிச்சை இடு, கோத்திரம் அறிந்து பெண்ணைக்கொடு.
பாத்திரம் அறிந்து பிச்சைபோடு.
பாப்பாச்சாலே அடித்துப் பருப்பும் சோறும் போட்டது போல்.
பாமணி ஆற்றிலே பல்லை விளக்கு, முல்லை ஆற்றிலே முகம்கழுவு.
பாம்பறியும் பாம்பின் கால்.
பாம்பாட்டிக்குப் பாம்பிலே சாவு, கள்ளனுக்குக் களவிலே சாவு.
பாம்பாட்டி பாம்பிலே, கள்ளன் களவிலே.
பாம்பிலும் பாம்புக் குட்டி விஷம் அதிகம், வீரியமும் அதிகம்.
பாம்பின் குட்டி பாம்பு, அதன் குட்டி நட்டுவக்காலி.
8090 பாம்பின் வாய்த் தேரை போல.
பாம்பு என்றால் படையும் நடுங்கும்.
பாம்பு கடிக்கத் தேளுக்குப் பார்க்கிறதோ?
பாம்புக்குச் சத்துரு பஞ்சமா?
பாம்புக்குட்டிக்குப் பால்வார்த்து வளர்த்தாலும் படு விஷத்தைக் கொடுக்கும்.
பாம்புக்குட்டிக்கு விஷம் பாலடைவைத்துப் புகட்ட வேணுமா?
பாம்புக்குட்டியைக் கண்ட இடத்தில் தலையை நசுக்கு.
பாம்புக்குத் தலையைக் காட்டி மீனுக்கு வாலைக் காட்டுகிறது.
பாம்புக்குப் பகை கருடன்.
பாம்புக்குப் பாம்பு விஷமுண்டோ?
8100 பாம்புக்குப் பால்வார்த்தாற் போல.
பாம்புக்குப் பால்வார்த்து வளர்த்தாலும் விஷத்தைக் கொடுக்கும்.

பாம்புக்கு மருந்துகேட்கத் தேளுக்கு மந்திரித்தது போல.
பாம்புக்கு மூப்பு இல்லை.
பாம்புக்கு ராஜா மூங்கில் தடி.
பாம்புக்கு விஷம் பல்லிலே, பரத்தைக்கு விஷம் உடம் பெங்கும்.
பாம்பு தன் பசியை நினைக்கும், தேரை தன் விதியை நினைக்கும்.
பாம்பு தின்கிற ஊரிலேபோனால் நடுமுறி நமக்கு என்றிருக்கவேண்டும்.
பாம்பு பகையும் தோல் உறவுமா?
பாம்பு பசிக்கில் தேரையைப் பிடிக்கும்.
8120 பாம்பும் கீரியும்போல.
பாம்பும் கீரியும் போலப் பலகாலம் வாழ்ந்தேன்.
பாம்பும் சாகவேண்டும் பாம்படித்த கோலும் முறியாமல் இருக்கவேண்டும்.
பாம்பும் நோவாமல் பாம்படித்தகோலும் நோவாமல் இருக்கவேண்டும்.
பாம்பை முட்டையிலே புலியைக் குட்டியிலே கொல்ல வேண்டும்.
பாம்பொடு பழகேல்.
பாயைச் சுருட்டடி பிள்ளையை இடுக்கடி பரதேசம் போக.
பாய்மரமில்லாக் கப்பலைப்போல.
பாய்மரம் சேர்ந்த காகம்போல் ஆனேன்.
8120 பாரபுத்தி உள்ள பறவை பதரால் பிடிக்கப்பட்டது.
பாராத உடைமை பாழ்.
பாராத காரியம் பாழ்.
பாராளும் பட்டம் கிடைக்குமா?
பாரைக்கு ஊடாடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு ஊடோடி விடும்.
பார் ஆளலாமென்று பால் குடிக்கிறாய்.
பார், கேள், மவுனமாயிரு.
பார்க்கக்கொடுத்த பணத்துக்கு வெள்ளிக்கிழமையா?

பார்க்கப் பதினாயிரம் கண்வேண்டும்.
பார்க்காத உடைமை பாழ்.
8130 பார்க்கிற கண்ணுக்குக் கேட்கிற செவி பொல்லாது (காதுமேல்).
பார்க்கிற பார்வையும் தேய்க்கிற தேய்ப்பும் நான் அறிவேன் பார் பார், தேய் தேய்.
பார்த்த கண்ணும் பூத்துப் பகலும் இரவாயிற்று.
பார்த்த கண்ணும் பூத்துப்போயிற்று.
பார்த்த முகம் எல்லாம் வேற்றுமுகம்.
பார்த்தவர்க் கின்பம், படுபவருக்குத் துன்பம்.
பார்த்தால் தெரியுமா பட்டால் தெரியுமா வருத்தம்?
பார்த்தால் பூனை பாய்ந்தால் புலி.
பார்த்திருக்கத் தின்று விழித்திருக்கக் கைகழுவுவான்.
பார்த்திருந்தவள் பச்சை குத்தினாள், கேட்டிருந்தவள் வறுத்துக்குத்தினாள்.
8140 பார்த்திருந்தும் பாழ்ங்கிணற்றிலே விழுந்தாற்போல (விழுகிறதா?)
பார்த்துப் பார்த்துக் கண்ணும் பூத்துப்போச்சுது.
பார்ப்பதற்கு அரிய பரப்பிரமம்.
பார்ப்பாத்தி அம்மா மாடு வந்தது.
பார்ப்பாத்தி அம்மா மாடு வந்தது பார்த்துக்கொள் (பிடித்துக்கட்டிக்கொள்).
பார்ப்பாத்தி உப்புக்கண்டம் போக்கடித்தது (பறி கொடுத்தது) போல.
பார்ப்பாரைப் பார்த்துப் பரதேசம் போவதுபோல.
பார்ப்பார் சேவகமும் வெள்ளைக்குதிரைச் சேவகமும் ஆகாது.
பார்ப்பானுக்குப் பறப்பு, கோவிலிலேயும் சிறப்பு.
பார்ப்பானுக்கு மூத்த பறையன் கேட்பாரில்லாமல் கீழ்ச்சாதியானான்.
8150 பார்ப்பானுக்கு வாய் போக்காதே, ஆண்டிக்கு அது தானும் சொல்லாதே.
பார்ப்பானுக்கு வாய்ப்போக்கு ஆண்டிக்கு அதுதானு மில்லை.
பார்ப்பான் ஏழையும் பசு ஏழையும் உண்டோ?
பார்ப்பான் கறுப்பும் பறையன் சிவப்பும் ஆகாது.

பால ஜோஸ்யம் விருத்த வைத்தியம். [கம்.
பாலருக்குப் பலம் அழுகை, மச்சத்துக்குப் பலம் உத
பாலர்மொழி கேளாதார் குழல் இனிது யாழ் இனிது என்பார்.
பாலனும் பால் குடியாது.
பாலாவுடையான் விருந்துக்கஞ்சான்.
பாலாறாய் நெய்யாறாய்ப் போட்டவன் தலைக்குப் பாக்குப் பிடிக்கிறது.
8160 பாலாறுடையான் விருந்துக்கஞ்சான்.
பாலான நெஞ்செல்லாம் பகையாக்கினான்.
பாலுக்குச் சீனி இல்லை என்போர்க்கும் கூழுக்குக் கறி (உப்பு) இல்லையென்பார்க்கும் வசிரம் ஒன்றே.
பாலுக்கு மிஞ்சின சுவையுமில்லை, பல்லக்குக்கு மிஞ்சின சொகுசுமில்லை.
பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்.
பாலுக்கு வந்தபூனை மோரைக் குடிக்குமா?
பாலுடன் கூடிய நீர்போல.
பாலுமாம் மருந்துமாம்.
பாலும் சோறுமாய்த் தின்கிற பாளையக்காரன் மோட்டுவளையை எண்ணுகிறதுபோல.
பாலும் தேனும் சேர்ந்தாற்போல.
8180 பாலும் நீரும்போல.
பாலும் பதக்கு மோரும் பதக்கோ?
பாலும் வெள்ளை மோரும் வெள்ளை.
பாலை ஊட்டுவார்கள், பாக்கியத்தை ஊட்டுவார்களா? (ஊட்டமாட்டார்கள்).
பாலைக் குடித்தவனுக்குப் பால் ஏப்பம் வரும், கள்ளைக் குடித்தவனுக்குக் கள் ஏப்பம் வரும்.
பாலைப் பார்த்தா (பார்க்கிறதா) பானையைப் பார்த்தா (பார்க்கிறதா)?
பாலைப்பார்த்துப் பசுவைக்கொள்ளு, தாயைப்பார்த்துப் பெண்ணைக்கொள்ளு.
பாலையும் சோற்றையும் குழந்தைகள் பாச்சி சோச்சி என்பது போல.
பாலைவார்த்துத் தலையை முழுகு (முழுகிவிடு).
பாலொடு கலந்த நீரும் பாலாகும்.

8180 பாலோடாயினும் காலம் அறிந்து உண்.
பால் ஆரியனுக்கு, பசு ராமநாத சுவாமிக்கு.
பால் இருக்கிறது பாக்கியம் இருக்கிறது, பாலிலே போட்டுக் குடிக்கப் பத்துப் பருக்கைக்கு வழி யில்லை.
பால்குடிக்கப் பாக்கியமில்லாதவன் விலைப்பால் வாங் கினானாம், அதையும் பூனை குடித்ததாம்.
பால்குடிக்கப் பாக்கிய மில்லாவிட்டால் விலைப்பால் வாங்கினாலும் பூனை குடித்துவிடும்.
பால் குடித்தவனுக்குப் பால் ஏப்பம், கள் குடித்தவனுக்குக் கள் ஏப்பம்.
பால் சுடுகிறது என்று ஊதிக்குடிப்பார்கள், மோர் சுடுகிறதென்று ஊதிக்குடிக்கிறேன்.
பால் சுண்டினாலும் சுவை சுண்டுமா?
பால்தொட்டுப் பால் கறக்கவேண்டும்.
பால் நக்காத பூனையும் பரிதானம் வாங்காத பிராமணனும் உண்டா?
8190 பால் பொங்கினால் பாற் சட்டியிலே.
பால் வார்த்த சோற்றுக்குத்தான் பழத்தைப் போடுகிறது.
பால்வார்த்து முழுகுவான்.
பாவட்டம் பூப்போல நரைத்தும் புத்தியில்லை.
பாவத்திற்கு இடங்கொடாதவன் பாவத்தைச் செயங் கொள்வான்.
பாவம் உள்ள இடத்திலே பழிபோம்.
பாவம் ஒருபக்கம் பழி ஒருபக்கம்.
பாவம் செய்யாதிரு மனமே!
பாவம் தோன்றிய நாள்முதல் தோன்றிய பழையோன்.
பாவம் போகப் பால் வார்த்து முழுகு.
8200 பாவலர் அருமை நாவலர் அறிவார்.
பாவிகொடுமை பாலும் புளிக்கிறது.
பாவி பாவம் பதராய் விளைந்தது.
பாவியார்போன இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்.
பாவியைப் பிடித்துப் பாம்பாட்டுகிறது.
பாலில் இருக்கிறது பார்த்தும் இருக்கிறது.

பாழடைந்த பழங்குட்டிச் சுவர்போல.
பாழாய்ப்போகிறது பசுவின் வாயிலே (வயிற்றிலே).
பாழூருக்கு நரி ராஜா.
பாற்கடலைக் குடிக்கப் பார்த்திடும் பூனைபோல.
8210 பாற் பசுவைக் கன்றிலே தெரியும், பாக்கியவான் பிள்ளையை முகத்திலே தெரியும்.
பாற் சட்டிக்குப் பூனையைக் காவல் வைத்தாற்போல.
பானுவைக் கண்ட பனிபோல.
பானை ஒட்டினாலும் ஒட்டும், மாமி ஒட்டாள்.
பானைச்சோற்றுக்கு ஒரு சோறுபதம்.
பானையிலே சோறிருந்தால் பார்ப்பான் கண் அடையான்.
பானையிலே பதக்குநெல் இருந்தால் மூலையிலே முக்குறுணிதெய்வம் கூத்தாடும்.
பானையில் அரிசியிருந்தால் பார்ப்பான் கண் உறங்கான்.
பானையில் இருந்தாலல்லவோ அகப்பையில் வரும்?
பானையில் உண்டானால் அகப்பையில் வரும்.
8220 பானையோடே தின்றுபறையனோடே போகிறார்களா?

---

## பி.

பிசினி (பிசினாரி) தன்னை வசனிப்பது வீண்.
பிச்சன் வாழைத்தோட்டத்திலே புகுந்தது போல.
பிக்ஷாதிபதியோ லக்ஷாதிபதியோ!
பிச்சை எடுக்கிறதாம் பெருமாள் (கருடன்), அதைப் பிடுங்குகிறதாம் அநுமார்.
பிச்சை எடுக்கிறதிலும் பிகுவா?
பிச்சைககாரனுக்குப் பயந்து அடுப்பு மூட்டாதது போல.
பிச்சைக்காரனுக்குப் பயப்பட்டு அடுப்பு மூட்டாமல் விடுகிறதா?
பிச்சைக்காரனை அடித்தானாம் அடுப்பங்கரையில் பேண்டானாம்.
பிச்சைக்காரனை அடித்தானாம் சோளியைப் (செம்பைப்) போட்டு உடைத்தானாம்.

8230 பிச்சைக்காரனைப் பேய் பிடித்ததாம் உச்சி உருமத்தில் (உச்சிக்காலம்).
பிச்சைக்காரன் சோற்றிலே சனி புகுந்தது போல.
பிச்சைக்காரன் மேலே பிரமாஸ்திரம் தொடுக்கிறதா?
பிச்சைக்காரன் வாந்தி (வாயில்) எடுத்தாற் போல.
பிச்சைக் குடி பெரிய குடி.
பிச்சைக் குடிலிலே சனீசுவரன் புகுந்தது போல.
பிச்சைக்குப் பிச்சையும் கெட்டது, பின்னையும் ஒரு காசு நாமமும் கெட்டது.
பிச்சைக்கு மூத்தது கச்சவடம்.
பிச்சைக்கு வந்த ஆண்டி இல்லை என்றால் போவானா?
பிச்சைக்கு வந்தவன் பெண்ணுக்கு மாப்பிள்ளையா?
8240 பிச்சைச் சோற்றிலும் எச்சிற் சோறா?
பிச்சைச் சோற்றிலும் குழந்தைச் சோறா?
பிச்சை சோற்றிலும் குழை:நத சோறா?
பிச்சைச் சோற்றிற்கு எச்சில் இல்லை.
பிச்சைச் சோற்றிற்குப் பஞ்சம் உண்டா?
பிச்சைபுகினும் கற்கை நன்றே.
பிச்சை விட்டதுபோதும் நாயைப் பிடித்துக்கட்டும்.
பிச்சையிட்டால் மோக்ஷம்.
பிச்சையிட்டுக் கெட்டவனும் இல்லை, பிள்ளை பெற்றுக் கெட்டவனும் இல்லை.
பிச்சை யெடுத்தும் சத்துருவின் குடி கெடு.
8250 பிஞ்சிலே பழுத்தவன் (பழுத்தாற்போல).
பிடாரியைப் பிடித்துத் தள்ள பெண்ணுடைய சிற்றப்ப னென்று நுழைந்தானாம்.
பிடாரம் பெரிதென்று புற்றிலே கை வைக்கலாமா?
பிடாரனுக்கு அஞ்சிப் பாம்பு எலிக்கு உறவாச்சுதாம்.
பிடாரன் கைப் பாம்பு போல.
பிடாரியாரே கடாவந்தது.
பிடாரியைப் பெண்டு பிடித்தாற் போல (வைத்துக் கொண்டது போல).
பிடாரிவரம் கொடுத்தாலும் ஒச்சன் வரங்கொடுக்கிறது அரிது (இல்லை).
பிடி அழகி புகுந்தால் பெண் அழகி ஆவாள்.
பிடிக்குப் பிடி நமஸ்காரம்.

8260 பிடிக்குப் பிடி நமசிவாயமா?
பிடித்த காரியம் கடித்த வாய் துடைத்தாற் போல் வரும்.
பிடித்த கிளையும் மிதித்த கொம்பும் முறிந்து போச்சுது.
பிடித்த கொம்பு ஒடிந்து மிதித்த கொம்பும் முறிந்தாற் போல் ஆனேன்.
பிடித்த கொம்பும் விட்டேன், மிதித்த கொம்பும் விட்டேன்.
பிடித்ததின் கீழே அறுத்துக் கொண்டு போகிறது.
பிடித்தவர்க் கெல்லாம் பெண்டு.
பிடித்தாற் கற்றை (சுமை), விட்டாற் கூளம்.
பிடித்து ஒரு பிடியும் கிழித்து ஒரு கிழியும் கொடுத் ததுண்டா?
பிடித்துத் தின்கிறதைக் கரைத்துக் குடிக்கலாம்.
8270 பிடி பிடியாய் நட்டால் பொதி பொதியாய் விளையுமா?
பிடிவாதம் குடி நாசம்.
பிட்டு எங்கே விக்கும், தொண்டையிலே விக்கும்.
பிட்டுக் கூடை முண்டத்தில் பொறுக்கி எடுத்தமுண்டம்.
பிட்டுத் தின்று விக்கினாற் போல.
பிணத்தை மூடி மணத்தைச் செய்.
பிணம் சுட்ட தடியும் கூடத்தான் போட்டுச் சுடுகிறது.
பிணம் தின்கிற பூச்சி போல.
பிணம் பிடுங்கித் தின்கிறவன் வீட்டிலே புத்தரிசி யாசகத்துக்குப் போனானாம்.
பிணம் போகிற இடத்தே துக்கமும் போகிறது.
8280 பிணைப்பட்டுக் கொள்ளாதே பெரும்பலத்தை உத் தரிப்பாய்.
பிணைப் பட்டாயோ துணைப் பட்டாயோ?
பிணைப்பட்டுத் துணைபோகாதே.
பிண்டத்துக்குக் கிடையாது தண்டத்துக்கு அகப்படும்.
பிண்டம் பெருங்காயம் அன்னம் கஸ்தூரி.
பிண்ணாக்குத் தராவிட்டால் செக்கிலே பேலுவேன்.

பிண்ணாக்குத் தின்பாரைச் சுண்ணாம்பு கேட்டால் வருமா?

பிதாவைப் போலிருப்பான் புத்திரன்.

பித்தம் பத்து விதம்.

பித்தளை சோதித்தாலும் (துலைத்தாலும்) பொன் குணம் வருமா?

8290 பித்தளை நாற்றம் அறியாது.

பித்தளை மணியற்றவளுக்குப் பொன்மணி என்று பெயர்.

பித்தனுக்குத் தன் குணம் நூலினும் செவ்வை.

பித்தனுக்குப் புத்தி சொன்னால் கேட்பானா?

பித்துப் பிடித்தாற்போலப் பிடித்ததைப் பிடிக்கிறது.

பிய்த்து விட்டாலும் போச்சுது பிடுங்கி விட்டாலும் போச்சுது.

பிய்ந்த (கிழிந்த) சீலையும் பேச்சுக் கற்ற வாயும் சும்மா இராது.

பிய்ப்பானேன் தைப்பானேன்?

பிரசவ வைராக்கியம் புராண வைராக்கியம் ஸ்மசான வைராக்கியம்.

பிரமசாரி ஓடம் கவிழ்த்தாற் போல.

8300 பிரமதேவன் போட்ட புள்ளிக்கு இரண்டாமா?

பிரமா நினைத்தால் ஆயுசுக்கு என்ன (ஆயுசு குறையுமா)?

பிராமணா, உன் வாக்கு பலித்தது.

பிரிந்த கன்றைத் தேடித் திரும்பும் பசுவைப் போல.

பிரிய மில்லாத சோறு பிண்டச் சோறு.

பிழைக்கப்போன இடத்தில் பிழை மோசம் வந்தது போல.

பிழைக்கிற பிள்ளை இறைக் (இந்தக்) கழிச்சல கழியுமா?

பிழைக்கிற பிள்ளையைக் காலைக் கிளப்பிப் பார்த்தால் தெரியாதா?

பிள்ளை அருமை பெற்றவளுக்குத் தெரியும்.

பிள்ளை அருமை மலடி அறிவாளா?

8310 பிள்ளை என்றால் எல்லாருக்கும் பிள்ளை.

பிள்ளை என்றால் பேயும் இரங்கும்.

பிள்ளைக்கா புழுக்கைக்கா இடங் கொடுக்கப் போகாது.
பிள்ளைக்கா பிள்ளைக்கு அழுகிறான், பணி செய்வோன் காசுக்கு அழுகிறான்.
பிள்ளைக்காரி குசு விட்டால் பிள்ளை மேல் சாக்கு.
பிள்ளைக்குப் பிள்ளையாயிருந்து பெட்டைப் பிள்ளையை வேலையாக்கினான்.
பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குப் பிராணசங்கடம்.
பிள்ளை சீர் கொள்ளைக்கிடைக்குமா?
பிள்ளை திறத்தைப் பேல விட்டுப் பார்.
பிள்ளை நல்லதுதான் பொழுது போனால் கண் தெரியாது.
8320 பிள்ளை பதினாறு பெறுவாளென்று எழுதியிருந்தாலும், புருஷன் இல்லாமல் எப்படிப் பெறுவாள்?
பிள்ளை பிறக்கிறதற்கு முன்னே தின்றுபார், மருமகள் வருகிறதற்கு முன்னே கட்டிபார் (போட்டுப்பார்).
பிள்ளை பிறந்த ஊருக்குப் புளடைவை வேணுமா?
பிள்ளை புழுக்கை, பேர் முத்துமாணிக்கம்.
பிள்ளை பெறப் பெற ஆசை, பணம் சேரச் சேர ஆசை.
பிள்ளை பெற்ற வயிறோ, நெல் எடுத்த குழியோ?
பிள்ளை பெற்றவளைப் பார்த்து பெருமூச்சுவிட்டு ஆவதென்ன?
பிள்ளை பெற்றவளைப் பார்த்து மலடி பெருமூச்சு விட்டு அழுததுபோல.
பிள்ளை பெற்றவனுக்கும் மாடு படைத்தவனுக்கும் வெட்கமில்லை.
பிள்ளை பெற்றுப் பேரிடவேண்டும்.
8330 பிள்ளைப்பேறு பார்த்ததும் போதும், என் ஆமுடையானைக் கட்டி அணைத்ததும் போதும்.
பிள்ளை மலபாதை செய்ததொன்று தொடையை அறுக்கிறதா?
பிள்ளையாண்டான் கெட்டிக்காரன் பொழுதுபோனால் கண் தெரியாது.
பிள்ளையாருக்குப் பெண் கொள்வதுபோல்.

பிள்ளையார் கோவிலில் கள்ளன் இருக்கிறானாலும் கோள்போலிருக்கும்.

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது.

பிள்ளை யில்லாச் சோறு புழு.

பிள்ளை யில்லாத பாக்கியம் பெற்றிருந்தென்ன சிலாக்கியம்.

8340 பிள்ளையில்லா வீட்டில் கிழவன் துள்ளி விளை யாடுகிறானாம்.

பிள்ளையின் மடியிலே பெற்றவன் உயிர்விட்டால் பெருங்கதியுண்டு.

பிள்ளையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகிறதா?

பிள்ளையும் புழுக்கையும் சரி, பிள்ளைக்கும் புழுக்கைக்கும் இடங்கொடாதே.

பிள்ளையைச் சாக்கிட்டுப் பூதம் விழுங்குகிறது.

பிள்ளை வரத்துக்குப் போன இடத்தில் புருஷனைப் பறி கொடுத்தாற்போல.

பிள்ளை வருத்தத் பெற்றவளுக்குத் தெரியும், மற்றவளுக்குத் தெரியுமா?

பிள்ளை வீட்டுக்காரர் சம்மதித்தால் பாதி விவாகம் முடிந்தது.

பிறக்கிறபொழுதே முடமானால் பேய்க்குப் (தெய்வத்துக்குப்) படைத்தால் தீருமா?

பிறந்த அன்றே இறக்கவேண்டும்.

8350 பிறந்த இடத்துவண்மையை உடன் பிறந்தாளிடத்தில் சொல்லுகிறதா?

பிறந்த ஊருக்குச் சோலை வேண்டாம், பெண்டு இருந்த ஊருக்குப் தாலிவேண்டாம்.

பிறந்த ஊருக்குப்புடைவை வேணுமா?

பிறந்ததெல்லாம் பிள்ளையா?

பிறந்த பிள்ளை பிடிசோற்றுக்கு அழுகிறது, பிறக்கப் போகிற பிள்ளைக்குத் தண்டை சதங்கை தேடுகிறார்களாம்.

பிறந்தவன் இறப்பதே நிசம்.
பிறந்தன இறக்கும் தோன்றின மறையும்.
பிறர்பொருளை இச்சிப்பான் தன்பொருளை இழப்பான்.
பிறர்மனைத்துரும்பு கொள்ளான் பிராமணன் தண்டு கொண்டான்.
8360 பிறவிக் குருடனுக்குக் கண் கிடைத்தது போல.
பிறவிக் குருடனுக்குத் தெய்வம் கண் கொடுத்தாற் போல.
பிறவிக் குருடனிரடு பலத்த முடிச்சாயிருக்கும்.
பிறவிச் செவிடனுக்குப் பேசத் திறமுண்டா?
பிறன்மனை புகாமை அறம் எனத்தகும்.
பின் புத்திக்காரன் பிராமணன்.
பின்னாலே யிருந்து கூண்டு முடைகிறான்.
பின்னால் வரும் பலாக்காயினும் முன்னால் வரும் காளாக்காய் நலம்.
பின்னே யானால் எறியும், முன்னேயானால் முட்டும்.
8370 பின்னே என்பதும் பேசாதிருப்பதும் இல்லை என் பதற்கு அடையாளம்.

## பீ.

பீக்கு முந்தின குசுப்போல.
பீ தின்கிறதிலேயும் ஒய்யாரமா?
பீ தின்கிறதுபோல் கனமவ கண்டால், பொழுது விடிந்தால் யாருக்குச் சொல்லுகிறது?
பீ தின்கிறவன் வீட்டுக்குப் போனால், பொழுது விடிகிறமட்டும் பேலச்சொல்லி அடித்தானாம்.
பீ தின்னவந்த நாய் சூத்தைக் கடிக்கப் போகிறதா?
பீ தின்னவேண்டுமென்றால், வாயை நன்றாய்க் கழுவிப் போடவேண்டும்.
பீ தின்னும் வாய் துடைத்தது போல.
பீ மேலே நிற்கிறாப்போல.
பீயும் சோறுமாய்ப் பிசைகிறது.

8380 பீயைப் பெரிதா யெண்ணி ஈ மொய்க்காமல் வேடு கட்டுவானேன்?
பீரம்பேணி பாரம் தாங்கும்.
பீலா பூத்தகச்சோறு பெரியபறங்கியாப் பேலும் பேலும்.
பீறின புடைவை பெருநாள் இராது.
பீற்றற்பட்டைக்கு அறுதற்கொடி.

---

## பு.

புகழ்ச்சியானுக்கு ஈந்தது பூதக்கண்ணாடி.
புகழ்ந்தாரைப் போற்றிவாழ்.
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
புகை நுழையாத இடத்திலே புகுந்திடும் தரித்திரம்.
புகை நுழையாத இடத்திலேயும் அவன் நுழைவான்.
8390 புகைந்த வீட்டைச் சுற்றுகிறது.
புங்கப்புகழே தங்கத்திகழே.
புடம்போட்டால் பொன்வேறு களிம்புவேறு.
புண்ணியத்துக்கு உழுதமாட்டைப் (குண்டையைப்) பல்லைப்பிடித்துப் பதம் பார்த்ததுபோல.
புண்ணியத்துக்குக் கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டது போல.
புண்ணியம் இல்லாத வழிகாட்டி வீண்.
புண்ணியம் ஒருவன் பங்கல்ல.
புண்ணியம் பார்க்கப் போய்ப் பாவம் பின்னே வந்ததாம்.
புண்ணிலே கோல் இட்டதுபோலத் தூண்டிக் காட்டுகிறான்.
புண்ணிலே புளிபட்டதுபோல.
8400 புண்ணுக்கோ மருந்துக்கோ வீசம்.
புதிதாய்ப் புதிதாய்க் குலம் புகுந்தேன், பீலாப் பூத்த கச்சோறு.
புதிதாய் வந்த மணியக்காரன் நெருப்பாயிருக்கிறான்.
புதிதாய் வந்த மணியக்காரன் நெருப்பைக்கட்டி அடிதானாம்.
புதிய காரியங்களில் புதிய யோசனைவேண்டும்.

புதிய வண்ணானும் பழைய அம்பட்டனும் தேடு (தேடவேண்டும்)
புதிய வண்ணான் பொந்துகட்டி வெளுப்பான்.
புதிய வெள்ளம் பழைய வெள்ளத்தை அடித்துக் கொண்டு போச்சுது.
புதியாரை நம்பிப் பழையாரைக் கைவிடலாமா?
புதுக்குடத்திலே வார்த்த தண்ணீர்போல.
8410 புதுப்பானைக்கு ஈ சேராது.
புதுப்புடைவையிலே பொறிபட்டாற்போல.
புதுப்பெண்ணே புதுப்பெண்ணே நெருப்பெடுத்து வா, உனக்குப் பின்னாலே இருக்கிறது செருப்படி.
புதுப்பெண்போல் நாணுகிறது.
புதுப்பெண் மோடுதூக்கும்.
புதுமணவறைப் பெண்போல நாணுகிறது.
புதுமாடு புல்லு பெறும்.
புதுமைக்கு வண்ணான் பறைதட்டி வெளுத்தான்.
புதுமையான காரியம் தான் இந்தக் கலியுகத்தில்.
புதுவெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் அடித்துக்கொண்டு போகிறது.
8420 புதையல் எடுத்தவனைப்போலே.
புத்தி எத்தனை, சுத்தி எத்தனை.
புத்தி கட்டை பெயர் முத்துமாணிக்கம்.
புத்திகெட்ட ராஜாவுக்கு மதிகெட்ட மந்திரி.
புத்திமான் பலவானாவான், புத்தியற்றான் பலனற்றான்.
புத்திமான் பலவான்.
புத்தி முற்றினவர்க்குச் சித்தியாதது ஒன்றும் இல்லை.
புத்தி யற்றவர்கள் பத்தியாய்ச் செய்வதும் விபரீதமாம்.
புத்தியற்றான் பலனற்றான்.
புத்தியீனர்கள் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வார்கள்.
8430 புத்தியுறப்புகழ்.
புரட்டிப்புரட்டி உதைக்கிறபோதும் மீசையில் மண்படவில்லை என்றான்.

புரண்டும் பத்துநாள் மருண்டும் பத்துநாள் பின்னேயும் பத்துநாள்.
புருஷனுக்கு ஏற்ற மாராப்பு.
புருஷன் அடிக்கக் கொழுந்தன் கோபித்ததுபோல.
புருவத்திற்கு மைஇட்டால் கண்ணுக்கு அழகு.
புருவத்திற்பட்டால் கரிக்குமோ, கண்ணிற்பட்டால் கரிக்குமோ?
புலவர்க்கு வெண்பாப் புலி.
புலி அடிக்குமுன்னே கிலி அடிக்கும்.
புலிகுத்தின சூரியென்று கையிலெடுத்தாலும் போதும், பூனை குத்தின சுளிக்கு (சுளுக்கி) என்று கைபிலெடுத்தாற் பெருமையா?
8440 புலிக்காட்டிலே புகுந்த மான்போல.
புலிக்கு உரிய உணவைப் பூனை புசிக்குமோ?
புலிக்குத் தன்காடு வேற்றுக்காடு உண்டா?
புலிக்குப்பயந்தார் எல்லாரும் என்மேற்படுங்கள்.
புலிக்குப் பயப்பட்ட பேரெல்லாம் பொட்டவந்துன பேரில் படுத்துக்கொள்ளுங்கள்.
புலிக்குப்பிறந்து நகமில்லாமற்போகுமா?
புலிக்குப்பிறந்து பூனையாய்ப்போகுமா?
புலிக்கூட்டத்தில் மான் அகப்பட்டதுபோல.
புலிசெவி திருகிய மதகளிறு.
புலிநகம் படாவிட்டாலும் அதன்மீசை குத்தினாலும் விஷம்.
8450 புலி பசித்தால் புல்லைத் தின்னுமா?
புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம்.
புலிப்பால் குடித்தவன் போலிருக்கிறான்.
புலிமேல் பசுவும் பொருந்தி வாழ்ந்தாற்போல.
புலியூருக்குப் பயந்து நரியூருக்கு வந்தேன், நரியூரும் புலியூராய்ப் போயிற்று.
புலியைக்கண்ட மான்போலே.
புலியைப்பார்த்து நரி சூடிக் கொண்டதுபோல.
புலியைப்பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டது போல.
புலையனுக்குப் பூமுடி பொறுக்குமா?

8460 புலையனுக்கு வாக்குச்சுத்தியும் ஆணையும் இல்லை.
புலையும் கொலையும் களவும் தவிர்.
புல் உள்ள இடத்தில் மாட்டை ஆட்டை மேய வொட்டாது.
புல் உள்ள இடத்தில் மேய்ந்து தண்ணீருள்ள இடத்திலே குடிக்கவொட்டாது.
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் போலாகி விட்டது.
புல்லாளைச்செய்து கொல்லையில் வைத்தாற்போல.
புல்லு இருக்கிற இடத்தில் மேயவிடாது, சோறு இருக்கிற இடத்தில் தின்னவொட்டாது.
புல்லும் பூமியும் உள்ளமட்டும்.
புல்லும் பூமியும் உள்ளமட்டும் என் நிலத்தை அநுபோகம் பண்ணு.
புல்லும் பூமியும் கல்லும் காவேரியும் உள்ளமட்டும்.
8470 புல்லும் பூமியும் கல்லும் காவேரியும் உள்ளமட்டும் என் நிலத்தை அநுபோகம் பண்ணு.
புல்லுவிற்கிற கடையிலே பூ விற்கிறது.
புல்லைத் தின்னும் மாடுபோலப் புலியைத் தின்னும் செந்நாய் உதவுமா?
புழுக்கை ஒழுக்கம் அறியாது, பித்தளை நாற்றம் அறியாது.
புழுக்கை ஒழுக்கம் அறியுமா, பிண்ணாக்குச் சட்டி பதம் அறியுமா?
புழுக்கை கலம் கழுவி உண்ணாது.
புழுக்கை குணம் போகா தொருகாலும்.
புழுக்கைக்குப் புத்தி பிடரியிலே.
புழுக்கைக்குப் பொன் முடி பொறுக்குமா?
புழுக்கைச்சி மேல் சன்னதம் (தெய்வம்) வந்தால் பூ இட்டுக் கும்பிட வேணும்.
8480 புழுங்கிப் புழுங்கி மா இடித்தாலும் புழுக்கைச்சிக்கு ஒரு கொழுக்கட்டை.
புழுத்த சரக்கு கொழுத்த பணம்.
புழைக்கடை மருந்து சுவைக்குதவாது.
புளி எத்தனை தூக்கு, ஒரே தூக்கு.
புளித்த காய்க்குப் புளி புகுத்தினாயோ (புகுத்துவாயோ)?

புளியங் கூடும் (புளியந்தோடும்) பழமும் போல.
புளிய மரத்தில் ஏறினவன் நாக்கெரிவு காணா முன் இறங்குவானா?
புளிய மரத்தில் ஏறினவன் பல் கூசினால் இறங்குவான்.
புளியம் பழத்துக்குப் புளிப்புப் புகுத்து விடவேணுமா?
புளியம் பழமும் தோடும் (ஓடும்) போல.
8490 புளியும் ஓடும்போல் ஒட்டாமலிருக்கிறது.
புளுகினாலும் பொருந்தப் புளுக வேண்டும்.
புள்ளிக் கணக்கன் பள்ளிக்கு ஆவானா?
புள்ளிப் பொறி பாய்ந்த மூங்கில் கொள்ளிச் சாம்பலானாற் போல.
புறக்கடை மருந்து சுவைக்கு உதவாது.
புறக்குடத்துத் தண்ணீர் போல.
புறக்குற்றம் அறி பிடரியிலே கண்.
புற்றிலே ஆந்தை விழிப்பது போல விழிக்கிறான்.
புற்றிலே ஈசெல் புறப்பட்டது போலப் புறப்படுகிறான்.
புற்றிலே ஈசெல் புறப்பட்டாலும் மண்ணிலே கறையான் கூடினாலும் மழை வரவே வரும்.
புற்றிலே கிடந்த புடையன் எழும்பினது போல.

---

## பூ.

8500 பூசணிக்காய் அத்தனை முத்து.
பூசணிக்காய் அத்தனை முத்து காதில் ஏற்றுகிறதா மூக்கில் ஏற்றுகிறதா?
பூசணிக்காய் அத்தனை முத்தைப்போட்டுக் கொள்ளுகிற தெங்கே?
பூசணிக்காய் அழுகினது போல.
பூசணிக்காய் எடுத்தவனைத் தோளிலே காணலாம்.
பூசணிக்கும் (பூசணிக்காய்க்கும்) புடலைக்கும் (புடலங்காய்க்கும்) வித்தியாசம் தெரியாமல் பேசுகிறாய்.
பூசப் பூசப் பொன் நிறம், தின்னத் தின்னத் தன் நிறம்.

பூசாரி பூ முடிக்கப்போனானாம், பூ வாலங்காடு பலாக்காடாய் போச்சுதாம்.
பூசை பண்ணச்சே கரடியை விட்டோட்டினாற்போ [ல.
பூசைமுகத்திலே கரடியைவிட்டு ஓட்டினதுபோல.
8510 பூசை (பூனை) வளர்ந்தது போச்சு.
பூச்சி பூச்சி என்றால் புழுக்கை தலை மேல் ஏறும்.
பூச்சி மரிக்கிறதில்லை புழுவும் சாகிற தில்லை.
பூட்டிப் புசிக்காமற் புதைப்பார் ஈயைப்போல் ஈட்டி இழப்பார்.
பூட்டும் திறப்பும் போல்.
பூதலம் தன்னில் இவ்வூர் புண்ணியம் என்செய் [தோ?
பூதலம் யாவும் போற்று முச் சுடர்.
பூத்தானமான பிள்ளை ஆத்தாளைத் தாலி கட்டிற்றா [ம்.
பூத்தானமான பிள்ளை பிறந்து பூவால் அடி பட்டுச் செத்தது.
பூத்துச் சொரியப் பொறுப்பார்கள் முட்டிக் கட்டக் கலங்குவார்கள்.
8520 பூ மலர்ந்து கெட்டது, வாய் விரிந்து கெட்டது.
பூமி ஆளலா மென்று மனப்பால் குடிக்கிறது போல.
பூமி திருத்தி உண்.
பூமியைப் போலப் பொறுமை வேண்டும்.
பூராடக் காரனோடு போராடி முடியாது.
பூராயமாய் வேலை கற்றுக் கொள்ள வேண்டும்.
பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்.
பூர்வ சேட்டை போச்சுதோஇருக்கிறதோ என்று பார்த்தானாம்.
பூர்வோத்திரம் மேரு காத்திரம் போல் இருக்கிற [து.
பூலோக முதலியார் பட்டம் புகுந்து பார்த்தால் பொட்டல்.
8530 பூவரசிருக்கப் பொன்னுக் கழுவானேன்?
பூ விற்கும் கடையில் புல் விற்பது போல.
பூ விற்ற கடையிலே புல் விற்கவும், புலி இருந்த காட்டிலே பூனை இருக்கவும், சிங்கம் இருந்த குகையிலே நரி இருக்கவும், ஆனை ஏறினவன் ஆடுமேய்க்கவு மாச்சுதே.
பூவிற்ற கடையில் புல் விற்கலாமா?

பூவிற்ற காசுமணக்குமா புலால்விற்ற காசு நாறுமா?
பூவிற்றவனைப் பொன் விற்கப் பண்ணுவேன்.
பூவுடன் கூடிய நாரும் மணம் பெற்றாற் போல.
பூவும் மணமும் போல்.
பூவுள்ள மங்கையாம் பொற் கொடியாம், போன இடமெல்லாம் செருப்படியாம். [க்கிறது.
பூனை உள்ள இடத்திலே எலி பேரன் பேர்த்தி எடு
8540 பூனை கட்டும் தொழுவத்தில் (தோழத்தில்) ஆனை கட்டலாமா?
பூனை குட்டி போட்டாற் போலத் தூக்கிக் கொண்டலைகிறது.
பூனை குண்டுச் சட்டியில் தலையை இட்டுக் கொண்டு பூலோகம் எல்லாம் இருண்டு போச்சுதென்று நினைக்குமாம்.
பூனை குத்தின சுளுக்கி (சுளிக்கு) யென்று கையி லெடுத்தாற் பெருமையா?
பூனை கொன்ற பாவம் உன்னோடே, வெல்லந்தின்ற பாவம் என்னோடே.
பூனைக்கு இல்லை தானமும் தவமும்.
பூனைக்குக் கொண்டாட்டம், எலிக்குத் திண்டாட்டம்.
பூனைக்குச் சிங்கம் பின் வாங்குமா?
பூனைக்குச் சிம்மாளம் வந்தால் பீற்றற் பாயைச் சுரண்டுமாம்.
பூனைக்குத் தன் குட்டி பொன்குட்டி.
8550 பூனைக்கு மீனிருக்கப் புளியங்காயைத் தின்றதாம்.
பூனை சிரித்ததும் எலி பெண்டுக் கழைத்ததும்.
பூனை பால் குடிக்கிறது போல.
பூனை பானையில் தலையை இட்டுக்கொண்டு எல்லாம் இருண்டு போச்சுது என்று நினைக்குமாம்.
பூனை பிராமண போசனம் பண்ணுகிற தென்று பூணூல் போட்டுக் கொண்டதாம்.
பூனைபோல் ஒடுங்கிப் புலி போல் பாய்ந்தான்.
பூனை போல் ஓங்கி யானை போல் ஆக்கிரமிக்கிறது.
பூனை முன் கிளிபோல் புலம்பித் தவிக்கிறது.
பூனையானது தன்னைத் தழுவத் தெரியாத சக்தியற்ற குட்டியைத் தன்வாயில் கவ்விச் செல்வது போல.

பூனையைக் கண்டு புலி அஞ்சுமா?

8560 பூனையைக்கொன்ற பாவம் உனக்கு, பிடி வெல்லம் தின்ற பலன் எனக்கு.

பூனையைத்தான் வீட்டுப் புலியென்றும் எலியரச னென்றும் சொல்வார்கள்.

பூனைவாய் எலிபோல் புலம்பித் தவிக்கிறது.

---

## பெ.

பெட்டி பீற்றல், வாய்க்கட்டு திறம்.

பெட்டிப் பாம்பு ஒட்டி அடங்கினாற் போல.

பெட்டிப் பாம்புபோல் அடங்கினான்.

பெட்டியி லடக்கின குட்டிப்பாம்பு போல.

பெட்டியும் மூடியும் பிளந்தாற்போல.

பெட்டைக்குதிரைக்கு இரட்டைக்கொம்பு முளைத்தது.

பெட்டைக்கோழி கூவியோ விடிகிறது?

8570 பெட்டைக்கோழி தட்டிக்கூவுமா?

பெண் என்றால் பேயும் இரங்கும்.

பெண் கொடுத்த மாமியோ கண் கொடுத்த சாமியோ!

பெண்சாதி யிருந்தால் புது மாப்பிள்ளை.

பெண்சாதி இல்லாதவன் பேயைக்கட்டித் தழுவினது போல.

பெண்சாதி கால் விலங்கு, பிள்ளை சுள்ளாணி.

பெண்சாதி காற்கட்டு, பிள்ளை வாய்க்கட்டு.

பெண்சாதி சொந்தம் போக்கு வரத்துப் புறம்பே.

பெண்சாதி பேச்சைக் கேட்டவன் பேய்போல் அலைவான்.

பெண்சாதி முகத்தை (மூஞ்சியை)ப் பார்க்கா விட்டாலும் பிள்ளை முகத்தைப் பார்க்கவேண்டும்.

8580 பெண்சாதியைக் குதிரைமேல் ஏற்றிப் பெற்ற தாயின் தலையிலே புல்லுக்கட்டை வைத்தடிக்கிற காலம்.

பெண்சாதியைத் தாய் வீட்டில் விட்டவனுக்கு ஒரு சொட்டு.

பெண்டாட்டி ஆசை திண்டாட்டத்தில் விட்டது.

பெண்டாட்டி (பெண்சாதி) கொண்டதும் திண்டாட்டம் பட்டதும் போதும்.
பெண்டாட்டியுடன் கோபித்துப் பரதேசம் போவாருண்டோ?
பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல்.
பெண்டுகளுக்குப் பெற்றோரிடத்திலும் பிள்ளை களிடத்திலும் மூப்பில்லை.
பெண்டுகள் இருந்தஇடம் சண்டைகள் பெருத்திடும்.
பெண்டுகள் இருந்திடின் பெரிய சண்டையாம்.
பெண்டுகள் சமர்த்து அடுப்பங்கரையில் தான்.

8590 பெண்டுகள் சோற்றுக்குத் தண்டமில்லை.
பெண்டுகள் வைத்தியம்.
பெண்டு சூத்திற்குப் பிரிமணையாயிருக்கிறான்.
பெண்டு (பெண்) வாய்க்கும் புண்ணியவானுக்கு, பண்டம் வாய்க்கும் பாக்கியவானுக்கு.
பெண்ணரம்பைக் கூத்துப் போய்ப் பேய்க் கூத்து ஆச்சுதே.
பெண்ணாசை ஒரு பக்கம் மண்ணாசை ஒரு பக்கம்.
பெண்ணாசை கொண்டு பெருக்கத் தவிக்கிறது.
பெண்ணானையைத் தொடரும் பேரானையைப் போல.
பெண்ணின் குணமும் (குணம்) அறிவேன் சம்பந்தி வாயும் (வாய்) அறிவேன்.
பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்.

8600 பெண்ணுக்கு ஒரு கும்பிடு வில்லுக்கு ஒருகும்பிடு.
பெண்ணுக்கு குணம் தான் சீதனம்.
பெண்ணுக்குப் பெண் தான் சீதனம்.
பெண்ணுக்குப் பொன்னிட்டுப் பார், சுவருக்கு மண்ணிட்டுப்பார்.
பெண்ணுக்குப் பொன்னாசை கொள்ளும் பேரணங்கு.
பெண்ணுக்குப் போய்ப் பொன்னுக்குப்பின் வாங்கலாமா?
பெண்ணுக்கு மாமியாரும் பிள்ளைக்கு வாத்தியாரும்.

பெண்ணுக்கும் பொன்னுக்கும் தோற்பு உண்டா?
பெண்ணு மல்லாமல் ஆணுமல்லாமல் பெருமரம் போல் வளருகிறது.
பெண்ணைக் கட்டிக்கொடுப்பார்கள் பிள்ளை பெறு வதற்குப் பிணைபடுவார்களா?
8610 பெண்ணைக் கொடுத்தவளோ (கொடுத்தாயோ) கண்ணைக் கொடுத்தவளோ (கொடுத்தாயோ)?
பெண்ணைக்கொண்டு பையன் பேயானான், பிள்ளை பெற்றுச் சிறுக்கி நாயானாள்.
பெண்ணைத் திருத்தும் பொன்.
பெண்ணைப் பற்றிப் பீயைத் தின்னு.
பெண்ணைப் பிழை பொறுக்கப் பெற்ற தாய் வேண்டாமோ?
பெண்ணை வேண்டும் என்றால் இளியற் கண்ணை நக்கு.
பெண்ணென்ஷுறு பிறந்த போதே புருஷன் பிறந் திருப்பான்.
பெண்ணோடு ஆணோடு பிறக்காத பெரும்பாவி.
பெண்படையும் பலமும் பெருக்கத் தவிக்கிறதோ.
பெண்புத்தி கேட்கிறவன் பேய்.
8620 பெண்புத்தி பின்புத்தி.
பெண்புத்தி பீ தின்னப்போம்.
பெண் மூப்பானவீடு பேரழிந்துபோம்.
பெண்வளர்த்தாயோ பீ வளர்த்தாயோ?
பெண் வளர்த்தி பீர்க்கங்கொடி.
பெய்த மழைக்கும் சரி காய்ந்த வெயிலுக்கும் சரி.
பெய்தும் கெடுத்தது, காய்ந்துங் கெடுத்தது.
பெரிய இடமென்று பிச்சைக்குப்போனாளாம், கரியை வழித்து முகத்திலே தேய்த்தாளாம் (தடவினாளாம்).
பெரியவீடென்று பிச்சைக்குப்போனேன், கரியை வழித்துக் கன்னத்தில் தடவினார்கள்.
பெரியாரைத் துணைக்கொள்.
8630 பெரியார் பெருந்தலை பேய்த் தலைக்கு நாய்த்தலை.
பெரியோரெல்லாம் பெரியருமல்லர்.
பெரியோரைக் கண்டு எழுந்திராதவன் பிணம்.

பெரியோர் உள்ளம் பேதிக்கலாகாது.
பெரியோர்கள் திருவுளம் பேதித்தால் எப்பொருளும் பேதிக்கும். [நொருவு.
பெரியோர் தின்றால் பலகாரம், சிறியோர் தின்றால்
பெரியோர் முன் எதிர்த்துப் பேசில், வெள்ளத்திற்கு முன் மரங்களைப்போல் வீழ்வார்கள்.
பெரியோர்முன் தாழ்ந்து பேசில், நாணலைப்போல் நிமிர்ந்து கொள்வார்கள்.
பெருங் கயிறு முடி அழுந்தாது.
பெருங்காயம் இருந்த குடுக்கை வாசனை போகாதே இருக்கிறதுபோல.
8640 பெருங்காயம் இருந்த பாண்டம் வாசனை போகாது (பாண்டம் போல).
பெருங்காற்றில் பூளைப்பஞ்சு (இலவம்பஞ்சு) பறக்கிறது போல.
பெருங் குலத்தில் பிறந்தாலும் புத்தி யற்றவன் கரும்புப் பூப்போல.
பெருங் கொடை பிச்சைக்காரருக்குத் துணிவு.
பெருத்த மரங்களை வைத்தவன் உருக்கமாய்த் தண்ணீர் வார்ப்பான்.
பெரு நெருப்பிலே புழு மேயுமா?
பெரு நெருப்புக்கு ஈரமுண்டோ.
பெருமரத்தைச் சுற்றின வள்ளிக்கொடிபோல.
பெருமழை விழுந்தாற் குளிராது.
பெருமாளைச் சேர்ந்தோருக்குப் பிறப்பில்லை.
8650 பெருமாள் இருக்கிற வரையில் திருநாள் உண்டு.
பெருமாள் இருந்தாலல்லவோ திருநாள் நடக்கப் போகிறது?
பெருமாள் என்கிற பெயரை மாற்றப் பெரிய பெருமாள் ஆச்சுது.
பெருமாள் செல்லும் வழியிலே புல்லாய் முளைந்தாலும் போதும்.
பெருமாள் புளிச்சதண்ணீருக்கு அலைகிறான், அநுமார் தத்தியோதனம் கேட்கிறார்.
பெருமாளைச் சேர்ந்தோர்க்குப் பிறப்பில்லை, பிச்சைச் சோற்றிற்கு எச்சிலில்லை.

பெருமாள் நினைத்தால் வாழ்வு குறைவா, பிரமா நினைத்தால் ஆயுசு குறைவா?
பெருமை உள்ளங்கையிலே வளர்ந்தாலும் பேய்ச் சுரை நல்ல சுரையாகாது.
பெருமை ஒரு முறம், புடைத்து எடுத்தால் ஒன்றுமில்லை.
பெருமை கண்டவர் சிறுமை கண்டாலல்லது தேறார்.
8660 பெருமைக்கு ஆட்டை அடித்துப் பிள்ளை கையில் காதைச் சுட்டுக்கொடுத்தான்.
பெருமை பீதக்கலம், இருக்கிறது ஓட்டைக்கலம்.
பெருமையான தரித்திரன் வீண்.
பெருமையும் சிறுமையும் வாயால் வரும்.
பெரு ரூபத்தை உடையவரெல்லாம் பிரயோசனமாயிருக்கமாட்டார்.
பெரு வயிறுகொண்டது அறியாமல் சீமந்தத்திற்கு நாள் இட்டுக்கொண்டானாம்.
பெருவயிறு கொண்டவனுக்குக் காறி உமிழ்ந்தது ஆதாயம்.
பெருவாரிக் கழிச்சலிலே தப்பிப்பிழைத்தவன் நாட்டாண்மைக்காரன்.
பெரு வெள்ளம் பாயும் கடலிலே பீவாய்க்காலும் பாயும்.
[ பாள்?
பெற்றதாயானாலும் குற்றம் எத்தனை பொறுப்
8670 பெற்றதாயிடத்திலேயா கற்றவித்தை காட்டுகிறது?
பெற்றதாயுடன் போகிறவனுக்கு பத்தும் ஏது?
பெற்றதாயைப் பெண்டுக்கு இழுக்கிறதா?(அழைப்பான்).
பெற்றதாய்க்கும் வளர்த்த தாய்க்கும் உதவாமல் பிரிந்த குயிலைப்போல.
பெற்றதாய் செத்தால் பெற்ற அப்பன் சிற்றப்பன்.
பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமணபோஜனம் செய்வித்ததுபோல.
பெற்றதாய் மூதேவி, புகுந்த தாரம் சீதேவி.
பெற்றது எல்லாம் பிள்ளையா, இட்டது எல்லாம் பயிரா?

பெற்றது எல்லாம் பிள்ளையோ, வனைந்தது எல்லாம் குசக்கலமோ?

பெற்ற பிள்ளை துடையிற் பேண்டால் (பேணால்) என்ன செய்யலாம்?

8680 பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு.

பெற்றவளுக்குத் தெரியாதா பெயரிட?

பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளை அருமை.

பெற்றவள் வயிற்றைப் பார்ப்பாள், பெண்சாதி மடியைப் பார்ப்பாள்.

பெற்றாரை நினையாத தறுதலை.

பெற்றாலும் பிள்ளை நாயகம், நட்டாலும் தில்லை நாயகம்.

பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும்.

---

## *பே.*

பேசப் பேச எந்தப் பாஷையும் வரும்.

பேசப் போகிறாயோ சாகப் போகிறாயோ!

பேசாதிருந்தால் பிழை ஒன்றும் இல்லை.

8700 பேசில் அபலம் பேசாக்கால் ஊமை.

பேசினால் வாயாடி, பேசாதிருந்தால் ஊமைப்பயல்.

பேசுகிறது அரிவரதம், நோண்டுகிறது கிட்டிக்கிழங்கு.

பேச்சுக் கற்ற நாய் வேட்டை பிடிக்காது.

பேச்சுக்கு இராவணன், பிண்டத்துக்குக் கும்பகர்ணன்.

பேச்சுக்கு பேச்சு சிங்காரமா?

பேச்சுக் கொடுத்துப் பேச்சு வாங்குகிறதா?

பேச்சு பல்லக்கு, தம்பி கால் நடை.

பேச்சுப் பேசும் போதே, பீச்சிப் புடைவையில் கட்டிக் கொள்கிறாள்.

பேச்சைக் கொடுத்து ஏச்சை வாங்குகிறது.

8710 பேச்சை விற்றுக் காய்ச்சிக் குடிக்கிறான்.

பேடி கையில் ஆயுதம் பிரகாசிக்குமா?

பேடி கையில் ரம்பை அகப்பட்டது போல.

பேடி கையில் வாள் போல.

பேரம் அற்றவர் நீதம் உற்றவர்.

பேதைகள் வெள்ளத்திலே நின்றும் தாகத்திற்குத் தண்ணீர்க்கு அலைவார்கள்.
பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்.
பேயானாலும் தாய், நீரானாலும் மோர்.
பேயானாலும் தாய் வார்த்தை தட்டலாமா?
பேயும் அறியும் பெண்சாதி பிள்ளையை.
8710 பேயும் சிலது ஞாயம் பகரும்.
பேயை நம்பினாலும் பெண்ணை நம்பொண்ணாது.
பேய் அடிக்கப் பிள்ளை பிழைக்குமா?
பேய் ஆடிய கம்பம்போல.
பேய் கொண்டாலும் கொள்ளலாம் பெண் கொள்ளலாகாது.
பேய்க்குக் கள் வார்த்தாற்போல.
பேய்க்கு வேப்பிலை போல.
பேய்க்கு வேலையிட்டது போல.
பேய்க்கூத்தும் ஆமணக்கும் ஆள்போனால் ஆள் தெரியாது.
பேய் சிரித்தாலும் ஆகாது ஆழுதாலும் ஆகாது.
8720 பேய் பிடிக்கவும் பிள்ளை பிழைக்கவுமா?
பேய் பிள்ளையானாலும் தாய் தள்ளிவிடுவாளா?
பேய் போய்ப் புளியமரத்தில் ஏறினதுபோல.
பேராசைகொண்டு பெருக்கத்தவிக்கிறது.
பேராசைக்காரனைப் பெரும்புளுகால் (பெரும்புளுகுசொல்லி) வெல்லவேண்டும்.
பேராசை தரித்திரம் தீராத உபத்திரவம்.
பேராசை தீராத் தரித்திரம்.
பேராசை பெருநஷ்டம்.
பேரிளமை கடந்தபின் பிள்ளை பெற்றெடுத்தா போல.
பேரின்பம் வேண்டின் சிற்றின்பம் ஒழிக்க.
8730 பேர் இல்லாச் சந்நிதி பாழ், பிள்ளை இல்லாச் செல்வம் பாழ்.
பேர் கங்காபவானி தாகத்திற்குத் (குடிக்கத்) தண்ணீர் கிடையாது.
பேர் சந்திரவதனாள் முகத்தில் அழகுகிடையாது.

பேர் செல்லப்பிள்ளை (செல்லப்பிள்ளைராயர்) நாம மற்று போச்சுது. [ யன்.
பேர்த்தடி வைக்கச் சீவனில்லை, பேர் தாண்டவரா
பேர் பெரிய பேர், குடிக்கப்போனால் நீர் கிடை யாது.
பேர் பொன்னாத்தாள், கட்டக் கரியமணி இல்லை.
பேர் முத்துமாலை, கட்டக் கரியமணிக்கு வழியில்லை
பேலச்சொன்னதார், வாரச்சொன்னதார்?
பேலப்போன விடத்தில் பேரை மறந்துவிட்டதாம்.
8740 பேலப்போன விடத்தில் விளங்காய் அகப்பட்டது போல.
பேலுகிற கிழவியும் எழுந்திராள்.
பேன் பார்த்தாலும் பார்க்கும் (குரங்கு) காதைப் பிய்த்தாலும் (கடித்தாலும்) பிய்க்கும் (கடிக்கும்).

## பை.

பை எடுத்தவனெல்லாம் வைத்தியனா?
பைசாசைப் பணியேல்.
பைசாவுக்குப் பத்துப்பெண், கொசுறு குத்து.
பைந்தமிழ்ப் புலவோர் பாட்டுக்கு ஏற்றவன்.
பையச்சென்றால் வையந்தாங்கும்.
பையமிதித்தது வேடன் அடி, பதறி மிதித்தது பன்றி அடி.
பையமென்றால் பனையையும் மெல்லலாம்.
8750 பையலோடிணங்கில், எய்திடும்கேடு.
பையனுக்கென்னவரும், எனக்குமாசம் இரண்டு சின்ன பணம்வரும்.
பையிற் கட்டிவைத்த பொருள் பறி கொடுக்கப் பட்டது.

## பொ.

பொக்குவாயாலே போச்சுதாம் பொரிமா.
பொக்கைவாய் மெச்சினானாம் பொரிமாவை.

பொங்கலும்போச்சு போகியும்போச்சு பெண்ணை அனுப்படா பேயாண்டி (பேய்த்தாயோழி).
பொங்கியும் பால் புறம்போகவில்லை (போகாதிருக்கிறது).
பொங்கின பால் பொய்ப்பால்.
பொங்குசனிபோய் மஞ்குசனி வந்தது, மங்குசனி போய்க் குங்குசனி வந்தது.
பொங்குசனிபோய் மங்குசனி வந்திருக்கிறது.
8760 பொங்குங்காலம் புளி மங்குங்காலம் மாங்காய்.
பொடி மீனெல்லாம் பெருமீஷனுக் கிரை.
பொட்டி (பெட்டி) முறித்த பயலுக்குச் சட்டையும் தலைப்பாகையும் பார்.
பொதிக்கு அளக்கிறதற்கு முன்னே சத்தத்திற்கு அளக்கிறதா?
பொதியை வைத்துவிட்டுப் பிச்சைக்குப் போனான், அதையும் வைத்துவிட்டுச் செத்துக்கிடந்தான்.
பொதிவைக்கிறதற்கு முன்னே சத்தத்திற்கு அளக்கிறதா?
பொத்தைச் சுரைக்காய்போல.
பொத்தைப் பூசணிக்காய் போலிருக்கிறான்.
பொந்தியோடே கைலாசஞ் சேர்வாய்.
பொய் இருந்து புலம்பும், மெய் இருந்து விழிக்கும்.
8770 பொய்கிடந்து புலம்புகிறது, மெய்கிடந்து விழிக்கிறது.
பொய்சொல்லி வாழ்ந்தவனும் இல்லை, மெய் சொல்லிக்கெட்டவனும் இல்லை.
பொய்சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது.
பொய்சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது.
பொய் பூரணசந்திரன், மெய் மூன்றாம்பிறை.
பொய் மெய்யை வெல்லுமா?
பொய்யான பொருளாசை மெய்யான அருளாசையை விலக்குகிறது.
பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய் போலும்மே.
பொய்யும் ஒருபக்கம் பொறாமையும் ஒருபக்கம்.
பொய்யும் மெய்யும் நீளத்தகும்.

8780 பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்.
பொரிமாவை மெச்சின பொக்கைவாயன்.
பொருளாசையும் மனச்சாட்சியும் பொருந்துமா?
பொருளில்லார்க்கு அருளில்லை.
பொருளும் கொடுத்துப் பழியும்தேட. [கூடவரும்.
பொருளும் போகமும் கூடவராது புண்ணியமே.
பொருள் உள்ளோர்க்குப் பூலோகம், அருள் உள்ளோர்க்கு அந்த லோகம்.
பொருள் தனைப் போற்றிவாழ்.
பொருள்போன வழியே துக்கம்போகும்.
பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
8790 பொல்லாத காலத்துக்குப் புடைவையும் பாம்பா
பொல்லாத காலம் சொல்லாமல் வந்தது. [ கும்.
பொல்லாத குணத்துக்கு மருந்துண்டா?
பொல்லாத மனம் கேளாது.
பொல்லாதவர்கள் சங்காத்தம் உப்புமணலில் வீழ்ந்த நீர்போல.
பொல்லதவர்கள் சினப்பட்டால் கல்லின் பிளவு போல ராசியாகமாட்டார்கள்.
பொல்லாப்பிள்ளை இல்லாப்பிள்ளைக்குச் சரி.
பொழுதுபட்ட இடம், விடுதி (தங்கும் இடம்) விட்ட இடம்.
பொழுதுவிடிந்தது பாவம் தொலைந்தது.
பொறாமை நெஞ்சிலே கொள்ளிகட்டையால் சுட வேண்டும்.
8800 பொறிவென்றவனே அறிவின் குருவாம்.
பொறுதி என்பது கடலினும் பெரிது.
பொறுத்தல் கசப்பாயிருந்தாலும் பொறுக்கப் பொறுக்கத் தித்திப்பு.
பொறுத்தார் அரசாள்வார், பொங்கினார் காடு கொள்வார்.
பொறுத்தார் பூமி ஆள்வார், பொங்கினார் காடாள்வார்.
பொறுமை கடலினும் பெரிது.
பொறுமை புண்ணியத்திற்கு வேர், பொருளாசை பாவத்திற்கு வேர்.

பொற்கலம் ஒலிக்காது, வெண்கலம் ஒலிக்கும்.
பொற் காப்புக்கு ஆசைப்பட்டுப் புலியின் கையில் அகப்பட்டது போல.
பொற் குடத்துக்குப் பொட்டிட்டுப் பார்க்க வேண்டுமா?
8810 பொற் பூ வாசிக்குமா?
பொற் பூவின் வாசனையும் முருக்கம் பூவின் வாசனையும் சரி.
பொன் அகப்பட்டால் பொன் முடியத் துணி அகப்படாதா?
பொன் ஆபரணத்தைப் பார்க்கிலும் புகழ் ஆபரணமே பெரிது.
பொன் இரவல் உண்டு, பூ இரவல் உண்டா?
பொன் என்றால் பிணமும் வாய்திறக்கும்.
பொன் ஒன்று பணிதி பல.
பொன் கத்தி என்று கழுத்து அறுத்துக் கொள்ளலாமா?
பொன் காத்த பூதம் போல.
பொன் காய்த்த மரம் போலிருக்கிறாள்.
8820 பொன் செருப்பானாலும் காலுக்குத் தான் போட வேண்டும்.
பொன் மணி அற்றவளை அம்மணி என்பானேன்?
பொன் முடி அல்லது சடை முடி வேண்டும்.
பொன்னம்பலம்பத்துக்கும் புவனகிரிப் பட்டணத்துக்கும் என்றைக்கும் உண்டான இழவு.
பொன்னம்பலம் உண்டானால் என்ன அம்பலம் கிடையாது?
பொன்னாங் கண்ணிக்குப் புளி யிட்டு ஆக்கினால் உள்நாக்கெல்லாம் தித்திக்கும்.
பொன்னாங் கண்ணிக்குப் புளி யிட்டு ஆக்கினால் உண்ணாப் பெண்ணும் ஒரு உழக்கு உண்ணும்.
பொன்னாலே கலம் உண்டானாலும் மண்ணாலே சுவர் வேண்டும்.
பொன்னாலே மருமகளானாலும் மண்ணாலே ஒரு மாமியார் வேண்டும்.
பொன்னான மனத்தைப் புண்ணாக்குகிறான்.

8830 பொன்னின் கலப்பை வரகுக்குஉழக் போனதாம், வரகு செருக்கு வரகு பட்டதாம்.
பொன்னின் குடத்திற்குப் பொட்டு வேண்டுமா?
பொன்னின் குடம் உடைந்தாற் பொன் ஆகும், என் ஆகும் மண்ணின் குடம் உடைந்தக் கால்?
பொன்னின் குணம் போமா, பூவின் மணம் போமா?
பொன்னின் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்.
பொன்னுக்குப் பொடியாய்ப் போச்சுது.
பொன்னும் தெரியாது பொன் முடிந்த துணியும் தெரியாது.
பொன்னை எறிந்தாலும் பொடிக் கீரையை எறியலாமா?
பொன்னையும் புடவையும் நீக்கிடில் பெண் மலக் கூடு.
பொன்னை வைக்கிற கோயிலிலே பூவையாவது வைக்க வேண்டும்.

---

## போ.

8840 போகப் போகத் தெரியும் பொய்யும் மெய்யும்.
போகமும் உடனுண்டு பொன்னைக் கைக்கொள்ளும் மாதர்.
போகம் புவணம் பொருந்து மிட மெங்கும் தேகம் கரணம் திரியுமே.
போகா ஊருக்கு வழி கேள்.
போகாத இடத்திலே (இடத்துக்கு) போனால் வாராத சொட்டு வரும்.
போக்கணம் கெட்டவன் ராஜாவிலும் பெரியவன்.
போக்கற்ற நாய்க்குப் போன தெல்லாம் வழி.
போக்கற்ற மத்தளம் கொட்டினதும் பூண்டித்தெய்வம் வந்தாடினதும்.
போக்கற்றால் புலி ஆள் மேலே.
போக்கற்றாள் நீக்கற்றாள் பொழுது விடிந்து கந்தை அற்றாள்.
8850 போக்கிடம் கெட்ட முசல் பொந்திலே நுழைந்தாற் போல.

போக்கிடம் கெட்ட மூளிக்கு மூக்கிலேகோபம்.
போக்கிடம் கெட்டவன் ஊருக்குப் பெரியவன்.
போக்கிரிக்குப் போக்கிரிக்கு வேண்டும்
போக்கிரித் தனத்துக்கு முதல் தாம்பூலம் கொடுக்க வேண்டும்.
போக்கு நீக்கில்லாமல் புத்திக்குச் சரிப்பட்டபடி பேசுகிறது.
போசனம் சிறுத்தாலும் ஆசனம் பெருக்கவேண்டும்.
போட்ட இடத்தில் தேட வேண்டும்.
போதகருக்கே சோதனை மிஞ்சும்.
போதகர் சொல்லைத் தட்டாதே, பாதகர் இல்லைக் கிட்டாதே.
8860 போதனை பெரிதோ சாதனை பெரிதோ?
போதும் என்றமனமே பொன் செய்யும் மருந்து.
போயும் வந்தும் பொன்னம்பலம், திரும்பிவந்தும் திருவம்பலம்.
போயொரு கோபாத்தால் கிணற்றில் விழுந்தால்
ஆயிரம் சந்தோஷம் வந்தாலும் அப்பால் எழுந்திருக்கலாமா?
போரில் ஊசி தேடின சம்பந்தம்.
போரைக் கட்டிவைத்துப் போட்டும் பிச்சைக்குப் போவானேன்?
போரோடு தின்கிற மாட்டுக்குப் பிடுங்கிப் போட்டுக் கட்டுமா?
போர் சுட்டுப் பொறி பொறுக்கினாற்போல.
போர்த் தொழில் புரியேல்.
போர் பிடுங்குகிறவள் பூரக்களம் சாருகிறவளை மருட்டுகிறாளாம்.
8870 போர் மெரிக்கிற (மிதிக்கிற) மாடு வைக்கோல் தின்னாதா?
போலைக்கு ஒரு பொன் மணி கிடைத்ததாம், அதைக் தூக்கிக் கண்ணில் தொட்டுத் தொட்டுப் பார்த்ததாம்.
போலைக்கு ஒரு பொன் மணி கிடைத்ததாம், அதைக் தூக்கிக் கண்ணில் தொட்டுத் தொட்டுப் பார்த்ததாம்.

போலை நாரி வாடி (வா அடி), காடிமேல் ஏறடி.
போலை பொறுக்கப் போச்சாம், பூனை குறுக்கே போச்சாம்.
போனகம் என்பது தான் உழந்து (உழைத்து) உண்டல்.
போன சனியனைத் தாம்பூலம் வைத் தழைத்தது போல.
போல சனியன் போச்சென்றிருந்தேன், பொச்சுக்குள்ளிருந்து (மயிருக் குள்ளிருந்து) கீச்சுக் கீச்சென்கிறது.
போன சுரத்தைப் புளியிட்டு அழைத்தது போல.
போனதினம் போகப் புதனன்றைக்கு வந்தாள்.
8880 போனது போச்சுது பொழுது விடிந்தது.
போனது போல வந்தானாம் புது மாப்பிள்ளை.
போனதை நினைக்கிறவன் புத்தி கெட்டவன்.
போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத் தோடே.
போன மாட்டைத் தேடுவாரும் இல்லை, மேய்த்த கூலி கொடுப்பாரும் இல்லை.
போன மாட்டைத் தேடுவாரும் இல்லை, வந்த மாட்டைக் கட்டுவாரும் இல்லை.
போன முயல் பெருமுயல்.

## *பௌ.*

பௌவத்து எழில் கொள்.
பௌவப் பெருமை தெய்வச் செயலே.
பௌவம் உற்றது ஆக்கை, செவ்வை அற்றது வாழ்க்கை.

## *ம.*

8890 மகதீசுவரத்தை எண்ணி மனப்பால் குடிக்கிறது.
மகமேருவைச் சேர்ந்த காகமும் பொன்னிறமாம்.
மகராஜனுக்கு இடம் விடக்கூடாது, ஏழைக்கு ஆசை சொல்லக்கூடாது.
மகளுக்குக் குடல் பாக்கியந் தவிர மற்ற பாக்கியமெல்லாம் இருக்கிறது.
மகளுக்குப் புத்தி சொல்லித் தாய் அவசாரி போனாளாம்.

மகளே வல்லாண்மை.
மகள் செத்தாள் தாய் திக்கிற்றான்.
மகள் செத்தாற் பிணம், மகன் செத்தாற் சவம்.
மகன் செத்தாலும் சாகட்டும், மருமகள் கொட்டம் (கர்வம்) அடங்கினாற் போதும்.
மகாதேவர் ஆடுமிடத்துப் பேயும் ஆடுகிறது.
8900 மகா புருஷர் மகிமை பிறவிக் குருடனுக்குத் தெரியுமோ?
மகா பெரியவர் மண்டையிலே புழுத்தவர்.
மகாமகம் பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு விசை.
மகாராஜனோடு சொக்கட்டான் போடலாமா?
மகாராஜன் கலியாணத்தில் நீராகாரம் நெய்பட்டபாடு.
மகாராஜன் பெண்சாதி மர்மக்காரி, யாருடன் சொன்னாலும் திறமைக்காரி.
மகாராஜன் மண்ணை (பீயை) த் தின்றால் மருந்துக்குத் தின்றான் என்பார்கள், பிச்சைக்காரன் மண்ணைத் தின்றால் வயிற்றுக் கில்லாமல் தின்றான் என்பார்கள்.
மகாலட்சுமி பரதேசம் போனாற்போல.
மகிமைக்கு அஞ்சிய மருமகனே, எருமைக் கன்றைக் கொல்லாதே.
மகிமை சுந்தரி கதவை ஒஞ்சரி.
8910 மகிமைப் பட்டவனுக்கு மரணம், மாட்டுக்காரப் பையனுக்குச் சரணம்.
மகிமையிலே ஒரு பெண் குவளையிலே வாழுகிறாள், அதில் ஒரு பெண் அறுத்துவிட்டு அழுகிறாள்.
மக்கள் களவும் வரகுபதரும் சரி.
மக்கள் சோறு தின்றால் மகிமை குறையும்.
மக்காவுக்குப் போய்க் கொக்குப் பிடித்தது போல.
மக்கி மண்ணாயிருக்கிறான்.
மங்கமாரிவந்தார் தங்க மழை பெய்தது.
மங்கும் காலம் மாங்காய், பொங்கும் காலம் புளியங்காய்.
மங்குலைக் கண்ட மயில் போல.

மங்கை தீட்டானால் கங்கையிலே முழுகுவாள்,
கங்கை தீட்டானால் எங்கே முழுகுவாள்?

8920 மங்கை நல்லாள் பெண் பெருமாள், வாழ்ந்ததெல்லாம் எத்தனை நாள், திங்க ளொருபொழுது செவ்வாய் பகலறுதி.

மச்சத்தின் குஞ்சுக்கு இப்படி என்றால், மாதாவுக்கு எப்படியோ?

மச்சானைப் பார்க்க உறவும் இல்லை, மயிரைப் பார்க்கக் கறுப்பும் இல்லை.

மச்சான் செத்தால் மயிர்போச்சு, கம்பளி எனக்கு ஆச்சு.

மச்சில் ஏற்றி ஏணியை வாங்கி விட்டான்.

மச்சினன் உண்டானால் மலை ஏறிப் பிழைக்கலாம்.

மச்சை அழித்தால் குச்சுக்கும் ஆகாது.

மஞ்சளும் மலரும் கொண்டு துதிக்கா விட்டாலும் நெஞ்சில் நினைப்பதே போதும்.

மஞ்சள் குளித்து மணைமேலே இருக்கும் போது மாட்டேன் என்றீரே, பிள்ளை பெற்று நொந் திருக்கச்சே வேண்ட (நோண்ட) வந்தீரே!

மடக்கிழவனிலும் புத்தியுள்ள வாலிபன் அதிகம்.

8930 மடக்கேள்விக்கு மாறுத்தரம் இல்லை.

மடக்கொடியில்லாத மணைபாழ்.

மடங்காக் குதிரைக்குச் சவுக்கடி.

மடப்பெருமை தான், நீராகாரத்துக்கு (நீச்சு தண்ணீருக்கு) வழியில்லை.

மடப் பெருமையே தவிர நீராகாரத்துக்கு வழி இல்லை.

மடம் பிடுங்கிக்கொண்டு போகும் போது, நந்த வனத்துக்கு வழி எங்கே என்கிறான்.

மடிப்பிச்சை மங்கிலியப் பிச்சை.

மடிமாங்காய் போட்டுத் தலை வெட்டலாமா?

மடியிலே கனம் இருந்தால் வழியிலே பயம்.

மடியிலே பூனைக்குட்டியைக் கட்டிக் கொண்டு சகுனம் பார்க்கிறது போல.

8940 மடியிற் பணம் போய் வழியிற் சண்டையை இழுத்ததாம்.

மடியைப் பிடித்துக் கள்ளை வார்த்து மயிரைப் பிடித்துக் காசு வாங்குகிறதா?
மடையனுக்கு மறுமொழியில்லை.
மடைவாய்க் கொக்குப் போல.
மட்டாயிருந்தது மதனி (அண்ணி) குடிவாழ்க்கை.
மட்டான போசனம் மனதிற்கு மகிழ்ச்சி.
மட்டி எருக்கலை மடல் மடலாய்ப் பூத்தாலும், மருக்கொழுந்து வாசனை வருமா?
மட்டிப் பயலுக்குத் துட்டக் குருக்கள்.
மட்டியிலும் மட்டி மகா மட்டி.
மட்டில்லாமற் கொடுத்தாலும் திட்டுக் கேட்கலாகாது.
8950 மட்டை இடம் குட்டி வலம்.
மட்டைக்கரியையும் மடப்பள்ளியாரையும் நம்பப்படாது.
மணமும் பிணமும் போகிற வீதியிலே நின்று போகிறது.
மணலிலே பிடுங்கின வள்ளிக்கிழங்கு போலிருக்கிறான்.
மணலின் மேல்விழுந்த மழைத்துளி உடனே மறையும்.
மணலை அளவிட்டாலும் மனதை அளவிடக்கூடாது.
மணலைக் கயிறாய்த் திரிக்கிறது, வானத்தை வில்லாய் வளைக்கிறது.
மணற் சோற்றில் கல் ஆய்ந்தாற் போல.
மணி என்ன, அறுந்து விழுந்தால் இரண்டு.
மணி நா அசையாமல் இராச்சிய பாரம் பண்ணுகிறது.
8960 மணியக்காரன் வீடுபோல வயிறு பற்றிக்கொண்டு எரிகிறது.
மணியாம் பருக்கை போட மகிழ்ந்த கடனைப் போல.
மணையிற்பெண்ணைமாற்றிவைக்கிறது, திண்ணையிற் பெண்ணைத் திருப்பிவைக்கிறது.
மண் காசுக்குச் சாம்பல் கொழுக் கட்டை.
மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கலாமா? (இறங்கினது போல).
மண்டை உள்ளமட்டும் சளி பற்றாறாது.

மண்டை உள்ள வரையில் சளி போகாது.
மண்டைக்கு ஏற்ற கொண்டை.
மண்டைக்குத் தகுந்த கொண்டை போட வேண்டும்.
[ போல்.
மண்டையில் எழுதி மயிரால் மறைத்து வைத்தது
8970 மண்ணாடிங்கட்டி மாப்பிள்ளைக்கு எருமுட்டை பணிகாரம்.
மண்ணாயினும் மனையாயினும் காப்பாற்றினவர்களுக்கு உண்டு.
மண்ணாய்ப் போவான் காலம் கண்ணா மண்ணா தெரியவில்லை.
மண்ணால் ஆனாய் மண்ணாயிருக்கிறாய்.
மண்ணிலிருந்து வழக்கோரஞ் சொல்லாதே.
மண்ணிலே பிறந்து மண்ணிலே வளர்ந்து.
மண்ணின்மேல் நின்று பெண் ஓரம் சொல்லாதே.
மண்ணுக்கிரையாய்ப் போகிறது.
மண்ணைக் கீறி மண்ணிலே படுத்திருக்கிறார்கள்.
மண்ணைத் தின்றாலும் மறையத் தின்னு.
8980 மண்ணோடே பிறக்கலாம் உன்னோடே பிறந்ததில்.
மண்தனை யாண்ட மன்னவர்கள் எத்தனையோ?
மண் பறித்து உண்ணேல்.
மண் பிள்ளையானாலும் தன் பிளைளையா யிருக்க வேண்டும்.
மண் பூனை எலி பிடிக்குமா, மதிகெட்ட ராசாவே?
மண் பூனையானாலும் எலி பிடிக்கிறதொன்று.
மண் பூனையானாலும் எலி பிடித்தால் சரி.
மண் மண்ணோடே விண் விண்ணோடே.
மண்மேல் நின்று பெண் ஓரஞ் சொல்லாதே.
மண் வெட்டி கூதல் அறியுமா?
8990 மண் வேலையோ புண்வேலையோ?
மத யானை ஏறியும் திட்டி வாசலில் நுழைந்தது போல.
மத யானை போனது மார்க்கம்.
மதலைக்கு இல்லை கீதமும் அறிவும்.
மதனும் ரதியும் போல் வாழ்ந்திருக்க வேண்டும்.
மதாபிமானம் சுசாதி மானம் தேசாபிமானம்.

மதியாத வாசலிலே மிதியாதிருப்பதே உத்தமம்.
மதியாதான் வாசலிலே வல்லிருளே யானாலும், மிதியாமலிருப்பதே கோடி பெறும்.
மதியில்லாத விண்ணானேன், மருந்தில்லாத புண்ணானேன்.
மதியும் உமது விதியும் உமது.
9000 மதியை மீன் சூழ்ந்ததுபோல.
மதில்மேல் ஏறின பூனை போல்.
மது பிந்து கலகம் போலிருக்கிறது.
மதுரைக்கு வழி வாயிலிருக்கிறது.
மதுரையில் பூசணிக்காய் மாட்டுவிலை
மத்தகத்தால் யானை மண்ணைவாரிப் போட்டுக் கொண்டாற்போல.
மத்திட்ட தயிர்போல் புத்தி குழம்புகிறது.
மந்தரகிரியால் குழம்பும் கடல் வானோர்க்கு அமிர்தம் ஈந்தாற்போல்.
மந்தி மயிரை மருந்துக்குக் கேட்டால் மரத்துக்கு மரம் தாவும்.
மந்திரத்தால் மாங்காய் விழுமா?
9010 மந்திரம் இல்லான் பூசை அந்திபடுமளவும்.
மந்திரம் கால மதி முக்கால்.
மந்திரி இல்லாத யோசனையும் ஆயுதம் இல்லாத சேனையும் கெடும்.
மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்.
மந்திரிக்கும் உண்டு மதிகேடு.
மந்திரிப் புத்திக்கு மதிமோசம் வந்தது.
மந்திரி வீட்டிலே முந்திரி பூத்தது, வாய்க்கெட்டினது கைக் கெட்டவில்லை.
மந்தையிலும் பால், வீட்டிலும் தயிரா?
மப்புக்காரன் தப்புக் கொட்டுவானா?
மப்புக்காரன் போலத் தப்புத்திப்பாய்ப் போசுகிறது.
9020 மப்புத் தாளம் தட்டுகிறாய்.
மயிரிலே சவ்வாது வாங்கினாற் போல.
மயிர் உள்ள சீமாட்டி வாரி முடிக்கிறாள்.
மயிர் ஊடாடாத நட்பும் பொருள் ஊடாடக் கெடும்.

மயிர் சிக்கினால் உயிரை வைக்குமா கவரிமான்?
மயிர் சுட்டுக் கரியாகுமா?
மயிர் பிளக்க வகை தேடினாற் போல.
மயிர் விலகினால் மலை விலகும்.
மயிலாப்பூர் ஏரி உடைந்து போகிறது என்றால், வருகிற கமிட்டிக்கு ஆகட்டும் என்றாற்போல.
மயிலே மயிலே இறகுகொடு என்றால் கொடுக்குமா, இருத்தி வைத்துப் பிடுங்கினால் கொடுக்கும்.
9030 மயிலே மயிலே என்றால் இறகு கொடுக்குமா?
மயிலைக் கண்டு வான்கோழி ஆடினாற் போல.
மயில் ஒந்திக்கு வலியக் கண்ணைக் கொடுக்கிறது போல.
மயிற் கண்ணிக்கு மசக்கை, மாப்பிள்ளைக்கு அவஸ்தை.
மரக்கோணல் வாச்சியிலே நிமிரும்.
மரஞ்சுட்டுக் கரியாகவேணுமே யல்லாமல் மயிர் சுட்டுக் கரியாகப் போகிறதா?
மரணத்திலும் கெட்ட மார்க்கத்திற்குப் பயப்படு.
மரணத்திற்கு வழி மட்டில்லை.
மரத்தாலி கட்டியடிக்கிறது.
மரத்திலிருந்து விழுந்தவனை மாடுமிதித்தது போல (பாம்பு கடித்ததுபோல).
9040 மரத்திலிருந்து விழுந்தவன் மேல் தேர் ஓடினது போல.
மரத்தில் அறைந்த முளையை மர்க்கடம் பிடுங்கினாற் போல.
மரத்தின் பழம் மரத்தண்டை விழும்.
மரத்துப் பழம் மரத்தடியிலே விழும்.
மரத்தை இலை காக்கும், மானத்தைப் பணம் காக்கும்.
மரத்தை வைத்துக்கொண்டு பழத்தைக் கோர வேண்டும்.
மரநாயிலே புழுகு வழிக்கலாமா?
மரம் ஏறிக் கைவிட்டவனும் கடன்வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டுப்போவான்.
மரம் ஏறுகிறவன் சூத்தை எத்தனை தூரம் தாங்குகிறது?

மரம் தன்னை வெட்டுகிறவனுக்கு நிழல் கொடுக்கும்.
9050 மரம் நல்லது தான் முசுடு கெட்டது.
மரம் வெட்டுகிறவனுக்கு நிழலும், மண் தோண்டுகிறவனுக்கு இடமும் கொடுக்கும்.
மரம் வைத்தவனுக்குத் தண்ணீர் வார்க்கக் கடன்.
மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்கமாட்டானா?
மரியாதை இல்லாதவன் மகிமை அற்றான்.
மரியாதை தப்பினால் (கெட்டால்) மாலவாடு.
மரியாதை ராமன் வழக்குத் தீர்த்தாற் போல.
மரியாள் குடித்தனம் சரியாய்ப் போச்சு.
மருண்டவன் கண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்.
மருத்து மாவுக்குச் சயிக்கினை, மடங்காக் குதிரைக்குச் சவுக்கடி.
9060 மருந்து கால், மதி முக்கால்.
மருந்து தின்றால பிழைப்பாய் என்றால், மயிர்தான் தின்னமாட்டேன் என்கிறான்.
மருந்தும் விருந்தும் மூன்று பொழுது (நாள்).
மருந்தே யாயினும் விருந்தோடுண்ணு.
மருமகனுக்கென்று சமைத்ததை மகனுக்கு இட்டு வயிறு எரிந்தாளாம்.
மருமகனுக்கென்று வைத்த நெய்யை மகனுக்கு ஊட்டி வயிறு எரிந்தாளாம்.
மருமகனோடு உண்ணவில்லை யென்கிறார்களென்று மாமியார் வார்த்த நெய்யைப் பிரட்டி யுண்டாளென்று மருமகன் தன் அரைஞாண் கயிற்றை யறுத்துத் தாலி கட்டினானாம்.
மருவில் உண்ட சாப்பாட்டை லங்கணத்தில் நினைத்துக் கொண்டது போல.
மருவும் மலரும் போல.
மரைக்காயருக்கும் உண்டு மாட்டுப் புத்தி.
9070 மரைக்காயர் வீட்டு மரைக்காயர்.
மர்க்கட சீஷனும் மார்ஜால குருவும்.
மலடி அறிவாளோ பிள்ளை அருமை?

மலடிக்குத் தெரியுமோ மகப்பெறு வருத்தம்?
மலடிக்குத் தெரியுமா பிள்ளையைப் பெற்ற அருமை?
மலடி மகப் பெற்றாள்.
மலடியைப் பிள்ளை பெறச் சொன்னால் பெறுவாளா?
மலரில் மணமும் எள்ளில் எண்ணெயும் உடலில் உயிரும் கலந்தது போல,
மலரும் மணமும் போல.
மலரைக் கசக்கி மணங் கொள்வாருண்டோ?
9080 மலர்த்தேனை வண்டல்லாமல் மண்டூகம் குடிக்குமோ?
மலிந்த சரக்கு கடைத்தெருவுக்கு வரும்.
மலிந்த பண்டம் கடையிலே வரும்.
மலிந்த பண்டம் கொள்ளாத வணிகன் பதர்.
மலை அத்தனை சுவாமிக்குத் தினை அத்தனை புஷ்பம் சாத்துகிறார்.
மலை உச்சியில் கல் ஏற்றுதல் அரிது.
மலை ஏறினாலும் மைத்துனனைக் கைவிடாதே.
மலை கலங்கனாலும் மனங் கலங்கப்போகாது.
மலை கல்லி எலி பிடிக்கிறது.
மலைக்கு மலை அண்டை கொடுத்தாற் போல.
9090 மலைக்கும் மடுவுக்கும் போல.
மலைக்கும் மண்ணாங் கட்டிக்கும் சரியா?
மலைத்தவருக்குப் பலன் லபிக்கிறதா?
மலைத்தேன் முடவனுக்கு வருமா?
மலை நெல்லிக்காய்க்கும் கடல் உப்புக்கும் உறவு செய்தவர் யார்?
மலை போலப் பிராமணன் போகிறானாம், பின் குடு மிக்கு அழுகிறாளாம்.
மலைபோல் வந்தது பனிபோல் நீங்கிற்று (போச்சுது).
மலைப் புளுகு கலப்புளுகாயிருக்கிறது.
மலைமேல் இருப்பாரைப் பன்றி பாய்வதுண்டா?
மலையத்தனை சுவாமிக்குக் கடுகத்தனை கர்ப்பூரம் (சாம்பிராணி).

9100 மலையிலக்கானால் குருடனும் எய்வான்.
மலையில் விளைந்தாலும் உரலில்தான் மசிய வேண்டும்.
மலை யிற்று மயிரில் தொங்குகிறது.
மலையின் உயரம் மலைக்குத் தெரியுமா?
மலையுடன் மண்ணாங் கட்டி எதிர்ப்பது போல.
மலையும் மலையும் இடித்துக் கொள்ளும் போது, மண்ணாங்கட்டி எந்த மூலை?
மலையும் மலையும் பொருதது போல.
மலையே மண்ணாங்கட்டியாகிற போது, மண்ணாங் கட்டி எப்படியாகும்?
மலையே விழுந்தாலும் தலையே தாங்கவேண்டும்.
மலையே விழுந்தால் மண்ணாங்கட்டியா தாங்கப் போகிறது?
9110 மலையைச் சுற்றி அடித்தவனைச் செடியைச் சுற்றி அடியேனா?
மலையைத் துளைக்கச் சிற்றுளி போதாதா?
மலையைத் துளைக்க வாச்சி உளிவந்தாற் போல.
மலையை (என் தலைமேல்) தூக்கி வைத்தால் நான் அதை எடுத்துக் கொண்டு போகிறேன் (சுமக்கிறேன்) என்கிறான்.
மலையை நோண்டி எலி பிடிக்கிறதா?
மலையைப் பார்த்து நாய் குலைத்தால் மலைக்குக் கேடா நாய்க்குக் கேடா?
மலையை மலை தாங்கும் மண்ணாங்கட்டி தாங்குமா?
மலை வாயிலே பொழுதும் மறவன் வாயிலே சோறும்.
மலை விழுங்கிச் சுண்டெலி பெற்றது போல.
மலை விழுங்கின மாணிக்கத்தாளுக்கு (மாதாவுக்கு)க் கதவு சுண்டாங்கி.
9120 மலை விழுங்குவதற்கு மண்ணாங்கட்டி பச்சடியா?
மல்லாக்காப் படுத்துக்கொண்டு மார்பில் உமிழ்ந்து கொண்டாற் போல.
மல்லாந்த தோஷம் வயிற்றிலடைத்தது.
மல்லாந்து உமிழ்ந்தால் மார்மேலே விழும்.
மல்லாந்து படுத்துக்கொண்டா அல்லாவைத் தொழுகிறது.

மல்லுக்கட்டிப் பிடுங்கியும் கொடாதவனா வலுவில் அழைத்துக் கொடுக்கப்போகிறான்.
மல்லுக்கு மாப்பங்காகிலும் வைத்துக் கொள்ள வேணும்.
மவுனம் உடையார்க்கு வாராது சண்டை.
மவுனம் கலக நாசம் (கலக நாஸ்தி).
மவுனம் மலையைச் சாதிக்கும்.
9130 மவ் இடப் பவ் ஆயிற்று.
மழலைச் சொற்கேளாத காதில் நெருப்பைக்கொட்டு.
மழுங்கூணி மாங்கொட்டை.
மழைக்கால் இருட்டானாலும் மந்தி கொம்பு இழந்து பாயுமா?
மழைக்கால் இருட்டானாலும் வாய்க்குக் கை தெரியாதா?
மழைக்குக் குடையா இடிக்குக் குடையா?
மழைக்குத் தண்ணீர் மொண்டு வார்ப்பவர் யார்?
மழைக்குப் படல் கட்டிச் சாத்தலாமா?
மழைக் கொதுங்கி வந்த பிடாரி மனைக்குச் சடுத்தம் போட்டதாம்.
மழைக்கோ படல் இடிக்கோ படல்?
9140 மழை பெய்கிறதும் பிள்ளை பெறுகிறதும் மகா தேவருக்கும் தெரியாது.
மழை பெய்து நிறையாதது மொண்டு வார்த்தா நிறையும்?
மழை பெய்தோடி மறைந்தாற் போல.
மழைமுகம் காணாத பயிரும், தாய் முகம் காணாத பிள்ளையும்.
மழையிலே போட்டாலும் நனைகிறதில்லை, வெயிலிலே போட்டாலும் காய்கிறதில்லை.
மழையும் பிள்ளைப் பேறும் மகா தேவருக்கும் தெரியாது.
மழை விட்டும் தூவானம் விடவில்லை.
மழை விழுந்தால் தாங்கலாம், வானம் விழுந்தால் தாங்கலாமா?
மறந்த உடைமை மக்களுக்கு ஆகாது.
மறந்து செத்தேன் பிராணன் வரவென்றால் வருமா?

9150 மறுசாதம் போட்டுக் கொள்ளாதவன் மாட்டுப் பிறப்பு.
மறு மங்கையர்க்கும் மறு மன்னவர்க்கும் மார்பும் முதுகும் கொடாமலிரு.
மறைத்துக்கட்ட மாற்றுப் புடைவையில்லை.
மனக்கசடு அற மாயை நாடேல்.
மனக்கவலை பலக்குறைவு.
மனச் சாட்சியை விட மறு சாட்சி வேண்டாம்.
மனதிலே ஒன்றும் வாக்கிலே ஒன்றும்.
மனதிலே பகையும் உதட்டிலே உறவுமா?
மனதில் இருக்கும் ரகசியம் மதிகேடனுக்கு வாயிலே.
மனதிற்கு மனதே சாட்சி, மற்றதற்குத் தெய்வமே சாட்சி.
9160 மனது அறியாப் பொய் உண்டா?
மனதுக்கு மனதே சாக்ஷி.
மனதே காரணம்.
மனதே மனதுக்குப் பந்து, மனதே மனதுக்குச் சத்துரு.
மனதைப் போலிருக்கும் மங்கிலியம்.
மனத்துயர் அற்றோன் தினச் செபம் உற்றோன்.
மனப்பால் குடித்து மாண்டவர் அனந்தம்.
மனப் பேயே யொழிய மற்றைப் பேய் இல்லை.
மனப் பொருத்தம் இருந்தால் மற்றப் பொருத்தம் பார்க்கவேண்டுமா? (பார்க்கத் தேவையில்லை).
மன முரண்டிற்கு மருந்துண்டா?
9170 மனம் இருந்தால் மலையும் சாயும்.
மனம் இருந்தும் சற்று வகை யற்றுப் போவான்.
மனம் கொண்டது மாளிகை (கொள்கை).
மனம் உண்டானால் இடம் உண்டு.
மனம் தடுமாறேல்.
மனம் தடுமாறினால் மாற்றானுக்கு வலிமை.
மனம் போல வாழ்வு.
மனம்போன போக்குக்கு வழியில்லை.
மனிதர்காணும்பொழுதுமவுனம், காணாதபொழுது உருத்திராட்சப்பூனை.
மனிதன் கையிலே மனிதன் அகப்பட்டால் குரங்கு.

9180 மனிதன் மறப்பான், குறைபடுவான், மாறுவான், போவான்.
மனுஷன் தலையை மான்தலை ஆக்குகிறான், மான் தலையை மனுஷன் தலை ஆக்குகிறான்.
மனைக்கொடியில்லாத மனை பாழ்.
மனையாளுக்கு உற்றது ஒன்றும் சொல்லவேண்டாம், மாற்றானை ஒருநாளும் நம்பவேண்டாம்.
மனையாள் விடியுமுன் எழுந்து வீட்டுப்பணி செய்வாள்.
மனைவியில்லாத புருஷன் அரை மனுஷன்.
மனைவியிறந்தால் மணம், மகள் இறந்தால் பிணம்.
மனோராச்சியம் பண்ணுகிறதுபோல்.
மனோவியாதிக்கு மருந்துண்டா?
மன்மதக் கரட்டோணான்.
9190 மன்மதன் அவனைப் பம்பரம்போல் ஆட்டுகிறான்.
மன்னரு முன்னுவ பொன்னால் முடியும்.
மன்னர்க் கழகு செங்கோன் முறைமை.
மன்னவர்கள் ஆண்டதெல்லாம் மந்திரிகள் ஆண்மை.
மன்னவர்கள் செத்தார்கள், மந்திரிகள் செத்தார்கள், முன் இருந்தோரெல்லாம் முடிந்தார்கள்.
மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி.
மன்னும் நல்லும் மலிந்த பண்டம் புலவர்க்கு.
மன்னுயிரையும் தன்னுயிர்போல் எண்ணவேணும்.

---

## மா.

மா இருக்கிற மணத்தைப் போல் அல்லவோ கூழ் இருக்கிற குணம்?
மா உண்டானால் பணிகாரம் சுடலாம்.
9200 மா ஏற மலை ஏறும்.
மா கனப்பட்டதெல்லாம் ஒரு திரணம், மாட்டுக் காரப்பையனுக்குச் சரணம்.
மாடம் இடித்தால் (அழிந்தால்) கூடம்.
மாடு கிழமானாலும் பாலின்சுவை (ருசி) போகுமா?
மாடுகெட்டால் தேடலாம், மனிதர்கெட்டால் தேடலாமா?

மாடு திருப்பினவன் அர்ச்சுனன்.
மாடுதின்கிற மாலவாடு ஆடுதின்கிறது அரிதா?
மாடுதின்னிக்கு வாக்குச்சுத்தம் உண்டா?
மாடுபிடி சண்டைக்கு வலிய வராதே.
மாடு மறுத்தாலும் கறக்கும் வாலிலே கயிற்றைக் கட்டினால்.
9210 மாடு முக்கிவர வீடு நக்கிவரும்.
மாடு மேய்க்காமற்கெட்டது, பயிர் பார்க்காமற் கெட்டது.
மாடுமேய்க்கிற தம்பிக்கு மண்டலமிட்ட பெண் சாதி.
மாட்டின் வாழ்க்கை மூட்டையிலே.
மாட்டுக்குப்பெயர் பெரியகடா என்று.
மாட்டைப் புல் உள்ள தலத்திலும் மனுஷனைச் சோறு உள்ள தலத்திலும் இருக்க ஒட்டாது.
மாட்டை மேய்த்தானாம் கோலைப்போட்டானாம்.
மாணிக்கக் காலுக்கு மாற்றுக்கால் இருக்கிறதா?
மாணிக்கம்விற்ற ஊரில் மண்கூடை சுமக்கலாகாது.
மாதம் காதவழி மானாகப்பறப்பான் (துள்ளுவான்).
9220 மாதா ஊட்டாத அன்னம் மாங்காய் ஊட்டும்.
மாதாசெய்தது மக்களுக்கு.
மாதா செய்தது மக்களைக் காக்கும்.
மாதா மனம் எரிய வாழாள் ஒருநாளும்.
மாதாவுக்குச் சுகமிருந்தால் கர்ப்பத்துக்கும் சுகம்.
மாத்திரை தப்ப மிதித்தால் கோத்திரம் கூறப்படும்.
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போல.
மா பழுத்தால் கிளிக்காம், வேம்பு பழுத்தால் காக்கைக்காம்.
மாப்பாயிருக்கிற மட்டும் மடியில்வைத்திருந்தேன், தோப்பானபிறகு மடியில்வைக்கலாமா?
மாப்பிள்ளை சொந்தம் துப்பட்டி இரவல்.
9230 மாப்பிள்ளை தோப்பிள்ளை மாங்காய்ச் சோற்றுக்கு கதிகெட்ட பிள்ளை.
மாப்பிள்ளைத் தோழனுக்குப் பெண்டறுதி.
மாப்புளிக்கிறதெல்லாம் பணிகாரத்துக்கு நலம்.

மாப்பொன் இருக்க மக்களைப் பட்டினிபோடுவானேன்?
மாமரம் பழுத்தால் கிளிக்காக்கும், வேம்பு பழுத்தால் காக்கைக்கு ஆகும்.
மாமறந்த கூழுக்கு உப்பு ஒட்டாது.
மாமி மெச்சிய மருமகள் இல்லை.
மாமியாருக்குக் கண்மண்டை பிதுங்கிப்போகிறது.
மாமியாருக்குச் சுவாமியார் இவள்.
9240 மாமியாருக்கும் மாமியார்வேண்டும்.
மாமியாரும் ஒருவீட்டு நாட்டுப்பெண் (மாட்டுப் பெண்) தான்.
மாமியாரும் சாகாளோ, மனக்கவலையும் தீராதோ?
மாமியாரைக் கண்டு மருமகன் (மருமகள்) நாணுகிறது போல.
மாமியாரோடு போகாத மா பாதகன்.
மாமியார் உடை குலைந்தால் (துணி அவிழ்ந்தால்) வாயாலும் சொல்லக்கூடாது, கையாலும் காட்டக்கூடாது.
மாமியார் உடைத்தால் மண்கலம் (மண்பானை), மருமகள் உடைத்தால் பொன் கலம் (பொன் பானை).
மாமியார் கைவெல்லத்தைப் பார்க்கிலும் மரு மகள் கைத்தவிடு தேவையில்லை.
மாமியார்செத்த ஆறாம் மாதம் மருமகள் கண்ணில் தண்ணீர் வந்ததாம்.
மாமியார் செத்து மருமகள் அழுகிறதுபோல.
9250 மாமியார் தலையிலே கையும் வேலிப்புறத்திலே கண்ணும்.
மாமியார் தலையில் கையும் மாப்பிள்ளைமேல் சிந்தையும்.
மாமியார் மெச்சின மருமகளில்லை, மருமகள் மெச் சின மாமியாரில்லை.
மாமியார் வீடு மகா சௌக்கியம்.
மாம்பழத்திலிருக்கும் வண்டே! மாமியாருக்கும் மருமகளுக்கும் சண்டை.

மாவாய்த்தின்றால் பணிகாரம் இல்லை.
மாயக்காரன் பேயிற் கடையே.
மாயத்திலே மாரீசனைப்போல.
மாயப்பெண்ணே சுந்தரி மாவைப் போட்டுக்கிண்டடி.
மாயன் கஜேந்திரனுக்காக வந்ததுபோல.
9260 மாரடித்த கூலி மடிமேலே.
மாரிக்காலத்தில் பதின் கல மோரும் கோடைக்காலத்தில் ஒருபடி நீரும் சரி.
மாரியல்லது காரியம் இல்லை.
மாரியாத்தாளைப் பெண்டுபிடிக்கிறவனுக்குப் பூசாரி பெண்சாதி எம்மாத்திரம்?
மாரியாத்தாள் குழியில் மறைத்துவைக்க.
மாரைத்தட்டி மனதிலே வை.
மார்க்கண்டனைப்போல் தீர்க்காயுசாயிரு.
மார்க்கண்டாயுசாயிரு.
மார்பு சரிந்தால் வயிறு தாங்கவேண்டும்.
மார்பு மட்டும் சிநேகமானாலும் மார்பிலே கை போடாதே.
9270 மார்மட்டும் உறவிருந்தாலும் மார்மேல் கைபோடாதே.
மார்மேலும் தோள்மேலும் வளர்த்தான் அருமையாய்.
மாலைகுளித்து மனையில்புகும், தன் மனையில் ஆரையும் சேர்க்காது.
மாலைச்சுற்றிப் பிறந்த பிள்ளை மாமனுக்கு ஆகாது.
மாலைச்சுற்றிப் பெண்பிறந்தால் மாமனுக்கு ஆகாது.
மாலையிட்ட பெண்சாதி காலனைப்போல் (எமன் போல்) வந்தாள்.
மாவாகத்தின்றால் பணிகாரம் இல்லை.
மாவிருக்க மணத்தைப்போலிருக்கும் கூழிருக்கிற குணம்.
மாவிலும் ஒட்டலாம், மாங்காயிலும் (தேங்காயிலும்) ஒட்டலாம்.
மாவு இடித்தால் மண்டிக்கொள்ளுகிறது, கூழ் கொதித்தால் கூடிக்கொள்ளுகிறது.

9280 மாவுக்குத் தக்க பணிகாரம்.
மாவுக்கும் ஆசை கூழுக்கும் ஆசை.
மாவுண்டானால் பணிகாரம் சுடலாம்.
மாவு மறந்தகூழுக்கு உப்பு ஒருகேடா (குறையா)?
மாவும் போச்சுது, மாவுகட்டின துணியும் போச்சுது, இனி என்ன உறவு?
மாவேகம் மனோவேகமாய்.
மாவைத் தின்றால் அப்பம் இல்லை.
மாளிகைகட்டி வன்குரங்கு (மரநாய்) கட்டினது போல.
மாற்றானுக்கு இடம் கொடேல்.
மாற்றானுக்கு மார்பில் ஆணியாய்.
9290 மாற்றானை நம்பினாலும் மாதரை நம்பொண்ணாது.
மாற்றிலே வளைவது மரத்திலே வளையுமா?
மாற்றைக் குறைத்தான் செட்டி, மாய்மாலங் கண்டான் தட்டான்.
மானத்தின் மேலே கண்ணும் மாப்பிள்ளை மேலே சிந்தையும்.
மானத்தை வில்லாய் வளைப்பான், மணலைக் கயிறாய்த் திரிப்பான்.
மானம் அழிந்தபின் மரியாதை யென்ன?
மானம் அழிந்தாலும் மதிகெட்டுப் போகுமா?
மானம் அழிந்து வாழ்வதிலும் மரணம் அடைவது உத்தமம்.
மானம் அழியில் உயிர் காவலா?
மானம் பெரிதோ பிராணன் பெரிதோ?
9300 மானார் கலவியில் மயங்கி யிருந்தாலும் தானே தருவன் சிவனவன் தன் பதம்.
மானிலம் சிலரைத் தாங்கேன் என்னுமோ?
மானுக்கு ஒரு புள்ளி ஏறி என்ன, குறைந்து என்ன?
மானுஷ்யம் இல்லாதவன் மனுஷப் பதர்.
மான் கண்ணிலும் அழகு விரைவிலும் விரைவு.
மான் கூட்டத்தில் புலி புகுந்தது போல.

## மி.

மிகுதி ஆசை அதிக நஷ்டம்.

மிகுதி உள்ளவனுக்கும் வஞ்சனைக்காரனுக்கும் பகை, வேதக்காரனுக்கும் உலகத்திற்கும் பகை.
மிகுந்தும் குறைந்தும் நோய் செய்யும்.
மிகைபடச் சொல்லேல்.
9310 மிஞ்சிய கருமம் அஞ்சச் செய்யும்.
மிஞ்சினது கொண்டு மேற்கே போகல் ஆகாது.
மிடி இதயங்கொள் மீளாக்கதி தொடர்.
மிடிமையிலும் படிமை நன்று.
மிடுக்கன் சரக்கு இருக்க விலைப்படும்.
மிதித்தாரைக் கடியாத பாம்பு உண்டா?
மிரண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்.
மிருகங்களில் ஆனை பெரிது அதிலும் சிங்கம் வலிது.
மிருகம் முறை பார்க்குதா வேசி முறை பார்க்க.
மிளகத்தனை பிள்ளையாருக்குக் கடுகளவு நைவேத்தியம்.
9320 மிளகு சிறுத்தால் வீரியம் போகுமா?
மிளகு பொடியோடே திருவாதிரை.
மினக்கெட்ட அம்பட்டன் பூனையைச் சிரைத்தானாம்.
மினுக்கு உள்ள அம்பு துன்பம் செய்யும்.
மின்மினிப் பூச்சி வெளிச்சத்துக்கு இருள்போமா?
மின்னலிலே வெட்டு முளை நோட்டம் பார்த்தாற் போல.
மின்னலைப்போல் பல்லை விளக்கானும் மினுக்கிக் கொள்வானும் பதர்.
மின்னாமல் இடிவிழுமா?
மின்னாமல் முழங்காமல் இடிவிழுந்தது போல.
மின்னினால் மழை பெய்யுமா?
9330 மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.
மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

---

## மீ.

மீகாமன் இல்லா மரக்கலம் ஒரு காலும் ஓடாது.
மீதூண் விரும்பேல்.

மீந்த சுண்ணாம்பையும் மெலிந்தராஜனையும் கை விடலாகாது.
மீனும் செத்தது சினையும் செல்லரித்துப் போயிற்று.
மீனை மீன் விழுங்கினாற் போல.
மீன் குஞ்சுக்கு (குட்டிக்கு) நீச்சுப் பழக்கவேணுமோ?
மீன் குழம்போ தேன் குழம்போ?
மீன் தண்ணீர் குடித்தாற் போல.

---

## மு.

9340 முகக்கோணலுக்குக் கண்ணாடி பார்த்தால் தீருமா?
முக தரிசனம் முக்கால் மைதுனம் (கோடிமைதுனம்).
முகத்திலே ஆழாக்கு அருள் இல்லை.
முகத்திலே இல்லாத புகழ் சூத்திலே வந்ததா?
முகத்திலே பந்தம் கட்டிக்கொண்டு நிற்கிறான்.
முகத்திலே மூத்தவள் (மூதேவி) வாசம்.
முகத்திலே விழித்த தோஷம் வயிற்றிலே வந்து விட்டது.
முகத்திலே விழித்தாலும் மூன்று நாளைக்குச் சோறு அகப்படாது.
முகத்துக்கு அஞ்சி மூத்தாரோடு போனால் குலத்துக் கெல்லாம் ஈனமாம்.
முகத்துக்கு முகம் கண்ணாடி.
9350 முகத்து வேர்வை நிலத்திலே விழப் பிரயாசப் பட்டாற் போல.
முகம் ஆகாதிருந்தால் கண்ணாடி என்ன செய்யும்?
முகம் சந்திர பிம்பம், அகம் பாம்பின் விஷம்.
முக்காட்டின் கீழே கை காட்டுகிறது.
முக்காட்டுக்குள்ளே சமுதாடா?
முக்காட்டுக்குள்ளே கைக்காட்டா?
முக்காட்டுக்குள்ளே மூடுமந்திரமா?
முக்காதம் சுமந்தாலும் முசல் கைத்தூக்குதான்.
முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்கு ஆகுமா?

முக்காற் பணத்துக் குதிரை மூன்று பணத்துப் புல் தின்றாற் போல.
9360 முக்கூட்டுச் சிக்கறாது.
முசலுக்குக் கொம்பு கண்டவர் இல்லை என்றாற் போல.
முசலை எழுப்பிவிட்டு நாய் பதுங்கினது போல.
முடக்கச் சரக்கு இருக்க விலைபோம்.
முடக்கப்பாயில்லாதே போனாலும் சடக்குக்குக் குறைச்சலில்லை.
முடப்பிள்ளையானாலும் மூத்த பிள்ளை.
முடப்புல் முக்கல நீரைத் தடுக்கும்.
முடவனுக்குக் கோபம் விட்ட இடத்திலே.
முடவனுக்கு (சப்பாணிக்கு) நொண்டி சண்டப் பிரசண்டன் (சடுகுடுப்பை).
முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் போல.
9370 முடவன் சண்டைக்குப் போனாற் போல.
முடிக்காதவனே படிக்காதவன்.
முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பராகிப் போகிறதுதான்.
முடிச்சவிழ்க்க் கொடுத்ததுமல்லாமல் இளிச்ச வாய்ப்பட்டமும் கிடைத்தது.
முடி முடியாய் நட்டால் பிடி பிடியாய் விளையுமா?
முடிய முடிய நட்டால் கோட்டை கோட்டையாய் விளையுமா?
முடியும் வகை யோசியாமல் முயற்சி கொள்ளாதே.
முடி வைத்த தலைக்குச் சுழிக்குற்றம் பார்க்கிறது, கொண்டு குலம் பேசுகிறதுபோ லிருக்கிறது.
முடி வைத்த தலைமேலே சுழிக்குற்றம் பார்க்கிறதா?
முட்ட நனைந்தவனுக்கு ஈரமில்லை, பேனுமில்லை (முக்காடு என்ன?).
9380 முட்ட நனைந்தவனுக்கு ஈரமில்லை, முழுதும் கெட்டவனுக்குத் துக்கம் இல்லை.
முட்ட நனைந்தார்க்குக் குளிரில்லை.

முட்டரோடாடிய நட்பு கருங்காலிக்கட்டை ஊடடிய கால்.
முட்டற்ற நாரிக்கு இரட்டைப் பரியமா?
முட்டாளுக்கு இரண்டு ஆள்.
முட்டாளுக்கு என்ன சொன்னாலும் கட்டோடே கேளான்.
முட்டாளுக்குக் கோபம் மூக்கின்மேலே.
முட்டாள்தனத்துக்கு முதல் பாக்குக்காரன்.
முட்டாள் பயலுக்கு இரட்டைப் பரியம்.
முட்டி ஊட்டின கன்று முதார்க்கன்று.
9390 முட்டிகைபோல முனியாது வைகலும் கொட்டி உண்பாரும் குறடுபோற் கை விடுவார்.
முட்டிக்காற் கழுதை பட்டவர்த்தன பரியாமா?
முட்டுக்கு முட்டல்லல மூடக்கதவுமல்ல, சன்னிதி வாசலுக்குச் சாத்தக் கதவுமல்ல.
முட்டுப்பட்டு ஐயம் வருமானால் குட்டுப் பட்டாற் குறை வென்ன?
முட்டுமுன் குனியவேண்டும்.
முட்டைக் குஞ்சைப் பிட்டு வளர்த்தது.
முட்டையிடுகிற கோழிக்குச் சூத்து எரிபந்தம் உண்டு.
முட்டையிடுகிற கோழிக்கு வருத்தம் தெரியும்.
முட்டையிடுகிற கோழிக்கு எரிவு தெரியுமல்லது மற்றவருக்குத் தெரியாது.
முட்டையிலே கூவி முளையிலே கருகிறது.
9400 முண்டனுக்கு இரண்டாள்.
முண்டக் கண்ணி பிள்ளை இரண்டு கண்ணும் நொள்ளை.
முண்டைச்சி சம்பந்தக்காரன் முன்னுக்கு வருவானா?
முண்டைச்சி பெற்றது மூன்றும் அப்படியே.
முண்டையைப் பிடித்த கண்டமாலை முருங்கையையும் பிடித்தது.
முதலியார் டம்பம் (ஜம்பம்) விளக்கெண்ணெய்க்குக் கேடு.
முதலிலே கெட்டிக்காரன் முடிவிலே சோம்பேறி.

முதலில் எடுத்துச் செலவிடாதே.
முதலுக்கு மோசமாக இருக்கிறபோது லாபத்துக்குச் சண்டை போடுகிறதா?
முதலே துர்ப்பலை, அதிலும் கர்ப்பிணி.
9410 முதலைக்கு இல்லை நீச்சும் நிலையும்.
முதலை தன் இடத்து மலை ஒத்த யானையையும் இழுத்துச் செல்லும்.
முதலை நரியின் காலைவிட்டுப் புங்கமரத்தின் வேரைப் பிடித்ததுபோல.
முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா.
முதலைவாய்ப் பிள்ளை மீண்டுவருமா?
முதலை வைத்துப் பெருக்காத வணிகரைப்போல.
முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை.
முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை, மதலையாம் சார்பில்லார்க்கு நிலை இல்லை.
முதல் எடுக்கும்போதே தப்பட்டைக்காரன் செத்தான்.
முதல் எழுத்திலே வெள்ளெழுத்தா?
9420 முதற்கோணல் முற்றும் கோணல்.
முதற் பிள்ளை மூத்திரத்துக்கு அழும்போது, இரண்டாம்பிள்ளை பாலுக்கு அழுகிறதாம்.
முதற் பிறந்த பிள்ளை முத்துப்பிள்ளை, பின்னே பிறந்த பிள்ளை பீப்பிள்ளை.
முதுகிலே புண் இருந்தால் குனியப் பயம்.
முதுகிலே புண் உண்டானால் செடியிலே நுழையப் பயம்.
முதுகில் அடித்தால் ஆறும், வயிற்றில் அடித்தால் ஆறுமா?
முதுகைச் சொரியச் சொன்னால் சிற்றிடையைச் சொரிகிறது.
முத்தளந்த கையால் மூசப்பயறு அளக்க வந்தது.
முத்தளந்த கையினாலே மோர் விற்கிறதா?
முத்தால் நத்தை பெருமைப்படும், மூடர் எத்தாலும் பெருமைப்படார்.
9440 முத்திலும் சொத்தை உண்டு, பவழத்திலும் பழுது உண்டு.

முத்து அளக்கிறவளும் பெண்பிள்ளை தான், மூசப் பயறு அளக்கிறவளும் பெண்பிள்ளை தான்.
முகத்துக்கு முத்தாயிருக்கிறது.
முத்தும் பவளமும் முறைமுறையாய்க் கோத்தது போல.
முத்தைத் தெளித்தாலும் கலியாணந்தான், மோரைத் தெளித்தாலும் கலியாணந்தான்.
முந்தானை இருக்கிறது, நாலுவீடு இருக்கிறது.
முந்தி வந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைத்ததாம்.
முந்தின சோறும் முனையும் குலைந்தால் பிந்தின சோறு பீயும் சோறும்.
முந்தின சோற்றைத் தட்டினால் பிந்தின சோறு பீயும் சோறும்.
முந்தினோர் பிந்தினோராவர், பிந்தினோர் முந்தினோராவர்.
9440 முந்நாழி கறக்கிற பசுவானாலும் முன் இறப்பைப் பிடுங்குகிற பசு ஆகாது.
முப்பணியிட்ட பெண்ணுக்குக் கொப்பு ஒன்றுதான் குறை.
முப்பதிலே மூர்க்கம், நாற்பதிலே நாகரிகம்.
முப்பதிலே வாழ்ந்தவன் மூடன், முன்னும் பின்னும் தெரியாதவன் குருடன்.
முப்பது செருப்புத் தின்றவனுக்கு மூன்று செருப்பு பணிகாரம்.
முப்பது நாளே போ, பூவராகனே வா!
முப்பது பணம் கொடுத்தாலும் மூளிப்பட்டம் போகாது.
முப்பதும் போய் மூன்றும் தள்ளினவள் போலப் பேசுகிறாள்.
முப்பது வருஷம் வாழ்ந்தவனும் இல்லை, முப்பது வருஷம் தாழ்ந்தவனும் இல்லை.
முப்பேன் பிடிப்பது மூதேவி வாசத்துக் கடையாளம்.
9450 முப்பொருள் ஆதிமூலமானவன்.
முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

முரடனுக்கு மூங்கிற் றடி.
முரட்டுத்தனத்திற்கு முதற்பாதம்.
முரட்டுத்தனத்துக்கு முதல் தாம்பூலம் கொடுக்க வேண்டும்.
முரட்டுப்பெண்ணும் சுருட்டுப்பாயும்.
முருகப்பூ சிவந்ததினால் முடிப்பார்களா?
முருக்குப்பருத்து என்ன, தூனாகப் போகிறதா?
முருங்கைக்காய் என்றதும் முறிந்ததாம் பத்தியம்.
முருங்கைக்காய் என்றால் பத்தியம் முறியுமா?
9460 முலைகொடுத்து (ஊட்டி) வளர்த்தவள் மூதேவி, முன்றானை போட்டவள் சீதேவி.
முலைக்குத்து சவலைப்பிள்ளைக்குத் தெரியுமா?
முழங்கைப் புண்போல முனைகுலைந்து நிற்கிறது.
முழங்கையிற்பட்ட சுகம்போலே.
முழிக்கிறதை (விழிக்கிறதை)ப் பார் கிழக்குரங்கைப் போல.
முழுகி முப்பது நாளாச்சு, இறங்கி உப்பு அள்ளக் கூட இல்லை என்கிறாள்.
முழுக்கட்டி பெயர்க்கிற பன்றிக்குக் கொழுக்கட்டி விட்டதுபோல.
முழுச்சோம்பேறி முள்ளுள்ள வேலி.
முழுதும் நனைந்தவருக்கு ஈரமில்லை.
முழுப் பங்குக்காரனுக்கு முந்திரிப்பங்குக்காரன் மிண்டன்.
9470 முழுப் பூசினிக்காயைச் சோற்றோடு மறைப்பது போல.
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டுமா?
முளைக்கையிலே உண்டானது தான் முட்டவரும்.
முளைத்த மயிர் (பயிர்) மூன்று, அதிலும் இரண்டு புழுவெட்டு.
முளைப்பாரைப் புதைப்பாருண்டா?
முளையில் கிள்ளாததை முற்றினால் கோடாலி கொண்டு வெட்டவேண்டும்.
முள்ளுக்குக் கூர்மையும் துளசிக்கு வாசனையும் இயற்கை.

முள்ளுக்கு முனை சீவி விடுவார்களா?
முள்ளு மேல் சீலைபோட்டால் மெள்ள மெள்ள வாங்கவேண்டும்.
9480 முள்ளுமேல் சீலைபோட்டால் மெள்ள மெள்ள வாங்குகிற வழியாக வல்லவோ வாங்கவேண்டும்?
முறட்டுத் தனத்திற்கு முதற்பாதம்.
முறட்டுப் பெண்ணும் சுருட்டுப் பாயும்.
முறத்தடி பட்டாலும் முகத்தடி படலாகாது.
முறிந்தோடும் விமானத்திற்குப் பறந்தோடி ஒட்டுப் போடுகிறவன்.
முறுகினபுரி அறும்.
முறையோ (மொறோ) என்கிறவன் கழுத்திலே லிங்கம் கட்டினால், மறைவிலே அறுத்துப்போட்டு விடுவான்.
முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.
முற்பிறப்பில் செய்தவினை இப்பிறப்பில் மூண்டது.
முற்றக் கல்வி பேசாதே.
9490 முற்றின மரத்திலேதான் வைரம் இருக்கும்.
முற்றும் நனைந்தவர்களுக்கு ஈரம் ஏது?
முனைமுகத்து நில்லேல்.
முன் அளந்த நாழி பின் அளக்கும்.
முன் ஒன்று ஓதிப் பின் ஒன்று ஆடேல்.
முன்கை நீண்டால் முழங்கை நீளும்.
முன்கோபம் பின் இரக்கம்.
முன் நாள் செய்த தவத்தாலே மூன்றுமயிர் தந்தோமே, இந் நாள்செய்த தவத்தாலே இருந்த மயிரும் இழந்தாயே.
முன்நேரம் கப்பற்காரன், பின்நேரம் பிச்சைக்காரன்.
முன்பகை செய்தால் பின்பகை விளையும்.
9500 முன்விட்டுப் பின் நின்று கழுத்தறுக்கலாமா?
முன்வைத்த காலைப் பின் வைக்கமாட்டேன்.
முன்னவனே முன்நின்றால் முடியாதபொருள் உளதோ (காரியம் உண்டோ)?
முன்னாலே இருந்த அதிகாரியைப் பின்னாலே வருகிற அதிகாரி நல்லவனாகச்செய்கிறது.

முன்னாலே பார்த்தால் சேவகன் குதிரை, பின்னாலே பார்த்தால் செட்டியார் குதிரை.
முன்னாலே போனால் கடிக்கிறது (முரட்டுகிறது), பின்னாலே போனால் உதைக்கிறது (எறிகிறது).
முன்னே ஆட்டைப்பிடி, பின்னே மாட்டைப்பிடி.
முன்னே ஒரு குறுணி, பின்னே ஒரு முக்குறுணி.
முன்னேபார் பின்னேபார், உன்னைப்பார் என்னைப்பார்.
முன்னேபிறந்த காதைப்பார்க்கிலும் பின்னே பிறந்த கொம்பு பலம்.
9510 முன்னேபோனால் சிசுஹத்தி, பின்னே போனால் பிரமஹத்தி.
முன்னைக்குப்போ முசுட்டைக் குழகுழப்பு.

---

## மூ.

மூக்கறைக்கு முகுரம் காட்டினால் கோபம் வரும்.
மூக்கறையனுக்கு வாழ்க்கைப்பட்டால் முன்னும் போகவிடான் பின்னும் போகவிடான்.
மூக்கறையன் கண்ணாடியைப் பகைத்ததுபோல.
மூக்கறையன் கதைபோல் பேசுகிறான்.
மூக்கிலிக்குக் கண்ணாடி காட்டினதுபோல.
மூக்கு அறுந்த (அறுபட்ட) மூளி காது அறுந்த (அறுபட்ட) மூளியைப் பழித்தாளாம்.
மூக்கு அறுபட்ட கழுதை தூவானத்திற்கு அஞ்சாது.
மூக்கு இருக்கிற மட்டும் சளி உண்டு.
9520 மூக்கு உள்ளவரையில் சளிபோகாது.
மூக்குக்கு மேல்போனால் மூவாள் என்ன நாலாள் என்ன?
மூக்குத்தூள் போடாத முண்டத்துக்கு முப்பது பணத்தில் வெள்ளி டப்பி.
மூக்குப்புண் ஆறியல்லவோ தாசரி ஆகவேண்டும்?
மூக்குமயிர் பிடுங்கினதுபோல வருத்தம் வரும்.
மூக்குமயிர் பிடுங்கினால் ஆட்பாரம் குறையுமா?
மூக்கைக்கிள்ளி மோரக் காட்டினதுபோல.
மூக்கைப்பிடித்தால் அண்ணாந்துபார்க்க இடமில்லை.

மூக்கைப்பிடித்தால் சீவன் போகிறது.
மூக்கைப் பிடித்தால் வாய் ஆவென்னத் தெரியாது.
9530 மூக்கில் இலைமேலே தூங்கு பனிபோலே.
மூங்கிற்பாயும் முரட்டுப் பெண்டாட்டியும்.
மூஞ்சி காட்டுகிறான்.
மூஞ்சியைப்பார் முகத்தைப்பார்.
மூடரோடு ஆடியநட்பு கடுவழியிற் கட்டை ஊடாடிய கால்.
மூடர்கள் சேர்க்கையில் தப்பாமல் கெடுதிவரும்.
மூடர் கூட்டுறவு முழுதும் அபாயம்.
மூடர் முன்பு மூர்க்கம் பேசாதே.
மூடனாயிருக்கிற பிள்ளையினாலே எப்போதும் நஷ்டமேவரும்.
மூடனுடைய பங்கு தரித்திரமும் இகழ்ச்சியும்.
9540 மூடன் சண்டை மூட்டுப்பிரிக்கும், மோர்க்கடன் வீட்டைத்தேடும்.
மூடிமவைத்த புண் ஆறாது.
மூடி வைத்தாலும் முணு முணு என்னும், தைத் துவைத்தாலும் டம டம என்னும்.
மூடின உடைமை மூன்று லோகம் பெறும், மூடாத உடைமை முக்காற் காசும் பெறாது.
மூடு முக்காட்டுக்குள்ளே போகிறவள் தான் ஓடி ஓடி மாப்பிள்ளை கொள்ளுகிறது.
மூட்டைக்காரச் சுவாமி.
மூட்டைக்காரனுக்கு முழங்காலிலே புத்தி.
மூதேவி மூதேவி முகங்கழுவா மூதேவி.
மூத்தது மோழை, இளையது காளை.
மூத்திரம் பெய்கிறதற்குள்ளே முப்பத்தெட்டுக் குணம்.
9550 மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
மூப்பிலும் தருமம் செய்தல் முயற்சி.
மூப்புக்குச் சோறும் முறத்துக்குச் சாணியும்.
மூப்பு ஏன் பிடிப்பது, மூதேவி வாசத்துக்கு அடையாளம்.
மூக்கமுள்ள ராஜாவும் மூட மந்திரியும் அழிவார்கள்.

மூர்க்கரை மூர்க்கர் முகப்பார்.
மூர்க்கரோடு இணங்கேல்.
மூர்க்கரோடு இணங்கினால் ஏற்கவேணும் அவகீர்த்தி.
மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.
மூர்க்கனும் முதலையும் சரி.
9560 மூர்க்கனைச் சேர்ந்தவன் வாழான், மூடனைச்சேர்ந்த ந்தவன் படியான்.
மூர்க்கன் முகத்தில் மூதேவி குடியிருப்பாள்.
மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது.
மூலிகை அறுத்தால் மூன்று உலகமும் ஆளலாம்.
மூலை வீட்டிலே முட்டையிடுகிறான்.
மூளிச்சட்டியானாலும் கொழுக்கட்டை வேகிறது ஒன்று.
மூன்றடியும் அடித்துப் போர் மேலேயும் போட்டாச்சுது.
மூன்றாங் கட்டு அவிழ்த்தால் தெரியும்.
மூன்று அடி அடித்துப் போர் மேல் போட்டாச்சுது.
மூன்று காசுக் குதிரை ஆறு காசு வைக்கோல் தின்கிறதாம்.
9570 மூன்று பெயர் வழிக்குத் துணை, இரண்டு பெயர் பிணையல் மாடு, ஒருவன் போனால் பரதேசி.
மூன்று பொருளையும் தேடு, முதிர் வயதில் ஊன்று கோலாகும்.
மூன்று மாதத்திற்கு முன்னே பல்போனவளுக்கு முறுக்குக் கடையில் என்ன வேலை?
மூன்று முடிச்சு கழுத்தில் விழட்டும், முப்பது இலை குப்பையில் விழட்டும்.
மூன்று முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒரு சுற்று.
மூன்று வீட்டுக்கு முக்காலி, நாலு வீட்டுக்கு நாற் காலி.
மூன்றே முக்கால் நாழிகை முத்து மழை பெய்தது, வாரி எடுக்கு முன்னே மண் மாரியாய்ப் போயிற்று.

## மெ.

மெச்சிக்கொள்ளுகிறதற்கு எச்சிலை எடுக்கிறது.
மெத்த அத்து மிஞ்சின பேச்சுக்காரன்.
மெத்தப் படித்தவருக்குச் சோறு வெல்லம்.
9580 மெத்தப் படித்தவன் பைத்தியக்காரன்.
மெத்தப் பரிச்சலாம் உள்ளே எரிச்சலாம்.
மெத்தப் பரிவாம் உள்ளே எரிவாம்.
மெத்தெனப்படுத்தல் நித்திரைக்கழகு.
மெத்தை நேர்த்தி தலையணை பீற்றல்.
மெய் என்றிருந்தேன் விழித்தேன் கனவாக்க.
மெய்கொண்டு விழிக்கிறது பொய்கொண்டு பொரிகிறது.
மெய்க்கும் பொய்க்கும் விரற்கடைதூரம்.
மெய்சொல்லிக் கெட்டவனுமில்லை, பொய்சொல்லி வாழ்ந்தவனு மில்லை.
மெய்சொல்லி வாழாதான் பொய் சொல்லி வாழ்வானா?
9590 மெய்ஞ்ஞானம் உடையாருக்கு அஞ்ஞானம் இல்லை.
மெய்த்தொழில் என்றும் மெய் பயக்கும்.
மெய் நின்று விழிக்கிறது, பொய் நின்று பொரிகிறது (புலம்புகிறது).
மெய் மூன்றாம் பிறை, பொய் பூரணசந்திரன்.
மெய்ம்மை சாற்ற வையம் ஏற்றும்.
மெய்யது நன்றி இடும்.
மெய்யான சத்தியன் வேத வாசகன்.
மெய்யுடை யொருவன் சொல்லமாட்டாமையால் பொய் போலும்மே.
மெலிந்தவளுக்கு மெத்தப் பெலன், மேனி மினுக்கிட்டவளுக்கு மெத்தக் கசம்.
மெலுக்கிலே அலக்கழிவு.
9600 மெல்லப்பாயும் தண்ணீர் கல்லையும் குழியப்பாயும்.
மெல்லவும் மாட்டாமல் விழுங்கவுமாட்டாமல் விழிக்கிறான்.
மெல்லிசு நோனா எல்லிட்டுக் கூத்தியார்.
மெல்லியாள் தோள் சேர்.

மெழுகாலே யாகிலும் வெள்ளைத்தலை வேணும்.
மெழுகின வீட்டிலே நாய் புகுந்ததுபோல.
மெழுகுப் பிள்ளையார்போல தொளுவு தொளுவு என்றிருக்கிறது.
மெள்ள இருந்து தள்ள வேணும் பகையை.

## மே.

மேடும் சரி பள்ளமும் சரியா?
மேட்டுமைக்காரருக்கு எதிர்த்து நிற்கவேண்டும், மெத்தனக்காரருக்குக் கிருபை அளிக்கவேண்டும்.
9610 மேட்டில் ஏறினால் முத்தாச்சி, பள்ளத்தில் இறங்கினால் அத்தாச்சி.
மேட்டுக்காகப் பயமாம், வீதிவழியில் திகிலாம்.
மேயப்போகிற மாடு கொம்பிலே புல்லைக் கட்டிக் கொண்டு போகிறதா?
மேய்கிற கழுதையைக் கூவுகிற கழுதை கெடுத்ததாம்.
மேய்கிற கோழியின் (கோழியை) மூக்கை ஒடித்தாற் போல.
மேய்கிற மாட்டை நக்குகிற மாடு கெடுத்தாற்போல.
மேய்க்கும் மேய்ப்பனை வியக்கும் வாயன்.
மேய்த்த நாளைக்குப் பால் பீச்சிக் குடித்ததுலாபம்.
மேய்த்தால் மதனியை மேய்ப்பேன்.
மேய்த்தால் மைத்துனியை (கழுதை) மேய்ப்பேன், இல்லாவிட்டால் பரதேசம் போவேன்.
9620 மேய்ப்பான் கண்ணிலும் உடையவன் பிடரிநலம்.
மேய்ப்பு பாதி, தேய்ப்பு பாதி.
மேருவை அடைந்த காகமும் அமிர்தம் உண்ணும்.
மேருவைச் சார்ந்த காகமும் பொன்னிறம்.
மேலான மினுக்கியைக் கொண்டவன் கெட்டான், மேட்டிலே பயிரிட்டவன் கெட்டான்.
மேலைக்கு உழுவார் கூழுக்கு அழுவார்.
மேலைக்குத் தாலி கட்டுகிறேன், கழுத்தே சுகமேயிரு என்றாற்போல.

மேலைக்கு வாழ்க்கைப் படுகிறேன், கழுத்தே சுக
[மே இரு.

மேலோர் அறிவு கீழோர்க்கு வருமா?

மேழிச் செல்வம் கோழை படாது.

9630 மேற்காணும் இனிமையால் காற்கு நோய் காட்டிக் கலுழ்ந்தாள்.

மேனி ஒறுப்பே ஞானி நினைப்பு.

மேனி யெல்லாம் சுட்டாலும் (சூடுபோட்டாலும்) விபசாரம் செய்கிறவள் விடாள்.

மேன்மக்கள் சொற்கேள்.

மேன்மையின் மேன்மையன் மேலாம் பதவியன்.

## மை.

மை கரையாமல் முதுகு ஆட்டு.

மைத்துனன் உண்டானால் மலைஏறிப்பிழைக்கலாம்.

மைமை (மகிமை) சுந்தரி கதவை ஒஞ்சரி.

மைலங்கி (மைனங்கி) மைலங்கி பூ எங்கே வைத்தாய், வாடாதே வதங்காதே அடுப்பிலே வைத்தேன்.

மை விழியார் மனையகல்.

9640 மை விழியார்தன்னைக் கைவிட்டொழுகு.

## மொ.

மொட்டந்தலையிலே சன்னதம் வந்தால் உள்ளே மயிரைக்கொண்டு தான் சிலுப்பவேண்டும்.

மொட்டந்தலையும் குடுமித்தலையுமாய்ப் பிணைக்கிறது.

மொட்டைச்சிக்குத் தகுந்த மூக்கறையன்.

மொட்டைத்தலைக்கு ஒரு கொட்டுக்கூடை, மோழைத் தலைக்கு ஒரு தாற்றுக்கூடை.

மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோட்டது போல.

மொட்டைத்தலையன் போருக்கு அஞ்சான்.

மொட்டைத்தலையன் முழுமோசக்காரன். [னோ?

மொட்டைத்தலையில் பட்டங்கட்டி ஆளவந்தா

மொட்டைத்தலையிற் பேய் வருமா?

9650 மொட்டைத்தலையிற் பேன் சேருமா?
மொட்டைத்தலையிற் பேன் போல.
மொட்டைமாடும் சரி கொம்பு மாடும் சரி.
மொண்டு ஆளுகிற வீட்டிற்குக் கொண்டு ஆண்டா நிறையும்?
மொண்டு தின்கிற வீட்டிலே கொண்டு தின்று முடியுமா?
மொத்தைச் சோற்றுக்கு மேளம் அடிக்கிறான்.
மொந்தைத் தண்ணீரிலே வீடு வெந்து போனால் மிடாத் தண்ணீருக்கு எப்படி?
மொழி தப்பினவன் வழிதப்பினவன்.
மொழி தவறாதவன் வழி தவறாதவன்.
மொழிவது அறமொழி.
9660 மொழிவது மறுக்கின் அழிவது கருமம்.

---

## மோ.

மோகத்தை முனி.
மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள்.
மோகனக் கல்லானாலும் பளு ஏறினால் உடையாதா?
மோகத்துக்கு அவன் பார்த்து இட்டதே பிக்ஷை.
மோச நாசம் கம்பளி வேஷம்.
மோசம் பாய் போட்டுத் தூங்குகிறது.
மோந்தாற்போல் முகத்தைக் கடிக்கிறது.
மோந்துகொள்வதுபோற் கடிக்கிறது.
மோருக்குப் போகிறவருக்கு முட்டி பிறகாலேயோ?
9680 மோருக்குப் போய் மொந்தையை ஒளிப்பான் ஏன்?
மோரைத் தெளித்தாலும் கலியாணந்தான், முத்தைத் தெளித்தாலும் கலியாணந்தான்.
மோரோ என்கிறவன் கழுத்தில் லிங்கம் கட்டினது போல.
மோர் சுடுகிற தென்று ஊதிக் குடிக்கிறாப் போல்.
மோனம் என்பது ஞான வரம்பு.

---

## மௌ.

மௌனம் மலையைச் சாதிக்கும்.
மௌனம் கலக நாசம் (நாஸ்தி).
மௌனி குடியைக் கெடுப்பாள்.

## ய.

யதா தேவதா ததா தாஸ்ய.
யதா ராஜா ததா ப்ரஜா.
9690 யதார்த்தவாதி வெகுஜன விரோதி.

## யா.

யானை கட்டக்கயிறு தானே எடுத்துக் கொடுக்கும்.
யானை கறுத்தால் ஆயிரம் பொன் பெறும், பூனை கறுத்தால் என்ன பெறும்?
யானைக்கு அறுபது அடி, அருங்குள்ளனுக்கு எழுபது அடி.
யானை தன் தலைமேலே தானே மண்ணைப் போட்டுக் கொள்வது போல.
யானை தின்ற விளங்கனி போல.
யானை தொட்டாலும் மரணம் வரும்.
யானை மிதிக்கப் பிழைப்பார்களா?
யானை முன்னே முயல் முக்கினது போல.
யானை மேல் போகிறவனைச் சுண்ணாம்பு கேட்பது போல.
9690 யானையை ஆயிரம் பொன்னுக்கு வாங்கி, இருப்பு அங்குசத்திற்கு ஏமாந்து நிற்பான் ஏன்?
யானையைத் தேடக் குடத்துள் கையிட்டாற்போல (கை வைத்தது போல),
யானை வந்தால் ஏறுவேன், சப்பாணி வந்தால் நகருவேன்.
யானை வாய்க்கரும்பும் பாம்பின் வாய்த் தேரையும் யமன்கைக்கொண்ட உயிரும் திரும்பி வராது.
யானை விற்றால் யானை லாபம், பானை விற்றால் பானை லாபம்.

## யு.

யுகமுடிய மழை பெய்தாலும் ஓட்டாங் கிளிஞ்சல் கரையுமோ?

## யோ.

யோகக்காரன் (யோகவான்) பல்லக்கு ஏறுவான்.

## ர.

ரண்டாட்டில் ஊட்டின குட்டியாய்த் தீர்ந்தது.
ரட்சையுள்ள விடத்தில் சிட்சை யிருக்கும்.
ரத்த பாசம் விடாது.

## ரா.

9700 ராகு திசையில் வாழ்ந்தவனு மில்லை, ராஜா திசையில் கெட்டவனுமில்லை.
ராங்கி மிஞ்சி ரூம் தேடுகிறது, ஆக்கிப் போட ஆள் தேடுகிறது.
ராஜனானாலும் தன் தாய்க்கு மகனே.
ராஜன் எவ்வழி, குடிகள் அவ்வழி.
ராஜன் பெரிதோ போக்கிரி பெரிதோ?
ராஜா மகளானாலும் கொண்டவனுக்குப் பெண்தான்.
ராஜாவும் பெண்ணும் கொடியும் கிட்ட இருக்கிறதைத் தழுவிக்கொள்வார்கள்.
ராட்சதனுக்கும் ஒரு புரோட்சகனுண்டு.
ராப் பிறந்த பிள்ளையு மாகாது, பகற் பிறந்த பிள்ளையு மாகாது.
ராமனைப்போல் ராஜா இருந்தால் அநுமானைப் போல் சேவகனுமிருப்பான்.

## ரி.

9710 ரிஷிப்பிண்டம் ராத்தாங்காது.

## ரு.

ருசிகண்டபூனை உறியை உறியைத் தாவுகிறது.
ருத்திராக்ஷப்பூனை உபதேசம் பண்ணினதுபோல.

## ரூ.

ரூபாய் என்றால் வயிறு நிறைந்து போகுமா?

## ரெ.

ரெட்டிப்பாளையத்திலிருந்து இரண்டு தடிக் கழுதைகள் வந்தது, அறுகம் புல்லை விட்டுக் கோரைப் புல்லைத் தின்கிறது.

## ல.

லங்கணம் பரம ஔஷதம்.

## லோ.

லோபிக்கு இரு (இரட்டைச்) செலவு.

## வ.

வகை மடிப்பிலே மாட்டிக்கொண்டது.

வக்கணைக்காரன் புளுகு வாசற்படி மட்டும்.

வக்குச்சிக்காய் மாட்டிக்கொள்கிறது.

9720 வங்கம் இறுகினால் மகாராஜனாகலாம்.

வங்கம் குத்தத் தங்கம் தேயுமா?

வங்கம்தின்றால் தங்கம், வங்கம்கெட்டால் பங்கம்.

வங்கரை கொங்கரையாய் மாட்டிக்கொள்ளுகிறது.

வங்கிஷம் வார்த்தைக்கு அஞ்சும், புழுக்கை உதைக்கு அஞ்சும்.

வங்கை வைத்தால் தன் குடிக்கு அனர்த்தம்.

வசனம் பண்ண உபாயம் காரணம்.

வச்சத்துக்கு மேலே வழியில்லை, பிச்சைக்குப்போகச் சுரைக்குடுக்கையில்லை.

வச்ச நாபியிலே புழுத்த புழு.

வச்சநாபியை உப்புப்பார்க்கலாமா?

9730 வச்சிரம் (வயிரம்) அளந்த கையால் வைக்கல் துரும்பு எடுக்கலாயிற்று.

வஞ்சகம் நெஞ்சைப் பிளக்கும்.

வஞ்சகம் வாழ்வைக் கெடுக்கும்.

வஞ்சகர்க்கு என்னநேசம் காட்டினாலும் நெஞ்சில் நேசம் கொள்ளார்.
வஞ்சகர் உறவை வழுவி விலக்கு.
வஞ்சகர் பால் ஊட்டினாலும் நஞ்சாய்விடும்.
வஞ்சனை நெஞ்சு அடைக்க!
வஞ்சனை நெஞ்சை அடைக்கும்.
வஞ்சித்து நெடுங்காலம் வாழ்தலினும் மரணமடைதலே நலம்.
வடகாற்று அடிக்கவந்தது மழையே.
9740 வடகோடு உயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வளர் (வான்) பிறைக்கே?
வடக்கத்தி யானையும் வயிற்று வலியையும் நம்பலாகாது.
வடக்கத்தி யானையை அடித்தால் தெற்கத்தியானைக்கு புத்திவரும்.
வடக்கத்திப்பார்த்த மச்சுவீட்டிலும் தெற்குப்பார்த்த குச்சுவீடு நல்லது.
வடக்குப்பார்த்த மச்சுவீட்டைப்பார்க்கிலும் தெற்குப்பார்த்த தெருத்திண்ணை நல்லது.
வடக்கே கறுத்தால் மழைவரும்.
வடக்கேபார்த்தமாளிகையை (மச்சுவீட்டை) விடத் தெற்கே பார்த்த குச்சு (குச்சுவீடு) மேல்.
வடக்கேபோன வாலியும் வரக்காணோம்.
வடலியை வெட்டி ஆள், எருமையைக்கட்டி ஆள்.
வடலிவளர்ந்து கள்ளைக் குடிக்கிறதா?
9750 வடவாக்கினியைக் கூடக் கடைவாயி லடைக்கிற பிள்ளைக்கு வாழைப்பழந் தின்கிறது வருத்தமா யிருக்குமா?
வடித்தகஞ்சி வார்க்காத சிற்றப்பன் வழித்துக் கொண்டானாம் பணமிட.
வடித்தால் காணுமா பொங்கினால் காணுமா?
வடிவிலே மன்மதன்போல.
வடிவில் எமன், மதக்காட்டோணான்.
வடுகச்சி அம்மா வால் அம்மா, வாலைப் பிடித்துக் கொண்டு தொங்கம்மா!
வடுகச்சி காரியம், கடுகுச்சு, முடுகுச்சு.

வடுகத்துரட்டு மகாவில்லங்கம்.
வடுக வில்லங்கமாய் வந்து வாய்த்தது.
வடுகனும் தமிழனும் கூட்டுப் பயிரிட்டகதை.
9760 வடுகன் தமிழறியான் வைக்கோலைக்கசுவென்பான்.
வடுகு கொழுத்தால் வறையோட்டிற்கு மாகாது.
வடுகுபொடுகாச்சு வைக்காற் போர்நெல்லாச்சு.
வடையைத் தின்னச்சொன்னார்களா துளையை எண்ணச்சொன்னார்களா?
வட்டம் சுற்றியும் வழிக்கு வரவேண்டும்.
வட்டம் சுற்றி வழியேவா,
வட்டி ஆசை முதலுக்குக்கேடு.
வட்டி ஓட்டம் விழ ஒட்டத்திலும் அதிகம்.
வட்டிக்குவட்டி எதிர் வட்டியா?
வட்டியும் முதலும்கண்டால் செட்டியார்சிரிக்காரா?
9770 வட்டுவத்திலே சொட்டுவிழுந்தால் பாக்குவெட்டிக்கு வேறே கரண்டகத்துக்கு வேறேயா?
வட்டுவத்தின் மேல் சொட்டுப் போட்டால் வட்டு வத்திற்கு மாத்திரமாபடும்?
வணங்கினபுல் பிழைக்கும்.
வணங்கின முள்ளு தைக்குமாஇ வணங்காத புல்லு தைக்குமா?
வணங்கினமுள் தைக்கும் (தைக்காது),
வணங்கின வில் தைக்கும் வணங்காத வில் தைக்க மாட்டாது.
வணங்கின வில் தீங்கை விளைக்கும்.
வணிகர்க்கு அழகு வாணிபஞ் செய்தல்.
வண்டப்பயலுக்கேற்ற சண்டிப் பெண்சாதி.
வண்டியில் ஓடம் ஏறும், ஓடம் வண்டியில் ஏறும்.
9780 வண்டில் பாரம் பூமியிலே!
வண்டு ஏறாத மரமில்லை.
வண்டு தூரத்திலே பூவின்வாசனை அறியும்.
வண்டுமெள்ள மலரில் தேன் வாங்குகிறது போல்
வண்டோடு கொண்ட வஸ்துவுக்கு மலையவ்வளவு சுத்தி.
வண்ணக்குதிரை மண்ணைத் தின்கையில் தட்டுவாணிக் குதிரை கொள்ளுக்கு அழுகிறதாம்.

வண்ணத்துக்குக் கிண்ணம் பாடுகிறான்.
வண்ணாரசித்து வழியிலேஇ தட்டாரசித்து தரையிலே.
வண்ணானிடத்துத் துணியைப் போட்டுக் கொக்கின் பிறகே அலைந்தாற்போல.
வண்ணானுக்கு உழைத்த கழுதையும் வாணியனுக்கு உழைத்த காளையும் சரி.
9790 வண்ணானுக்கு நோய் (நோவு) வந்தால் கல்லோடே,
வண்ணானுக்குப் போனான், வண்ணாத்திக்கு வந்தான்.
வண்ணானுக்கும் நிர்வாணிக்கும் உறவென்ன?
வண்ணானுக்கு வண்ணாத்திமேல் ஆசை, வண்ணாத்திக்கு கழுதைமேல் ஆசை.
வண்ணான்கெடுத்தது பாதி, வாதிகெடுத்தது பாதி.
வண்ணான்கையில் சேலைபோட்டுக் கொக்கின்பின்னே போகிறதா?
வண்ணான் துறைக் கல்லிலே வந்த பேரேல்லாம் துவைக்கலாம்.
வண்ணான் துறையில் முயல்போல.
வண்ணான் பிள்ளை செத்தால் அம்பட்டனுக்கு மயிர்போயிற்று.
வண்ணான் பெண்ணுக்கு அம்பட்டன் துரும்பு கொடுத்தாற்போல.
9800 வதுவை செய்துவாழ்.
வந்த அளவிலே சிறுக்கி பந்து அடித்தாள், வர வரச்சிறுக்கி சோர்ந்துபோனாள்.
வந்தகாசுக்கு வட்டமில்லை.
வந்த காலோடு பந்தற்காலைக் கட்டிக்கொண்டிருக்கிறாய்.
வந்த கூத்து ஆடித்தானே தீரவேண்டும்,
வந்த சண்டையைவிடுவதும் இல்லை, வலியச்சண்டைக்குப் போவதுமில்லை.
வந்தது கப்பல் மலர்ந்தது தொப்பை.
வந்தது (எட்டினது) சண்டை இறக்கடிகூடையை.
வந்தது போய்விடும் இருக்கிறது போகாது,
வந்ததும் அப்படியே சிவன் தந்ததும் அப்படியே, எனக்கு முன் என் அதிர்ஷ்டம் போய்நிற்கிறது.

9810 வந்ததெல்லாம் கொள்ளும் மகாராஜன் கப்பல்,
வந்ததை வரப்படுத்தடா வலக்காட்டுராமா!
வந்ததை வரப்ப்றறவேண்டும்.
வந்தவர் எல்லாம் சந்தையில் குடியா?
வந்தவனுக்குச்சோறு வராதவனுக்கு உலைவைக்கிறது.
வந்தவினை எல்லாம் வரட்டும்.
வந்தவினை போகாது, வராவினை வராது,
வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தைத் தள்ளினது.
வந்தாரை வாழவைக்கும், மண்ணிற் பிறந்தாரைத் தூங்கவைக்கும்.
வந்தாலும் சரி போனாலும் சரி.

9820 வந்தாற் சும்மாவரும், வராமற் போனால் ஒன்றும் வராது.
வந்தாற்போல் சிறுக்கி பந்து அடித்தாள், வர வரச் சிறுக்கி நொண்டிப்போனாள்.
வந்தாற்போல் மாமி பந்து அடித்தாள், வர வர மாமி கழுதை மேய்க்கிறாள்.
வம்சத்து வாடிகைக்கு ஒரு குடுவை பொங்கவிட்டாலும் போகாது.
வம்சம் வார்த்தைக்கு அஞ்சும், புழுக்கை உதைக்கு அஞ்சும்.
வம்பனுக்கு வழி எங்கேபோகிறவன் தலைமேலே.
வம்பான வார்த்தை மனதுக்கு அருவருப்பு.
வம்பிமகள் மழலை வார்த்தை கேட்டு ஆடவரைத் தம்பி என்று அழைக்கத் தலைப்பட்டாள்.
வம்புத் துரைத்தனத்தாரைக் கும்பிடத் தகுமோ?
வம்பும் தும்பும் விளைக்கிறது,

9830 வயசோ வல்லக்காடோ?
வயதுக்குத் தகுந்த புத்தி, வல்லமைக்குத் தகுந்த சலுகை.
வயதுக்கோ நரைத்தது மயிருக்கோ நரைத்தது?
வயதுசென்றால் மதியும் தளர்ந்துபோகுமா?
வயல் முயற்சியில் தானியம் உண்டா?
வயித்தியனுக்கு மோக்ஷம் இல்லை, உவாத்திக்கு மோக்ஷ வழி உண்டு.

வயித்தியன் கையைப்பார்த்து வாக்கிட்டதுபோல.
வயித்தியன் கைவிட்டதுபோல.
வயித்தியன் தலைமாட்டில் இருந்து அழுததுபோல.
வயிராக்கியத்துக்கு அம்பட்டன்கத்தியை விழுங்குகிறதா?
9840 வயிறாரப் போசனமும் அரையாரப் (இடுப்பாரப்) புடைவையும் இல்லை.
வயிறு நிரம்பினாலும் கண் நிரம்பாது.
வயிறு நிரம்பினால் பானை மூடாள்.
வயிறுப்சித்தால் வைத்த இடத்தைப்பார்.
வயிற்றிலே பல்லு.
வயிற்றிலே பாலை வார்த்தாற்போல.
வயிற்றில் அடித்தால் எல்லாம் போகும்.
வயிற்றுக்குடலைக் காட்டினாலும் வாழைநார் என்கிறான்.
வயிற்றுக்குத் தண்ணியும் இடுப்புக்குத் துணியும் இல்லை.
வயிற்றுச் சோற்றுக்காக வயித்தீசுவரன் கோவில் மட்டும் நடப்பான்.
9850 வயிற்றுப் பிள்ளையை நம்பிக் கைப்பிள்ளையை விட்டதுபோல.
வயிற்றுப்பிள்ளையை நம்பி மாடுமேய்க்கிற பிள்ளையைப் பறிகொடுத்தாற்போல.
வயிற்றுப் பாம்புக்குக்கடுகும் வளைப்பாம்புக்கு வெந்நீரும் இடு.
வயிற்றெரிச்சற் பெண்சாதிக்கு மாலைக் கண் ஆமுடையான்.
வயிற்றைக்கட்டினவளுக்கு ஆமுடையான், வாயைக் கட்டினவளுக்கு பிள்ளை.
வயிற்றைக் கீறிக் காண்பித்தாலும் கண்கட்டி வித்தை (இந்திராஜாலம்) என்பர்.
வயிற்றைப்பிடித்து நிழலிலிருந்தால் மலடிக்கு மசுக்கை
வரச்சே தூண்டிற்கயிற்றின் வழியாய் வந்தது, போகச்சே இருப்புச் சங்கிலியை அறுத்துக் கொண்டுபோயிற்று.

வரப்பு உயர நீர் உயரும்,
நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோன் (முடி) உயரும்.
வரப்பு உயர்ந்தால் நெல் உயரும், நெல் உயர்ந்தால் சொல் உயரும்.
9860 வரப்பு ஏறித் தாண்டமாட்டாள், அவள் பேர் தாண்டாய்.
வரப்போதலையணை, வாய்க்காலோ பஞ்சுமெத்தை.
வர வரக் கண்டறி மனமே.
வரவரத் தெரியும் மெய்யும் பொய்யும்.
வரவர மாமியார் கழுதைப்போல் ஆனாள்.
வரவிலேயா செலவிலேயா?
வரவு கொஞ்சம் வலிப்பு மெத்த.
வரவுக்குத் தகுந்த செலவு, மாப்பிள்ளைக்குத் தகுந்த மஞ்சள்.
வரவுக்குத் தக்கபடி செலவை வரையறு.
வரிசையும் இல்லை, அரிசியும் இல்லை.
9870 வரிபோடேல் கேட்டைத் தேடேல்.
வரிவிழுந்த புலியைப் பார்த்து நரியும் கொள்ளிக் கட்டை எடுத்துச் சுட்டுக்கொண்டதாம்.
வருகிறபோது எல்லாம் வலிய வரும், வந்தபின் போகிறபோது எல்லாம் போம்.
வருங் காரியம் சொல்லும் கவுளி வலியக் கழுநீர்ப் பானையில் விழுந்தாற் போல.
வருணன் சிலரை வகுத்துப் பெய்யுமோ?
வருந்தி அழைத்தாலும் வாராது வாராது.
வருந்தி வருந்திப் பார்த்தாலும் வருகிறபொழுதுதான் வரும்.
வருந்தினால் வாராதது இல்லை.
வருமுன் காப்பவன் சொன்ன புத்தியை வந்தபின் காப்பவன் தள்ளினது போல.
வரும் விதிவந்தால் படும் விதி படவேண்டும்.
9880 வரும் வினை வழியில் நிற்காது.
வருவது சொன்னேன்இ படுவது படு.
வருவது வந்ததென்றால் படுவது படவேண்டும்.
வருவான் குருடன் விழுவான் கிணற்றிலே.

வலிமைக்கு வழக்கு இல்லை.
வலிய உறவாடி வாசலிலே வந்தாலும் பொய் உற வாடிப் போய்வா என்று சொல்லுகிறான்.
வலியச்சண்டைக்குப் போகாதே (போகிறதுமில்லை), வந்த சண்டையை விடாதே (விடுகிறதுமில்லை).
வலியப்பெண் கொடுக்கிறோம் என்றால் குலம் என்ன கோத்திரம் என்ன என்பார்கள்.
வலிய வந்த சீதேவியைக் காலால் உதைத்துத்தள் ளலாமா?
வலியவந்தால் கிராந்திக்காரி.
9890 வலியவனுக் கிடங்கொடுத்தால் வயிற்றுவலிக்கிடங் கொடுத்ததுபோல.
வலியவனுக்கிட்ட வழக்கு உண்டா?
வலியவன் எடுத்தது வழி.
வலியவன் எடுத்தது வலி.
வலியான் எடுத்ததே வாய்க்கால், வலவான் ஆட்டினதே பம்பரம்.
வலையிற் சிக்கிக்கொண்ட மான்போல.
வல்லடி வழக்கைச் சொல்லடி மாமி.
வல்லமை பேசேல்.
வல்லவனுக்கு எல்லாம் உண்டு.
வல்லவனுக்குப் புல் (புல்லும்) ஆயுதம்.
9900 வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.
வல்லவன் ஆட்டின பம்பரம் மணலிலும் ஆடும்.
வல்லவன் போனது வழி.
வல்லார் இளைத்தால் வந்து இளைப்பாறும் என்று சொல்லாதிரார்கள் சுத்தவீரர்கள்.
வல்லார் கொள்ளை வாழைப்பழம் ஆகும்.
வல்லான் வகுத்ததே வாய்க்கால்.
வல்விலைக் கூறையும் மெல் விளைக்காளையும் ஆகாது.
வவ்விடக் கவ்வாச்சுது.
வவ்வுதல் செவ்வியைக் கெடுக்கும்.
வழக்குத்தீர்க்கிறதில் மரியாதைராமன் தான்.
9910 வழவழத்த உறவைப் பார்க்கிலும் வைரம்பற்றிய பகை நன்று.

வழி ஆச்சது, காரியம் வெளியாச்சுது.
வழிகட்டிப் பறிக்கிறவன் திருடன், வரதராஜுலு ஏறுகிறதே கருடன்.
வழிநடை வார்த்தை வாகனம்போல.
வழியிலேகண்ட குதிரைக்கு வைக்கோற்புரி (பழுதை) கடிவாளம்.
வழியிலே கிடக்கிற கோடாலியை எடுத்துக் காலின் மேல் போட்டுக் கொள்வானேன்?
வழியுமில்லை வாய்க்காலுமில்லை.
வழியே ஏகுக (ஏறுக), வழியே மீளுக.
வழியேபோகிற சனியனை வாரத்துக்கு (விலைக்கு) வாங்கினாற்போல.
வழியேபோய் வழியேவந்தால் அதிகாரி செங்கோல் என்னசெய்யும்?
9920 வழி வழியாய்ப் போகும்போது விதி விதியாய் வருகிறது.
வழி வாய்க்காலில்லாமல் பேசுகிறாய்.
வழுக்கிவிழாத குதிரை வளமான குதிரை.
வளரும் காய் பிஞ்சிலே தெரியும்.
வளர்த்த கடா மார்பிலே பாய்ந்ததுபோல.
வளர்த்த நாய் முகத்தைப் பார்க்கிறதுபோல.
வளர்த்தபிள்ளை சோறு போடாவிட்டாலும் வைத்த பிள்ளை சோறுபோடும்.
வளர்த்தி வாழ்க்கைப்படுத்துகிறது.
வளர்ந்த உயரத்தை வாசற்படியிலே காட்டுகிறதா?
வளர்ப்பு வக்கனை அறியாது.
9930 வளவன் ஆயினும் அளவறிந்தளித்துண்.
வளைந்த மூங்கில் அரசன் முடிமேல், வளையாத மூங்கில் கழைக்கூத்தன் காலின் கீழ்.
வறட்டுத்தவளைப்போல் வாள் வாள் என்கிறது.
வறட்டுமாடானாலும் ஒருபீர் பால்கொடுக்காதா?
வறியோர்க்கு அழகு வறுமையிற் செம்மை.
வறுத்த பயறு முளைக்குமா?
வறுத்த பயறு முளைத்தாற்போல.
வறுமை உள்ளார்க்குப் பொறுமை உண்டு.
வறுமை கண்டவர் வையத்தில் அநேகர்.
வறுமைக்கு மூதேவியும் செல்வத்துக்கு சீதேவியும்.

9940 வறுமை வந்தால் பத்தும் பறந்துப்போம்.
வறையோட்டை நக்கினால் வாயெல்லாம் கா॥.
வற்றலாய்க் காய்ந்த வடகம்போல் வற்றி.
வற்றிய ஓலை கலகலக்கும்.
வற்றிற்றாம் கள்ளு வறண்டாளாம் சாணாத்தி, ஊறிற்றாம் கள்ளு உதித்தாளாம் சாணாத்தி.
வனத்துக்கு வான்மீகீ, பேருக்கு வியாசர்.
வனத்துப்புலியை மான்குட்டி அடித்தாற்போல.
வனவேடர் மான் கும்பைக் கலைத்துவிட்டது போல.
வனாந்தரத்து நுழைநரிகள் இடையர்களின் தீர்க்க விரோதிகள்.
வன்சொல் வணக்கத்திலும் இன்சொல் வணங்காமை நலம்.
9950 வஸ்திராபரணம் விசேஷமோ அன்னம் விசேஷமோ.

---

## வா.

வாகனம் உள்ளவன் நடைக்கு அஞ்சான், பால் உண்டான் பந்திக்கு அஞ்சான்.
வாகை இளம்பிஞ்சு கண்டவர்கள் இல்லை, வாகான தென்னம்பிள்ளை கண்டவர்கள் இல்லை.
வாக்கில் கெட்ட கழுதையைப் போக்கில் விட்டடி.
வாக்கினால் கெட்டகழுதையைப் போக்கிலே விடுங்கள்.
வாக்குக்கெட்டினது மனதுக்கெட்டவில்லை.
வாக்கும் மனதும் ஒத்து வார்த்தை சொல்லவேண்டும்.
வாக்கு வயணம் தெரியாமல் பேசுகிறான்.
வாங்கினகடனைக் கொடுக்கறியான் கொடுத்தகடனை வாங்கறியான்.
வாங்கினகடனைக் கொடுக்கிறதில்லை, கொடுத்தகடனை கேட்கிறதில்லை.
9960 வாங்கினகடன் கொடாத வல்லாளகண்டன்.
வாங்குகிறதைப் போலிருக்கவேண்டும் கொடுக்கிறதும்.

வாங்குகிறபோது ஒருபிள்ளை பெற்றதுபோல, கொடுக்கிறபோது ஒருபிள்ளை செத்ததுபோல.
வாசற்படி இட்டு விடிகிறதோ மகாதேவர் இட்டு விடிகிறதோ?
வாசற்படி தலைபிற்பட்ட பிறகா குனிகிறது?
வாசனையற்ற புஷ்பம் வனத்திலிருந்தென்ன பலன்?
வாணாளுக்கு ஏற்ற வயிற்றெரிச்சல்.
வாணாள் உடையான் வலுப்பட்டுச்சாகான்.
வாணியஞ்செய்யிற் காணியும் குறி.
வாணியக்கட்டை வயிரக்கட்டை தேய தேயத் துடைப்பக்கட்டை.
9970 வாணியர்கள் ஆடும் செக்கை வளையவரும் எருதுகள் போல.
வாணியன் ஆஞ்ச் கோணியும் கொள்ளாது.
வாதத்து இயல்பு எடேல்.
வாதம் ஊதியறி, வேதம் ஓதியறி,
வாதம் கெடுத்தது பாதி, வண்ணான் கெடுத்தது பாதி.
வாதம் கெட்டால் வைத்தியம்.
வாதம் முற்றி வைத்தியனாற்போல.
வாதி கண்ணுக்கு மட்டம் எட்டுமாற்று.
வாதிகெடுத்தது பாதி, வண்ணான் கெடுத்தது பாதி.
வாதுக்கு ஆடின தேவடியாள் (தொம்பன்) வயது சென்றால் கழுதைமேய்ப்பான்.
9980 வாதுமுற் கூறேல்.
வாதுபாடி வண்ணம்பாடு.
வாத்தியாரே பிள்ளைக்கென்னவரும்? மாதம் எனக்கு இரண்டு பணம் வரும்?
வாத்தியாரைக் குறைக்கேழ்வரகு விதைக்க வரச் சொன்னதுபோல.
வாத்தியாரை மெச்சினபிள்ளை இல்லை.
வாத்தியார் பெண்சாதி மூத்தவள் பத்தினி.
வாப்பா வாப்பா தொப்பியைப் பிடி கிணற்றிலே விழ.
வாப்பாவும் மாமரமும் ஓடையும் வந்தால் மாலுமி சாஸ்திரம் சொல்லுகிறேன்.

வாயாடி தான் வல்லவன்.
வாயாடி வார்த்தை மட்டில்லா ரவை.
9990 வாயாரே வாயாரே எங்கே போனாய், கையாரிடத்திலே கடன் வாங்கப் போனேன்.
வாயிலே ஊதி வண்டாய்ப் பறக்கிறது.
வாயாலே கேட்டால் வாழைப் பிஞ்சும் கொடான், தண்டித்துக் கேட்டால் தாறோடே கொடுப்பான்.
வாயாலே சொன்னால் தாயாரை விற்றுக் கொடுக்க வேண்டியது.
வாயாலே தின்று வாயாலே கக்கும் வௌவாலைப் போல.
வாயால் பந்தல் இடுகிறது (போடுகிறதுபோல்).
வாயிருந்தால் மகளே வாழ்ந்து வருவாய்.
வாயிருக்கிறது வார்த்தை.
வாயிலே உண்டு வழி.
வாயிலே உறவு மனதிலே பகை.
10000 வாயிலே போகிறதைக் கக்கிக் கொடுக்கிறது.
வாயிலே வந்ததை வறுத்துக்கொறிக்கிறது.
வாயில்லாதவன் கழுவிலே இருப்பான்.
வாயில் போகிறதைக் கக்கிக் கொடுக்கிறது.
வாயினால் இல்லை என்கிறதைக் கையினால் இல்லை என்கிறது நலம்.
வாயுவும் புள்ளுமாக அலைகிறான்.
வாயுள்ளவன் பிழைப்பான்.
வாயுள்ளார் பேசவும் வலதுள்ளார் கொழிக்கவும் ஆச்சுதே (எனக்கு வந்தது).
வாயைத் திறந்தால் நாடெங்கும் அசையும்.
வாயைப் பர்ர்த்து ஆளை எய்த்தேன்.
10010 வாயை மூடித் தலையை வெட்டுகிறது.
வாய் இருந்தால் வங்காளம் போகலாம்.
வாய் இல்லாவிட்டால் நாய் கூடச் சட்டை செய்யாது.
வால் இல்லாவிட்டால் நாய் கொண்டு போய் விடும்.
வாய் உண்டானால் பிள்ளை பிழைக்கும்.

வாய் உபசாரத்திலே வழி விடுகிறது.
வாய் உள்ளே பெட்டிக்குத் தூர் இல்லை.
வாய் உள்ளவனுக்குக் காலம்.
வாய் வயதுகரும்பு கை இரும்பு.
வாய் காய்ந்த புலி ஆள் மேலே விழுந்தது போல.
10020 வாய் கைக்கு உபசார வார்த்தை சொல்லுவானேன்?
வாய்க் கடங்காப் பிடி பிடிக்காதே.
வாய்க்கு உண்டா வாதம்?
வாய்க்குக் கை உபசாராமா?
வாய்க்குப் பிள்ளையும் மற்றத்திற்கு மாற்றானும்.
வாய்க்குப் பிள்ளை, வயிற்றுக்கு மாற்றான்.
வாய்கொழுப்பு சீலையால் வடிகிறது.
வாய் சர்க்கரை கை கருணைக்கிழங்கு.
வாய் சர்க்கரை கை கொக்கரை.
வாய் சொல்லும் பிடரி கும்பிடும்.
10030 வாய் தான் இருக்கின்றது வாய்க் கரிசிக்கு வழி யில்லை.
வாய் திறக்கப் பொய் திறக்கும். (போல்.
வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் போனது
வாய்த்தால் கிழவியும் பாடுவாள்.
வாய் நல்லதானால் ஊர் நல்லது.
வாய் பார்த்தவள் வாழ்வு இழந்தாள், அம்பலம் பார்த்தவன் பெண்டு இழந்தான்.
வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ?
வாய்ப்பந்தல் போட யாரால் கூடாது?
வாயப்பேச்சு பேசுகிறவன் வளம் இழந்து போவான்.
வாய்ப்பேச்சைப் பிடுங்கி வயிற்றெலிச்சலைக் கொட்டிக் கொள்ளுகிறது.
10040 வாய் மதத்தால் வழக்கு இழந்தாள்.
வாய் மதத்தால் வாழ்வை இழந்தாள்.
வாய் வாழைப்பழம் கை கருணைக் கிழங்கு.
வாரியற் கொண்டைக்குப் பட்டுக் குஞ்சம் கட்டினாற் போல.
வார்த்தை இருந்துபோம், வழி தூர்ந்துபோம்.

வார்த்தை காற்று.
வார்த்தைக்குத் தரித்திரம் இல்லை (தரித்திரமா?).
வால ஜோஸியனும் விருத்த வைத்தியனும் நன்று.
வாலிபத்திலே முதிர்ந்த புத்தி குறுகின வயதுக்கு அடையாளம்.
வாலிபத்தில் இல்லாத மங்கையை வயது சென்ற பின் என்ன செய்கிறது?
10050 வாலிபத்தில் தேடாத தேவடியாள் வயது சென்ற பின் தேடப் போகிறாளா?
வாலிலே கலத்தைக் கட்டினால் மாடு வேளைக்குக் குறுணி கறக்கும்.
வாலில்லாத குரங்கு போல.
வால்நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடம்போனால், கால் நடையாய்ப் போனவர்கள் கனக தண்டிகை ஏறுவார்கள்.
வால் பிராணன் தலைக்கு வந்தது.
வால் போனாலும் போகிறது எனக்குத் தோல் வேண்டும்.
வாழாத பெண்ணுக்கு மை வண்டி, பொட்டு ஏண்டி, மஞ்சள் குளி ஏண்டி?
வாழாத பெண்ணைத் தாழ்வாய் உரைக்காதே.
வாழாப் பெண் தாயோடே.
வாழுகிற பெண்ணைத் தாயார் கெடுத்ததுபோல.
10060 வாழுகிற வீட்டில் மரநாய் கட்டினதுபோல.
வாழும் பிள்ளை விளையாட்டிலே தெரியும்.
வாழை யடி வாழை.
வாழைக்கு ஒரு குலை.
வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம்.
வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாற் போல. (போல.
வாழைப்பழத்தில் வழ வழ என்று ஊசி ஏறுவது
வாழைப்பழத்துக்கு வீங்கித் தோலைப்போட்டான் புல்லாப் பூச்சிலே.
வாழைப்பழம் கொண்டுபோனவள் வாசலில் இருந்தாள், வாயைக் கொண்டு போனவள் நடு வீட்டில் இருந்தாள்.
வாழைப்பழம் தின்னுகிறது வருத்தமாயிருக்குமா?

10070 வாழை வடக்கு ஈனும், வான்கமுகு தெற்கு ஈனும்.
வாழ்கிறதும் கெடுகிறதும் வாயிலே தான்.
வாழ்கிறதும் தாழ்கிறதும் வண்டி உருளை போல.
வாழ்கிறவளை வைக்க வேண்டாம், தாழ்ந்தவனைத் திட்ட வேண்டாம்.
வாழ்கிற வீட்டில் வனக் குரங்கு வைத்ததுபோல.
வாழ்கிற வீட்டுக்கு ஒரு பெண்ணும், வைக்கோற் போருக்கு ஒரு கன்றும்.
வாழ்கிற வீட்டுக்கு வாழை வைத்துப்பார்.
வாழ்கிறான் வாழ்கிறனென்று மதுரை யெல்லாம் பேராம், ஆற்றில் இறங்கினால் ஐம்பத்தெட்டுத் தொல்லையாம்.
வாழ்க்கை கொடுத்தவன் கையில் வாழ் நாள் அடைக்கலம்.
வாழ்க்கைப் படுகிறதை நம்பி அவசாரி ஆகிறதும் கெட்டது.
10080 வாழ்க்கைப்படுகிற பெண்ணுக்குச் சீப்பை எடுத்து ஒளித்து வைத்தால் நிற்குமா?
வாழ்நாளுக்கு ஏற்ற வயிற்றெரிச்சல்.
வாழ்ந்த மகள் வந்தால் வர்ணத்தடுக்கு இடு, கெட்டமகள் வந்தால் கிழிந்த தடுக்கு இடு.
வாழ்ந்தவனை வாழ்த்த வேண்டாம், தாழ்ந்தவனைத் திட்ட வேண்டாம்.
வாழ்ந்தவன் கெட்டால் வறையோட்டுக்கு மாகான்.
வாழ்ந்தவன் வறியவனானால் வறையோட்டிற்கு மாகான்.
வாழ்வாருக்குச் சீதேவி வாயிலே.
வாழ்வும் சில காலம் தாழ்வும் சில காலம்.
வாழ்வு வரும்போது மதி ஓடி வரும்.
வாழ்வைத் தள்ளினாலும் சாவைத் தள்ளப் படாது.
10090 வாளுக்கு ஆயிரம் தோளுக்கு ஆயிரம்.
வாளுக்கு ஆயிரம் தோளுக்கு ஆயிரம் சம்பாதிக் கிறாயோ?
வாளுக்கு ஆயிரம் தோளுக்கு ஆயிரம் சம்பாதித் தாலும் மட்டாய்ச் செலவிடு.

வானத்தில் உள்ள அம்புலியைவாஎன்றால் வருமா?
வானத்தின் கீழ் இருந்து மழைக்கு அஞ்சினால் தீருமா?
வானத்தை வில்லாய் வளைப்பான், மணலைக் கயிறாய்த் திரிப்பான்.
வானமும் பூமியும் கொள்ளாதான் மரத்திலும் கல்லிலும் இருப்பானா?
வானமே ஈன்றது பூமியே தாங்கிற்று.
வானம் சுரக்கத் தானம் சிறக்கும்.
வானம் சுருங்கிற் றானம் சுருங்கும்.
10100 வானம் பார்க்கப்போயும் இடமிடைஞ்சலா?
வானம் பொத்தலென்று சிற்றெறும்புத் தோலால் அடைத்தான்.
வானம் வழங்கத் தானம் வழங்கும்.
வான்குருவிக் கூடும் வன்கரையான் புற்றும் தேன் சிலந்தி இறாட்டும் செய்யத் தெரிவதரிது.
வான் செய்த உதவிக்கு வையகம் என்னசெய்யும்?

---

## வி.

விசும்பிற் றுடிஎள வீழினல்லால் பசும்புற் றலைகாண் பரிது.
விசுவாசக் காரனுக்கு வெந்நீரும் பருக்கையும், தாட்டோட்டக் காரனுக்குத் தயிரும் சோறும்.
விசுவாசக் கொக்கு நடமாடிச் செத்ததாம்.
விசுவாசப் பூனை கருவாட்டைத் தூ க்கிக்கொண்டு போகிறதாம்.
விசுவாசம் இருந்தால் வேசியும் பிழைப்பாள், நிசம் இருந்தால் நீசனும் தழைப்பான்.
10110 விச்சுளி வலமானால் நிச்சயம் வாழ்வுண்டாம்.
விஷத்தைக் குடித்தவன் மிளகு நீர் குடிக்கவேண்டும்.
விடாச் சுரத்துக்கு விஷ்ணுகரந்தை.
விடாத மழை பெய்தால் படாத பாடு படவேண்டும்.
விடாத மழையால் இல்லி ஒழுக்கு அடைபடும்.
விடிந்தால் தெரியும் மாப்பிள்ளை குருடும் பெண் குருடும்.

விடிந்தால் தெரியும் வெளிச்சம்.
விடிந்தும் பெண்ணுக்கு முக்காடோ?
விடிய விடியக் கதை கேட்டு இராமனுக்குச் சீதை என்ன வேண்டுமென்று கேட்டதுபோல.
விடியற்காலத்தில் கலியாணம், பிடி பாக்கு.
10120 விடியற்காலம் கலியாணம், பிடி அடா தாம்பூலம்.
விடியாமூஞ்சிக்கு வேலை அகப்பட்டாலும் கூலி அகப் படாது.
விடியாமூஞ்சி வேலைக்குப் போனாலும் வேலை அகப் படாது, வேலை அகப்பட்டாலும் கூலி அகப்படாது.
விடியுமட்டும் இழைத்தவனும் விடிந்தபின்பு சாலை உடைத்தவனும் சரி.
விடியுமட்டும் மழை பெய்தாலும் ஓட்டாங் கிளிஞ்சில் முளைக்காது (கரையுமா).
விடுவிடு சங்கிலி வேப்பஞ் சங்கிலி, விட்டால் குடி கெட்டுப்போம்.
விட்டகுறை தொட்டகுறை விடுமா?
விட்டது அடா ஆசை விளாம்பழத்து ஓட்டோடே.
விட்டுதடி உன் ஆசை விளாம்பழத்து ஓட்டோடே.
விட்டிற் பூச்சியைப்போல் பறந்து திரிகிறான்.
10140 விட்டு அலைகிறதிலும் தொட்டு அலை.
விட்டுச் சொன்னால் கட்டு (குட்டு)க் குலையும், விரித் துடுத்தினால் அழுக்குப்படும்.
விட்டுவிட்டாலும் ஒட்டிக்கொண்டு வருகிறான்.
விட்டுவிட்டுப் பெய்கிற மழையிலும் விடாமற் பெய்கிற தூவானம் நல்லது.
விண்காட்டப் போனவன் கண்காட்ட வந்தானாம்.
விண்ணாணம் எங்கே, கின்னரம் (கிண்ணாரம்) எங்கே?
விண்ணுமாலைக்குக் கலியாணம், விழுந்து கொட்டடா சாம்பவா!
விண்ணேறு தப்பினாலும் கண்ணேறு தப்பாது.
விண் தொடு கொடுமுடி மேருவும், வீறளி தென் திசைக் கிரியும்.
விண் பொய்த்தால் மண் பொய்க்கும்.

10140 விண் வலிதோ மண் வலிதோ?
விண் விடும் குடிக்கு விண் விடும், என் பாவி குடிக்கு விண் விடுமா?
விதி எப்படியோ மதி அப்படி.
விதித்த விதியைவிட வேறு நடக்குமா?
விதி போகிற வழியே மதி போகும்.
விதி முனைந்தவனை விரியன் கடிக்கும்.
விதியின் பயனே பயன்.
விதியை மதியால் தடுக்கலாமா?
விதியை வெல்லுவாருண்டோ?
வித்தாரக்காரன் செத்தால் பிழைக்கான்.
10150 வித்திருக்குமிடத்தில் வேர் இருக்கவேண்டும்.
வித்து இல்லாச் சம்பிரதாயம் மேலுமில்லை கீழு மில்லை.
வித்துக்கு விட்ட சுரைக்காய் போல.
வித்துவானுக்கேது பரதேசம்?
வித்துவானை அடித்தவனுமில்லை, பெற்ற தாயுடன் போனவனுமில்லை.
வித்துவான் அருமையை வித்துவான் அறியவேண்டு மேயல்லாமல் விறகு விற்கிறவனா அறியப்போகிறான்?
வித்துவான்களுக்கு எது பெரிது?
வித்தை அடிக்கிற கோழிக்கு விலாவில் இருக்கிறதாம் பித்து.
வித்தை அற்றவன் அழகு வாசனை இல்லா முருக்கம் பூப்போல.
வித்தைக்கள்ளி மாமியார் விறகு ஒடிக்கப் போனாளாம், கற்றாழை முள்ளு கொத்தோடே தைத்ததாம்.
10160 வித்தைக் கள்ளி விளையாட்டுக்கள்ளி, பாகற்காய் விற்ற பழங்கள்ளி.
வித்தைக்காரப் பெண்பிள்ளை செத்த பாம்பை ஆட்டுகிறாள்.
வித்தையடி மாமி, விற்கிற தடி பணிகாரம்.
வித்தையில் எளிது சூனியம், பன்னத்திலேஎளிது நீற்றுப்பெட்டி.

வித்தையுள்ளவன் பெரியவன்.
வித்தை விரும்பு.
விநாச காலே விபரீத புத்தி.
விந்துவிட்டாயோ வெந்துவிட்டாயோ (கெட்டாயோ)?
வியாச்சியம் சேற்றில் நட்ட கம்பம்.
வியாதிக்கு மருந்து உண்டு, விதிக்கு மருந்து உண்டா?
10170 வியாதியிலும் மருந்து கொடிது.
விரகன்கோசம் கட்டை தட்டிப்போம்.
விரதத்திலும் பெரிதோ ஒருசந்தி?
விரதம் கெட்டாலும் சுகம் தக்கவேண்டும்.
விரலுக்குத் தக்க வீக்கம்.
விரல் உதவி விருந்தினர் உதவார்.
விரல் உரலானால் உரல் என்ன ஆகும்?
விரல் கண்ணிலே குத்தினதென்று வெட்டிப் போடுவார்களா?
விரல் நக்கி மோர் குடிப்பதுபோல.
விரல்நுழைய இடங்கொடுத்தால் உரலை (தலையை) நுழைக்கிறான்.
10180 விரல் நுழைய இடமுண்டானால் தலையைப் புகவிடலாம்.
விரல்போகாத இடத்தில் உரல்போமா?
விரற்சுற்றின்பேரில் அம்மி (உரல்) விழுந்தது போல்.
விரித்து உடுத்தினால் அழுக்குப்படும்.
விரிந்த உலகில் தெரிந்தவர் சிலர்.
விருது கூறிவந்து செடியிலே நுழைகிறதுபோல.
விருதுக்கா வேட்டை ஆடுகிறது?
விருத்தாசலம்போனால் திரட்பாவம் போகும்.
விருந்து இட்டுப் பகையை விளைக்கிறது.
விருந்து இல்லாச் சோறு மருந்தோடொக்கும்.
10190 விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்.
விருந்தும் மருந்தும் மூன்றுபொழுது (நாள்).
விருந்தைப்பண்ணிப் பொருந்தப்பண்ணு.
விருப்பத்தினால் ஆகாதது வீம்பினால் ஆகுமா?

விரை ஒன்றுபோடச் சுரை ஒன்று முளைக்குமா?
விரைக்குவிட்ட காய்போல.
விரைக்கோட்டையிலே எலியை (பெருச்சாளியை) வைத்துக் கட்டினாற்போல.
விரைமுந்தியோ மரம்முந்தியோ?
விலக்கக்கூடாத துன்பத்திற்கு விசனப்படாதே.
விலங்கும் பறவையும் விதித்த கோடு கடவாது.
10200 விலங்கு வேண்டாம் தொழுவில் இருக்கிறேன் (மாட்டிக்கொண்டேன், போடு என்கிறான்).
விலங்கை விட்டுத் தொழுவில் மாட்டினதுபோல.
விலைக்குக்கொண்டுவிருதுக்கு வேட்டை ஆடுகிறதா?
விலைமட்கு அழகு தன்மேனி மினுக்குதல்.
விலைமோரிலே வெண்ணெய் எடுக்கிறது.
விலைமோரிலே வெண்ணெய் எடுத்தத் தலைமகனுக்குக் கலியாணம் பண்ணுவாள்.
விட அடியால் சாகாதது கல் அடியால் சாகுமா?
வில் இல்லாதவன் அம்பு தேடுவான் ஏன்?
வில்லம்போ சொல்லம்போ?
வில்லுக்கு விஜயன் பரிக்கு நகுலன்.
10210 வில்லுக்குனியாது எய்தால், விலகாது எதிர்த்த பகை.
வில்லும் விளாங்காயுமாயிருக்கிறது.
வில்வப்பழம் தின்பார் பித்தம்போக, பனம்பழம் தின்பார் பசிபோக.
வில் வளைந்தால் மோசம் தரும்.
விவேகத்தின்மேன்மை அவிவேகத்தை ஒழித்தல்.
விழக்குழிப் இறைத்த நீர்போல.
விழித்தவன் கன்று நாகு கன்று, தூங்கினவன் கன்று கடாக்கன்று.
விழியிலே குத்தின விரலை அறுப்பாருண்டோ?
விழுங்கின ரகசியம் வயிற்றில் இராது.
10220 விழுகிற சுவரிலே கை வைத்தாற்போல.
விழுகிற பிள்ளைக்கு அரிவாள்மணை அண்டை கொடுத்தாற்போல.

விழந்த இடம் பொழுது, விட்ட இடம் விடுதி.
விழுந்தது பாம்பு, கடித்தது மாங்கொட்டை,
விழுந்தபிள்ளையை எடுக்க நேரமில்லை.
விழுந்தவன் எழுந்திருந்தால் வெட்கத்துக்கு அஞ்சிச் சிரிப்பான்.
விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறான்.
விளக்கிருக்கத் தீத்தேடுவார்.
விளக்கிருக்க நெருப்புக் கலைவானேன்?
விளக்கிலே கொளுத்தின பந்தம்போல.
10230 விளக்கிலே மொய்த்த விட்டிற் பறவைபோல.
விளக்கில்லாத வீட்டிலே பேய் குடியிருக்கும்.
விளக்கு ஏற்றிக் கூடையால் மறைக்கிறது.
விளக்கு ஒளிக்கு ஆசைப்பட்ட விட்டில்போல.
விளக்குமாற்றால் அடித்துக் குதிரையோடு தீவட்டி கொடுத்தாற்போல.
விளக்குமாற்றுக் கட்டைக்குப் பட்டுக்குஞ்சம் கட்டினாற் போல.
விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சமா?
விளக்கெண்ணெயாம் தலைக்கெண்ணெய்.
விளக்கெண்ணெயிற் போட்ட கழற்காய்போல.
விளக்கெண்ணையைத் தடவிக்கொண்டு ஆற்றுமணலில் புரண்டாலும் ஒட்டுகிறது தான் ஒட்டும்.
10240 விளக்கெண்ணெய்க்குக் கேடே தவிரப் பிள்ளை பிழைப்பது இல்லை.
விளக்கெண்ணெய் வார்த்துப் பட்டம் கழுவலா?
விளக்கைக் கட்ட விட்டிற் பூச்சிகள்போல.
விளக்கைக் கொளுத்திக் கீழே வைப்பார் உண்டோ?
விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுகிறதா?
விளக்கை வெளியிலே வைத்தாற்போல.
விளக்கை வைத்துக்கொண்டு நெருப்புக்கு அலைகிறது போல.
விளங்காமடையன் விறகுக்குப் போனால் விறகு கிடைத்தாலும் கொடிகிடையாது.
விளங்காய்க்குத் திரட்சி உண்டு பண்ணுகிறதா?

விளையச்சே சோறாய்விளைந்தால் விறகு விராட்டி என்னத்துக்கு?

10250 விளையாட்டாய் இருந்தது வினையாய் முடிந்தது.

விளையாட்டுச் சண்டை வினைச்சண்டையாம்.

விளையாட்டுப் பண்டம் வீடுவந்து சேராது.

விளையாட்டுப் பிள்ளை மண்மேலாசை.

விளையாட்டுப் பிள்ளைக்கு விதரணை தெரியுமா?

விளையாட்டுப் பிள்ளை விஷத்துக்கு அஞ்சாது.

விளையும் பயிர் முளையிலே தெரியும்.

விளைவதாகிலும் அளவறிந்து அழி.

விளைவது அரிசியானாலும் மேல் உமி போனால் விளையாது.

விறகு கட்டுக்காரனுக்கு நாரை வலமானால், ஒரு பணம் விற்கிறது ஒன்றேகாற் பணம் விற்கும்.

10260 விறகு கட்டுக்காரனுக்குப் பிளவை புறப்பட்டால் விறகு கட்டையால் ஓரடி.

விறகு கோணாலானாலும் நெருப்புப்பற்றாதா?

விறகு தலையனுக்கு நோய்வந்தால் விறகு கட்டோடே போய்விடும்.

விற்ற குண்டைக்குப் புல் போடுவான் ஏன்?

வினைக்காலம் வருங்காலம் மனைவழியும் தெரியாது.

வினைதீர்த்த கோயிலுக்குப்போயும் வினைதீரவில்லையா?

வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்.

விஷத்தின் மேல் விஷம், விஷம்போக்கும்.

விஷத்தைக் குடிக்கப் பாலாமா?

விஷம் குடித்தவன் மிளகு நீர் குடிக்கவேண்டும்.

10270 விஷம் குடித்தாலும் சாகார் விசுவாசிகள்.

விஷம் தின்றால் கொல்லும்.

விஷம் தீர வைத்தியன்வேண்டும், பாவம் தீரத் தெய்வம் வேண்டும்.

விஷ்ணு பெரியவர் என்பது ஸ்ரீரங்கத்தில் பார்க்க வேண்டும்.

விஷ்ணுவே சமஸ்தம் என்பார் சிலர், சிவனே பெரிது என்பார் சிலர்.

விஷ்ணுவைப் பெரிது என்பார் ஸ்ரீரங்கத்தில், சிவனைப் பெரிது என்பார் அருணாசலத்தில்.

---

## வீ.

வீக்கமோ தூக்கமோ?

வீக்கம் கண்டால் தூக்கமாம்.

வீங்கலுக்கு விஷம் அதிகம்.

வீசம் இறுத்த குடி நாசம்.

10280 வீசி நடந்தால் வெள்ளி வீசம் குறையும்.

வீச்சு என்றாலும் விடுவேனோ, வீரபுத்திர அம்பலக்காரா?

வீடு அசையாமல் தின்னும், யானை அசைந்து தின்னும்.

வீடு கட்டுகிறது அரிது, வீடு அழிக்கிறது எளிது.

வீடு கட்டு முன்னம் கிணறு வெட்ட வேண்டும்.

வீடு தருவோன் மேலுந்தருவோன்.

வீடு நிறைந்த விளக்குமாறு.

வீடு பலக்கக்கட்டினால் புயலுக்கும் ஈடுகொடுக்கும்?

வீடு பற்றிக்கொண் டெரியும்போது சுருட்டுக்கு நெருப்புக் கேட்டானாம்.

வீடு பற்றி வேகும்போதா கிணறு எடுப்பது?

10290 வீடு போ என்கிறது, காடு வா என்கிறது.

வீடும் விளக்குமாயிருந்தால் நாடும்நடப்பும் வேண்டாமா?

வீடு வீடாய்ப் பதம் பார்க்கிறான்.

வீடு வெறும் வீடாய் இருந்தாலும் மணியம் ஏழு ஊர்.

வீடு வெறும் வீடு மேல்வீடு (வேலூர்) அதிகாரம்.

வீடெல்லாம் குருடு வாசலெல்லாம் கிணறு,

வீட்டிலிருக்கிற பூனையை அடித்தால் மேட்டிலிருக்கிற எலியைப் பிடிக்கும்.

வீட்டிலே வினை இருக்கிறது வினைதீர்த்த கோவிலுக்குப் போனால் தீருமா?

வீட்டில் அடங்காதவன் ஊரில் அடங்குவான்.

வீட்டில் அழகு வேம்படி யாகும்.

10300 வீட்டிளக்காரம் வண்ணா னறிவான்.
வீட்டுக் கருமம் நாட்டுக் குரையேல்.
வீட்டுக் காரியம் பாராதவன் நாட்டுக்காரியம் பார்ப் [பானா?
வீட்டுக்காரி யென்று பெண்சாதிக்குப் பெயர்.
வீட்டுக்கு அடங்காத பிள்ளையை ஊரார் அடக்குவார்கள்.
வீட்டுக்கு அலங்காரம் பெரிய குடி.
வீட்டுக்கு அலங்காரம் மனையாள்.
வீட்டுக்கு அலங்காரம் விளக்கு.
வீட்டுக்கு அலங்காரம் வேளாண்மை.
வீட்டுக்கு இருந்தால் வெண்சலப் பெண்டாட்டி, வீட்டுக்கு இல்லாமற் போனால் தூங்கற் பெண்டாட்டி.
10310 வீட்டுக்கு ஒரு மொத்தை கேட்டுக்கொள்ளடி மாரியாத்தை.
வீட்டுக்கு ஒரு வாசற்படி, பூட்டுக்கு ஒரு திறவுகோல்.
வீட்டுக்குச் சோறில்லை சிவனறிவான், நாட்டுக்குச் செல்லப்பிள்ளை நானல்லவா?
வீட்டுக்குப் புகழ்ச்சியோ நாட்டுக்குப் புகழ்ச்சியோ?
வீட்டுக்கு வாய்த்தது எருமை, மேட்டுக்கு வாய்த்தது போர்.
வீட்டுக்கு வீடு எதில் வீடு ஆகாது.
வீட்டுக்கு வீடு மண் அடுப்புத்தான்.
வீட்டுக்கு வீடு வாசற்படி.
வீட்டுக்கு வீரன் காட்டுக்குக் கள்ளன்.
வீட்டுக்குள் கஞ்சித் தண்ணீரைக் குடித்து விட்டு மீசையில் வெண்ணெயைத் தடவிக்கொண்டு புறப் படுகிறது.
10320 வீட்டுக்குள்ளே வேட்டைநாயை உசுப்புவானேன்?
வீட்டுக் கேற்றின விளக்கு விருந்திற்கு மாகும்.
வீட்டுச் செல்வம் மாடு, தோட்டச் செல்வம் முருங்கை.
வீட்டுச் சோற்றைத் தின்று வீண் சண்டைக்குப் போவானேன்?

வீட்டுச் சோற்றைப் போட்டு வீண் பேச்சுக் கேட்பானேன்?
வீட்டுப்பாம்பு காட்டுக்குப்போனால் அதுவும் காட்டுப் பாம்பாகும்.
வீட்டுப் பிள்ளையும் வெளிப்பிள்ளையும் வித்தியாசம் அறியாது.
வீட்டுப் பெண்சாதி வேம்பும், நாட்டுப் பெண்சாதி கரும்பு.
வீட்டுப் பெண்சாதி வேம்பும் காட்டுப் பெண்சாதி கரும்பும்.
வீட்டு மூதேவியும் காட்டு மூதேவியும் கூடி உலாவுகிறது.
10330 வீட்டு வீட்டுக்கு மண் அடுப்பேதான் பொன்அடுப்பு இல்லை.
வீட்டுவேலை வெளிவேலை பார்த்துக் காட்டு வேலைக்குக் கட்டோடே போகலாம்.
வீட்டை எல்லாம் வெல்லத்திற்கு மாறினான்.
வீட்டை ஏன் இடித்தாய், மூட்டைப் பூச்சிக்குப் பயந்து.
வீட்டைக்கட்டி ஓட்டைப் போடு.
வீட்டைக் கட்டிக் குரங்கைக் குடிவைத்ததுபோல.
வீட்டைக் கட்டிப்பார், கலியாணம் செய்துபார்.
வீட்டைக் கட்டு அல்லது காட்டை அழி.
வீட்டைக் காத்த நாயும் காட்டைக் காத்த நரியும் வீண் போகாது.
வீட்டைக் காத்தருள், பாட்டைப் பார்த்தருள்.
10340 வீட்டைக் கொளுத்தி வேடிக்கை பார்க்கிறதா?
வீட்டைப் பிடுங்கி விறகாய் எரித்தாலும் வீணாதி வீணனுக்கு என்ன செய்வேன்?
வீட்டையும் கொள்ளை கொடுத்துப் பங்குக்கும் நிற்கிறது.
வீணருக்குச் செய்ததெல்லாம் வீணாம்.
வீணாய் உடைந்த சட்டி வேண்டியதுண்டு, பூணாரம் என் தலையிற் பூண்ட புதுமையை கண்டதில்லை.

வீணாய் வீணாய் என்பதை ராமா ராமா என்றேன்.
வீணாவாரம் கிழவி தெருண்டதும் பிட்டுக்கு வழியில்லாமல் பிணங்கி யழுததும்.
வீணான வீணானுக்கு வாணாளை மாய்ப்பானேன்?
வீணன் கருமம் இழந்தான்.
வீணுக்கு உழைக்கிறவன் வீணன்.
10350 வீணுக்குத் தாலி வேணுமென்று அறுத்தேனா?
வீணை கோணினாலும் நாதம் கோணுமா (குறையுமா)?
வீண் இழவாம் வெங்காயத்தாளாம் பிடுங்கப் பிடுங்கப் பேரிழவாம்.
வீண் இழவுக்கு மார் அடிக்கிறதா?
வீண் இழவுக்கு வீட்டைக்கட்டிப் பார இழவிற்குப் பந்தல்போடு.
வீண் விபரீ தத்தால் பேதையர் வீண்செலவுசெய்ய உடன்படுவார்கள்.
வீதிரும் பெண்ணும் விலைபோச்சுது கைதப்பினால்.
வீம்புக்கு குப்பையில் விளையும் வீண்செடி.
வீம்புக்குவேடம் கொள்ளாதே.
வீம்பு பேசுகிறவன் அழிவான், வீரியம்பேசுகிறவன் விழுவான்.
10360 வீரசூரனானாலும் மின்படைவேண்டும்.
வீரம்பேசிக்கொண்டு எழுந்த சேவகன் வெட்டும் களம் கண்டு முதுகிடலாமா?
வீரன் கேண்மை கூரம்பாகும்.
வீரியம் பெரிதோ காரியம் பெரிதோ?

---

## வெ.

வெகு ஜனவாக்கியம் கர்த்தவ்வியம்.
வெங்கண்ணை வாங்கு உன்கண்ணைக் கொடுத்து.
வெங்காயத்துக்கு எத்தனை வாசனை கட்டினாலும் துர்க்கந்தத்தையே வீசும்.
வெங்காயம் இட்ட கறிக்குச் சந்தேகம் இல்லை.
வெங்காயம் உரிக்க உரிக்கத் தோலாயிருப்பது போல்.
வெச்செனவுக்கு அன்றி வெண்ணெய் உருகுமா?

10370 வெட வெடவென்று தண்ணீர் குளிக்காதவளா உடன் கட்டை ஏறப்போகிறாள்?

வெட்கத்தால் ஒல்காதவள் குலஸ்திரீக்குப் போகா

வெட்கத்துக்கு அஞ்சினவன் கடனுக்கு அஞ்சுவான்.

வெட்கத்துக்கு அஞ்சினவன் சச்சரவு செய்வானா?

வெட்கத்தை விற்று அக்குளிலே அடக்கிக்கொண்டு போகிறான்.

வெட்கத்தை விற்றுக் கக்கத்திலே கொண்டு போகிறான்.

வெட்கத்தை வெளியிலே சொல்லலாமா?

வெட்கப்படுகிற வேசியும் வெட்கங்கெட்ட சமுசாரியும் உதவார்கள்.

வெட்கமேகெட்டு வெளிப்பட்ட முண்டைக்குமுக்காடு எதுக்கு?

வெட்கம் அற்ற பெண்பிள்ளை வீண்.

10380 வெட்கம் கெட்டவனுக்கு மேனி எல்லாம் அழுக்குத்தான்.

வெட்கம் கெட்டவன் ஊருக்குப் பெரியவன்.

வெட்கம் கெட்டாலும் கெடட்டும் தொப்பையில் (தொப்பை) இட்டால் போதும்.

வெட்கம் சிக்குவிட்டு வெளிப்பட்ட மூளிக்கு முக்காடு ஒரு கேடா?

வெட்டப்பலமில்லை வெட்டிக்குப்போக மனமில்லை.

வெட்ட வருகிற மாட்டுக்கு வேதம் ஓதினால் ஒக்குமா?

வெட்டவெளிச்சம் பட்டப் பகலாய்ப் போச்சுது.

வெட்ட வெளியிலே வையாளி விடுகிறதா?

வெட்டி எல்லாம் தண்ணீர் மண்கட்டி எல்லாம் புல் நாற்று.

வெட்டிக்கு இறைத்து விழலுக்குத் தண்ணீர் கட்டினது போல.

10390 வெட்டிக்குப்பெற்று வேலியில் எறிந்தார்களா?

வெட்டிக்குப் பெற்று வேலியில் எறிந்துவிட்டார்கள்.

வெட்டிக்கு வரச்சொன்னால் கட்டிக்கொண்டு வருகிறான்.

வெட்டிக் கொண்டு வா என்றால் குத்திக் கொண்டு வருகிறான்.

வெட்டிக் கொண்டு வா என்றால் குத்திக் கொண்டு வருகிறான்.

வெட்டிப் போட்டுக் கட்டிக்கொண் டழுகிறது.

வெட்டியாணும் பிணமும் கட்டிக்கொண்டழட்டும்.

வெட்டியாணும் பிணமும் கட்டிப்புரளட்டும்.

வெட்டியாணும் பிணமும் பட்டதைப்படுகிறது.

வெட்டி வெட்டிப் பார்த்தாலும் முட்டக்கரிகாசுதான் அகப்படும்.

வெட்டிவேரில் விசிறியும் விலாமிச்சை வேரில் தட்டியும் பண்ணு.

10400 வெட்டின இடத்தில் ஜலம் ஊறும், வீடு கட்டின இடத்தில் நடை ஏறும்.

வெட்டின குளத்திலும் தண்ணீர் குடியாது, கட்டின வேலியும் தாண்டமாட்டாது.

வெட்டினவனுக்கு ஒரு கேணி, வீணாதி வீணனுக்குப் பலகேணி.

வெட்டு ஒன்று, கண்டம் (துண்டு) இரண்டு.

வெட்டென உரையே துட்டர்கள் அறைவர்.

வெட்டெனப் பேசேல்.

வெண்கலக் கடையில் யானை புகுந்ததுபோல.

வெண்கலம் குகையில் வைத்து வியாழம் முப்பதும் ஊதினால் மங்கையாள் பார்த்தாணை மற்றநாள் வெள்ளியாமே.

வெண்கலம் சஞ்சலம்.

வெண்கலம் நடமாடக் குசவன் குடிபோகிறான்.

10410 வெண்கலம் வெண்கலம் என்றால் ஓட்டை ஓட்டை என்கிறான்.

வெண்டலைக் கருடன் வந்திடுமானால் எவர் கைப் பொருளும் தன் பொருளாகும்.

வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழலாமா (அலைவானேன்)?

வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?

வெண்ணெய் உருகும் முன்னே பெண்ணை பெருகும்.

வெண்ணெய்க் கட்டியும் முப்பாலும் போடுவார், விக்கிக்கொள்வதற்கு என் செய்வா?

வெண்ணெய்க்குப் பல்லு முளைத்தாற்போல.
வெண்ணெய் திரண்டு வரும்போது (திரளச்சே) தாழி உடைந்தாற் போல.
வெது வெது வென்ற தண்ணீர் குளிக்காதவளா உடன் கட்டை ஏறப்போகிறாள்?
வெந்த சோற்றைத் தின்று வந்த தெல்லாம் பிதற்றுகிறான்.
10420 வெந்த சோற்றைத் தின்று விதிவந்தால் சாகிறது.
வெந்தது போதும் முன்றானையிற் கொட்டு.
வெந்ததைத் தின்று வந்ததை உளறுகிறது.
வெந்ததைப் போடு முன்றானையிலே.
வெந்த புண் வினை செய்யாது.
வெந்தயம் இட்ட கறிக்குச் சந்தேகம் இல்லை.
வெந்தயம் போடாத கறியும் கறியல்ல, சந்தை யில்லாத ஊரும் ஊரல்ல.
வெந்தால் தெரியும் வெங்காய மணப்பு.
வெந்நீரிலே விழுந்த கோழி தானே எழுந்துபோமா?
வெந்நீரிலே வீடு வேகுமா?
10430 வெய்யிலிலே அகப்பட்ட புழுவைப்போல.
வெய்யிலிலே போட்டாலும் உலரான் (காயமாட்டான்), தண்ணீரிலே போட்டாலும் நனையான் (நனையமாட்டான்).
வெய்யிலிலே விடுகிறதுமில்லை, மழையிலே விடுகிறது மில்லை.
வெய்யிலின் முன்னே மின்மினி பிரகாசிக்குமா?
வெய்யோன் வெயில்முன் எரிதீபம் போல்.
வெல்லப்படை இல்லை, தின்னப்படை உண்டு.
வெல்லப்பிள்ளையாரைக் கிள்ளி அதற்கு நைவேத்தியம் செய்கிறது.
வெல்லப் பேச்சு சொல்லுக்கசையாது.
வெல்லப்போனான் ஒரு செல்லப்பிள்ளை, மெல்லப் போனான் ஒரு அமுங்குத்தலையன்.
வெல்லப்முள்ளவாயைச் சளுப்பென்று நக்குகிறான்.
10440 வெல்லம் தின்கிறவன் (சாப்பிடுகிறவன்) ஒருவன், விரலைச் சூப்புகிறவன் ஒருவன்.

வெல்லாது உங்கள் படை, செல்லாது பாண்டியன் முன்.
வெளிச்சம் இருளானால் இருள் என்னவாம்?
வெளிச்சீர் உட்சீரைக் காட்டும் கண்ணாடி.
வெளிதானே பயிரை மேய்ந்தால் என்ன விளையும்?
வெளிமழை விட்டாலும் செடி மழை விடாது.
வெளியிலே பார்த்தால் டம்பம், உள்ளே பார்த்தால் ஓக்காளம்.
வெளுத்ததெல்லாம் பால், கறுத்ததெல்லாம் தண்ணீர்.
வெளுத்துவிட்டாலுஞ்சரி, சும்மாவிட்டாலும் சரி.
வெளுப்பானுக்கு (உதைப்பானுக்கு) வெளுப்பாள் சாதி (அசல்) வண்ணான்.
10450 வெள்ளமே யானாலும் பள்ளமே பயிரிட வேண்டும்.
வெள்ளம் பள்ளத்தை நாடும், விதிபுத்தியை நாடும்.
வெள்ளம் வருகிறதற்கு முன்னே அணைபோட வேண்டும்.
வெள்ளம் வரும் முன்னே அணைகோலிக்கொள்ள வேண்டும்.
வெள்ளரிக்காய் விற்ற பட்டணம்.
வெள்ளாடு குழைதின்றது போல.
வெள்ளாடு நனைகிறது என்று வேங்கைப்புலி விழுந்து அழுகிறதாம்.
வெள்ளாட்டிக்குச் சன்னதம்வந்தால் விழுந்துதான் (விழுந்து விழுந்து) கும்பிடவேண்டும்.
வெள்ளாட்டி பெற்ற பிள்ளை விடியற்காலம் செத்துப்போயிற்று.
வெள்ளாட்டியும் பெண்டாட்டியும் சரியா?
10460 வெள்ளாளர் குடிக்கு ஒரு கள்ளாளர் குடி.
வெள்ளாளர் செய்யாத வேளாண்மை வேளாண்மையல்ல.
வெள்ளாளன் கிரந்தமும் பார்ப்பான் தமிழும் வழ வழ.
வெள்ளாளன் கெடுக்காவிட்டாலும் வெள்ளோலை கெடுக்கும்.

வெள்ளாளன் கிரந்தமும் பார்ப்பான் தமிழும் வழ வழ.
வெள்ளாளன் மிளுக்குப் பண்ணிக் கெட்டான், வேசி சளுக்குப் பண்ணிக் கெட்டாள்.
வெள்ளிக்கிழமை கொள்ளிக்காகாது.
வெள்ளிக்கு எதிரே போனாலும் வெள்ளாளனுக்கு எதிரே போகலாகாது.
வெள்ளிக்குப் போட்டதும் கொள்ளிக்குப் போட்டதும் சரி.
வெள்ளிபோட்ட காலுக்கு வெறுங்கால் அடிமையா?
10470 வெள்ளிமோதிரம் ஓசைபெறும், பொன்மோதிரம் ஓசை கொடுக்காது.
வெள்ளிவட்டிலும் வேண்டும் விளிம்பிலே பொன்னும் வேண்டும்.
வெள்ளெருக்கும் வெள்ளாட்டுப் பாலுக்கும் கள்ளக் கருமேகம் காணமற்போம்.
வெள்ளெலும்பை நாய் கடித்ததுபோல.
வெள்ளைகொடுக்க வினைதீரும்.
வெள்ளை கொடுத்தால் வினைதீரும், பச்சை கொடுத்தால் பாவந்தீரும்.
வெள்ளைக்காரனுக்கு ஆட்டுத்தோல் இடம் கொடுத்தார்கள், அது அறுத்து ஊர்முழுவதும் அடித்து இது எனது என்றான்.
வெள்ளைக்கு இல்லை கள்ளச்சிந்தை.
வெள்ளைக்குக் கள்ளம் இல்லை.
வெள்ளைப் பாவாடை விரித்தாற்போல.
10480 வெள்ளைப் பூண்டுக்கு எத்தனைவாசனை கட்டினாலும் துர்க்கந்தத்தையே வீசும்.
வெள்ளையாய்ச் சொல்லிவிட்டாள்.
வெள்ளையும் சள்ளையுமாய் வந்தான், வீட்டுக்குச் சோற்றுக்கில்லை.
வெறிகாரன் குடியைவிடான், வீண்புத்திக்காரன் பாவத்துக்கு அஞ்சான்.
வெறிகொண்டயானை மிதந்து திரிகிறாப்போலே.
வெறிக்கிட்டு அழியேல்.

வெறுங்கஞ்சியைக்குடித்துவிட்டு மீசையிலே நெய்யைத் தடவிக்கொள்ளுகிறது.
வெறுங்காலுக்கு ஓலைக்காது மேல்.
வெறுங்குண்டி அம்மணம் போட்டுக்கொள் சம் மணம்.
வெறுங்கைத் தட்டான் இரும்பு ஊதிச்செத்தான்.
10490 வெறுங்கை முழம்போடுமா?
வெறுஞ்சட்டி தாளிக்கிறான்.
வெறுஞ்சலுக்கன் விருப்புக்காரன் வீட்டிலே சோற்றுக்கில்லை.
வெறுஞ்சிறுக்கி ஆமுடையான் வீம்புக்குத் தாண்டி விழுந்தானாம்.
வெறுஞ்சூத்தை நக்குகிறதைவிடப் பீச்சூத்தை நக்குகிறதுமேல்.
வெறுநாய் சந்தைக்குப்போனால் வெள்ளிக்கோலால் அடிபட்டுவரும்.
வெறும் பயலுக்கு ஏற்ற வீறாப்பு.
வெறும் பானையில் புகுந்த ஈபோல.
வெறும் பிலுக்கு வண்ணான்மாற்று.
வெறும் புளி தின்றாற் பல் கூசும்.
10500 வெறும்பூக்குத் தட்டான் இரும்பு ஊதிச் செத்தான்.
வெறும்வாயைத் தின்றவனுக்கு வெள்ளை அவல் கிடைத்ததுபோல.
வெறும் வாய்க்கு இலைகெட்டவன் விறகுக்குப் போனால், விறகுகிடைத்தாற் கொடிகிடையாது, கொடிகிடைத்தால் விறகுகிடையாது.
வெறும்வாய் மெல்லுகிற அம்மையாருக்கு நாழி அவல் அகப்பட்டதுபோல.
வெற்றி பெற்றவன் சுத்தவீரன்.
வெற்றிலைக்குத் தண்ணீரும் வேசைக்கு மஞ்சளும் போல.
வெற்றிலைபோ லிருக்கும் மிகுந்த மரமாகிவிடும், புத்தியுள்ள பூமரத்துக்குப் பூவிரண்டு வக்கணையாம்.
வெற்றிலைப் பொதிக்காரனும் அழுகிறான், உப்புப் பொதிக்காரனும் அழுகிறான்.

வேகத்தில் நாலுவிதமுண்டு.
வேக நேர மிருந்தாலும் சாகநேரமில்லை.
10510 வேகப்பொறுத்தது ஆறப்பொறுக்கக் கூடாதா?
வேகாத சோற்றுக்கு விருந்தாளிகள் இரண்டுபேர்.
வேகாதவீட்டில் வேகும் கட்டை காமம்.
வேகிறவீட்டில் பிடுங்குகிறது லாபம்.
வேகிற வீட்டிற்கு கண்க்குப் பார்ப்பார் உண்டோ!
வேகிற வீட்டுக்கு வெட்டுகிற கிணறு.
வேகிறவீட்டை அவிக்காமல் இருப்பார் உண்டோ!
வேங்கைப் புலியை வெள்ளாடுகள் சூழ்ந்தாற் போல.
வேசி அவல் ருசியை அறியாள், வெள்ளாட்டி எள் ருசியை அறியாள்.
வேசி ஆடினால் காசு, வெள்ளாட்டி ஆடினால் சவுக்கு.
10520 வேசி உறவு காசிலும் பணத்திலுந்தான்.
வேசி உறவும் வெள்ளாட்டி அடிமையும் காசுப் பணத்தளவே காணலாம்.
வேசி காசு பறிப்பாள்.
வேசிக்கு ஆணையில்லை, வெள்ளாட்டிக்குச் சந் தோஷமில்லை.
வேசிக்கு காசுமேலாசை, விளையாட்டுப் பிள்ளைக்கு மண்மேலாசை.
வேசிமே லாசைப்படுகிறது வெள்ளெலும்பை நாய் கௌவினதற் கொப்பாம்.
வேசியரும் நாயும் விதிநூல் வைத்தியரும் பாசம் அற்று நிற்பது காண்பார்.
வேசியைப் பெண்டுக்கு வைத்துக்கொண்டால் வேறே வினை தேவையில்லை,
வேடக்காரனுக்கும் ஆடக்காரனுக்கும் பகை, வேசிக்கும் தாசிக்கும் பகை.
வேடக்கார வேடம்விடடா, ஒடக்காரா ஒடம்விடடா.

10530 வேடத்தில் நாலுவிதம் உண்டு.
வேடத்தினால் என்ன, வெண்ணீற்றினால் என்ன!
வேடமோ (வேஷமோ) தவவேடம், மனதிலோ அவவேடம்.
வேடம் அழிந்துபோம்.
வேடம் கூடமும் கொள்ளாது.
வேடம் மூன்று வகை.
வேடருக்கு அருமையான வேட்டை முசல்வேட்டை,
வேடர் இல்லா ஊரில் யாவும் குடியிருக்கும்.
வேடர்களில் மலைவேடர் விசேஷம்.
வேடர் கையில் அகப்பட்ட தேன் கூடுபோல.
10540 வேடனுக்குத் தேன் பஞ்சமா, மூடனுக்கு அடி பஞ்சமா?
வேடிக்கைக்கு விலை இல்லை, கதைக்குக் காலில்லை.
வேடிக்கைக்கு விலை உண்டோ?
வேட்டை ஆடிச் சிங்கம் தின்னும்.
வேட்டை நாயை ஏவிவிட்டதுபோல.
வேட்டை பெரிதென்று பேய் நாயைக்கட்டி இழுக்கிறதா?
வேட்டையில் பிரியமான வேட்டை சிக்காரி வேட்டை.
வேண்டவேண்டத் தாண்டவம் ஆடுகிறான்.
வேண்டாத பேருக்கு ஈந்தென்ன, வேலையில் ஆற்றுத்தண்ணீர் விழுந்ததென்ன?
வேண்டாப் பெண்டாட்டி கைபட்டாற் குற்றம் கால் பட்டாற் குற்றம்.
10550 வேண்டாவெறுப்பாய் ஏண்டாகொடுப்பாய்?
வேண்டி வினை செயேல்.
வேண்டி வேண்டிக் கொடுத்தாலும் வேண்டாம் என்றாற்போல
வேண்டும் என்றால் எதுதான் செய்யக்கூடாது?
வேண்டும் என்றால் வீடு, வேண்டாம் என்றால் காடு.
வேண்டும் என்று நூற்றால் வெண்ணெய்க் கட்டி (வெண்ணெய் மொத்தை) போல நூற்கலாம்.
வேதத்தில் நாலுவிதம் உண்டு.
வேதத்திற்கு உலகம் பகை, உலகத்திற்கு ஞானம் பகை.

வேதத்திற்கும் விக்கிரகபக்திக்கும் பகை.
வேதத்தை அறியாத கிழவன் வீண்.
10560 வேதம் ஆய்ந்து ஓதல் போதகர் முறைமை.
வேதம் ஏன், நியாயம் ஏன், விஸ்தாரம் கள்ளருக்கு?
வேதம் ஒத்த மித்திரன்.
வேதம் ஓதிய வேதியர்க்கு ஓர் மழை.
வேதம் கேட்டவரை வேதம் கேட்டவர் என்பான் ஏன்?
வேதம் பொய்த்தாலும் வியாழம் செய்யாது.
வேதாரணியத்தில் பாம்பு கடிக்கிறதும் இல்லை, வேதாரணியத்தில் பாம்பு குறைகிறதும் இல்லை.
வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும்.
வேதியர்க்கு அழகு வேதம் ஓதுதல்.
வேந்தனும் பாம்பும் சரி.
10570 வேந்தன் சீறில் ஆந்துணை இல்லை.
வேப்பம்பழம் சிவந்தாலும் விரும்புமா கிளி?
வேப்பெண்ணெயும் ஆபத்துக்கு உதவும்.
வேப்பெண்ணெய் விருந்தெண்ணெயல்ல, மருந்தெண்ணெய்.
வேப்பெண்ணெய் விற்ற காசு கசக்குமா?
வேம்பில் தேனை விட்டால் கசப்பு நீங்குமா?
வேம்புக்கு பல் அழகு, வேலுக்குப் பல் இறுகும்.
வேம்பும் கரும்பாச்சே, வெற்றிலையும் நஞ்சாச்சே (விஷமாச்சே).
வேம்பும் சரி பாம்பும் சரி.
வேம்பும் சரி வேந்தனும் சரி.
10580 வேம்பை விரும்ப விரும்பக் கரும்பு.
வேரைக் கல்லி வெந்நீர் வார்த்தை கதை.
வேர் களைந்த மரம் பிழைப்பதெங்கே?
வேர் நின்றால் மரம் நிற்கும், வியாபாரம் நின்றால் செட்டி நிற்பான்.
வேர் மூலிகை, மர மூலிகை, காய் மூலிகை.
வேலமரத்திற்கு நிழல் இல்லை, வெள்ளாளனுக்கு உறவு இல்லை.
வேலமரத்து முள்ளும் ஆலமரத்துக் கனியும் ஆனேன்.

வேலம்பட்டை மேகத்தை நீக்கும், ஆலம்பட்டை பித்தத்தை அடிக்கும்.
வேலி ஒன்றுக்கு ஈரணை மாடும் இரண்டு ஆளும் வேண்டும்.
வேலி ஒன்றுக்குப் பன்னிரண்டு கலம் விரைப்பாடு.
10590 வேலிக்கு ஓணான் சாக்ஷி.
வேலிக்கு ஓணான் சாக்ஷி, வெந்ததுக்குச் சொக்கன் சாட்சி.
வேலிக்குப் போட்டமுள் காலுக்கு வினையாச்சது.
வேலிக்கு ஓணான் சாக்ஷி, வெந்ததுக்குச் சொக்கன் சாட்சி.
வேலிக்குப் போட்டமுள் காலுக்கு வினையாச்சது.
வேலி தானே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி?
[ கையும்.
வேலிப்புறத்திலே கண்ணும் மாமியார் தலையிலே
வேலிலும் நாலு பலன் உண்டு.
வேலிவைத்துக் காப்பாற்றாத கன்றும், ஆலை வைத்து ஆட்டாத வாணியனும் சரியல்ல.
வேலை அதிகம் சம்பளம் கொஞ்சம். [ தானாம்.
வேலை அற்ற அம்பட்டவன் மகளைப் பிடித்தது சிரைத்
வேலை அற்ற மாமியார் கழுதையைப் போட்டுச் சிரைத்தாளாம்.
10600 வேலை இல்லா ஊருக்கு ராஜா ஏன்? பாம்பு இல்லா ஊருக்குக் கீரிப்பிள்ளை ஏன்?
வேலை இல்லாத அம்பட்டன் ஆட்டைத் தானாம்.
வேலை இல்லாதவனுக்கு சாப்பாடு என்னத்திற்கு, எச்சில் சோற்றுக்காரனுக்கு டம்பம் என்னத்திற்கு?
வேலை ஏன் பிள்ளை ஏன்? வேலை இல்லாருக்குச் சாப்பாடு ஏன்?
வேலைக்கள்ளிக்குப் பிள்ளை மேல் சாக்கு.
வேலைக்கள்ளிக்குப் பிள்ளை மேல் சாக்கு, வெட்கம் கெட்டநாரிக்கு அகமுடையான் மேலே சாக்கு.
வேலைக்கள்ளிக்கு வேளைக்குக் காற்படி, வீண் கட்டைக்கு வேளைக்கு அரைப்படி.
வேலைக்காரி என்று வேண்டிய பேர் கேட்டார்கள், குடித்தனக்காரி என்று கொடுக்கமாட்டோம் என்றார்கள்.

வேலைக்காரியாய் வந்தவள் வீட்டுக்காரியானால் அவள் அதிஷ்டம்.
வேலைக்குத்தக்க கூலி, விருப்பத்துக்குத்தக்க கூர்மை (வேசிக்கடுத்த காசு.)
10610 வேலைக்கோ சம்பளம், ஆளுக்கோ சம்பளம்?
வேலைசெய்தாற் கூலி, வேஷம்போட்டாற் காசு.
வேலைசெய்யாத பிள்ளையைக் கையில் வை, வேலை செய்கிற பிள்ளையைக் காலில் வை.
வேலைப் பார்த்துப் பெண்ணைக்கொள்.
வேலை மினக்கெட்ட அம்பட்டன் பெண்டாட்டி தலையைச் சிரைத்தானாம்.
வேலை மினக்கெட்டு அம்பட்டன் தன் மகளைச் (பூனைக்குட்டியைச்) சிரைத்தானாம்.
வேலை முத்தோ பிள்ளை முத்தோ?
வேலையில் நல்ல அடி அடிக்கிறான்.
வேலையைப் பார்த்துக் கூலி கொடு.
வேலையைப் பார்த்துப் பெண்ணை எடு, சாலையைப் பார்த்து ஊருக்கு நட.
10620 வேல் வைத்துப் பயிராக்குவோர் இல்லை.
வேழத்திற்குச்சிறிதும் பெரிதாய்த்தோன்றும்.
வேழத்தை ஒத்த வினைவந்தால் தீர்வது எப்படி?
வேழம் முழங்கினாற்போல.
வேளை அறிந்துபேசு, நாளை அறிந்து பயணம் பண்ணு.
வேளைக்கு அரைக்காசு ஆயிரம் பொன்னாகும்.
வேளைக்கு உதவாத பிள்ளை தாழங்காய்க்குச் சரி.
வேளைக்கு தகுந்த வேஷம்.
வேளையும் நாழிகையும் வந்தால் வேண்டாம் என்றாலும் நிற்காது.
வேளையோ அவவேளை, வீட்டிலோ அன்னம் இல்லை.
10630 வேறே வினை தேவை இல்லை, வினைதீர்க்கக் கோவிலுக்குப்போக வேண்டியதில்லை.
வேனலுக்குக் கனமழைவரும், வேந்தனுக்குக் கனசனம் சேரும்.
வேனிற்காலத்துக்கு விசிறி, ஆனகாலத்திற்கு ஆச்சாவும் தேக்கும்.

## வை.

வை என்ற எழுத்தே பெயரும் வினையும் ஆகும்.
வைகறையைத் துயில் எழு.
வைகாசிமாதம் ஆற்றில் தண்ணீர்.
வைகுண்டத்திற்குப் போகிறவனுக்கு வழிகாட்டிக் கொடுக்கவேணுமா?
வைகுண்டம் என்பது திருமாநகரம்.
வைகை ஆறு தாமிரபர்ணிக்கு மத்திபம்.
வைகை ஆற்றுத்தண்ணீர் வேகம் அதிகம்.
10640 வைகை ஆற்று வெள்ளத்தில் பாலம் நிலைக்கிற தில்லை.
வைகைக்கரைக்கு வார்த்தையும், கங்கைகரைக்கு கீர்த்தியும்.
வைக்கத்தெரியாமல் வைததுவிட்டு, வந்தவரை யெல்லாம் கேட்கலாமா?
வைக்கவும் தெரியாது வைத்துப்படைக்கவும் தெரியாது.
வைக்கோல் எடுத்த காசுக்கு வழக்காடி நிற்கையில் பிரவச்சேரி மணியம் வாங்கித்தரசொன்னானாம்.
வைக்கோல் எடுத்த வழியாயிருக்கிறது.
வைக்கோல் தின்கிற குதிரைக்கு வேகம் அதிகமா?
வைக்கோல் தின்கிற மாட்டுக்குப் பால்கொஞ்சம் மதுரம் அதிகம்.
வைக்கோல் தின்னும் குதிரை வீட்டுக்கூரையையும் பிடுங்கும்.
10650 வைக்கோல் பஞ்சமா, வறட்பசுபஞ்சமா?
வைக்கோற் கட்டுக்காரனை ஒப்புக்குக் கட்டி அழுதாற் போல.
வைக்கோற் கார்கொண்டு மாய்ந்து மாய்ந்து அடித்தானாம்.
வைக்கோற் கூரையிலும் விழற்கூரை வெகுநாள் இருக்கும்.
வைக்கோற் கூளமும் ஒருவேளைக்கு உதவும்.
வைக்கோற் படப்புப்போல் மெலிந்துபோனாயே.

வைக்கோற் பட்டையிற் கட்டின நாய்.
வைசியரும் சூத்திரரும் இருந்தல்லவோ பிராமணரும் க்ஷத்திரியரும் வருவார்கள்.
வைசியர்களில் பூவைசியர் சிரேஷ்டம்.
வைசூரிவந்தவர்கள் அம்மா என்று கூப்பிடவேண்டும்.
10660 வைதாரை வாழவைக்கும் வாழ்ந்தாரைத் தாழ வைக்கும்.
வைதிகம் ஆய்ந்து அறி.
வைதிகம் என்றால் தெய்வசமயம்.
வைதிகம் லௌகிகம் இரண்டும் வேண்டும்.
வைதிகர் என்றால் பார்ப்பாருக்குப்பெயர்.
வைத்ததற்குமேல்வழி இல்லை, பிச்சைக்குப்போகச் சுரைக்குடுக்கை (குடுவை) இல்லை.
வைத்தது உண்டானால் கெட்டதும் உண்டாகும்.
வைத்தது கண்டது சொல்லாதே.
வைத்தவன் எடுக்கவேண்டும், வழி அறியாதவன் போகவேண்டும்.
வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை.
10670 வைத்தால் பிள்ளையார், வழித்தெறிந்தால் சாணி.
வைத்தியசாஸ்திரம் சாஸ்திரங்களில் விசேஷம்.
வைத்தியத்தில் இரணவைத்தியமும் வயதில் யௌவனமும் நல்லது.
வைத்தியமோ பைத்தியமோ?
வைத்தியம் கொஞ்சமாவது தெரியாத பேர்கள் இல்லை.
வைத்தியம் செய்தவன் எல்லாம் வைத்தியம்.
வைத்தியம் ஜோஸ்யம் சங்கீதம் மந்திரம் தெரியா தவர்களில்லை.
வைத்தியனுக்கு ஊரார் யாவரும் சினேகிதம்.
வைத்தியனுக்குத் தன் அவிழ்தம் பலிக்காதா*r*.
வைத்தியனுக்கும் அஞ்சவேண்டும் வம்பனுக்கும் அஞ்சவேண்டும்.
10680 வைத்தியனுக்கு வந்தது அவன் தலையோடே.
வைத்தியனே பெரிது என்பார் சிலர், வாத்தியே பெரிது என்பார் சிலர்.
வைத்தியன் கைவிட்டதுபோல.

வைத்தியன் கொடுத்தால் மருந்தில்லாவிட்டால் மண்ணு.
வைத்தியன் சொன்னதெல்லாம் மருந்து.
வைத்தியன் தகப்பன்போல.
வைத்தியன் தலைமாட்டில் இருந்து அழுததுபோல.
வைத்தியன் பாராத நோய் தீருமா?
வைத்தியன் பிள்ளை நோயினால் அல்ல, மருந்தினால் சாகும்.
வைத்தியன் பிள்ளை நோவு தீராது, உபாத்தியார் பிள்ளைக்குப் படிப்பு வராது.
10690 வைத்தியன் பெரிதோ மருந்து பெரிதோ?
வைத்தியன் பேச்சு நாலில் ஒருபங்கு.
வைத்தியன் மருந்திலும் கைமருந்தே நலம்.
வைத்தீசுவரன் கோவிலுக்குப்போயும் வயிற்றுவலி தீரவில்லை.
வைத்து வைத்தவன்போல எடுத்துக்கொண்டான்.
வைப்பு வரப்பு வைத்துப் பார்க்க (பேச) வேண்டும்.
வையகத்தில் எல்லோரும் ஒருபோக்கு அல்ல.
வையகத்தில் பொய் சொல்லாதவன் இல்லை.
வையகத்து உற்றவன் மெய்யகம் உற்றவன்.
வையகத்துக்குத் துணை வரதன் கழலிணை.
10700 வையகம் ஒழியும் வான் ஒழியும், வல்லவர் வசனம் ஒழியாது.
வையத்தில் உடம்பு இல்லாதபேர்க்கு உப்புவேண்டாம்.
வையத்தில் உடம்பு இல்லாவிட்டாலும் உடைவேண்டும், பணம் இல்லாவிட்டாலும் கனம்வேண்டும்.
வையத்தில் உப்புக்கு ஏமாறினபேர் உடம்புக்கும் ஏமாறுவார்கள்.
வையத்தில் உப்பும்வேண்டும் உடலும் வேண்டும்.
வையத்தில் உயர்ந்தோர்க்கு இரை தாழ்ந்தோர்.
வையத்தில் உயர்ந்தோர் சிலர் தாழ்ந்தோர் பலர்.
வையத்தில் சைவனுக்குச் சைவன்மேல்.
வையத்தில் தந்தையிலும் தாய் விசேஷம்.
வையத்தில் தெவிட்டாத பொருள் அன்னமும் தண்ணீரும்.

10710 வையத்தில் நல்லோர் ஒருவரைக் கண்டது இல்லை.
வையத்தில் நல்வினையால் ஆகாதது தீவினையால் ஆகுமா?
வையத்தில் நெல் அரிசி வேண்டாதாரும் புல் அரிசி சிக்காதாரும் உண்டு.
வையத்தில் நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பாயும்.
வையத்தில் மேலானபேர்க்குத் தாழ்மையான மனது இருக்கவேண்டும்.
வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துள் வைக்கப்படும்.
வையத்து மனிதன் நாலுவகை.
வையத்துள் நீதி செய்யத்தக்க.
வையம் ஏற்றின் ஐயம் இல்லை.
வையம் ஒத்தால் ஐயம் இல்லை.
10720 வையம் கெட்டால் ஐயம் இல்லை.
வையம்தோறும் தெய்வம்தொழு.
வையம் பகைக்கின் ஐயம் உண்டு.
வையம் புகழ்ந்தால் ஐயம் இல்லை.
வையம் பெரிதானாலும் வனம் உள்ள இடம்கொஞ்சம்.
வையம்பெரிது, அதில் வருத்தமும் பெரிது.
வைய வைய வைரக்கல், திட்டத்திட்டத் திண்டுக்கல்.
வையார் ஊசியைக் குறச்சேரியில் விற்றாற்போல.
வைரத்தை வைரங்கொண்டே அறுக்கவேண்டும்.
வைரம் கொண்டவன் வைரப்பொடி தின்று சாகிறான்
10730 வைரம் மனதில் வையாதே.
வைராகி துறவிகளில் விசேஷம்.
வைராக்கியசதகம் சதகங்களில் விசேஷம்.
வைராக்கியம் பகை முதலிய துர்க்குணங்களில் சேஷம்.
வைவார்க்கு இன்பம் இல்லை, பொறுத்தார்க்குத் துன்பம் இல்லை.

## வெள.

வெளவாலாய்த் தொங்கினாலும் நடவாது.
வெளவாலுக்கு இரவில் கண் தெரியும்.
வெளவாலுக்கு எது தூரம்?
வெளவாலுக்கு ஒரு கனிக்கு நூறுகனி நஷ்டம்.
வெளவாலுக்கு நீளவும் தெரியும் குறுகவும் தெரியும்.
10740 வெளவாலுக்கு மரமே கதி, அதன் குஞ்சுக்கும் அதுவே கதி.
வெளவாலுக்கு யார் தாம்பூலம் வைத்தார்கள்?
வெளவாலைக் கொன்றாலும் பிடியை விடாது.
வெளவாலைத்தின்றாலும் அணிலைத்தின்னலாகாது.
வெளவாலைப் பட்சி என்னலாமா?
வெளவாலோ சிறிது, அதன் அடியோ வலிது.
வெளவாலோடு அணிற்பிள்ளை சேருமா?
வெளவால் அடிக்குப் பயப்படாலாமா?
வெளவால் அடித்த பழமும் அணில்கடித்த பழமும் தள்ளும்படி ஆகுமா?
வெளவால் அடித்துத்தின்னும், அணில் கடித்துத் தின்னும்.
10750 வெளவால் அடைகிற வீட்டில் குடியிருப்பது எப்படி?
வெளவால் கூட்டங் கூட்டமாக இருக்கும்.
வெளவால் தலை நரித்தலைபோல்.
வெளவால் தின்னாத பழம் இல்லை.
வெளவால்போலத் தொங்குகிறான்.
வெளவால் வீட்டுக்கு வெளவால் வந்தால் நீயும் தொங்கு நானும் தொங்கு.
வெளவி அணில் தொத்துகிறது போல்.
வெளவிச்சேர்த்த பேர்க்குப் பொருள் உண்டு.
வெளவிய கருமம் எண்ணித்துணி.
வெளவில் குடியிருக்கலாமா?
10760 வெளவி வெளவிச் சேர்த்தாலும் மற்றவர்க்கு வைத்து ஒழிவான்.
வெளவின பேர்க்கு முடிவது சுருக்கு.

பழமொழி அகராதி முற்றிற்று.

## தற்போது விற்பனையில்..

| | | |
|---|---|---|
| திருமுருகாற்றுப்படை விளக்கம் | கி.வா.ஜ. | 55.00 |
| தமிழ்க் காப்பியங்கள் | கி.வா.ஜ. | 40.00 |
| தமிழ் நூல் அறிமுகம் | கி.வா.ஜ. | 36.00 |
| நாடோடி இலக்கியம் | கி.வா.ஜ. | 25.00 |
| விடையவன் விடைகள் | கி.வா.ஜ. | 35.00 |
| கன்னித்தமிழ் | கி.வா.ஜ. | 35.00 |
| நாயன்மார் கதை பாகம் -I | கி.வா.ஜ. | (அச்சில்) |
| நாயன்மார் கதை பாகம் -II | கி.வா.ஜ. | (அச்சில்) |
| பூக்காரி (சிறுகதைகள்) | கி.வா.ஜ. | 35.00 |
| யாப்பியல் | அன்னி தாமசு | 50.00 |
| பழந்தமிழ்ப்புதுமை | அன்னிதாமசு | 50.00 |
| இக்காலக் கவிதையில் சமூகம் | | 50.00 |
| துணுக்கு மலர்கள் | ந.க.மங்களமுருகேசன் | 35.00 |
| பாரத ரத்தினங்கள் | கமலவேலன் | 35.00 |
| அகத்திணை இலக்கியம் | பட்சிராஜன் | 30.00 |
| பாரதிதாசன் தமிழுணர்வு | அன்னிதாமசு | 25.00 |
| சங்கச் சமூகம் | ந.கடிகாசலம் | 40.00 |
| நல் வாழ்க்கை | ச.வே.சு | 25.00 |
| மனமும் உயிரும் | ச.வே.சு | 20.00 |